இதயக் கதவு...

இன்பா அலோசியஸ்

இதயக் கதவு...

இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

இதயக் கதவு...

Idhaya Kathavu...

Author:
இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.
All other copyright © by Author.
All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

கதவு - 1

கதவு - 2

கதவு - 3

கதவு - 4

கதவு - 5

கதவு - 6

கதவு - 7

கதவு - 8

கதவு - 9

கதவு - 10

கதவு - 11

கதவு - 12

கதவு - 13

கதவு - 14

கதவு - 15

கதவு - 16

கதவு - 17

கதவு - 18

கதவு - 19

கதவு - 20

கதவு - 21

கதவு - 22

கதவு - 23
கதவு - 24
கதவு - 25
கதவு - 26
கதவு - 27
கதவு - 28
கதவு - 29
கதவு - 30
கதவு - 31
கதவு - 32
கதவு - 33
கதவு - 34
கதவு - 35
கதவு - 36

கதவு - 1

காத்திருக்கிறேன் கண்ணே உன் காதலுக்காக

உன் இதயக்கதவை திறந்துபார்

தாழிட்டுப் பூட்டி என்னை ஏங்க வைக்காதே

நீ திறக்கும் நொடிகளுக்காக...

கிர்ர்ர்... கிர்ர்ர்ர்... காதின் அருகில் ஒலித்த அலார சத்தத்தில் அடித்துப் பிடித்து எழுந்தான், வாசு என்கிற வாசுதேவன். அலாரத்தின் தலையில் தட்டி, அதன் தவிப்பைத் தணித்தான். நேரம் விடியற்காலை மூன்று மணி.

"என்ன வாழ்க்கைடா இது.....? நிம்மதியாத் தூங்க முடியுதா.....? பேரு மட்டும் பெத்த பேர்....., சினிமா ஸ்டார், விடிவெள்ளி தருண்யாதவ்வின் மே.....னே.....ஜர். தன் கோபத்தை, ஆற்றாமையை இப்படிச் சொல்லித் தணித்துக் கொண்டான்.

'கை நிறையச் சம்பளம். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வாழ்க்கை. ஆனால் ஒரு நாளாவது நிம்மதியா....., சுதந்திரமா தூங்க முடியுதா? என்ன ஆனாலும் சரி, இன்னைக்கு நான் நிம்மதியா தூங்கப் போறேன்", தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, பெட்ஷீட்டை தலைவரை இழுத்துப் போர்த்திக்கொண்டு, படுத்துவிட்டான்.

அவன் உறங்கும் இந்த வேளையில், நாம் தருண் யாதவ் பற்றி பார்க்கலாம். தமிழ் சினிமா உலகில், வளர்ந்துவரும் இளம் கதா நாயகனே தருண். பார்க்க அல்லு அர்ஜுன் போன்ற தோற்றம் உடையவன். பார்த்தவுடன் பெண்களைக் கவரும் தன்மை உடையவன்.

அதோடு ஆணழகன்....., முறுக்கேறிய உடல்வாகு, உறுதியான தோள்கள், சிரித்தால் அன்றைய நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவனது தனித்

தன்மையே அவன் கன்னங்களில் விழும் குழிதான். உதட்டை கொஞ்சம் சுழித்தால் கூட, கன்னங்களில் குழிவிழும், அப்படியிருக்க, இதழ் விரித்து சிரித்தால், கேட்கவே வேண்டாம்.... அவ்வளவு ஆண்மையானவன்.

இருபத்தியிரண்டு வயதில் முதல் படம் நடித்தான். இந்த மூன்று வருடங்களில், பதிமூன்று படங்கள் நடித்து முடித்துவிட்டான் என்றால், அவன் உழைப்பை நீங்கள் புரிந்து கொள்ளலாம். உழைப்பு மட்டுமல்ல, சினிமா உலகில் நிலைத்திருக்கத் தேவையான அதிஷ்டமும், அவன் பக்கம் கொட்டிக் கிடக்கிறது.

நடித்த படங்களில், மூன்று படங்கள் இருநூறு நாட்களைக் கடந்து, சாதனை படைத்தன. ஐந்து வெள்ளிவிழாப் படங்கள். மீதமிருப்பவையும் நன்றாக ஓடியவையே. ஆனால், இடையில் இரண்டு படங்கள் மட்டுமே சறுக்கி விட்டன. அவனது வெற்றியின் முன்னால், இந்த சறுக்கல் அடிபட்டுவிட்டது என்றே சொல்லலாம்.

அவனுடன் ஒருமுறை நடித்துவிட்ட கதாநாயகிகள், எப்படியாவது, யாரைப் பிடித்தாவது, அடுத்த படத்திலும் நடித்துவிடுவர். இதுவரை, ஆறு கதாநாயகிகளுடன், இரண்டு இரண்டு படங்களில் நடித்திருக்கிறான். ஒரு நாயகியோடு மட்டும் மூன்று படங்கள்.

மிகவும் வெளிப்படையானவன். கோபக்காரன், உயிரைக் கொடுத்து உழைப்பவன், மனிதாபிமானமுள்ளவன், கதாநாயகிகளின் முதல் தெரிவானவன், அடக்கமானவன், இப்படி அவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனாலும், அவனுக்கு மறுபக்கம் என்ற ஒன்று உண்டு.

அது என்னவென்றால்....., தன்னுடன் நடிக்கும் நாயகிகளை, தன் படுக்கைக்கு வர வைக்காமல் விட மாட்டான், என்ற பெயர் உலவுகிறது. அப்படி அவனுடன், முதல்முறை படுக்கையைப் பகிர்ந்த எவரும், மறுமுறை, அவன் அழைக்காமலேயே அவன் அறையில் இருப்பார்கள்.

அதை அவனும் யாரிடமும் மறைப்பதில்லை, தடுப்பதுமில்லை. சினிமா உலகில், இது அனைவருமே அறிந்த விஷயம். அவனது இந்த வெளிப்படையான அணுகுமுறையே அவனுக்கு நல்ல பெயரை பெற்றுத் தந்தது. சினிமா ஒரு மாய உலகம், அதற்குள் நடக்கும் விஷயங்கள், நம் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை.

நம் அனைவருக்கும் தவறாகத் தெரியும் விஷயம், அங்கே கொண்டாடப் படுவதாகவும், பெரிய கதாநாயகனை வளைக்க ஒரு ஆயுதமாகவும் பயன்படுவதுதான் விந்தை. அங்கே, நியாயம், அநியாயம், கற்பு என்னும் விஷயங்கள் எல்லாம் சிலநேரம் கேலியாகவும், பயித்தியக்காரத் தனமாகவும் தெரியும்.

சரியாக முப்பதுநிமிடம் தாண்டியதும், கிர்ர்ர்ர்....., கிர்ர்....., அடுத்த அலாரத்தின் ஓசையில், படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான். "இதை நான் வைக்கவே இல்லையே.....! பிறகு யார் வச்சுருப்பா.....?", யோசிக்கத் தேவையே இல்லை என்பதுபோல், வெளியே அவன் அறைக் கதவை தட்டும் ஓசை கேட்டது.

"யாரது இந்த நேரம்.....? அட, நம்ம ஆளாத்தான் இருக்கும்", உற்சாகமாக எழுந்து ஓடினான்.

"ஈ..... குட் மார்னிங்.....", அவன் சிரிப்பையோ, காலை வணக்கத்தையோ கேட்க அங்கே யாருமே இல்லை. அந்த வராண்டாவே வெறிச்சோடி இருந்தது.

"ஹம்..... போய்ட்டாளா?", அதற்குமேல் யோசிக்க நேரமில்லாமல், பத்தே நிமிடங்களில் காலைக் கடன்கள் அனைத்தையும் முடித்துவிட்டு, மூச்சுவாங்க ஓடிச்சென்று, தருணின் அறைக்கு முன்னால் நின்றான்.

தன் ஆள்காட்டி விரலை மடக்கி, மெதுவாகத் தட்டினான். உள்ளே எந்த சத்தமும் இல்லை. 'அழைப்புமணியை வச்சுட்டே....., இப்படி கதவை விரலால் தட்டும் நிலைமை, ஆண்டவா....., இன்னைக்கு என்னவெல்லாம் வாங்கிக் கட்டிக்கணுமோ?', மனம் அதன்போக்கில் சிந்தித்தாலும்,

விரல்கள் அதன் வேலையை சரியாகச் செய்துகொண்டிருந்தது.

இறுதியில், அவன் அழைப்புக்கு செவி மடுப்பதுபோல், உள்ளே லேசான அசைவு தெரிந்தது. அடுத்த பத்து நிமிடங்களில், அறைக் கதவை திறந்தாள், சினி உலகின் முன்னணி நட்சத்திரம் தாரா. "ஹு ஆர் யூ மேன்? இவ்வளவு காலையிலேயே அறையைத் தட்டுறியே.... கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்ல", ஆங்கிலமும், ஹிந்தியும் நாட்டியமாடியது அவள் நாவில்.

"அடுத்தவன் அறையில் இருந்து வெளியே வாறா, இவளுக்கு அதைப் பத்தி கவலையே இல்லை. இதில் என்கிட்டே கேள்வி வேற", அலுத்துக் கொண்டாலும், கேட்பவள் படத்தின் கதாநாயகி ஆயிற்றே.

"மேம்... நான் தருண் சாரோட PA, ஆறுமணிக்கு ஷூட்டிங் இருக்கு அதான் எழுப்ப வந்தேன்", தன் எரிச்சலை மறைத்துக்கொண்டு, தன்மையாகவே சொன்னான்.

"காலிங்பெல் இருப்பது உன் கண்ணுக்குத் தெரியாதா?", ஏளனமாகக் கேட்டாள்.

'அதை நான் யூஸ் பண்ணினால், என் நிலைமை என்னவாகும்னு உனக்குத் தெரியாது. ஆனால், எனக்கு நல்லாவே தெரியும். அதான் பேசாமல் இருக்கேன்', இவளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டி இருக்கே, என்று மனதுக்குள் வசை பாடினான்.

"மேம், நீங்க உங்க ரூம்க்கு போயிட்டால்....., நான் அவரைக் கிளப்பிடுவேன்", நீ கிளம்புறியா இல்லையா? என்ற தோரணையில் கேட்டான்.

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமாட்டாயோ? உன்னை.....", கோபமாக உள்ளே சென்றாள்.

"ஐயோ பரதேவதையே கொஞ்சம் இரேன்.....", அவளுக்குத் தமிழ் தெரியாதது அவனுக்கு வசதியாக போயிற்று.

"தருண்....., சீ திஸ் கை....," அவள் குற்றப் பத்திரிக்கையுடன், தருணை எழுப்பினாள்.

"மேம் நோ.....", அவனது அலறலைக் கண்டுகொள்ளாமல், தருணைத் தோள் தொட்டு உலுக்கினாள்.

அந்த நொடியில், கட்டிலில் இருந்து கீழே கிடந்தாள் அவள். ஒரு நொடியில் என்ன நடந்தது என்று அவள் சுதாரிக்கும் முன்பே, "டேய்....., யாரது, என்னை இப்போ தொட்டு எழுப்புனது? அவ்வளவு தைரியம் யாருக்கு?

டேய் வாசு.....", உச்சஸ்தியில் அவன் குரல் ஒலிக்க, கொஞ்சம் நடுங்கித்தான் போனாள் தாரா. அருகில் நின்ற வாசு, அதைவிட நடுக்கத்தில் இருந்தான்.

"சார், நான் இல்லை இவங்கதான்....., நான் சொல்லியும் கேட்காமல், உங்களை எழுப்பிட்டாங்க", வேகமாகச் சொன்னான் வாசு.

"உனக்குக் கொடுத்த வேலையை, நீ ஒழுங்கா செய்யவே மாட்டியாடா?", உள்ளடக்கிய எரிமலை அவன் குரலில்.

"சார், நான் அவங்களைத் தடுக்க முன்னாடியே.....".

"இடியட், எனக்கு எந்த விளக்கமும் வேண்டாம். அப்படி என்னடா தலை போகும் அவசரம், அதுவும் அவளை அனுப்பாமல்.....", இருவரும் வழக்கடிக்க,

விழுந்த இடத்திலிருந்து வயிற்றை பிடித்தவாறு எழுந்து நின்றாள். "ஹேய் கைஸ்....., என்ன விளையாடுறீங்களா? தருண்..... என்ன இது?", அதிர்ச்சி விலகாமல், கோபமும், அவமானமும் போட்டி போட, ஆங்காரமாகக் கேட்டாள் தாரா.

அவளது கூச்சலைக் கேட்ட பிறகுதான், தாரா அங்கே இருப்பதையே உணர்ந்தான் தருண். சட்டென தன் கோபத்தைக் கட்டுப் படுத்தினான். ஆனால், பார்வையால் வாசுவைப் பொசுக்கியவாறே, "ஹாய் தாரா... குட் மார்னிங்....., நீங்க இன்னும் உங்க ரூமுக்குப் போகலையா? நான், கனவில் ஒரு பைட் சீன் பத்தி

யோசிச்சுட்டே தூங்கிட்டு இருந்தேன், அதான் இப்படி....., ஐ'ம் சாரி. நீங்க இப்போ கிளம்புங்க, நாம ஷூட்டிங் ஸ்பாட்டில் பாக்கலாம்", அவளை, முதல் வேலையாக பார்சல் கட்டி அனுப்பினான்.

தாராவோ, கொஞ்சம் கூட கோபம் குறையாமலும், சமாதானம் ஆகாமலும், "டுடேஸ் ஷூட்டிங் கான்செல்....., யூ இடியட்ஸ், ஐ வில் கம்ப்ளைண்ட் யூ போத்.....", வெடுக்கென தன் ஹேண்ட் பேகை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

அவள் கிளம்பிச் சென்றவுடன், வாசுவின் மேல் பாய்ந்தான் தருண். "ஏண்டா தடிமாடே, நான் உன்னை எதுக்குடா கூட வச்சு இருக்கேன். நான் சொல்லுற வேலை எல்லாத்தையும் ஒழுங்கா செய்ய முடியும்னா இரு, இல்ல....., இப்படியே பெட்டி கட்டி ஊருக்குப் போய்டு.

என்னை எழுப்ப முன்னாடி, அவளை, அவளோட ரூமுக்கு அனுப்பணும்ன்ற அறிவில்ல? அவளை அனுப்பிட்டு என்னை எழுப்பாமல்....., இப்போ பாரு ஷூட்டிங் கான்செல்ன்னு சொல்லிட்டு போறா.

எல்லாம் உன் ஒருத்தனால், உன்னால எனக்குதான் ஒரு நாள் நஷ்டம்னா? அந்த ப்ரடியுசர்க்கு எத்தனை லட்சம் நஷ்டம். தண்டம் தண்டம்....., இதான், தெரிஞ்சவன் எவனையும் வேலைக்கு வைக்கக் கூடாதுன்னு சொல்லுறது.

பேருக்குப் பின்னாடி, BE., MBA அப்படின்னு பட்டத்தை அடுக்கினால் மட்டும் போதாது. மண்டையில் இருக்கக் களிமண்ணை, கொஞ்சமாவது உபயோகமா பயன் படுத்தத் தெரியணும். அதெல்லாம் எங்க, எவளாவது புடவையைக் கட்டிக்கிட்டு முன்னாடி வந்துட்டால் போதும், உடனே ஈ..... ன்னு இளிச்சுட்டு, பின்னாடி போகணுன்னா மட்டும் தெரியும்", தருண் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்க, வாசு அசைய கூட மறந்து, அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவனுக்குத் தெரியும், இப்பொழுது கொஞ்சம் அசைந்தாலும், தன் கன்னம் பழுப்பது திண்ணமென்று. எனவே, இமைகளைக் கூட சிமிட்டாமல், தலை குனிந்து, அவன் சொல்பவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஏண்டா அவளை அனுப்பாமல் என்னடா பு.....", செய்கையால் விளக்கி கேட்டுவிட்டு, "இன்னும் மரம் மாதிரி, கண்ணு முன்னாடி நிக்காமல் முதல்ல வெளிய போடா", அவனை, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி, கதவை அடித்து சாத்தினான்.

அவனை வெளியே தள்ளியபிறகும், அவனுக்குக் கோபம் குறையவில்லை. நீளமான மூச்சுக்களை எடுத்து, தன்னை சீராக்க முயன்றுகொண்டிருந்தான். வாசு வெளியே சென்ற மூன்றாவது நிமிடம், அறையின் அழைப்புமணி ஒலிக்கும் ஓசை கேட்டது.

"அடிங்க....., இன்னைக்கு உன்னோட சாவு என் கையால் தாண்டா", கத்தியவாறு, கதவைப் படாரென திறக்க, அங்கே நின்றுகொண்டிருந்தவளைப்பார்த்து, கோபம் இருந்த இடம் கொஞ்சம் குறைய, விலகி நின்று வழி விட்டான்.

"செல்லக் குட்டி....., எழுந்துக்கோடா....., இன்னைக்கு ஷூட்டிங் போகணும். அதுவும்..... காலையே உனக்கு சீன் இருக்கு. இப்போ கிளம்பினால்தான் சரியா இருக்கும்", தாயின் வழக்கமான அழைப்பில், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள், லயா என்று சினிமா உலகில் அறியப்படும் லாவண்யா.

அவள் நிஜப்பெயர் லாவண்யா, ஆனால் சினிமா உலகில், அவளை லயா என்று சொன்னால்தான் தெரியும். குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, பதினாறு வயதில் கதாநாயகியாக தன் பயணத்தைத் துவங்கி, இந்த நான்கு வருடங்களில், முன்னணி நடிகையாக அறியப்படும் பத்தொன்பது வயதே நிரம்பிய மலரும் மொட்டு அவள்.

ஆனால், வயதை மீறிய வளர்ச்சி அவள் உடலில். மனமோ இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்று, தாயால் பொத்திப் பாதுகாக்கப்படும் யுவதி. அவளது கால்ஷீட், சம்பளம், கதை கேட்பது, அவளை ஷூட்டிங் அழைத்துச் செல்வது முதல்....., அவளுக்கு பதிலாக பத்திரிகை நிரூபர்களுக்கு, மகளை அருகில் வைத்துக்கொண்டே பேட்டி கொடுப்பதுவரை, அனைத்துமே அவளது தாய், தெய்வானையின் கையிலேதான். மகளின் அழகு குறைந்துவிடக் கூடாது, உடல் பருமன் போட்டுவிடக் கூடாது என்ற காரணத்துக்காக அரிசி உணவையே கண்ணில் காட்டாதவர்.

தெய்வானை, ஒரு காலத்தில், கதாநாயகியாக ஆகவேண்டும் என்ற ஆசையில் ஊரைவிட்டு ஓடிவந்து, இடைத்தரகர்களின் கைகளில் சிக்கி, சினிமா உலகின் மறுபக்கத்தால் சிதைக்கப்பட்டு, முன்னேறியது என்னவோ துணை நடிகையாகத்தான்.

எனவே அவருக்கு, தன் மகளை கதாநாயகி ஆக்கி விடவேண்டுமென்ற தணியாத ஆசை, வெறி என்று கூட சொல்லலாம். எனவே மகளை, குழந்தை நட்சத்திரமாகவே அறிமுகப் படுத்தியவர், அவள் வயதுக்கு வந்தவுடன், தன் வழக்கமான வேலைகளைச் செய்து, லயாவைக் கதாநாயகி ஆக்கி விட்டார்.

தான் அடையமுடியாத பெயரையும், புகழையும், பணத்தையும் தன் மகள் மூலமாக அடைந்துவிடவேண்டும் என்று துடிப்பவர். எனவே, மகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார். லயாவை, தனியாக சிந்திக்கவே விடாமல், தன் கைப்பாவையாக மாற்றி வைத்திருப்பவர்.

சினிமாவில், லயா முன்னேற எவ்வளவோ வேலைகளை செய்யும் அவர், அவளை இன்னும் யார் கைகளும் தீண்டாமல் பாதுகாத்தே வருகிறார். அதற்கும் ஒரு பெரிய காரணம் இருந்தது. மகளை ஏதாவது ஒரு பெரும் புள்ளியின் மனைவியாகவோ, இல்லையென்றால் ஆசை

நாயகியாகவோ, மாற்றிவிட்டு, வாழ்க்கையின் மிச்ச நாட்களையும் சுகவாசியாகக் கழிக்கவேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்.

ஆனால், அதையும் அவ்வளவு சீக்கிரம் செய்ய, அவர் தயாராக இல்லை. மகள் நடித்து முடிந்து ஓய்ந்து, அதன் பிறகு வாய்ப்புகள் கதவைத் தட்டவில்லை, என்ற நிலை வரும்பொழுதுதான், அதை நடைமுறைப்படுத்த சிந்தித்துள்ளார்.

அவர் கணக்குப்படி, லயாவுக்குத் திருமணம், முப்பது வயதுக்கு மேல்தான். எனவே அதற்குமுன், அவள் காதல் கீதல் என்று எதிலும் விழுந்துவிடக் கூடாது என்பதில், இன்னும் அதிக கவனமெடுப்பவர். ஷூட்டிங் ஸ்பாட்டில், லைட் பாயைக் கூட நெருங்கவிடாமல், கண்கொத்திப் பாம்பாகக் கண்காணிக்கின்றார்.

தாயின் உள்மனம் புரியாமலேயே, தாய் தனக்காகச் செய்யும் தியாகங்களையும், தனக்காக அல்லும் பகலும் பாடு படுவதையும் வைத்து, தாய்தான் தனக்கு எல்லாம் என்று, அவர் முந்தானைச் சிறையில் தன்னை விரும்பி முடிந்து கொண்டவள்.

இதுவரை தாயை மீறி, எதையுமே சிந்தித்தது கூட கிடையாது, அவளுக்குச் சிந்திக்கவும் தெரியாது.

காதல், அனுமதி கேட்டு வரும் விஷயம் அல்லவே. காதல் வரும்பொழுது, இவள் முந்தானைச் சிறையை விரும்புவாளா? இல்லை அதைவிட்டு வெளியேறுவாளா? தன் மகளின் காதலை, இந்தத் தாய் ஏற்றுக் கொள்வாரா? காலத்தின் பிடியில்.....

கதவு - 2

சிறையில் வாட, நான்

தயாராக இருக்கிறேன்

சிறைபடுவது உன்

உள்ளமாக இருக்கும் வரை.....

கதவைத் திறந்தவுடன், உள்ளே வந்தவளைப் பார்த்து வேகம் தணிந்தான் தருண். உள்ளே வந்தவளோ, அவனிடம் எதைப் பற்றியும் கேட்காமல், "முதல்ல போய் பேஸ்வாஷ் பண்ணிட்டு வந்தீன்னா மேக்கப் போட வசதியா இருக்கும்.....", சொல்லிவிட்டு மேக்கப் கிட்டை அங்கிருந்த மேசையில் வைத்துவிட்டு, ஒரு மாத இதழை, புரட்டத் துவங்கினாள்.

"இங்கே என்ன நடந்ததுன்னு கேக்க மாட்டியா நீ?", அவள் கேட்க மாட்டாள் என்று தெரிந்து, அவனாகவே கேட்டான்.

"தருண்.... இதெல்லாம் நான் ஏற்கனவே உன்கிட்டே கேட்டு, அலுத்துப்போய், நான் உன்னை தண்ணி தெளிச்சு விட்ட விஷயங்கள். நான் என்ன சொன்னாலும், நீ கேட்கப்போவதில்லை. பிறகு நான் எதுக்கு கேக்கணும். இப்போ பேசத் துவங்கினால், இன்னைக்கு முழு நாளும் வேஸ்ட் ஆகும். சோ.....", மீண்டும் தலையை மேகசீனுக்குள் நுழைத்துக் கொண்டாள்.

"கண்மணி....., நான், தாராவை என் ரூமுக்குக் கூட்டி வரலை. அவளேதான் வந்தா", தோழி, தன்னைத் தவறாக நினைப்பதைத் தாங்க முடியாமல், அலுப்பாகச் சொன்னான்.

"இன்னைக்கு நீ கூட்டி வரலை....., நேத்து....., முதல்நாள்.....", காட்டமாகக் கேட்டாள்.

"கண்மணி.... நீயே இப்படிக் கேட்டால், நான் என்ன செய்யட்டும். உனக்குத்தான் என்னைப்பத்தித் தெரியுமே",

குரலில் கொஞ்சம் கோபம்.

"தருண்..... வேண்டாம்....., என் பொறுமைக்கும் ஒரு அளவிருக்கு. பனைமரத்து அடியில் இருந்து பாலைக் குடித்தாலும் அதைக் கள்ளுன்னுதான் சொல்லுவாங்க. அதனால்.....".

"ஆனா என் மனசாட்சிக்குத் தெரியுமே, நான் குடிப்பது பால் தான் என்று.....", அவளை முடிக்க விடாமல் கேட்டான்.

"அதான் சொன்னேனே....., இதைப் பற்றி நாம பேசத் துவங்கினால், பேச்சு நீண்டுட்டேதான் போகும். முதல்ல, நீ போய் குளிச்சுட்டு வா. மேக்கப் போடலாம். ஏற்கனவே முப்பது நிமிஷம் லேட்", அவள் இறுதியாகச் சொல்லிவிட, வேறு வழியில்லாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

சினிமா உலகில் முடிசூடா மன்னனாக இருந்தாலும், அவன் இந்த உலகத்திலேயே, ஒருத்தரின் பேச்சை, கொஞ்சமாவது காதுகொடுத்துக் கேட்பதாக இருந்தால், அது இந்தக்கண்மணியின் பேச்சாகத்தான் இருக்கும்.அதுவும் ஒரு அளவிற்குதான்.

கண்மணி....., இவளையும் தருணையும் இணைத்தே, சினிமா உலகில் விதம் விதமான வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. தருணிடம் கண்மணியைப் பற்றி கேட்டால்....., ஒரு பெரிய முறைப்புதான் பதிலாக கிடைக்கும். அதுவே கண்மணியிடம், தருணுக்கும் அவளுக்கும் இடையே இருக்கும் உறவைப் பற்றி கேட்டால், மெல்லிய புன்னகை மட்டுமே பதிலாகக் கிடைக்கும்.

கண்மணி....., இவள் தருணின் பிரத்தியேக மேக்கப் நிபுணி. அவளது தோற்றமோ, அலங்காரத்தில் நாட்டமே இல்லாதவள்போன்று இருப்பாள். அணியும் ஆடை கொஞ்சம் நேர்த்தியாக இருக்கும் அவ்வளவே. மற்றபடி, தன் தோற்றத்தில் அக்கறையே இல்லாமல் இருப்பாள்.

இவள் எப்படி, தருணின் அலங்கார நிபுணி ஆனாள் என்பதற்கோ, எப்படி, தருணின் பாதுகாப்பில் வந்தாள் என்பதற்கோ, இருவருக்கும் என்ன மாதிரி உறவு என்றோ?

உறவுமுறை என்றோ? யாருக்கும் தெரியாது. அது இருவருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். அவன் தாய் கமலத்திற்கு கூட, அவன் சொல்லவில்லை.

தன் தாயின் பேச்சையோ, தந்தையின் கண்டிப்பையோ, அவன் மதிப்பதே இல்லை. சினிமாவில் நடிக்கவேண்டும் என்று சொன்ன பொழுது, தாய் கேட்ட ஒரு சத்தியத்தை செய்து கொடுத்து, அவரிடம் கெஞ்சிக் கூத்தாடிய பிறகுதான், அவனை நடிக்கவே அனுமதித்தார், அவன் தாய் கமலம். அந்த சத்தியத்தை அவன் காப்பாற்றுகிறானா? இல்லையா? என்பது, அந்த கடவுளுக்கும் அவனுக்கும் மட்டுமே, தெரிந்த ரகசியம்.

அந்த சத்தியத்தை அவன் காற்றோடு காற்றாக பறக்கவிட்டுவிட்டான் என்பதை, அவன் நடிக்கத் துவங்கிய ஒரே மாதத்தில், பத்திரிகையில் வந்த கிசு கிசுக்களின் வாயிலாக உணர்ந்துகொண்டார் கமலம். அதைப் பற்றி அவனிடம் கேட்டதற்கு, அவன் பதில்.....,

"சினிமா உலகில், இந்த மாதிரி கிசுகிசு வருவது சகஜம்மா அதையெல்லாம் நம்பாதீங்க. நான் உங்க பையன்.....", என்றதோடு பேச்சை நிறுத்திக் கொண்டான்.

தருண் கிளம்பி வந்து, மேக்கப் போட அமர்ந்த வேளையில், அறைக்கு வெளியே ஆட்களின் சந்தடி கேட்டது. புருவ மத்தியில் முடிச்சு விழ ஒரு நிமிடம் நிதானித்தவன், கண்மணியை இருக்கச் சொல்லிவிட்டு, ஓசைகளை கவனித்தான்.

அதே நேரம், வாசுவும் வேகமாக அறைக்குள் வந்தான். "சார்.... உங்களைப் பாக்க டைரக்டர் வந்துருக்கார். என்னமோ கொஞ்சம் கோபமா இருக்க மாதிரி இருக்கு", படபடப்பாகச் சொல்லி முடிக்கவும், டைரக்டர் கதிரவன் அறைக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

"சார்.... நீங்க செய்யிறது நியாயமே இல்லை. அதுவும், இப்படி அவுட்டோர் ஷூட்டிங் அப்போ, இப்படிப் பிரச்சனை செய்தால், நான் என்ன செய்யட்டும்? தாரா, ஷூட்டிங்

கேன்செல்ன்னு சொல்லிட்டு, கிளம்பி பெங்களூர் போய்ட்டாங்க. இப்போ, யாரை வைத்து ஷூட்டிங் நடத்துறது? என்னோட எதிர்காலமே இந்த படத்தில்தான் இருக்கு சார்", படம் துவங்கிய இரண்டாம் நாளே, படப்பிடிப்பு தடை பட்டதால் எழுந்த வருத்தம், எதிர்காலத்தைப் பற்றிய பயமும், அவன் குரலில்.

தருணுக்கும் இப்பொழுது தாராவின்மேல் கோபம் கட்டுக்கடங்காமல் பெருகியது. இந்தப் படம் இல்லையென்றால், தனக்கு வேறு படம் கிடைக்கும், ஆனால் கன்னி முயற்சியாக, படம் இயக்கும் கதிரவனுக்கு, இது பெரிய பின்னடைவாக அமையும்.

பின்னடைவாக அமையும் என்பதைவிட, அவன் வாழ்க்கையே அத்தோடு அஸ்த்தமித்துவிடும், என்று சொல்வது சரியாக இருக்கும். "கதிரவன்..... பதட்டப்படாதீங்க, கொஞ்சம் பொறுமையா இருங்க. நாம ஏதாவது செய்யலாம்", அவனை அமைதிபடுத்த முயன்றான்.

"சார்.... நான் பொறுமையா இருப்பேன், பணம் போட்ட முதலாளி எப்படி பொறுமையா இருப்பார். அதுவும், என்னை நம்பி இதில் இறங்கியிருக்கார். இப்போ, ஒரே நாளில் ஷூட்டிங் கேன்செல்ன்னு அவருக்குத் தெரியவந்தால்....., அப்படி என்னதான் சொன்னீங்க சார் தாரா கிட்ட?", ஷூட்டிங் நின்ற கோபத்தில், வார்த்தைகளை விட்டான் கதிரவன்.

"கதிர்....., ப்ரடியூசர் உங்களை நம்பி இதில் இறங்கலை, என்னை நம்பித்தான் இதில் இறங்கியிருக்கார். இப்போ இந்த நிமிஷம், இந்த படத்தில் இருந்து உங்களைத் தூக்கி காட்டவா?", கண்கள் சிவக்க ருத்ர மூர்த்தியாக நின்றான் தருண்.

கதிரவன் நடுங்கிவிட்டான்....., அவனுக்குத் தெரியும், இப்பொழுது தருண் போன் செய்து, "சார் நான் கொடுத்த நாட்கள் எல்லாம் உங்களுக்கு அப்படியே தருகிறேன், ஆனால், இயக்குனர் கதிரவன் இல்லை", என்று ஒரு

வார்த்தை சொன்னால் போதும், அடுத்த நிமிடம், கதிரவன் இந்த திரைப்படத்திலிருந்து தூக்கப் பட்டுவிடுவான்.

"சார், என்னோட எதிர்காலமே இதுல தான் இருக்கு....., அப்படி எதுவும் செஞ்சுடாதீங்க சார்", கிட்டத்தட்ட காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்.

"அப்போ நான் சொல்லுறதை கேளுங்க. முதல்ல, இந்த தாராவை படத்தில் இருந்து தூக்குங்க. என்ன காரணம்னு கேட்டால்....., வெளியூர் ஷூட்டிங்கில் இருந்து, சொல்லாமல் கொள்ளாமல் போனதுதான் காரணம்னு சொல்லுங்க.

உடனடியா ஒரு புது நடிகையை, இந்தக் கதைக்கு புக் பண்ணுங்க. ஆனால், என்கூட இதுவரை நடித்தவர்கள் யாரும் வேண்டாம். இந்த விஷயம் வெளியே தெரியாமல், தேடுதல் வேட்டையை நடத்துங்க. தாராவுக்கு பேமென்ட் கொடுக்கலை என்பது எனக்கு தெரியும், அதனால் தயாரிப்பாளரும் இதுக்கு ஒத்துப்பார்.

அது மட்டும் இல்லை, கதை வெற்றியடைய, தாராதான் வேணும் என்பது கிடையாது. கதையும், திரைகதையும்தான் வேணும்னு நான் நம்புறேன்....., நீங்களும்.....", முடிக்காமல் கதிரவனைப் பார்க்க,

படம் வெற்றிபெற, கதாநாயகிதான் முக்கியம் என்று சொல்லி, தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ள, அவன் என்ன முட்டாளா? "என் கதைமேல எனக்கு முழு நம்பிக்கை இருக்கு சார்", வேகமாக பதில் சொன்னான்.

"இந்த நம்பிக்கை, உங்களுக்கு இருந்தால் போதும். தயாரிப்பாளரை நான் பார்த்துக் கொள்கிறேன்", நம்பிக்கை கொடுத்தான் தருண்.

வாசு, கண்மணியைப் பார்த்து கொஞ்சம் வழிந்தவாறே, பம்மலாக நிற்க, 'உனக்கு இது தேவையா' என்ற அலட்சியத்துடன் தருணைப் பார்த்தாள் கண்மணி. இவை எதையும் கவனிக்கும் நிலையில் தருண் இல்லை. கதிரவன்

அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறான் என்பதுபோல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் இங்கே யோசித்துக் கொண்டிருக்கும் அந்த நிமிடம், கதிரவனின் அலைபேசி, 'நான் இருக்கிறேன்' என்பதுபோல், தன் இருப்பை நினைவுறுத்தியது. அலைபேசியை எடுத்துப் பார்த்த கதிரவனின் கண்களில், புதிதாக மிரட்சி.

கொஞ்சம் எச்சில் கூட்டி விழுங்கிவிட்டு, "ஹல்லோ.....", என்று சொல்லவும், இவனது குரலைக் கேட்கவே காத்திருந்ததைப் போல்,

"கதிரவன்..... அங்கே என்ன நடக்குது? ஷூட்டிங் கான்செல் ஆயிடுச்சுன்னு எனக்கு தகவல் வந்துது. இதனால்தான், இந்த சின்னப் பசங்களை நம்பியே, பணம் போடக் கூடாதுன்னு சொல்லுறது. மனசுக்குள் கொஞ்சமாவது பயம் இருந்தால், இப்படியெல்லாம் மறைக்கத் தோணுமா? உன்னையெல்லாம் நம்பிய என்னைச் சொல்லணும்.....", கதிரவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைக் கூட கவனிக்காமல், அந்தப்பக்கம் கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தார்.

இடையில் கதிரவன் பேச எடுத்த எந்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை. என்னசொல்லி சமாளிக்கவென்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தான். அவனது தவிப்பைப் பார்த்து, அவன் கையிலிருந்த அலை பேசியை வாங்கினான் தருண்.

"சார் நான் தருண்.....", அவர் என்ன பேசிக் கொண்டிருந்தாரோ, அதை மறந்தவராக, சட்டென அமைதியானார். குரலில் அசாத்தியக் குழைவு.

"தருண் சார்....., நீங்க கவலையே படாதீங்க, இப்போவே வேற டைரக்டர போட்டு படத்தை ஸ்டார்ட் பண்ணிடலாம். உங்க டேட் எல்லாம் எனக்கு அப்படியே வேணும்..... அவன் பொடிப்பையன். அவனுக்கு எப்படி நடந்துக்கணும்னு தெரியாது, ஆனா உங்களுக்குத் தெரியும்..... இப்போ

இண்டஸ்ட்ரியின் நிலைமை.....", எந்தப் பக்கம் தவறு என்று அவர் ஆராயத் தயாராக இல்லை.

படத்தின் நாயகன் மட்டும் கையை விட்டுப் போய்விடக் கூடாது, என்பது மட்டுமே அவர் கவலை. இந்த நாட்களை விட்டுவிட்டால், இன்னும் இரண்டு வருடங்களுக்கு, தருணிடம் நாட்கள் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே வேகமாகச் சொன்னார்.

தருணுக்கு, கதிரவனை நினைத்தால் கொஞ்சம் கவலையாகக் கூட இருந்தது. சினிமா உலகின் மிகப்பெரிய சாபம் இது, யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, நாம் மட்டும் சேப்பாக இருக்க வேண்டும் என்று நினைப்பது.

இப்பொழுது தானும் சரியென்று சொல்லிவிட்டால், கதிரவனை டம்மியாக வைத்துவிட்டு, அவன் கதையை, அவன் உழைப்பை, இன்னொரு பெயர் பெற்ற டைரக்டர், தன் பெயரைப் போட்டு இயக்கி, அந்த நல்லப் பெயரை தட்டிக் கொண்டு போய் விடுவார்.

தயாரிப்பாளருக்கு போட்ட பணம் வந்துவிடும், அந்தப் பெரிய இயக்குனருக்கு, இன்னொரு வெற்றிப்படம் அவர் வரிசையில் இணைந்துவிடும். ஆனால் கதிரவன், கருவேப்பிலையாக, சாறு உறிஞ்சப்பட்ட கரும்புச் சக்கையாக, ஒதுக்கப் பட்டுவிடுவான்.

அவனுக்கு இந்த நிலை, தன்னால் வர வேண்டுமா? ஒரே நொடியில், கதிரவனின் மிச்சமிருக்கும் மொத்த வாழ்க்கையும், அவன் கண்முன் விரிந்தது. அதையே கதிரவனும் சிந்தித்தவன்போல், தருணின் முகத்தையே ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சார், நான் பேசவா.....?", தயாரிப்பாளர், பேச்சை நிறுத்துவதாக இல்லை, என்பதை உணர்ந்து கேட்டான்.

"சொல்லுங்க தருண்.....", போலிப் பணிவுடன் கேட்டார்.

"சார், ஷூட்டிங் கேன்ஸல் ஆனதில், கதிரவனின் தப்பு எதுவும் இல்லை. தாராதான், தேவையில்லாமல் ஷூட்டிங்

ஸ்பாட்டை விட்டுப் போய்ட்டாங்க. எனக்கு இந்தக் கதை ரொம்பப் புடிச்சு இருக்கு, இதை, கதிரவனே எடுத்தால்தான் சரியா வரும்னு நினைக்கிறேன். அதனால், நான் இந்தப் படத்தைவிட்டு விலகுவதா இல்லை. ஆனால்.....", தன் நிலையை அவருக்குத் தெளிவு படுத்தினான்.

தயாரிப்பாளர், தருண், மேலே என்ன சொல்லப் போகிறான் என்று அறிய, அமைதியாகவே இருந்தார். "சார்....., இனிமேல், தாரா இந்தப் படத்தில் தொடர்வதாக இருந்தால், நீங்க வேற ஹீரோ பாத்துக்கோங்க. இப்படி தொட்டதுக்கெல்லாம் பிரச்சனை செய்துவிட்டுப் போகும் ஒருத்தருக்காக, நான் என் நாட்களை வேஸ்ட் பண்ண முடியாது", இதற்குமேல் முடிவை அவரே எடுக்கட்டும். என்பதுபோல் அமைதியானான்.

தயாரிப்பாளர் ஷெட்டிக்கும், தருண் சொல்ல வருவது, தெளிவாகப் புரிந்தது. ஆனாலும், தாராவை விட, அவருக்கு மனமில்லை, "சார்.... உங்களுக்குத் தெரியாதது இல்லை....., அவங்க, கொஞ்சம் வளைந்து கொடுக்கும் சுபாவம் உள்ளவங்க....., அடுத்து வாறவங்க, அப்படி இருக்க வாய்ப்பில்லை....., நான் வேண்ணா அவங்ககிட்டே மறுபடியும் பேசிப் பார்க்கட்டுமா?", அவன் பலகீனத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்.

"சார்....., நான் ஏற்கனவே சொன்னதில், எந்த மாற்றமும் இல்லை. உங்களுக்கு, அவங்க ஓகேன்னா எனக்குப் பரவாயில்லை. ஆனால், இந்தப் படத்தில் இருந்து நான் விலகிக்கறேன்", அவன் முந்தையப் பேச்சில் கொஞ்சம் முகம் மலர்ந்தவர், அவனது பிந்தையப் பேச்சில் கலவரமானார்.

"சார்....., அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க. இந்தப் படத்தில், தாரா இல்லை. நீங்க யாரைச் சொல்லுறீங்களோ, அவங்கதான் ஹீரோயின். நீங்க சொல்லுங்க.....", சட்டென வணங்கினார் அவர்.

"ஹீரோயின் யாருன்னு நீங்களே முடிவு பண்ணுங்க. எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் ஒரு

விஷயம், நான் இதுவரை சேராத, புது நாயகியாக இருந்தால் எனக்குப்பரவாயில்லை என்று தோணுது", அந்த முடிவையுமே அவரிடம் தள்ளிவிட்டு கழன்று கொண்டான்.

தருணுக்குத் தெரியும், எப்படியும் தயாரிப்பாளர் தன் வழிக்குத்தான் வருவார் என்று. கதிரவன் ஆர்வமாக இவன் முகத்தையே பார்க்க, "கதிரவன்..... இன்னைக்கு ஷூட்டிங் கேன்ஸல் செய்ய வேண்டாம். என்னோட பகுதிகளை எடுத்து விடலாம். மீதியை, ஹீரோயின் வந்த பிறகு பார்க்கலாம்", ஷூட்டிங் உண்டு, நீ கிளம்பு, என்று சொல்லாமல் சொல்லிவிட்டான்.

கதிரவனுக்கு, போன உயிர் திரும்ப வந்ததுபோல் இருந்தது. தயாரிப்பாளர் என்ன சொன்னார்? எப்படி இது சாத்தியமாயிற்று? என்று கேட்க அவனுக்கும் ஆசைதான். கேள்வி கேட்க வேண்டியது தருணிடம் ஆயிற்றே....., அவனிடம் கேட்கும் அளவுக்கு, கதிருக்கு தைரியம் இல்லை. எனவே, இதுவே போதும் என்பதுபோல் கிளம்பிவிட்டான்.

"நீ என்ன பாத்துட்டே நிக்கிற? போய் கதிரிடம், வேற ஹீரோயின் போட, தயாரிப்பாளர் ஒத்துகிட்டாருன்னு சொல்லு. அது மட்டும் இல்லை, இவனையே, புது ஹீரோயினைத் தேடச் சொல்லு, அப்படியே அவர்கிட்டே பேசச் சொல்லு போ", வாசுவை விரட்டினான்.

இந்தத் தகவல்களைச் சொல்ல, வாசு விரைந்தான். கண்மணி அவனை நெருங்கி, "தாராக்கும் உனக்கும் என்ன பிரச்சனை தருண்.....?", பார்வை அவனைத் துளைக்க, கேள்வி, கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் வந்து விழுந்தன.

மனதுக்குள் அதிர்ந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அவளுக்கும் எனக்கும் என்ன பிரச்சனை? நீயா எதையாவது கற்பனை செய்யாதே கண்மணி, வா... முதல்ல மேக்கப் போடு", அவள் கண்களைச் சந்திக்காமல், சேரில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

கதவு - 3

புகழின் உச்சியில் நான்

பார்வைகள் அனைத்தும் என் மேல்

தும்மும் விஷயங்கள் கூட செய்தியாய்

இதற்கே இப்படியென்றால்.....

என் காதலின் நிலை.....?

அலைபேசியை வைத்த தயாரிப்பாளர் ஷெட்டி, கதிரவனின் அலைபேசியில் தொடர்பு கொண்டார். கதிரவனுக்கு, வாசு மூலமாக அவரது முடிவு தெரியுமாகையால், பதட்டம் குறைந்தே அவரிடம் பேசினான்.

"கதிர்.... நீங்க தருண் சொன்னதைக் கேட்டுருப்பீங்க. இப்போ உடனடியா, நமக்கு ஹீரோயின் வேணும். நீங்க யாரையாவது நினைத்து வைத்துருக்கீங்களா?", அவன் கருத்தை அறியக் கேட்டார்.

ஏனென்றால், முதலில் தாராவைத் தேர்ந்தெடுத்தது அவரே. எனவே, இந்தமுறை அவனிடம் கேட்டார்.

"சார், தருண் சார் புது நாயகியை....., அதாவது, இதுவரை அவருடன் இணைந்து நடிக்காத நாயகியை, கேட்டு இருக்கார். இப்போ புது நாயகியைத் தேடத் துவங்கினால் நாள் ஆயிடும்.....", சொல்லத் தயங்கினான் அவன்.

"கதிர்..... இப்போ, தயங்குற நேரம் கிடையாது, என்னன்னு சொல்லுங்க?", அவர் குரலில், தருண், தாராவை வேண்டாம் என்று சொன்னதால் எழுந்த எரிச்சல், தெரிந்தது.

"இல்லசார்....., எனக்கென்னமோ, லயா சரியா வருவாங்கன்னு தோணுது.....", இழுத்தான் அவன்.

அவனது இழுவைக்குக் காரணமும் இருந்தது. லயாவின் தாய், இந்தப் படத்துக்கு ஒத்து வருவாரா என்பது

தெரியவில்லை. அதைவிட, அவர்கள் எவ்வளவு பேமென்ட் எதிர் பார்ப்பார்கள், அவர்களிடம் நாட்கள் இருக்கிறதா, என்பது எதுவும் தெரியாமல், நடவடிக்கை உடனடியாக எடுத்தாக வேண்டிய கட்டாயம்.

"சரி.... நான் அவங்ககிட்டே பேசிட்டு வாறேன். இன்னைக்கு சாயங்காலம் ஷூட்டிங் முடிச்சுட்டு, அவங்களுக்குக் கதையைச் சொல்லத் தயாரா இரு", சொல்லிவிட்டு, போனை வைத்துவிட்டார்.

மற்றொரு ஷூட்டிங்கில் இருந்த லயாவின் அலைபேசி அவளை அழைக்க, அதை எடுத்துப் பேசியதோ தெய்வானை.

"ஹலோ யார் பேசுறது?", குரலில் ஒரு அலட்டல்.

தன் விதியை நொந்தவாறே, "நான் தயாரிப்பாளர் ஷெட்டி பேசுறேன். என்னோட புது படத்துக்கு, லயாவோட கால்ஷீட் வேணும், அதுக்குதான் கால் பண்ணினேன்", நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

தெய்வானையின் குரலில் போலி பணிவு. "சார் நீங்களா.....? பார்மாலிட்டி எதுவும் பேசாமல்....., கால்ஷீட் கேக்குறீங்களே", பணமே பிரதானம் என்பது அவர் குரலில் தெரிந்தது.

"தெய்வானை....., இது ஷெட்டி பிலிம், வர வேண்டியது சரியா வந்துடும். உன்கிட்டே, முதல்ல நாள் இருக்கான்னு சொல்லு", அவர் குரலில் கோபம்.

"நீங்க கேட்டு நான் நாள் இல்லன்னு சொல்லுவேனா? அட்வான்ஸ்.., கதை.....", கேட்பவர் பெரிய தயாரிப்பாளர், அதைவிட, தன்னைப்பற்றி முழுதும் அறிந்தவர் என்பதால், மற்றவர்களிடம் பேசுவதைப்போல் அடாவடியாக நடக்க முடியவில்லை அவளால்.

"அதெல்லாம், சாயங்காலம் கதை சொல்ல, கதிரவன்னு ஒரு புதுப்பையன் வருவான். அவன்கிட்டே நீ டேட் கொடுத்தால், மற்றதெல்லாம் பிறகு பேசலாம்".

"புதுப் பையனா.....?", தெய்வானையின் குரலில் தயக்கம்.

"தெய்வா.....கதையில் நம்பிக்கை இல்லாமல், புதுப் பையனை நான் நம்பமாட்டேன் என்பது உனக்குத் தெரியும். அது மட்டும் இல்லை, ஹீரோ தருண்", இடைப்புகவே, தெய்வானை அமைதியானார்.

அதைவிட, தருண் என்ற பெயர் அவளை வாயடைக்கச் செய்தது. லயா முன்னணி நாயகிதான், ஆனாலும், தருண் போன்ற பெரிய கதாநாயகனுடன் நடிப்பது, அவளுக்குப் பெரிய பெயரை வாங்கித் தரும், என்று நொடியில் கணக்குப் போட்டாள்.

புதுப் படம் ஒத்துக்கொள்ளப் போவதை, தன் மகளிடம் கூட அவர் சொல்லவில்லை. நடிக்கப் போவது அவள்தான், இரவு பகல் பாராமல், ஏற்கனவே உழைத்துக் கொண்டிருக்கிறாள். அதைப் பற்றி யெல்லாம் கவலையே படாமல், தன் பேங்க் பாலன்சில் இன்னும் பத்துலட்சம் அதிகரிக்கவேண்டும் என்று மட்டுமே எண்ணினாள்.

காட்சி முடிந்து வந்த மகளிடம், "சாயங்காலம் ஒரு தம்பி கதை சொல்ல வருதாம் கண்ணு", தேன் குழைத்த குரலில் சொல்ல, லயாவும் சரியென தலையசைத்தாள். தாயின் கையில், தான் வெறும் மண் பொம்மை, என்பதை அவள் அறியவே இல்லை. தாய், தனக்காக நிறைய தியாகம் செய்து, தன்னை ஆளாக்கியுள்ளார், அவருக்காக, தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பது அவள் எண்ணம்.

இந்தச் செய்தி கூட, மகளுக்கு விஷயம் தெரியவேண்டும் என்ற ஒற்றை எண்ணத்தினால் மட்டுமே. அதுவும் இல்லாமல், அவள் கதைகேட்க அமர வில்லை என்றால், விஷயம் வேறு மாதிரி பரவும் என்பதாலும் கூட.

கண்களை மூடி ஆசனத்தில் அமர்ந்து, தன் முகத்தை, கண்மணியின் கை வண்ணத்தில் விட்டுவிட்டு, அவள் கேள்விகளுக்குப் பயந்து வாயைக் கூடத் திறக்காமல், அசையாமல் அமர்ந்திருந்தான் தருண்.

கண்மணியும், அவன் மனநிலை புரிந்தவள்போல் அமைதியாகவே இருந்தாள். ஆனாலும், அறியவேண்டிய விஷயத்தை அறியாமல் இருக்க முடியாதே, "தருண்.....", மென்மையாக அழைத்தாள்.

"ம்.....", விழியைத் திறக்காமல், அவனும் அமைதியாகவே கேட்டான்.

"நீ இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லவே இல்லை", அமைதியாகவே கேட்டாள்.

"பதில் சொல்லிட்டதா ஞாபகம்", உண்மையை வெளியே சொல்லமுடியாத கோபம் அவன் குரலில்.

"உன்னோட இந்த கோபமே, ஏதோ இருக்குன்னு எனக்குச் சொல்லுதே தருண்", மறைமுக வற்புறுத்தல் அவள் குரலில்.

"ம்ச்....., இப்போ உனக்கு என்னதான் தெரிஞ்சுக்கணும்?", தன் முகத்தில் இருந்து அவள் கையை விலக்கிவிட்டு, அவளை நேர் பார்வை பார்த்தான்.

"உண்மை.....", அவளும் அசைந்து கொடுக்காமல் நின்றாள்.

"இப்போ சொன்னாலும், என்னை நீ திட்டத்தான் போற.....", சலிப்பாகச் சொன்னான்.

"நீ சொல்லவில்லை என்றாலும், உன்னோட இந்தக்கோபமே, சீன் எல்லாம் சரியா வராமல் செய்யப் போகுது. அதைவிட, என்கிட்டே சொல்லுவதில் உனக்கு என்ன தயக்கம்?", கைகளை, மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டாள்.

"நீ ஏன், நான் சொல்லுவதை நம்பாமல் என் உயிரை வாங்குற?", அடக்கிய கோபம் வார்த்தையில் தெறித்தது.

சலனமே இல்லாமல் அவனைப் பார்த்தாள். "விடி வெள்ளி, சினிமா நட்சத்திரம் தருண் யாதவ் பத்தியும், என் நண்பன் தருண் பத்தியும், எனக்கு நல்லா தெரியும். சொல்லு.... தாராவுக்கும் உனக்கும் என்ன பிரச்சனை? காலையில்

நடந்த ஒரு சின்ன விஷயத்துக்கு வேண்டி, அவ ஷூட்டிங்கை கேன்சல் பண்ணலன்னு எனக்குத் தோணுது", அப்படி ஒரு அழுத்தம் அவள் குரலில்.

"கண்மணி....., அவளுக்கு, என்னைக் கல்யாணம் செஞ்சுக்கணுமாம். அவ என்னை லவ் பண்ணுறாளாம். சினிமாவில் பெட்டெர் ஜோடியா இருக்கும் நாம, வாழ்க்கையிலும் நல்ல ஜோடியா இருப்போம்னு சொல்லி உளறுறா. அதெல்லாம் முடியாதுன்னு சொன்னேன், அதுக்குதான் இந்த சீன்", தாடை இறுக, பதில் சொல்லிவிட்டு, தன் கோபத்தை அடக்க, இமைகளை மூடிக் கொண்டான்.

"அவ காதலைத்தானே சொன்னாள்....., அதில் கோபப்பட என்ன இருக்கு? உனக்கு விருப்பமில்லை என்று சொன்னால் முடிஞ்சுது", சாதாரணமாகச் சொன்னாள், அதில் பாதி நக்கலும் கலந்திருந்தது.

"அவ, காலை சுத்துன பாம்பு....., என்னைக்காவது ஒருநாள் கடிக்காமல் விட மாட்டா.....", வார்த்தையில் தீவிரம்.

'இதையேதான் நான் முன்னாடி சொன்னேன்', என்பதுபோல் பார்த்துக்கொண்டு நின்றாள் கண்மணி. அவள் பார்வையை, அவனும் உணர்ந்தான். "விடு கண்மணி, அவளை எப்படி சமாளிக்கன்னு எனக்குத் தெரியும்", சொல்லிவிட்டு, செய்கையால், அவள் வேலையைத் தொடரச் சொன்னான்.

அவளுக்குச் சமாதானம் சொன்னாலும், தாரா, தனக்கு ஒரு தலைவலியாக மாறுவாள் என்பது, அவனுக்குத் தெரிந்தே இருந்தது. திரைக்கு முன்னால் தெரியும் அவள் அழகு முகமும், திரை மறைவில் இருக்கும் அவளது நிழல் முகமும், அறியாதவன் அல்லவே அவன்.

அவளைப் பற்றியே யோசித்தால், தன் நாள்தான் வேஸ்ட் ஆகும் என்பதால், அவளைப் பற்றி யோசிப்பதை விட்டு,

அன்றைய காட்சியில், தான் நடிக்கவேண்டிய விதத்தைப் பற்றி யோசிக்கத் துவங்கினான்.

சரியான நேரத்தில் ஷூட்டிங் ஸ்பாட்டில் ஆஜரானான். அவனுக்காகவே அனைவரும் காத்துக் கொண்டு இருந்தார்கள். வந்தவுடன், கதிரவன் காட்சியை விளக்க, அதைச் சரியாக, ஒரே டேக்கில் ஓகே செய்து, முடித்தான்.

இது காதல் கதையாகையால், சிரமம் எதுவும் இல்லை. ஆனால், முக பாவங்கள்தான் முக்கியமாக இருந்தது. தருண், நடிப்புப் பயிற்சி, பரத நாட்டியம், என அனைத்தும் முறையாகக் கற்றிருந்தபடியால், சுலபமாகவே செய்து விட்டான். அன்றையநாள் நல்லபடியாக முடிந்தது.

அவன், காட்சிப் பதிவில் ஈடுபட்டிருக்கும் வேளையில், கண்மணியும், வாசுவும் அங்கே இருந்தார்கள். கண்மணியின் உதவியாளர், தருணுக்கு அவ்வப்பொழுது டச்சப் செய்து கொண்டிருக்க, வாசு, வெளிப்புற படப்பிடிப்பாகையால் கூட்டத்தில் இருக்கும் தருணின் ரசிகர்களின் கோரிக்கைக்கு ஏற்ப,

ஆட்டோக்ராப் வாங்கிக் கொடுத்துக்கொண்டும், கூட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவர, காவல் துறையின் உதவியையும் நாடி, சரியாகக் கூட்டத்தை கையாண்டு கொண்டிருந்தான்.

நேரம் ஆக ஆக, ரசிகர்களின் கரகோஷமும், ஓசையும், கூட்டமும் கட்டுக்கடங்காமல் பெருகவே, காட்சிப்பிடிப்பு தடை பட்டது. ரசிகர்களைக்கலைந்துபோக, எவ்வளவோ சொல்லியும், அவர்கள் கேட்காமல், தருணிடம் பேசாமல் செல்லமாட்டோம், என்று கூச்சல் போடத் துவங்கினர்.

வாசுவாலும், ஓரளவுக்குமேல் அவர்களை அடக்கவும் முடியவில்லை. ரசிகர்கள் இல்லையென்றால், சினிமா பிரபலங்கள் ஜொலிக்க முடியாது. அவர்கள் தொடர்ந்து பார்த்தால்தான், லாபம் வரும், நாட்கள் நீண்டு, வெள்ளிவிழாப் படங்களாக அவை மாறும்.

எனவே, தருண் எப்பொழுதும் தன் ரசிகர்களை அரவணைத்துச் செல்வதுதான் வழக்கம். வாசு, எப்பொழுதும் கூட்டத்தைச் சுலபமாகக் கையாளுபவன், அன்று தடுமாறினான். கூச்சலும் குழப்பமும் அதிகரிக்கவே, வேறு வழியில்லாமல் தருணைத் தேடி வந்தான்.

"சார்.....", தயங்கியவாறே தான் அழைத்தான்.

ஏற்கனவே, ஷூட்டிங்கில் இருந்து, தாரா சென்ற ஒரு குழப்பம், அவளது பேச்சு ஏற்படுத்திய எரிச்சல் மறு பக்கம், ரசிகர்களின் கூச்சலால், படப்பிடிப்பு தடை பட்டக் கோபம் ஒரு பக்கம், என கலவையான உணர்வுடன் இருந்த தருண், வாசுவின் அழைப்பில், அவனை எரித்துவிடுவதுபோல் பார்த்தான்.

தருணின் அமைதியே, வாசுவுக்கு கிலியை மூட்டினாலும், ரசிகர்களை அடக்க, தருண் வந்தே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்படவே, "சார்....., கொஞ்சம் வந்து....., அவங்களைப் பார்த்து....., அமைதியா கலஞ்சு போங்கன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடுங்க, மத்தது எல்லாம் நான் பாத்துக்கறேன்", அவன் கண்களில் கனல் ஏறுவதைக் கண்டு, வேகமாகச் சொல்லி முடித்தான்.

"அப்போ..... உன்னால் சமாளிக்க முடியலை.....", தருண் வெளியே சாதாரணமாக கேட்டாலும், உள்ளே உள்ளடக்கிய எரிமலையின் சீற்றம் தெரிந்தது.

'அடேய்.... நான் உனக்கு டா....., என்னை, உன் செக்யூரிட்டி லெவலுக்கு இறக்குறியே.....', மனதுக்குள் குமைந்தாலும், வெளியே அமைதியாக நின்றான்.

வாசுவின் அமைதியே, தருணைக் கொஞ்சம் நிதானத்துக்கு வர வைத்தது. "என்ன.....? உன்னை செக்யூரிட்டி லெவலுக்கு இறக்குறேன்னு கோபம் வருது போல? வேலையை விட்டுப்போய்டுவியோ...?", கண்களில் குறும்புடன் கேட்ட தருணைப் பார்த்து, திகைத்து நின்றான் வாசு.

'ஆஹா....., இவன் நம்மளை, அவனை விட்டு ஓட வைக்கத்தான் இவ்வளவு ப்ளே பண்ணுறானா? விடுவனா நான்', மனதுக்குள் எண்ணியவன்,

"அதெல்லாம் எதுவும் இல்ல சார்....., நீங்க வந்தால், அவங்களுக்கும் கொஞ்சம் சந்தோசமா இருக்குமேன்னு பார்த்தேன். உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், நானே சமாளிச்சுப்பேன்", விடாக் கண்டனாக விலகினான் வாசு.

'என்ன செஞ்சாலும், விட்டுப் போக மாட்டேன்னு அடம் பிடிக்கிறானே', இப்பொழுது புலம்புவது, தருணின் முறை ஆனது.

வேறு வழியில்லாமல் வாசுவுடன் சென்று, ரசிகர்களைப் பார்த்து, அவர்களுக்கு ஆட்டோக்ராப் போட்டுக் கொடுத்து, அவர்களுடன் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்து, அனைவரையும் கலைந்து போகச்சொல்லித் திரும்பும் நேரம், கிட்டத்தட்ட ஒருமணிநேரம் கடந்திருந்தது.

அவன் வரவும், கண்மணி அவனைப்பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரிக்கவும், சரியாக இருந்தது. அதைப் பார்த்த தருண், 'சிரிக்கவா செய்யிற....., உன்னை கவனிக்கிறேன்', என்பதுபோல் உறுத்துப் பார்க்க,

'உன்னால் முடிந்ததை செய்', என்பதுபோல் அவளும் நின்றாள்.வாசு சிரித்தவாறு இருவரையும் பார்க்க, தருண் அவனை முறைக்க, கண்மணி அவனது பார்வையைத் தவிர்த்தாள்.

பின்னர், காட்சிகள் படமாக்கப்பட, ஷூட்டிங் முடித்த தருண், தன் அறைக்குச் செல்ல, வாசு, அவனைப் பின் தொடர்ந்து சென்று, அவனுக்குத் தேவையானவற்றைச் செய்துவிட்டு, வெளியேறினான். கதிரவன், லயாவுக்குக் கதை சொல்லக் கிளம்பினான்.

அங்கே, ஷூட்டிங்கை கான்ஸல் செய்துவிட்டுப் போன தாரா, கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தாள். எப்படி அவன் தன்னை எட்டி உதைக்கலாம்? அவன்

சொன்னப் பொய்யை நம்ப, அவள் தயாராக இல்லை. தன் வலையில், அவன் வசமாக விழுவான் என்று தான் எண்ணியிருக்க, தன்னிடம் எவ்வளவுதான் ப்ரீயாகப் பழகினாலும், திருமணம் மட்டும் சரியாக வராது என்று சொல்லிவிட்டானே.

அதைவிட, அதற்கு அவன் சொன்னக் காரணம் தான், அவளின் உச்சபட்சக் கொதிப்பிற்குக் காரணம். "தாரா..... எனக்கு சினிமா உலகில் இருப்பவளை, திருமணம் செய்ய விருப்பம் இல்லை. எனக்கு, எங்கள் கலாச்சாரத்தில் ஊறிய தமிழ் பெண்தான் வேண்டும்.

அதைவிட, ஐ வான்ட் டு மேரி ய வெர்ஜின்.....", தன் கண்ணைப் பார்த்து சொன்ன, அவன் கண்களில் தெரிந்த எள்ளல்.....

இப்பொழுது நினைத்தால் கூட உடல் பற்றி எரிந்தது. தன்னுடன் மட்டுமல்ல, அவனுடன் நடிக்கும் அனைத்துப் பெண்களையும், படுக்கையில் வீழ்த்தும் அவனுக்கு, கன்னிப்பெண் வேண்டுமாம்....., அப்படியென்றால் அவன் மனதில் தன்னைப் பற்றியெல்லாம் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறான்? அவனுக்குத் தான் யார் என்பதைக் காட்ட வேண்டும், என்று கறுவினாள் அவள்.

அவளுக்குத் தெரியும், படத்தின் தயாரிப்பாளர் ஷெட்டி, தன்னைத் தேடி, கண்டிப்பாக வருவார் என்று. அப்படி வரும் பொழுது, தருணை படத்தில் இருந்து நீக்கச் சொல்ல வேண்டுமென்று எண்ணினாள்.இல்லாவிட்டால், அந்தப் படத்தை முடிக்க, தான் ஒத்துழைக்க முடியாது எனச் சொல்லவேண்டும் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்க, பாவம், அவள் அறியவில்லை, தன்னை விட்டுவிட்டு, வேறு நாயகியையே அவர்கள் தேர்ந்தெடுத்து விட்டார்கள் என்ற விஷயத்தை.

அவள் அறிந்தால் என்ன செய்வாள்?

கதவு - 4

கண்டதும் காதல் வருமா?

நம்பிக்கை எனக்கும் இருந்ததில்லை

நீ என் விழியில் விழும்வரை.....

காட்சியை, தருணுக்கும், லயாவுக்கும் விளக்கிக் கொண்டிருந்தான் கதிரவன். இருவருமே கவனமாக கேட்டுக் கொண்டிருந்தனர். கதிரவன், சொன்னது மட்டுமில்லாமல், கொஞ்சம் நடித்தும் காண்பித்தான். தருண், தான் டேக்போக ரெடி என்று சொல்லவே அனைவரும் தயார் ஆகினர்.

இந்தப் படப்பிடிப்புக்கு லயாவை வரவழைக்கும் முன், கதிரவனின் பாதி உயிர் போய் விட்டது. கதையை, லயாவிடம் சொல்லத் துவங்கியது முதலே, தெய்வானையின் குறுக்கீடு துவங்கி விட்டது.

"காதல் கதையென்றால், லயாவின் முக்கியத்துவம் அதில் என்ன? டூயட் காட்சிகள் எங்கே படமாகின்றது? அவள் நெருக்கமாக நடிக்க வேண்டுமா? அப்படி நெருக்கமாக நடிக்க வேண்டுமென்றால், அதற்குத் தனி பேமென்ட் தர வேண்டும். உடைகள் எப்படி?", இப்படி ஆயிரம் கேள்விகள்.

வெளிப்புற படப்பிடிப்பு, வெளிநாட்டு படப்பிடிப்புக்கு, தானும் உடன் வருவேன். தனக்கும் சேர்த்து செலவு செய்யவேண்டும். இப்படி, ஏகப்பட்ட கெடுபிடிகள். கதிரவனிடம் இவ்வளவு சொன்ன அவள், ஷெட்டியிடம் வேறு முகத்தை காட்டினாள்.

"என்ன தெய்வா திருப்தி தானே", தோரணையாக அலை பேசியில் ஷெட்டி கேட்க,

"எனக்கு பரம திருப்தி....., அதுவும் ஐயா படம்னா கேக்கவா வேணும்....., உங்களுக்கு என்ன

செய்யணும்னு சொல்லுங்க, செஞ்சுடுவோம்", அனுபவம் பேசியது அங்கே.

"கொஞ்சநாள் ஆகட்டும்....., எல்லாம் பேசி செட்டில் பண்ணிடலாம். நாளையில் இருந்தே ஷூட்டிங்க்கு வந்துடுங்க", அலட்டலாக சொல்லிவிட்டு வைத்துவிட்டார். இப்படி, சில பல வேலைகள் செய்துதான் இன்று இங்கே நிற்கின்றாள் லயா.

அது ஒரு கடற்கரைக் காட்சி. படத்தின் நாயகனும், நாயகியும் கைகளை கோர்த்துக் கொண்டு, கடல் அலையில் கால்நனைய நிற்கும் காட்சி, படம் பிடிக்கப் பட்டது.

அவர்கள் கால் க்ளோஸ்அப்பில் முதலில் படம்பிடிக்கப் பட்டு, முதுகைப் படம்பிடித்து, தலைவழியாக கேமரா கோணம் மாறி....., அவர்கள் முகத்தில் நிலைக்கும். இருவரின் கண்களும் காதலை சுமந்து, ஒருவர் முகத்தை மற்றவர் பருகுவதுபோல் காட்சிப் படுத்துவதாக எடுத்தார்கள்.

அனைத்தும் சரியாக எடுக்கப் பட்டு, அவர்கள் முகத்தில் கேமரா நிலைக்கும் பொழுது, லயாவின் முக பாவம் சரியாக இல்லாமல் கொஞ்சம் சோபையாகக் காட்சியளித்தது.

"கட், கட்.....", கதிரவன் வேகமாக அவர்களை நெருங்கினான்.

"மேம், பக்கத்தில் இருக்குறது உங்க காதலன், அதுவும் நீங்க உயிருக்கு உயிரா காதலிக்கிறீங்க. சோ....., கொஞ்சம் காதலா அவரைப் பாருங்க", கதிரவன், பொறுமையாக மறுபடியும் காட்சியை விளக்கினான்.

"ஓகே.....", லயா சாதாரணமாகச் சொன்னாள். அவள் முகத்தில் இருந்த களைப்பு, தருணின் கண்களில் விழத் தவறவில்லை.

அவர்கள் மறுபடியும் கிளாப் அடிக்கும் இடைவெளியில், கோர்த்திருந்த அவள் கைகளை அழுத்தி, "லயா....., நைட்

எப்போ ஷூட்டிங் முடிஞ்சுது.....", பார்வை கடல் அலையில் பதிந்தாலும், அவள் பதிலுக்காகக் காத்திருந்தான்.

அவனை, திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு, "காலையில் ஆறு மணிக்கு முடிஞ்சுது.உங்களுக்கு எப்படித் தெரியும்?", இரவு முழுவதும் உழைத்த களைப்பு, அவள் குரலில் அப்பட்டமாகத் தெரிந்தது.

"இன்னும் எத்தனை நாள் நைட் ஷூட் இருக்கு?", இப்பொழுதும் அவளைப் பார்க்கவில்லை.

"இன்னும் இரண்டு நாள் இருக்கு.....", இன்னும் இரண்டு நாள் தூங்க முடியாதே என்ற மலைப்பு இருந்தது அவள் பதிலில். அவள்மேல் இரக்கம் எழுந்தது அவனுக்கு. இடைவிடாத ஷூட்டிங் பற்றித் தெரியாதா அவனுக்கு, அதில் இருக்கும் வலிகளும், களைப்பும் அவனும் அனுபவிப்பதுதானே. ஆனாலும் ஒரு பெண்ணாக அவள் அனுபவிப்பது, அவனுக்கு வருத்தத்தையும், பரிவையும் அளித்தது.

அதை மறைத்துவிட்டு, "இன்னைக்கு நைட் ஷூட்டிங் கேன்ஸல் பண்ணிடுங்க, நாம நைட் பாக்கலாம்", ஒருவித அழுத்தம் அவன் குரலில்.

"நைட் பார்க்கவா? எதுக்கு? இங்கே நைட் ஷூட்டிங் இருக்குன்னு அம்மா சொல்லவே இல்லையே", வெகுளியாக பதில் சொன்னாள் அவள்.

"ஓ....., உங்க அம்மா, கோட் வோர்ட் எல்லாம் உனக்குச் சொல்லித் தரலையோ? எல்லாம் மத்தவங்களுக்கு மட்டும் தானா?", ஒரு மாதிரிக் குரலில் சொன்னான்.

அவன் இப்படிச் சொல்லவே, அவள் உடலில் ஒரு விறைப்பு. இதுவரை, அவளிடம் யாரும் இவ்வாறு நேரடியாகப் பேசியதில்லை. எதுவாக இருந்தாலும், அவள் தாயிடம் பேசித்தான் பழக்கம். அவன் கைகளுக்குள் இருந்த அவள் கைகளிலும் நடுக்கம்.

அவள் கைகள் நடுங்குவது அவனுக்கும் தெரிந்தது. "லயா... அப்படியே என்னை, காதலா ஒரு பார்வை பாரு", அவன் சொல்லி முடிக்கவும், கிளாப் அடிக்கும் ஓசை கேட்கவும் சரியாக இருந்தது.

அந்தக் காட்சியும் சொதப்பலானது. அடுத்து வந்த ஐந்து டேக்குகளும் முன்னதைப் போலவே ஆக, கதிரவன் வெறுத்துப் போனான்.

தருண், முகத்தில் எந்த உணர்வையும் வெளியிடாமல், "கதிரவன்..... முதல்ல, நாங்க சண்டை போடுவது மாதிரி இருக்கும் சீன் எல்லாம் எடுக்கலாம். பிறகு, இந்த மாதிரி காதல் காட்சிகளைப்பார்க்கலாமே", அவன் சொல்ல, அரை மனதாகச் சம்மதித்தான் கதிரவன்.

லயா அவனை முறைத்து பார்க்க, "என்னை நீ பழகணுமே.....", அவளுக்கு மட்டும் கேட்குமாறு அவள் காதில் சொல்ல, இந்தப் பேச்சும், குரலும், பார்வையும், அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதை, வெளிப்படையாக அவனுக்குக் கண்களால் தெரிவித்தாள்.

அவனோ, அதை உணர்ந்தும் உணராதவனாக பாவித்து, கண்களை சிமிட்டிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

லயா வேகமாக அங்கிருந்து நகர்ந்தாள். அவளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில், நிழலில் சென்று அமர்ந்தாள்.

"அம்மா....., இந்தப் படத்தை கான்ஸல் பண்ணிடுங்க, அட்வான்சை திரும்ப கொடுத்துடுங்க", முதல் முறையாக தன் மறுப்பை தெரிவித்தாள்.

தெய்வானை திகைத்தாள். இதுவரை லயா, எந்த படத்திலும் நடிக்க மாட்டேன் என்று மறுப்பு தெரிவித்தது இல்லை. அதிலும் அவளது கோபம் கூட புதிது. அதிலும் முதல் நாள் படப்பிடிப்பு முடிந்த நிலையிலேயே, அவள் பேச்சை ரசிக்கவில்லை தெய்வா.

அந்த நேரம் அங்கே வந்தான் வாசு. "மேம்....., தருண் சார், உங்களை, அவரோட கேரவன்ல வேண்ணா ரெஸ்ட் எடுக்கச்

சொன்னார்", பணிவாகச் சொன்னான்.

"எனக்கு இங்கேயே வசதியா இருக்குன்னு போய் சொல்லுங்க. அதைவிட இங்கே காத்தோட்டமா நல்ல வசதியாத்தான் இருக்கு எனக்கு", வெடுக்கென சொல்லிவிட்டு, திரும்பிக் கொண்டாள்.

தெய்வானை அசந்தே போனாள், தன் மகளின் மறுப்பும், கோபமும் புதிதென்றால், இந்தப் பேச்சு....., உலக அதிசயத்தை பார்ப்பதுபோல், தன் மகளை வெறித்துப் பார்த்தாள்.

ஆனால் அதைவிட, வாசுவுக்கு பதில் சொல்லுவதுதான் முக்கியம் என்பது தோன்றவே, "ஹி...., தம்பி நீங்க போங்க....., நாங்க பின்னாடியே வாறோம்.....", அவசரமாகச் சொல்லி அனுப்பினாள்.

"அம்மா நான் என்ன சொல்லுறேன், நீங்க என்ன செய்யிறீங்க?", தாயிடமும் மறுப்பை தெரிவித்தாள்.

"அம்மு....., என்ன பழக்கம் இது? எப்போ இருந்து நீ என்னை எதிர்த்து பேசத் தொடங்குன? நீ பேசாமல் இரு. உன் வேலை நடிக்கிறது, அதை மட்டும் பார்", என் முடிவே இறுதி என்பதுபோல் இருந்தது அவர் செய்கை.

"அம்மா....., அவனோட பேச்சும் பார்வையும்....., எனக்கு சுத்தமா புடிக்கலை. எனக்குக் கொஞ்சம் பயம்மா இருக்குமா. இந்தப் படம் வேண்டாமே. இப்போ சீன் சரியா வராததுக்கே அவன்தான் காரணம்", கெஞ்சலாகச் சொல்லி தன் நிலையை விளக்க முயன்றாள். ஆனால், என்ன காரணமோ அவன் சொன்ன வார்த்தைகளை, தாயிடம் சொல்ல அவள் விரும்பவில்லை.

"அம்மு....., இதெல்லாம் எனக்குத் தெரியாததா? எல்லாம் இந்த அம்மா பாத்துக்கறேன்....., பெரிய ஆளுங்க கிட்டே பேச, உனக்குத் தெரியாது. அதனால் இப்படி வெடுக்குன்னு பேசுவதை விட்டுட்டு, அமைதியா இரு", அவளிடம் நயமாகப் பேசி, அடக்க முயன்றார்.

"அம்மா முன்னாடி தான் நம்மகிட்டே பணம் இல்லை. இப்போதான் அது நிறைய இருக்கே, நான் இந்த நடிப்பை விட்டுடவா?", தாயின் உள் மனம் புரியாமல் அப்பாவியாக கேட்டாள்.

தெய்வானைக்கு பற்றிக் கொண்டு வந்தது. இப்படி ஒரு தத்தி இருப்பாளா, என்பதுபோல் அவளைப் பார்த்தார். "லயா....., உன்னை, பணத்துக்காக மட்டுமா நடிக்கச் சொல்லுறேன்....., இந்த பேர், புகழ் ஆடம்பரம், கவனிப்பு, வேற எதில் கிடைக்கும்.

நீ பொறந்தது முதலே நடிக்க வந்துட்டதால், இதில் இருக்கும் கஷ்டங்கள் உனக்குத் தெரியலை. இந்த சினிமா உலகத்தில் ஒரு முறையாவதுதன் முகம், இந்த வெள்ளித்திரையில் வந்துடாதான்னு ஏங்குறவங்க எவ்வளவுபேர் இருக்காங்க தெரியுமா?

உன்னை இவ்வளவுதூரம் கொண்டுவர, இந்த அம்மா செய்த தியாகங்கள் எவ்வளவு, பட்ட அவமானங்கள் எவ்வளவு, இழப்புகள் எவ்வளவு. இதெல்லாம் தெரிந்தும், நீ இப்படிப் பேசுவது, எனக்கு ஆச்சரியமா இருக்கு. இந்த அம்மாவோட மனசு தெரிஞ்சும் நீ இப்படி சொல்லுறியே.

நான் என்ன, எனக்காகவா உன்னை நடிக்கச் சொல்லுறேன், எல்லாம், உன் நன்மைக்காகவும், எதிர் காலத்துக்காகவும் தானே இப்படிச் செய்யிறேன்", வராத கண்ணீரை, துடைப்பதுபோல் பாவனை செய்தார்.

"ஹையோ அம்மா..... நான் என்னமோ கொஞ்சம் கோபத்துல அப்படிச் சொல்லிட்டேன். எனக்கு உங்களைப் பற்றித் தெரியாதா. நீங்க எனக்கு நல்லதை மட்டுமே செய்வீங்க, எனக்கு அந்த நம்பிக்கை நிறைய இருக்கு", தாயின் கண்ணீரைத் தாங்க முடியாமல், வேகமாகச் சொன்னாள்.

மகளை உடனடியாக மடக்கிவிட்ட திருப்தி, தெய்வானையின் முகத்தில். அதை, மகளுக்குத் தெரியாமல், சாமர்த்தியமாக மறைத்தாள். ஆனாலும்

தருண் சொல்லி அனுப்பியதை, விட்டுவிட அவள் தயாராக இல்லை.

மகளை அங்கேயே அமர வைத்துவிட்டு, கேரவனை நோக்கிச் சென்றாள். தாய் செல்லவே, அமர்ந்திருந்த சேரில் கண்ணயர்ந்தாள் லயா, அவளது களைப்பு அவளை ஆட்கொள்ளவே, தருண் கேட்ட விஷயம் மனதைக் குடைந்தாலும், அதையும் மீறி சுகமான உறக்கம் வந்து தாலாட்டித் தழுவியது அவளை.

கேரவனில், தருணை சாடிக் கொண்டிருந்தாள் கண்மணி. அவளது கோபம் புரிந்தாலும், அவளது வசவுகளைக் கேட்டாலும், எதற்கும் செவிமடுக்காமல், காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு, பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

கோபமாகச் சென்று, அவன் காதில் இருந்த ஹெட்போனை உருவி எறிந்தாள்.

"ம்ச்....., இப்போ என்னான்ற....., எதுக்குத் தேவையில்லாமல் கத்திட்டு இருக்க?", எதுவுமே நடவாததுபோல், சுலபமாகக் கேட்டான்.

"தருண்....., நீ எப்போதான் திருந்துவ? லயா ஏன் கோபமா போனாங்க? கண்டிப்பா, நீதான் எதையாவது சொல்லி இருப்ப. ஏற்கனவே இருக்குற பிரச்சனை போதாதா? உங்க அம்மா உன்னைப் பற்றி எவ்வளவு கவலைப் படுறாங்கன்னு உனக்குத் தெரியுமா?

அதைவிட, உன்னைப் பத்தி உளவு சொல்ல, ஆளை வேற வச்சு இருக்காங்க. சுத்தி இவ்வளவு விஷயம் நடக்குது, நீ என்னமோ கூலா உக்காந்து பாட்டு கேக்குற", கடு கடுவென முகத்தை வைத்துக்கொண்டு கேட்டாள்.

"கண்மணி..... நான் லயா கிட்டே எதுவுமே சொல்லலை. அவளுக்கு நைட் ஷூட்டிங் இருக்கனால, ஒழுங்கா காதல் காட்சிகளில் நடிக்க முடியலையாம். அதனால, சும்மா, எங்க கெமிஸ்ட்ரி வொர்க் ஆக வேண்டி....., ஒத்திகைப் பாக்கலாம். நைட் என் ரூமுக்கு வான்னு மட்டும்தான்

சொன்னேன்", முகத்தை அப்பாவியாக வைத்துக்கொண்டு சொன்னான்.

"டேய்....., அவளை இன்னைக்குதாண்டா முதல் முதல்ல பாக்குற, பார்த்த உடனே அவகிட்டே இப்படிப் பேச உனக்கு எப்படி மனசு வந்துது. அவங்க நைட் தூங்கினால் உனக்கென்ன, தூங்கவில்லை என்றால் உனக்கென்ன. உன்னை யாராவது செருப்பால் அடிச்சாதான் நீ திருந்துவ", தலையை வெட்டி, கோபமாகச் சொன்னாள்.

"ஹேய்.... நான் அவ நல்லதுக்குதான் சொன்னேன்.....", இழுத்தான்.

"எது உன்கூட ஒரே அறையில் நைட் அவ தங்குவது நல்லதா....., இன்னைக்கு, வெளியே விவியைப் பார்த்தேன். அவ வேற இங்கே இருந்து, எதைப் பார்த்து, அதை எப்படித் திரிச்சு, நாளைக்கு நியூஸ் போடப் போறான்னு நானே கவலையில் இருக்கேன். உனக்கு அதைப் பத்தியும் கவலை இருக்காதே.....", நக்கலாகக் கேட்டாள்.

விவி என்ற பெயரைக் கேட்டதும், அவன் முகம் கோபத்திலும், ஆக்ரோசத்திலும் கறுத்தது.

"என்ன சொன்ன, அந்த விவி இங்கே இருக்காளா? அவளை நீ பாத்தியா? இப்போ மட்டும் அவ என் விஷயத்தில் தலையிடட்டும்....., அப்போ இருக்கு அவளுக்கு", தாடை இறுக கர்ஜித்தான்.

"தருண்....., அவ என்ன இல்லாததையா எழுதுறா? உனக்கு எதுக்கு அவமேல இவ்வளவு கோபம்", எதார்த்தத்தை சொன்னாள் கண்மணி.

"அவ உண்மையைத்தான் எழுதுறாளா? அப்படியே அவ உண்மையை எழுதுவதா இருந்தாலும், என் பெட்ரூமை எட்டிப்பார்க்கும் உரிமையை, அவளுக்கு யார் கொடுத்தது? என் தனிப்பட்ட விஷயத்தில் அவ இனிமேல் தலையிடுவதை, என்னால் பொறுத்துக்க முடியாது".

"தருண்..... அவ, அவளோட வேலையைச் செய்யிறா. நீ உன் வேலையைச் செய். அவ அப்படி எழுதுற மாதிரி, நீதான் நடந்துக்குற, அது ஏன் உனக்கு புரிய மாட்டிக்கு", அவனைத் தணிக்க முயன்றாள்.

"இந்த விஷயத்தில், நான் யார் பேச்சையும் கேட்கத் தயாரா இல்லை. இனிமேல் இந்த விஷயத்தை, என் பாணியில் நான் பாத்துக்கறேன்", அவன் குரலில் இருந்த கடினத்தில் அமைதியானாள்.

அந்த விவியையை நினைத்து கவலை கொண்டாள் கண்மணி. "தருண் அவசரப்பட்டு.....",

"போதும்.....", அவள் பேச்சைக் கேட்கக் கூடத் தயாராக இல்லை அவன்.

"அவ இங்கேதான் எங்கேயாவது இருப்பாள்....., ஒரு நிமிஷம் நான் வெளியே பாத்துட்டு வாறேன்.....", ஆத்திரமாகக் கதவைத் திறந்து வெளியே வர, வாசு, கேரவன் அருகே இருந்து விலகிச் செல்வது அவன் பார்வையில் விழுந்து, அவன் ஆத்திரத்தை இன்னும் கிளறியது.

கேரவனில் இருந்து வெளியே காலை வைக்கும் நேரம், தெய்வா அவன் அருகில் நெருங்கினாள். "தருண் வேண்டாம்.....", பின்னாலே அவனைத் தடுக்க வந்த கண்மணி, தருண் தெய்வாவைப் பார்த்து தயங்கவே, அவன் மேல் மோதி நின்றாள்.

"வாங்க.....", தெய்வாவை வரவேற்று, கேரவனுக்குள் அழைத்துச் சென்றான். அவளை அழைத்து செல்லும் அந்த நிமிடம், கண்களை சுழல விட்டான். அவன் பார்வை வட்டத்தில் விழுந்தாள் விவி(vv) என்று அழைக்கப்படும், வனிதா விஷ்வனாதன்.

அவளது பைக்கில், ஒற்றைக் காலை கீழே ஊன்றி, அதில் சாய்ந்தவாறு, கையில் கேமராவுடன், சூம் போட்டு இவர்களையே கவர் செய்துகொண்டிருந்தாள். கண்களில் வெயிலை மறைக்க குளிர் கண்ணாடி வேறு.

கடல் காற்றில், குதிரைவால் போட்டிருந்த முடிகள் கலைந்து, அழகான ஓவியமாக நின்றிருந்தாள். இதழ்களில், ஏளனமான முறுவல் இவனைப் பார்த்து.

அவளைப் பார்த்ததும், தன் விரல்களை துப்பாக்கிபோல் வைத்து, அவளைப் பார்த்து சுட்டுவிடுவதாகச் சொல்லி, உதடு குவித்து விரல்களை ஊதிவிட்டு, வேண்டாம் என்பதுபோல் கைகளை ஆட்டிவிட்டு, உள்ளே சென்று கதவைத் தாளிட்டான்.

விவியின் இதழ்கள் இன்னும் ஏளனமாக வளைந்தது. "நாளைக்கு ஹாட் நியூஸ் கிடைச்சுடுச்சு", தனக்குத் தானே சொல்லிவிட்டு, தன் பல்சர் பைக்கை உதைத்துக் கிளப்பிச் சென்றாள்.

தருண், தெய்வானையிடம் பேசிச் சிரித்தாலும், நினைவில் விவியே ஊர்வலம் போனாள். அவள் செய்யும் செயல்கள் இவனை மேலும் கோபப் படுத்துமா? இவன் கோபம் அவளைத் துரத்துமா? பார்க்கலாம்.

கதவு - 5

காதலிக்கும் உணர்வைவிட

காதலிக்கப்படும் உணர்வு

சிறப்பானது.....

தருணிடம் கோபமாக பேசிக் கொண்டிருந்தாள் லயா."இடியட், எத்தனை முறை சொல்லுவது என் பின்னாடி வராத வராதன்னு. சொல்லச் சொல்ல கேட்காமல் பின்னாடியே வந்து இப்படி அசிங்கப் படுறியே, கொஞ்சம் கூட உனக்கு வெக்கமா இல்லை", உச்சஸ்த்தாயில் கத்திக் கொண்டிருந்தாள்.

அவள் இவ்வளவு கோபமாக கேட்க, "இல்லையே....., பிகாஸ் ஐ லவ் யூ.....", புன்னகை மாறாத முகமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

"உன்னையெல்லாம் திருத்தவே முடியாது", அவனை தள்ளி விட்டு, வேகமாக நடந்தாள்.

"டார்லிங்..... உன்னால் மட்டும்தான் என்னைத் திருத்த முடியும்", காதலோடு அவளை துரத்திச் சென்று, பதில் சொன்னான் அவன்.

"இன்னொரு முறை என்னை இப்படித் தொல்லை செஞ்ச....., பிறகு போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணுவேண்டா", ஆத்திரமாகக் கத்தினாள்.

"அதுக்கு ஏன் டைம் எடுக்குற? இப்போவே வேண்ணா போன் பண்ணேன், தைரியம் இருந்தால்", முன்னதை சத்தமாகச் சொன்னவன், பின்னதை ஒற்றைக் கண்ணடித்து, அவளுக்கு மட்டும் கேட்குமாறு சொல்லவே, ஒரு நிமிடம் திகைத்தவள், பின்னர் கோபம் கொண்டாள்.

அவள் கோபத்திற்குக் காரணம் கூட பயம்தான். அவன் தொல்லையை, எதில் சேர்க்கவென்று அவளுக்குத் தெரியவில்லை. "ஹல்லோ.... ஒழுங்கா ஸ்க்ரிப்ட்ல

இருக்குறதை மட்டும் பேசுங்க. எதுக்குத் தேவையில்லாமல் பேசுறீங்க", அவனை உறுத்து விழித்தாள்.

அவள் இப்படிச் சொல்லவே, "கட், கட்.....", கதிரவனின் குரல் கேட்ட பிறகுதான், நடப்புக்குத் திரும்பினாள் அவள்.

"மேம்..... இவ்வளவு ரிகர்சல் பார்த்த பிறகும், கடைசி நிமிஷத்துல இப்படி சொதப்புறீங்களே. தருண் சார் சொல்லி முடித்தவுடன், நீங்க உங்க போனை எடுத்து போலிஸ்க்கு போன் செய்யணும்", அந்த முழு நீள ஷாட் தடை பட்ட எரிச்சல் அவன் குரலில்.

"கதிரவன்.... அந்த லாஸ்ட் போர்ஷன் மட்டும் எடுத்துட்டு, எடிட்டிங்ல மேனேஜ் பண்ணிக்கலாம்", தருண் இடை புகுந்தான்.

'ஷாட்டை குழப்பியதே இவன்தான். இப்போ என்னமோ, நல்லவன் மாதிரி வேஷத்தைப் பாரேன்', அவன் செயலை வெளியே சொல்ல முடியாமல், பல்லைக் கடித்தவாறே மனதுக்குள் அவனைக் கறுவினாள்.

மறுபடியும் அதே ஷாட், சரியாக அந்த நேரம், அவளைப் பார்த்துக் கண்ணடித்து, உதட்டைக் குவித்து முத்தமிடுவதுபோல் செய்கை செய்யவே, அவளால் இப்பொழுதும் டேக் சரியாக ஓகே செய்ய முடியவில்லை.

கேமரா கோணம் அவன் முதுகின் பின்னால் இருந்து, அவள் அவனை தள்ளிவிட்டுச் செல்லும்பொழுது, அவன் முகம் தெரிவதுபோல் இருந்ததால், அவனது செய்கைகள் யாருக்கும் தெரியவில்லை.

கதிரவனின் பொறுமை பறந்துவிட்டது. அவன் புதியவன் ஆகையால், நட்சத்திரங்களை மிரட்டி வேலை வாங்க முடியவில்லை. அதைவிட குறிப்பிட்ட நாளில் படப்பிடிப்பை எடுத்து முடிக்கவேண்டிய கட்டாயம் வேறு, "பிரேக்.....", என்று கத்திவிட்டுச் சென்றுவிட்டான்.

ஷாட்டில், தருணுக்கு முன்பு வியு கிளியராக இருந்ததால், அவனுக்கு அது வசதியாக இருந்தது. நான்கு டேக் போன

பிறகும், அவன் குறும்பு நிற்காமல் தொடரவே, "ஏன் இப்படி செய்யிறீங்க? உங்களுக்கு என்னதான் வேணும்?", அழுதுவிடுபவள்போல் கேட்டாள்.

"சிம்பிள்....., நைட் என்கூட தங்குற அவ்வளவுதான்", தோளைக் குலுக்கினான்.

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க. நான், அந்த மாதிரிப் பொண்ணு கிடையாது.இந்த விஷயத்தை, என் அம்மாவிடம் பேசிப் பாருங்க, அப்போ தெரியும்", என்னமோ தாய் தன் அனைத்து துன்பங்களையும் தடுத்து விடுவார், என்ற நம்பிக்கை அவள் குரலில்.

"ஓ....., அப்போ உன் அம்மா சொன்னால் ஒத்துப்ப, அப்படித்தானே. சரி நீ போ....., நான் உங்க அம்மாகிட்டே பேசிக்கறேன்", அசால்ட்டாகச் சொன்னான்.

'தான் என்ன நினைத்துச் சொன்னால், அவன் எதை அர்த்தம் செய்து கொள்கிறான்'.அவன் செய்கையில், இன்னும் அவளுக்கு கோபம் ஏறியதே தவிர குறையவில்லை. இவனை எந்த விதத்தில் சேர்ப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை. இதுவரை அவளுடன் நடித்த நடிகர்கள் யாரும், அவளிடம் நேரடியாக இப்படிப் பேசியதில்லை.

அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். அவளது புகழுக்காக, அவளது தாய், மொட்டவிழாத சின்னப் பிள்ளைகளைக் கூட, பெரிய பெரிய தயாரிப்பாளருக்கும், இயக்குனருக்கும் விருந்தாக்கிய கதை. அவள் குழந்தை நட்ச்சத்திரமாக இருந்த பொழுது, தன்னையே விருந்தாக்கிய தெய்வானை, பின்னாளில், தன் மகளுக்காக மற்றவர்களைப் பாழாக்குவது, தொடர்கதையாகிக் கொண்டுதான் இருக்கிறது.

அவன் பேச்சு, லயாவுக்கு வெறுப்பை அளித்தது. அதிலும், தன் தாயிடம் அவன் பேசுவதாகச் சொன்னது....., "ச்சே...., நீங்க எல்லாம் மனுஷன் தானா? என் அம்மாவைப் பற்றி எனக்குத் தெரியும், நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்.

இதே மாதிரி பேசிட்டு இருந்தீங்க....., நான், டைரக்டர்கிட்டே , என் அம்மாகிட்டே எல்லாம் பேசவேண்டி வரும்", சொல்லிவிட்டு, அவனைப் பார்க்கவே விரும்பாதவள் போல், முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"ஹா.....ஹா.....ஹா....., உன் அம்மாகிட்டே....., சொல்லேன், சொல்லித்தான் பாரேன், என்ன சொல்லுறாங்கன்னு பார்ப்போம். அவங்களே, உன்னை என்கிட்டே அனுப்பி வைப்பாங்க. செஞ்சுக் காட்டவா?", அவளிடம் சவால் விட்டான்.

அவனது இந்த வார்த்தையில், விதிர்த்துப் போனாள் அவள். அவனது உறுதியில், 'அப்படியும் நடந்துவிடுமோ', என்று ஒரு நிமிடம் எண்ணியவள், பிறகு, தன் தாயைத் தவறாக எண்ணியதற்காக, தன்னையே திட்டிக் கொண்டாள்.

"அப்படி எந்த காலத்திலும் நடக்காது", அவளும் பதிலுக்கு சவால் விட்டாள்.

"ஹேய் லாவண்யா....., வேண்டாம், என்கிட்டே சவால் விடாதே, தோத்துப் போய்டுவ", எச்சரித்தான் அவளை.

தன் பெயரை லாவண்யா என்று சொன்னதில் திகைத்தாள் அவள். சினிமா உலகில், அவள் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகும் பொழுதே, லயா என்றுதான் அறிமுகமானாள். அப்படியிருக்க, தன் உண்மைப் பெயர், அவனுக்கு எப்படித் தெரியும் என்று கேட்க எழுந்த ஆவலை, அவள் கோபம் கட்டுப் படுத்தியது.

"தோக்குறது நானா, இல்லை நீங்களா என்று பார்ப்போம்", அவள் தாய்மேல் அவளுக்கிருந்த நம்பிக்கை இப்படிப் பேச வைத்தது.

"இந்த படம் முடிய முன்னாடி.... நீயே என்கிட்டே வரலை, இல்ல உன்னை நான் வர வைக்கலை....., ம்ஹூம்....., வர வைக்கிறேன்", சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

இவர்களது இவ்வளவு பேச்சும் ஐந்தே நிமிடங்களில் நடந்து முடிந்துவிட்டது. மகளை கண்கொத்திப் பாம்பாகக்

கண்காணிக்கும் தெய்வானை, மகளின் அருகில் வரும்பொழுது, தருண் சிரித்த முகமாக மகளை விட்டு விலகிச் செல்வது தெரிந்தது.

ஒரு நிமிடம் குழம்பினாள் தெய்வா. வேகமாகத் தன் மகளின் முகத்தைப் பார்த்தாள். அதில் விரவியிருந்த கோபமும், எரிச்சலும் மனதுக்குள் பாலை வார்த்தது.

தருண், மகள் கோபப்படும்படிதான் எதையோ சொல்லிச் சென்றிருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்டாள். "லயா, என்ன இங்கேயே நின்னுட்டு இருக்க? வா.... தருண் தம்பியோட கேரவனின் ஒரு பக்கத்தை, நம்மை யூஸ் பண்ணச் சொல்லி இருக்கார்", மகளின் கையைப் பிடித்து அழைத்தார்.

"அம்மா..... நீ வேண்ணா அங்கே போ, ஆனால், என்னை வரச் சொல்லாதே, எனக்குப் பிடிக்கலை. கேரவனாம் கேரவன்.....யாருக்கு வேணும்", தருண்மேல் இருந்த கோபத்தை, தாயிடம் காட்டிவிட்டுச் சென்றுவிட்டாள்.

கேரவனுக்குச் சென்ற தருணை, கண்மணி பிடி பிடியென்று பிடித்துக் கொண்டாள். "தருண்.... இனிமேல் நான் உன்கிட்டே எதையும் சொல்லத் தயாரா இல்லை. ஆனால், கடைசியா ஒன்று மட்டும் சொல்லுறேன், அந்த லயாவை, அவளோட வேலையைச் செய்ய விடேன். ஏன் இப்படி அவளைக் கோபப்படுத்தி, ஷூட்டிங்கை நாசம் பண்ணுற?", கோபமாகத் துவங்கி ஆற்றாமையாக முடித்தாள்.

அந்த நேரம், கேரவனின் கதவு தட்டப்பட்டு, வாசு உள்ளே வந்தான். "சார், அம்மா லைன்ல இருக்காங்க", பவ்யமாகச் சொல்லி அலைபேசியை நீட்டினான்.

"நான் ஷூட்டிங்க்ல இருக்கேன்னு சொல்லு போ", அவனிடம் எரிந்து விழுந்தான்.

"டேய்.... கேரவனுக்குள்ளே உனக்கு ஷூட்டிங் நடக்குதா?", ஸ்பீக்கரில் தாயின் குரல் ஓங்கிக் கேட்கவே, வாசுவை முறைத்தவாறே அலைபேசியை வாங்கினான்.

ஸ்பீக்கரை எடுத்துவிட்டு, காதில் வைத்தான்.
"சொல்லுங்கம்மா..... என்ன இந்த நேரத்தில்?",
சாதாரணமாகக் கேட்டான்.

இவனது இந்த கேள்விக்காகவே காத்திருந்தவர் போன்று,
"ஏண்டா....., புதுசா வந்த பொண்ணைக் கூட விட்டு வைக்க மாட்டியா? இதுக்குத்தான், உன்னை இந்த நடிப்புக் கருமாந்திரம் எல்லாம் வேண்டாம் என்று தலைப்பாடா அடிச்சுகிட்டேன். என்னைப் பேசி சரிக்கட்டி, பொய் சத்தியம் வேற செய்து, இப்படி நடிக்கப் போயிட்டு, ஒவ்வொரு பொண்ணோட வாழ்க்கையையும் நாசம் பண்ணுறியேடா",
கரித்துக் கொட்டினார் இவனை.

"அம்மா....., இது என்னோட தொழில் செய்யும் இடம். இங்கே எப்படி இருக்கணும்?, என்ன செய்யணும்? என்பது எனக்குத் தெரியும். என் தனிப்பட்ட விஷயத்தில் தலையிடாதீங்கன்னு உங்களுக்கு ஆயிரம் முறை சொல்லிட்டேன்.

அதைவிட, நான் உங்க பையன். உங்களுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை, எப்பவுமே மீற மாட்டேன். உங்களுக்கு என்மேல் நம்பிக்கை இல்லாமல்தான், இப்படி ஒரு உளவாளியை, கூடவே அனுப்பி இருக்கீங்கன்னும் எனக்குத் தெரியும்.

அது தெரிந்தும், நான் அவனை அனுப்பாமல் வச்சுருக்கதுலேயே உங்களுக்குத் தெரிய வேண்டாம்.....,
இதுக்குமேல இதைப் பற்றிப் பேச, நான் தயாரா இல்லமா, நான் போனை வைக்கிறேன்", அவர் பதிலை எதிர் பார்க்காமல் அலைபேசியை அணைத்து, வாசுவிடம் தூக்கிப் போட்டான்.

அது, வாசுவின் கையில் போன அடுத்த நிமிடம் மறுபடியும் அடித்தது. வாசு, அதை ஆன் செய்து காதில் வைக்கும்போது, தவறுதலாக ஸ்பீக்கரில் விரல் விழவே,
"எந்த நம்பிக்கையில்டா உன்னை நம்பச் சொல்கிறாய்? அதான் கூடவே ஒருத்தியை வைத்திருக்கிறாயே.....கண்மணி என்று, அவள் யார்?

என்னன்னு நான் கேட்டதற்கு, இன்றுவரை எனக்கு பதில் சொல்லவில்லை.

அதைவிட, போகும் இடமெல்லாம் அவளைக் கூட்டிட்டுப் போற. தனியா வீடு எடுத்து, அவளை அதில் தங்க வச்சுருக்க, பாதிநாள்..... நீயும் அந்த வீட்டில் தங்குற? இதையெல்லாம் பாக்கவாடா, நான் உயிரோட இருக்கேன்.

உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லடா, உன்கூட வாராளுங்க பாரு அவளுகளைச் சொல்லணும். வேண்டாண்டா ராசா..... நமக்கு இந்த வேலை எல்லாம் சரிவராது. நீ என் மகனா மட்டும் இருந்தால் போதும். கிளம்பி வந்துடு, அதான் தேவைக்கு மிஞ்சியே சேத்துட்டியே.....", கோபமாகத் துவங்கி, ஆற்றாமையாகத் தொடர்ந்து, கெஞ்சலில் முடித்தார்.

"அம்மா....., போதும். கண்மணியைப் பத்தி இன்னொரு வார்த்தை தப்பா பேசுனீங்க...., நமக்குள் அம்மா மகன் உறவு அந்த நிமிஷத்தோட முடிஞ்சுடும்", கண்கள் சிவக்க அவன் கத்தியது, கேரவனைத் தாண்டியும் வெளியே எதிரொலித்தது.

வாசுவிற்கே, அவர் கண்மணியைப்பற்றித்தவறாகப் பேசியது பொறுக்கவில்லை. இந்த நான்கு வருடங்களாக அவர்களைப் பார்த்து வருபவனாயிற்றே. வாசுவுக்கு கண்மணியின்மேல் விருப்பமும் கூட. தருணை, வேறு பெண்களுடன் இணைத்துப் பார்க்கமுடிகிற அவனால், கண்மணியுடன் ஒரு கடுகளவு கூட தவறாக நினைக்க முடியவில்லை.

கண்மணிக்காக, தனியாக வீடு எடுத்துக் கொடுத்துள்ளான்தான், அந்த வீட்டில் ஷூட்டிங் இல்லாத நாட்களில் தங்குவான்தான். வெளியூர் பயணம், வெளிநாட்டு பயணம் அனைத்திலும், அவளை உடன் கூட்டிச் செல்வான்தான்.

ஆனால், இவ்வளவு இடங்களிலும், வாசுவும் அவர்களுடனே இருப்பான். மூவரும், மூன்று அறைகளில்தான் தங்கி

இருக்கின்றார்கள். கண்மணியை தன் நிழல்போல் பாதுகாக்கின்றான், தன்னைவிட அதிகமாக நேசிக்கின்றான் என்பதுவரை அவனுக்குத் தெரியும்.

அவர்கள் இருவருக்கும் இடையில், நட்பைத் தாண்டியும், எதுவோ இருப்பதும் அவனுக்குப்புரிந்தது. ஆனால், அது காமம் சார்ந்தது அல்ல என்பது, அவனுக்கு இருனூறு சதவீதம் உறுதியே. அப்படியிருக்கும் பொழுது, அவர்களைப் பற்றி, கமலா சொல்வதை, அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

"தருண்..... எதுக்கு இப்போ அம்மாகிட்டே, இப்படிக் கோபமா பேசுற? அவங்க சொன்னதில் என்ன தப்பு? எந்த ஒரு அம்மாவாக இருந்தாலும் இதைத்தான் சொல்லுவாங்க, செய்வாங்க. நான் உன்னை விட்டு எங்கேயாவது போய்டுறேன்".

"ஷட்அப்..... ஜஸ்ட் ஷட்அப்.....", இப்போ, நீ போய்ட்டா மட்டும், இந்தப் பேச்சு போய்டுமா? அப்படி உன்னைப் பாதியில் விடதுக்கா, நான் உன்னைக் கூட்டி வந்து வச்சு இருக்கேன். நீ என்னை விட்டுப் போவதா இருந்தால், நான் இல்லாமல் போகணும்.

அதைவிட, இந்தப் பேச்சுக்கள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதம் எப்படியென்று, நான் ஏற்கனவே உனக்குச் சொல்லிவிட்டேன். அதைப்பற்றி, நீதான் இன்னும் முடிவு சொல்லாமல் இருக்கிறாய்", ஆத்திரமாகக் கத்தினான்.

வாசு இருவரையுமே பார்த்தவாறு, அசையாமல் நின்றுகொண்டிருந்தான். இருவரும் பேசுவது, சுத்தமாக அவனுக்குப் புரியவில்லை. "சார் நான்.....", இருவரின் கவனத்தையும் தன் பக்கம் திருப்பினான்.

"டேய்.... நீதானே அம்மாக்குப் போட்டுக் குடுக்குறது. கண்மணியைப் பத்தியும், தப்பா சொல்லி வச்சு இருக்கியாடா?", அவன் கழுத்தைப் பிடித்து நெரித்தான்.

"தருண்..... முதல்ல அவர் கழுத்தில் இருந்து கையை எடு. அவர் உன்னைவிட வயதில் பெரியவர், அந்த நினைப்பு இருக்கா இல்லையா?", சொன்னவாறு, தருணின் கைகளை விலக்கினாள்.

"பெரியவன்றது வயசில் இல்லை, நடந்துக்குற முறையில் இருக்கு. இவன் சொல்லாமல், இங்கே நடக்கும் விஷயம், சென்னையில் இருக்கும் என் அம்மாவுக்கு எப்படித் தெரியும்", ஆத்திரம் குறையாமலே கேட்டான்.

"சார்.... நீங்க இன்னைக்கு நியூஸ் பேப்பர் பாக்கலையா?", அதிர்ச்சியாகக் கேட்டான் வாசு.

"வாசு வேண்டாம்.....", கண்மணி தடுக்கும் முன்பே, செய்தியை சொல்லிவிட்டிருந்தான் வாசு.

"என்ன.....? என்னடா சொல்ல வந்த.....? இன்னைக்கு நியூஸ் பேப்பரா?", குழப்பமாகக் கேட்டான்.

"தருண், அவர் ஏதோ உளறுறார். அங்கே ஷூட்டிங்க்கு கூப்பிடுறாங்க பாரு... நீ போ", அவனைத் தணிக்க முயன்றாள்.

"கண்மணி, நீ சும்மாயிரு....., வாசு நீ சொல்லு என்ன?", அவனைப் பார்வையால் துளைத்தான்.

கண்மணி வாசுவை முறைத்து, கண்களாலேயே, 'எதுவும் சொல்லாதே'என செய்கை செய்ய, அந்த நேரத்தில் கூட, அவள் செய்கையைப் புரிந்துகொள்ளாமல், கண்மணி தன்னைப் பார்ப்பதால், விழி விரித்து, அவளையே இமைக்க மறந்து, பார்த்துக் கொண்டிருந்தான்.

"டேய்.... நான் உன்னை, இங்கே கேள்வி கேட்டுட்டு இருக்கேன். நீ என்னடா, ஜொள்ளு விட்டு, அவளைப் பாத்துட்டு இருக்க?", அவன் தோளைத் தட்டினான்.

கண்மணிக்கு, அந்த இக்கட்டான நிலையில் கூட, கொஞ்சம் சிரிப்பு இதழ் ஓரத்தில் எட்டிப் பார்த்தது. அதை மறைத்தவாறே, வாசுவை, முடிந்த அளவு எச்சரிக்கும் பார்வை பார்த்தாள்.

வாசுவோ அதை புரிந்துகொள்ளாமல், "இதோ, இப்போ எடுத்துட்டு வாறேன் சார்", சம்பந்தமே இல்லாமல் பதில் சொல்லிவிட்டு, வெளியேறி இரண்டே நிமிடத்தில் செய்தித் தாளுடன் உள்ளே நுழைந்தான்.

அதைக் கைப்பற்ற கண்மணி முயலும் முன்னர், வேகமாக வாங்கி சினிமா செய்தியை, படிக்கத் துவங்கியிருந்தான் தருண். படித்து முடித்தவனின் கண்கள் ரத்த நிறம் கொண்டது.

"விவி.....", பற்களைக் கடித்து, தாடை இறுக, அவன் உச்சரித்த இரண்டு எழுத்துக்களையும், அவன் முகத்தையும் பார்த்த, வாசுவும், கண்மணியுமே திகைத்தார்கள் என்றால்....., அந்த விவியின் நிலை.....

கதவு - 6

என் மனதுக்குள் உறையும்

எண்ணங்களைப் புரியவைக்க

எனக்கு விருப்பமில்லை

எனக்கு நான் உண்மையாக

இருப்பதே போதுமெனக்கு.....

"இரவில் வரும் நட்சத்திரப் பட்டம் உடைய நாயகன், தன்னுடன் படுக்கையைப் பகிர மறுத்த நடிகையை, தன் படத்தில் இருந்து விலக்கிவிட்டு, கைப்பாவை நடிகையுடன் கூட்டணி வைத்துள்ளார். கைப்பாவையின் லகானை வைத்திருக்கும் அவர் தாய் அனுமதிப்பாரா? (படுக்கைக்கு.....) (விவி).", கொட்டை எழுத்துக்களில், வந்திருந்த கிசு கிசுவைப் படித்துவிட்டுத்தான், கொந்தளித்தான் தருண்.

"டேய் வாசு....., இந்த விவிக்கு, என்னோட படுக்கை அறையைப் பாக்கணும்னு ரொம்ப ஆசை போல இருக்கே. காட்டிடுவோமா.....", கேலியாகக் கேட்டாலும், அதில் பொதிந்திருந்த வன்மம்,

வாசு, இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் தயங்க, "தருண்...., இதுக்கு நான் ஒத்துக்கவே மாட்டேன்", குறுக்கே புகுந்தாள் கண்மணி.

"நான் செய்யப்போகும் வேலைக்கு, உன்னோட அனுமதி தேவையே இல்லை கண்மணி", புன்னகை முகம் மாறாமல் சொன்னான்.

தருணின் கோப முகத்தைக் கூட கொஞ்சம் நம்பலாம், ஆனால் அவனது சிரித்த முகத்தை..... நம்பவே முடியாது. மனதுக்குள் எண்ணியவள், "தருண், முதல்ல தொழிலைக் கவனிக்கலாம், மத்ததெல்லாம் பிறகு பாத்துக்கலாம். உன்னை ஷூட்டிங்க்கு கூப்பிடுறாங்க. முதல்ல அதைப்

பாரு", அவனை அனுப்பிவிட்டு, வாசுவை இருக்குமாறு செய்கை செய்தாள்.

"கண்மணி....., எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்", கண்களை மூடி, இரு பொருள்பட சொல்லிவிட்டு, கேரவனில் இருந்து வெளியேறினான் தருண்.

அவன் செல்லவே, வாசுவிடம் சாடினாள். "உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா?", அவள் காட்டமாகக் கேட்க,

"அறிவிருக்குன்னுதான் நினைக்கிறேன், இல்லன்னா.... உன்னை லவ் பண்ணுவேனா?", ஈ....., என இளித்தவாறே பதில் சொன்னான்.

கண்மணி தலையிலேயே அடித்துக் கொண்டாள். "ஆண்டவா, நான் எதைக் கேட்கிறேன், நீங்க எதைச் சொல்லுறீங்க. இப்போ, அந்த நியூஸ் பத்தி அவன்கிட்டே சொல்லுறது, அவ்வ்வ்வ்வளவு முக்கியமா?", எரிச்சலாகக் கேட்டாள்.

"கண்மணி....., நீயே பாத்த இல்ல, நான் ஒண்ணும் வேணும்னு சொல்லலை. அம்மாட்ட, 'நான்தான் போட்டு கொடுத்தேன்'னு சந்தேகப்பட்டுக் கேட்டால், வேற நான் என்னதான் செய்யட்டும்", சலித்தான் அவன்.

"அதுக்கு....., இப்படித்தான் ஒரு பொண்ணோட வயித்தெரிச்சலைக் கொட்டிக்கணுமா?", அவள் விவி நினைவில் சொல்ல,

"உன்னோட வயித்தெரிச்சல் இதில் எங்கே வந்துது", அவளுடன் மேலும் மேலும் பேசுவது பிடித்திருக்கவே, அவள் சொல்ல வருவதை, புரிந்துகொள்ளவே இல்லை அவன்.

"ஜொள்ளு, ஜொள்ளு....., நான் என்ன சொல்லவந்தால், இது என்ன சொல்லுதுபாரு", அவன் காதுபடவே முணுமுணுத்தாள்.

"நீ என்ன வேண்ணா சொல்லிக்கோ, பட் ஐ லவ் யூ", கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விட, அவன் தயாராக இல்லை.

"வாசு..... நான் தருணோட கோபத்தைப் பத்தியும், அதோட விளைவைப் பத்தியும் பேசிட்டு இருக்கேன்", பொறுமையை இழுத்துப் பிடித்தவாறே சொன்னாள்.

"நான், நம்மளோட காதலைப் பற்றியும், அதோட எதிர்காலத்தைப் பற்றியும் பேசிட்டு இருக்கேன்", விடாமல் வழக்கடித்தான்.

"இது சரிவராதுன்னு, எப்போவோ நான் சொல்லிட்டேன். அதனால், இப்படி தத்து பித்துன்னு உளறாமல் பேசாமல் இருங்க", முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"என் காதல், உனக்கு உளறலா இருக்கா?", பொய்யாகக் கோபம் கொண்டான்.

"நான் அதைப்பத்தி, பேசவே தயாரா இல்லை". முடிவாகச் சொல்லிவிட்டு, "முதல்ல.... தருண், அந்த விவியை, ஏதாவது செய்ய முன்னாடி, அவனைத் தடுக்கணும். அதுக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணுங்க", அதே நிலையில் நின்றாள்.

"இப்போ நாம சொன்னால், கேட்டுப்பாருன்னு நினைக்கிறியா நீ? நான் சொன்னால், என்னை வேண்ணா அடிப்பான், நீ சொல்லிப்பார்", தருணின் குணம் தெரிந்ததால் சொன்னான்.

"இதையே செய்ய முடியலன்னா, நீங்க எல்லாம் என்னத்துக்கு அவன் கூட இருக்கீங்க. உளவு பாக்க மட்டுமா", நக்கலாகக் கேட்டாள்.

"கண்மணி.... வேண்டாம்...., கமலாம்மா சொன்னதால் தான், நான் தருணோட இருக்கேன். அவன் தப்பான வழியில் போகாமல் பாத்துக்கிறது என் வேலை இல்லை. அவனோட செடியுல் (schedule) என்னன்னு கவனிக்கிறது மட்டும்தான் என் வேலை.

அதை விட்டுட்டு, அவனோட பெட் ரூம்ல எல்லாம் என்னால எட்டிப்பாத்துட்டு இருக்க முடியாது", அவனும் அதே நக்கலாக பதில் சொன்னான்.

"ச்....., கொஞ்சம் கூட சீரியஸா யோசிக்க மாட்டீங்களா? இப்போ, எப்படியாவது அவனை பாலோ பண்ணி, அவனைத் தடுக்கணும். நீங்க, எப்பவும் அவனோடதானே இருக்கீங்க, அவன் எங்க போறான், என்ன செயிறான்னு மட்டும், எனக்குச் சொல்லுங்க, நான் பாத்துக்கறேன்", அவனிடம் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

இவர்களின் நினைப்புக்கு அப்பாற்பட்டவன் தருண், என்பதை அவர்கள் அறியவே இல்லை.

'ஹம்..... என்னடா, உலகமகா அதிசயமா, நம்மளையும் ஒரு பார்வை பாக்குறாளே, நிக்க வேற சொல்லுறாளேன்னு பார்த்தேன். எல்லாம் தருணுக்குக் கடிவாளம் போடத்தானா?", அலுத்துக்கொண்டே வெளியேறினான்.

இவர்கள் இங்கே யாரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்களோ, அந்த நேரம் அவள் தாராவுடன் பேசிக் கொண்டிருந்தாள். "விவி.... இன்னைக்கு நியூஸ் பேப்பர் பார்த்தேன்(படிக்கச்சொல்லிக் கேட்டாள்). நான் சொன்ன விஷயத்தை ரொம்பவே அழகா போட்டு இருக்கீங்க, தேங்க்ஸ்", தேன் குழைத்த குரலில் சொன்னாள் தாரா.

"மேம்.... நான் உங்களோட தேங்க்சை எதிர்பார்த்து, இதைச் செய்யலை. அது என்னோட டியூட்டி....., அதைவிட, சிலரோட உண்மையான முகத்தை, நேரடியா சொல்லமுடியவில்லையே என்ற வெறுப்பிலும் இருக்கேன். ஏதோ என்னால் முடிந்தது, இந்தச் செய்திகளைப் பார்த்தாவது, விளக்கைப் பார்த்து மயங்கி வரும் விட்டில் பூச்சிகள், அதோட உண்மையான குணம் தெரிந்து தப்பித்தால் போதும்", கலங்கிய தன் குரலை, அவளுக்குக் காட்டாமல் மறைத்தாள்.

"ஹேய்.... நீ சொல்லுவது எனக்குப் புரியலை. எனிவே, நீ எனக்கு செஞ்ச உதவிக்கு நன்றி", சொல்லிவிட்டு வைத்துவிட்டாள்.

'இவளுக்கு, நான் அப்படியென்ன உதவி செய்தேன்', ஒரு நிமிடம் யோசித்தவள், பிறகு அதை ஒதுக்கிவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தாள்.

"விவிமேம்....எடிட்டர் கூப்பிடுறார்", ஆபீஸ் பையன் வந்து சொல்லிவிட்டுச் செல்லவே, எழுந்து அவரைப் பார்க்கச் சென்றாள்.

அனுமதிகேட்டுவிட்டு, அவரின் அறைக்குள் நுழைந்தாள். அங்கே, நெற்றி நிறைய பட்டையுடன், காந்தி கண்ணாடியுடன், ஐம்பது வயது மதிக்கத்தக்க எடிட்டர் அமர்ந்திருந்தார்.

"வாம்மா விவி.... என்ன, எப்பவும் ஹாட் நியூஸ் கொண்டு வந்து கலக்குற. சரி, இன்னும் எவ்வளவுநாள், இப்படி கிசு கிசு மட்டுமே எழுதிட்டு இருக்கப் போற? அடுத்த இடத்துக்கு முன்னேறணும்னு, தோணவே இல்லையா?", கூர்மையாக அவளைப் பார்த்தவாறே கேட்டார்.

"இல்ல சார், எனக்கு இந்த பகுதியே ரொம்பப் புடிச்சு இருக்கு. அதைவிட, நான் இந்த இடத்தில் இருக்க, என்ன காரணம் என்பது, உங்களுக்கே தெரியும், அப்படி இருக்கும்போது....., எனக்கு இதுவே போதும்", உறுதியாகச் சொன்னாள்.

"என்ன விவி....., இப்படிச் சொல்லுற? எப்போவோ நடந்த ஒரு விஷயத்துக்காக.....", இழுத்தார் அவர்.

"சார்.... உங்களுக்கு வேண்ணா, அது எப்போவோ நடந்த ஒரு விஷயமா இருக்கலாம். ஆனால், பாதிக்கப்பட்டது என்னோட அக்கா. எப்படி சார் மறக்க முடியும். அவ எனக்கு அக்கா மட்டும் இல்லை. என்னோட அம்மாவும் கூட, என்னை விட பன்னிரண்டு வயசு பெரியவ.

பரதநாட்டியம் அவ்வளவு அழகா ஆடுவா, எனக்கு ஐந்து வயசா இருக்கும்போது, அவளோட நாட்டியத்தைப் பார்த்து, அவளை நடிக்க அழைத்த அந்த இயக்குனர், அவளுக்கு விருப்பமில்லை என்று சொன்ன பிறகும் கேட்காமல்,

அவளுக்கு ஆசை காட்டி, என் அம்மாவின் மனதையும் கரைத்து, எங்களது வறுமையை உபயோகப்படுத்தி, அவளை அழைத்துச் சென்று, சின்னாபின்னமாக்கி, அவள் வாழ்க்கையைக் கெடுத்தது மட்டுமல்லாமல், இதுதான் எதார்த்தம் என்று சொன்னதை, எப்படி மறக்கச் சொல்லுறீங்க.

அந்த வயதில், அம்மாவும், அக்காவும், எதற்கு அழறாங்கன்னு தெரியாமல், அவர்களோடு அழுதேனே..... அந்த வலியை எப்படி மறக்க, இவை எல்லாத்தையும் விட, என்னை இந்த உலகத்தில் அனாதையா விட்டுட்டு, அவங்க மட்டும் தற்கொலை செய்துகொண்டார்களே,

அறியா வயதிலேயே, நான் அனாதையாக நின்னேனே, எல்லாம் எதனால்....., இந்த பாழாப் போன சினிமாவால். அதோட மறு பக்கத்தால். அப்போ எழுந்த வெறிதான், இன்னும் தணியலை. என்னால் முடிந்த அளவு, இந்த மனிதர்களோட முகத்திரையைக் கிழிக்கணும்.

இதை நம்பி, இந்த 'சினிமா' என்ற மாய உலகத்தில் வந்து சிக்கும் அறியாப் பெண்களில்.... ரெண்டுபேர்..... என் வார்த்தைகளைப் படித்து, தப்பித்தால் போதும். எனக்கு, வேற எதுவும் வேண்டாம்", ஆத்திரமாகத் துவங்கியவள், கோபமாகி, பின்னர் கண்ணீரில் முடித்தாள்.

இதற்குமேல் சொல்ல, எதுவும் இல்லை என்பதுபோல் தோளைக் குலுக்கினார். "நீ சொல்வதெல்லாம் சரிதாம்மா. ஆனால் நீ ஒரு பெண். அதுவும் ஹாஸ்ட்டலில் தனியா இருக்க, இந்த மாதிரி விஷயங்களில் தலையிடுவதால், உனக்கு ஆபத்து அதிகமாக இருக்கும்.

எனக்கு உன்னைப்பற்றி அக்கறை இருக்கிறது, அதனால்தான் சொல்லுறேன். புரிஞ்சு நடந்துக்கோம்மா", சொல்லிவிட்டு அமைதியாக அவளைப் பார்த்தார்.

"சார்... நீங்க சொல்லுவது எனக்குப் புரியது, என்னைப் பாத்துக்க, எனக்குத் தெரியும் சார். கராத்தே, ஜூடோ, களரி வரை, அனைத்து தற்காப்புக் கலைகளையும் கத்து வச்சு

இருக்கேனே. அவ்வளவு சீக்கிரம் என்னை யாரும் நெருங்க முடியாது", சொல்லிவிட்டு மென்மையாக அவரைப் பார்த்து சிரித்தாள்.

"ஹம்....., நீயும், நான் கேட்கும் போது எல்லாம் இதையேதான் சொல்லுற. சரி, என்ன இப்போ, தொடர்ந்து தருண் பின்னாடியே போறியே, ஏன்? ஏதாவது தனிப்பட்டக் காரணம் இருக்கா என்ன?", செய்தியறியும் பாவம் அவர் குரலில்.

"அப்படி, தனிப்பட்டக் காரணம் எதுவும் இல்லை. ஆனால், இப்போ உச்ச நிலையில் இருக்கும் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளத்தானே, மக்கள் அதிகம் விரும்புவாங்க, அதான்", அவள் சாதாரணமாகச் சொன்னாலும், அதை நம்பத்தான் முடியவில்லை அவரால்.

"விவி... இந்தக் கதையை, வேறு யாரிடம் சொன்னாலும் அவர்கள் நம்பலாம், ஆனால்.....", 'என்னை ஏமாற்ற முடியாது' என்று சொல்லாமல் சொன்னார்.

"சார்.....", சிரித்துவிட்டு, "ஹம் விட மாட்டீங்க....., சினிமா உலகில் என்னதான் நடந்தாலும், ஒருவர் மற்றவரை, விட்டுக்கொடுக்கவே மாட்டாங்க. ஆனால் தருண் விஷயத்தில், அவனோட சேர்ந்து மூன்று படத்தில் நடித்தத் தாரகையே, தானாக முன்வந்து சொல்லும்போது.....", அவரைப் போலவே இழுத்து நிறுத்தினாள்.

"அது பொய்யாகவும் இருக்கலாமே.....", தன் சந்தேகத்தைச் சொன்னார்.

"அதில் இருக்கும் பொய்யையும், உண்மையையும் கண்டு பிடிக்கணுமே, அதனால்தான் அவரைப் பின்தொடர்கிறேன். ஏற்கனவே, மூன்றுபேர் லிஸ்டில் இருந்தாங்க, இப்போ இவனோட சேர்த்து, நாலுபேர். கூடிய சீக்கிரம் உண்மையை வெளிக்கொண்டுவருவேன். தருணின் உண்மை முகம், மக்களுக்கும், அவனோட ரசிகர்களுக்கும் தெரியம் நாள், அதிக தூரத்தில் இல்லை", கண்கள் மின்னச் சொன்னாள்.

"எதற்கும், அந்தத் தருணிடம் கொஞ்சம் கவனமா இரும்மா. அவன் எப்போ, எப்படி இருப்பான் என்பது, யாருக்கும் தெரியாது", அவளை எச்சரித்தார்.

அதெல்லாம் நான் பாத்துக்கறேன் சார். அவரிடம் விடைபெற்றுவிட்டு, இன்று எடுத்த புகைப்படங்களையும், செய்திகளையும், வாராந்திர பிரதிகளுக்கு எடிட் செய்து அனுப்பும் வேலைகளில் முனைந்தாள்.

தனக்குப் பின்னப்படும் வலையை அறியாமலே, வழக்கமான வேலைகளில் ஈடுபட்டாள்.

கதவு - 7

என் கோபத்தில் காதலை

என் சிரிப்பில் வலியை

உன்னால் மட்டும்

பிரித்தறிய முடிவதால்.....

நீயும் காதல் அன்னம்தான்.....

தருண், தன் அடக்கப்பட்ட கோபத்துடன், முதலில் செய்த விஷயமே, தனக்குப் பாதுகாப்பு அளிக்கும் நிறுவனத்தைத் தொடர்புகொண்டு, தான் சொல்லும் வேலையை முடித்துத் தர முடியுமா என்று கேட்டான். கேட்பவன் தருண் ஆகையால், அவர்களுக்கு மறுப்புச்சொல்ல, தைரியம் வரவில்லை.

"சார், நீங்க சொல்லி நாங்க எதையாவது செய்யாமல் இருப்போமா? என்னன்னு மட்டும் சொல்லுங்க சார்", 'எதுவாக இருந்தாலும் செய்வோம்' என்ற உறுதி இருந்தது அவர்கள் குரலில்.

"இது, ஒரு பொண்ணைப் பற்றிய விஷயம்.....", விஷயத்தின் வீரியத்தை, கோடிக் காட்டினான்.

மறுபக்கம், ஒரு நிமிடம் தயங்கினாலும், "பரவாயில்லை சார், ஆனால், இதில் ரிஸ்க் எதுவும் இருக்காதே?", தங்கள் நிறுவனத்தின் நம்பிக்கையை அவர்கள் காக்க வேண்டுமே.

"ரிஸ்க் இல்லாத விஷயத்துக்கு, உங்களை அணுகவேண்டிய அவசியம், எனக்கு வந்தே இருக்காதே", ஏளனமாகச் சொன்னான்.

"சார்... நாங்க நேர்மையான விஷயங்களை மட்டும்தான் செய்வோம்....", தயங்கினார் மோகன்.

"நானும் சட்டத்துக்குப் புறம்பாக, எதையும் செய்ய மாட்டேன், என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதைவிட,

என்னோட நடவடிக்கைகள் மாறினால், அது எனக்குதான் பாதிப்பு, என்பதைக் கூட அறியாத முட்டாளா நான்?", குரலில் கடுமை ஏறியது.

"அப்படியே இருந்தாலும் பொண்ணு விஷயம்....., அதில் ஏகப்பட்ட சிக்கல் இருக்கே சார்", மோகனுக்கு, இன்னுமே முழு நம்பிக்கை வரவில்லை, தருணின் பேச்சில்.

"இதில், எந்த ரிஸ்க் வந்தாலும் நான் பாத்துக்கறேன். அது மட்டும் இல்லை, நான் தூக்கச் சொல்லுவது, ஒரு பத்திரிகை பிரபலத்தை. இதில் என்னோட ரிஸ்க் தான் அதிகம், என்பது உங்களுக்குத் தெரியும்", தைரியமாகச் சொன்னான்.

"சார்....., பத்திரிகைக் காரப் பொண்ணா?", அவர் குரலில் அதிர்ச்சி.

"மோகன்.... என்ன பயம்மா இருக்கா? அதான் முதலிலேயே கேட்டேன், உங்களால் முடியுமா இல்லையா என்று", கோபமாகச் சொன்னான்.

"சார், இந்த விஷயம் எவ்வளவு பெருசாகும் என்பது, உங்களுக்குத் தெரியாததா?", கேட்டான் மோகன்.

"தெரிந்தும், நான் எப்படி இவ்வளவு தைரியமாகச் சொல்லுகிறேன் என்பதில் இருந்தே, விஷயம் வெளியே வராது என்பதுஉங்களுக்குத் தெரியலையா? நீங்க செய்ய வேண்டியது ஒண்ணுதான், யாருக்கும் தெரியாமல், விவியை என் வீட்டுக்குத் தூக்கிட்டு வந்துடுங்க. மீதியை நான் பாத்துக்கறேன்.

ஆனால் ஒண்ணு மட்டும் கவனம், யாருக்கும் எந்த சந்தேகமும் வரக் கூடாது. முக்கியமா விவிக்கே", அழுத்தமாகச் சொல்லிவிட்டு வைத்துவிட்டான். இதழ்களில் விஷமப் புன்னகை.

அதன் பிறகு, தனக்காகக் காத்திருந்த, இயக்குனர் கதிரின் அருகில் சென்றான். "சார், இந்தக் காட்சியில் நீங்க, அந்த லைட் ஹவுஸ் மேலே ஏறி நின்று, தற்கொலை செய்து

கொள்வதாக மிரட்டுறீங்க. அதைப் பார்த்து, லயா பதை பதைக்குறாங்க. உங்களோட பேஸ்க்கு ஒரு க்ளோஸ்அப் கேமரா, லாங்ல ஒரு கேமரா, பிறகு லயாக்கு ஒரு கேமரா. எல்லாக் கேமராவும் ஆன்லையே இருக்கும்.

எல்லாம் ஒரே ஷாட்டில் முடியணும். பிறகு, எடிட்டிங்ல எல்லாத்தையும் சேர்த்து ஆட்(add) பண்ணிக்கலாம்", அதன்பிறகு, அவர்களது முக பாவம், வசனங்கள் அனைத்தையும் வரிசையாகச் சொன்னான்.

அனைத்தையும் கவனமாக, இருவரும் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் ஷாட்டில், தருண் மேல் இருந்த கோபத்தினாலோ என்னவோ, லயாவிற்கு, பதட்டம் சரியாக வரவே இல்லை. ஆனால் தருண், மனதுக்குள் லயாவை நினைத்து எவ்வளவு சிரித்தாலும், வெளியில் தன் வேலையை சரியாகச் செய்தான்.

கதிருக்குத்தான் கடுப்பாக வந்தது. ஒரு நேரம், பொறுக்கவே முடியாமல் லயாவிடம் சாடிவிட்டான்.

"மேம்.... நிஜமாவே, உங்களுக்கு நடிக்கத் தெரியுமா இல்லையா? எந்த சீன் சொன்னாலும் முகத்தை உர்ருன்னே வச்சுட்டு இருக்கீங்களே. காதலிக்கச் சொன்னால் வரலை, கோபப்படச் சொன்னால் வரலை, இப்போ, கொஞ்சம் தவிப்பா பாக்கச் சொல்லுறேன், அதுவும் வரலை.

அப்படி என்னதான் உங்க மனசுக்குள் ஓடிட்டு இருக்கு. உங்களால் இந்தப் படத்தில் நடிக்க முடியலன்னா, விலகிக்கறேன்னு சொல்லிட்டுப் போகலாம் இல்ல. ஏன் இப்படி, என் வாழ்க்கையோட விளையாடுறீங்க?", தன் வாழ்வின் ஆதாரம், அவள் கையில் இருப்பதால், அடக்கப்பட்ட ஆத்திரத்தில், கத்திவிட்டுச் சென்றுவிட்டான்.

போகும் பொழுதே, 'இவங்க எல்லாம், உடம்பை மட்டும் காட்டிட்டால் போதும்னு நினைச்சு வந்தாங்க போல, வந்து நம்ம உயிரை எடுக்குதுங்க', அவன் புலம்பியது, அவள் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தது.

லயாவுக்கு அவமானமாக இருந்தது. இதுவரை தான் நடித்த படங்களில், ஒரு முறை கூட, இப்படி இயக்குனர்களிடம் திட்டு வாங்கியதில்லை. அதேபோல், ஹீரோவுடன் சண்டையும் வந்ததில்லை. இந்தத் தருண் மட்டுமே, தன்னைத் தேடிவந்து தொல்லை செய்வது, அவளுக்குப் புரிந்தது.

அதைவிட, சினிமா உலகத்தில் அவனைப் பற்றி உலவும் வதந்திகளும், அவனுடன் இயல்பாகப் பேசக்கூட விட வில்லை. ஒரு நேரம், அவனுடன் தன்மையாகப் பேசலாம் என்று முடிவெடுக்கும் வேளைகளில் எல்லாம், சீண்டுவதுபோல் எதையாவது சொல்லி, அந்த சந்தர்ப்பங்களையும் பாழாக்கினான் தருண்.

அவன் எவ்வளவுதான் தன்னிடம் இவ்வாறு பேசினாலும், தன்னைக் கட்டாயப் படுத்தவில்லை என்பதும் அவளுக்குப் புரியவே செய்தது. அவன் பாம்பா, பழுதா என்பது தெரியாமல்தான் திண்டாடினாள்.

இவன், இரவில் அவனோடு தங்க வரச் சொன்ன, மூன்றே நாளில், பத்து நாள் வேலையைச் செய்து, அந்தப் படத்தை முடித்துக் கொடுத்துவிட்டாள். அதன் பிறகு, புதுப் படம் ஒப்பந்தம் ஆனாலும், இன்னும் இரண்டு மாதம், கால அவகாசம் இருந்தது.

கதிரின் பேச்சும், தருணின் சிரிப்பும் மனதை உருக்க, தாயின் அருகில் சென்று அமைதியாக அமர்ந்தாள். "என்ன பாப்பு? ஏன் சரியா நடிக்காமல் இருக்க? என்னதான் ஆச்சு?", மகளின் செய்கை, தெய்வாவுக்குமே புரியவில்லை.

"நான்தான் அப்போவே சொன்னேனேம்மா, எனக்கு இந்தப் படத்தில் நடிக்க விருப்பம் இல்லை. அவனைப் பாத்தாலே எரிச்சல்தான் வருது", தாயிடம் தன் நிலையைச் சொன்னாள். அப்படியாவது தாய், 'இந்த படத்தில் நடிக்கவேண்டாம்' என்று சொல்லிவிட மாட்டாரா என்ற சிறிய ஆசைதான்.

மகள் விருப்பம் புரிந்தாலும், அதைக் கண்டுகொள்வதாக இல்லை தெய்வா. "பாப்பு, பொம்மு, நீ எதுக்கு அந்தத் தம்பியைப் பாக்குற? உன் வேலையை மட்டும் நீ பார்க்க வேண்டியது தானே. உன் தொழில்.... நடிப்பது, அதைச் செய்வதை விட்டுட்டு....., நீ உன் நடிப்பில் மட்டும் கவனம் செலுத்து, மத்ததெல்லாம் தானா சரியாயிடும்", தன் மகளை எப்படிச் சமாளிக்க வேண்டுமென்று, தெய்வவுக்கா தெரியாது.

தாய், தன் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கவில்லை, தன்னை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை என்பது, பாவம் அந்தப் பேதைக்குத் தெரியவே இல்லை. தாயின் மாயாஜாலப் பேச்சில் கட்டுண்டாள் அவள்.

'அம்மா சொல்வதும் சரிதானே, நான் ஏன் அவனையே பார்க்கிறேன். அவன் பேச்சு, என்னை பாதிக்கஏன் அனுமதிக்கிறேன். என் வேலையை நான் சரியாகச் செய்யாமல், அவனைக் குறை கூறுவது முறையே இல்லைதான்', தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்

அதே நேரம், தருண் இவர்கள் அருகில் வந்தான். "என்னம்மா.... நான் அவ்வளவு சொல்லியும், என் கேரவனுக்கு வரவே இல்லையே", கேள்வி தெய்வாவிடம் இருந்தாலும், பார்வை லயாவைத் துளைத்தது.

தருண் பேசத் துவங்கியதுமே, தெய்வா கொஞ்சம் திணறினாள். "அதான் அன்னைக்கே சொன்னேனே தம்பி, எங்களுக்கு விருப்பம் இல்லை என்று", தருணிடம் பேசினாலும், மகளின் மீதே பார்வையை வைத்திருந்தார்.

ஆனால் லயாவோ, அவன் வந்து அமர்ந்தவுடனே, அவன் பேச்சை கவனிக்கக் கூடாது என்ற முடிவிற்கு வந்துவிட்டதால், அவர்களின் பேச்சுக்கு, செவி சாய்க்கவே இல்லை. தன் ஐபேடில், வலைத்தளத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

"விருப்பம் இல்லன்னா சொன்னீங்க.....?, எனக்கு என்னமோ, 'வேற என்னவெல்லாம் வேணும்'னு கேட்ட மாதிரி இருந்துது?", கண்களில் குறும்புக் கூத்தாடச் சொன்னாலும், உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்தான் அவன்.

தெய்வாவிற்கும் இப்பொழுது அதே சந்தேகம் தான். இவன் விளையாட்டாகச் சொல்கிறானா? வினையாகச் சொல்கிறானா? என்று, அவன் கண்களைப் பார்த்து அறிய முற்பட்டார்.

அந்தோ பரிதாபம், சிறந்த நடிகனான அவனுக்கு, நடிக்கவா கற்றுக் கொடுக்கவேண்டும். "இல்ல....., அது சும்மா....., நீங்க ஏதாவது தப்பான எண்ணத்தில் கேரவனுக்குக் கூப்பிடுறீங்களோ என்று தெரிஞ்சுக்க, நான் அப்படிச் சொன்னேன்", உனக்கு இவ்வளவு தெரிந்தால், உன் வயது என் அனுபவம், எனக்கா தெரியாது, என்பதுபோல் இருந்தது தெய்வாவின் பதில்.

மனதுக்குள்ளே மெச்சிக் கொண்டான் தருண். "அட....., என்னது..... போட்டு வாங்குனிங்களா? நானும் என்னமோ, 'என்னோட பொண்ணை விட இளசா தாறேன்'னு சொன்னதும், அதை உண்மைன்னு நம்பிட்டு உங்ககிட்டே பேச வந்தால்.....

என்னை இப்படி ஏமாத்திட்டிங்களே. சரி அதையாவது விடுங்க, மற்ற சமாச்சாரம் எப்படி.....?", அவன் கண்ணடித்துக் கேட்க, இப்பொழுது வெளிப்படையாகவே கலவரமாகி, மகளைப் பார்த்தாள் அவள்.

தருணின் ஓரவிழிக் கவனமும் லயாவிடம் தான் இருந்தது. ஆனால் அவன் எதிர் பார்த்ததுக்கு மாறாக இயல்பாக இருந்தது. இப்பொழுது தெய்வாவிற்கு, உண்மையாகவே அவன்மேல் சந்தேகம் வந்தது.

தருண், அன்று வாசுவை அழைத்து, இவர்களை கேரவனுக்கு கூட்டிவரச் சொல்லவே, லயாவோ மறுத்துவிட்டாள். ஆனால் தெய்வாவோ, தருணை

வளைத்துப் போடும் எண்ணத்துடன் அவனை நெருங்கினாள்.

நெருங்கிச் சென்று அவனுக்கு ஆசை காட்டினார். ஒரு நாயகனை மடக்கிவிட்டால், மகளுக்கு அடுத்தடுத்த படங்கள் புக் ஆகும், என்ற கணக்கு அவளிடம். எனவே, அவனுக்கு என்ன தேவை என்றாலும், தான் நிறைவேற்றுவதாகவும், இரவில் துணைக்கு, லயாவை விட இளசாக, சின்னப் பெண்களை அனுப்புவதாகவும், போதையேற்றவும் உதவுவதாகவும் வெளிப்படையாகவே பேசினார்.

அவர் பேச்சு, அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனாலும், அவரைப் பகைத்துக் கொள்ள முடியாதே, எனவே, "தனக்கு தேவைப்படும்பொழுது அவரை அணுகுவதாகவும், தற்பொழுது அவனுக்கு எதுவும் தேவையில்லை என்றும் சொல்லி அனுப்பிவிட்டான்.

இவரது பேச்சில், லயாவின் பங்கு எவ்வளவு என்று எண்ணிக் குழம்பினான். ஆனால் அவளுடன் பழகிய வரையில், தவறாக நினைக்கும்படி எதையும் சொல்லவோ, செய்யவோ இல்லை. அதைவிட, எதை அவளிடம் கேட்டாலும், பதில் வருவது என்னவோ தெய்வாவின் வாயில் இருந்துதான்.

லயாவிற்கு, நடிப்பில் எவ்வளவு ஈடுபாடு இருந்ததோ, அதே அளவு, புகழ் வெளிச்சத்தை, அவள் அனுபவிக்கவோ, அதில் மயங்கவோ இல்லை. அனைத்தும் தெய்வாவே செய்தாள் கவனித்தாள். லயா எந்தப் படத்தில், எங்கே, எப்பொழுது, நிற்கவேண்டும், நடிக்கவேண்டும், எந்த உடை உடுத்தவேண்டும், என்பதுவரை அவரது ஆளுமை தெரிந்தது.

லயா இவற்றை உணர்ந்தாளா? இல்லை உணர்ந்தும், தாயின் செய்கைகளை, விரும்பித்தான் இப்படி நடந்து கொள்கிறாளா? இல்லையென்றால், தாயை எதிர்த்துப் பேச தைரியம் இல்லாமல் பயந்து, இவையெல்லாம்

செய்கிறாளா? அவளைப் பார்த்தால் பயத்தில் செய்வது போலும் இல்லை.

யோசிக்க யோசிக்க, அவனுக்குத் தலையை வலித்ததுதான் மிச்சம். அதைவிட, அவளைப் பற்றி தனக்கு ஏன் இவ்வளவு யோசனை என்பதை, அவன் யோசிக்கவே இல்லை. எப்படியாவது அவள் மனதில் என்ன இருக்கிறதென்றும், அவள் தாயின் மறுபக்கம் அவளுக்குத் தெரியுமா என்பதை, அறிந்து கொள்ளவும் விரும்பினான்.

எனவேதான் அவர்கள் அருகில் நெருங்கி, அவள் தாய் தன்னிடம் கேட்டவற்றைப் பற்றி, கோடி காட்டினான். ஆனால் அவள் அதை கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. இதிலும் அவள்மேல் சந்தேகம் வந்தது. ஆனால், தெய்வா மகளின் முகம் பார்த்தவாறே தயங்கிப் பேசியதால்....., வந்த குழப்பம் விலகியது.

'ஆக உன் ஆட்டமெல்லாம், மகளது உழைப்பில் குளிர் காயத்தானா? இது எத்தனை நாளைக்கு சரிவருகிறது என்று பார்க்கிறேன். உன் மகளுக்கு உண்மை தெரியவந்தால் என்னவாகும் என்றும் உனக்குக் காண்பிக்கிறேன்', தனக்குத் தானே எண்ணிக் கொண்டவன், இன்னும் அங்கே இருப்பதில் பயனில்லை என்று உணர்ந்து எழுந்து சென்றான்.

அவனது குழப்பமான முகத்தைப் பார்த்து, கண்மணி கொஞ்சம் திகைத்தாள். தருண் எப்பொழுதும், மனதில் ஒன்றை வைத்து மருகுபவன் கிடையாது. அப்படியே ஏதாவது பிரச்சனை வந்தாலும், அதற்குத் தீர்வு என்னவாக இருக்குமென்று உடனடியாக சிந்தித்து, அதை சரிசெய்ய ஒரு முடிவெடுத்த பிறகு, அதைப்பற்றி அவன் யோசிக்கக் கூட மாட்டான்.

அதுமட்டுமல்ல, எடுத்த முடிவை சரியானதாக மாற்ற, எதையும் செய்வான். அப்படிப்பட்டவனை, இவ்வளவு குழப்பும் விஷயம், என்னவாக இருக்குமென்று, அவளுக்கு ஓரளவு யூகம் இருந்தது. ஆனால், அதைத்

தெளிவுபடுத்திக்கொள்ளும் விதம் அறியாமல்தான் அமைதியாக இருந்தாள்.

அன்றைய அவனது தெளிவின்மை, படப்பிடிப்பில் கூட வெளிப்பட்டது. தன்னால், இன்று நடிக்க முடியாது என்று சொல்லி, அறைக்குத் திரும்பிவிட்டான். ஏற்கனவே, வெளிமாநிலப் படப்பிடிப்பு, லயாவால் தடை பட்டிருந்தது.

இப்பொழுது, வெளிப்புறப் படப்பிடிப்பில் தருண், தனக்கு நடிக்கும் மனநிலை இல்லை என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு வந்துவிட்டான்.கதிருக்குத் தான் என்ன செய்வதென்று புரியவில்லை.

தான் படம் துவங்கிய நேரமே சரியில்லையோ என்று, தன்னையே நொந்துகொண்டான். தருணோ, தன் வீட்டுக்குச் சென்றால், தாயின் பேச்சைக் கேட்கவேண்டும் என்று சொல்லி, அங்கே செல்லாமல், அவன் கண்மணிக்காக வாங்கிய வீட்டில் தங்கிக் கொண்டான்.

வெளிமாநிலப் படப்பிடிப்பு முடித்து வந்து இரண்டு வாரங்கள் ஆகி விட்டது. கண்மணி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், அவன்அம்மாவின் வீட்டுக்குச் செல்ல, சம்மதிக்கவே இல்லை. ஒரு அளவுக்குமேல் மகன்களையே கண்டிக்க முடியாத பொழுது, முழு ஆண்மகனான அவனை, எவ்வளவுதான் அவளால் கண்டிக்க முடியும்.

இருந்தாலும், அவனது குழப்பத்தை, தன்னால் தீர்க்க முடியுமா என்று அறிய, அவன் அருகில் சென்றாள். அவனோ, அவள் வந்தது கூடத் தெரியாமல், யோசனையிலேயே மூழ்கி இருந்தான்.

"தருண்....., என்ன குழப்பத்தில் இருக்கியா...?", மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்.

சட்டெனக் கலைந்து, "ஆமா..... ச்..... இல்லை....., இப்போ எதுக்கு வந்த..? மறுபடியும், என்னை அம்மா வீட்டுக்குப் போகச் சொல்லவா... அதான் ஏற்கனவே சொல்லிட்டனே, முடியாதுன்னு, வேற எதுவும் இல்லன்னா நீ கிளம்பு...", அவள் கேட்க வருவதை கவனிக்காமல் சொன்னான்.

"தருண்.... நான் கேட்டதுக்கு பதில் சொல்லாமல், அப்படி என்ன யோசனை. உன் மண்டையைக் குடையும் விஷயம் என்னவென்று தெரிந்தால், என்னால் முடிந்த உதவியை நான் செய்வேனே. உன்னை, இவ்வளவு ரெஸ்ட்லெஸ்ஸா நான் பார்த்ததே இல்லை. இன்னைக்கு ஷூட்டிங் கூட நீ கேன்சல் பண்ணி இருக்க. என்ன விஷயம்?", அவன் அருகில் அமர்ந்து கேட்டாள்.

"பெருசா எதுவும் இல்லை. எல்லாம் அந்த லயாவோட விஷயம்தான். அந்த தெய்வா, மகளை முன்னாடி நிப்பாட்டிட்டு, பின்னாடி எல்லா வேலையும் செய்யுது. இது லயாவுக்குத் தெரியுமா? இல்லை தெரியாதா? அப்படித் தெரியும்னா விலகிக்கலாம், அப்படியே தெரியலன்னா, அவளுக்கு, அவ அம்மாவைப் பற்றி தெரிய வைக்கணும்", இன்னும் என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டே சென்றான்.

அனைத்தையும் அமைதியாகக் கேட்டவள், "எனக்கு ஒண்ணு மட்டும் புரியலை, அவ அம்மாவைப் பற்றி, லயாவுக்குத்தெரியணும்னு, நீ ஏன் இவ்வளவு அக்கறைப் படுற? லயாவுக்கு, இது தெரிந்தால் என்ன? தெரியாமல் போனால் உனக்கென்ன", நிதானமாக அவனிடம் கேட்டாள்.

"அதெப்படி அப்படியே விட முடியும்.....?", ஒரு வேகத்தில் கேட்டான்.

"ஏன் விட முடியாது.....?", அவளும் அதேபோல் கேட்டாள்.

"என்னநீ இப்படி சொல்லிட்ட? இதனால், அவளோட எதிர்கால வாழ்க்கையே நாசமா போகும் தெரியுமா? இந்த சினிமா உலகில் நடிக்கும் நாயகிகளில், பலதரப் பட்டவர்களை எனக்குத் தெரியும். மாடலிங் உலகின் வழியாக இங்கே வந்தவர்கள், இடைத் தரகர்களின் மூலம் வந்தவர்கள், பணம் சம்பாதிக்க மட்டுமே வந்தவர்கள், புகழ் போதைக்காக வந்தவர்கள், தன்னிஷ்டப்படி வந்தவர்கள், படம் கிடைக்கவேண்டும் என்பதற்காக, எதையுமே செய்யத் தயங்காதவர்கள், என்னதான் பணம் கொடுத்தாலும்,

கொள்கையை விடாதவர்கள், உடுக்கும் உடையில் கூட கண்ணியம் வேண்டும் என்று நினைப்பவர்கள்,

தொட்டு நடிக்கக் கூடாது என்று நிபந்தனை போடுபவர்கள், முத்தக் காட்சியில் நடிக்க மாட்டேன் என்று சொல்பவர்கள், நீச்சல் உடை போடமாட்டேன் என்று சாதிப்பவர்கள்....., இப்படி நிறைய. ஆனால் இதில், இந்த லயா விதி விலக்கு.

எப்படின்னு கேட்கிறாயா? அவளுக்கு நடப்பவற்றில், அவளது பங்கு எதுவுமே இல்லை. கேமரா முன்பு நடிப்பதைத் தவிர. இவ்வளவு ஏன், தன் சம்பளம் எவ்வளவு என்பதுகூட அவளுக்குத் தெரியாது. இப்படி, பச்சைப் பிள்ளையாக இருக்கும் இவளை, தன் சுயநலத்துக்காக, இந்த தெய்வா என்ன வேண்டுமானாலும்செய்வாள்.

இப்போ ஒரு கோடி ரூபாய் தருகிறேன், உன் மகளை என்னிடம் அனுப்பு என்று எவனாவது சொன்னால், உடனடியாகத் தன் மகளை, அவனுடன் அனுப்பி விடுவாள். லயாவை இவ்வளவுநாள் பொத்தி வைத்திருப்பதன் காரணம், அவள்மேல் இவளுக்குள்ள பாசம் என்றா நீ நம்புகிறாய்.

தாயின் முகமூடியை உண்மை என்று நம்பும் அவளுக்கு, தாயின் உண்மையான குணம் தெரிய வேண்டாமா? அப்படித் தெரிந்தால்தான், அவள் தாயின் முந்தானையில் இருந்து வெளியே வந்து, தனியாகச் சிந்திப்பாள். அப்படிச் சிந்தித்தால்தான், அவளுக்கு, தன் தொழிலில் இருக்கும் சாதக பாதகங்கள் தெரியும்.

அப்படித் தெரிந்தால்தான், திடமாக முடிவெடுக்க முடியும்", உணர்ச்சி வேகத்தில் சொல்லிக்கொண்டே போனான்.

இவ்வளவு சொல்லும் அவனுக்குத் தெரியவில்லை, அவள்மேல், தனக்கு ஏன் இவ்வளவு அக்கறைஎன்று. அவளைப் பற்றி, தான் ஏன் இவ்வளவு கவலைப் படுகிறோம் என்று.

"தருண்..... நீ சொல்லுவது எல்லாம் சரி....., இப்போ, லயா இதையெல்லாம் தெரிஞ்சுக்கணும்னு, நீ ஏன்

இவ்வளவு விரும்புறன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?", இரு புருவங்களையும் தூக்கி, தலையை இடம் வலமாக ஆட்டி, வியப்பாகக் கேட்டாள்.

இவ்வளவு நேரமும் உணர்ச்சிப் பிழம்பாக, வேகமாகப் பேசிக் கொண்டிருந்தவன், கண்மணியின் கேள்வியில் தன்னை மீட்டான். 'அதானே....., நான் எதுக்கு இவ்வளவு அக்கறைப் படணும்', தனக்குத் தானே கேட்டுக் கொண்டவன்,

"ம்ச்.... கண்மணி.... கூட வேலைசெய்யும் ஒருத்தர், இப்படி ஏமாளியா இருந்தால், ஒரு மனிதாபிமான அடிப்படையில் நாம உதவி செய்வதில்லையா? இது அப்படித்தான்", தான் சொல்லுவது சப்பைக்கட்டு, என்று அவனுக்கே புரியும் பொழுது, கண்மணிக்குப் புரியாதா.

சரி அதை விடு, நான் கேட்பதற்கு பதில் சொல்லு, என்று சொல்லி, அவள் கேட்ட எந்த கேள்விக்குமே அவனிடம் பதில் இல்லை. அவள் கேட்க கேட்கவே, தன் மனதும் அவனுக்குப் புரிந்தது. கண்மணி கேட்ட அனைத்துக் கேள்விகளையும், தனக்குத் தானே கேட்கத் துவங்கினான் அவன்.

அவனை சிந்திக்க விட்டுவிட்டு வெளியேறினாள் கண்மணி.

கதவு - 8

திரையில் தெரியும் எனக்கும்

நிஜத்தில் இருக்கும் எனக்கும்

குறைந்த பட்சம் ஆறு

வித்தியாசங்கள் இருக்கும்.....

எது நிஜமென்று நீ சொல்.....

அன்றைய ஷூட்டிங், கலகலப்பாகப் போய்க்கொண்டிருந்தது. அந்தப் படத்தில் நடிக்கும், துணை நடிகர்களாகிய, அவளது அம்மா, அப்பா, தம்பி, அவனது அம்மா, அப்பா, தங்கை, அவனது தோழி, அவனது தோழன் நகைச்சுவை நடிகன், மூத்த தலைமுறைகளாகிய தாத்தா, பாட்டி, என ஒரு கூட்டமே அங்கே இருந்தது.

அவர்கள் அனைவரிடமும் சரிக்குச் சரியாக, விளையாடிக் கொண்டிருந்தான் தருண். அந்தக் காட்சி இயல்பாகப் படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வசனங்கள் கூட, ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்வது போலவே அமைந்திருந்ததால், அது படப்பிடிப்பு போலவே இல்லை.

அதுஒரு சுற்றுலா காட்சி. தருண், அவர்கள் அனைவருடனும் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தாலும், திருட்டுத் தனமாக லயாவைப் பார்ப்பதுபோலவும், யாரும் பார்க்காத வேளையில் கண்ணடிப்பது போலவும், காட்சி இருந்தது.

அதை, நகைச்சுவை நடிகனும், லயாவின் தோழியும் மட்டுமே பார்த்தார்கள். இருவரும் இணைந்து, நாயகன் நாயகியை, கிண்டல் செய்தார்கள். தருணின் பார்வையில் இருக்கவேண்டிய காதலும், குறும்பும் சரியாக இருந்தது.

லயாவின் பார்வையில் இருக்கவேண்டிய வெட்கமும், கன்னச் சிவப்பும், சரியான விதத்தில் போட்டி போட்டது.

இருவரின் முகங்களிலும் கேமரா ஜூம் போட்டு, அவர்களின் முக வடிவுகளை, பாவங்களை, அழகாகப் படம் பிடித்தது.

அந்த டேக் சரியாகி, கட் சொன்ன பிறகும் கூட, அனைவரும் கலையாமல் அமர்ந்து, பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். லயா மட்டும் எழுந்து சென்று, தாயின் அருகில் அமர்ந்துகொண்டாள். அதை அனைவரும் கவனித்தாலும் எதுவும் சொல்லவில்லை.

கதிர், முதலில் முடிப்பதாக திட்டமிட்டிருந்த, லயா, தருண் இருவரின் காட்சிகள்அனைத்தையும் ஒத்தி வைத்துவிட்டான். இருவருக்குள்ளும், இப்போதைக்கு ஒத்துப் போவதுபோல் அவனுக்குத் தெரியவில்லை.

எப்பொழுதும், படப்பிடிப்பு தளத்தில், தருண், நாயகிகளுடன் முதல் நாளிலேயே பழகி விடுவான். காதல் காட்சிகளில், அது நடிப்பு என்று தெரியாத விதத்தில், முழுமையாக நடித்துவிடுவான். காதல், முத்தக் காட்சிகளில், இரண்டாம் டேக் கூட போகவேண்டிய அவசியம் இருக்காது என்பது, மற்ற இயக்குனர்கள் சொல்லி, கதிர் கேள்விப் பட்டிருக்கிறான்.

அது மட்டுமல்ல, அவனே உதவி இயக்குனராக பணியாற்றிய இரண்டு படங்களில், அவனது உழைப்பையும், நடிப்பு திறமையையும் கவனித்தவன்தானே அவன். எனவேதான், தான் தயாரித்த காதல் கதையின் நாயகனாக, தருணே அவன் கண்முன் வந்தான்.

அவனுடன் நடித்த நாயகிகள், பசை போடாதக் குறையாக ஈஷிக் கொண்டதைக் கூடப் பார்த்தவன்தான். ஆனால், லாயாவிடம் மட்டும் அவன் நெருங்காமல் இருப்பதும், பழகாமல் இருப்பதும் அவன் பார்வையில் விழுந்தது. தெய்வா, லயாவுடன் இருந்தது ஒரு காரணமாக இருக்கலாம், என்று எண்ணினான்.

காட்சிகள் அனைத்திலும், அவன் ஈடுபாடாக நடித்தாலும், லயா அவன்மேல், வெறுப்பாகவே நடந்துகொள்வது

அவனுக்குப் புரிந்ததாலேயே, கொஞ்சம் அவர்களுக்கு இடைவெளி கொடுக்கலாம் என்று எண்ணினான்.

அதற்கான மாற்று ஏற்பாடுதான், இந்தத் துணை நடிகர்கள் பட்டாளத்தின் கூட்டுக் காட்சி. ஊட்டி பொட்டானிக்கல் கார்டன் அமைப்பைப் போன்ற செட் போடப்பட்டு, படமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

கதிருக்கு, இடையில் கொஞ்சம் யோசனை வரவே, ஒன்றிரண்டு காதல் காட்சிகளை, அதாவது வசனங்கள் அல்லாத, அவர்கள் இருவரும் கை கோர்த்து நடப்பது, எதையோ பேசுவது, அமர்வது, இப்படியான காட்சிகளை எடுக்கலாம் என்று எண்ணினான்.

ஒளிப்பதிவாளரை அழைத்து, ஒளியின் அளவு, கேமரா கோணம் முதலானவைப் பற்றிப் பேசிவிட்டு, தருணிடம் அதைப் பற்றி பேசினான். தருண் உடனடியாக ஒத்துக் கொண்டான்.

செட்டில் இருந்த, உடை மாற்றும் அறைக்குச் சென்று, உடை மாற்றிவிட்டு நொடியில் வந்தான். லயாவிடமும் சொல்லவே, அவளும் உடனடியாக ஒத்துக் கொண்டாள்.

"தருண் சார்....., இந்த சீனில் உங்களுக்கு வசனமெல்லாம் எதுவும் கிடையாது. ஜஸ்ட், அந்தக் கோடியில் இருந்து, கை கோர்த்துப் பேசிட்டே, இந்தக் கோடிவரை வாறீங்க அவ்வளவுதான். மேம்... நீங்களும் சும்மா கேசுவலா பேசிட்டே வாறீங்க.

இது க்ளோஸ்அப் சீன் கிடையாது, அதனால், கொஞ்சம் இயல்பாகவே நடிங்க", சொல்லிவிட்டு, கிளாப் அடித்து, காட்சி துவங்கி, கேமராவும் ஓடத் துவங்கியது.

கதிரவன், ஆக்சன்....., என்று குரல் கொடுக்கவே, லயாவின் கைகளைக் கோர்த்தவாறு, நடக்கத் துவங்கினான். இருவருக்குமே என்ன பேசுவதென்று தெரியவில்லை. மௌனமாகவே நடந்தார்கள்.

"சார்....., ஏதாவது பேசுங்க.....", கதிர் மைக்கில் கத்துவது கேட்டது.

"இவன் வேற....., டயலாக் சொல்லாமல், ஏதாவது பேசுன்னா என்னத்தப் பேசுறது?", சத்தமாக அலுத்துக் கொண்டான்.

"ஏன்.... வழக்கமா என்னை வெறுப்பேத்துவீங்களே, அப்படி ஏதாவது சொல்லுறது?", தன்னை மீறி சொன்ன பிறகுதான், சொன்ன வார்த்தையின் பொருள் அவளுக்குப் புரிந்தது.

சொல்லிவிட்டு, நாக்கைக் கடிக்கப் போனவளை, "லயா.... அவசரப்பட்டு நாக்கைக் கடிச்சுடாதே. பிறகு, கதிர் கொலைவெறி ஆயிடுவான்", அவன் சொல்லவே, அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை.

"ஆமா.... நீங்க சொல்லுவதும் சரிதான். ஏற்கனவே, நீங்க செய்த வேலையால், பத்துநாள் நஷ்டம் அவருக்கு. அந்தக் கோபத்தையும் என்மேல காட்டிட்டு இருக்கார்", தருணைக் குற்றம் சொன்னாள்.

"அப்படின்னா, இப்போ வெறுப்பேத்துனாலும், உடனே மூஞ்சியை உர்ருன்னு மாத்திடுவியா?", சிரித்த முகம் மாறாமலேயே, அவளிடம் பேசியவாறு நடந்தான்.

"அப்போ, உண்மையாவே வெறுப்புதான் ஏத்துனீங்களா? நிஜம் இல்லையா?", கண்கள் விரியக் கேட்டாள்.

"சரி.... இப்போ உண்மையைச் சொல்லுறேன், ஆனால், முகத்தை இப்படியே சிரிச்ச மாதிரி வச்சுக்கணும், உனக்கு ஓகே யா? பாவம் கதிர், இன்னைக்குதான் அவன் முகத்தில் கொஞ்சம் நம்பிக்கையையும், தெளிவையும் பார்க்கிறேன். அது இல்லாமல் போக நான் விரும்பவில்லை", அவளிடம் சொன்னான்.

"அப்படி என்ன உண்மையைச் சொல்லப் போறீங்க?", அவள் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை என்றாலும், குரலில் எரிச்சல்.

"லயா வேண்டாம்....., ஏற்கனவே உன் குரல் மாறிடுச்சு.....", அவளைக் கேலி செய்தான்.

"நீங்க பேச்சை மாத்தாதீங்க, முதல்ல என்னன்னு சொல்லுங்க", அவள் விடுவதாக இல்லை.

"சரி... நீ இவ்வளவு கேட்பதால் சொல்லுறேன். நீ என்னோட ரூமுக்கு வர, இன்னும் அதிகநாள் இல்லை", இதைச் சொல்லும்போது அவன் குரலில் அவ்வளவு உறுதி.

"அது மட்டும் நடக்க வாய்ப்பே இல்லை. என் அம்மா இருக்கும்வரை, இப்படி ஒரு ஈனமான செயலை, என்னை செய்ய அனுமதிக்கவே மாட்டார்கள். அப்படி ஒரு சூழ்நிலை வந்தால்....., இந்தப் படத்தில் இருந்து, என்னை விலகிவிடச் செய்வார்களே தவிர, இதற்கு ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள்", இந்தச் சூழலில் கூட, தான் செய்ய முடியாது என்று மறுக்காமல், தாயை இழுக்கும் அவள் சிறுபிள்ளைத் தனத்தை எண்ணி, கவலை கொண்டான்.

ஆனாலும், எடுத்த செயலை முடிக்காமல் விட முடியாதே, "ஹா...ஹா...ஹா..., உன் அம்மாவே, உன்னைஎன் அறைக்கு அனுப்பினால்....?", குரல் இறுகக் கேட்டான்.

"அனுப்ப மாட்டாங்க.....", அவள் குரல் இப்பொழுது உயர்ந்திருந்தது.

"உன் நம்பிக்கைக்கு, ஆயுள் எவ்வளவு நாள் என்று பார்க்கலாம்.....", ஏளனம் செய்தான் அவன்.

லயாவால், எவ்வளவு முயன்றும், தன் முகம் கடுப்பதை மறைக்க முடியவில்லை. அவள் முகம் கடுப்பதைப் பார்த்தவன், சட்டென அவளை, கேமரா கோணத்தில் இருந்து திருப்பி, தன் முன்பு நிறுத்தினான்.

கதிர் கட் சொல்லாததால், கேமரா தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. "லயா....., கூல், எதுக்கு இப்போ இவ்வளவு கோபம். என்ன.... இங்கே நடக்காததையா, நான் உன்னை செய்யச் சொன்னேன்? நீயே உன் அம்மாவிடம்

சொல்லிப்பார் பிறகு தெரியும்", சொன்னவாறே, அவள் கன்னத்தில் தட்டிவிட்டு, விலகிச் சென்றான்.

அவன் விலகிச் சென்ற பிறகே, கதிர் கட் சொன்னான். காட்சி சிறப்பாக வந்திருந்தது.

லயா கோபத்துடன், தன் தாயை தேடிச் சென்றாள். "அம்மா... நான் இவ்வளவு சொன்ன பிறகும், இந்தப் படத்தில் நான் நடித்தே ஆகணும்னு சொன்னீங்க. இப்போ, நாளுக்கு நாள் அவனோட கொட்டம் அதிகமாகிட்டே போகுது. ச்சே....., இந்தப் படம் முடிய முன்னாடி, நான் ஒரு வழி ஆயிடுவேன் போல இருக்கு", வந்தவுடன் பொரிந்தாள்.

"இப்போ என்னம்மா ஆச்சு? எதுக்கு இவ்வளவு கோபம்? முதல்ல, ஷூட்டிங் நடக்கும் இடத்தில், இப்படிக் கோபமா பேசுவதை நிறுத்து. யாராவது பத்திரிகைக் காரங்க பார்த்தால், கண்ணு காது மூக்கு வச்சு எழுதிடுவாங்க", மகளது சூடு குறைய, அவள் கவனத்தைத் திருப்பினாள்.

"ம்ச்....., என்னம்மா மனுஷனை மனுஷனா இருக்க விடாமல்....., என்னோட உணர்வுகளைக் கூட வெளிப்படையா காட்ட முடியாமல், இதெல்லாம் என்ன வாழ்க்கைம்மா. அவன்....., அதான் அந்த தருண் என்ன சொன்னான் தெரியுமா? அதைமட்டும் நான் சொன்னேன்...., நீங்களே, இந்த நடிப்பும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்னு சொல்லுவீங்க", தாயின்மேல் நம்பிக்கையாகச் சொன்னாள்.

"என்ன.....? தருண் என்ன சொன்னான்னு முதல்ல சொல்லு...?", தெரிந்துகொள்ளும் படபடப்பு அவள் குரலில். சிலநேரம் தான் செய்யும் தகிடு தத்த வேலையை, மகளிடம் சொல்லிவிட்டானோ என்று பயந்தார்.

"அம்மா.... அவன் என்னை முதல் நாள் ஷூட்டிங்லையே, என்கிட்டே வம்பு பண்ணினான். அதனால்தான், என்னால் ஒழுங்கா நடிக்க முடியாமல் போச்சு. நடுவில், கொஞ்சம் தொல்லை இல்லாமல் இருக்கு என்று பார்த்தால்....., இப்போ மறுபடியும் துவங்கிட்டான்", பொரிந்தாள் அவள்.

லயாவின் வார்த்தைகள், தெய்வாவின் வயிற்றில் பாலை வார்த்தது. "என்னமோ சொன்னான் சொன்னான்னு மட்டுமே சொல்லுறியே, முதல்ல என்னன்னு சொல்லு", கடுப்படித்தாள் தெய்வா.

"என்னம்மா சொல்லட்டும்? எனக்கு அவனோட நடிக்கவே பிடிக்கலம்மா. பேசாமல், அட்வான்சைத் திரும்பக் கொடுத்துடலாமா?", முகத்தை, குழந்தைத் தனமாக வைத்துக்கொண்டு கெஞ்சினாள்.

லயாவின் இந்த சிறுபிள்ளைத்தனம், தெய்வாவுக்கு எரிச்சலை மூட்டியது. "லயா.... இதென்ன சின்னப்புள்ளை மாதிரி. இவ்வளவு நாள் நடிக்கிற, இன்னுமா உனக்குத் தெரியலை. தொட்டதுக்கெல்லாம் இப்படிச் சிணுங்குறதை நிப்பாட்டு", மகளை, குரல் உயர்த்தாமலே அதட்டினாள்.

"நான் தொட்டக்கெல்லாம் சிணுங்குறேனா? அவன் என்ன சொன்னான்னு தெரியாமல் பேசாதீங்க", தாய் தன் மனநிலையைப் புரியாமல் பேசுவதால், லயாவிற்கும் கோபம் வந்தது.

"அப்படிப் பெருசா என்னதாண்டி சொல்லிட்டான். சொல்லேன் கேட்போம்", தெய்வா எகிறினாள்.

"ம்ம்ம்....., என்னை அவனோட ரூமுக்கு வரச் சொல்லுறான்..... போகவா...? சொல்லுங்க..... போகட்டுமா....?", ஆத்திரமாகக் கேட்டாள் லயா.

"ஏன் போனால் என்ன தப்பு.....? போக வேண்டியதுதானே", அதைவிட ஆத்திரமாகக் கத்தினாள் தெய்வா.

தாயின் பதிலில் அதிர்ந்து, மூச்சுவிடவும் மறந்து அமர்ந்திருந்தாள் லயா.

இரவு, நிசப்தமான சாலை. நேரம் பன்னிரண்டை நெருங்கும் வேளையில், கனரக வாகனங்கள் மட்டும் சாலையில் பயணிக்க, மக்களின் நடமாட்டம் சுத்தமாகக்

குறைந்திருந்தது. தன் பல்செர் பைக்கில் விரைந்து கொண்டிருந்தாள் விவி.

இந்த நேரத்தில் கூட, ஒரு சினிமா இயக்குனரைப் பற்றிய சிறிய செய்தியுடன்தான் விரைந்து கொண்டிருந்தாள். மனமெல்லாம், என்ன மனிதர்கள் இவர்கள்....., என்றே சிந்தித்துக் கொண்டிருந்தது. அவளது கவனம் சிந்தையிலே உழன்றதால், எதிரில் இருந்து வேகமாக வந்த வாகனத்தை அவள் கவனிக்கவில்லை.

அந்த வாகனம் நெருங்கும் வேளையில் கவனித்தாலும், சட்டென அதன் பாதையிலிருந்து விலகும் அவகாசம் அவளுக்குக் கிடைக்கவில்லை, அல்லது வழங்கப்படவில்லை என்பதுதான் சரியாக இருக்கும்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த லாரி, அவளை இடித்துத் தள்ளிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், வாகனம் அவளை நெருங்கும் வேளையில், அதன் உச்ச வேகத்தைத் தணித்து, அவளை இடிக்காமல், உரசிவிட்டே சென்றது.

விபத்து நடந்த அந்த நேரத்தில், அவ்வளவாக யாரும் இல்லையாகையால், விபத்து நடந்தது யாருக்குமே தெரியவில்லை. அவள் அடிபட்டு விழுந்த அந்த நேரத்தில் கூட, தன்னை விழிப்பாக வைத்திருக்க முயன்றாள்.

இடித்த வேகத்தில், வண்டி பேலன்ஸ் இழந்தாலும், மோதிய வாகனம், கொஞ்சம் வேகம் குறைந்து மோதியதாலும், வண்டி உராய்ந்த வாறே சென்று, சாலையின் தடுப்பில் மோதியது.

உராய்ந்த நேரத்தில், அவளது கால் மூட்டும், கை மூட்டு, கை முழங்கை, விரல்கள் என அனைத்தும் தரையில் உராய்ந்து ரத்தம் வழிந்தது. வண்டியைக் கட்டுப்படுத்த முடியாமல், சாலைத் தடுப்பில் மோதிய வேகத்தில், அவளது தலையும் சாலையில் மோதி, நெற்றியில் கல் குத்தி, குருதி வழிந்தது.

தன்னை நிலைப்படுத்தியவாறு, எழ முயன்றாள். ஆனால் அவளது வண்டிக்கு அடியில் சிக்கியிருந்த தன் காலை

உருவ முடியவில்லை. அலைபேசியில் யாருக்காவது தொடர்பு கொள்ளலாம் என்றால்....., விழுந்த வேகத்தில், அவளது பேண்ட் பாக்கெட்டில் இருந்து அலைபேசி உருவி நடு ரோட்டில் விழுந்திருந்தது.

அதை எடுக்கவேண்டுமென்றால் கூட எழ வேண்டும். கால் கை உராய்ந்ததால் ஏற்பட்ட வலியும், எரிச்சலும் உயிர் போனது. யாராவது உதவிக்கு வந்தால்தான் முடியும் என்பது புரிய, ரோட்டில் தலை வைத்து படுத்துக் கொண்டாள்.

தெய்வத்தை அழைக்கக் கூட முயலவில்லை அவள். ஆனால், அந்த நேரம் எங்கிருந்தோ சைரன் ஒலி கேட்டது. அது, இவள் விழுந்திருந்த பக்கம்தான் வந்து கொண்டிருந்ததை, அதன் ஒலி, தன்னை நெருங்குவதை வைத்து உணர்ந்துகொண்டாள்.

அதை கை காட்டி அழைக்கலாம் என்றால்....., புலன்கள் அனைத்தும் செயலற்று, வலி மட்டுமே இருந்தது. ஆனால் அந்த ஆம்புலன்ஸ் அவளை நெருங்கிவந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய, சீருடை அணிந்த பணியாளர்கள், அவளை ஸ்ட்ரெச்சரில் தூக்கி படுக்க வைத்தார்கள்.

அந்த நேரத்தில் கூட, ஆம்புலன்ஸ் எந்த மருத்துவமனையைச் சார்ந்தது என்று அறிய முற்பட்டாள். ஆனால் தலையில் பட்ட அடியும், உடல் முழுவதும் இருந்த சிராய்ப்பின் வலியும், அவளது பார்வையை மங்கச் செய்திருந்தது.

வாயைத் திறந்து கேட்கலாம் என்றால், அவளால் முடியவில்லை. தன்னைக் காக்க வந்ததே போதும் என்பதுபோல், அதுவரை இருந்த சுய நினைவு மங்க, மயக்கத்துக்குப் போனாள் விவி.

கதவு - 9

என் தாயின் உதிரத்தில்

உதித்தால் மட்டும்தான்

நீ என் தங்கையா?

அண்ணா என்று

நீ அழைக்கும் ஒற்றைச்

சொல்லிலும் உறைந்திருக்கும்

அதன் பொருள்.....

உச்சக் கோபத்தில் இருந்தான் தருண். விவியை, அவன் கடத்தச் சொல்லியிருந்தான் தான். ஆனால், அவளுக்கு விபத்து ஏற்படுத்தச் சொல்லவில்லை. அதிலும், அவளுக்கு ஏற்பட்டிருந்த சிராய்ப்பும், தலைக் காயமும், வரும் பொழுதே, அவர்கள் முதலுதவி செய்து, மயங்கியவாறே அழைத்து வந்திருந்தாலும்,

தலைக் கட்டை மீறிக் கசிந்த, அவளது குருதியைப் பார்த்தவனுக்கு, கோபம் கட்டுக்கடங்காமல் பெருகியது. இருந்த ஆத்திரத்தில், அவளைக் கூட்டிக் கொண்டு வந்த இருவரைப் பிடித்து, அடித்தே விட்டான்.

"டேய்..... நான் உங்களை என்ன செய்யச் சொன்னேன், நீங்க என்ன செய்து வச்சு இருக்கீங்க? அவளோட உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்திருந்தால், உங்களால் அவளது உயிரைத் திரும்பத் தர முடியுமாடா?", கேட்டவாறே இன்னும் இரண்டு அறை விட்டான்.

பொறி கலங்கி நின்றிருந்தார்கள் அவர்கள். கீழே இருந்து அவனது கோபத்தை கவனித்துக் கொண்டிருந்த கண்மணி கூட அங்கே செல்ல பயந்தாள். அவளுக்குத் தெரியும், இப்பொழுது சென்றால், அவன் கோபம் அந்த ஆட்களின்மேல் இன்னும் அதிகரிக்கும் என்று.

கையைப் பிசைந்தவாறே, வாசுவை முறைத்துக் கொண்டிருந்தாள். "கண்மணி..... நான் என்ன செய்தேன்? ஏன் என்னை இப்படி முறைச்சுப் பாக்குற?", தயங்கியவாறே கேட்டான்.

"ஆமா.... நீங்க பச்சப் புள்ளை, நான் எதுக்கு உங்களை முறைக்கிறேன்னு உங்களுக்குத் தெரியாது பாருங்க", பல்லைக் கடித்தவாறே அவனிடம் கேட்டாள்.

"கண்மணி, நீ சொன்ன மாதிரி நான் அவனோடவேதான் இருந்தேன். அவன், நான் சந்தேகப்படும்படி எதையுமே செய்யலை. நானும், அவன் அந்த விவி விஷயத்தை விட்டுட்டான், மறந்துட்டான்னு நினைச்சேன். இப்படி, ஆள்வச்சுக் கடத்துவான்னு நினைக்கவே இல்லை", அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

"எப்படி.....? இன்னொரு முறை சொல்லுங்க.....? அவனைப் பற்றி தெரிந்தும், அவன் அந்த விவி விஷயத்தை மறந்துட்டான்னு நினைச்சீங்களா? இப்படியெல்லாம் எதுவும் விவகாரமா நடந்துடக் கூடாதுன்னுதான், அன்னைக்கே சொல்லவேண்டாம்னு சொன்னேன். எங்க.....? எல்லாத்துக்கும் மண்ணு மாதிரி ஒரு ரியாக்ஷன் கொடுத்தால், என்னதான் செய்ய முடியும்?", தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"இந்தத் தருணுக்கு, எதுக்கு இந்த வேண்டாத வேலை. ஒரு பொதுவான மீடியாவில் இருந்தால், இந்த மாதிரி பத்திரிக்கைகளிலும், மீடியாவிலும், தேவையில்லாத வதந்திகள் உலாவத்தான் செய்யும்.

அது அவங்களோட தொழில் முறை. அதுக்காக எல்லோரையும் கடத்தணும்னா முடியுமா? இதில், அவங்க அம்மா வேற.....? ச்சே..., வர வர, இங்கே இருக்கவே பிடிக்கலை. எல்லாம் அத்தையோட முகத்துக்காகத்தான் இங்கே இருக்கேன். இல்லன்னா.....", எரிச்சலாகச்சொன்னான் வாசு.

"இல்லன்னா.....? சொல்லுங்க.... அவங்க கட்டாயப்படுத்தலன்னா, இங்கே இருக்க மாட்டீங்களோ? செய்யிற வேலையில் ஒரு ஈடுபாடு கிடையாது, பிரச்சனையைப் பார்த்து ஓடி ஒளியிறது. இதில் மேனேஜர் வேற, இடையில் இந்த மொகரைக்கு, காதல் வேற ஒரு கேடு", அவனைவிட எரிச்சலாகச் சொன்னாள்.

"கண்மணி....., வேண்டாம்....., எதை வேண்டுமென்றாலும் குறை சொல்லு, என் காதலை மட்டும் குறை சொல்லாதே. அதில் நான் உறுதியாதான் இருக்கேன். நீதான் ஜகா வாங்குற", நெஞ்சை நிமிர்த்தி சொன்னான்.

"நான் இவ்வளவு நேரம் சொன்னதில், அந்தக் காதல் மட்டும்தான் உங்களுக்கு ரோசத்தைக் கிளப்புது இல்ல.....", கேட்டுவிட்டு, முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"அதெல்லாம்.....", வேகமாகச் சொல்லப் போனவன், "மோகன்....., இந்த நிமிஷம் நீ என் வீட்டில் இருக்கலை.....", என்ற கர்ஜனையும், யாருடைய அலைபேசியோ விழுந்து நொறுங்கும் ஓசையும் கேட்கவே, இவர்களது பேச்சு தடை பட்டது.

"கண்மணி....., தருண் இவ்வளவு கோபப்படக் காரணம் என்ன? அதான், அவனுங்க விவியைக் கொண்டு வந்துட்டானுங்களே...?", சந்தேகமாக, அவளைப் பார்த்துக் கேட்கவே, அதற்கும் முறைத்தாள் கண்மணி.

"ம்ம்ம்.... அவ்வளவு ஆர்வம் தாங்கலன்னா, என்னன்னு நீங்களே நேர்ல போய் பார்க்க வேண்டியது தானே", நக்கலாகச் சொன்னாள்.

"அவன் கையில் என்னை சிக்க வைக்கணும்னு பிளான் பண்ணுற இல்ல...? சிக்க மாட்டேனே", சொல்லிவிட்டு, ஹாலில் இருந்த ஸோபாவில் அமர்ந்துகொண்டான். கண்மணி அவன் எதிரில் சென்று அமர்ந்துகொண்டாள்.

'இன்னைக்கு சிவ ராத்திரிதான், இப்போவே மணி ஒன்று. இதில் அந்த மோகன் எப்போ வந்து.....?', அவன்

யோசனையைக் கலைக்கவென்றே, வேகமாக வந்து நின்றது அந்த சுமோ.

மோகன் வேகமாக இறங்கி, ஹாலுக்கு விரைந்தான். "கண்மணி, தருண் சார் ரொம்பக் கோபமா இருக்காரா?", படபடப்பாகக் கேட்டான்.

"கோபமாவா.....? கொலை வெறியில் இருக்கான்", வாசு பதில் சொல்லவும், "மோகன்.....", என்ற அழைப்புக் கேட்கவும் சரியாக இருந்தது.

மோகனுக்குக் கொஞ்சம் உதறல் எடுத்தது. "கண்மணி.... கொஞ்சம் என்னோட வாங்களேன். இப்போ, நான் தனியா போனால் ஒரு வழி ஆயிடுவேன்", என்று அவளையும் அழைத்தான்.

"மோகன்..... இப்போ நான் அங்கே வந்தால், அதற்கும் சேர்த்து உங்களுக்குத் திட்டு விழும். முதல்ல நீங்க போங்க. தருண் அழைத்தால், நான் மேல வாறேன்", இவளது முழு பதிலைப் பெறக் கூட அவன் அங்கே இல்லை. மாடிக்கு விரைந்தான்.

மோகன் செல்லவே, வாசு கடுப்பாக வாய்க்குள் முனகினான், "முதல்ல இவ பேரை மாத்தணும், வாறவன் போறவன் எல்லாம் 'கண்மணி கண்மணி' ன்னு..... கூப்பிடுறானுங்களா? கொஞ்சுறானுங்களான்னே தெரிய மாட்டிக்கு", கோபமாகச்சொல்லிவிட்டு அங்கிருந்த ஸோபாவில் சென்று அமர்ந்துகொண்டான்.

அவன் கோபத்தில், கண்மணிக்கு லேசாகச் சிரிப்பு எட்டிப்பார்த்தது. அவனுக்கு, கண்மணியை அவள் பெயரை சொல்லி, யார் அழைத்தாலும் பொறுக்காது. அவன் கோபத்தைத் தணிக்க, அவன் அருகில் கொஞ்சம் நெருங்கியவாறு அமர்ந்தாள்.

அவளது இந்தச் செய்கையே, அவனுக்குப் போதுமானதாக இருக்க, அவள் தோள் உரசும் அளவு நெருக்கத்தில் அமர்ந்துகொண்டான். அதை அவள் உணர்ந்தாலும்

விலகவில்லை. இருவரும் அந்த நெருக்கத்தை அப்பொழுது விரும்பினார்கள்.

மேலே ஹாலில் கோபமாக அவன் அமர்ந்திருக்க, இவனது ஆட்கள் மூன்றுபேர் பரிதாபமாக நின்று கொண்டிருந்தனர். அனைவரின் கன்னகளிலும் விரல் தடம்.

மோகனுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது. அடிவாங்கிக் கொண்டு நிற்கும் இவர்கள் ஒன்றும், கையாலாகாத ஆட்கள் கிடையாது. ஜிம்மிற்குச் சென்று, உடலை வளர்த்து வைத்திருப்பவர்கள்தான். அவர்கள் நினைத்திருந்தால், ஒரே அடியில் தருணை வீழ்த்தியிருக்க முடியும்.

ஆனால், அவன்மேல் இருக்கும் அபரிமிதமான, அபிமானத்தாலும், செய்த வேலையில் நேர்ந்த சிறு தவறுக்காகவுமே அவர்கள் அடி வாங்கிக் கொண்டு நிற்பது புரிந்தது.

ஒரு நிமிடத்தில், அவன் இவ்வளவு யோசித்துக் கொண்டிருக்க, "என்ன மோகன், உங்க ஆட்களை அடிச்சுட்டேன்னு பாக்குறீங்க போல?", அவன் மனதைப் படித்தவன்போல் கேட்டான் தருண்.

"தருண் சார், நீங்க சொன்ன வேலையை நாங்கள் செய்தோம். உங்களுக்கு வேலை ஆகணும். அதைத்தான் நாங்க செஞ்சு முடிச்சுட்டோமே, பிறகு ஏன் இவ்வளவு கோபம்", தன் படபடப்பை மறைத்தவாறே, மிடுக்காகவே கேட்டான்.

"நானும் நீங்க முடிக்கவில்லை என்று சொல்லவில்லையே. அதை.... எப்படி முடித்தீர்கள்..... என்பதுதான் என் கேள்வி", நிதானமாகச் சொன்னாலும், குரலில் அக்கினியின் தகிப்பு.

"சில நேரங்களில், நம்மளோட பாதுகாப்பை நாம பார்ப்பதில்லையா? அதே போல்தான் இதுவும்", மோகனும் நிதானமாகவே சொன்னான்.

"கேவலம், ஒரு பொண்ணைத் தூக்குறதுக்கு, அவளுக்கு இவ்வளவு அடிபட வைத்து, இதைச் செய்வதுதான் உங்க

பாதுகாப்பா", ஏளனமாகக் கேட்டான்.

"தருண் சார், நாங்க எந்த விஷயத்திலும், எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்வதில்லை. அவங்களைப் பற்றிய விஷயம் திரட்டியதில், அவங்களுக்கு எல்லா தற்காப்புக் கலைகளும், களரி கூடத் தெரியும். நேரடியாக அவளை நெருங்க முடியாது.

அப்படியே நெருங்கினாலும், பெரிய சண்டை போட்டு, அந்தச் சண்டையின் முடிவில், என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை, நான் சொல்லி நீங்க தெரிஞ்சுக்க வேண்டாம். இப்போ, எங்க வேலை முடிந்தது, நாங்க கிளம்புறோம்.

இனி உங்கள் பாடு, அவர்கள் பாடு. அவ கண் முழித்த பிறகு, வரப் போகும் பின் விளைவுகளை எப்படி சமாளிப்பது என்று முதல்ல பாருங்க. தயவு செய்து எங்களை இதில் இழுத்து விட்டுடாதீங்க", தங்கள் நிலையை விளக்கினான்.

"நீங்க என்னதான் நியாயம் சொன்னாலும்....., அவ ஒரு பெண். அவளுக்கு ஏதாவது ஆகி இருந்தால், கை போய், கால் போய், ஏன் உயிரே போயிருந்தால்.....?", அவன் சமாதானம் ஆகவில்லை என்பதை தெரிவித்தான்.

"சார்.... நீங்க கேட்பது நியாயம் தான். ஆனால், இது திட்டமிட்டு, சரியாக, கச்சிதமாக செயல்படுத்தப்பட்ட விஷயம். அந்த டிரைவர்ட்ட, சரியாகச் சொல்லி, அவங்களுக்கு, லேசான காயம் மட்டும்தான் இருக்கவேண்டும் என்று வலியுறுத்திதான் செய்தோம். அதனால் உங்களோட இந்த பயம் தேவையற்றது", அவன் சொன்னான்.

"அவங்களோட தலைக் காயம் கூட, அவங்க தலை, சின்னக் கல்லில் எதிர்பாராத விதமா மோதியதால் தான். அவங்களோட மயக்கத்துக்கு காரணம், நாங்க போட்ட மயக்க ஊசிதான்", அங்கிருந்த ஒருவன் வேகமாகச் சொன்னான்.

"நீங்க என்னவோ சொல்லுறீங்க, சரி இப்போ எல்லோரும் போங்க. ஒரு நிமிஷம்....., வாசு.....", அவன் குரல் கேட்கவே, வாசு அடித்துப் பிடித்து ஓடி வந்தான்.

"வாசு.... இவங்களுக்கு ஒரு ரெண்டு லட்சம் கொடு. இந்த போனுக்குண்டான காசையும் கொடுத்து அனுப்பு", சொல்லிவிட்டு, இனிமேல் பேச எதுவும் இல்லை என்பதுபோல், ஸோபாவில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

"ஒரு நிமிஷம், அவளுக்கு எப்போ மயக்கம் தெளியும். ஏதாவது மருந்து கொடுக்கணுமா", விழி திறக்காமல் கேட்டான்.

"சார் அவங்களோட மயக்கம் ஒரு மூணு மணி நேரம்தான் இருக்கும். ஆனால், ஏற்கனவே அவங்க ரொம்ப நேரம் தூங்கலை, ராத்திரி நேரம்....., சோ.....", இழுத்தான் அவன்.

"நான் உங்ககிட்டே விளக்கம் எதுவும் கேக்கலை", பேச்சைத் துண்டித்தான்.

"காலையில் ஒரு பத்து மணிக்கு எழுந்துடுவாங்க. மருந்து எல்லாம், அவங்க பக்கத்திலேயே எழுதி வைத்து இருக்கோம். சிராய்ப்புக்கு ஏற்கனவே முதலுதவி செய்து விட்டாலும், சிலநேரம் செப்டிக் ஆகலாம். அப்படி ஆனால், அதற்கும் மருந்து அதிலேயே இருக்கு", பதில் சொல்லிவிட்டு அவன் பதிலுக்காக காத்திருந்தார்கள்.

அவன் எதுவும் பேசப் போவதில்லை என்பது தெரியவே, கிளம்பினார்கள். அவர்கள் அனைவரும் அங்கிருந்து செல்வது, அவன் கண்களில் விழுந்த நிழல் அசைவத்திலிருந்து அவனுக்குப் புரிந்தது. அறைக்குள், துவண்டு படுத்திருக்கும் விவிக்கு, எந்த ஆபத்தும் இல்லை என்று அறிந்த பிறகும், மனம் சமாதானம் ஆக மறுத்தது.

வந்தவர்கள் அனைவரும் கிளம்பிச் செல்வது, காரின் ஓசையில் கேட்டாலும், அவன் அமர்ந்திருந்த இடத்தை

விட்டு அசையவில்லை. எதையும் சிந்திக்காமல் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அருகில் யாரோ அமர்வதுபோல் இருந்தாலும், கண்களைத் திறந்து பார்க்கவில்லை. ஆனால், பார்க்காமலே அவனால் புரிந்துகொள்ள முடிந்தது, அமர்வது கண்மணிதான் என்று.

"தருண்..... போய் ரூமில் படுத்துக்கோ. மணி ரெண்டரை ஆச்சு", அவள் பேச்சில், கண் விழித்துப் பார்த்தான்.

அவள் குரல் கனிந்து இருந்தாலும், பார்வை அவனைக் குற்றம் சாட்டியது. அதற்கு பதில் சொல்ல விருப்பமில்லாமல், எழுந்து கொண்டான்.

"கண்மணி.... கொஞ்சம் அந்த விவியைப் பாத்துக்கோயேன். எதற்கும், நீ அவ இருக்கும் அறையிலேயே தங்கிக்கோ. அவ எழுந்தவுடன் நான் வந்து பார்க்கிறேன்", தயக்கமாகச் சொன்னான்.

"நான் ஏன் அவளைப் பாக்கணும். நீதானே அவளைக் கொண்டு வந்தாய். அதனால் நீயே பார்", வெடுக்கென சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

"கண்மணி.....", அவன் அழைப்பது காதில் விழுந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டாள்.

தன்னை நொந்தவாறே, விவி இருந்த அறைக்குச் சென்றான். படுக்கையில், அவள் தளர்ந்து படுத்திருப்பது தெரிந்தது. இதுவரை அவளைப் பார்க்கும் பொழுது எல்லாம், அவள் முகத்தில் விரவியிருக்கும் ஏளனமும், கடுமையும், இப்போது காணாமல் போக, பிள்ளையென உறங்கிக் கொண்டிருந்தாள்.

"இப்போ என்னமோ பச்சை புள்ளை மாதிரி தூங்குறா. எழும்பினால் பத்திரகாளியா மாறுவா", தனக்குத் தானே சொன்னவாறு, அங்கே இருந்த மற்றொரு கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டான்.

அன்று லயாவிற்கும், அவளுடன் நடிக்கும் துணை நடிகர்களுக்கும் மட்டுமே ஷூட்டிங் இருந்ததால், தருண்

செல்லவேண்டியது இல்லை. எனவே, தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

காலையில் கண்விழித்த விவி, தன் தலை கொஞ்சம் பாரமாக இருப்பதை உணர்ந்தாள். கையைத், தூக்கி தலையைத் தொட முயன்றால்....., கையும் விண் விண்ணென தெறித்தது. அதைவிட, தோல் சுருங்குவதால், ஏற்பட்ட அசைவு, அதைவிட, கஷ்டமாக இருந்தது.

தன்னை மீறி, "ஸ்....., அம்மா.....", என வாய் விட்டே அலறியவாறு, கண்களை மெதுவாகப் பிரித்தாள்.

நேற்று இரவு நடந்தவை அனைத்தும் மெல்ல நினைவுக்கு வந்தது. 'அப்படியென்றால் நான் இப்பொழுது மருத்துவமனையில் இருக்கிறேனா?', சிந்தனையைக் கலைத்தது, அவள் படுத்திருந்த படுக்கையின் மென்மை.

'மருத்துவமனையின் படுக்கை இவ்வளவு மென்மையாக இருக்காதே', புலன்கள் விழிக்க, கண்களைத் திறக்காமல், காதை தீட்டி ஏதாவது ஓசை கேட்கிறதா என்று பார்த்தாள்.

எந்த ஓசையும் கேட்காமல் போகவே, விழிகளை மெதுவாகத் திறந்து, பார்வையைச் சுழலவிட்டாள். அவள் பார்வை வட்டத்தில், சகல வசதிகளுடன் கூடிய ஒரு அறையில், தான் இருப்பது புரிந்தது. இன்னும் பார்வையைச் சுழலவிட, அவளையே பார்த்தவாறு, மற்றொரு படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த தருண், விழுந்தான்.

சட்டென, ஒரு பரபரப்பு தன்னைத் தொற்றிக் கொள்ள, வேகமாகத் தன்னை ஆராய்ந்தாள். தான் நேற்றுப் போட்டிருந்த அதே ஆடையில் இருப்பதை உணர்ந்தவள் ஒரு நிம்மதி மூச்சை விட்டாள். அதே நேரம் அவள் கண்கள், கோபமாக அவனைத் துளைத்தது.

அவள் பார்வையின் ஆராய்ச்சியை உணர்ந்து, "சுயநினைவு இல்லாமல் இருக்கும் ஒரு பெண்ணைத் தொடும் அளவு, நான் கேவலமானவன் இல்லை", இதழ்கள் வளைய ஏளனமாகச் சொன்னான்.

"ஓஓஓ....., அப்போ, ஒரு பெண்ணை..... சுயநினைவில்லாமல் தூக்கிவரும் வேலையை மட்டும்தான் செய்வீங்களோ?", அதைவிட ஏளனமாகக் கேட்டாள்.

"அதையும் நான் செய்யவில்லை.....", தோளைக் குலுக்கி சாதாரணமாகச் சொன்னான்.

"நீங்க செய்யாமல், நானே இங்கே உங்கள் அறைக்குள் வந்தேனா? இதை நான் சும்மா விட மாட்டேன். உங்களைப் பற்றி எங்கள் பத்திரிகையில் போட்டு, உங்க முக மூடியை கிழிக்கல....., நான் விவி இல்லை", கண்களில் கனல் தெறிக்கச் சொன்னாள்.

"ம்ஹூம்....., ஆனா....., நீ அதை செய்யணும்னா....., இந்த ரூமை விட்டு வெளியே போகணும். உனக்கு என்னைப் பற்றி முழுதாகத் தெரியாமல், இந்த ரூமை விட்டு நீ வெளியே போக முடியாது", அவளை விடக் கோபமாக, சவால் விட்டான் அவன்.

அவன் சவாலில் கொஞ்சம் திகைத்தாலும், இதைப்போல் எவ்வளவு பார்த்திருப்பேன் என்ற நிமிர்வும் கூடவே எழுந்தது.

"நீ என்னை நெருங்கினால், அந்த நாள், அந்த நிமிடம் தான், நீ முழுதாக இருக்கும் கடைசி நேரமா இருக்கும். ஆனால் உனக்கு ஒரு சந்தர்ப்பம் தருகிறேன், என்னை வெளியே விட்டுவிட்டால், பிரச்சனை சின்னதாக இருக்கும். இல்லையென்றால், இன்னும் பெரிய விளைவுகளை, நீ சந்திக்க வேண்டி இருக்கும்", எச்சரித்தாள் அவனை.

"அட, திடீர்ன்னு உனக்கு என்மேல் அவ்வளவு கரிசனை எதுக்கு. தேவையே இல்லை, நீ என்ன ஆப்பர்(offer) செய்தாலும், நான் என்னைப் பற்றி, முழுதாக உனக்குப் புரிய வைக்காமல், விடுவதாக இல்லை.

அதே போல், இன்னும் ஒரு வாரம், அதாவது ஏழு நாள், நீ என்னோடு ஒரே படுக்கையில் தான் இருக்கப் போகிறாய். அதற்குப் பிறகு, என்னைப்பற்றி, தெளிவாக, விலாவரியாக விளக்கலாம் சரியா?", அவளை நெருங்கி, அவள்

கண்களுக்குள் உற்றுப் பார்த்து, அவன் சொன்ன விதத்தில், மூச்சு விடவும் மறந்தாள் விவி.

கதவு - 10

காதலென்பது மெல்லக்

கொல்வதென்றால்

நான் சாகத் தயார்தான்

முழுதாகப் பிரியும் முன்பு சொல்லிவிடு

உன் காதலை.....

லயா திகைத்து அமர்ந்திருந்தாள். இதயம் துடிக்கும் ஓசை அவளுக்கே கேட்டது. தன் தாயா இப்படிச் சொன்னது, அதிலும், அவனுடன் போக வேண்டியதுதானே, போனால் அப்படி என்ன தப்பு? என்று கேட்டதை சகிக்கவே முடியவில்லை.

இந்த சினி உலகில் இது அன்றாடம் கேள்விப்படும் விஷயம் தான். அதற்காக, இதில் இருக்கும் அனைவரையும் குற்றம் சொல்லவும் முடியாது, தப்பு சொல்லவும் முடியாது.

கொஞ்சம் வளைந்துகொடுத்தால், சீக்கிரமாக முன்னேறிவிடலாம் என்று அவள் காது கேட்க, தாய் பேசுவதையே கேட்டிருக்கிறாள். ஆனால் அதற்காக, தன்னையும் அப்படி ஒரு ஈனச் செயலைச்செய்ய, தாயே தன்னை கட்டாயப் படுத்துவார் என்று கனவில் கூட நினைக்கவில்லை.

தன் தாய் பேசிய பேச்சு....., அருவருப்பாகத்தான் இருந்தது. அதைவிட, தருணிடம் சண்டை பிடிப்பார், அவனைக் கண்டிப்பார், இந்தப் படத்திலிருந்து விலகிவிடுவதாகச் சொல்லுவார் என்று நினைக்க, அவரது நடவடிக்கை....., முதல் முறையாக, தாயின் செய்கையை வெறுத்தாள்.

"என்..... என்..... என்னமா சொல்லுறீங்க? நான் இவ்வளவு பெரிய விஷயம் சொல்லுறேன் நீங்க என்னமோ ரொம்ப

ஈஸியாசொல்லிட்டீங்க", அதிர்ச்சியில், பேச்சு கூட வரவில்லை.

"கொஞ்சமாவது புத்தி இருந்தால் அம்மா ஏன் இப்படி சொல்லுறாங்கன்னு யோசி?", ஆங்காரமாகச் சொன்னார்.

தாயின் இந்தக் கோபம் சுத்தமாகப் புரியவில்லை அவளுக்கு. "என்னம்மா... கொஞ்சம் கூட உறுத்தலே இல்லாமல், சொந்தப் பொண்ணுகிட்டயே இப்படிப் பேசுறீங்க. நிஜம்மாவே நான் உங்க பொண்ணுதானா?", அவளால் அதை ஜீரணிக்க முடியாமலே இப்படி கேட்டாள்.

அவள் கேட்கவும், அவள் தாய், அவள் கன்னம் பழுக்கும் அளவு ஓங்கி அடித்தார். "நானும் எத்தனை நாள்தாண்டி, உன்னை, பொத்தி பொத்தி வைக்கிறது. கொஞ்சமாவது சூழ்நிலையைப் புரிஞ்சு நடந்துக்கணும். முதல்ல ஷூட்டிங்கை முடிச்சுட்டு வா", கோபமாகச் சொல்லிவிட்டு, சென்றுவிட்டார்.

அன்றைய மிச்சப் படப்பிடிப்பை ஒரு வழியாக முடித்துவிட்டு, காத்திருந்த காரில் ஏறி வீட்டுக்குக் கிளம்பினாள்.

வீட்டுக்குச் சென்ற தெய்வாவும் சிந்தனையிலேயே இருந்தார். தன் மகளிடம் பேசிய பேச்சு, அவரும் விரும்பிச் செய்யவில்லை. ஆனால், அவருக்கு வேறு வழி இருக்கவில்லை இப்பொழுது.

இந்தப் படம் துவங்கிய பொழுது, அனைத்தும் சரியாகத்தான் போய்க்கொண்டிருந்தது அவருக்கு. அவரது கணக்குகள் அனைத்தும் பிசகியது ஷெட்டியிடமிருந்துதான். தெய்வாவின் பழைய வாழ்க்கை அனைத்தும் தெரிந்த அவர், கொஞ்சம் கொஞ்சமாக, தன் வேலையைக் காட்டத் துவங்கினார்.

லயாவிற்காக இந்தப் படத்திற்கு அவர் கொடுத்த தொகை, தெய்வாவே எதிர் பார்க்காதது. "ஐயா இவ்வளவு எதற்கு.....", போலி தயக்கத்தோடு அவள் கேட்ட பொழுது,

"கருவாடு வேண்டாம் என்று சொல்லும் பூனையும், சிக்கன் வேண்டாம் என்று சொல்லுற நாயும், வாழைப்பழம் வேண்டாம் என்று சொல்லும் குரங்கும் உலகத்தில் கிடையாதுன்னு எனக்குத் தெரியும் தெய்வா.

இந்தப் பணம் உனக்காக இல்லை, உன் மகளோட திறமைக்காக...., நடிப்புக்காக, அழகுக்காக", கோணல் சிரிப்புடனும், லயாவை ஓரப்பார்வை பார்த்தவாறு சொல்லும்பொழுதே, தெய்வாவிற்கு சந்தேகம் தான்.

ஒரு நல்ல தாயாக இருந்திருந்தால், அப்பொழுதே அவர் கொடுத்த அதிகப்படி பணத்தைத் தூக்கி அவன் மூஞ்சியிலேயே விட்டெறிந்திருப்பாள். தெய்வாவிற்கு பணத்தின்மேல் இருந்த மோகமும், தன் மேல், தன் கைங்கரியத்தின் மேல் இருந்த நம்பிக்கையில், அதை அப்பொழுது கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார்.

தன்னை மீறி எதுவும் நடக்காது என்று இறுமாந்து இருந்தாள். அப்படியே நடந்தாலும், எதையாவது செய்தால் சரிகட்டி விடலாம் என்று அசட்டையாக இருந்தவளின் நம்பிக்கையை பொய்யாக்கினார் ஷெட்டி.

முதல்முறை படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு வந்த பொழுதே, "என்ன தெய்வா.....? பாப்பாக்கு நடிக்க வரலை போல.....?", என்று மெதுவாகப் போட்டு வாங்கினார்.

ஆனால் அதில் சிக்க, தெய்வா என்ன நெத்திலி மீனா? அவள்தான் விலாங்கு மீனாயிற்றே, "ஐயா... ஷூட்டிங்கை நாங்க ரத்து செய்யலை, தருண் தான் முதலில் வேற காட்சிகளை எடுக்கலாம் என்று சொல்லி இங்கே அழைச்சுட்டு வந்துட்டார்", நீங்க அவனையே கேளுங்க, என்ற தோரணை இருந்தது, அவள் குரலில்.

அப்பொழுது பேசாமல் சென்றுவிட்டார் ஷெட்டி. ஆனால் அதன் பிறகு, இன்டோர் ஷூட்டிங்கில் தவிப்பான காட்சியிலும், லயா சரியாக நடிக்காமல் சொதப்பிய அன்று, அலைபேசியில் அழைத்தார்.

"தெய்வா, ஷூட்டிங் ரிகர்சல் கொஞ்சம் பாக்க வேண்டி இருக்கு. லயாவை என் கெஸ்ட் ஹவுஸ்க்கு கொஞ்சம் அனுப்பேன். இங்கேதான் கதிரும் இருக்கிறான். தருணையும் வேண்டுமென்றால் அழைக்கிறேன்", முதலில் தூண்டிலை வீசியவர், இப்பொழுது வலையை விரிக்கத் துவங்கினார்.

ஸ்டுடியோவில் ரிகர்சல், என்றால் கூட கொஞ்சம் ஒத்துக் கொள்ளலாம். ஷெட்டி, கெஸ்ட் ஹவுஸ்க்கு வரச் சொன்ன விதத்திலேயே தெரிந்தது அவர் எதற்கு அழைக்கிறார் என்று.

"ஐயா.... பாப்பாவுக்கு வேற ஸ்டுடியோவில், ஷூட்டிங் இருக்கு. இன்னும் பத்து நாளுக்கு, இங்கே அங்கே அசைய முடியாது. உங்களுக்குத் தெரியாதது இல்லை, நீங்க கேட்டீங்க என்ற ஒரே காரணத்துக்காகத்தான், இருந்த கொஞ்ச நாட்களை அட்ஜஸ்ட் செய்து உங்க படத்துக்கு நாள் கொடுத்தேன்.....", தேன் குழைத்த குரலில் சொன்னாலும், அதில் இருந்த மறுப்பு, ஷெட்டிக்குப் பிடிக்கவில்லை.

"என்ன தெய்வா? பேச்செல்லாம் புதுசா இருக்கு. என்னைப் பற்றிதான் உனக்குத் தெரியுமே, நான் எனது எத்தனை படங்களில் உனக்கு வாய்ப்பு அளித்திருக்கிறேன். எல்லாம் மறந்து போச்சா?", மிரட்டலில் இறங்கினார்.

"எனக்கு எப்படிங்கையா அது மறக்கும்", அவரிடம் வெளியில் சொன்னாலும், 'அதற்காக என்னை எத்தனைநாள் உன் கெஸ்ட் ஹவுசுக்கு வர வைத்தாய் என்பதும் எனக்கு மறக்கவில்லை', என்றும் நினைத்துக் கொண்டார்.

"உனக்கு எதுவும் ஞாபகம் இருப்பது மாதிரி, எனக்குத் தெரியலையே. என் கிட்டே வாறவங்க, எப்பொழுதும் ஏமாந்து போகமாட்டாங்க.....", அடுத்த வலையை வீசினார்.

.

அதற்கும் தெய்வா ஒரு வகையில் தன் தயக்கத்தை வெளிப்படுத்தவே, தெய்வாவின் பலவீனத்தில் அடிக்கத்

துவங்கினார்.

"தெய்வா, நீ நினைத்தே பார்க்க முடியாத அளவு, உன்னை கவனிக்கிறேன். இருபத்தைந்து லட்சம் தாறேன்....., அதுவும் எதற்காக என்பது உனக்குத் தெரியும். புதுப் படம், முதல் முதல்ல நான்தான் பார்க்க போகிறேன் அதான்.....", சினிமாத் துறையில் இருப்பதாலோ என்னவோ, உதாரணம் கூட அப்படியே வந்தது.

மித மிஞ்சிய ஜொள்ளும் தெறித்தது அவர் குரலில். இந்தப் பேச்சில் தெய்வா கொஞ்சம் திகைக்கவே செய்தார். முதலாவது, தன் மகள் இன்னும் குழந்தை என்றே, அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். இரண்டாவது, ஷெட்டியின் வயது. மூன்றாவது, ஷெட்டி தன் மகள் மீது கண் வைத்துவிட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இவரிடமிருந்து தன் மகளை எப்படிக் காக்கவென்று தெரியாமல் இருந்தாள். யாரிடமும் சென்று உதவி கேட்கும் விஷயமில்லை இது. அப்படியே கேட்டாலும், "உனக்குத் தெரியாததா? நீ செய்யாததா? உனக்கென்ன புதுசா?", என்று சுலபமாகச் சொல்லி விடுவார்கள்.

தன் வாழ்க்கை, மகளின் வாழ்க்கையை இப்படி திசை மாற்றும் என்று அறியவே இல்லை அவர். என்ன செய்து லயாவை அவரிடமிருந்து காக்கவென்றும் தெரியவில்லை. இந்த கோபத்தாலேயே லயா தருணை பற்றி சொன்ன பொழுது அவனுடன் போக சொல்லிவிட்டார்.

அவரும் அதையும் முழு மனதோடு சொல்ல வில்லைதான். தருணைப் பற்றி சினிமா உலகில் உலாவரும் வதந்திகள் பற்றியும் அவளுக்குத் தெரியும்.

அப்போதுதான், மூன்று நாட்கள் முன்பு, அவர்கள் படப்பிடிப்பு நடக்குமிடத்திற்கு அருகில், நடந்த வேறொரு படப்பிடிப்பில், நடித்துக் கொண்டிருந்த கதாநாயகியிடம் பேசிக்கொண்டு இருந்த போது, தருணைப் பற்றி அவள் சொன்ன விவரத்தைக் கேட்டு, தான் திகைப்புற்றது ஞாபகம் வந்தது .

இப்போது இருக்கும் இக்கட்டான சூழலில், தருணிடம் செல்வதைவிடப் பாதுகாப்பான இடம் வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது ..

.

மகளை, எப்படித்தருணிடம் செல்ல சம்மதிக்க வைக்கவென்றுதான் தெரியவில்லை தெய்வாவிற்கு. ஷெட்டியிடமிருந்து எப்படித் தப்பிக்கவென்று தெரியாமல் இருந்தவளுக்கு, கடவுளே ஒரு வழி காட்டியதுபோல் உணர்ந்தாள்.

.

எப்படியாவது மகளிடம் பேசிவிடவேண்டுமென்ற முடிவோடு வீட்டில் அமர்ந்திருந்தார். லயா ஷூட்டிங் முடித்து வந்தவள், தாய் ஹாலில் அமர்ந்திருப்பதை பார்த்தும் அவரைக் கண்டுகொள்ளாமல் தன் அறைக்கு விரைந்தாள்.

மகளின் கோபம் புரிந்தாலும், எடுத்த காரியத்தை, பாதியில் விட்டால் அது தெய்வா இல்லையே. அவருக்கு நாளும் குறைவாக இருந்தது. எப்பொழுது வேண்டுமென்றாலும் ஷெட்டி வீடுதேடி வந்துவிடும் அபாயம் இருந்தது.

அவர் சிந்தித்துமுடித்து, மகளின் அறைக்குச் செல்லத் திரும்பும் வேளை, ஷெட்டி ஒரு பெரிய புன்னகையுடன் வீட்டுக்குள் வருவது தெரிந்தது. கொஞ்சம் திடுக்கிட்டாலும், ஏற்கனவே இதை எதிர்பார்த்து இருந்ததால் அதிர்ச்சியின் அளவும் குறைவாகவே இருந்தது.

"வாங்க....., என்ன வராதவங்க வீடு தேடி வந்து இருக்கீங்க...?", அவரைவிட பெரிய புன்னகையுடன் அவரை வரவேற்றாள் தெய்வா.

"நீதான் என்னைத் தேடி வர வச்சுட்ட....., வந்தவனுக்கு ஒரு காப்பித்தண்ணி கூட தராமல் இருக்குறியே", ஸோபாவில் சாவகாசமாக அமர்ந்தவாறு கேட்டார்.

"உங்களுக்கு இல்லாததா....., இந்தா....., ஒரு ஆப்பிள் ஜூஸ் கொண்டுவா.....", அவரிடம் சொன்னவாறே,

வேலைக்காரியை அழைத்து, அவருக்கு ஜூஸ் கொண்டுவரச் சொன்னாள்.

"விருந்து சாப்பாடே கிடைக்கும்னு நினைச்சேன்.....", ஜூசை வாங்கியவாறே கேட்டார்.

இதற்கு பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள் தெய்வா. ஜூசைக் குடித்த ஷெட்டி, மேலே எதுவும் பேசாமல் வெளியேறினார். தெய்வாதான் நடுங்கிப் போனார்.

இதற்கு அர்த்தம், லயாவை, வீடு புகுந்து தூக்கவும் தயங்க மாட்டேன் என்பதை அவளுக்கு உணர்த்தவே இந்த வருகை. உடனடியாக முடிவெடுத்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்குள்ளானார் தெய்வா.

மகளைத் தேடிச் சென்றார். "லயா.... இப்போ யார் வந்தாங்கன்னு தெரியுமா? ஷெட்டி.....", பூசி மொழுகாமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

"அவர் எதுக்கு இப்போ இங்கே வந்தார்?", தாயிடம் சந்தேகமாகக் கேட்டாள்.

"எதற்காக இருக்குமென்று நீ நினைக்கிற?", அவளிடமே திரும்ப கேட்டார்.

"ம்ச்....., உங்க விளையாட்டுக்கு நான் ஆளில்லை, விஷயம் எதுவும் இல்லன்னா தயவுசெய்து கொஞ்சம் போங்கம்மா. நான் ரெஸ்ட் எடுக்கணும்", எரிச்சலாகச் சொல்லிவிட்டு, படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

"லயா.... மேக்கப்பைக் கலைக்காமல், இதென்ன இப்படியே படுத்துட்ட, முதல்ல எழுந்து மேக்கப்பைக் கலை", விஷயத்தை, எப்படி மேலே கொண்டு செல்லவென்று தெரியாமல் தயங்கினார்.

தாயின் இந்த செயலுக்கு, மறுமொழி எதுவும் சொல்லாமல் இருந்தாள். "லயா.... இப்போ நான் சொல்லுவதை நீ எப்படி எடுத்துப்பன்னு தெரியலை. சரி அதை விடு, காலையில் நான் சொன்னதைப் பற்றி யோசிச்சியா?", மிகுந்த தயக்கத்துக்கு மத்தியில் கேட்டார்.

எவ்வளவுதான் தைரியமாக சில செயல்களை திரை மறைவில் செய்தாலும், பெற்ற மகளிடம் அதைப்பற்றி வெளிப்படையாக பேச மிகுந்த தயக்கம் இருந்தது அவருக்கு. தானாடா விட்டாலும் தன் தசையாடும் என்பதை நிரூபித்தார் அவர்.

லயா, தாய்க்கு பதில் சொல்லாமல் முகத்தை திருப்பிக் கொண்டாள். "லயா, நீ இன்னைக்கு நைட் இங்கே தங்கவேண்டாம்.....", "ஏன்...?", தாயை வார்த்தையை முடிக்கக் கூட விடாமல், துப்பாக்கியில் இருந்து புறப்படும் தோட்டாவாக வெளி வந்தது வார்த்தை.

அவளது கேள்வியில், தெய்வாவிற்கு கோபம் தலைக்கேறியது. ஏற்கனவே ஷெட்டியின் தொல்லையும், மிரட்டலும் ஒரு பக்கமென்றால், இன்று வீட்டுக்கே வந்தது இன்னும் அவரை பலவீனமாகியிருந்தது.

"என்னடி ஏன்? நான் சொல்ல வருவதை, கொஞ்சம் கூட பொறுமையாகக் கேட்கவே முடியாதா? சொல்லுறேன் கேட்டுக்கோ, வந்துட்டு போனானே ஷெட்டி, நீ அவனோட ஒரு நாள் இருக்க, இருபத்தைந்து லட்சம் தாரேன்னு சொல்லுறான்.

அது முடியாதுன்னு சொன்ன என்கிட்டே, இப்போ வீட்டுக்கே வந்துட்டு, உன்னைத் தூக்க எவ்வளவு நேரமாகும்னு சவால் விட்டுட்டுப் போறான். நீ எங்கே போய் ஒளிஞ்சுக்கப் போறன்னு சொல்லு, நான் அங்கே ஒளிச்சு வைக்கிறேன்.

ஆனால், ஒன்றை மட்டும் மறக்காதே, அக்ரிமென்ட் போட்டு இருக்கோமே, அது முடியாமல் எங்கே போனாலும், போலீஸ், கேஸ் இப்படின்னு போட்டு அலைக்கழிப்பான்.

அதே நேரம், நான் சொன்னபடி செய்தால், அவனோட கோபம் தருண் மேலதான் இருக்கும். இதில் நமக்கு ரெண்டு நன்மை இருக்கு, ஒன்று நீ ஷெட்டியிடம் இருந்து தப்பிக்கலாம். ரெண்டாவது ஷெட்டியின் கோபத்தில் இருந்தும் தப்பிக்கலாம்.

என்னதான் இருந்தாலும், மகளை நடிப்பு தொழிலில் இருந்து விலக்கி வைக்க, தெய்வா தயாராக இல்லை.

முதல்ல இப்படிப் பேசி நேரத்தை வீணாக்காமல், கிளம்புற வழியைப் பாரு. இல்ல.... நான் இங்கேதான் இருப்பேன், ஷெட்டியை எதிர்த்துப் போராடுவேன், போலீசுக்குப் போறேன் அப்படின்னு கிளம்புவதாக இருந்தால், அதற்கு நான் ஆளில்லை சொல்லிட்டேன்", மகளது பலவீனத்தில் அடித்தாள் தெய்வா.

லயாவிற்கு, தனியாகச் சிந்திக்கத் தெரியாது. தாயின் முந்தானையிலே இருந்தவள், தாய் சொல்படி கேட்டு நடக்க மட்டுமே, அவளுக்குத் தெரியும். கண்கள் கலங்க, என்ன செய்யவென்று அவளுக்குத் தெரியாமல், தாயை வெறித்து நோக்கினாள்.

சிந்தை முழுவதும், 'இது தருணின் வேலை' என்றே ஓடிக் கொண்டிருந்தது. பார்த்த முதல் நாளே தன்னைப் படுக்கைக்கு அழைத்தது, 'உன் தாயே உன்னை அனுப்புவார்' என்று சவால் விட்டது, அது முடியாமல் போகவே, ஷெட்டி மூலமாக தன்னை அணுக நினைக்கிறான் என்றே எண்ணினாள்.

அவனுக்கு, தான் யார் என்று காட்டவேண்டும், தன்னை அணுக முடியாமல் செய்யவேண்டும், அவனுடன் இருந்தாலும், தன்னைத் தொட அனுமதிக்கக் கூடாது என்று எண்ணினாள். இறுதியில், தாயும் கை விட்ட நிலையில், தருணைத் தேடிச் செல்ல அரை மனதாகக் கூட இல்லாமல் சம்மதித்தாள்.

இவை அனைத்தையும் மீறி, மனதுக்குள் பயம்தான் குமிழியிட்டது. நான் எங்கே போகிறேன்? என்ன செய்ய போகிறேன்? இது கனவாக இருந்து விடாதா? தூங்கி எழும்பினால் இந்த கனவு கலைந்து விடாதா? கண்களை இறுக மூடி, பின்னால் சாய்ந்துகொண்டாள்.

கதவு - 11

காதலின் முதல்படி

பொறாமையாக இருக்குமோ

நீ யாருடன் பேசினாலும்

பற்றி எரிகிறேன் நான்

பொறாமையால்.....

தாயின் சொல்படி கேட்டு, வேறு வழியில்லாமல், மனம் முழுக்க தருண் மேல் வெறுப்புடன் கிளம்பினாள் லயா. காருக்குள் ஒரு அசாத்திய அமைதி.

லயா மனதுக்குள் தருணை நினைத்துக் கறுவிக் கொண்டே வந்தாள். .

'நான் நினைப்பதை இருந்த இடத்தில் இருந்து சாதிப்பவன்', அவள் காதில் அவன் சொன்ன வார்த்தை, இப்பொழுது நேரில் சொல்வதுபோல் இருக்க, கண்களையும், காதையும் இறுக மூடிக் கொண்டாள்.

தெய்வாவிற்கு மகளின் நிலையை நினைத்து, கவலையாக இருந்தது. அவள் மனநிலை என்னவாக இருக்கும் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. தன்னால் இயன்றதை, இதுவரை செய்தாகி விட்டது. இதற்குமேல் எதையும் வெளிப்படையாகச் செய்ய முடியாது.

அப்படியே செய்ய துணிந்தாலும் ஷெட்டி அதற்கு அனுமதிக்க மாட்டான். இப்பொழுது தாங்கள் தருண் வீட்டுக்குச் செல்வது தெரிந்தால் கூட, என்னமாதிரி விளைவுகள் ஏற்படும் என்பதை யோசிக்க முடியவில்லை. இப்பொழுது கூட தெய்வா பணத்துக்கு அடிமைதான்.

இதே ஷெட்டி, இன்னும் பத்து வருடம் கழித்து, உன் மகளை ஆசை நாயகியாக வைத்துக் கொள்கிறேன், உனக்கு, கோடி பணம் தருகிறேன் என்று சொன்னால் தயங்காமல்

சம்மதிக்க அவள் தயார்தான். ஆனால்....., மகள் மூலமாக வரும் இந்த புகழ் போதையை அவ்வளவு சீக்கிரம் இழக்க அவள் தயாராக இல்லை.

இதுவே இன்னும் பத்து வருடம் கழித்து என்றால், மகளை அடித்தாவது படிய வைக்க அவளுக்கு தெரியும். தங்க முட்டையிடும் வாத்தை, ஒரே நாளில் அறுக்க, தெய்வா ஒன்றும் முட்டாள் விவசாயி கிடையாதே, இன்னும் பத்து வருடத்தில் பத்துக்கோடி பணத்தையும்,

சுகபோக வாழ்க்கையையும், சினிமா நட்சத்திரம் லயாவின் தாய் என்ற பெயரையும், கேவலம் இருபத்தைந்து லட்சம் பணத்துக்காக, கிழவனின் படுக்கையறையில் மகளின் எதிர்காலத்தையும், தன் கனவையும் அடகுவைக்க தெய்வா அவ்வளவு முட்டாள் இல்லை.

இவ்வாறாக தெய்வாவின் சிந்தனை இருக்க, அவளுமே மகளிடம் பேசவில்லை. தெய்வா இவ்வளவு தைரியமாக தன் மகளை தருணிடம் அனுப்ப காரணமே, அவனைப் பற்றி அக்குவேறு, ஆணிவேறாக விசாரித்து அறிந்துகொண்டாள்.

எங்கே எப்படி கேட்டால் வேலை நடக்குமென்று அவளுக்கு தெரியும். பணம் கொடுத்து அழைக்கும் ஷெட்டியிடமே மறுத்தவள், வெறுமனே மகளை ஒருவனிடம் அனுப்புகிறாள் என்றால் அதில் விஷயம் இல்லாமல் இருக்குமா?.

அந்த காரியத்தையும், காரணத்தையும் கூட மகளிடம் விளக்க அவள் தயாராக இல்லை. மகள் மற்றவரிடம் பேசினாலே எங்கே காதலில் விழுந்துவிடுவாளோ என்று பொத்தி பாதுகாக்கும் அவள், ஒரு ஹீரோவைப் பற்றி எப்படி மகளிடம் பேசுவாள்.

மகளின் முகத்தில் இருக்கும், வெறுப்பும், தவிப்பும் தெய்வாவிற்கு பெருத்த நிம்மதியை தந்தது என்றே சொல்லவேண்டும்.

இருவரின் சிந்தையிலே, அவர்கள் சேரவேண்டிய இடமும் வந்துவிட்டது. அந்த ஒதுக்குப்புறமான பங்களாவின் காவலாளி, இவர்களது காரைப் பார்த்தவுடன், வாசுவிற்குத் தகவல் கொடுத்தான்.

"என்னது லயாவா? அவங்க எதுக்கு இந்தநேரம் இங்கே வாறாங்க? சரி எதுக்கும் உள்ளே அனுப்பு", சொல்லிவிட்டு, வேகமாகக்கண்மணியைத் தேடிச் சென்றான்.

"கண்மணி....., என்ன செஞ்சுட்டு இருக்க", அறைக்குள் கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்டிருந்த அவளது அருகில் நெருங்கி நின்றுகொண்டான்.

அப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருந்த அவளிடமிருந்து வந்த ஷாம்பூ வாசத்தில் தன்னை மறந்தான். அவளைத் தொடும் அளவு அவன் துணியவில்லை. ஆனால் அவன் நின்ற நெருக்கத்தில், அவனது மூச்சுக்காற்று அவள் தோளில் சூடாகப் பாய்ந்தது.

"என்ன வேணும் உங்களுக்கு.....?", தன் உணர்வுகளை மறைக்கப் போராடியவாறு கேட்டாள்.

"இப்படிக் கேட்டால்.....", மெதுவாக அவள் இடையில் கை கோர்த்து, அவளைத் தன்னோடு இறுக்கினான். அவள் அமைதி அவனுக்கு தைரியமூட்டியது.

கொஞ்சம் திகைத்தாலும், தன் மனதுக்குள் புகுந்துவிட்டவனின் தொடுகையை, வேண்டாம் என்று அவளால் வெறுக்க முடியவில்லை. அதே நேரம், தன் விருப்பத்தை அவனிடம் வெளிப்படுத்தவும் அவள் நிலை விடவில்லை.

இதழ்களை மென்மையாக அவள் தோளில் பதித்தான். தலையை சரித்து அவன் இதழ்களுக்கு வழி விட்டவாறு, இமைகளை மூடிக் கொண்டாள். அவன் நெருக்கமும், இறுக்கமும் அதிகரித்தது. அவளைத் தன் பக்கம் திருப்பி, அணைத்த வேளையில், அவன் கையில் இருந்த அலைபேசி அபஸ்வரமாக ஒலித்தது.

அவனுக்கு, லயாவின் வரவு சட்டென நினைவுக்கு வர, "ஹையோ கண்மணி....லயா இங்கே வந்துட்டு இருக்காங்களாம். ஏற்கனவே விவி இங்கே இருக்கா. இதில் இவ வேற? நான் என்ன செய்யட்டும்? அது தெரியாமல் உன்கிட்டே கேக்கத்தான் வந்தேன்", அவனுக்குத் தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

"என்னது லயாவா? சரியா கேட்டீங்களா? இதைச் சொல்லாமல், என்ன வேலை செஞ்சுட்டு இருந்தீங்க?", அவளுமே கொஞ்சம் படபடப்பாகக் கேட்டாள்.

"அதான் உனக்குத் தெரியுமே", கண்ணைச் சிமிட்டி சொல்ல, அவள் முறைத்துப் பார்த்தாள்.

உடனே பேச்சை மாற்றினான். அவளைக் கோபப்படுத்திப் பார்க்க அவன் தயாராக இல்லை. "நான் என்ன, போய் பாத்துட்டா வந்தேன். செக்யூரிட்டி தான் சொன்னார். அவர், பார்க்காமல் சொல்ல மாட்டாரே. இப்போ என்ன செய்யட்டும்?", அவன் கேட்ட கேள்வியையே மறுபடியும் கேட்டான்.

"எல்லாம் என்னையவே கேளுங்க. எனக்கு மட்டும் என்னத் தெரியும். சரி, எதுக்கும் வந்தவங்களைக் கூப்பிட்டு ஹால்ல உக்கார வைங்க. நான் தருண்ட்ட கேட்டுட்டு வாறேன். இவனுக்குன்னு எங்கே இருந்துதான் கிளம்புவாங்களோ", அலுத்தவாறே அவனிடம் சொல்லிவிட்டு, மாடிக்கு விரைந்தாள்.

இது ஒரு மூன்றடுக்கு மாளிகை. தரை தளத்தில், தருணின் அலுவலக அறை, வரவேற்பறை, சமையலறை மேலும் இரண்டு அறைகள், யாராவது வந்தால் தங்குவதற்கு என்று இருந்தது. முதல் தளத்தில், பெரிய ஹால், கண்மணி, வாசு இவர்கள் தங்க சகல வசதிகளுடன் கூடிய அறை. மேலும் மூன்று அறைகள்.

இரண்டாம் தளம் முழுவதும் தருணின் தனிப்பட்ட அறைதான். அங்கே நான்கு அறைகள், ஒரு ஜிம் உண்டு. நான்கு அறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

நான்கு அறைகளும் ஒன்றோடு ஒன்று சிறிய கதவுகளால் இணைக்கப் பட்டிருக்கும். அதற்கு உள்ளே செல்லவும், வெளியேறவும் ஒற்றைக் கதவுதான் உண்டு.

அந்த ஒற்றைக் கதவினுள்ளே சென்றால் மற்ற நான்கு அறைகளுக்கும், ஜிம்முக்கும் சென்றுவிடலாம். இந்த தளத்தில் நுழைய கண்மணி, வாசு இருவருக்கு மட்டுமே அனுமதி உண்டு. வேறு யாராவது செல்வதென்றால், அது தருண் அழைத்து வருபவர்களாகத்தான் இருக்க முடியும்.

கண்மணி வேகமாகச் சென்று அழைப்பு மணியை அழுத்தினாள். "கண்மணி...., வா....", தருணின் குரல் கேட்கவே உள்ளே சென்றாள்.

தருண், சாதாரண முக்கால் பேண்ட், டி - ஷர்ட் போட்டு அமர்ந்தவாறு, விவியுடன் செஸ் விளையாடிக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரையும் பார்த்து சிரித்தாள். "ஏண்டா..., ஒரு பொண்ணை கடத்திட்டு வந்து, கூட வச்சு செஸ் விளையாட வைக்க உன்னால் மட்டும் தாண்டா முடியும்.

இப்போ நீ கேரம்போர்டு ரெடி பண்ணு. லயாவும் வந்திருக்கா", கடுப்பாகச்சொன்னாள்.

"கண்மணி....., உங்க அண்ணாவைப் பத்தி உங்களுக்கு சரியாத் தெரியலை. விட்டால், அவர் இன்னும் மெம்பர் சேர்த்து, கபடியே ஆடுவார்", விவி சிரித்தவாறே பதில் சொன்னாள்.

அவள் புன்னகை முகமாகச் சொன்னாலும், அவள் சொன்ன 'அண்ணா' என்ற வார்த்தையில் அதிர்ச்சியாகி, தருணைப் பார்த்தாள். அவனோ எந்த அதிர்ச்சியும் இல்லாமல், இருவரையும் பார்த்தவாறு சிரித்துக் கொண்டிருந்தான்.

"அண்ணாவா.....", அதிர்ச்சியை அடக்க முடியாமல், வார்த்தையாகக் கேட்டே விட்டாள் கண்மணி.

"ஹேய் கண்மணி, உங்க அண்ணா தானே இவர். பிறகு எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி", விவி சாதாரணமாகக்

கேட்டாள்.

ஒரு குற்றம் சாட்டும் பார்வையை தருணை நோக்கி வீசினாள். "கண்மணி.... நான் சொல்லலை....., அவ பத்திரிகைக் காரி. அவகிட்டே, உண்மையை அவ்வளவு சீக்கிரம் மறைக்க முடியாது", கொஞ்சம் கலவரமாகவே சொன்னான்.

ஆனாலும், கண்மணியின் கோபம் குறையவே இல்லை. "கண்மணி.....கண்டிப்பா, தருண் சொல்லவே இல்லை. நானாகத்தான் கண்டு பிடித்தேன். எப்படின்னா....., இப்படி.....", என்று சொன்னவாறு, ஒரு கடிதத்தையும், ஒரு வாழ்த்து அட்டையையும், அவர்கள் முன்பு போட்டாள்.

இப்பொழுது தருணே அதிர்ந்தான். ஆனாலும் அதை வெளியே காட்டாமல், "ஹம்..... பத்திரிகைக் காரியைக் கொண்டுவந்து மடியில் கட்டிக்கிட்டு, ரகசிய அறையின் சாவியையும் கொடுத்த மாதிரி ஆயிடுச்சா, என் நிலைமை? விவி.... இதை நீ எப்போ எடுத்த?

இது என்னோட பெர்சனல் லாக்கர்ல இருந்ததாச்சே. திருட்டு வேலை கூட பாக்குறியா? சரி... அதில் கொஞ்சம் பணம் வச்சு இருந்தேனே அதாவது இருக்கா.... இல்ல.....?", போலியான சந்தேகத்தில் கேட்டான்.

"ஐயோ சாமி, இன்னைக்குக் காலையில் நீ ஷூட்டிங் போயிருந்தப்போ உன் அறையை நோண்டிப் பார்த்தேன். பின்ன, ஊரைச் சுத்திட்டு, ரகசிய வேலைப் பாத்துட்டு இருந்தவளைக் கொண்டுவந்து, இப்படி ரூமுக்குள் அடைச்சு வச்சால், நான் என்னதான் செய்யட்டும். எனக்கும் நேரம் போக வேண்டாமா?", அவளும் சாதாரணமாகவே சொன்னாள்.

"தருண்.... இப்போ உனக்கு சந்தோசமா? தேவையில்லாத வேலை எல்லாம் தலையில் எடுத்துப் போட்டுக்கோ. இந்த ரகசியம் வெளியே தெரிந்தால், அடுத்த நிமிஷம் நான் உயிரோட இருக்கவே மாட்டேன் சொல்லிட்டேன்", முகத்தை மூடி அழுதாள் கண்மணி.

"கண்மணி....., இப்போ எதுக்கு அழறீங்க. தருணுக்குத் தங்கையா இருப்பது, அவ்வளவு பெரிய தப்பா. இதுக்கு நீங்க பெருமைதான் படணும்", விவி வேகமாக அவள் அருகில் வந்து, அவள் தோளை அணைத்துக் கொண்டாள்.

"இது பெருமைப் படுற விஷயம் கிடையாது. என் அம்மாவோட துரோகம்....., கமலா அம்மாவுக்கு, அவங்க செய்த மிகப் பெரிய துரோகம் நான். இந்த உண்மை அவங்களுக்குத் தெரிந்தால், அவங்க தாங்க மாட்டாங்க. அதனால் தான், நான் விலகியே இருக்க முயற்சி செய்தேன். இவன்தான் விடலை", தருணை அடித்தாள்.

கண்மணியின் அடிகளை கொஞ்சம் கூட முகம் சுழிக்காமல் வாங்கிக் கொண்டான் தருண். "கண்மணி, இதில் எங்கே இருந்து துரோகம் வந்துது. ஒரு இக்கட்டான சூழ்நிலையில் எங்க அப்பாவும் உங்க அம்மாவும் சந்திச்சுக்கிட்டாங்க.

உங்க அம்மா அந்த இக்கட்டில் இருந்து தப்பிக்க, எங்க அப்பா கையால் ஒரு தாலி வேணும்னு கேட்டாங்க. எங்க அப்பா, ஏற்கனவே தான் திருமணம் ஆனவன் என்ற உண்மையைச் சொல்லாமல், உங்க அம்மா கழுத்தில் தாலியைக் கட்டிட்டார்.

சொல்லப் போனால், அந்தச் சூழ்நிலையில், நானாக இருந்திருந்தாலும் அதைத்தான் செய்திருப்பேனோ என்னவோ. கடமைக்காக சேர்ந்து வாழ்ந்தாங்க. ஒரு நாள் உண்மை தெரியவந்து, உங்க அம்மா ஊரை விட்டே போய்ட்டாங்க. எங்க அப்பாவுக்கு, எங்கபோய் தேடுறதுன்னு தெரியாமல் விட்டுட்டார்.

இது முழுக்க முழுக்க எங்க அப்பா செய்த தவறு. இதில் பலியானது உங்க அம்மா. உங்க அம்மா சாகப் போகும் நேரத்தில், எங்க அப்பாவுக்கு எழுதிய கடிதம்தான் இது. தான் மரணப் படுக்கையில் இருப்பதால், தன்னோட பொண்ணை பாதுகாப்பாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி எழுதியது.

அது என் கையில் கிடைத்தது. நான் வந்து பார்த்தேன். உன்னை என் கையில் ஒப்படைத்தவுடன், அவங்க போய்ட்டாங்க. கெட்டதிலும் ஒரு நல்ல விஷயமாக, நீ அழகுகலை நிபுணருக்குப் படித்திருந்தாய். என் தொழிலுக்கு உதவியாக இருக்கட்டும் என்ற போர்வையில், உன்னை நான் பாதுகாக்கிறேன்.

இது ஒரு அண்ணனாக என் கடமை. என் அம்மாவின் நிம்மதிக்காக, ஊரை விட்டே போய், எவ்வளவு கஷ்டப் பட்டிருக்காங்க. ஒரு நாள் கூட, அவங்க எங்களைத் தொல்லை செய்யவே இல்லையே. நீயும் பையனாக இருந்திருந்தால், உன்னைப் பற்றி எந்தக் காலத்திலும் எங்களுக்குத் தெரியாமலே போயிருக்கும். நீ பெண்ணாக இருக்கவே, உன்னைத் தனியே இந்த உலகத்தில் விட முடியாமல், ஒரு பாதுகாப்புக்காக எங்களை அணுகினாங்க.

அப்படியிருக்கும்போது, உன்னை எப்படி நான் தனியாக விடுவேன். இப்போ கூட, இந்த வெளி உலகத்துக்கு உன்னை என் தங்கையென்று சொல்ல, எனக்கு எந்த தயக்கமும் இல்லை. ஆனால், என் அம்மாவுக்காகத்தான் நானும் அமைதியாக இருக்கிறேன்.

நீ என்னடாவென்றால் இப்படிச் சொல்லுகிறாய். இன்னொருமுறை என்னைவிட்டுச் செல்வதாக நீ சொன்னால், உன் கால் இரண்டையும் வெட்டிப் போட்டுடுவேன்", உண்மையான கோபம் தெறித்தது அவன் குரலில்.

மழையடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது. "அப்படியென்ன இக்கட்டான சூழ்நிலை தருண், இவங்க அம்மாவுக்கு. இருந்தாலும், உங்க அப்பா செய்தது தவறு", விவி அந்த நேரத்திலும் நியாயம் பேசினாள்.

"விவி.... சில விஷயங்களை, நியாயப்படி பார்த்தால் தப்பாகத்தான் தெரியும். எதையும் தீர்மானிப்பது சூழ்நிலைதான். இப்போகூட நான் உன்னைக் கடத்திட்டு வந்து வைத்திருக்கிறேன். இது நியாயமா நீயே சொல்லு", அவளிடமே கேள்வியைத் தள்ளினான்.

"கடத்தியது நியாயமில்லைதான். ஆனால் கடத்தலுக்கான காரணம் சரியானதுதானே தருண். நியாயமான கோபமும் கூட", வேகமாகச் சொன்னாள் விவி.

"உன்னோட பதிலிலேயே, நீ சரியான விளக்கத்தை சொல்லிட்ட. என்னோட பதிலும் அதுதான் விவி. இந்த விஷயம், உன்னை விட்டு வெளியே போகாதுன்னு நான் நினைக்கிறேன். விஷயத்தை, நான் சிக்கல் இல்லாமல் முடிக்க வேண்டும் என்று நினைத்தாலும், அது பெருசாதான் போகுது", பெருமூச்சு விட்டான்.

"தருண்.... என் மூலமாக இந்த விஷயம் வெளியே போகவே செய்யாது. ஆனாலும், தேவையில்லாத வதந்திகளைத் தவிக்கலாமே. அதுவும், அண்ணன் தங்கையை வைத்தே வதந்தி என்றால்.....", கொஞ்சம் சங்கடமாகவே சொன்னாள் விவி.

"ஹா....ஹா.....ஹா..... விவி... நீயா பேசுகிறாய். என் காதையே என்னால் நம்பமுடியவில்லையே. இரவில் வரும் நட்சத்திரப் பட்டம் உடைய நாயகன், சேலை சுற்றிய ஆடவனைக் கூட விட்டு வைக்க மாட்டான், என்று நீயே எழுதியதா என் ஞாபகம். ஒருவேளை, அந்த விவி நீ இல்லையோ? நான் தப்பான ஆளைக் கடத்திட்டு வந்துட்டனா?", அவன் விளையாட்டாக அவளைச் சீண்ட, விவியின் முகம் கவலையை அப்பிக் கொண்டது.

"தருண்.... நீங்க செய்வதும் சரியே கிடையாது. இப்படியா செய்வீங்க. உங்களோட நடத்தைதான், எங்களை இப்படி எழுதத் தூண்டுது.....", விவியும் கேட்டாள்.

"நல்லா சொல்லுங்க விவி, நானும் இதையேதான் சொல்லி அலுத்துட்டேன். என்ன சொன்னாலும் காதிலேயே போட்டுக்க மாட்டேன்னு ஒரே அடம்", இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே, அழைப்புமணி மறுபடியும் ஒலித்தது.

அழைப்புமணி ஒலித்தப் பிறகுதான், கண்மணிக்கு, தான் எதற்கு வந்தோம் என்ற நினைவே வந்தது. "ஹையோ

அண்ணா....., லயா இங்கே வந்திருக்காங்க. அதைச் சொல்லத்தான் வந்தேன், இவங்க, அண்ணன்னு சொன்னதில், நான் வந்த விஷயத்தையே மறந்துட்டேன்", தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"கண்மணி, நீ இன்னும் இந்த பழக்கத்தை விடலையா? எவ்வளவு சொன்னாலும் இதை மட்டும் கேட்கவே கேட்காதே", அவன் பேசும் பொழுதே, வாசு உள்ளே வந்தான்.

"கண்மணி.... உன்கிட்டே என்ன சொன்னால், நீ இங்கே வந்து என்ன செஞ்சுட்டு இருக்க? அந்தம்மா என்னன்னா, நான் என்னமோ வேணும்னு அவங்களை உக்கார வச்சிருக்க மாதிரி ஜாடை பேசுது", அவளிடம் வேகமாகச் சாடியவன், பிறகுதான் அங்கே அனைவரும் இருப்பதைப் பார்த்தான்.

தருண் வாசுவைக் கோபமாகப் பார்க்க, விவி சுவாரசியமாகப் பார்க்க, கண்மணியோ அவனை எச்சரிக்கும் பார்வை பார்த்தாள்.

"சார்.... லயா அவங்க வந்து ரொம்ப நேரமாகுது. எவ்வளவு நேரம்தான் அவங்களைக் காக்க வைக்க முடியும் அதனால்தான்....., சாரி சார்", வேகமாகச் சொன்னான்.

"தருண்.... அடுத்தப் பாச மலரா?", விவி கேட்க,

"நீ யாரைச் சொல்லுற?", தருண் புரியாமல் கேட்டான்.

"அதான்..... வந்திருக்க லயாவைத்தான் கேட்டேன். தாயோட வந்திருக்காங்களாம். என்ன விஷயம்?", குறும்பாகக் கேட்டாள்.

அவன் பதில் சொல்லும் முன்பே, "விவி.... என்ன நீங்க, ரூட்டையே மாத்துறீங்க?", இடையிட்டாள் கண்மணி.

"ஹம்..... வாசு... பொண்ணுங்க ஒண்ணு கூடிட்டாங்க. இனிமேல் நாம இங்கே இருந்தால் ரொம்ப டேமேஜ் பண்ணுவாங்க. வா கிளம்பலாம்", அவனை

இழுத்துக்கொண்டு வெளியேறினான். பெண்களின் சிரிப்புச் சத்தம் அவர்களைத் தொடர்ந்தது.

"தருண்..... அவ்வளவு சீக்கிரம் தப்பிக்க முடியுமா?", கண்மணியின் குரல், கேலியாக அவனைத் தொடர்ந்தாலும், அதை அவன் கவனிக்கவே இல்லை.

ஆனால் விவியோ, தொழில் புத்தி தலை தூக்க, ஆர்வமாகக்கண்மணியைப் பார்க்க, "உங்களை நம்பலாமா...?", குரல் இறங்கி மெதுவாகக் கேட்டாள் அவள்.

"என்னைத் தாராளமா நம்பலாம்", உறுதியளிக்கவே, "அட... எனக்குச் சந்தேகமா இருக்கும் விஷயத்தை, நான் எப்படி உங்களுக்கு உறுதியாச் சொல்ல?", கண்மணி அவளைத் திரும்பக் கேள்வி கேட்டாள். ஆனாலும் அவளை, நம்பிக்கையற்ற பார்வை பார்த்தாள் விவி. அவள் பார்வையை உணர்ந்தாலும் கண்மணி எதுவும் சொல்லாமல் அமைதியானாள்.

லிப்டில் இறங்கி வெளியேறினான் தருண். முகத்தில் எதையும் காட்டாமல், லயாவின் எதிரில் சென்று அமர்ந்தான். அவர்களுக்கிடையில் சங்கடமான அமைதி நிலவியது.

லயா, கோபத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு அமர்ந்திருக்க, தெய்வா, எப்படிப் பேசவென்று தெரியாமல் அமர்ந்திருந்தார். தருணும், அவர்கள் பேசுவார்கள் என்று காத்திருக்க, அவர்கள் அருகில் இருந்த பேகும்(bag) அவர்கள் வந்திருக்கும் காரணத்தை அவனுக்குச் சொல்லியது.

தருணின் பார்வை, ஏளனமாக லயாவின் மேல் பாய்ந்தது. அவன் பார்வைக்கான பொருளை உணர்ந்த அவளும், தன்னைத் தானே நொந்து கொண்டாள். எழுந்து செல்லலாம் என்று எண்ணும் வேளையில், "வாசு, லயா மேம் பேகை ரூமில் கொண்டு வை", அவள் செய்யப்போகும் செயல் புரிந்தவனாகச் சொன்னான்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் லயா. "வேற என்ன...? சொல்லுங்க", தெய்வாவிடம் கேட்க, அவளோ வந்த வேலை முடிந்தது என்ற ரீதியில், உடனே கிளம்பிவிட்டாள்.

அவர் சென்ற பிறகும், லயா இருந்த இடத்தைவிட்டு அசையாமல் இருந்தாள். அதைப் பார்த்து அவளை நெருங்கி அமர்ந்தான். "என்ன.... என்னோட பள்ளியறைக்கு, மகாராணியார் நடந்து வருவீங்களா? இல்லை நான் தூக்கிட்டுப் போகவா?", அவன் கேள்வியில், வேகமாக அங்கிருந்து எழுந்தாள் லயா.

கதவு - 12

கண்ணுக்குள் ஒளிந்திருக்கும்

என் காதலை இமைகள் கொண்டு

மறைக்க முயல்கிறேன்.....

வினாடிகூட முடியவில்லை

என் அனுமதியின்றியே

இமைகள் விலகி என்னை

உனக்குக் காட்டிக் கொடுக்கிறதே.....

சாப்பாட்டு அறையில், இரவு உணவுக்காகக் கூடியிருந்தார்கள் அனைவரும். தருண், விவி, கண்மணி, வாசு, லயா அனைவரும் இருந்தாலும், அறையே அமைதியாக இருந்தது.

விவியும் கண்மணியும் பேசத் துவங்கினர். அவர்களுக்குள்ளாகவே பேசிக் கொண்டிருக்க, வாசு, அவர்களையே கவனித்தவாறு இருந்தான். வாசுவின் பார்வையை உணர்ந்தாலும் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை கண்மணி.

"கண்மணி, வாசுவோட பார்வை உங்க மேல சுவாரசியமா பதியுதே?", குரலைத் தாழ்த்தி அவளிடம் சொன்னாள்.

"ம்ச்...., விவி விளையாடாதீங்க. பேசாமல் சாப்பிடுங்க", அவளிடம் சொல்லிவிட்டு, அடிக்கண்ணால், வாசுவைக் கோபப் பார்வை பார்த்தாள்.

அவள் பார்வைக்காகவே காத்திருந்தவன்போல், வலக்கண்ணைச் சட்டென அடித்தான். அவன் செய்கையில் திகைத்து, அவள் வேகமாகத் திரும்பிக் கொண்டு, விவியைப் பார்த்தாள்.

அவள், சாப்பாட்டில் கவனமாக இருப்பவள்போல் இருந்தாள். ஆனாலும், கண்மணி அவளைத் திரும்பித்

திரும்பிப் பார்க்கவே, "நான் எதையுமே பாக்கலை.... போதுமா", அவளும் கண்ணடித்துச் சொல்லவே, விதிர்த்தாள் அவள்.

"விவி.... பேசாமல் சாப்பிடுங்க", சொல்லிவிட்டு, டேபிளின் அடியில் இருந்த வாசுவின் காலை, தன்னால் முடிந்த அளவு, எட்டி ஒரு உதை விட்டாள்.

வலி உயிர் போனாலும், அதை வாங்கிக் கொண்டு, நல்லப் பிள்ளையாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான் வாசு.

"பாவம்.....", விவி, வாசுவைப் பார்த்தவாறே, கண்மணியிடம் சொன்னாள்.

"உங்க பார்வையில் இருந்து எதுவுமே தப்பிக்காதா?", அலுத்துக்கொண்டாள் கண்மணி. அவளிடம் சிரித்து மழுப்பினாள்.

இவர்கள் நாடகம் எதையும் கவனிக்காமல், சாப்பிட்டுக் கொண்டிருந்தான் தருண். பிறகு, லயாவைத் திரும்பிப் பார்க்க, அவளோ, தட்டில் இருந்த அந்த ஒற்றைச் சப்பாத்தியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தருண், சப்பாத்தியைப் பிட்டு, அவள் வாயின் அருகில் கொண்டு சென்றான். அவன் செய்கையில் கோபம் கிளர்ந்தாலும், அதை காட்டும் வழி தெரியாமல், அமைதியாக அமர்ந்திருந்தாள். அங்கிருக்கும் அனைவரும், தன்னை ஏளனமாகப் பார்ப்பதுபோல் உணர்ந்தாள்.

விவியை அங்கே பார்த்தது, அவள் அடி வயிற்றில் பயப்பந்தைச் சுழல விட்டது. விவியைப் பற்றி, சினிமா உலகில் அறியாதவர்கள் யாருமே இல்லை. அதிலும், அவளைப் பார்த்தால், அனைவருக்குமே மனதுக்குள் கொஞ்சம் குளிர் பிறக்கும்.

மற்றவரின் அந்தரங்க விஷயங்களை, நாசூக்காக இரண்டே வரிகளில் கிசு கிசுவாகத் தெரிவிப்பதில், அவள் கில்லாடியாயிற்றே. தருணின் செய்கையில், அவளைத்தான் வேகமாகத் திரும்பிப் பார்த்தாள் லயா.

ஆனால் விவியோ, அங்கே லயா என்ற ஒருத்தி இருப்பதையே கண்டு கொள்ளாமல், கண்மணியை கலாட்டா செய்வதில் முனைப்பாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டாள். அவள் அப்படிக் காட்டிக் கொண்டாலும், ஒரு கண்ணும், ஒரு காதும், லயாவும், தருணும் என்ன பேசிக் கொள்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதிலேயே பதிந்திருந்தது.

தன் யோசனையிலேயே லயா இருந்ததால், தருண் சப்பாத்தியை அவள் வாயின் அருகிலேயே நீட்டிக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவே இல்லை.

"லயா, அப்படி என்ன யோசனை? தருண் சார் சப்பாத்தியைத் தருவதைக் கூடக் கண்டு கொள்ளாமல்....., முதல்ல அதை வாங்குங்க", விவி சாதாரணமாகச் சொன்னாள்.

அவள் சாதாரணமாகச் சொன்னாலும், தருண்மேல் கோபத்தில் இருந்தவளால், அதைச் சாதாரணமாக எடுக்க முடியவில்லை. அதிலும், எதிரிலிருப்பவள் உளவாளி என்று சொல்லும் பொழுது, உறவு எங்கே மலரும் அங்கே.

"எனக்குக் கை நல்லாத்தான் இருக்கு. யாரும் எனக்கு ஊட்ட வேண்டாம்", வேகமாகச் சொன்னாள்.

"அட... புது இடம், கொஞ்சம் செட் ஆக நாள் ஆகும், அதனால் தான் அவர் உங்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கிறார். அதை நீங்க புரிஞ்சுக்காமல்.....".

"ஆமா ஆடு நனையிதேன்னு ஓநாய் அழுத கதையை, நானும் கேட்டிருக்கிறேன்", லயாவால், எவ்வளவு முயன்றும் தன்னைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. எனவே, வேகமாக பதில் சொன்னாள்.

"விவி....., குதிரைக்குக் கடிவாளம் போட்ட மாதிரி, அவங்க பார்வை, ஒரே நேர்கோட்டைப் பாத்துட்டு இருந்தால், அவங்களும் பாவம் என்னதான் செய்வாங்க? கண்கட்டை அவிழ்த்துடுவோம்.....", அவன், லயாவை

இமைக்காமால் பார்த்துச் சொன்ன விதத்தில், லயாவின் அடி வயிற்றில் பயப்பந்து சுழன்றது.

சூடாக அவனுக்கு பதில் சொல்ல அவளுக்கும் ஆசைதான். விவியின் முன்னால் அவளுக்குப் பேசத் தயக்கமாக இருந்தது. அதைவிட, அவள் அங்கே இருப்பதில், ஏதாவது விவகாரம் இருக்குமோ என்று பயந்தாள்.

தாய் வரும்பொழுது அவள் அங்கே இருக்கவில்லை. அப்படியே இருந்து, தெய்வாவின் பார்வையில் விழுந்திருந்தால் தெரிந்திருக்கும்....., இப்பொழுது, தான் எதையாவது வாயை விட்டு மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று அமைதியானாள்.

அதைவிட, தாய் இப்படிச் செய்ததால் தானே, அவள் இவர்கள் முன்பு இப்படிக் கூனிக் குறுகி அமர்ந்திருக்கவேண்டி வந்தது. என்னதான் அவர்கள் அவளிடம் இயல்பாக நடந்துக்கொண்டாலும், தான் அவன் வீட்டிற்கு வந்திருக்கும் விதம்....., அவளால் கற்பனையே செய்து பார்க்க முடியவில்லை.

அங்கிருப்பவர்கள், மனதுக்குள் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இவர்கள் வெளியே பேசுவது நிஜமா? இல்லை மனதுக்குள் எதையாவது வைத்துக் கொண்டு பேசுகிறார்களா? என்பதை எண்ணியே குமைந்து போனாள்.

நியாயமாக இந்த நிலைக்கு ஆளாக்கிய தன் தாயைத்தான் அவள் சாடியிருக்க வேண்டும். ஆனால் ஷெட்டிக்கு நெருக்கடியைக் கொடுத்து, தாயை சம்மதிக்க வைத்தது தருண்தான் என்று அவள் எண்ணவே, அவளது கோபம் அனைத்தும் தருண் மேலே இருந்தது.

அவளது கோபத்தைக் கண்டுக்கொள்ளாமலே, "வாசு, நாளைக்குக் கேரவனில், லயாவும் வருவா. அதற்கான ஏற்பாடெல்லாம் சரியா செஞ்சுடு", தருண் கட்டளையை இட்டான்.

கண்மணி, அதை அப்பொழுதே வேண்டாம் என்று தடுக்க நினைத்தாள். ஆனால், பொதுவில் அவனிடம், அவனது கருத்தை மறுத்துப் பேசுவது, அவனுக்கு சுத்தமாகப் பிடிக்காது என்பதால் பேசாமல் இருந்தாள்.

லயாவோ, தலைக்குமேல் வெள்ளம் போயாகிவிட்டது, இனி, ஜாண் போனால் என்ன? முழம் போனால் என்ன என்ற மன நிலையில் இருந்தாள்.

"விவி, இன்னைக்கு நீ கண்மணியோட படுத்துக்கோ, எனக்கு இன்னைக்கு கம்பெனிக்கு ஆள் இருக்கு", நமுட்டுச் சிரிப்பு சிரித்தவாறே சொன்னான்.

"அங்கிருந்த பெண்கள் மூவருமே அவனை முறைத்தார்கள். அவர்கள் அனைவரும் முறைக்கவே, "கண்மணி, விவி முறைப்பதிலாவது கொஞ்சம் நியாயம் இருக்கு. நீ ஏன்?", குறும்பாகக் கேட்டான்.

விவி, வேகமாக அவள் இடத்தில் இருந்து எழுந்து வந்து அவன் தலையில் குட்டினாள். அவளது இந்த செய்கையை அங்கிருந்த யாருமே எதிர் பார்க்கவில்லை. வாசு உறைந்தே போனான். இதுவரை, தருணைத் தொட்டுப் பேசவே யாரும் முனைந்ததில்லை, ஆனால் அவள் குட்டியது.....,

சாப்பாட்டை மறந்து, தருண்அவளைப் பார்த்து, "ஹேய் விவி, என்னை விட்டுத் தனியா இருக்க முடியலன்னா சொல்லு, என் பெட்ரூம் எத்தனைபேர் வந்தாலும் தாங்கும்", அவன் கண்ணைச் சிமிட்டிச் சொன்ன விதத்தில், விவி இன்னும் கடுப்பானாள்.

"டேய்..... உன் விளையாட்டுக்கெல்லாம் நான் ஆள் இல்லை. முதல்ல இப்படிப் பேசுவதை நிறுத்து. இந்த வாய் தாண்டா, என்னை உன் பின்னாடியே சுத்த வச்சுது. கடைசியில் எல்லாமே....., இதில் உனக்கு அப்படி என்ன கிடைக்குது?", ஆதங்கமாகக் கேட்டாள் விவி.

"நல்லா கேளுங்க விவி....., நானும் இவன்கிட்டே கேட்டுக் கேட்டு ரொம்பவே அலுத்துட்டேன்", கண்மணி இடையில் புகுந்தாள்.

இவர்கள் பேசப் பேச, லயாவிற்கு, தருண்மேல் கொஞ்சம் நஞ்சம் இருந்த மதிப்பும் பாதாளத்துக்கு இறங்கியது. ஆனால், இந்த அனைத்துப் பேச்சுகளிலும் இருந்த உண்மையை, பொதிந்திருந்த மறை பொருளை, அவள் உணரவே இல்லை.

பேசியவர்களும் அதை தெளிவாக பேசவில்லை. "விவி... நீ இங்கே வந்த இந்த ஒரு வாரத்தில், இதே கேள்வியை ஆயிரம் விதத்தில், நீயும் மாத்தி மாத்திக்கேட்டுட்ட. அதுக்கு, நானும் ஐந்தாயிரம் முறை விளக்கம் சொல்லிட்டேன். இன்னும் உனக்குப் புரியலன்னா நான் எதுவும் செய்ய முடியாது", அவன் குரலில் கோபம் கொப்பளித்தது.

"என்ன பொல்லாத விளக்கம்....., நீ வெளியே ஆயிரம் பேருக்கு ரோல் மாடலா இருக்க. உன்னைப் பற்றிய இந்தத் தவறான கருத்துக்கள் எல்லாம்.....",

"ஜஸ்ட் எனஃப்(enough)..... விவி. என்னைப் பாத்துக்க எனக்குத் தெரியும். என் கூட இருப்பவர்களுக்கு, என்னோட நடிப்பவர்களுக்கு, என்னைப் பத்தி நல்லாவே தெரியும். இதைத் தவிர, வேற யாருக்கும் நான் விளக்கம் சொல்லத் தயாரா இல்லை", விவியைப் பேச விடாமல் சொன்னான்.

கேட்டுக் கொண்டிருந்த லயாவிற்கு ரத்தம் கொதித்தது. 'என்னமோ பெரிய உத்தமன் மாதிரி, வேஷத்தைப் பாரேன்', மனதுக்குள் பல்லைக் கடித்தாள் அவள்.

இன்னும் விவாதம் செய்யப்போன விவியை, கையைப் பிடித்துத் தடுத்தாள் கண்மணி. என்னவென்று திரும்பிப் பார்த்த அவளை, வேண்டாம் என்று கண்ஜாடை காட்டினாள். அதைப் பார்த்த தருண், சிரித்துவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

செல்லும் முன்னர், "கண்மணி....., லயாவை ரூமுக்கு அழைச்சுட்டு வா", சொல்லிவிட்டுச் சென்றான்.

'ஆமா.... பஸ்ட் நைட்க்குப் போறான்..., நாத்தனார், நான் கொண்டுபோய், அவளை அவன் ரூமில் விடணும்', பல்லைக் கடித்தாள் அவள்.

"கண்மணி...., அவன் என்ன சொல்லிட்டுப் போறான்.....?", விவி புரியாமல் கேட்டாள்.

கேள்வி கேட்ட அவளை, தன்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு முறைத்தாள். "கண்மணி.... சந்தேகம் தானே கேட்டேன்", இதழ் ஓரத்தில் எழுந்த சிரிப்பை அடக்கியவாறு, கேட்டாள் விவி.

"ம்ம்ம்....., முதல்நாள் நீங்க இருந்த ரூமுக்கு, லயாவைக் கொண்டுபோய் விடச் சொல்லுறான்", அவளும் மறைமுகமாகத் தாக்க, வாய்விட்டுச் சிரித்தாள் விவி.

இவர்களின் சிரிப்பை, வெறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் லயா. அவள் பார்வையை உணர்ந்தும், இவர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. அதுவும் அவளுக்கு இன்னும் எரிச்சலாக இருந்தது.

'இந்த விவி, தருணைப் பற்றி எவ்வளவு கிசு கிசு எழுதி இருக்கிறாள், இறுதியில், அவளும் அவனுடன் இருந்தவுடன் அவையெல்லாம் மறைந்து விட்டதா? அப்படியென்ன அவனிடம் மந்திர சக்தி இருக்கிறது? அதை நானும் பார்க்கவேண்டும். இவர்கள் அனைவரைப்போல் நானும் மாறி விடுவேனா? சே.... சே...., நான் அப்படியொன்றும் மாற மாட்டேன்', தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டாள்.

அவள் யோசனையைக் கலைத்தார்கள் கண்மணியும், விவியும். "லயா... நீங்க பயப்படும் அளவுக்கு எதுவுமே இல்லை. கதவைத் திறந்துப் பார்த்தால் தானே தெரியும், அந்தப் பக்கம் இருப்பது, அழகான பையனா, இல்லை சிங்கமா என்று", விவி கேட்டாள்.

"ஹேய் விவி, அது அழகான பொண்ணு இல்ல", தன் சந்தேகத்தைக் கேட்டாள் கண்மணி.

"இப்போ அது ரொம்ப முக்கியம். இவளும் பொண்ணு, அங்கே இருப்பதும் பொண்ணுன்னா தப்பாயிடாது, அதான் நமக்குத் தக்கவாறு அதை மாத்தினேன்", விவி குறும்பாகச் சொல்ல, கண்மணி தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"சரி, நீ உன் நாத்தனாரை அனுப்பிட்டு வா. நான் உன் ரூமில் இருக்கேன்", சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டாள். போகும் அவளை, ஒன்றும் சொல்ல முடியாமல் முறைத்துவிட்டு, லயாவை நெருங்கினாள்.

லயா, இன்னுமே அந்த ஒற்றைச் சப்பாத்தியை, சாப்பிட்டு முடித்திருக்கவில்லை. "லயா.... என்ன, ஒரு சப்பாத்தி கூட சாப்பிடலை?", அக்கறையாகக் கேட்டாள்.

"ஒரு பொண்ணா, என்னோட மனசு உங்களுக்குப் புரியவே இல்லையா கண்மணி. எனக்கு எதுவுமே பிடிக்கலை. அங்கே போவதை நினைச்சாலே, வாந்தி வர்ற மாதிரி இருக்கு. என்னால், எங்க அம்மாவை எதிர்த்துப் பேச முடியலை. நீங்களாவது, கொஞ்சம் தருண் கிட்டே சொல்லுங்களேன், நான் உங்களோட தங்கிக்கவா?", அங்கே யாரும் இல்லாமல் போகவே, தன் மனதில் இருப்பதை முதல் முறையாக மூன்றாம் நபரிடம் இறக்கி வைத்தாள்.

கண்மணியை விட நான்கு வயது இளையவள் லயா, தாய்மடி தேடும் பிள்ளையாக மறுகி விழிக்கும் லயாவை, தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். தன் மனதில் இருக்கும் பாரம் கரையுமட்டும் அழுது ஓய்ந்தாள் லயா.

அவள் அழுது ஓயவே, கண்மணி அவள் தலையை நிமிர்த்தினாள். "லயா.... இங்கே பாரு, இங்கே உனக்கு எந்தச் சங்கடமும் நடக்காது. நீ சின்னப் பிள்ளை, தருண் ரொம்ப நல்லவன். அவன்கிட்டே மனசு விட்டுப் பேசு, உன்னை இங்கே, தருண் கட்டாயப்படுத்தி அழைச்சுட்டு வரலை. உங்க அம்மாதான் கொண்டு வந்து விட்டுட்டுப் போனாங்க.

எப்பவுமே தருண், யாரையும், எதற்கும், கட்டாயப்படுத்துவது கிடையாது. அதனால் தைரியமா இரு. உனக்குச் சாப்பிடப் பிடிக்கலன்னா வேண்டாம் வா", அவளை அழைத்துக்கொண்டு மாடி ஏறினாள்.

கொஞ்சம் மனம் விட்டு அழுது ஓய்ந்ததாலோ? இல்லை, கண்மணியின் அறிவுரையைக் கேட்டதாலோ, லயா கொஞ்சம் தெளிந்தாள். பலியாடுபோல் அவள் பின்னால் சென்றாள்.

வீட்டின் அழகும், விஸ்தாரமும், லயாவின் கருத்தில் பதியவே இல்லை. அங்கிருக்கும் இருபது படிகள் ஒவ்வொன்றையும் கடக்கும் பொழுது, காலில் இரும்புக் குண்டை வைத்துக் கட்டியதைப்போல், கால்களை அசைக்கவே முடியாமல் தூக்கி வைத்து நடந்தாள்.

படிகளைக் கடந்து, அவன் அறையின் முன்னர் நின்ற பொழுது, பழனிப் படிக்கட்டுகளையே கடந்து முடித்தவள்போல் ஓய்ந்து போனாள். கண்மணி, அழைப்புமணியை அழுத்த, உள்ளே வீறிட்ட அழைப்புமணியின் ஓசை, அவள் மண்டைக்குள் இடியாய் இறங்கியது.

அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்கண்மணி. அறையோ, ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையை விட அழகாக இருந்தது. காலை, அவன் அறைக்குள் தூக்கி வைக்கும் முன்னர், எங்கே மயங்கிச் சரிந்துவிடுவோமோ என்று அஞ்சினாள் லயா.

திரைச்சீலைக்கு அந்தப் பக்கம், தருண் தனது ஐபேடில் கேம் விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. இவர்கள் வந்ததைக் கூட கவனிக்கவில்லை அவன்.

"தருண்.... என்ன கேமா? சரி நான் போறேன்", லயாவை விட்டுவிட்டுச் செல்லத் திரும்பினாள் கண்மணி.

லயாவோ, சட்டென அவள் சுடிதார் துப்பட்டாவை இழுத்து நிறுத்தினாள். மிரட்சியாக அவளைப் பார்த்தாள். கண்மணி உருகியே போனாள். தெய்வா, பொத்திப் பொத்தி வளர்த்திருந்த விதத்தால், அவளுக்கு இவை ஒன்றும் புரியவில்லை, ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை என்பது புரிந்தது.

லயாவின் செய்கையைப் பார்த்த தருணுக்குமே, மனம் வலித்தது. இப்படி ஒரு குழந்தையை, அவள் தாய், நடிப்பு உலகில் இறக்கி விட்டுவிட்டாளே, என்று தெய்வாவின் மேல் ஆத்திரமே வந்தது அவனுக்கு.

இந்த நொடியில், லயா அவன் மனதுக்குள் முழுதாக நுழைந்து, அவன் மனச் சிம்மாசனத்தில் ராணியாகக் குடியேறினாள். அதை அவனும் முழுதாக உணர்ந்தான். அவன் கண்களில் நிரம்பிய கனிவை, காதலை, கண்மணி கண்டு கொண்டாள்.

இனிமேல் லயாவைப் பற்றிய கவலை, தனக்கு வேண்டாம், அனைத்தையும் அவனே பார்த்துக் கொள்வான் என்று எண்ணினாள். மென்மையாக லயாவின் கையை அழுத்தி விடுவித்தாள். கண்மணியின் கண்களில் இருந்த நிம்மதி, கனிவு, லயாவையும் தாக்க, கைகளை விலக்கிக் கொண்டாள். நிம்மதியாக அங்கிருந்து வெளியேறினாள் கண்மணி.

லயா, அங்கிருந்து ஒரு அடி கூட நகராமல், வெறித்த பார்வையாக தரையைப் பார்த்தவாறு நின்றாள். தருண் அவளை நெருங்கினான். அவன் நெருங்குவதை உணர்ந்து, மிரண்டு பின் வாங்கினாள்.

இதுவரை இருந்த தைரியம் மொத்தமும் வடிந்ததுபோல் உணர்ந்தாள் அவள். அவளிடமிருந்து, கோபத்தை எதிர் பார்த்த தருண், கொஞ்சம் திகைத்தான். எவ்வளவோ பேரை சமாளித்த அவனுக்கு, இவளை எப்படிச் சமாளிக்கவென்று தெரியவில்லை.

"என்ன லயா? அப்படியே பட்டாசா பொரிவ, இப்போ என்ன இவ்வளவு பயம்?", அவளைச் சீண்டினான்.

அவளுக்கு நா உலர்ந்துபோனது. நாக்கை அசைக்க கூட முடியவில்லை. அந்த ஏசி அறையிலும் வியர்த்து ஊத்தியது. அவள் நிலை புரிந்து, அங்கிருந்த தண்ணீரை எடுத்துக் கொடுத்தான். மறுப்பே இல்லாமல் வாங்கி, முழு மூச்சாகக் குடித்தாள்.

அவளது தைரியம் மொத்தமும், தெய்வாவிடம் இருந்தது. கேமராவுக்கு முன்னால் நின்று, அழு என்று சொன்னவுடன் அழவும், சிரி என்று சொன்னால் சிரிக்கவும், கோபப்படச் சொன்னால் கோபப்படவும், காதலிக்கச் சொன்னால் காதலிக்கவும் மட்டுமே, அவளுக்குத் தெரியும்.

கேமராவுக்கு வெளியே, அவளாக அவள் இருந்ததே இல்லை. முதல் முறையாக, தாயின் சிறகை விட்டு விலகி, பறக்கக் கற்றுக்கொள்ளும் பறவையின் நிலையில் இருந்தாள் அவள். ஆனால், பறவைகள் கூட தங்கள் குஞ்சைப் பாதுகாக்க உடன் செல்லும், இங்கே அவள் தனியாகவல்லவோ இருந்தாள்....., அதுவே அவளை பலவீனமாக்கியது.

இப்பொழுது என்ன செய்ய? இவனை அடிக்க வேண்டுமா? இல்லையென்றால் அழ வேண்டுமா? ஒரு படத்தில் வில்லனிடம் இருந்து தப்பிக்க, அவளை ஓடச் சொன்னார்கள். அதேபோல் இப்பொழுது கதறியவாறு ஓட வேண்டுமா? என்ன செய்யவேண்டும்? புரியாமல் திகைத்தாள்.

முதல் முறையாகச் சிந்தித்தாள், தான் இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று யோசித்தாள். ஆனால் எதிரில் அமர்ந்து தன்னையே துளைக்குமாறு பார்க்கும் அவன் பார்வையின் வீச்சில், யோசிக்க கூட முடியவில்லை அவளால்.

கதவு - 13

வானவெளியில் விட்டுச்

சிறகடிக்கிறேன் என்று

நான் நினைக்க.....

என் காலில் கட்டப்

பட்டிருக்கும் கடிவாளத்தின்

மறுமுனை - உன் கையில்

இருப்பதை அறியவே இல்லை நான்.....

அவள் திகைப்பை உணர்ந்தவன்போல், அவளை தோளைப் பிடித்து அழைத்துவந்து, சோபாவில் அமர வைத்துவிட்டு எதிரில் அமர்ந்தான். அவனது இந்த செய்கையைக் கூட உணரும் நிலையில் அவள் இல்லை.

லயாவின் எதிரில் அமர்ந்து, அவள் முகத்தில் நொடிக்கொருதரம் மின்னி மறையும் உணர்வுகளை, உள்வாங்கிக் கொண்டிருந்தான் தருண். இறுதியில், அவள் முகத்தில் மிஞ்சியது என்னவோ குழப்பம், குழப்பம், குழப்பம் மட்டுமே.

என்னவோ இவன் கொஞ்சம் நல்லவனாக இருக்கப்போய், அமைதியாக அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.

இதுவே, வேறு யார் கையிலாவது சிக்கி இருந்தால் என்னவாகி இருப்பேன். அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது, இப்படி ஒரு சூழலுக்கு தன்னைத் தள்ளியவனே இவன் தானே. இதுவரை, கோபமாக மட்டுமே இதை யோசித்தவள், நிஜமாகவே தனக்கு இப்படி ஒரு நெருக்கடி வந்தால் தான் என்ன செய்வோம்?

அதை எப்படி சமாளிப்போம் என்று சிந்திக்கத் துவங்கினாள். ஆனால் எவ்வளவு யோசித்தாலும், தாய்

தன்னை அப்படி ஒரு சூழலுக்கு அனுமதிக்க மாட்டார் என்று அவரிலேயே சென்று முடிந்தது.

'அப்படியென்றால், நான் என் அம்மாவை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு சுழல்கிறேனா? எனக்கென்று சிந்திக்கவே தெரியாதா? இன்னும் எத்தனை நாள் இப்படியே இருக்க முடியும்?', யோசிக்க, யோசிக்க, அவளுக்குத்தலையை வலித்ததுதான் மிச்சம்.

இந்த நிமிடம், தன் நிலை, தான் இருக்கும் சூழல், பூதாகரமாக எழுந்து கண்முன் விரிந்தது. பிறகுதான் வேகமாகத் தருணைப் பார்த்தாள். இதுவரை அமைதியாக அவள் முகத்தையே ஆராய்ந்தவன், அவள் தன் முகத்தைப் பார்க்கவும் மென்மையாகச் சிரித்தான்.

அவள் இதழ்களிலும் மென்னகை. எப்பொழுதும் அவனை, கோப முகமாகவும், சீண்டல் தனத்துடனும், தன்னை எரிச்சல் மூட்டுபவனுமாகவே பார்த்துப் பழகியது, இந்த அவனது சிரித்த முகம், திகைப்பாக இருந்தது.

இந்தச் சிரிப்பும், தன்னைத் தீண்டத்தானோ, என்று நினைத்தவுடனே, அந்தச் சிரிப்பு அவள் இதழ்களில் அப்படியே உறைந்தது. அதையும் ஒரு பார்வையாளனாகப் பார்த்தான் தருண்.

"என்ன.... அம்மையார் ரொம்ப யோசிச்சீங்க போல? இப்போ என்ன முடிவு எடுத்து இருக்கீங்க? யோசித்ததில், எதையாவது கண்டு பிடிச்சீங்களா?", சீண்டலா?, கேலியா?, அக்கறையா? இன்னதென்று புரியாத பாவனையில் அவளிடம் கேட்டான்.

அவன் குரலில் இருந்து எதையும், அவளாலும் பிரித்தறிய முடியவில்லை என்றாலும், அவன் கண்கள் அவளை ஈர்த்தது. கொஞ்சம் தன்னிலையை அடைய உதவியது. அசைய மறுத்த நாவை மெதுவாக அசைத்துப் பார்த்தாள்.

கண்மணி சொன்னவை அனைத்தும், மனதில் ஓடியது. "தருண் நல்லவன், அவனிடம் மனம் விட்டுப் பேசு, உன்னை, அவன் கட்டாயப்படுத்தி அழைத்து வரவில்லை. உனக்குச்

சங்கடமான எதுவும் நடக்காது. உன் அம்மாதான் உன்னை இங்கே கொண்டுவந்து விட்டார்கள்', என அவள் சொன்னவற்றை நினைத்துப் பார்த்தாள்.

கொஞ்சம் நம்பிக்கை வந்தது அவளுக்கு. ஆனாலும் முழுதான நம்பிக்கை வரவில்லை. எதற்கும் பேசிப் பார்க்கலாம் என்று நினைத்தாள். அவளுக்கு வேறு வழியும் இருக்கவில்லை. அவள் மனம், இப்பொழுதும் குழந்தைத்தனமாக இருந்தாலும், குட் டச், பேட் டச் எவை என்பதில், அவளுக்கு சந்தேகம் இருந்ததில்லை.

இதற்குமுன் அவளுடன் ஒரு படத்தில் நடித்த நாயகன், நெருக்கமான காட்சிகளில், தேவையில்லாமல் அவள் அங்கங்களை வருடுவது, அவளுக்குத் தெரிந்து, அதைத் தாயிடம் சொன்ன பொழுது, "சீனில் இதெல்லாம் எதார்த்தமாக நடப்பதுதான், விட்டுவிடு", என்று சொன்னதை, இப்பொழுது நினைத்தாலும் உடல் கூசும்.

அது மட்டுமல்ல, அந்த நாயகனின் பார்வை கூட அவ்வளவு கண்ணியமாக இருந்தது இல்லை.

அதை நினைத்து, கொஞ்சம் அருவருப்படைந்தாள் இப்பொழுது. ஆனால், தருணின் பார்வை எந்த நேரத்திலும் அவளுக்கு அருவருப்பைத் தந்ததில்லை. அவன் பார்வையை நேராகச் சந்தித்தாள். எதையோ தேடும் ஆர்வம் அவள் விழிகளில்.

அவள் பார்வை, ஆர்வமாகத் தன் முகத்தில் பதிவது கண்டு, ஒற்றைப் புருவம் தூக்கி, என்னவென்று பார்வையாலேயே கேட்டான். அவன் செய்கையிலும் பார்வையிலும், இமைகள் பட படக்க, பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவள் பார்வையில், பயம், குழப்பம், ஆகியவை விலகியதை உணர்ந்த தருண், அவள் எதிரில் இருந்து எழுந்து, அவள் அருகில் அமர்ந்தான். கொஞ்சம் திகைத்தாலும், அவன் செய்கையை, பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்கும் ஆசைதான், 'பார்த்தாயா நான் உன்னிடம் சவால் விட்டதுபோல், உன் தாயே உன்னை என்னிடம் அனுப்பிவிட்டாள்', என்று கூற. ஆனால், லயாவின் மிரட்சி அவனைத் தடுத்தது.

எவ்வளவு நேரம்தான் பேசாமலே அமர்ந்திருக்க முடியும், "லயா..., என்ன, ரொம்ப யோசிக்கிற மாதிரி இருக்கு, ஆனால், நான் கேட்டால் பதிலே சொல்லாமல் இருக்க?", மீண்டும் கேட்டதையே கேட்டான்.

தன் முன் இருக்கும் அவள், ஒரு வளர்ந்த குழந்தையாகவே அவனுக்குத் தெரிந்தாள். அவள் உடலின் வளர்ச்சி, அவள் மனதுக்கு இல்லை, என்று அவன் கணித்து வைத்திருந்தான்.

அவன் கணிப்பு சரியே என்பதுபோல், "நீங்க என்னை.... ஒரு மாதிரி தொடுவீங்களா?", தன் யோசனையில் இருந்ததால், கேள்வியும் அப்படியே வந்தது அவளிடமிருந்து.

"உன்னை யார் அப்படித் தொட்டது?", கேள்வி சுள்ளென்று வந்து விழுந்தது.

"அதான்.... என்னோட, லாஸ்ட் மூவி நடித்தானே.....", சின்னப்பிள்ளைத் தனமாகச் சொன்னாள்.

"அவனை, அங்கேயே ஓங்கி ஒரு அறை விட்டியா நீ?", அவள் அப்படிச் செய்திருக்க மாட்டாள், என்று தெரிந்தே கேட்டான்.

"நான் என் அம்மாகிட்டே சொன்னேன்", வேகமாகச் சொன்னவள், இப்பொழுது அவள் செய்கையை நினைத்து, அவளுக்கே வெட்கமாக இருக்க, தலையைக் குனிந்துகொண்டாள்.

அவளைக் கோபமாகத் திட்டப் போனவன், அவள் செய்கையின் தவற்றை, அவள் உணர்ந்து விட்டதை, அவளது குனிந்த தலையே உணர்த்த, தன்னை அடக்கிக் கொண்டான்.

"நான் முதல்ல கேட்டதுக்கு, நீங்க பதில் சொல்லவே இல்லையே?", அவள் அதைத் தெரியாமல்

விடப்போவதில்லை என்பதுபோல் கேட்டாள்.

"ம்ச்....., இவ்வளவு நேரம் உன்னைத் தொட்டேனா? இல்லல்ல? அப்போ இனிமேலும் தொடமாட்டேன்.... போதுமா?", உறுதி கொடுத்த பிறகே சரியானாள்.

"இப்போ சொல்லு, என்னோட இடத்தில் என்னைத் தவிர வேற யாராவது இருந்தால் நீ என்ன செஞ்சு இருப்ப?", அவளையே கூர்மையாகப் பார்த்துக் கேட்டான்.

"தெ..... தெரியலை.....", அவள் குரல் தேய்ந்து மறைந்தது.

"இது என்ன பதில்? உன் அனுமதி இல்லாமல், உனக்கு விருப்பம் இல்லாமல், இப்படி ஒரு விஷயம் நடந்தால், என்ன செய்வன்னு கேக்குறேன், சிம்ப்பிளா தெரியலன்னு சொல்லுற?

உன்னை இங்கே இப்படி அனுப்பினது உன் அம்மா. அவங்க கிட்டே நீ உன் விருப்பமின்மையை சொல்லவே இல்லையா? நான் இப்போ, அத்துமீறிஉன்னைத் தொட்டால்....., அப்படியே.....", வேறு என்ன சொல்லியிருப்பானோ, அவள் அதிர்ந்த முகம் பார்த்து பாதியில் நிறுத்தினான்.

தன் கோபத்தை, கட்டுக்குள் கொண்டுவர மிகவும் திணறினான். லயாவும் அமைதியாக இருந்தாள்.

பின்னர் அதை விடுத்து, "தருண்....., நீங்க....., ஷெட்டியை எங்க வீட்டுக்கு அனுப்புனீங்களா?", இப்பொழுது, தான் ஏன் இதைக் கேட்டோம் என்பது, அவளுக்கே புரியவில்லை.

தருண், ஒரு நிமிடம் புருவத்தைச் சுருக்கிவிட்டு, "ஷெட்டியை, நான் எதுக்கு உங்க வீட்டுக்கு அனுப்பணும்?", அவ்வளவு எரிச்சலிலும், யோசனையாகக் கேட்டான்.

"பின்ன... நீங்க அனுப்பாமலா, அவன் எங்க வீட்டுக்கு வந்தான்? அது மட்டுமில்லாமல், இருபத்தைந்து லட்சம் பேரம் பேசி, அவனோட கெஸ்ட் ஹவுசுக்கு வரச் சொன்னான். அதனால் தானே, என்னை எங்க அம்மா,

இங்கே உங்களிடம் அனுப்பினாங்க", படபடவெனப் பொரிந்தாள்.

இவ்வளவு நேரம், அவன் அனுசரணையாகப் பேசியது, அவளுக்குக் கொஞ்சம் தைரியத்தைத் தந்தது.

"கொஞ்சமாவது மண்டையில் களிமண்ணு இருந்தால், நீ கேக்குறதில் இருக்கும் அபத்தம், உனக்கே புரியும். அப்படியே ஓங்கி அறைஞ்சேன்னா தெரியுமா.....? இவ்வளவு நேரம் நீ என்னோட இருக்க, இன்னுமா உனக்கு, என்னைப் பத்தித் தெரியலை?

உன்கூட எல்லாம் பேசிப் பிரயோஜனமே கிடையாது. உன் அம்மாவுக்குப் புரியிறது, உனக்கு ஏண்டி புரிய மாட்டிக்கு", அப்படியே அவளை ஓங்கி ஒரு அறை விட்டால்தான் என்ன என்று யோசித்தான்.பிறகு, எங்கே அவளை ஓங்கி அறைந்துவிடுவோமோ என்று பயந்து, அவள் அருகில் இருந்து எழுந்து சென்றான்.

அவள் குழந்தைத்தனமானவள், டீனேஜ் வயதில் இருப்பவள், பக்குவமில்லாதவள் என்று அவனுக்குத் தெரிந்தாலும், தன் பெண்மையை காக்க முயலாமல், அதற்கும் "என்ன செய்யவென்று தெரியவில்லை, என் அம்மாவிடம் சொல்லுவேன்" என்று தாயின் முந்தானையில் ஒளிய நினைக்கும் அவளை நினைத்தால், எரிச்சல் வருவதை, தடுக்க முடியவில்லை அவனுக்கு.

இப்பொழுதே, அவளை தைரியசாலியாக, தன் முடிவை, தானே எடுப்பவளாக மாற்றி விட்டுத்தான், மறுவேலை என்பதுபோல் இருந்தது அவன் செய்கை.

அதில் இருக்கும் அபத்தம் அவனுக்கே புரிந்தது. ஆனால்....., தான் விரும்பும் பெண், தன் வாழ்க்கையைப் பற்றிய முடிவை, அவளே எடுக்க வேண்டுமென்று விரும்பினான்.

அவன் இவ்வளவு பேசி, விலகிச் சென்ற பிறகுதான், அவள், தான் சொன்னதில் இருந்த அபத்தங்களைப் புரிந்துகொண்டாள்.

முதலாவது, தன் தாய், இதுவரைத் தன்னுடன் நடிக்கும் நாயகர்களுடன், பேசக் கூட அனுமதிக்க மாட்டார். அப்படிப் பட்டவள், இன்று, தானே தருணிடம் கொண்டுவந்து விட்டுச் சென்றாள் என்றால்....., அதில் கண்டிப்பாக ஏதாவது உள்நோக்கம் இருக்க வேண்டும்.

தருணைப் பற்றி, அவளுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது, பணம் கொடுத்து, தன்னை இங்கே வரச் சொன்னவனாக இருந்தால், இவ்வளவுநேரம் அவன் அமைதியாக இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இன்னொரு உண்மையும் அப்பொழுதுதான் அவளுக்கு உறைத்தது, ஷெட்டி உண்மையாகவே அவள்மேல் கண் வைத்துள்ளான். அதனால் தான், தாய், தருணைப் பற்றி முழுதாக அறிந்திருந்ததால், அவளைத் தைரியமாக இங்கே அனுப்பி வைத்திருக்கிறாள். இனிமேல், ஷெட்டியால் ஏதாவது பிரச்சனை வருவதாக இருந்தாலும் அது தருணிற்குத்தான் வரும், என்று கணக்கும் போட்டுள்ளார் என்று.

ஆனாலும், அதை விட்டுவிட்டு, "இந்த விவி எதுக்கு இங்கே இருக்காங்க. அவங்க கையில், கொஞ்சம் காயமா இருந்துதே. அவங்களுக்கு இங்கே என்ன வேலை?", அவளுக்குத் தெரிந்தே ஆகவேண்டுபோல் கேட்டாள் .

அவள் இவனிடம் உரிமையாக பேசியது, மனதுக்குள் ஒருவிதப் பொறாமையை இப்பொழுது அளித்தது. அதை உணர்ந்தவன் போல், "நேத்துவரை, அவதான் எனக்குக் கம்பெனி கொடுத்தாள். இப்போ நீ வந்துட்டியா, அதான் அவளை, கண்மணியோடு அனுப்பிட்டேன்", கேலியில் இறங்கினான்.

லயாவின் கண்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தியது. "நீ...நீ....ங்க என்ன சொல்லுறீங்க? நேத்துவரை உங்களுக்குக் கம்பெனி கொடுத்தாங்களா? அவங்க உங்களைப்பற்றி, பத்திரிகையில் எல்லாம் தப்பா

எழுதுறாங்களே. நம்ம படம் துவங்கும் போது கூட, என்னமோ எழுதி இருந்தாங்க.

எங்க அம்மா என்னை, அதையெல்லாம் படிக்கவே விட மாட்டாங்க. அப்படிப் படித்தால், நான் மனசு கஷ்டப்படுவேன்னு சொல்லுவாங்க. உங்களால எப்படி அவங்களோட பேச முடியுது. உங்களுக்கு அவங்க மேல கோபம் இல்லையா?", பேச்சுத் துணைக்குக் கிடைத்த புது தோழியிடம், அவளைப்பற்றி விசாரிப்பவள் போல் கேட்டாள்.

"உனக்கும்தான் என்னைப் பிடிக்காது. என்னைப் பார்த்தாலே மூஞ்சியைத் தூக்கி வச்சுப்ப, நடிக்க வராது. இப்போ... உனக்கு என்னைப் பிடிக்கலையா, அப்படித்தான் அதுவும்", அவளுக்குப் புரியவைக்க முயன்றான்.

"அ....அது..... உங்களைப்பற்றித் தெரியாமல் இருக்கும்போது. இப்போதான், எனக்கு உங்களைப்பத்தி நல்லாத் தெரியுமே.....", வேகமாகச் சொன்னாள்.

"அதே மாதிரி, அவளும் முதல்ல என்னைத் தவறா நினைச்சுட்டு இருந்தா. இப்போ, அப்படியில்லை என்று அவளும் புரிந்துகொண்டாள். அதனால்தான், இப்போ நான் அவகிட்டே பேசுறேன்", அவனும் அவளை போலவே சொன்னான்.

"அப்போ..... எல்லார்ட்டயும் இப்படித்தான் பேசுவீங்களா? நான் உங்களுக்கு ஸ்பெஷல் இல்லையா?", சின்னபிள்ளைத்தனமாகக் கேட்டாள்.

'நேத்துவரைக்கும் நீ ஸ்பெஷல் இல்லை, ஆனால் இன்னையில் இருந்து நீ ஸ்பெஷல் தான்', மனதுக்குள் சொல்லிக் கொண்டான். மெல்லிய சிரிப்புடன், அவள் கண்ணை உருட்டிப் பேசும் அழகை, கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் பதில் சொல்லும் முன்பே, "தருண்....., எங்க அம்மா எதையோ செய்யப்போய், நான் இங்கே வந்துட்டேன். ஆனால் இப்போ, ஷெட்டி உங்களைத்தப்பா நினைச்சு,

சண்டை போட்டால்.....", பழைய விஷயம் ஞாபகம் வந்தவளாகக் கேட்டாள்.

"ஷெட்டி, அவ்வளவு சீக்கிரம் என்கிட்டே பிரச்சனைக்கு வர மாட்டார். அப்படியே வந்தாலும், அதை எப்படிச் சமாளிக்கன்னு எனக்குத் தெரியும்", லயாவிற்கு, இருபத்தைந்து லட்சம் பேரம் பேசியது, அவனுக்குள் கனலை மூட்டி இருந்தது.

"இல்ல.... நீங்க சமாளிக்க முடியாத அளவு பிரச்சனை வந்தால்.....", பயம் விலகாமல் கேட்டாள்.

"ம்ம்ம்....., அப்படியே ஏதாவது வந்தாலும், எனக்கு எந்த ஆபத்தும் வராது. முதல்ல, உன்னை நீ காப்பாத்திக்கற வழியைப் பாரு. மறுபடியும் அவன் வராமல் இருக்க மாட்டான். உங்க அம்மாவும், எவ்வளவுநாள் உறுதியா இருப்பாங்கன்னு சொல்ல முடியாது", அவளுக்கு நிலைமையைப் புரிய வைக்க முயன்றான்.

"இனிமேல்தான் எனக்கு..... நீங்க இருக்கீங்களே. எல்லாத்தையும் நீங்க பாத்துக்கோங்க. அந்த ஷெட்டியையும் சேர்த்துதான்", அவள் நிலைமையைத் தெரிந்துதான் சொல்கிறாளா? சொல்லும் வார்த்தையின் அர்த்தத்தையாவது, தெரிந்துதான் சொல்கிறாளா? அவன்தான் குழம்பிப் போனான்.

அவள் முகத்திலிருந்து, அவனால் எதையும் பிரித்தறிய முடியவில்லை. அவன் யோசனையிலேயே இருக்கவும், அவள் எழுந்து சென்று படுக்கையில் படுத்தாள்.

அவள் சென்றதையோ, படுக்கையில் படுத்ததையோ அவன் உணரவே இல்லை. அவனது யோசனையிலேயே மூழ்கி இருந்தான். யோசனையைக் கலைத்து அவள் எங்கே என்று பார்க்க, அவள், தன் படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்தான்.

"ஹேய்.... நீ எதுக்கு என் படுக்கையில் படுத்திருக்க? முதல்ல போய், பக்கத்து ரூமில் படு", அவன் சொல்லவே, வேகமாக எழுந்து, அவன் காட்டிய அறைக்குச் சென்றாள்.

நிம்மதியாக அவன் படுக்கையில் விழுந்தான். கண்களை மூடி உறங்க முயன்றால்....., லயாவின் பேச்சு காதில் ஒலிக்க, இமைகளை மீறி உறக்கம் அவனைத் தழுவ வரவில்லை. ஒருமணிநேரம் போராடியும், இமைகளின் நடுவில், லயா வந்து கொஞ்சிப் பேசினாளே தவிர, தூங்க மட்டும் முடியவில்லை அவனால்.

அதே நேரம், அவன் படுக்கையின் அந்தப்பக்கம், யாரோ படுப்பதுபோல் தெரிந்தது. அவன் திரும்பிப் பார்க்காமல், அசையாமல் படுத்திருக்க, கொஞ்ச நேரத்தில் லயாவின் சீரானமூச்சு சத்தத்தில், அவள் தூங்கிவிட்டதை உணர்ந்தவன் அவள்பக்கம் திரும்பிப் படுத்தான்.

விடி விளக்கின் வெளிச்சத்தில், ஒருக்களித்துப் படுத்து, கொஞ்சம் கூட ஒப்பனையே இல்லாமல், வளர்ந்த குழந்தையாக உறங்கிக் கொண்டிருந்தாள். அவளைத் தன் மார்பில் சாய்த்து உறங்க வைக்கவேண்டும், என்ற வேகம் உந்த, அது அவளுக்கு பேராபத்தை விளைவிக்கும் என்பதை உணர்ந்து, எழுந்து செல்ல முயன்றான்.

ஆனால், அவன் எழுந்து செல்ல முடியாதவாறு, தன் படுக்கையில் தலைகாணியைத் தேடுபவள்போல் அவள் கைகளைத் துழாவி அவனை உணர்ந்து, உறக்கத்திலேயே அவன் சட்டையைப் பிடித்து இழுக்க, அவன் (தலைகாணி) அருகில் வராமல் போகவே, அவள், அவனை நெருங்கிப் படுத்து, தலையை அவன் நெஞ்சிலும், காலை அவன் கால்மேல் தூக்கி போட்டும், வசதியாகப் படுத்துக் கொண்டாள்.

அவனுக்குத்தான் தர்ம சங்கடமாகப் போனது. நியாயமாக, இப்பொழுது அவளை எழுப்பி, வேறு அறைக்குப் போகச் சொல்லவேண்டும். இல்லையென்றால், அவனாவது விலகிச் செல்லவேண்டும். இதில் எதையுமே செய்ய அவன் முயலவில்லை.

முதல் முறையாக, பொய்யாக இல்லாமல், நிஜத்தில் ஒரு பெண்ணின் நெருக்கம், அதுவும் அவன் மனதுக்குப் பிடித்தவள்....., விலக மனமில்லாமல், இதுவரை இருந்த

குழப்பங்களும், தயக்கங்களும் விலக, மென்மையாக அவளை அணைத்தவாறு கண்களை மூடிக் கொண்டான்.

உறக்கம் அவனை நொடியில் தழுவ, உறங்கிப்போனான். மேலும் இருவர் உறக்கம் தொலைத்திருந்ததை உணராமல்.

கதவு - 14

என் அருகில் இருந்தால்

என் கவனம் கலைக்கிறாய்

என் சேய்மையில் இருந்தால்

என் உறக்கம் தொலைக்கிறாய்

என் சிந்தையில் புகுந்து

என் எல்லாமுமாகிறாய்

நீ.....

காலையில் கண்விழிக்கும் பொழுது, சுகமான கனவுடனே கண் விழித்தான் தருண். இன்னமும் தன்னை அணைத்தவாறு உறங்கும், லயாவின் உறக்கம் கலைக்காமல், எழுந்து, காலைக் கடன்களை முடித்துவிட்டு, ஜிம்முக்குள் புகுந்துகொண்டான்.

அவன் அந்தப்பக்கம் போவதற்குக் காத்துக் கொண்டிருந்தவர்களைப் போல, விவியும் கண்மணியும் அவன் அறைக்குள் புகுந்தார்கள்.

"விவி.... என்னை எதுக்கு, இப்போ உங்களோட சேர்த்து இழுத்துட்டு வாறீங்க? தருணுக்குத் தெரிந்தால் அவ்வளவுதான். விடுங்க என்னை, நான் கீழே போறேன்", விவியின் கையில் சிக்கியிருந்த தன் கையை உருவியவாறே சொன்னாள்.

"அட கண்மணி, இங்கே வருவதற்கு முழு உரிமையுள்ள ஒரு ஆள் நீங்கன்னு, எனக்குத் தெரியும். உங்களையும் வாசுவையும் தான் தருண் இங்கே அனுமதிப்பது என்பதும், எனக்குத் தெரியும். அதனால, ரொம்ப பிலிம் காட்டாம வாங்க. நான் உங்களுக்கு ஒரு அதிசயத்தைக் காட்டுறேன்", சொன்னவாறு அவளை விடாமல் இழுத்துக் கொண்டு வந்தாள் விவி.

"அப்படி இங்கே என்ன அதிசயம் இருக்கப் போகுது?", வேண்டா வெறுப்பாகக் கேட்டாள்.

"ம்ம்ம்ம்..., கண்ணைத் தொறந்து பாருங்க", அவள் சொல்லவே, அந்த அறையைப் பார்த்தாள்.

பார்த்தவளின் கண்கள், தெறித்து வெளியே விழுந்துவிடுவதுபோல் இருந்தது. ஆனால் விவியோ, எனக்கு "இது இப்படித்தான் நடக்கும் என்று முன்பே தெரியும்" என்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கண்மணி....., உங்க ரியாக்சன் ரொம்ப ஓவரா இருக்கு, கொஞ்சம் குறைச்சுக்கோங்க", அவள் காதில் சொன்னாள்.

"ம்ச்..., விளையாடாதீங்க விவி. இது தருணோட பெர்சனல் ரூம். இங்கே அவனைத் தவிர, யாரையும் அவன் இருக்க அனுமதிக்கவே மாட்டான். இப்போ என்னன்னா.....? அவனோட படுக்கையிலேயே, லயாவை அனுமதிச்சு இருக்கானா.....? அவனோட மனசை அவள் புரிஞ்சுகிட்டாள்னு நினைக்கிறேன். அப்படியே இருந்தாலும் ஒரே படுக்கையில் எப்படி.....?", அவளால் நம்பவே முடியவில்லை.

"ஏதாவது தப்பு நடந்திருக்கும்னு சந்தேகப்படுறியா கண்மணி?", விவி கேட்டாள்.

"விவி....., நீங்க இன்னுமா தருணைச் சந்தேகப்படுறீங்க? அவன் நவீன விஷ்வாமித்திரர் மாதிரி. அவன் தவத்தை, இதுவரை யாராலும் கலைக்க முடியவில்லை. அந்தத் தாராவே, ரொம்ப முயற்சி செஞ்சு பாத்தாங்க, முடியலை. இதில் இருக்கும் விஷயம் என்னன்னா, லயா, அவன்கிட்டே ஒழுங்கா பேசியது கூடக் கிடையாது. அப்படி இருக்கும் போது....., அவன் எப்படி விழுந்தான்னுதான் எனக்குப் புரியலை.

சரி, இது இப்படித்தான் இருக்கும்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? அதுவும், காலையிலேயே உளவு வேலை பாக்க வந்துட்டீங்க. உங்களை எப்படி, நம்பிவீட்டுக்குள் விட்டு வைத்திருக்கான்னே எனக்குப் புரியலை?.

இன்னும் என்னவெல்லாம் செய்யப் போறீங்களோ?. இதில் நான் அவனை சந்தேகப்படுவதாம்..... . விவி... முதல் நாள், நீங்க இங்கே வந்த முறையும், அதன் பிறகு நடந்த சம்பவங்களும், உங்களுக்கு அவ்வளவு சீக்கிரம் மறந்துடுச்சா?

தருண் மேல சந்தேகமான்னு கேட்டுட்டீங்க? சரி, உங்களுக்கு எப்படி இவங்க மேல சந்தேகம் வந்துதுன்னு சொல்லுங்க", கண்மணி அவளிடம் கேட்டாள்.

"நீங்க சொன்ன அதே காரணம்தான் கண்மணி. நவீன விஷ்வாமித்திரர், ஒரு பொண்ணுக்கு சாப்பாடு ஊட்டி விட முயற்சி செய்தால்....., அதைவிட, என் ரூமுக்கு வந்துடுன்னு சொல்லி, அவளை மிரட்டினால்....., இது எல்லாத்தையும் விட, தருணோட பார்வையே சரியில்லை.

லயாவைப் பாக்கும்போது மட்டும், மனசுக்குள் கோபம் இருந்தாலும், கண்ணில் பல்பு எரியுதே, அதை வைத்துதான் கண்டு பிடிச்சேன். ஆள் விழுந்துட்டான்னு. அதை உறுதி செய்யத்தான் இப்போ உங்களை இழுத்துட்டு வந்தேன்", சொல்லிக் கண்ணடித்தாள்.

"விவி.... உங்களைப் பற்றி தெரிந்தும், இந்தக் கேள்வியை உங்ககிட்டே கேட்டது, என் தப்புத்தான். எனக்கு இப்போ, அதிர்ச்சி அது இல்லை. தருண், யாரையுமே அவனோட படுக்கையில் படுக்க அனுமதிக்க மாட்டான். அதுவும் இல்லாமல், லயாவை அவனுக்குப் பிடித்திருக்கும் பட்சத்தில், அவளை விட்டு விலகி இருக்கத்தான் நினைத்திருப்பான். அப்படி இருக்கும்போது, லயா எப்படி அவன் படுக்கையில்.....", தன் சந்தேகத்தைக் கூறினாள்.

"இதையெல்லாம் மனசில் போட்டு, நாம ஏன் குழப்பிக்கணும்?, வா லயா கிட்டேயே கேட்டுடுவோம்", இருவரும் லயாவை நெருங்கினார்கள்.

"லயா....., லயா.....", விவிதான் அவளை உலுக்கினாள்.

சோம்பலாகக் கண்விழித்துப் பார்த்தவள், விவியின் முகத்தைப் பார்த்து, முதலில் குழம்பினாள். பின்னர்தான்,

தான் இருக்கும் இடம் பற்றிய நினைவே வந்தது அவளுக்கு.

"குட் மார்னிங் லயா மேம்....., காபி குடிக்கிறீங்களா?", கண்மணி அக்கறையாகக் கேட்டாள்.

"குட் மார்னிங் கண்மணி....., எனக்குக் காபி வேண்டாம், நான் காபி குடிக்க மாட்டேன். பால் இருந்தா தாங்க", சகஜமாகக் கேட்டாள் லயா.

"இவ இன்னும் பால் தான் குடிக்கிறாளா? அதான் இன்னும் அமுல் பேபி மாதிரி இருக்கா. இதில், உங்க அண்ணாவுக்கு, இவ மேல காதல்....., என்ன கொடுமை இது?", கண்மணியின் காதை வேகமாகக் கடித்தாள் விவி.

விவியை பொய்யாக முறைத்துவிட்டு, இண்டர்காமில் அழைத்து, பால் கொண்டுவரச் செய்தாள். அவர்கள் வெளியே வைத்துவிட்டு சென்ற பிறகு, லயாவை பக்கத்து அறைக்குச் சென்று முகம் கழுவிவரச் சொன்னார்கள்.

அவள் வந்தவுடன், "லயா, நீங்க நல்லா தூங்கினீங்களா? நைட் உங்க ரூமில், எதுவும் அசௌகரியமா இல்லையே?", விவி நாசூக்காக அவள் வேலையைத் துவங்கினாள்.

கண்மணி, அவள் தலையிலேயே அடித்துக் கொண்டாள். 'என்ன இது?' என்பதுபோல் கண்டிக்கும் பார்வை பார்க்க, அதை விவி கண்டுகொள்ளவே இல்லை.

லயாவோ, அதில் இருக்கும் உள்குத்தை அறியாமல், "இல்ல.... நான் அந்த ரூமில்தான் படுத்தேன். ஆனால், புது இடம் என்பதால் தூக்கமே வரலை. சோ.... நான் அவரோட கட்டில்ல ஒரு ஓரமா படுத்துகிட்டேன்", பாலை அருந்தியவாறே சொன்னாள்.

"அப்போ தருண் உன்னைப் பார்க்கலையா?", விவியின் கேள்வியில் ஒரு நிமிடம் தடுமாறியவள், "இ..... இ...ல்ல அவர் பார்க்கலை", அவர்கள் முகம் பார்க்காமல் சொன்னாள்.

அவள் சொன்ன விதமும், அவளது சிவந்த முகமும், அவர்களுக்கு வேறு கதை சொன்னது. ஒருவர் மற்றவரை

ரகசியப் பார்வை பார்க்க, லயாவோ, இரவில், தான் அவனைத் தலையணை என்று நினைத்துக் கட்டிப் பிடித்தவுடன், அதில் இருந்த வேறுபாடு அவளுக்குப் புரிய, விலகிப் படுக்க முயன்றாள்.

ஆனால், புதிதாக உணரும் ஆணின் அன்னியோன்னிய நெருக்கமும், தன்னை அவன் விலக்கித் தள்ளாமல், மென்மையாக அணைத்து, உச்சியில் அவன் இதழ்களை மென்மையாக பதித்ததும், அவளுக்குள் பெண்மையையும், வெட்கத்தையும், ஒருங்கே பூக்கச் செய்தது.

ஒரு அந்நிய ஆடவனுடன், அவன் படுக்கையில், அவனைக் கட்டிக் கொண்டு படுத்திருக்கிறோமே, இது எந்த உரிமையில் என்ற கேள்வி அவளுள் எழுந்தது. இன்று, தன்னை இனிமேல் பார்த்துக்கொள்ள அவன் இருக்கிறான், என்று தான் சொன்னது வெறும் வாய் வார்த்தையாகவா? இல்லை, ஏதாவது காரணம் இருக்கின்றதா? என்று தன்னையே அவள் கேட்டுக் கொண்டாள்.

இதுவரை குழந்தையாக இருந்த அவள் மனம், முதல் முறையாக குமரியாகச் சிந்திக்கத் துவங்கியது. அவன் இடத்தில், வேறு யாராவது இந்த நேரம் இருந்திருந்தால், தன் நிலை என்னவாகி இருக்கும் என்று எண்ணினாள்.

ஆனால் அவன் உறங்கிவிட்டது, சீராக ஏறி இறங்கிய அவனது மூச்சுக்காற்றில் அவள் உணர்ந்தாள். அவனது அணைப்பும், மென்மையான முத்தமும், அவன் கண்ணியமும் அவன்மேல் அவளுக்குக் காதல் பூக்கக் காரணமாக அமைந்தது.

நூறுபேருக்கு நடுவில் கூட, தன்னை உரசத் துடிக்கும் நாயகர்களுக்கு மத்தியில், தனியாக அவனிடம் அடைக்கலமாகியிருக்கும் அவளது தனிமையைப் பயன்படுத்தாத அவனது நேர்மை, அவளுக்குள், அவன்மேல் இருந்த மதிப்பை அதிகரித்தது.

அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்து, அவன் தாடையில் இருந்த ரோமங்களின் உராய்வில் தன்னை

தொலைத்தவாறு, உறங்க மனமில்லாமல் விழித்திருந்தாள். அவளை அறியாமல், எப்பொழுது உறங்கினாள் என்று அவளுக்குத் தெரியவில்லை. அதை நினைத்தவாறு அமைதியாக நின்றிருந்தாள்.

"இங்கே என்ன செய்யிறீங்க ரெண்டு பேரும்? ஷூட்டிங்க்கு டைம் ஆகுது. விவி.... நீ ஹாஸ்டல் கிளம்புறியா? உன்னை ட்ராப் பண்ணச் சொல்லவா? லயா.... நீங்க ரெடியா? கண்மணி..... செட்டுக்குப் போயிட்டு மேக்கப் போட்டுக்கலாமா?", அனைவரிடமும் ஒரே நேரத்தில் கேட்டான்.

"தருண்.... என்னநீ என்னைக் கிளம்பச் சொல்லுற? நான் பத்திரிகைக் காரி, என்னைக் காணோம்னு ஒரே பிரச்சனையா இருக்கும் தெரியுமா?", கடினமாகக் கேட்டாள்.

"விவி.... இந்த ஒரு வாரத்தில், உன்னை நான் ஒரு நாள் கூட கட்டி வைக்கவே இல்லையே. அது மட்டும் இல்லை, நீ உங்க எடிட்டர்க்கு போன் செஞ்சு சொல்லிட்டன்னு, எனக்குத் தெரியும். அதனால், ரொம்ப சீன் போடாமல் கிளம்பு.

உனக்கு, எந்த நேரம் என்ன உதவி வேண்டுமென்றாலும் என்னைக் கேட்கத் தயங்காதே", ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

விவி, அவனைத் திகைப்பாகப் பார்த்துவிட்டு, அமைதியாக இருந்தாள். "நீங்க ரெண்டுபேரும் போங்க", அவர்களை அனுப்பிவிட்டு, விவியிடம் திரும்பினான்.

"விவி.... நீ இங்கே இருக்க, என்னக் காரணம் என்று, எனக்குத் தெரியும். என்னோட மறுபக்கம் எப்படி இருக்கு என்று தெரிஞ்சுக்கத்தான், நான் உன்னை அடைத்து வைக்காமல் இருந்த பொழுதும், நீ இங்கேயே இருந்தன்னும் எனக்குத் தெரியும்.

உங்க பத்திரிகை அன்பர்களுக்கு, என் வீட்டில் இருப்பதா தகவல் கொடுத்துவிட்டதும், அவங்க முதல் இரண்டு நாள், இந்த வீட்டையே காவல் காத்தார்கள் என்பதும், என்னோட

ரகசியங்கள், அதாவது கண்மணியை பற்றிய உண்மை, நீ விரும்பிய என் படுக்கையறை ரகசியம்,

அடுத்து இப்போ போனஸா, லயா என் வீட்டுக்கே வந்தது. எங்களது உறவுமுறை, அதுக்கு நீயே கண்ணு, காது, மூக்கு வச்சு அழகா ஒரு கதை ஜோடிக்கலாம்.அது உன் பத்திரிகை சுதந்திரம், அதில் நான் தலையிட விரும்பலை. நான் உன்கிட்டே சொல்ல விரும்புவது ஒன்றுதான்....., என் வாழ்க்கையை, நான், என் விருப்பப்படி வாழ விரும்புகிறேன்.

அதற்குத் தடையா....., உன்னோட பத்திரிகையில் வருவதை, நான் விரும்பவில்லை. என் குடும்ப ரகசியம் கண்மணி, அவளை ஏற்கனவே, முடிந்த அளவு, நீங்க எல்லோரும் படம் பிடித்து பாகம் குறிச்சாச்சு. அதை இப்போ எல்லோரும் மறந்துட்டாங்க, இப்போ புதுசா நீ நோண்டுவது வேண்டாம்.

இதை நான் சொல்லக் காரணம், என் மதிப்புக்காக இல்லை. என் அம்மாவின் கண்ணீருக்கு பயந்துதான். என் அப்பாவின் மறுபக்கம், என் அம்மா அறியாமலே போகட்டும். சினிமா உலகில், என் நிஜ முகம் எல்லோருக்கும் தெரியும். இதுவரை, நீ எப்படி உன் பத்திரிக்கைக்கு, பரபரப்பா செய்தி கொடுத்தாயோ, அதை அப்படியே தொடர்வதில், எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை.

பிறகு ஏன் உன்னை கடத்தினேன் என்று நினைக்கிறாயா? ஒரு பெண்ணின் கண்ணோட்டத்தில், நான் ஒரு காமுகனாகத் தெரிவதில் எனக்கு விருப்பமில்லை .. ஒரு தங்கைக்கு அண்ணனாக, என்னால் அதைத் தாங்கிக்க முடியலை.

அதுவும் இல்லாமல், ஒரு பொய்யான விஷயத்துக்கு வேண்டி, நீ என் பின்னால் சுற்றுவது எனக்குப் பிடிக்கலை. இப்போ நீ உன் அலுவலகத்துக்கு பதில் சொல்லியே ஆகணும். அதற்கு என்னோட பேட்டியை நீ போட்டுக்கலாம்.

இந்த ஏழு நாளில், என்னைப் பார்த்த உனக்கு, என்னைப்பற்றி முழுதாக தெரிந்திருக்கும். அதை வைத்து, அதையும் நீயே எழுதிக்கொள். நான் வேண்டுமென்றால், உனக்கு, நீ வைத்திருக்கும் ரகசிய டேப்பில், ஒப்புதல் வாக்குமூலம் தருகிறேன்.

இப்பொழுது, இதையே என் ஒப்புதல் வாக்குமூலமாக, நீ பதிவு செய்துக்கொள்ளலாம்", நீளமாகப் பேசி, அவள் முகத்தைப் பார்த்தான்.

"தருண்.... முதல்நாள் நான் உன்னைப் பார்த்து, கொஞ்சம் பயந்தது நிஜம்தான். ஆனால், அந்த பயத்தை ஒரே வார்த்தையில் சிதறடித்தவன் நீ. நீ சொன்ன வார்த்தையின் அர்த்தம் தெரிந்து சொன்னாயா? இல்லை தெரியாமல் சொன்னாயா என்று எனக்குத் தெரியாது.

ஆனால், நான் உன்னை, என் உடன்பிறவா சகோதரனாகத்தான் நினைக்கிறேன். கண்மணி உனக்கு எப்படியோ, அப்படித்தான் நான் உனக்கு என்று சொன்னாயே, அது நிஜமென்றால் என் அண்ணனைப் பற்றி, நான் அக்கறை கொள்வதில் என்ன தவறு?", ஆதங்கமாகக் கேட்டாள்.

"அக்கறை கொள்வதில் தவறே கிடையாது வனிதா. ஆனால் என்னை அடக்க முயல்வதுதான் தவறு. என் தொழிலில், நீங்கள் யாரும் தலையிடுவதுதான் தவறு. ஒரு அலுவலகத்தில் நான் வேலை செய்தால், அதில், நீங்க எப்படித் தலையிடாமல் இருப்பீங்களோ, அதே போல் இதிலும் இருங்கன்னுதான், நான் சொல்லுறேன்", அடக்கப்பட்ட கோபம் அவன் குரலில்.

"உங்க தொழில், உங்களைச் சார்ந்து மட்டும் இருந்தால் பரவாயில்லை. உங்களைக் கொண்டாட ஒரு கூட்டமே வெளியே காத்திருக்கு. உங்களது வாழ்க்கையை ஒரு பாடமாக எடுத்துக்க, இளைஞர் பட்டாளமே திரண்டு, உங்க பின்னாடி நிக்கிது. அப்படி இருக்கும்பொழுது, எப்படி நீங்க இப்படி பொறுப்பில்லாமல் பதில் சொல்ல முடியும் தருண்", அதைவிடக் கோபமாக அவள் கேட்டாள்.

"நான் என்ன புத்தனா? ஏசுவா? காந்தியா? என் வாழ்க்கைப் பாடத்தைப் படிக்க? நானும், ஊனும், உயிரும், உணர்வும் கலந்த சதைப் பிண்டம்தான். எனக்கும் ஆசை, பாசம், கோபம், தாபம் இப்படி எல்லா உணர்வுகளும் உண்டு. எங்களைப் பின்பற்றச் சொல்லி, நாங்க யாருக்கும் சொன்னதே இல்லை.

எங்க படத்தை ரசிங்க, உங்க ரசனையை, திரையரங்கோடு நிறுத்திட்டுப் போய்டுங்கன்னுதான் நான் சொல்லுறேன். அதை விட்டுட்டு, எங்களுக்கு கட்டவுட் வைங்க, அதுக்கு பாலாபிஷேகம் செய்ங்கன்னு யாருக்கும் நான் சொல்லுவதே கிடையாது.

எங்களையும் சக மனுஷங்களா பாருங்க. உங்க வீட்டு படுக்கை அறையை அன்னியர் எட்டிப் பார்த்தால், எவ்வளவு கோபம் உங்களுக்கு வருமோ, அதே கோபம்தான் எனக்கும் வரும்.

ஆனால், நீங்க எல்லோரும் அப்படியா இருக்கீங்க?. எங்க படுக்கை அறையில் என்ன நடக்கிறது? என்று எட்டிப்பார்த்துச் சொல்வதில் உங்களுக்கு என்ன அப்படி ஒரு அல்ப சந்தோஷம்?", வெடித்தான் அவன்.

அவளது தொழிலை குறை சொன்னதில் அவளுக்குக் கட்டுக்கடங்காமல் கோபம் வந்தது. "தருண்.... நீ சொல்லுவது நியாயமே கிடையாது. ஒவ்வொருவர் வீட்டு டிவியிலும் நீங்க புகுந்து ஆடும் பொழுது, உங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதில், மக்கள் ஆர்வம் காட்டத்தான் செய்வாங்க.

அதைச் செய்வதுதான் எங்கள் வேலை. அதை விட்டுவிட்டு, உன் படுக்கையறையை எட்டிப் பார்ப்பது, எங்கள் வேலை இல்லை. அப்படியே நாங்கள் எட்டிப் பார்க்கிறோம் என்றால்....., உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வரணும்?, அங்கே அழுக்கு இருக்கப்போய்த்தானே மறைக்கப் பார்க்கின்றீர்கள்", அவளும் விடுவதாக இல்லை.

"எங்கள் படுக்கை அறையில் அழுக்கு இருக்கிறதா? இல்லை பாலாறு ஓடுகிறதான்னு தெரிஞ்சுக்க, உங்களுக்கு என்ன அவ்வளவு ஆர்வம்? எங்களையும் சக மனிதர்களாகப் பார்ப்பதில் அப்படி என்னத் தயக்கம்?", வெடித்தான் அவன்.

"சக மனிதன்னு சொல்லிட்டு, சினிமாவில் பத்துபேரை தூக்கிப் போட்டுப் பந்தாடுவதில் இருக்கும் அபத்தம், ஏன் உங்களுக்குப் புரியவில்லை? திரையில், அநியாயத்தைக் கண்டு பொங்கி எழுந்து, சமுதாயத்தை, ஒற்றை ஆளாகத் திருத்தப் புறப்படும்போது தெரியவில்லையா? நீங்க சக மனிதன் என்று.

கூட பத்து தேவதைகளுடன் கனவு காட்சியில் டூயட் ஆடும்போது ஏன் அது மறந்து போகிறது? திரையில் உருகி உருகி காதலித்து, அவளுக்காக உயிரையும் கொடுங்கன்னு சொல்லும்போது ஏன் தெரியவில்லை?.

இப்படி நீங்க திரையில் உங்களைப்பற்றிய மாய பிம்பத்தை மக்களிடம் உருவாக்கும்போது, அவங்க உங்க பின்னாடி வருவதைத் தடுக்க முடியாதே. அப்படி வரும் அவர்களுக்கு, உங்கள் வாழ்க்கையால் ஒரு முன்னுதாரணமாக இருப்பதை விட்டுவிட்டு,

நான் ஒரு பெண் பித்தன், நான் இப்படித்தான், என்று பொய்யான பிம்பத்தை ஏன் அவர்கள் மனதில் விதைக்க வேண்டும்? என் தலைவனே இப்படிச் செய்யிறாண்டா, நான் ஏன் செய்யக் கூடாது, என்று உங்கள் ரசிகன் வெளியே கேள்வி கேட்கிறானே, அது உங்களுக்கு ஏன் தெரியவில்லை?

திரைக்கு முன்னால் மட்டும், நல்லவனாக வேடம் போடுவதும், திரைக்குப் பின்னால், காமுகன் என்று பெயர் வாங்குவதும் எதற்கு?. உங்கள் வாழ்க்கையை, திறந்த புத்தகமாக வைப்பதில் என்ன தயக்கம்?", பொரிந்தாள் அவள்.

"விவி.... நான் என் வாழ்க்கையை, புத்தகமாக்க விரும்பவில்லை. அது ரகசியமான டைரியாக இருப்பதைத்தான், நான் விரும்புகிறேன். என் வாழ்க்கையை, என் இஷ்டப்படி, நான் வாழ, எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு தடை?. பின்னாடியே கேமராவை தூக்கிட்டு அலைவது எதனால்?

உங்களுக்கு பரபரப்பா விஷயம் கிடைக்கவேண்டுமென்றால், சமுதாயத்தில் எவ்வளவோ தீமைகள் நடக்கிறதே அதைத் தட்டிக் கேளுங்க. இல்லையா, வீட்டு வன்முறை, நாட்டு வன்முறை, பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், இப்படி, கவனத்தை திசை திருப்புங்க.

இதையெல்லாம் விட்டுட்டு, பொழுதுபோக்கு விஷயத்துக்காக உழைக்கும் எங்களை ஏன் துரத்துறீங்க?", இவளை என்ன செய்தால் தகும் என்ற எரிச்சல் அவன் குரலில்.

"அப்போ உன் தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தவறே நடக்கவில்லை என்று நீ சொல்கிறாயா?", அவனைக் கூர்ந்து பார்த்தவாறே கேட்டாள்.

"தவறே நடக்கவில்லை என்று நான் எப்பொழுது சொன்னேன். என்வரையில் தவறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என்றுதான் சொல்கிறேன்".

"நீதான் அப்படிச் சொல்கிறாய். ஆனால், உன்னோடு நடிக்கும் பெண்களை, நீ படுக்கையில் வீழ்த்தாமல் விடுவதில்லை என்ற பெயர் இருக்கிறதே, அது உனக்குத் தெரியுமா?".

"அப்படி, நீங்கள்தான் பரப்பி விடுகின்றீர்களே தவிர, என்னுடன் நடித்த எந்த நடிகையாவது, அப்படிச் சொல்லி, நீ கேள்விப் பட்டிருக்கிறாயா? என் நிழலாவது அவர்கள் மேல் விழுந்ததாக சொல்லிஇருக்கிறார்களா? நான் சொல்வது, கேமராவுக்குப் பின்னால்", அவளுக்குத் தெளிவு படுத்த விரும்பினான்.

"அவர்களுக்கு மட்டும் அந்த உண்மை தெரிந்தால் போதுமா? அதைவிட, எனக்கு ஒன்றுதான் புரியவே இல்லை. உன் நிழல் கூட அவர்கள் மேல் விழாது என்றால், மூடிய அறைக்குள் அவர்களை நீ இழுப்பது ஏன்?", நக்கலாகக் கேட்டாள்.

"இதற்கு பதில் உனக்கே தெரியும்", அசையாமல் நின்றான்.

"பதில் எனக்குத் தெரியுதோ இல்லையோ, எனக்குத் தேவை உன் பதில்".

"மற்றவரின் நிழல், அவர்கள்மேல் விழாமல் இருக்கத்தான்".

"நீ, இப்படிக் கெட்ட பெயர் வாங்குவதற்கு, நீ, நீயாகவே இருந்துவிட்டுப் போகலாமே? எதற்கு இப்படி ஒரு அவப்பெயர் உனக்கு".

"ரொம்ப சிம்பிள். என்னுடன் நடிக்கும் பொழுதாவது, மற்றவரின் நிழல் படாமல், பாதுகாப்பாக இருக்க, என்னால் முடிந்த ஒரு சின்ன உதவிதான் அது. நீ சொன்ன மாதிரி, இந்த நடிப்பு உலகில், பெண்களை யாருமே, உணர்வும், உயிரும் உள்ள, சக மனிஷியா பார்க்கவே இல்லை.

வெறும் சதைப் பிண்டமாகத்தான் பார்க்கிறார்கள். அவர்களின் படுக்கையில் வைத்து அழகு பார்க்கும் போகப்பொருளாகத்தான் பார்க்கிறார்கள். வெள்ளித் திரையில் தெரிவதால், என்னமோ அதிசய பிறவியாக, தேவலோக ரம்பைகளாக நினைக்கிறார்கள்.

ஒரு முறையாவது, தொட்டுப் பாக்கணும்னு, இங்கே இருக்கற ஒவ்வொருத்தரும், நாக்கைத் தொங்கப் போட்டுட்டு அலையிறாங்க. அப்படி இருக்கும் பொழுது, என்னால், என்னுடன் நடிக்கும் அவர்களுக்கு, என்னுடன் நடிக்கும் நாட்கள் வரையிலாவது பாதுகாப்பு கொடுக்க முடியுமென்றால்....., எனக்கு எந்த அவப்பெயர் வருவதைப் பற்றியும், எனக்குக் கவலை இல்லை. எனக்கு நான் நேர்மையானவனாக இருந்தால் போதும்", தீர்மானமாகச் சொன்னான்.

"நீ இப்படிச் செய்வதால் மட்டும், அவர்கள் அனைவரையும் காப்பாற்றி விடுவாயா?", பேசி அலுத்துப் போனது அவளுக்கு.

"என்னுடன் நடிக்கும் பொழுது, அவர்களை வேறு யார் கையும் தீண்டாமல் பார்த்துக் கொள்வேன். அதே நேரம், என் நிழல் கூட அவர்களைத் தீண்டாது", இத்தோடு இந்த பேச்சு போதும், என்பதுபோல் இருந்தது அவன் குரல்.

"உன் நிழல் கூடத் தீண்டாது என்றால்....., நேற்று.... லயா, உன் படுக்கையிலேயே இருந்தாளே அதற்கு என்ன அர்த்தம்?", விஷமமாகக் கேட்டாள்.

"என் மனைவியாகப் போகிறவளுக்கு இல்லாத உரிமை, வேறு யாருக்கு உண்டு", சொல்லிவிட்டு மெல்லிதாகச் சிரித்தான்.

"அப்போ முடிவே பண்ணிட்டியா? ஆனால், தெய்வாவை என்ன செய்வதா உத்தேசம்? அவ்வளவு சீக்கிரம் உன் காதல் நிறைவேறாது", எதார்த்தத்தைச் சொன்னாள்.

"எனக்கும் அது தெரியும். என்னால், தெய்வா மட்டுமில்லை, இந்த உலகமே எதிர்த்து நின்றாலும், லயாவை அடைய முடியும். ஆனால்.., லயா, அவளோட தடைகள் அனைத்தையும், அவளாகத்தான்.... தாண்டி வரணும்.

அப்படி வந்தால், என்னோட இதயக் கதவு அவளுக்காக எப்பொழுதும் திறந்தே காத்திருக்கும். ஆனா அதுக்கு, அவ அவளோட இதயக் கதவை முதல்ல திறக்கணும்", அதே உறைந்த புன்னகை அவன் இதழ்களில்.

கதவு - 15

வெறித்த பார்வை, இமைக்க மறந்த

நிமிடங்கள்.....

உறைக்காத தனிமை, உறையும் நொடிகள்

இவை காதலின் அறிகுறியா.....?

அப்படியென்றால்

நான் காதலிக்கிறேன்.....

ஷூட்டிங் ஸ்பாட்டில் அனைவரும் ஆஜராகி விட்டார்கள். தெய்வா, மனம் குமைந்து கொண்டிருந்தாள். தன் மகள், தன் பிடியிலிருந்து நழுவி விட்டாளோ, என்று சிறிய சந்தேகம். இங்கே வந்ததுமுதல், மகளின் அமைதி அவள் கண்களை உறுத்திக் கொண்டிருந்தது.

எப்பொழுதுமே லயா அமைதியானவள்தான். எதையும் வெளியே காண்பிக்க மாட்டாள். எது தேவைஎன்றாலும் தெய்வாவிடம் தான் சொல்வாள், கேட்பாள். தேவைக்குப் பேசிவிட்டு அமைதியாகிவிடுவாள்.

ஆனால் இன்று, கனவில் செய்பவள்போல், அனைத்தையும் செய்துகொண்டிருந்தாள். எதையோ நினைத்துச் சிரித்துக் கொண்டாள். காட்சிக்கு முன்னர், ஹோம்வொர்க் எதையும் செய்யாமல், வெறித்த பார்வையாக அமர்ந்திருந்ததைப் பார்த்து, தெய்வாவிற்குக் கலக்கமாக இருந்தது.

"லயா.... என்னடா செல்லம்.....? ஒரு மாதிரி இருக்க? அம்மா, தருண் வீட்டுக்கு அனுப்பிட்டேன்னு உனக்குக் கோபமா? அம்மாவுக்கு வேற வழி தெரியாமல்தான் அப்படிச் செய்தேண்டா", லயாவின் கன்னங்களைத் தடவியவாறு, அவள் கவனத்தைக் கவர முயன்றார்.

எப்பொழுதும் தாயின் இந்தக் குரலில் குழைபவள், இன்று, தாயைக் கொஞ்சம் தீர்க்கமாகப் பார்த்தாள். நேற்று தருண்,

தன்னிடம் தாயைப் பற்றி குறை எதுவும் சொல்லவில்லை என்றாலும், தருணின் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால்....., இந்த எண்ணமே அவள் மனதை, கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக் கொண்டிருந்தது.

என்னதான் தாய் சமாதானம் செய்தாலும், மனம் சமாதானம் ஆக மறுத்தது. தாயின் பணத்தாசை அவளுக்கு நன்றாகவே தெரியும், அதுவும் இல்லாமல், இந்தப் புகழ் மழையில் நனைய, அதைவிட பிடிக்கும் என்பதும் தான்.

தாய் தனக்காக எவ்வளவோ துன்பங்கள் பட்டு, தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கி இருக்கிறார், என்ற நன்றியினாலும், இதுவரை அவளை முந்தானையிலே முடிந்து, ஒரு கோழிக் குஞ்சை பாதுகாப்பது போல பாதுகாத்ததால், தாயின் இந்த ஆசைகள், அவளுக்குத் தவறாகத் தோன்றியதில்லை, இதுவரை.

ஆனால், நேற்று நடந்ததை, எந்த விதத்தில் நியாயப்படுத்தவென்று தெரியவில்லை. ஷெட்டி எப்படிப்பட்டவன் என்பது தாய்க்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்கும் பொழுது, இந்த இக்கட்டில் இருந்து தப்பிக்க, வேறு ஏதாவது வழியை, தாய் தேர்ந்தெடுத்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும் என்றே தோன்றியது.

இடையில் தருணை இழுத்துவிட்டு....., அவனைப்பற்றியும் பெரிதாக நல்ல விதமாக இங்கே யாரும் சொல்லவில்லை. நேற்று, தன் வாழ்க்கையின் முடிவையே, அவனை எடுக்கச் சொல்லும் அளவு பேசியது சரியா?

அவன் நேற்று நடந்த முறை உண்மையானது தானா? இல்லையென்றால், தன்னை அடைய வேண்டி இப்படி நடிக்கின்றானா? நேற்று இரவு, சரியாக தெரிந்த அனைத்தும், இன்று, தவறாக இருக்குமோ என்று சந்தேகம் கொள்ள வைத்தது.

இதற்கு முக்கிய காரணம், அவளுக்கு சரியான முடிவுகள் எடுத்துப் பழக்கம் இல்லை என்பதே. இரவு சரியாக இருந்த

அனைத்தும் இப்பொழுது சரியில்லாததாகத் தோன்றியது. தனியாக சிந்திக்கத் துவங்கி இருந்ததால், தடுமாற்றமும், குழப்பமும் மட்டுமே மிஞ்சியது.

விவி, நேற்று ஏன் தருணின் வீட்டில் இருந்தாள்? அவளுக்கு தருண் என்றாலே ஆகாதே, அவனைப் பற்றி, பரபரப்பாக செய்திகளில் அடிபட வைப்பவளாயிற்றே அவள். அப்படியிருக்கும் பொழுது இருவரும் ஒரே இடத்தில் எப்படி.....?

இந்தக் கண்மணியோடு சேர்த்து கூட கிசுகிசு வந்தவண்ணமே இருந்ததே. இந்த அம்மா, என்னை ஒழுங்காக செய்தித்தாள் படிக்க விட்டிருந்தால், எனக்கும் இவையெல்லாம் பற்றித் தெரிந்திருக்கும். எங்கே.....? அதான் கடிவாளம் கட்டிய குதிரை மாதிரி என்னை மாற்றி வைத்திருக்கிறார்களே.

அம்மா, நிஜமாகவே நான் அந்த மாதிரி செய்திகளைப் பார்த்து வருத்தபடுவேன் என்று நினைத்தார்களா? இல்லை, இந்த சினிமா உலகின் அழுக்குகளை, அறிந்துகொள்ளக் கூடாது என்று விரும்பினார்களா? இனிமேல் இது தொடர விடக் கூடாது. எனக்கும், என்ன நடக்கிறது என்பது தெரிந்தே ஆக வேண்டும்.

தருண் கேட்டானே....., என் இடத்தில் வேறு எவனாவது இருந்தால் அப்படியே....., என்று சொல்லி நிறுத்திவிட்டான். அவன் சொல்ல வந்தது என்ன? வேறு எவனாவது இருந்து, கட்டாயப்படுத்தி இருந்தால் அவனோடு படுத்திருப்பாயா? என்றுதானே கேட்க வந்தான்.

அந்த நினைப்பே உடலெல்லாம் கூச, விதிர்த்து, தன் யோசனையைக் கலைத்தாள். தாய், தன் முகத்தையே பார்த்தவாறு அமர்ந்திருப்பது புரிந்தது. தாயிடம் என்ன சொல்லி சமாளிக்க என்று புரியவில்லை.

"அம்மா.... நான் கொஞ்சம் காலாற நடந்துட்டு வாறேன்", தாய் கேள்வி கேட்கும் முன்னர் அங்கிருந்து நகர்ந்தாள்.

தெய்வாவின் சந்தேகம் அதிகரித்தது. மகளின் முக பாவங்களையே கவனித்துக் கொண்டிருந்தவள், அவள் முகத்தில் மின்னி மறைந்த யோசனையையும், குழப்பத்தையும், கேள்வியையும், இறுதியாக எழுந்த அருவருப்பையும், கவனித்துக் கொண்டேதான் இருந்தாள்.

மகளை அதிகமாக யோசிக்க விடுவது, தனக்கு நல்லதல்ல என்பது அவளுக்குத் தெரியும். தருண் வீட்டுக்குச் சென்றதால் இந்த மாற்றமா? ஷெட்டி தொல்லை தருகிறானே என்ற எண்ணத்தில் வந்த குழப்பமா? என்னை விட்டு நீங்கி இருந்ததால் வந்த பரிதவிப்பா? என்னக் காரணமென்று தெய்வாவிற்குப் பிரித்தறிய முடியவில்லை.

தெய்வாவின் இந்த குழப்பமே, லயாவின் மன ஓட்டத்தை, அவள் மனதில் மெல்லிதாக அரும்பியக் காதலை, அறிய விடவில்லை. அப்படி மட்டும் தெய்வா அறிந்திருந்தால், லயாவின் நிழலைக் கூட பாதுகாக்கத் துணிந்திருப்பாள்.

எதற்கும், தருண் மீது ஒரு பார்வை வைக்க வேண்டும் என்று முடிவெடுத்தாள். அதைச் செயல்படுத்தவும் முனைந்தாள். எனவே கண்கொத்திப் பாம்பாக, தருணை கவனிக்கத் துவங்கினாள்.

அன்றையக் காட்சியில், லயாவும், தருணும் காதலர்களாக, நடிக்கும் இடம். கதிரவன் காட்சியை விளக்கிவிட்டு, லயாவிடம், கொஞ்சம் காதலாக அவனைப் பார்க்குமாறும், பேசுமாறும் சொல்லிச் சென்றான்.

முன்பு, தருண் கொஞ்சம் எரிச்சல் படுத்தியதாலும், கோபப்படுத்தியதாலும், கொஞ்சம் பயத்தாலும், இயல்பாக அவளால் அவனுடன் நடிக்க முடியவில்லை. ஆனால் இன்று, தன் மனக் குழப்பங்களை ஒதுக்கிவிட்டு, அவனுடன் ஒன்றி நடித்தாள்.

தருண், எப்பொழுதும்போல் இயல்பாகவே நடித்தான். அதிகமாகக் குழையவும் இல்லை, உரிமை எடுத்துக் கொள்ளவும் இல்லை. அவ்வளவு ஏன், தெரிந்தவள் என்று

கூடக் காட்டிக் கொள்ளவில்லை. இது தெய்வாவின் பார்வையிலும் விழுந்தது.

அதன் பிறகுதான், மகளது மன குழப்பங்களுக்கு, அவன் காரணமில்லை என்று, கொஞ்சமே கொஞ்சம் சமாதானம் ஆனார்.

தருண்தான் உள்ளுக்குள் தடுமாறினான். லயாவை, முன்பு சீண்டி விளையாடும் பொழுது, கொஞ்சம் ஆனந்தமாக இருந்தது அவனுக்கு. ஆனால் இன்று, அவள் நடந்துகொண்ட விதம், பெரிய மாற்றத்தை விதைத்தது.

அவளது இன்றைய நடிப்பு, படப்பிடிப்புக்காகச் செய்ததாக இல்லை. மாறாக, இயல்பாக வந்தது. அதை அவளே கவனிக்கவில்லை, அவளையே கவனித்துக் கொண்டிருந்த அவன் உணர்ந்தான். அவன் கைகளை கோர்த்த பொழுது, அதில் இருந்த உரிமையை, அவள் பார்வையில் தெரிந்த சொந்தத்தை, தன் தோள் சாயும் பொழுது உணர்ந்த கர்வத்தை, அனைத்தையுமே அவன் உணர்ந்தான்.

இந்த நேரத்தில், தான் கொஞ்சம் தடுமாறினாலும், சுற்றிலும் இருக்கும் படப்பிடிப்புக் குழுவினர் மட்டுமல்ல, காத்திருக்கும் பத்திரிகை அன்பர்கள் மட்டுமல்ல, கண்களில் விஷத்தைத் தாங்கி நிற்கும் தெய்வாவே கூட கண்டுபிடித்துவிடுவாள் என்பதால் முடிந்தவரை தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

எவ்வளவுதான் கட்டுபடுத்தினாலும் சில உணர்வுகளை, உரிமையுள்ளவர்களிடம் மறைக்க முடியாது. அந்த நிலையில் தடுமாறினான் அவன்.

லயவிற்கும் எவ்வளவுதான் குழப்பங்கள் இருந்தாலும், தருண் மேல் அவளுக்கு எழும் வினோத உணர்வை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

'இது ஏன், எனக்கு இப்படித் தோன்றுகிறது? முதல்முறையாக, மூன்றாம் நபருடன் சேர்ந்துப் பழகுவதால், இப்படித் தோன்றுகிறதா? அவன் நெருக்கம் தந்த மயக்கமா? அவன் இதழ் தீண்டல் தந்த சிலிர்ப்பா?',

குழந்தை, குமரியாக மாறும் தடுமாற்றம், அவள் சிந்தையில்.

என்னவோ, தருணிடம் பேசியே ஆகவேண்டும் என்ற உணர்வு. இது என்னவென்று, அறிந்தே ஆகவேண்டும் என்ற பரிதவிப்பு, நேரம் செல்லச் செல்ல, அவளால், அவனிடம் பேசவேண்டும் என்ற உணர்வைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

காட்சிக்கு, கதிரவன் அழைத்த பொழுது, அந்தக் குழப்பத்தோடே சென்றாள். நிஜக் காதலியைப் போலவே, காட்சிகளில் நடந்து கொண்டாள். தருணுக்கு, அவளிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைக்கவென்று தெரியவில்லை. அவனும் முழு மனதுடன் காட்சிகளில் பங்கு கொண்டான்.

லயா தடுமாறும் நிமிடங்களில், தேவைக்கு அதிகமாக தன்னை கவனிக்கும் நேரங்களில், கட் சொன்ன பிறகும் விலகாமல் இருக்கும் பொழுதுகளில், மற்றவர் அறியாமல், அவளை நடப்புக்குக் கொண்டுவந்தான்.

கண்மணி சொன்னதைப்போல், லயா, வளர்ந்த குழந்தைதான் என்பதை, முழுமையாக, அன்றைய ஒரே நாளில் உணர்ந்துகொண்டான். லயாவின் தடுமாற்றத்தை, தெய்வா கவனிக்க முடியவில்லை. காரணம், அவளுக்குத் தொல்லை ஷெட்டி ரூபத்தில், படப்பிடிப்புத் தளத்திலேயே வந்துவிட்டதுதான் காரணம்.

ஷெட்டி, நேற்று லயா, தருணின் வீட்டில் இருந்தாள் என்பதை, அவரது எடுபிடிகள் பார்த்துச் சொன்னதை வைத்துத் தெரிந்துகொண்டார்.

கட்டுக்கடங்காத கோபம் பெருகியது அவருக்கு. 'தான் பார்க்க, தன் பிச்சையில் நடித்து வயிற்றை கழுவிய தெய்வா, இன்று கதாநாயகியின் தாயானவுடன், அவளது தில்லாலங்கடி வேலையை, அவரிடமே காட்டவும் கொதித்துப் போனார்.

அவருக்கு ஒன்று மட்டும் உறுதியாக தெரிந்துவிட்டது. இனிமேல் படப்பிடிப்பு முடியும் வரை, தருண் லயாவை விட

மாட்டான் என்பதே. இனிமேல் அவனை மீறி, லயாவை நெருங்குவது இயலாத காரியம்.

தருணை விலக்கிவிட்டு லயாவை நெருங்குவது ஒன்றும் அவருக்குப் பெரிய விஷயமில்லைதான். ஆனால் அதன் பிறகுவரும் பின்விளைவுகளைச் சந்திக்கத்தான் அவர் தயங்கினார். தன் அடாவடியை இதில் காட்டினால், அதன் பிறகு ஒரு நாள் கூட, படப்பிடிப்பில் தருண் கலந்துகொள்ள மாட்டான்.

சரி, அத்தோடு போகட்டும் என்று விட்டால் கூட, அதன் பிறகு ஷெட்டியின் கம்பெனியில் நடிக்க அவனை ஒத்துக்கொள்ள வைப்பது, குதிரைக் கொம்பாகப் போய்விடும் என்றும் அவருக்குத் தெரியும்.

கேவலம், உடல் சுகத்துக்காக, பொன் முட்டையிடும் வாத்தின் வயிற்றில், கத்தியை வைக்கும் அளவு, ஷெட்டி முட்டாள் இல்லை. இதற்கு ஒரே வழி, தெய்வாவைப் பிடிப்பதுதான். தெய்வாவின் இந்தச் செயலால், எப்படியாவது லயாவைத் தொட்டுவிட வேண்டும் என்ற வைராக்கியமே பிறந்தது அவருக்கு.

பணத்துக்கு, தெய்வா எவ்வளவு மயங்குவாள் என்பதும், இன்னும், தன் தயாரிப்பில் வெளிவரும் அடுத்த மூன்று படங்களில் லயாதான் நாயகி என்றும் ஒரு ஒப்பந்தம் போட்டால், தெய்வாவே, லயாவை, தன் படுக்கையில் தள்ளி, மகளுக்குப் பாடமும் சொல்லிச் செல்வாள் என்பது அவரது கருத்து.

எடுத்த தீர்மானத்தை, தள்ளிப்போட அவர் தயாராக இல்லை. எனவே, யாரின் கவனத்தையும் கவராத வகையில், படப்பிடிப்பு தளத்துக்கே வந்துவிட்டார். ஷூட்டிங் ஸ்பாட்டில் உள்ள தன் அறையில் இருந்து ஆள் அனுப்பி, தெய்வாவைத் தன் அறைக்கு வரச் சொன்னார்.

ஷெட்டி அழைக்கிறார் என்று சொல்லவே, தெய்வா அவர் அறைக்கு விரைந்தாள். "ஐயா வரச்

சொன்னீங்களாம்.....", மனதின் பயத்தை வெளிக்காட்டாமல் கேட்டாள்.

"வா தெய்வா....., வா வா....., என்ன.... புறாவைத் தப்பிக்க வச்சுட்ட போல?", தன் கோபத்தைக் காட்டாமல், சாதாரணமாகவே கேட்டார்.

தெய்வாவிற்கு திகில் மூண்டது. ஷெட்டி, அடுத்த ஆட்டத்துக்குத் தயாராகி விட்டதை, உணர்ந்துகொண்டாள் தெய்வா. "அப்படியெல்லாம் எதுவும் இல்லைங்கையா....., உங்களுக்குத் தெரியாதது இல்லை, தருண் தம்பி....., பாப்பாட்டையே நேரடியா பேசிட்டார்.

மகளும் பிடிவாதமா இருந்தா. எனக்குமே வேற வழி தெரியாமல்தான் ஒத்துக்க வேண்டியதா போச்சு. என்னதான் இருந்தாலும், ஹீரோ கேட்டு நாம மறுக்க முடியாதுன்னு உங்களுக்கே தெரியும்", சிக்காமல் பதில் சொன்னாள்.

"என்னது... தருண் உன் மகள் கிட்டே நேரடியா பேசினானா? நம்புற மாதிரி இல்லையே", தெய்வா, லயாவைப் பாதுகாப்பத்தைத்தான் அப்படிச் சொன்னார்.

இதற்கு என்ன சொல்லுவதென்று தெரியாமல், அமைதியானாள் தெய்வா. "சோழியன் குடுமி சும்மா ஆடுமா? இருபத்தைந்து லட்சம் செய்யாத வேலையை, நீ சும்மா செய்யிறன்னு சொன்னால், நம்புறதுக்கு நான் ஒண்ணும் காதுல பூ வச்சுட்டு இல்லை தெய்வா.

எனக்கு, உன் பொண்ணைப் பாத்ததுல இருந்து, தொட்டுப் பாக்கணும்னு மனசு கிடந்து தவிக்குது. சும்மா சொல்லக் கூடாது....., பாத்த உடனே பத்திக்கிற மாதிரி, தள தளன்னு வளத்து விட்டுருக்க உன் மகளை.

ஒரே ஒரு ராத்திரி மட்டும் அனுப்பு, உனக்கு வேண்டிய அளவு பணம், நான் தாறேன். இருபத்தைந்து லட்சம் பத்தலன்னா, ஐம்பதா வாங்கிக்கோ...., அட, அதுவும் போதாதுன்னா, ஒரு கோடி, என்னோட அடுத்த மூணு படத்துக்கு உன் மகதான் கதாநாயகின்னு, பாண்டு

பேப்பரில் எழுதி கையெழுத்துப் போட்டுத் தாறேன்", தெய்வாவின் பலவீனத்தில் அடித்தார்.

தெய்வாவுக்கும் முதலில், தன் மகளைப்பற்றி அவன் வர்ணிக்கும் பொழுது கோபம் வரத்தான் செய்தது. ஆனால், அதன் பிறகு அவன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும், அவள்மேல் பூமாரிப் பொழிவதை போல் உணர்ந்தாள்.

ஷெட்டி இதுவரை, தன் படத்தில் வாய்ப்பளிப்பதாகச் சொல்லித்தான் அனைவரையும் வளைத்திருக்கிறான். தெய்வாவும் அதில் ஒருத்திதான். ஒரு படத்தையே எடுத்து முடிக்கும் அளவு பணம் தருகிறேன் என்று சொல்வது, இதுதான் முதல் முறை.

அவன் பணம், அதுவும் கோடி ரூபாய் தருகிறேன் என்று சொல்வதிலேயே, லயாவின்மேல் அவன் கொண்டுள்ள மோகம் தெரிந்தது. அவனது இந்த மோகத்தைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தாள் தெய்வா.

அப்படிப் பயன்படுத்திக் கொண்டால், பணத்திற்கு பணமும் ஆயிற்று, வாய்ப்பிற்கு வாய்ப்பும் ஆயிற்று. லயா இப்பொழுதுதான் ஒரு படத்துக்கு, பத்து லட்சம் சம்பளம் வாங்கும் அளவு வளர்ந்திருக்கிறாள்.

அவள், என்று ஒருகோடி சம்பளம் வாங்கும் அளவு வளர்வது? தான் எப்பொழுது கோடிகளில் புரள்வது? இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால், தன்னைப்போல் ஒரு முட்டாள் உலகத்திலேயே இருக்க மாட்டாள் என்று எண்ணினாள். மகளிடம், சொல்லும் விதத்தில் சொன்னால், அவளும் கேட்டுக் கொள்வாள்.

அப்படி இல்லையா? மற்ற புது பெண்களை வழிக்குக் கொண்டுவரச் செய்யும் உத்திகளில் ஏதாவது ஒன்றை செயல்படுத்த வேண்டியதுதான். ஐந்து கோடி என்றால் சும்மாவா? இவ்வளவு பணமென்றால், அவளே சிலநேரம் ஒத்துக்கொள்ளவும் செய்யலாம்.

மேலும் மூன்று படங்கள் என்றால்....., அதில் வரும் வருமானம், அவை வெற்றி பெற்றால், அவளது சம்பளத்தை

இன்னும் பத்து லட்சம் உயர்த்தலாம், கொஞ்ச நேரத்தில் உலகையே சுற்றிவரும் வல்லமை படைத்த மனது, வரும் காலங்களின் கணக்கை, கச்சிதமாகப் போட்டது.

நம்மால் கணக்கு போடத்தான் முடியும். அதை செயல்படுத்துபவன் மேலே இருப்பவனே. பாவம் அதை மறந்துவிட்டாள் அந்த தெய்வா.

அவள் அதை மட்டுமா மறந்தாள், மகளுக்கு என்று ஒரு மனம் இருக்கின்றது, அதிலும் ஆசைகள், கனவுகள், லட்சியங்கள் என ஏதாவது இருக்கலாம் என்பதையும் சேர்த்து மறந்தாள்.

"ஐயா கோடின்னு....., நீங்க சும்மா, பேச்சுக்குச் சொல்லலையே.....", கண்களில் பேராசை மின்னக் கேட்டாள்.

"தெய்வா, இதுவரை நான் பேச்சுக்கு எதையாவது சொல்லி நீ கேட்டிருக்கிறாயா? நான் உண்மையைத்தான் சொல்லுறேன். எப்போன்னு மட்டும் நீ சொல்லு, எல்லாத்தையும் கறுப்பிலேயே நான் தாறேன். யாருக்கும் சந்தேகம் வராது", வலையை விரித்து, அதில் விருந்தையும் தாராளமாகப் பரப்பினார்.

கோடி, அதுவும் கறுப்புப் பணம் என்று சொன்னவுடன், கள்ளுண்ட நரியானாள் தெய்வா.

"ஐயா, எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க. நான் லயா கிட்டே பக்குவமா பேசி, உங்க வழிக்குக் கொண்டு வாறேன். அவசரப்பட்டால் சேதாரம் அதிகமாகும். பழம் தானா கனிஞ்சா தானே ருசி, அதைத் தடி வைத்துப் பழுக்க வைத்தால், ருசி கெட்டுப் போகும்", தேர்ந்த வியாபாரிபோல் மகளை விலை பேசினாள்.

தன் மகளுக்குத் தான் செய்யும் மிகப்பெரிய அநீதி என்பது கொஞ்சம் கூட அவளுக்கு உறைக்கவில்லை. பணத்தாசை, அவள் கண்களை மட்டுமல்ல, மகள்மேல் இருந்த பாசத்தையும் மறக்கடித்து விட்டது.

தெய்வாவின் பேச்சில், எச்சில் ஒழுக, தன் வயதையும் மீறிய ஆசையில், தன் இரட்டை நாடி தேகம் குலுங்க, ஆசையில் மிதந்துகொண்டிருந்தான் ஷெட்டி.

தன் மானம் விலை பேசப்படுவதை அறியாமல், தருணிடம் தன் மனதைத் திறக்கக் காத்துக் கொண்டிருந்தாள் லயா.

கதவு - 16

உனக்காக காத்திருந்து

காலின் அடியில் வேர்கள்

விடுகின்றன.....

ஆனாலும் காத்திருக்கிறேன்

உன் காதலுக்காக.....

விவி, ஒரு வார விடுப்பிற்குப் பிறகு, பத்திரிகை ஆபீஸ் சென்றாள். அவளுக்காகவே ஒரு கூட்டம் காத்திருந்தது. தருண் பற்றிய ஹாட் நியூஸ் அறிய, அங்கிருந்த அனைவருமே காத்திருந்தார்கள். முக்கியமாக, அவள் எப்படித் தருணின் வீட்டுக்குள் சென்றாள் என்பதை அறியவேண்டியே அனைவரும் இருந்தார்கள்.

தருண், விவியின் மேல் கொலைவெறியில் இருந்தது, ஊரறிந்த ரகசியம். அது பத்திரிகை உலகிலும், சினிமா உலகிலும் அறியப்பட்ட சேதியும் கூட. அப்படி இருக்கும்பொழுது, விவி, 'தருணின் வீட்டில் இருக்கிறேன், என்னைத் தொடர்புகொள்ள வேண்டாம், நானே தொடர்புகொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அலைபேசியை வைத்துவிட்டால், அவர்கள் என்னவென்றுதான் நினைப்பது.

அவள் அழைத்துப் பேசியது, அவள் எண்ணாக இருந்திருந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருந்திருக்குமோ என்னவோ. அன்று விபத்து நடந்த இடத்திலிருந்து, அவளது அலைபேசி எடுத்துவரப்படவில்லை. எனவே அவள், தருணின் அலைபேசியில் இருந்துதான் செய்தி தெரிவித்தாள்.

அவள் தைரியமாக பேசியதில் இருந்தும், தருணின் அலைபேசியில் இருந்து அழைத்ததாலும், பிரச்சனை எதுவும் இல்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருந்தாலும்,

எடிட்டர், அவளது பாதுகாப்புக்காக, மூன்று ஆட்களை தருணின் வீட்டைச் சுற்றி நிறுத்தியிருந்தார்.

அது விவிக்கும் தெரியும். இன்று அலுவலகம் வந்தவுடன் அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். தலையில் இருந்த காயம், சிறிய பேன்ட்டேய்டாக மாறி இருந்தது. கையில் இருந்த சிராய்ப்புகள் ஆறி, வரி வரியாக மாறி இருந்தது.

இந்தக் காயங்கள் அனைத்துமே, அவர்களின் சந்தேகத்துக்கும், கற்பனைக்கும் வழி வகுத்தது. எடிட்டர், விவியைத் தனியாகத் தன் அறைக்கு வரச் சொன்னார்.

"சொல்லுமா.....?", அவர் கேள்விகள் எதையும் கேட்காமல், அவளையே சொல்லச் சொன்னார். ஆனால், அவர் பார்வையில் விழுந்த காயங்களை, கண்களால் ஆராய்ந்தார்.

"சார், உங்ககிட்டே நான் இதுவரை பொய் சொன்னதில்லை. எனவே, இப்பவும் என்னால் பொய் சொல்ல முடியாது. அதே மாதிரி, உண்மையையும் சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கேன். ஆனால் சென்றதற்கு உபயோகமாக, தருண் பற்றிய சில சுவாரசியமான விஷயங்கள் கிடைத்திருக்கிறது. அதை, சரியான விதத்தில் யூஸ் பண்ணலாம் என நினைக்கிறேன்", சில உண்மைகள், தெரியாமல் போவதே நலம், என்று எண்ணினாள்.

விவியிடமிருந்து, இதற்குமேல் ஒரு வார்த்தையையும் வாங்க முடியாது என்பது அவருக்குத் தெரியும், எனவே, அதைத் துருவாமல், "சரிம்மா, உன் இஷ்டப்படியே செய். வெளியே காத்திருப்பவர்களுக்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்து வைத்துக்கொள்.

இல்லையென்றால்....., நீ தருண் வீட்டில் இருந்ததற்கும், கண் காது, மூக்கு, வைத்து இங்கே விமர்சிக்கத் துவங்கி விடுவார்கள் ஜாக்கிரதை", எச்சரித்தார் அவளை.

"எனக்கும் தெரியும் சார்....., அதனால் தான் அதற்குத் தகுந்த பொய்யை, சொல்லப் போகிறேன். அதாவது,

விபத்து நடந்த பொழுது, தருண் எதேச்சையாக அந்தப் பக்கம் போகும் பொழுது என்னைப் பார்த்து, அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும்,

ஏற்கனவே அவருக்கு என்மேல் இருக்கும் கோபத்தால், எதற்கும், ஒரு பாதுகாப்புக்கு வேண்டித்தான், உங்களுக்கு நான் தகவல் தந்தேன், என்றும் சொல்லி அவர்களைச் சமாதானம் செய்யப் போகிறேன்", கோர்வையாகச் சொல்லி முடித்தாள்.

"நீ சொல்லுவதை, அவர்கள் நம்புவார்கள் என்று நினைக்கிறாயா விவி. உன் விபத்து நடந்த இடத்திற்கு, சரியாக தருண் எப்படி வந்தான் என்ற கேள்வியே பெரிதாக எழும் தெரியுமா?", அவளையே துளைக்கும் பார்வை பார்த்தார். அதில், எனக்குமே அந்த சந்தேகம் இருக்கிறது, என்று சொல்லாமல் சொன்னார்.

"அவர்களின் இந்த சந்தேகத்தைப் போக்கத்தான், நாளைக்கு, நம் பத்திரிக்கையின் கிசுகிசுவில், சுவாரசியமான விஷயம் சேர்க்கப் போகிறேனே. அதனால், அவர்களின் சந்தேகங்கள் அடிபட்டுப்போகும்", நம்பிக்கையாகச் சொன்னாள்.

"அப்படி என்னம்மா செய்தி, சொன்னால் நானும் சமாதானம் ஆவேனே", உற்சாகமாகக் கேட்டார்.

"சார், உங்களுக்குச் சொல்லாமலா? முதல்ல உங்க பார்வைக்குத்தான் அனுப்புவேன். அதன் பிறகுதானே மற்றவர்கள் பார்ப்பார்கள்", விஷயம் இன்னதென்று சொல்லாமல் சென்றுவிட்டாள்.

'இதைத் தருண் படித்தால், கண்டிப்பா இன்னும் ஒரு யுத்தம் எங்கள் இருவருக்குள் துவங்கும். அது, பெரிய யுத்தமாக மாறாது என்றுதான் நினைக்கிறேன். இம்முறை, நான் உண்மையைத்தானே எழுதப் போகிறேன். அதுவும், நானே கண்டு அறிந்த உண்மை', இதழ்களில் விஷமப் புன்னகை.

படப்பிடிப்பு தளத்தில், ஓய்வாக இருந்த கண்மணியின் அருகில் சென்று அமர்ந்தான் வாசு. அவனைப் பார்த்தும்

பார்க்காதவள் போன்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ம்கும்.....", தொண்டையைச் செருமி அவளைக் கலைக்க முயன்றான்.

அவன் செய்கையில், புன்னகையில் விரியத் துவங்கிய இதழ்களை, சிரமப்பட்டு அடக்கியவாறு, அமைதியாக அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"கண்ணு....., மணி....., கண்மணி, நானும் எவ்வளவு நாளா உன் பின்னாடி அலையிறேன், எனக்கு ஒரு பதிலைச் சொல்லவே மாட்டேன் என்கிறாயே", முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு கேட்டான்.

"அதான் என் பின்னாடி அலையாதீங்கன்னு நான் சொல்லிட்டனே", தோளைக் குலுக்கிச் சொன்னாள்.

"கண்மணி.... நான் கேட்டதற்கு, இது பதில் கிடையாது. எனக்கு நேர்மையான பதில் வேண்டும்", பிடிவாதமாகக் கேட்டான்.

"வாசு.... நானும், சொன்ன பதிலையே மறுபடியும் சொல்லிச் சொல்லி ரொம்பவே அலுத்து போயிட்டேன். எப்பவுமே உங்க ஆசை நிறைவேறாது, அதனால், இப்படி மனசை அலைபாய விடாமல் உங்க வேலையை மட்டும் பாருங்க", மெல்லிய வலி அவள் வார்த்தைகளில் எட்டிப் பார்த்தது.

"கண்மணி....., நானும் நாலு வருஷமா உன் பின்னாடி சுத்துறேன். எப்போ கேட்டாலும் மழுப்பலா ஒரு பதில், எனக்கு நேரடியான பதில் வேணும்", அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, கோபமாகக் கேட்டான். தருண் அங்கே இல்லாதது, அவனுக்கு வசதியாகப் போயிற்று.

இந்த விவாதம் துவங்கும் வேளைகளில் எல்லாம் இத்தோடு முடித்துவிடும் அவள், இன்று, தன் கட்டுப்பாட்டை இழந்தாள். அவன் இதுவரை, அவளைக்கோபமாகத்தொட முயன்றதில்லை. இன்று அதைச் செய்யவும் துணியவே, "வாசு.... நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்க, பிறகு

என் பதிலை நான் சொல்லுறேன். முதல்ல என் கையை விடுங்க", குரலில் அழுத்தம் கொடுத்து, தன் கையை உருவப் போராடியவாறே சொன்னாள்.

"முதல்ல நீ என்னன்னு சொல்லு பிறகு கையை விடுறேன்", முடியாது என்பதுபோல், அவள் கையை இன்னும் இறுகப் பற்றினான். அவளும் தன் முயற்சியை கைவிட்டாள்.

"உங்க அத்தைக்கு, அதாவது கமலா அம்மாவுக்குப் பிடிக்காத பொண்ணை, நீங்க கல்யாணம் செய்வீங்களா?", செய்வேன் என்று சொல்வானோ என்ற சிறிய எதிர்பார்ப்போடு கேட்டாள்.

"அதுக்கும், நான் உன்னை லவ் பண்ணுறதுக்கும், என்ன சம்பந்தம்", எரிச்சலாகக் கேட்டான்.

"நான் கேட்டதுக்கு மட்டும் பதில்.....", அவள் அதிலேயே நின்றாள்.

"அவங்களுக்குப் பிடிக்காத பொண்ணை, கல்யாணம் செய்ய மாட்டேன்தான். ஆனால் அவங்களுக்கு, உன்னைக் கண்டிப்பா பிடிக்கும்", கடைசி வார்த்தையைச் சொல்லும்போது, அவன் குரல் தேய்ந்து மறைந்தது.

"ம்ஹூம்....., உங்களுக்கே நம்பிக்கை இல்லை இல்ல....., அவங்க ஒத்துப்பாங்கன்னு. அப்படின்னா, இந்தக் காதலும் நிறைவேறாது", அழுத்திச் சொன்னாள்.

"கண்மணி....., அவங்க இப்போ புரியாமல் பேசுறாங்க. எடுத்துச் சொன்னால் புரிஞ்சுப்பாங்க", அவளைச் சமாதானம் செய்ய முயன்றான்.

"ஒரு விஷயத்தில் அவங்க சமாதானம் ஆனாலும், இன்னொரு விஷயத்தில் அவங்களைச் சமாதானம் செய்ய முடியாது. சில உண்மைகள் அவங்களுக்குத் தெரிய வரும்போது, அது, பல பக்க விளைவுகளைத்தான் ஏற்படுத்தும், அதனால்....., வேண்டாம். நாம இத்தோட முடிச்சுக்கலாம்", பழைய நிமிர்வு மீண்டிருந்தது அவளிடம்.

"கண்மணி, நீ என்ன சொல்ல வாற? எனக்கு எதுவும் புரியலை. தருணையும் உன்னையும், அவங்க தப்பா நினைப்பது எனக்குத் தெரியும். இப்போ, நான்தான் உன்னை காதலிக்கிறேன், திருமணம் செய்ய ஆசைப் படுகிறேன் என்று சொல்லும்பொழுது, உங்கள்மேல் இருக்கும் தப்பான அபிப்பிராயம் போய்விடும். பிறகு என்ன?", தன் இயல்பையும் மீறிக் கெஞ்சினான்.

அவனது கெஞ்சல் அவளையும் உருக்கியது. ஆனால்....., கமலா அம்மாவிற்கு உண்மை தெரியவரும்போது, தன்னைப் பற்றிய அவர்களது ஒரு கண்ணோட்டம் வேண்டுமென்றால் மாறலாம், தன் தாயைப் பற்றியும், தன் தாயோடான தந்தையின் தொடர்பையும் அறியும் பொழுது,

அவர், தன்னை எப்படிப் பார்ப்பார். தன்னை ஏற்றுக் கொள்வாரா? வெறுத்து ஒதுக்கி விடுவாரா? அப்பாவோடு சண்டை போடுவாரா? அவரது உடல்நிலையில் பின்னடைவு ஏற்படுமா? அவர் நிம்மதி பறிபோய்விடுமா?

தன்னை ஏற்றுக் கொண்டதால் தருணையும் ஒதுக்கி விடுவாரா? தன் சக்களத்தியின் மகளென்று, நாலுபேர் முன்னால், தன்னைத் தூற்றினால், தன்னால் தாங்கிக்கொள்ள முடியுமா? தருணுக்குத் தங்கையான பாவத்துக்கு, அவன் பெயர்வேறு கெட்டுப்போக வேண்டுமா?

இப்படி அடுக்கடுக்கான கேள்விகள், பயங்கள், நம்பிக்கை - யின்மைகள் அவளைத் துரத்த, இதில், இந்தக் காதலையும் நுழைக்க, அவள் தயாராக இல்லை. தான் ஒற்றை ஆளாக இருக்கும்வரை, தன் துன்பம், தன்னை மட்டுமே தாக்கும், அதில் வாசுவையும் இழுத்தால்....., வேண்டாம், அவனுக்கு இப்படியொரு இக்கட்டைக் கொடுப்பதைவிட, காதல் வலி மேலானது, என்று எண்ணினாள்.

அவளுக்குத் தெரியவில்லை, உள்ளிருந்து கொல்லும் காதல் வலிதான் அனைத்தையும்விட கொடியது என்று. வாசுவின் காதலும், ஆர்வமான பார்வைகளும், அவனைக் கடக்கும் வேளைகளில், அவன் கண்களில் தெறிக்கும்

மின்னலையும், அவன் அறியாமல், அணு அணுவாக ரசிக்கவே செய்வாள் கண்மணி.

இனிமேலும் அதையே தொடர்ந்தால் போயிற்று என்று எண்ணினாள். ஆனால் அது அவ்வளவு சுலபமில்லை என்று அவள் அறியவில்லை.

தன் கேள்விக்கு பதில் சொல்லாமல், யோசனையில் மூழ்கிவிட்ட அவளை, வியப்பாகப் பார்த்தவாறு நின்றிருந்தான். "கண்மணி.... நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், அப்படி என்ன யோசனை?", அவளைக் கலைத்தான்.

"வாசு..... என்கிட்டே இதுக்கு மேல எதையும் கேட்காதீங்க, இந்தக் காதல் நிறைவேறாது. வேண்டாம்.....", அவன் கையை உதறிவிட்டு, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

அவளது அழுகையை, வாசுவால் தாங்க முடியவில்லை. என்றாலும், எடுத்த செயலை, பாதியில் விட மனமில்லை அவனுக்கு. "கண்மணி, இந்தக் காதல் நிறைவேறாது, கல்யாணம் நடக்காது, நீ காரணத்தையும் சொல்ல மாட்ட, எல்லாம் சரி, உன் மனசில், நான் இருக்கேனா இல்லையா, அதை மட்டுமாவது சொல்லேன்.

என் காதல் நிறைவேறாமல் போகட்டும், ஆனால், என் காதல் உன்னைத் தீண்டியதா என்பதையாவது சொல்லேன். அந்த ஒரு சந்தோசமாவது எனக்குக் கிடைக்கட்டும். அதைத் தெரிஞ்சுக்கலன்னா என்னால் நிம்மதியா இருக்கவே முடியாது", அவளிடம் இதற்குமேல், பேச முடியாது என்பது புரியவே, அவளிடம் யாசித்தான்.

அதற்கு பதில் சொல்லாமல், அவனைப் பார்க்காமல் திரும்பி நின்று கொண்டாள். கலங்கும் கண்களை மறைக்க, வேறு வழி தெரியவில்லை அவளுக்கு. "ஏன் வாசு, ஐ லவ் யூன்னு சொல்லுற மூணு வார்த்தையில் தான், என் காதலை, நான் உனக்குப் புரிய வைக்கணுமா?

வெளியூர் பட பிடிப்பில், நீ எழாமல் உறங்கும் போது எல்லாம், உன்னை இன்னொரு அலாரம் எழுப்பி விடுமே,

அந்த அலாரம் சொல்லாத என் நேசத்தையா, அந்த வார்த்தைகள் உனக்குத் தந்துவிடும்.

தருணிடம் நீ மாட்டும் பொழுதெல்லாம், கண்ஜாடையால் உன்னை எச்சரிக்கை செய்வேனே, என் கண்கள் உரைக்காத மொழியையா, என் இதழ்கள் உன்னிடம் சொல்லிவிடும்.

காலையில் எழுந்ததும், உன் முகத்தில் விழிப்பதும், மூன்று வேளை உணவும் உன்னுடன் சேர்ந்தே உண்பதும், இரவு உறங்கும் முன்னர், ஏதாவது ஒரு சாக்குவைத்து, நீ வந்து என்னைப் பார்க்கவில்லை என்றால், தண்ணீர் வைக்கவென்று உன்னைப் பார்க்கவரும் என் தவிப்பு உனக்கு உணர்த்தாத அர்த்தத்தையா, அந்த வார்த்தைகள் உனக்கு விளக்கிவிடும்.

அப்படி அந்த வார்த்தைகளில் நான் சொன்னால்தான் உனக்குப் புரியுமென்றால் சொல், இப்பொழுதே நான் சொல்கிறேன்", அவள் உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து, தெறித்து வந்து விழுந்த வார்த்தைகளைக் கேட்டு, சிலையாகிவிட்டான் வாசு.

அவனிடத்தில் தன் காதலைச் சொல்லிவிட்ட நிம்மதியா? இல்லையென்றால், தன் மனதைத் திறந்து காட்டிய திருப்தியா? இல்லையென்றால், தன் மனதில் இதுவரை சுமந்திருந்த பாரத்தை இறக்கி வைத்த சந்தோசமா? இதற்கென்று தெரியாமல், அழுகையில் கரைந்தாள் கண்மணி.

ஒரு பெண்ணால், இவ்வளவு நாசூக்காக, தன் காதலை, உடையவனுக்கு விளக்க முடியுமா? எனக்கு விளங்க வைக்கின்றாளே இவள். இவளிடமா என்மேல் காதல் இருக்கிறதா என்று சொல் என்று கேட்டேன்....., வெட்கப்பட்டான் அவன்.

அழும் அவளுக்கு, எப்படி ஆறுதல் சொல்லவென்று ஒரு நிமிடம் தடுமாறியவன், மேலும் ஒரு நொடி கூடத் தாமதிக்காமல், அவளை இழுத்து தன் நெஞ்சோடு வைத்து

சாய்த்துக் கொண்டான். அவளும் அவன் நெஞ்சோடு ஒடுங்கினாள்.

சிறிது நேரம் அவளை அழ விட்டவன், "கண்மணி, உன் மனசில் ஏதோ ஒன்று உன்னை அழுத்துது. அதை நீ, என்னிடம் சொல்லவும் பிரியப்படவில்லை. ஆனால், நான் ஒன்று மட்டும் சொல்கிறேன், எனக்குத் திருமணம் என்ற ஒன்று நடந்தால், அது உன்னோடுதான்,

அதுவும், அனைவரின் ஆசியோடுதான் நடக்கும். இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக்கோ, நான் தருணிடம் பேசுகிறேன். அவன்தானே உனக்கு எல்லாமாக இருக்கிறான். இப்போதைக்கு நீ எதைப்பற்றியும் யோசிக்காமல் நிம்மதியாக இரு", அவள் தலை கோதி ஆறுதல் அளித்தான்.

இதுவரை அவன் தோளில் சாய்ந்து அழுது கொண்டிருந்தவள், அவன் பேச்சில் சுய நிலைக்கு வந்து, அவனை விட்டு வேகமாக விலக முயன்றாள். அவளது விலகலை உணர்ந்து, அவள் இடையோடு கைகளைக் கோர்த்து, இறுக்கியவன்,

"இனிமேல் என்னைவிட்டு விலக முடியும் என்று நினைக்காதே. அதே மாதிரி, உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளவும் முயலாதே. எனக்கு நீதான் மனைவி", என்று சொல்லி, அவள் இதழ்களில் தன் முதல் முத்திரையைப் பதித்தான். திகைத்து விழி விரித்தவள், அவனிடமிருந்து விலகத் தோன்றாமல், அவன் இதழ் தீண்டலில் கரைந்தாள்.

கால்கள் தொய்ந்து பலமிழக்க, அவன் சட்டையின் காலரைப் பற்றிக்கொண்டு, அவனோடு ஒன்றினாள். அவள் நெகிழ்வு புரிந்து, இடையில் கை கொடுத்து, தன்னுடன் இறுக்கினான். நொடிகள் நிமிடங்களாவது தெரியாமல் உறைந்திருந்தார்கள்.

காட்சி முடிந்து, அவனுக்கு ஒதுக்கியிருந்த அறைக்குச் செல்லாமல், கண்மணியைக் காண வந்த தருண்,

இவர்களின் பேச்சு அனைத்தையும் கேட்டவன், வந்தச் சுவடு தெரியாமல், அங்கிருந்து அகன்றான்.

இதுவரை, தாயைக் காணச் செல்வதைத் தள்ளிப் போட்டிருந்தவன், இப்போது உடனே செல்லவேண்டும் என்று முடிவு எடுத்தான்.

கதவு - 17

கடலின் ஆழத்தையும்

கிரஹங்களின் தூரத்தையும்

காற்றின் வேகத்தையும்

அலையின் சீற்றத்தையும்

அளவிடும் என்னால்

உன் மனதில் உள்ளதை

அறிய இயலவில்லையே.....

முழுதாக நான்கு மாதங்களுக்குப் பிறகு, தாய் வீட்டுக்கு வருகிறான் தருண். உடன் வாசுவையும், கண்மணியையும் அழைத்து வந்திருந்தான். கண்மணி காரில் அமர்ந்துகொண்டு, வீட்டுக்குள் வரமாட்டேன் என்று சாதித்தாள். வேறு வழியில்லாமல் அவர்கள் உள்ளே சென்றார்கள்.

மகன்மேல் எவ்வளவுதான் கோபம் இருந்தாலும், வீட்டிற்கு வந்தவனிடம் பேசாமல் இருக்க முடியவில்லை அவரால்."என்ன.... ஐயாவுக்கு இப்போதான் வீட்டுக்கு வர, வழி தெரிஞ்சுதா? ஏண்டா வாசு, நீயும் அவனோட சேர்ந்து அவனை மாதிரியே ஆயிட்ட.

வெளியூர் ஷூட்டிங்னா பரவாயில்லை, இங்கே சென்னைலயே உக்காந்துட்டு, வீட்டுக்கு வராமல் அப்படி என்னடா வெட்டி முறிக்கறீங்க?", மகனிடம் நேரடியாகப் பேசாமல், வாசுவிடம் பேசினார் கமலம்.

"அத்தை....., நான்தான் உங்களை, வாரம் வாரம் வந்து பாக்குறேனே. பிறகு என்ன?", அவர் தன்னைக் குறை சொல்வது பொறுக்காமல் சொன்னான்.

"ஏன்.... தொரை பதில் சொல்ல மாட்டாரோ?", கமலம் கேட்ட பிறகுதான், கேள்வி தனக்கல்ல, தருணுக்கு என்பதை,

புரிந்து கொண்டான்.

"அம்மா....., அதான், இப்போ வந்துட்டனே பிறகு என்ன? வீட்டுக்கு வரவில்லை என்றால், வரலை என்று புலம்ப வேண்டியது, வந்தால், நிக்க வச்சுக் கேள்வி கேக்குறது. நான் என்னதான் செய்யட்டும்? இப்போ நிக்கவா போகவா?", தாய், தன்னை அமரக் கூட விடாமல் கேள்வி கேட்டதால், கோபமானான் அவன்.

"இது உன் வீடு, இங்கே, நாங்க உன்னை, வெத்தலைப் பாக்கு வச்சு அழைக்கணுமா? அதான் வீட்டுக்குள்ளே வரை வந்தாச்சே, அப்படியே உக்கார வேண்டியதுதானே", நொடித்துக் கொண்டார்.

"இப்போ இப்படிச் சொல்லுவீங்க, பிறகு ஷூட்டிங் முடிச்சு லேட்டா வந்தால், ஏன் இவ்வளவு நேரம்னு கேட்டு டார்ச்சர் பண்ணுறது. அதனால்தான், நான் இங்கே வராமலே இருக்கேன்", கடுப்பாகச் சொன்னான்.

"முழுப் பூசணிக்காயை சோத்துல மறைக்கிறது இதுதானா? தருண், நீ அதுக்காகத்தான் இங்கே வீட்டில் இல்லாமல், உன்னோட மாளிகையில் தங்கி இருக்கியா? அப்போ, உன்னோட சித்து விளையாட்டை எல்லாம் இங்கே வச்சுக்க முடியாது என்பதால் இல்லையா? அதான்..... கல்யாணம் பண்ணாமலே ஒருத்தியைக் கூட்டி.....",

"அம்மா.....", அவன் அலறல், அவர் வார்த்தைக்குத் தடை போட்டது.

"ஏண்டா கத்துற? உண்மையைச் சொன்னால் கோபம் வருதோ? அப்படி எதுவும் இல்லன்னா, ஏண்டா மறைக்கணும். சினிமாவில் நடிக்கப் போன நாலே மாசத்தில் அவளைக் கூட்டி வந்து, தனியா மாளிகை கட்டி, குடி வச்சு இருக்க. அப்படி இருக்கும்போது, இதை நான் என்னன்னு நினைக்கட்டும்", சாடினார் அவர்.

"அம்மா..... நீங்க நினைகிற மாதிரி எதுவும் இல்லமா?", எப்படிச் சொல்லவென்று தெரியாமல் திணறினான்.

"நான் நினைக்கிற மாதிரி இல்லன்னா? நினைக்காத மாதிரி இருக்கா? அப்படி உன் மனசில் எதுவும் இல்லன்னா, அவளை இந்த வீட்டுக்கு இல்லடா, நீ அழைச்சுட்டு வந்து இருக்கணும்", பொரிந்தார் அவர்.

வாசுவிற்குதான் சங்கடமாக இருந்தது. கமலம், தருணை வீட்டுக்கு அழைத்துவா, என்று தொல்லை செய்வார். அழைத்து வந்தால் இப்படிச் சண்டை போடுவார். தாய்க்கும் மகனுக்கும் நடுவில் அவன் நிலைதான் பரிதாபம்.

"இந்த வீட்டில், ஒத்தை மனுஷியா நானும் எவ்வளவு நாள்டா இருக்குறது? இருக்குறது, கருவேப்பிலை கொத்து மாதிரி ஒத்தை புள்ளை, அதுவும் சரியில்லன்னா நான் என்னதான் செய்யிறது.உனக்கு, இந்த அம்மாவைத்தான் பார்க்க வேண்டாம். ஒரு மனுஷன் படுக்கையில் கிடக்கிறாரே, அவரைப் பார்க்கணும்னு கூட தோணாதாடா?", கமலம் அங்கலாய்த்தார்.

தந்தையின் பேச்சு எழுந்ததுமே, அவனுக்கு ஆத்திரமாக வந்தது. இவையெல்லாம் அவரால் வந்தது தானே. அவர் படுக்கையில் விழப்போய் தானே, அவருக்கு வந்த கடிதம் அவன் கையில் சிக்கியது. அந்தக் காரணத்தால் தானே, கண்மணியின் விஷயத்தில் அவன் தலையிட வேண்டியதாகப் போனது.

இதையெல்லாம் நினைத்து அவன் அமைதியாகிவிடவே, "தருண்.... அதென்ன, எப்போ அவளோட பேச்சை எடுத்தாலும் இப்படி அமைதியாயிடுற? உன்னை அவ, அப்படியா மயக்கி வச்சு இருக்கா?", போலியாக வியந்தார், தாயின் கவலை அவருக்கு.

"அத்தை....., அவ அந்தமாதிரி பொண்ணு கிடையாது", அவர்களுக்கு இடையில் புகுந்தான் வாசு.

"அடப்பாவி.... என்னடா உன்னையும் மாத்திட்டாளா? அவளோட காத்து பட்டாலே எல்லோரும் மாறிடுவீங்களாடா? அப்போ ஒரு நாள் இங்கேயும் அழைச்சுட்டு வாங்களேன்,

நானும் மாறுறேனான்னு பாக்குறேன்", சலிப்பாகச் சொன்னார்.

அவர் கண்மணியைப் பற்றிப் பேசிய பேச்சிலும், அவர் செய்கையிலும் குபு குபுவென்று ஆத்திரம் மண்டியது தருணுக்கு.

"டேய் வாசு, வெளியே போய் அவளை உள்ளே அழைச்சுட்டு வாடா. இன்னைக்கே இந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கணும்", கிட்டத்தட்ட கத்தினான். வாசு அசையாமல் நிற்கவே, "ஏண்டா இன்னும் மரம் மாதிரி நிக்கிற, ஓஹோ, அவங்க சொன்னால்தான் செய்வியா? உனக்குச் சம்பளம் தருவது, நானா இல்லை அவங்களா? இப்போ நீ போகல.....", தருணின் கண்களில் தெரிந்த அக்கினியில், ஒரு நொடி கூட தாமதிக்காமல் கண்மணியை அழைக்கச் சென்றான்.

"அம்மா.... அவ வர முன்னாடி உங்ககிட்டே ஒரே ஒரு விஷயம் மறுபடியும் சொல்லுறேன். கண்மணியைப் பற்றி, நீங்க முதல்நாள் என்னிடம் கேட்ட போது, நான் என்ன பதில் சொன்னேன்னு ஞாபகம் இருக்கா?", தாயை உறுத்துப் பார்த்தான்.

கமலம் பதில் சொல்லாமல், அவனையே அலட்சியமாகப் பார்த்தார். "உங்களுக்கு மறந்து போயிருந்தால் மறுபடியும் சொல்லுறேன், அவ எனக்கு, கூடப் பிறக்காத தங்கச்சி மாதிரி, ஏன் தங்கைதான். அவ எனக்குத் தங்கச்சின்னா, உங்களுக்கு மகள் மாதிரி.....", மேலே உங்களுக்கே தெரியும், என்பதுபோல் அமைதியாகிவிட்டான்.

வெளியே வாசுவோ, கண்மணியோடு போராடிக் கொண்டிருந்தான். "கண்மணி.... தருண் உன்னை வீட்டுக்குள் வரச் சொன்னான்", தயக்கமும், ஆர்வமும் போட்டி போட்டது அவன் குரலில்.

அவன் ஆர்வம் புரிந்தாலும், அவள் மனதுக்குள் பந்தையக் குதிரை ஓடத் துவங்கியது அவளுக்கு. கமலம் அவளிடம்

பேசிய இரண்டு முறையும், "நீதான் அவளா.....?", என்ற ரீதியிலேயே பேசி வைத்திருந்தார்.

இன்று அவளை வீட்டிற்கு அழைக்கும் பொழுதே, வரவில்லை என்று சாதித்தாள். ஆனால், வாசு அவளிடம் கண்களால் கெஞ்சவே, அரை மனதாகச் சம்மதித்தாள், அதுவும், வீட்டுக்குள் வர மாட்டேன் என்ற நிபந்தனையோடுதான்.

அதை மறந்துவிட்டு, இப்பொழுது அவன் அழைத்தால் அவளும் என்னதான் செய்வாள். மனதின் ஓரத்தில் தந்தையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல், கடல் அளவு அவளுக்கு இருக்கிறதுதான்.

அதற்காக, தாய் துரோகம் செய்த வீட்டிற்குள் காலடியெடுத்து வைக்க, அவளுக்குத் தயக்கமாக இருந்தது. அதற்கு முழு காரணமும் அவளது தாய்தான். சாகும்வரை, "கமலம் அவர்களுக்கு துரோகம் செய்துவிட்டேன், தனக்கு உதவ வந்த பெருமாளை, இக்கட்டில் சிக்க வைத்துவிட்டேன்", என்று தன்னிரக்கத்திலேயே கரைந்து உயிரை விட்டார் அவர்.

அதை உடனிருந்து பார்த்ததாலோ என்னவோ, கண்மணியின் மனதிலும் அந்த எண்ணமே பதிந்து விட்டது. கமலத்தைப் பார்க்கவே அஞ்சினாள். கண்மணிக்கு எவ்வளவு தயக்கங்கள் இருந்தாலும், தனக்கு உருக் கொடுத்த தந்தையை, ஒரு முறையாவது நேரில் பார்க்கவேண்டும் என்று எண்ணினாள்.

தருணிடம் வந்து சேர்ந்த முதல் மாதத்தில், எங்கேயாவது வைத்து தந்தையை பார்த்துவிட மாட்டோமா என்று ஏங்கினாள். அவளிடம் தந்தையின் புகைப்படம் கூட கிடையாது. தருணிடம் கேட்கவும் தயக்கம், பயம்.

"எந்த எண்ணத்தில் அப்பாவை பார்க்க விரும்புகிறாய்?", என்று கேட்டுவிடுவானோ என்று அஞ்சியே தன் ஆசையைப் புதைத்துக் கொண்டாள்.

பின்னர் வாசுவிடம், தருண் குடும்பத்தைப் பற்றி மேலோட்டமாக விசாரிப்பதுபோல், கேட்ட பிறகுதான் தெரியும், பெருமாள் படுக்கையில் இருக்கின்றார் என்ற விஷயமே. துடித்துதான் போனாள்.

தன் தாயின் வாழ்க்கையை சீரழியாமல் காத்து, சமுதாயத்தில் ஒரு அந்தஸ்த்தையும் கொடுத்து, தனக்கு உயிர் கொடுத்த தந்தை, நடமாட முடியாத நிலையில் இருக்கிறார் என்று அறிந்து கலங்கித்தான் போனாள்.

இந்தச் செய்தியை அறிந்த பிறகு, தந்தையைச் சந்திக்கவேண்டும் என்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டாள். தருணிடம் அவள் கேட்டிருந்தால், அவள் ஆசையை நிறைவேற்றியிருப்பான்தான், ஆனால் அவளுக்குக் கேட்கத்தான் தயக்கம்.

தன் வாழ்க்கை முழுவதும் கண்முன் விரிய, வாசுவைத் துரத்துவதிலேயே குறியாக இருந்தாள்.

"வாசு.... நீங்க போங்க.... நான் வர மாட்டேன். இங்கே வரும்போதே சொன்னேன், உள்ளே எல்லாம் வர மாட்டேன்னு. இப்போ இப்படிப் பிடிவாதம் பிடிச்சீங்கன்னா, நான் என்ன செய்யட்டும்? இப்படியே இறங்கிப் போய்டுவேன்", மிரட்டினாள்.

"நீ என்ன வேண்ணா செய். அதுக்கு முன்னாடி உள்ளே வந்துடு. அங்கே தருண் ஏற்கனவே கோபமா இருக்கான். இதில் நீவேற படுத்தாதே, வா", அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"ஹையோ, முதல்ல கையை விடுங்க, என்ன இப்படி வெளியே வச்சு கையைப் பிடிச்சு இழுத்துகிட்டு", சுற்றிப் பார்வையைச் சுழலவிட்டவாறே சொன்னாள்.

"ஹேய்.... என்ன விளையாடுறீங்களா ரெண்டு பேரும். ஒருத்தன் அழைச்சுட்டு வான்னு உயிரை வாங்குறான். நீ என்னன்னா வர மாட்டேன்னு, என் கழுத்தை அறுக்குற, முதல்ல வாடி", அவள் கையைப் பிடித்து வலுக்கட்டாயமாக இறக்கினான்.

அவனிடமிருந்து விடுபடப் போராடினாள். இவர்களைக் காணாமல், வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள் தருணும், கமலமும். வாசுவின் செய்கையில் கோபம் கொண்டு, தருண், கத்துவதற்கு வாய் திறந்த வேளையில், "வாசு....., என்னடா.... ஒரு பொம்பளைப்புள்ளை கையைப் புடிச்சு இழுக்குற? விடுடா அவளை", கமலத்தின் குரல் அதிகாரமாக ஒலித்தது.

என்னதான் இருந்தாலும் அவரும் ஒரு தாய். தருண் அவளை, தங்கை என்று இவ்வளவு அழுத்திச் சொன்ன பிறகு, அவருக்கு அவளைத் தவறாக நினைக்க முடியவில்லை. எனவேதான், நேரமாவதை உணர்ந்து வெளியே வந்தார்.

கமலத்தின் குரலில் மிரண்டாலும், கண்மணியின் கைகளை அவன் விடவில்லை. அவள் கைகளை இறுகப் பற்றி அழைத்துவந்து, கமலத்தின் காலில் விழுந்தான், கண்மணியையும் விழ வைத்தான். கண்மணியின் மறைமுகமான போராட்டங்கள் எதுவும் வெற்றிபெறவில்லை.

கமலம், வாசுவின் செய்கையில், அதிர்ந்துதான் போனார். பெற்ற மகன் என்னடாவென்றால், ஒரு பெண்ணை அழைத்துவந்து தங்கை என்கிறான். தன் அண்ணனின் மகனோ, அதே பெண்ணோடு, ஆசீர்வாதம் வாங்க, காலில் விழுகிறான். என்ன செய்வது என்று தெரியாமல், ஒரு நிமிடம் குழம்பினார்.

"அம்மா..... அவங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க. அப்படியே உள்ளே அழைச்சுட்டு வாங்க", தாயின் தோள் தொட்டுச் சொல்லவே, "நல்லா இருங்க", வாசுவிற்காக இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு, உள்ளே செல்லத் திரும்பினார்.

தருண் அவரைக் கூர்மையாகப் பார்க்கவே, அரை மனதாக, "உள்ளே வாங்க....., வாம்மா.....", சொல்லிவிட்டு, 'வந்தால் வா' என்ற பாவனையில் உள்ளே சென்றுவிட்டார்.

உள்ளே வந்து அவர்களை அமரச் சொன்னார். அங்கே சங்கடமான அமைதி நிலவியது. யார் அதைக் கலைக்கவென்று தெரியாமல் தயங்கினார்கள் அனைவரும். "அம்மா காபி.....", சங்கடமான அமைதியைக் கலைத்தான் தருண்.

"ம்ம்.....", என்ற உறுமலுடன், உள்ளே எழுந்து சென்றார். கண்மணி மிகவும் சங்கடமாக உணர்ந்தாள். கவலையும், அவமானமும், அவமதிப்பும் போட்டி போட்டது அவள் முகத்தில். யாரையும் நிமிர்ந்து பார்க்காமல், அப்படியே அமர்ந்திருந்தாள்.

வாசு அவளைப் பரிதாபமாகப் பார்க்க, அதை உணர்ந்தவன்போல், "என்ன மச்சான்....., சந்தோஷமா?", தருண் வாசுவின் அருகில் சென்று அமர்ந்து தோளில் கை போட்டுக் கேட்க, வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தான் வாசு. கண்மணியும் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்.

தருண் இதுவரை, வாசுவிடம் கொஞ்சம் இயல்பாகக் கூடப் பேசியதில்லை. அப்படிப்பட்டவன் உரிமையாக, மச்சான் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், தோளில் வேறு கை போட்டால், அவனும்தான் என்ன செய்வான். இவன் தருண் தானா, என்ற சந்தேகமே அவனுக்கு வந்துவிட்டது.

"என்ன மச்சான் அப்படிப் பாக்குறீங்க?", அவனைச் சீண்டினான்.

"சார்....., நீங்க என்னை வாசுன்னே சொல்லுங்க. மச்சான்னு சொல்லுறது என்னமோ வித்தியாசமா இருக்கு", கொஞ்சம் நெளிந்தவாறே சொன்னான்.

"அதெப்படி மச்சான்....., தங்கை புருஷனை பேர் சொல்லி கூப்பிடுறது? அது மரியாதையா இருக்காதே?", அவனை இன்னும் ஓட்டினான்.

"சார், என்னை வாசுன்னே சொல்லுங்க. எனக்கு என்னமோ, நீங்க யாரையோ சொல்லி கூப்பிடுற மாதிரி இருக்கு", தயக்கமாகச் சொன்னான்.

"அதெப்படி முடியும் வாசு. வீட்டுக்கும், தொழில் செய்யும் இடத்துக்கும், வித்தியாசம் இருக்கணுமே. வீட்டில், நீ எனக்கு மச்சான்தான். வெளியே வேண்டுமென்றால், வாசுன்னு சொல்லுறேன். அதைவிட, இப்போ நான் வேற ஒன்றைத்தான் யோசிக்கிறேன்.

தங்கை புருஷனை எனக்குக் கீழே வேலைக்கு வைக்கிறது சரி வருமா? வராதான்னு? கல்யாணம் முடியிற வரைக்கும் என்னோட இரு. பிறகு, நம்மளோட ஹோட்டல் நிர்வாகத்தை, கவனிக்கப் போய்டு. உன்னோட படிப்பை வீணாக்க வேண்டாம்", ஒரு பொறுப்பான அண்ணனாக அனைத்தையும் திட்டமிட்டான்.

இவர்களின் பேச்சைக் கேட்டவாறே வந்தார் கமலம். உடன் வந்த வேலைக்காரியிடம், காபியை அங்கே வைக்கச் சொல்லிவிட்டு, அவளை அனுப்பினார்.கமலம் கண்மணியைப் பார்க்க, கண்மணியின் கண்கள் கலங்கியிருந்தது.

கமலமும் மகனை வியப்பாகப் பார்த்தார். ஒரு பேச்சுக்கு அவளை தங்கை என்று சொல்கிறான் என்று பார்த்தால், இவன் நிஜமாகவே தங்கைக்கு செய்யும் அனைத்தையும் செய்கிறானே, என்னவாக இருக்கும் என்று யோசனை செய்தார்.

கண்மணி, முழுக்க, முழுக்க அவள் தாயின் பிரதி பிம்பமாக இருந்தாள், பெருமாளின் சாயல் அவளிடம் துளியும் இல்லை. எனவே அவருக்கு, அப்படி இருக்குமோ என்ற சிறிய சந்தேகம் கூட எழவில்லை.

அனைவருக்கும், காபியைக் கண்மணியே கொடுத்தாள். அனைவரும் குடிக்கத் துவங்கவே, "என்ன தருண், நீ நினைத்து வந்த காரியம் நல்லபடியா முடிஞ்சுதா?", சட்டெனக் கேட்டார் கமலம்.

அனைவருமே ஒரு நிமிடம், காபி குடிப்பதை நிறுத்திவிட்டு, தருணையே பார்த்தார்கள். தருண் எதுவும் சொல்லாமல்,

அவன் காபியை, சுவைத்துக் குடிப்பதில் முனைப்பாக இருப்பதாகக் காட்டிக் கொண்டான்.

"அண்ணா அப்படியா?", என்ற பார்வையை கண்மணி பார்க்க, அதிர்ந்த பார்வையை வாசு தாங்கி இருந்தான்.

அவன் பதில் சொல்லாமல் இருக்கவே, "தருண்... நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லவே இல்லையே", நினைவூட்டினார்.

"அதான், எல்லாம் உங்க அண்ணன் பையனே செஞ்சுட்டானே. நான் உங்ககிட்டே எதுவுமே சொல்லலையே. அவனா போய் அவ கையைப் புடிச்சு இழுத்தான். நீங்க திட்டுன உடனே, நல்ல புள்ளை மாதிரி கால்ல விழுந்தான். நீங்க, கொடை வள்ளல் மாதிரி ஆசீர்வாதம் செஞ்சீங்க. இதில், நடுவில் நான் எங்கே வந்தேன்", தோளைக் குலுக்கினான்.

"அப்படியா.....?", சொல்லிவிட்டு அமைதியானார்.

"அத்தை, காபி குடிச்ச உடனே, மாமாவைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கட்டுமா", வாசு கேட்கவே, மறுத்துப் பேசப் போனவன், கண்மணியின் கண்களில் தெரிந்த ஆர்வத்திலும், ஆசையிலும் அமைதியானான்.

அவனிடம் மறுப்பு இல்லை என்று தெரியவே, இன்னும் குழம்பினார் கமலம். அடுத்த பத்தாவது நிமிடம், பெருமாளின் அறைக்கு முன்பாக நின்றார்கள் அனைவரும்.

கண்மணிக்குத்தான் இதயம் தொண்டை குழியில் துடித்தது. கைகள் இரண்டும் ஐஸ் துண்டங்களாகச் சில்லிட்டது. கால்களில் அப்படி ஒரு நடுக்கம். முதல் முறையாகக் காணப்போகும் தந்தையின் முகம். அவர் எப்படி இருப்பார்? என்ற ஆவல். அனைத்துமாக, கலவையான உணர்வுக்கு ஆளானாள் கண்மணி.

அவளை விட மிகுந்த குழப்பத்தில் இருந்தார் கமலம். தருண் எதை நினைத்து இப்படியெல்லாம் செய்கிறான்?

கண்மணியின் முகத்திலோ, தருணின் முகத்திலோ கபடம் சிறிதும் இல்லையே. வாசு கூடவே இருப்பவன், அவனுக்கு இவர்கள் உறவு முறையில் சிறிது சந்தேகம் இருந்திருந்தாலும் ஒத்துக் கொண்டிருக்க மாட்டான்.

எண்ணங்கள் அவரை வட்டமிட, குழம்பித் தவித்தார். அவர் குழப்பங்களுக்கு விடை கிடைக்குமா?

கதவு - 18

என்னிடமிருந்து காதலை

மட்டும் பெற்றுக்கொண்டு

கோபத்தையெல்லாம் விலக்குகிறாயே

உன்னால் மட்டும்

எப்படி முடிகிறது.....?

டப்பிடிப்பு தளத்தில், குழப்பத்தில் இருந்தாள் லயா. ஒரே நாளில், தாய் அவளை, மறுபடியும் தன் வீட்டுக்கே வர வைத்ததில் இருந்த சூட்சமம், அவளுக்குத் தெரியவில்லை. அன்று, தன்னைக் கட்டாயப்படுத்தி, தருணின் வீட்டிற்கு அழைத்துச் சென்றவரும் அவர்தான், இன்று, வீட்டிற்கு வரச் சொன்னதும் அவர்தான்.

பழைய லயாவாக இருந்திருந்தால், தாயின் செயலை நினைத்து வியந்திருப்பாள். ஆனால், இன்று இருப்பதோ புதிய லயாவாயிற்றே. ஷெட்டி, அவ்வளவு சீக்கிரம் தன்மேல் வைத்த கண்ணை விலக்கிவிடுவான் என்று எண்ணவில்லை அவள்.

அப்படியிருக்கையில், தாய் எப்படி இயல்பாக இருக்கிறார். தன்னையும் கண்கொத்திப் பாம்பாக கண்காணிப்பது போலும் இல்லையே. இந்த மாற்றங்களுக்கு என்ன காரணம்? எவ்வளவு யோசித்தும் அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

தெய்வாவோ, மகளை ஷெட்டியிடம் அனுப்ப, எது சரியான சந்தர்ப்பம் என்று தேடிக் கொண்டிருந்தார். அவர் இந்த சிந்தையிலே மூழ்கி இருந்ததால், லயாவைப் பாதுகாக்கும் பணியைக் கூட விட்டுவிட்டார்.

லயாவுக்கு, தன் மன உணர்வுகளை யாரோடாவது பகிர்ந்துகொள்ள வேண்டும் போல் இருந்தது. அவளுக்கு, தன் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் அளவு,

நெருங்கிய தோழிகளோ, தோழமையோ கிடையாது. அனைத்தையுமே, தாயுடன் மட்டுமே பகிர்ந்து பழக்கம்.

தாயைப் பற்றியே யாரிடம் குறை கூற முடியும்? எனவே, தருணைத் தேடிச் செல்ல முடிவெடுத்தாள். முதல் வேலையாக, அவன் அலைபேசிக்குத் தொடர்பு கொண்டாள். வாசுவின் கைகளில் இருந்த, தருணின் அலைபேசி இசைத்து, தன் இருப்பைத் தெரிவித்தது.

அலைபேசியில் ஒளிர்ந்த லயாவின் பெயரைப் பார்த்துவிட்டு, உடைமாற்றும் அறையில், ஒப்பனையில் இருந்த தருணிடம், அலைபேசியை கொடுக்கச் சென்றான். அவனுக்கு கண்மணி ஒப்பனை செய்துகொண்டிருந்தாள்.

உடை வடிவமைப்பாளர், உடையைத் தயாராக வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். அனைவரும் அங்கே இருக்கவே, கொஞ்சம் தயங்கினான். கண்மணி, கண்களால் என்னவென்று கேட்கவே, அலைபேசியை அவளிடம் காண்பித்தான்.

அதை வாங்கிப் பார்த்தவள், தருணிடம் கொடுக்காமல், அலை பேசியை எடுத்துப் பேசினாள்.

"ஹலோ....., நான் கண்மணி பேசுறேன், தருண்ண இங்கே ஒப்பனையில் இருக்கார். ஏதாவது முக்கியமான விஷயமா? என்கிட்டே சொல்ல முடியும்னா சொல்லலாம்", லயாவுக்கு ஏதோ உதவி தேவை என்பதால்தான் அழைக்கிறாள் என்பதை உணர்ந்து கேட்டாள்.

"கண்மணி நீங்களா.....? எனக்கு, தருண்ண கிட்டே பேசியே ஆகணும். மனசுக்குள்ளே இனம் புரியாத பயம், என்னை ஆட்டி வைக்கிது. சொந்த வீட்டிலேயே பாதுகாப்பே இல்லாத மாதிரி, இப்போ நான் பீல் பண்ணுறேன். ப்ளீஸ் ஏதாவது செய்ங்களேன்", அவள் குரலில் இருந்த தவிப்பு, கண்மணிக்குப் புரிந்தது.

சுற்றிலும் இவ்வளவு பேரை வைத்துக்கொண்டு, தருணிடமும் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், "சார் இப்போ ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்திடுவாங்க. நீங்க

நேர்லயே பேசிக்கறீங்களா? ஏன்னா லேட் ஆகுது", நிலைமையைப் புரிய வைக்க முயன்றாள்.

அதைவிட, தருண் ஷூட்டிங்குக்கு நேரமாகும் வேளையில் அலைபேசியைக் கொடுத்தால், அதைத் தூக்கிபோட்டு உடைக்கவும் தயங்க மாட்டான், எனவேதான் கண்மணி மிகவும் தயங்கினாள்.

"கண்மணி ப்ளீஸ்..... நான் அவர்கிட்டே பேசியே ஆகணும். கேமரா முன்னாடி நின்னு சொந்த விஷயத்தைப் பேசவே முடியாது. எனக்கு இப்போ இருக்கும் மன நிலையில் நடித்தால், காட்சியெல்லாம் தலைகீழாதான் வரும். அவர்கிட்டே சொல்லிப் பாருங்களேன்", கெஞ்சினாள் அவள்.

கண்மணி, சங்கடமாக தருணைப் பார்க்க, அவள் கையிலிருந்து அலைபேசியை வாங்கி செவிமடுத்தான். "ஹலோ.....", அவன் அழைப்புக்காகவே காத்திருந்தவள்போல், லயாவின் விசும்பல் ஒலி அவனுக்குக் கேட்டது.

சுற்றி இருந்தவர்களை, வெளியே செல்லுமாறு செய்கை செய்ய, உதவியாளர்கள் அனைவரும் வியப்பான பார்வையுடன் வெளியேறினார்கள். வாசு, கண்மணியைப் பார்த்து, என்னவிஷயமென்று இதழசைவில் கேட்க, 'பிறகு சொல்கிறேன்' என்று அவளும் அவ்வாறே பதில் சொன்னாள்.

"லயா.... ஷூட்டிங் நடக்கும் இடத்தில் என்ன விளையாட்டு இது? இப்போ அழறதுக்குத்தான் போன் செஞ்சியா? முதல்ல என்னன்னு சொல்லு", கோபம் உள்ளடக்கிய குரலில் கேட்டான்.

"தருண்....., எனக்கு, எங்க அம்மாகிட்டே ஏதோ மாற்றம் தெரியுது. ஆனால் அது என்னன்னு சொல்லத் தெரியலை. முன்னெல்லாம், என்னோட நிழல் மாதிரி இருந்தவங்க இப்போ, கண்டுக்கவே மாட்டேங்குறாங்க. எதையோ ரொம்ப யோசிக்கிறாங்க. நிறைய போன் பேசுறாங்க.

எனக்கென்னமோ பயம்மா இருக்கு", என்னவோ எல்லாம் அவன் பார்த்துகொள்வான் என்ற எண்ணத்தில், தன் உள்மனப் பயங்களை அவனிடம் சொன்னாள்.

"இப்போ திடீர்ன்னு, உனக்கு இந்த பயம் வரக் காரணம் என்ன? உன்னோட புதுப் படம் பற்றிய விஷயமாகவும் இருக்கலாமே?", அப்படி இருக்காது என்று தெரிந்தே, அவளைச் சமாதானம் செய்ய முயன்றான்.

"இல்ல தருண், என்னமோ கெட்டது நடக்கப் போகுற மாதிரி ஒரு பீல். அதிலும், அந்த ஷெட்டி அமைதியா இருப்பதை நினைத்தாலே, இன்னும் பயம்தான் அதிகமா இருக்கு. நீங்க சொல்லுற மாதிரி, ஏதாவது புது படம் பற்றிய பேச்சாக இருந்தால், அதை என்கிட்டே ஏன் மறைக்கிறாங்க?", அவள் மனதின் பயம் கொஞ்சம் கூட குறையவில்லை.

"லயா.... முதல்ல இந்த பயத்தை விடு. இந்த பயம்தான் நம்மளோட பலத்தை அடியோட அழிச்சிடும். உன் அம்மா, உன்கிட்டே ஏதாவது வித்தியாசமா பேசுனாங்களா? அதாவது....., ஷெட்டி, படத்தோட விவாதத்துக்குக் கூப்பிடுறார். புதுப் படத்துக்கு உன்னை புக் பண்ணுறார். இல்லன்னா....., கொஞ்சநாள் நீயே தனியா சமாளிச்சுடுவியா, இப்படி....?", அவள் வீட்டில் நடப்பதைத் தெரிந்துகொள்ள கேட்டான்.

"இல்ல.... அம்மா பேசவே இல்லையே....., எப்போ பாத்தாலும் எதையோ யோசிச்சுட்டே இருக்காங்க", சிணுங்கியவாறே பதில் சொன்னாள். அவள் சிணுங்கலுக்குக் காரணம், தருண் சந்தேகப்படுவது போல், எந்தக் கேள்வியையும், அவள் அன்னை இதுவரை கேட்கவில்லை என்பதாலேயே.

"பிறகு எதற்குத் தேவையில்லாமல் கவலைப்படுகிறாய். முதல்ல, இந்தக் குழப்பங்களை விட்டு வெளியே வா. ஷூட்டிங்குக்குக் கிளம்பு, அங்கே பாக்கலாம்", அவளுக்குத் தைரியம் சொல்லி அலை பேசியை வைத்தான்.

அவளைச் சமாதானம் செய்துவிட்டாலும், அவளது தாயின் செய்கைகளை, அவ்வளவு சாதாரணமாக எடுக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அவனது செக்யூரிட்டி நிறுவனத்துக்குத் தொடர்பு கொண்டு, சில விஷயங்களைச் சொல்லிவிட்டு, அடுத்த வேலையை கவனிக்கச் சென்றான்.

அன்றைய காட்சிகளின் பொழுது, கதிரவன், அவளது நடிப்பு அதி அற்புதமாக இருப்பதாகப் பாராட்டினான். பிறகு, அவர்கள் இருவரையுமே சேர்த்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லி, அவர்களைத் தனியாக அழைத்துச் சென்றான்.

"சொல்லுங்க கதிர், பேசணும்னு சொல்லிட்டு பேசாமல் இருக்கீங்க?", தருண் அங்கிருந்த அமைதியைக் கலைத்தான்.

லயா, என்ன செய்யவென்று அறியாமல் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பொதுவாக, இயக்குனர்களோடான சந்திப்புகள் அனைத்திலும் தெய்வாதான் பேசுவாள். லயா, தாய் சொல்வதைச் செய்வாள். அந்த வழக்கத்தில் அப்படியே அமர்ந்திருந்தாள்.

"சார்.... உங்களுக்கே தெரியும், முதல் கட்டப் படப்பிடிப்பை நாம கேன்ஸல் செஞ்சுட்டு, பிறகுதான் இங்கே ஷூட்டிங் வைத்தோம். இப்போ அதெல்லாம் முடிச்சுட்டோம். இனிமேல் மிச்சமிருப்பது, ஒன்றிரண்டு காதல் காட்சிகளும், பாடல், வெளிநாட்டு படப்பிடிப்பும் தான்.

இந்தப் படத்தில் வரும் முக்கியக் காட்சியை, அதாவது... நீங்க காதலைப் பரிமாறிக்கொள்ளும் இடமும், ஒரு முத்தக் காட்சியும் நாளைக்கே எடுக்கலாம் என நினைக்கிறேன். அதன் பிறகு வரும், கல்யாணக் கனவு காட்சியையும், தொடர்ந்து எடுக்கலாம் என முடிவு செய்திருக்கிறோம்.

உங்களுக்கு ஒன்றும் மறுப்பு இல்லையே. ஏன் கேட்கிறேன்னா, நாளைக்கு வந்து, 'எனக்கு மூட் சரியில்லை', அப்படி இப்படின்னா, பிரச்சனையாயிடும். இதுவரை, நீங்க சொன்னீங்க என்ற ஒரே காரணத்துக்காகத்தான், அந்தக் காட்சியெல்லாம் தள்ளி

வைத்திருக்கிறேன். இல்ல, நாளைக்கு முடியாதுன்னு சொன்னீங்கன்னா, நாம வேற எடுக்கலாம் அதான்....", காட்சியின் முக்கியத்துவம் உணர்ந்து சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டு, லயா கொஞ்சம் சங்கடமாகத் தருணைப் பார்த்தாள். அவள் இதுவரை நடித்த படங்களும் காதல் படங்கள்தான். உடன் நடித்த எந்த நடிகரிடமும் தோன்றாத, இந்த வெட்கமும், தயக்கமும், தருணிடம் மட்டும் எழுவதை உணர்ந்து திகைத்தாள்.

ஆனால், தருண் அதை இயல்பாகவே எடுத்துக் கொண்டான். "கதிர்.... நீங்க என்னைக்குன்னு சொன்னீங்கன்னா, அன்னைக்கு நான் ரெடி. அது நாளைக்கா இருந்தாலும், எனக்கு ஓகே தான்", சாதாரணமாகச் சொன்னான்.

அவனது இந்த பதிலில், லயா மனதுக்குள் தவித்தாள். அவளுடன் நடிக்கப்போகும் நெருக்கமான காட்சி, அவனுக்கு எந்தவிதமான பாதிப்பையோ, எதிர்பார்ப்பையோ ஏற்படுத்தவில்லையா? அவனுக்கு. நானும் பத்தோடு பதினொன்று தானா?', இந்த ரீதியில் யோசித்தவள் இன்னொன்றையும் திகைப்பாய் உணர்ந்தாள்,

அது என்னவென்றால், தருண் தன் மனதில் குடியேறிவிட்டான் என்பதை, முழுமையாக அறிந்தாள். அதனால் அவனுக்கு, தான், தனித்தன்மை வாய்ந்தவளாக, முக்கியத்துவம் வாய்ந்தவளாக இருக்கவேண்டுமென்று ஏங்கினாள். அதே ஏக்கத்தை, கண்களில் கொண்டுவந்து அவனைப் பார்க்க,

"லயா.... நீங்க எதுவுமே சொல்லாமல் இருக்கீங்களே. நான் கேட்டுட்டே இருக்கேன்", கதிரவன் குரல் உயர்த்திக் கேட்கவே, அவனைப் புரியாமல் பார்த்தாள். அவள்தான் இவ்வளவு நேரமும் கனவில் இருந்தாளே.

அவள் நிலையை உணர்ந்த தருண், "கதிர், நீங்க கேள்வியை தப்பான இடத்தில் கேட்டுட்டீங்க. இதை,

தெய்வா கிட்டே கேட்டிருக்கணும்....., 'கதிர், ஒரு முத்தம் போதுமா இல்லை இன்னும் ரெண்டு சேர்த்து தரச் சொல்லவா'ன்னு கேட்டிருப்பாங்க", அவன் அவ்வாறு சொல்லவே கதிர் பக்கென சிரித்துவிட்டான்.

லயாவிற்கு அவளது பலகீனத்தை, அவன் சொல்லிக் காட்டவே கோபம் வந்தது. "கதிர் சார், எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை", வேகமாக பதில் சொன்னாள்.

"ஓகே, அப்போ நாளைக்குக் காலை பத்து மணிக்கு வந்துடுங்க. நான் கிளம்புறேன்", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

"லயா.... எதிர்ல ஆள் இருப்பது கூடத் தெரியாமல், அப்படி என்ன யோசனை, அதுவும், என் முகத்தை அப்படி வெறிச்சுப் பாத்துட்டு இருந்த, நாம தனியா இல்லை. சுத்திப் பாரு, எவ்வளவுபேர் இருக்காங்கன்னு. கண் பார்வை முதல், உடல்மொழி வரை அனைத்தும் நம்மக் கட்டுப்பாட்டில்தான் இருக்கணும்.

எல்லா நேரமும், நான் உன்னை நிலைக்குக் கொண்டுவர முடியாது சரியா?", அவள் தவறைச் சுட்டிக் காட்டினான்.

"தருண்....., உங்க எதிரில், நான் நானாக இருக்க மாட்டேன் என்கிறேன், நான் என்ன செய்யட்டும். இப்போ கூட, உங்க கைக்குள்ளே, நெருக்கத்தில் இருக்கணும்னு ஆசையா இருக்கு. இதை எப்படிக் கட்டுபடுத்த என்று தெரியலை?", தவிப்பாக அவனிடமே கேட்டாள்.

தருண், அவளது இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்துவிட்டான். 'சொல்ல வருவதைப் புரிந்துகொள்ளாமல், சின்னப் பிள்ளை மாதிரி பேசும் இவளை, என்ன செய்ய? இவள், ரகசியத்தை ரொம்ப நாள் தக்க வைக்க மாட்டாள்', என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

"லயா.... இதென்ன, சின்னப் பிள்ளை மாதிரி பேசுற? ஏற்கனவே, நாம அளவுக்கு அதிகமான நேரம், இங்கே இருந்துட்டோம். முதல்ல நீ உன் காருக்குப் போ. நான் பிறகு

போகிறேன். இங்கே இருந்து கிளம்பு ம்ம்ம்....", அவன் குரலில் இருந்த அழுத்தத்தில் மறு பேச்சு பேசாமல் கிளம்பி விட்டாள்.

அவள் மனதுக்குள், அப்படியொரு பாரம் அழுத்தியது. ஒரு பெண் வெட்கத்தை விட்டு, உன் கையணைப்பில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன் என்று சொல்கிறேன், அதைக் கவனிக்காமல் இப்படி விரட்டுகிறானே. கண்ணில் துளிர்த்த நீரைக் கட்டுப்படுத்தியவாறு, எழுந்து காருக்குச் சென்றாள்.

அவள் காருக்குச் சென்று, அவள் கார் அங்கிருந்து கிளம்பிச் செல்லும்வரை, அவள் இருந்த பக்கம் கூட, அவன் பார்வை செல்லவில்லை. இந்த மனக் கட்டுப்பாடும், நிதானமும், உறுதியும் இல்லையென்றால், அவன் எப்படி நட்சத்திரமாக இருப்பான்.

அவனது இந்த மன உறுதிதானே, தனியறையில், பெண்களைச் சலனமே இல்லாமல் சந்திக்க வைக்கிறது. 'லயா, நீ உன் காதலை மீடியாவின் பார்வையில் இருந்து ஒரு மாதம் கூட மறைத்து வைக்க மாட்டாய். இதில் உன்னுடன் சேர்ந்து, நானுமல்லவா சிக்கலில் மாட்டி விடுவேன்', இதற்கு என்னதான் வழி என்று யோசிக்கத் துவங்கினான்.

வீட்டிற்குச் சென்ற லயாவை, தாய் அன்று அதிகமாகக் கவனித்தாள். பாப்பா, கண்ணு என்று கொஞ்சலில் குளிப்பாட்டினாள். தாயின் இந்த அவதாரங்கள், அடிக்கடி நிகழ்வது என்பதால் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டாள்.

அது சாதாரணமானது இல்லை என்பதை, மாலை காபி குடிக்கும்போது தெய்வா நிரூபித்தாள். "லயா, நாம வாழ்க்கையில் பெருசா செட்டில் ஆக, ஒரு பெரிய வாய்ப்பு வந்தால் எப்படி இருக்கும்".

"பெரிய வாய்ப்பா....., என்னம்மா, பெரிய கம்பெனியில் இருந்து கேட்டாங்களா என்ன?", முதலில் சாதாரணமாகக்

கேட்டவள், தாய் ஆழம் பார்க்கிறாளோ, என்று மூளையின் ஓரத்தில், தோன்றவே, சட்டென, தாய் சொல்லுவதை கவனிக்கத் துவங்கினாள்.

"ஹான்....., ஆமா பெரிய கம்பெனிதான்....., என்ன....., அவங்க சொல்லும் போது, ரிகர்சல் பார்க்கப் போகவேண்டி இருக்கும்", போட்டுப் பார்த்தார்.

"என்னம்மா புதுசா இருக்கு...? இதுவரை, நான் அப்படியெல்லாம் போனது இல்லையே", பிடிகொடுக்காமல் பேசினாள் லயா. ஆனால் உள்ளமோ ஆலையில் சிக்கியக் கரும்பாக, சிக்கித் தவித்தது.

மகளிடமிருந்து, "அதற்கென்னம்மா போகிறேன்", என்ற பதிலை மட்டுமே எதிர்பார்த்த தெய்வாவிற்கு, இந்த லயா புதிதாகத் தெரிந்தாள். மகளின் முகத்தை, துளைப்பதுபோல் பார்க்க,

தன் நடுங்கும் கைகளையும், நடுங்கும் இதழ்களையும், துடிக்கும் இதயத்தையும் தெய்வாவிடமிருந்து மறைக்க, காபி கப்பை தன் வாயோடு அழுந்த வைத்துக்கொண்டு, இருக்கையிலிருந்து மெதுவாக எழுந்து, ஜன்னல் அருகில் நின்றுகொண்டாள்.

லயா எவ்வளவு முயன்றும், அவளது பதட்டத்தை தாயிடமிருந்து மறைக்க முடியவில்லை. இதற்குமுன் செத்திருந்தால் தானே சுடுகாடு தெரியும் என்பதுபோல், தாயிடம் முன்பு நடித்திருந்தாலோ. பொய் சொல்லியிருந்தால் தானே, இப்போது சரியாகப்பேச வரும்.

. தெய்வா, மகளின் பதட்டத்தை சரியாக கணித்து, தன் செயல்முறையை உடனே மாற்றினாள்.

"சரி விடு, அம்மாவே பேசிக்கிறேன்", எழுந்து சென்றுவிட்டாள் தெய்வா.

தாய் செல்லவே, கையில் இருந்த ஆறிய காபியை அங்கேயே வைத்துவிட்டு, அறைக்குள் நுழைந்து தாளிட்டுவிட்டு, தருணுக்குப் போன் செய்தாள்.

அதே நேரம், தெய்வாவும் ஷெட்டியிடம்தான் பேசிக் கொண்டிருந்தாள். ஒருத்தி, தன் கற்பைக் காப்பாற்றப் போராடத் தயாராக, மற்றவளோ, அவளது கற்பை எப்படிக் களவாடலாம் என்று திட்டம் தீட்டத் துவங்கினாள்.

இதில் யாரின் போராட்டம் வெற்றிபெறும்.....?

கதவு - 19

தந்தையை, தாய்

அடையாளம் காட்டுவார்

என் தாய் எனக்கு

அடையாளம் காட்டியதோ

புகைப்படத்தை மட்டுமே.....

தன் அறையில் அமர்ந்திருந்த கண்மணியின் பார்வை சுவரை வெறித்தவாறு இருந்தது. இமைக்கக் கூட மறந்து, சிலையாகவே ஆகிவிட்டாளோ என்று எண்ணும் அளவு அமர்ந்திருந்தாள். அவள் தேகம் அப்படி இருந்தாலும், சிந்தை முழுக்க, பெருமாளே நிறைந்திருந்தார்.

அன்று தருணின் வீட்டில், அது அவள் தந்தையின் வீடும்தான், ஆனால் அவளால் அவ்வாறு நினைக்க முடியவில்லை. நினைவு தெரிந்த நாளில் இருந்தே தாய் மட்டுமே துணையாக இருந்தது, தந்தையை பற்றிக் கேட்டால்....., 'அப்பா வெளியூர் போயிருக்காங்க' என்பதே பதிலாகக் கிடைக்கும், அவள் அறியா வயதில்.

சிறுமியாக இருந்த பொழுது, அவர் நமக்கு தெய்வத்தைப் போன்றவர் என்ற விளக்கம் மட்டுமே சொல்லப்பட்டது. வயதுக்கு வந்து கேட்ட பொழுது, தாயின் வாழ்க்கை சரிதமும், தந்தையின் தியாகத்தைப் பற்றியும் சொன்னாள் அவள் தாய்.

வாய் தவறிக் கூட, பெருமாள் தன்னிடம் உண்மையை மறைத்துத் திருமணம் செய்தார் என்று, தாய் குற்றம் சுமத்தியதில்லை. மாறாக, தன் இக்கட்டான நிலைதான், அவரது முதல் மனைவிக்கு துரோகம் செய்து, தன்னை ஏற்றுக்கொள்ள வைத்தது என்றே புலம்பியிருந்தார்.

குற்றம் அனைத்தையும் தன்மேல் சுமத்திக்கொண்டு, தந்தை நல்லவராகவே சித்தரிக்கப்பட்டதாலும், தாங்கள் சென்றால், அவரது நிம்மதி கெட்டுபோகும் என்றும், கமலம் அக்காவை தன்னால் எதிர்கொள்ள முடியாது என்ற குற்ற உணர்விலும் கரைந்திருந்தாள் அவளது தாய், தங்கம் .

எனவே, கண்மணியின் மனதிலும் அந்த எண்ணமே விரவியிருந்தது. தந்தை தன்னைப் பார்த்தால், அவரது நிம்மதி தொலைந்துவிடுமோ என்று, இங்கே வந்த புதிதில் பயந்திருக்கிறாள். அந்த பயத்தையும் மீறி, தந்தையைக்காணவேண்டும் என்ற ஏக்கத்தை, அடக்க முடிந்ததில்லைதான்.

எதிர்பாராத நேரத்தில், அவரைச் சந்திக்க நேர்ந்த அந்த நிமிடம்....., இப்பொழுது நினைத்தாலும் ஒரு வித வேதனை மனதில் எழுந்து அடங்குவதை தவிர்க்க முடியவில்லை. அவரைப் பார்க்கும்வரை, அப்பா அப்படி இருப்பாரோ, அண்ணன் மாதிரி இருப்பாரா? இல்லை என்னைப்போல் இருப்பாரா? என்ற கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த அந்த நிமிடத்தின் நினைவில் லயித்திருந்தாள் அவள்.

தந்தையைக் காண அறைக்குச் செல்லும்முன், அப்பா தன்னை அடையாளம் கண்டு கொள்வாரா? அப்படிக் கண்டுகொண்டால் என்ன செய்வார்? என்னிடம் பேசுவாரா? என்று ஆயிரம் கேள்விகள் படையெடுத்தது.

அவள் அறைக்குள் சென்ற அந்த நிமிடம், உறக்கத்தில் இருந்த அவர், மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். அவரது பார்வை கமலத்திடமிருந்து நகர்ந்து, தருணை ஆசையாக வருடியது, அவன் அருகில் இருந்த வாசுவை சலனமே இல்லாமல் ஒரு பார்வை பார்த்தார்.

வாசுவின் அருகில் இருந்த கண்மணியின் மீது அவர் பார்வை விழுந்த பொழுது, பதட்டத்திலும், ஆர்வத்திலும், வாசுவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். முதலில், சலனமே இல்லாமல் கண்மணியைப் பார்த்தவரின் பார்வையில், பிறகு எதையோ அறியத் துடிக்கும் ஆவல்.

கண்களில் ஒரு பரிதவிப்பு, கண்களில் நீர் திரையிட, அதை ஒற்றைக் கையால் துடைத்துவிட்டு, சம்மட்டியாய் இடிக்கும் இதயத்தின் ஓசை அவருக்கே கேட்க, கைகள் நடுங்க அவளை அருகில் அழைத்தார்.

பக்க வாதத்தால் செயல்பட முடியாமல் இருந்த நாவை அசைத்து, எதையோ அவளிடம் கேட்க முயன்றார். செயல்பட முடியாமல் இருந்த தேகத்தை, படுக்கையில் இருந்து அசைத்து, எழுந்து அமர முயன்றார்.

அது முடியாமல் தேகம் தள்ளாட, கட்டிலில் இருந்து கீழே விழப்போன அவரை, தருண் ஓடிச் சென்று தாங்கினான். கண்மணியுமே, தன்னை மீறி இரண்டடி எடுத்து வைத்தாள். கம்பீரமாக உருவகித்து வைத்திருந்த தந்தையின் உருவத்தை, இப்படித் தளர்ந்து, உருக்குலைந்து பார்க்க, கண்மணியால் முடியவில்லை.

கமலமும் ஓடிச் சென்று அவரைத் தாங்கி, படுக்கையில் படுக்க வைக்க உதவி செய்தார். "என்னங்க, ஏன் இப்படி உணர்ச்சிவசப் படுறீங்க? கொஞ்சம் அமைதியா இருங்க", கணவரைப் படுக்க வைத்துவிட்டு, தண்ணீரை எடுத்துப் புகட்டினார்.

அது அவர் கடைவாயின் வழியே ஒழுகியது. இவ்வளவு நேரமும், அவர் பார்வை கண்மணியை விட்டு விலகவே இல்லை. அங்கிருந்த அனைவருமே அதை உணர்ந்தார்கள்.

மகனின் கைகளை அழுத்தி, பார்வையால் அவள் யாரென்று கேட்க, "என்னோட தங்கச்சிப்பா.....", அவர் பார்வையை உணர்ந்தவனாய் பதில் சொன்னான். இந்த பதிலில், அவர் உடல் வியர்த்து வழிந்து, உடல் வெட்டி வெட்டி இழுத்தது.

"என்னங்க....., என்ன ஆச்சு? தருண், உங்க அப்பாவைப் பாருடா.....", கமலம் பெருங் குரலெடுத்து அழத் துவங்கினார்.

கண்மணி ஓடி வந்து, அவர் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். தந்தையை முதல் முதலாகப்

பார்க்கும்பொழுது இப்படியா ஆக வேண்டும். அப்பா என்று அழைக்க முடியாத இந்த நிலையை, அறவே வெறுத்தாள் அவள்.

வாசு, நிலைமையைச் சட்டென கையில் எடுத்தான். உடனடியாக, அருகிலிருகும் மருத்துவரை அழைத்துப் பார்த்துவிட்டு, அவர் மருத்துவமனையில் சேர்ப்பது நல்லதென்று கூறவே, ஆம்புலன்ஸ் வர வைத்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள்.

அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்த்து, அவரது உடல் நிலையைப் பரிசோதித்த மருத்துவர், அவருக்கு அதிர்ச்சி தரும் விஷயம் என்ன நடந்தது, என்று கேட்டு அவர்களை அதிர வைத்தார்.

கமலத்திற்கு மகனின் நடத்தையும், பேச்சும், கணவனின் பரிதவிப்பும், உடல்நலக் குறைவும், அனைத்தும் இந்த கண்மணியால் எழுந்தது என்ற எண்ணம் இருந்தாலும், எதுவும் சொல்லாமல் கண்ணீர் வடித்தவாறே இருந்தார். மனதில் எழும் சந்தேகங்களைக் கேட்க, இது சரியான தருணமில்லை என்பது, அவருக்கும் தெரியும்.

கண்மணி, தன்னால்தான் இப்படி நேர்ந்ததோ என்று, தன்னிரக்கத்தில் கரைந்தாள். அங்கிருக்கும் சூழலில் அவளிடம், தருணால் தனியாகப் பேச முடியவில்லை. தான் மருத்துவமனைக்கு வந்திருப்பது தெரிந்தால், அங்கேயும் ஒரு கும்பல் கூடி விடுமே என்று, அதற்கும் தவிப்பாக இருந்தது அவனுக்கு.

மருந்து வாங்க இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்த வாசுவை அழைத்து, அவளை ஜாடையாகக் காட்டினான். தாய்க்குத்தான் தன் ஆதரவு அதிகமாகத் தேவை என்பதால், அவரைத் தன் தோளில் சாய்த்தவாறு, அங்கேயே இருந்தான்.

வாசு, கண்மணியின் அருகில் சென்று அவள் தோளைத் தொட்டான். அவன் தொடுகைக்காகவே காத்திருந்தவள் போல், அவன் தோள் சாய்ந்தாள். மனதில் இருக்கும்

துக்கத்தை, வாய்விட்டு அழக்கூட முடியாமல், இருக்கும் சூழலும் கமலத்தின் இருப்பும் அவளைக் கட்டுப்படுத்தியது.

இதயத்தை அழுத்தும் இந்த வலியில் இருந்து தப்பிக்கவும் முடியாமல், வாய்விட்டு அழவும் முடியாமல் போராடினாள். தன் அதிகப்படியான ஒரு நடத்தையும், பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது, அவளுக்குத் தெரியும்.

"ஹேய்... கண்மணி, நீ எதுக்கு இவ்வளவு அப்செட் ஆகுற? மாமாவுக்கு ஏற்கனவே ஸ்ட்ரோக் வந்த உடம்புதான். இன்னைக்கு என்னமோ கொஞ்சம் படுத்திடுச்சு. அதுக்கு நீ ஏன் இப்படி முகத்தை வச்சுட்டு இருக்க? அதெல்லாம் மாமாவுக்கு எதுவும் ஆகாது. நீ கவலைப் படாதே", அவனுக்குமே வருத்தம்தான், அவளை முதல் முதலாக வீட்டிற்கு அழைத்து வந்த பொழுதுதான் இப்படி ஆக வேண்டுமா? என்று.

கொஞ்ச நேரத்தில் வெளியே வந்த மருத்துவர் தருணை அழைத்து, அவர் உடம்பு கொஞ்சம் சீரியஸாகத்தான் இருக்கிறது என்று சொன்னார். லேசான மாரடைப்பும் அவருக்கு வந்திருப்பதாகச் சொல்லவே, தருணும் ஒரு நிமிடம் கலங்கினான்.

"டாக்டர் உயிருக்கு.....",

"தருண்.... அவர் உயிருக்கெல்லாம் எந்த ஆபத்தும் இல்லை. ஆனால் அதிர்ச்சி தரும் விஷயங்களை, அவருக்குக் கொஞ்ச நாள் சொல்லாதீங்க", என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

'இனிமேல் ஏது அதிர்ச்சி, அதுதான் முடிந்து விட்டதே', மனதுக்குள் நினைத்தவாறே, வராண்டாவில் தளர்வுடன்நடந்தான். 'ச்சே அப்பாவுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி இருக்கும் என்று எண்ணினேன். ஆனால், அவருக்கு மாரடைப்பே வரும் அளவு அதிர்ந்து விடுவார் என்று எண்ணவே இல்லையே. எப்படி நான் அம்மாவின் முகத்தில் விழிக்க, எப்படி இதை நான் அம்மாவிடம் சொல்ல முடியும்.

மனம் வெதும்பி வந்தவனை, ரசிகன் ஒருவன் பார்த்துவிட்டு, அவன் நண்பர்களுக்கு எல்லாம் சொல்லவே, பெரிய கும்பலே சற்று நேரத்தில் அங்கே கூடி விட்டது.

கூட்டத்தைச் சமாளிப்பது பெரும் பாடாக இருக்க, அதற்குள் தருணின் பாதுகாப்பு அதிகாரிகள் வந்து, அவனுக்கு அரண் அமைத்துவிடவே, அந்தக் கும்பலில் இருந்து தப்பித்தான் அவன்.

தன் பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து, கண்மணியை வீட்டில் விட்டு வரச் சொன்னான். அவளோ, 'முடியாது' என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு, கமலத்தின் அருகில் சென்று அமர்ந்துகொண்டாள்.

"அம்மா கவலை படாதீங்க. அப்...., ஐயாவுக்கு எதுவும் ஆகாது. நீங்க தைரியமா இருங்க", தன் கலக்கத்தையும், தவிப்பையும் மறைத்து, அவருக்கு ஆறுதல் சொன்னாள்.

அந்தநேரம் கமலத்திற்கும் அந்த ஆறுதல் தேவையாக இருந்தது. மௌனமாக அதை ஏற்றுக் கொண்டு அமர்ந்திருந்தார். தருண் அவர்கள் அருகில் வரவே, "அப்பாவுக்கு எப்படிடா இருக்கு? என்னை ஒரு முறை பார்க்க விடச் சொல்லுடா. என்னால் இங்கே வெளியே இருக்க முடியலடா. அங்கே ஒரு ஓரமா இருந்து உங்க அப்பாவைப் பாத்துக்கறேண்டா", ஏக்கமாகக் கேட்டார்.

தாயின் பேச்சில், கலங்கத் துடித்த கண்களை அவன் அடக்க, கண்மணி கண்ணீர் விட்டு அழுதாள். "அம்மா அப்பாவுக்கு எதுவும் இல்லை. இன்னும் ரெண்டு நாளில் வீட்டுக்குப் போய்டலாம். நீங்க அழுது, உங்க உடம்பைக் கெடுத்துக்காதீங்க", எங்கே தாய்க்கு ஏதாவது உடல்நலக் கோளாறு வந்துவிடுமோ என்று அவன் அஞ்சினான்.

வாசுவை அழைத்து, அப்பாவைப் பார்க்க முடியுமா என்று கேட்டு வருமாறு பணித்தான். அவனும் சென்று கேட்டு வந்துவிட்டு, "சார், அவர் இப்போ தூங்கிட்டு இருக்காராம்.தொல்லை செய்யாமல் ஒரு ஒரு ஆளா போய்

பார்க்கச் சொன்னார்", அவன் சொல்லவே, தாயை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

கண்மணியையும் அவன் அழைத்தான். ஆனால் அவள் வரவில்லை என்று சொல்லிவிட்டாள். எங்கே மறுபடியும் அவளைப் பார்த்தால், அவரது உடல்நிலை பாதிக்கப்படுமோ என்று அஞ்சினாள். யாரும் அவளை உடன் வரசொல்லிக்கட்டாயப் படுத்தவில்லை.

அவள் தயங்கி நிற்கவே, வாசுவும் அவளோடு நின்றுகொண்டான். சுற்றிலும் ரசிகர்கள் பட்டாளம் இருந்ததால் அவளைத் தொடவும் முயற்சிக்காமல், "கண்மணி... நீ கவலை படாதே. மாமாவுக்கு இது அடிக்கடி நடப்பதுதான். நீ வந்ததால்தான் இப்படி ஆயிற்று என்று நீயா எதையும் கற்பனை பண்ணிக்காதே சரியா", அவள் குற்ற உணர்வில் தவிக்கக் கூடாதே என்பதால் ஆறுதல் சொன்னான்.

அவனது ஆறுதல் வார்த்தை அவளை எட்டவே இல்லை. "வாசு, இப்போ உடனே என்னை இங்கே இருந்து கூட்டிப் போய்டுங்க. இன்னும் நான் இங்கேயே இருந்தால், என்னாலேயே அப்பாவோட உயிர் போனாலும் போய்டும்....., வாங்க, வாங்க போய்டலாம்....", அவன் கையைப் பிடித்து இழுத்தவாறு, கூட்டத்தை விலக்கி வெளியேறினாள்.

அவள் 'அப்பா' என்று சொன்னதில் அதிர்ந்தவன், அவள் கையைப் பிடித்து இழுத்துச் செல்லவே, அலையில் அடித்துச்செல்லும் துரும்பாக, அவள் பின்னால் சென்றான். அதன் பிறகு நடந்த எதிலுமே, இருவரின் கவனமும் இருக்கவில்லை. கனவிலே இருப்பவர்கள் போல் நடந்துகொண்டார்கள்.

வீட்டிற்கு வந்ததும், அறையில் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு அழும் அவளிடம் எதையும் கேட்க முடியாமல், மருத்துவமனையில் தன் தேவையை உணர்ந்து, அவளை அங்கே விட்டுவிட்டு மருத்துவமனைக்கு விரைந்தான்.

அதன் பிறகு வந்த நாட்களில், கமலம் அவளை வீட்டிற்கு அழைத்தும் அவள் செல்லவே இல்லை. கமலத்திற்கு எழுந்த சந்தேகத்தை அவரால் அதன் பிறகு நிவர்த்தி செய்யவே வழி இல்லை. கணவனை கவனிப்பதிலேயே மூழ்கினார்.

ஆனால், பெருமாளின் உடல்நிலையில் முன்னேற்றம் வந்தாலும், மனநிலையில் பின்னடைவே ஏற்பட்டது. அன்று வந்தவள் யாரென்று அறிய அவருக்கு எழுந்த ஆவலை, கட்டுப்படுத்தவே முடியவில்லை. அதற்கு பதில் சொல்ல வேண்டியவனோ அதன் பிறகு வீட்டிற்கு வந்தாலும், தந்தையைக் காணச் செல்லவில்லை.

கமலத்திற்கு, கணவனின் தவிப்புகளும், அலைப்புறுதலும் புரிந்தாலும், எதனால் என்பது சரியாகத் தெரியவில்லை. கமலத்திடம் ஜாடையாக, தருணைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி அனுப்பினார்.

கமலமும் தருணிடம் எவ்வளவோ முறை சொல்லியும், தந்தையின் கேள்விக்கும், உடல் நிலைக்கும் பயந்து அங்கே செல்லாமலே காலம் கடத்தினான்.

ஆனால், எவ்வளவு நாள்தான் அப்படிக் கடத்த முடியும், மகன் தந்தையைத் தவிர்ப்பதை உணர்ந்து, கமலம் மகனிடம் புலம்பவே, வேறு வழியில்லாமல், தந்தையைக் காணச் சென்றான். அவனைக் கண்டவுடன், அவரது கண்களில் அப்படி ஒரு ஒளிர்வு.

அவன் முதுகின் பின்னால் எதையோ தேடி அலைந்தது அவர் பார்வை. தேடிய பொருள் கிடைக்காமல், ஏமாற்றத்தில் அவர் கண்கள் கலங்கியது. அவர் நிலை புரிந்தவனாக, அவர் அருகில் இருந்த ஸ்டூலில் அமர்ந்துகொண்டு, அவரின் செயல்படாத வலக் கரத்தை தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

அவர்மேல் கோபம் இருந்ததுதான், அது, தன் தாய்க்கு அவர் செய்த துரோகத்தால். ஆனாலும், ஒரு பெண்ணின் வாழ்க்கையை இக்கட்டில் இருந்து காப்பாற்றினாரே என்ற

மனிதாபிமான சிந்தையும் எழுந்தது. பிறகு, அவளைக் காப்பாற்றுவதாக எண்ணி, இரண்டு பெண்களுக்கு துரோகம் செய்துவிட்டாரே என்றும் எண்ணினான்.

இப்படியே கோபமும், சிந்தனையும் கலந்த கலவையாக அவர் அருகில் அமர்ந்திருந்தான். "த...த....ழுன்..... அவ.....", அவரால் அதற்குமேல் கேட்க முடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"கண்மணி....., என்னோட தங்கச்சி, இப்போ என்கூடதான் இருக்கா. அவளும் வாசுவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க. அவங்களை, அம்மாகிட்டே ஆசீர்வாதம் வாங்க வைக்கத்தான், இங்கே கூட்டி வந்தேன். வேற எதுக்காகவும் இல்லை", அவளை அழைத்து வந்து உங்களுக்குக் காட்டி, அப்பா மகள் உறவை ஏற்படுத்தவோ, அவளை இங்கேயே வச்சுக்கவோ, இப்படி எதைச் செய்தும், என் அம்மாவின் மனதைக் கஷ்டப்படுத்த இல்லை என்பதை, அவருக்கு அந்த வார்த்தைகளிலேயே புரிய வைத்தான்.

தனக்கு இப்படி ஒரு மகள் இருக்கிறாள் என்பதையே இத்தனை வருடங்கள் கழித்துத் தெரிந்துகொண்டவர், அவளை மகளே என்று அழைக்க முடியாமலும், கண்குளிர பார்க்கக் கூட முடியாமல், அதை வெளியே சொல்ல கூட முடியாமல் தவித்தார்.

"பா..... பா.....க்.....ம்.....", அவளைப் பார்க்கவேண்டும் என்பதைக்கூட முழுதாகத் தெரிவிக்க முடியாமல் திணறினார்.

"சாரிப்பா..... என்னால் முடியாது. என்னோட அம்மாவின் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விழ விடமாட்டேன். அம்மாவா, என்னைக்கு அவளை உங்ககிட்டே அறிமுகப்படுத்தி வைக்கிறாங்களோ, அன்னைக்கு நீங்க அவகிட்டே பேசலாம். அதுவரை, அவ நல்லா இருக்கான்னு மட்டும் நினைச்சுக்கோங்க", கொஞ்சம் கூட இளக்கமே இல்லாமல் பேசினான்.

தன் இடக்கையை எடுத்து அவன் கரத்தின்மேல் வைத்து அழுத்தினார். அதில் இருந்த நடுக்கமும் தவிப்பும் அவனுக்கும் புரிந்துதான் இருந்தது. ஆனாலும் தாயை நினைத்து அவன் தயங்கினான்.

அவர் கண்ணீர் அவனை உலுக்கியது.

"அப்பா ப்ளீஸ்....., நான் எல்லோரோட நன்மைக்காகத்தான் செய்யிறேன் புரிஞ்சுக்கோங்க", கொஞ்சம் இளகினான்.

ஆனால், அதற்குமேல் அங்கே தாமதிக்க முடியாமல் வெளியேறிவிட்டான். தன் அறைக்குள் இருந்து அவனும் இந்த நேரம் இதையேதான் சிந்தித்துக் கொண்டிருந்தான் .

அறைக்குள், தான் நுழைந்தது கூடத் தெரியாமல், யோசனையில் ஆழ்ந்துவிட்ட கண்மணியை, தோள் தொட்டு உலுக்கினான் வாசு. பொதுவாக, அவன் அவளது அறைக்குள் நுழைய மாட்டான். ஆனால், இப்பொழுது கமலத்திடம் பேசிவிட்டதால் கொஞ்சம் தைரியம்தான் அவனுக்கு.

கண்மணியும் அவனை அதிகமாகத் தடுப்பதில்லை. மனதுக்குள் அரிக்கும் வலியை வைத்துக்கொண்டு, இயல்பாக நடமாடவே அவளுக்குத் துன்பமாக இருக்கும்போது, மனம் மற்ற விஷயங்களில் லயிக்கவில்லை.

வாசுவும் அதைக் கவனித்திருந்தாலும், அவன் மனதில், அவள் பெருமாளை 'அப்பா' என்று அழைத்த விஷயத்தை, எப்படிக் கேட்கவென்று தெரியாமல் தவித்தான் ..

அவனது தொடுகையில் திடுக்கிட்டவள், வாசுவைப் பார்த்துத் தெளிந்தாள். அவன் தன் அறைக்குள், தன் படுக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்டு, "வாசு என்ன இது?", அவன் அமர்ந்திருப்பதை சுட்டிக் காட்டினாள்.

"இதுவா.....?", கேட்டவாறு அவளை நெருங்கினான்.

"ஆமா இதுவேதான். ஐயாவுக்கு, வரவர ரொம்பத் தைரியம். உள்ளே வந்ததும் இல்லாமல், படுக்கையில் வேற உக்காந்தால்.....", அவனிடம் கேலியாகக் கேட்டாள்.

"தனியா உக்காந்து எதையோ யோசிக்கிற, அப்படி என்ன யோசனை கண்மணி? கொஞ்சநாளா நீ சரியே இல்லை", அவள் கரத்தை எடுத்து, தன் கைகளுக்குள் பொதிந்தான்.

தானாக அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அவளது இந்தச் செய்கையே, அவள் மன வருத்தத்தில் இருப்பதை, அவனுக்கு உணர்த்தியது. தானும் அவளுக்கு ஆறுதல் அளிப்பவன்போல், மென்மையாக அணைத்துக் கொண்டான்.

"என்னன்னு சொல்லு கண்மணி, நானே உன்கிட்டே ஒரு விஷயம் கேக்கணும்னு நினைத்தேன்", அவன் துவங்கவும், வீட்டின் அழைப்புமணி ஒலிக்கவும் சரியாக இருந்தது.

வாசுவும், கண்மணியும் ஒரு சேர கடிகாரத்தைப் பார்க்க, மணி பன்னிரண்டைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

"இந்த நேரம் யார்.....?", இருவரும் ஒரு சேரக் கேட்டுவிட்டு, அறையிலிருந்து பதட்டமாக வெளியே வந்தார்கள்.

"செக்யூரிட்டி, கால் பண்ணாமல், எப்படி வீட்டுக்கு அருகில் வர விட்டான்", யோசனையோடே ஜன்னலின் திரையை விலக்கிப் பார்க்க, வெளியில் நின்றவளைப் பார்த்து இருவரும் அதிர்ந்தார்கள்.

கதவு - 20

மனதிற்கும் கற்புண்டாம்

உன்னை நினைத்த

என் உள்ளத்தால்

மற்றவனை நினைத்தால்

நான் களங்கப்பட்டவள்

ஆவேனோ.....

தருணின் முன்னால் நின்ற லயா, இன்னும் முழுதாகப் பதட்டத்தில் இருந்து வெளிவரவில்லை. முதல் முறையாக, தாய்க்குத் தெரியாமல், தாயிடம் சொல்லாமல், தனியாகக் காரை எடுத்துக்கொண்டு, இந்த நடு இரவில் தருணைத் தேடி வந்திருப்பது தான்தானா? என்று தன்னையே கிள்ளிப்பார்த்துக்கொண்டாள்.

நடிகையாக இருப்பதில் இது ஒரு வசதி, அனைத்து வாகனங்களையும் ஓட்டப் பழகியது, நான்கு மொழிகள் கற்றுக் கொண்டது என அனைத்துமே. என்னதான் இருந்தாலும் தன் சுதந்திரத்தையும், தனித் தன்மையையும் இழந்துவிட்டதை, தாமதமாக உணர்ந்தாள்.

தன் பதட்டத்தைத் தணிக்க, மூடிய கதவில் சாய்ந்துகொண்டு, தன்னை நிலை நிறுத்திக்கொள்ள, கொஞ்சம் ஆழ்ந்து மூச்சுவிட்டாள். அவள் நின்ற நிலையையும், விம்மித் தணியும் அவள் மார்பையும் பார்த்தவாறு, அசையாமல் நின்றிருந்தான் தருண்.

"சரி, கொஞ்சம் தண்ணி குடி", என்று சொல்லி, அங்கிருந்த ஜக்கில் இருந்து தண்ணீரை ஊற்றி, அவளுக்குக் கொடுத்தான்.

மறு பேச்சில்லாமல் அதை வாங்கிக் குடித்து, தன் காய்ந்திருந்த தொண்டையை ஈரமாக்கிக் கொண்டாள்.

அதன் பிறகே இயல்பானாள்.

"சொல்லு.....", ஓய்வாக அங்கிருந்த ஸோபாவில் அமர்ந்தவாறு கேட்டான்.

அவளும், அவன் அருகில் சென்று அமர்ந்துகொண்டாள். அவன் கேட்டப் பிறகுதான், புதுப் பதட்டத்தில், பழைய அதிர்ச்சி பின்னுக்குப்போய்விட்டதை உணர்ந்தாள். எப்படித் துவங்கவென்று தெரியாமல், அமைதியானாள்.

அவளாகவே சொல்லட்டும் என்று அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனாக எதையும் கேட்கப்போவதில்லை என்று உணர்ந்து, "தருண்.... அம்மா சாயங்காலம் பேசினாங்க.....", மெதுவாகப் பேச்சைத் துவங்கினாள்.

"உங்க அம்மாவுக்கு இதுக்கு முன்னாடி பேச்சு வராம இருந்துதா என்ன?", அவள் மனநிலை புரியாமல் சிடு சிடுத்தான். அவனுக்குக் கோபமாக வந்தது. என்னவோ வீட்டில் இருந்து, தன்னைப் பார்க்க வந்திருப்பதையே, பெரிய சாதனையாக எண்ணிக் கொண்டு, மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கினால் அவனும்தான் என்ன செய்வான்.

அவனோ, தன் வாழ்வின் முடிவுகளை அவனே எடுப்பவன். யாரது குறுக்கீடையும் எப்பொழுதும் விரும்ப மாட்டான். அப்படிப்பட்டத் தனக்கு, வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுக்கும் இவளோ, வீட்டை விட்டு தன்னைப் பார்க்க வந்ததையே சாதனையாக எண்ணினால், அவனும் என்னதான் செய்வான்பாவம்.

"தருண்..... நான் என் நிலைமையைச் சொல்ல வந்தால், நீங்க கேலி செய்யிறீங்க", இயலாமையாய் கேட்டாள்.

"நான் கேலி செய்யிறேனா.....?", அவனுக்குத் தலையிலேயே அடித்துக்கொள்ளலாம் போல் இருந்தது. தன் குரலில் இருக்கும் கோபத்தைக் கூட, புரிந்துகொள்ள முடியாத அளவுக்கா குழம்பி இருக்கிறாள், எழுந்த பெருமூச்சை அடக்கினான்.

"தருண்....., நான் பயந்த மாதிரியே ஆயிடுச்சு. அம்மா இன்னைக்கு, கொஞ்சம் வித்தியாசமா பேசினாங்க. என்னமோ, வாழ்க்கையில் நாம செட்டில் ஆக ஒரு பெரிய வாய்ப்பு, அப்படி இப்படின்னு....., அது மட்டும் இல்லாமல், ரிகர்சல் வேற போகணும்.....", முதலிலேயே தயக்கமாகத் துவங்கியவள், தருணின் தாடை இறுகிய விதத்தில், பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினாள்.

"அதுக்கு நீ என்ன சொன்ன?", அவன் பார்வையின் தீட்ச்சண்யத்தில் அவள் நெஞ்சுக்கூடு சில்லிட்டது.

அவனுக்குத் தான் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம், இவையெல்லாம் அவனிடம் ஏன் சொல்கிறோம் என்பதைக் கூட முழுதாக அவள் உணரவில்லை.

"நா....நான்....., என்னம்மா புது படமா? இது ஏன் புது வழக்கம் எனக் கேட்டதும், அவங்களே பேச்சை மாத்திட்டாங்க. ஆனா என்னோட பதட்டமே அவங்களுக்கு, என்னைக் காட்டிக் கொடுத்திருக்கும். அவங்க அதிரடியா ஏதாவது செஞ்சுடுவாங்களோன்னு பயம்மா இருக்கு", எப்படியோ சொல்ல வந்ததை, கொஞ்சம் தடுமாறினாலும் சொல்லி முடித்துவிட்டாள்.

சரி.... இப்போ இதில் நான் என்ன செய்யணும்னு நீ நினைக்கிற?", அவள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தவன், மெதுவாக கேட்டான்.

"என்ன தருண் இப்படிச் சொல்லுறீங்க? நான் வேற யார்ட்ட சொல்லுவேன். எனக்குன்னு இருக்குறது நீங்க தானே", இதைச் சொல்லும் பொழுதே தலையைக் குனிந்து கொண்டாள். தனக்கே தெளிவில்லாத ஒன்றை, அவனுக்கு எப்படிப் புரியவைக்கவென்று அவளுக்குத் தெரியவில்லை.

"சரி...என்கிட்ட சொல்லிட்ட, நான் என்ன செய்யணும்னும் சொல்லிட்டா நல்லா இருக்கும். அப்படியே, நான் ஏன் செய்யணும்னும் சொல்லிட்டா, நானும் தெரிஞ்சுப்பேன்",

ஏன் என்பதில் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து, அவள் மனதைத் திறக்க வைக்கக் கேட்டான்.

"தருண்.... எனக்குத் தெரியலை.....", தவிப்பாகச் சொன்னாள்.

"இது என்ன பதில்?", அவன் இறங்கிவரத் தயாராக இல்லை. அதற்கு முதல் காரணமே, அவளைச் சிந்திக்க வைக்கவேண்டும் என்பதுதான். இனிமேலும் அவளை இப்படியே விட்டால், சிந்திக்கும் தன்மையை மட்டுமல்ல, அவளை எதிர்நோக்கக் காத்திருக்கும் பிரச்சனைகளைக் கண்டும் அவள் அஞ்சி ஒடுங்கவே செய்வாள்.

அப்படியில்லையா, தெய்வாவின் கையில் சிக்கி, அவளது கைப்பாவையாகவே மாறிவிடுவாள். தனக்கு மனைவியாக வருபவள், தன் வாழ்க்கையை தானே எதிர்கொள்ள வேண்டும் என்று எண்ணினான். அது அவளுக்கு மட்டுமல்ல, இனிவரும் அவர்களது எதிர்கால வாழ்விலும், அவள் மற்றவரின் கைப்பாவையாக ஆவதை அவன் விரும்பவில்லை.

அப்படி அவள் தன் இஷ்டப்படி முடிவெடுக்காமல், மற்றவரின் பேச்சைக் கேட்கத் துவங்கினால், ஒரு மாதம்கூட சேர்ந்து வாழ முடியாது என்ற எதார்த்தத்தை அவன் புரிந்திருந்தான்.

அவர்களது வாழ்க்கையில் எவ்வளவு சுக போகங்களை, வசதி வாய்ப்புகளை, புகழின் உச்சத்தை அனுபவிக்க முடியுமோ, அவ்வளவு பிரச்சனைகளையும் சந்திக்க வேண்டி இருக்கும். உதாரணத்துக்கு, நம்மைச் சுற்றி இருக்கும் மனிதர்களே, நாம் எப்பொழுது வீழ்வோம் என்று காத்துக் கொண்டிருப்பார்.

நம்மைச் சுற்றி எப்பொழுதும் கிசுகிசு வந்த வண்ணமே இருக்கும். இதில் ஒன்றை நம்பினாலும் வாழ்க்கை நரகமாகிவிடும். இவள் இப்படி எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்தால் திண்டாட்டம்தான் என்பதை உணர்ந்து, இவர்களுக்கு நடுவில் எடுக்கும் முடிவுகள் அனைத்தையும்,

அவள் வாழ்வின் முடிவையும் அவளையே எடுக்க வைக்கப் போராடினான்.

அவன் எதற்குமே இளகிவரப்போவதில்லை என்பது தெரிந்து கலங்கிப் போனாள். "தருண்....., இப்போ என்னோட மனசுக்கு நெருக்கமா, நான் உங்களைத்தான் நினைக்கிறேன்", திக்கித் திணறி எப்படியோ சொல்லிவிட்டாள்.

அவள் சொன்ன பிறகும், சலனமே இல்லாமல் அவளைப் பார்த்தான். "இப்போ உன்னோட படம் பண்ணுவதால வந்த நெருக்கம் தானே", புரியாதவன்போல் கேட்டான்.

"இல்ல இல்ல.....", வேகமாக மறுத்தப் பிறகுதான், இன்னும் எப்படிச் சொல்லுவது என்று குழம்பினாள்.

'நீயே சொல்' என்பதுபோல் அசையாமல் இருந்தான். அவன் செய்கையில், அவளுக்குக் கோபமும், இயலாமையும், அழுகையும் போட்டி போட்டாலும், தான் இருக்கும் நிலையில், அவனைத் தவிர தனக்கு உதவுபவர் யாரும் இல்லை என்பது புரிய, கலங்கும் கண்களை அடக்கியவாறே,

"த.....தருண்....., நிஜம்மாவே நான் சொல்ல வாறது உங்களுக்குப் புரியலையா? இல்ல....., என்னோட நிலைமையை பரிகாசம் செய்யிறீங்களா?", கண்கள் கலங்க, உதடு துடிக்க, தன்னைக் கட்டுப்படுத்த முயன்றும் முடியாமல், அழுதே விட்டாள்.

அவளை அணைத்து ஆறுதல் சொல்லத் துடித்த கைகளை அடக்கிக் கொண்டு, "நீயே யோசித்து பார் லயா. இதே பிரச்சனை வேற நடிகரோட நடிக்கும்போது ஏற்பட்டிருந்தால், கண்டிப்பா நீ அவங்க கிட்டே தானே உதவி கேட்டிருப்ப, இப்போ அந்த இடத்தில் நான் இருப்பதால் உனக்கு என்னைத் தேடிவர தோணியது. இதில் என்ன ஸ்பெஷல் இருக்கு?", தோளைக் குலுக்கி சாதாரணமாகச் சொன்னான்.

"தருண்..... நான் உண்மையைச் சொல்லவா, இந்த இடத்தில் இப்போ நீங்க இல்லாமல் இருந்திருந்தால் நான் எடுத்திருக்கும் முடிவே வேறாக இருந்திருக்கும். முதல்நாள், அம்மா என்னை உங்களிடம் அனுப்பும் பொழுதே, அந்த இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், என் வீட்டில் இருந்து என் பிணத்தைத்தான் எடுத்துட்டுப் போய் இருப்பாங்கன்னு, இங்கே வந்ததுக்குப் பிறகுதான் புரிஞ்சுகிட்டேன்.

அதெப்படி இவ்வளவு உறுதியா சொல்லுறன்னு நீங்க கேட்டீங்கன்னா? போன படத்தில் என்னோட நடித்த கதாநாயகன், தேவையே இல்லாமல் காட்சிகளில் உரசுவான். அவனை நினைத்தாலே ஒரு அருவருப்புதான் வரும்.

ஆனால் நீங்க, முதல் நாளே என்கிட்டே தப்பா பேசினாலும், ஒரு முறை கூட, என்னைத் தப்பாக ஒரு பார்வை பார்த்தது இல்லை. அதுவே எனக்குப் பெரிய நிம்மதியைக் கொடுத்தது. இங்கே வர முன்னாடி, அம்மா கட்டயபடுத்தும்போது கூட, என் நிலை இப்படி ஆயிடுச்சேன்னு நினைச்சுதான் நான் ரொம்பக் கவலைப்பட்டேன்.

உங்க முன்னாடி இப்படி ஒரு நிலையில் நிக்கணுமேன்னுதான் வருத்தப்பட்டேன். அது எனக்கு அப்போ தெரியலை, உங்களை நினைச்சு பயப்படுறேன், உங்க மேல கோபமா இருக்கேன் இப்படித்தான் என்னையவே ஏமாத்திட்டு இருந்து இருக்கேன்னு, பிறகு நிதானமா யோசிச்ச பிறகு எனக்குப் புரிஞ்சுது.

இன்னும் நீங்க என்னை நம்பலன்னா....., என்னோட மனசு உங்களுக்குப் புரியலன்னா, எனக்கு, இதுக்குமேல என் மனசை, என் நிலையைப் புரிய வைக்கத் தெரியலை", அழுகையில் நெஞ்சு விம்ம, அவன் முன்னால் இதற்குமேல் தன்மானத்தை விட்டுக் கேட்க முடியாது என்று தோன்ற, ஸோபாவில் இருந்து வேகமாக எழுந்து செல்லப்போனாள்.

அவள் செல்லப் போகவே, அவளை விட வேகமாக எழுந்து, அவளைத் தன் கையணைப்புக்குள் கொண்டு வந்தான். திமிறிய அவளை, சுலபமாக அடக்கினான்.

"என்ன இது விடுங்க.....? உங்களுக்குத்தான் என்மேல் நம்பிக்கை இல்லையே. பிறகு ஏன் என்னைத் தடுக்குறீங்க?", சொன்னவாறே அவனை விலக்க முயன்றாள்.

"உன்மேல் நம்பிக்கை இல்லன்னு எப்போ சொன்னேன்? என்னைப் பற்றிய உன்னோட மனநிலை என்னன்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். அது மட்டும் இல்லை, உன் மனசில் நான் இருக்கிறேன் என்று உனக்கே புரிய வேண்டாமா? அதான் உன் வாயாலேயே வரட்டும்னு இருந்தேன்", அவளை இடையோடு வளைத்து, தன்னோடு சேர்த்து இறுக்கினான்.

அவன் சொல்லவே, அவனை விழி விரிய வியப்பாய் பார்த்தாள். "நிஜம்மாவா.....", புருவத்தைச் சுருக்கி, கண்களை விரித்து அப்பாவியாகக் கேட்டாள்.

அவளது இந்த செய்கையில் தன்னை தொலைத்தான் அவன். "லவி....., நாளைக்கு சீனுக்கு இப்போ ரிகர்சல் பாக்கலாமா?", மூக்கை அவள் கன்னத்தில் உரசியவாறு, கிறக்கமாகக் கேட்டான்.

அவனது இந்த அதிரடி நடவடிக்கையிலும், புதிய அழைப்பிலும், என்ன சொல்வதென்று தெரியாமல், திகைப்பாய் அவனைப் பார்த்தவாறு எதுவும் சொல்லாமல் நின்றாள்.

அவனது இந்த நெருக்கத்தில், மூளை வேலை நிறுத்தம் செய்ய, "எ....என்..ன சீன்.....", காற்றாய் வந்து தீண்டியது அவள் குரல்.

"லவி.....", "ம்ம்.....", "ஐ லவ் யூ.....", இழுத்த மூச்சை விடவும் மறந்தவளாய், சிலையான அவளை, இரு கன்னங்களிலும் கை கொடுத்து, அவள் முகத்தை அருகில்

இழுத்து, அவள் சிவந்த இதழ்களில், தன் முரட்டு இதழ்களை வைத்து அழுத்தினான்.

திகைத்து விதிர்த்தவள், பின்னர் அவன் செய்கையில் கட்டுண்டு, அவள் உடல் மொத்தமும் சூடாக, கால்கள் பலமிழக்க, புரியாத உணர்வில் சிக்குண்டாள் அவள். அவன் தோள்களில் கை கோர்த்து தன்னை நிலை நிறுத்தப் போராடினாள். மூச்சுக்காற்றுக்கு நுரையீரல் ஏங்க, அவனிடமிருந்து விடுபட முடியாமல், அவன் மூச்சுக்காற்றே அவளுக்கு சுவாசமானது.

அவள் இதழ்களைப் பிரியவே முடியாது என்பதுபோல் நடந்துகொண்டான் அவன். கேமராவின் முன் நிற்கும்போது, காட்சி கச்சிதமாக வரவேண்டும் என்ற எண்ணத்தில் சில உணர்வுகள் எதுவுமே தீண்டாமல், இயந்திரத்தனமாக செயல் படுவது, இன்று இயல்பாக நடக்கவே, ஒரு இதழ் தீண்டல் இவ்வளவு உணர்வுகளையும், பரவசத்தையும் கொடுக்குமா என்று உருகினாள் அவள்.

நிதானமாக அவள் இதழ்களை விட்டுப் பிரிந்தவன், இமை மூடி நின்றிருந்த அவளைக் காதலாகப் பார்த்திருந்தான்.

கதவு - 21

புன்னகை இதயத்தின்

திறவுகோல் என்றால்

இதழ் முத்தம்

காதலின் திறவுகோலா?

உன் இதழ் தீண்டலில்

என் மனதில், காதல் பூ பூத்ததே.....

தருண் தன்னிடமிருந்து விலகியதுகூடத் தெரியாமல், அவன் தந்த முத்தத்தில் லயித்திருந்தாள் அவள். பொங்கிய உணர்வுகள் தணிய கொஞ்சநேரமானது. அவளால் நிதானத்திற்கே வர முடியவில்லை. எங்கே இமை திறந்தால் நடந்தது கனவாகிவிடுமோ என்ற நினைப்பே அவளை இமை திறக்க அனுமதிக்கவில்லை.

"லவி.....", அவளை மெதுவாக அழைத்தான்.

"தருண்....., இது ரிகர்சல் சீன் இல்லையே", இமை மூடி நின்றிருந்தவளின், விழி ஓரத்தில் கண்ணீர் கோடாக வழிந்தது. அவளின் மொத்தத் தவிப்பும், அவள் குரலின் வழியே அவன் உணர்ந்தான்.

அவள் இவ்வாறு கேட்கவே, அவளை இழுத்துத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். "லவி, நான் உன்கிட்டே சொல்லும் என் காதல், போலியாகக் கேமரா முன்னாடி இருக்க கூடாது என்பதற்காகவும், என் முதல் முத்தத்தை நீ உணரவேண்டும் என்பதால்தான் இப்போ சொன்னேன்", அவன் குரலில் இருந்த உறுதி அவளை விழி திறந்து பார்க்க வைத்தது.

கண்ணீர் நிறைந்த கண்கள் அவள் பார்வையை மறைக்க, அவனை இறுக அணைத்துக் கொண்டாள். "ஐ லவ் யூ தருண்....., யூ ஆர் மை லைப்.....", சொன்னவாறு, தானும்

தன் இதழ்களை அவன் முகத்தில் ஒரு வேகத்தோடு ஒற்றி எடுத்தாள்.

அவள் செய்கைக்கு இசைந்து பேசாமல் நின்றிருந்தான். அவள் வேகம் தணிந்து, "தருண்....., நாம இப்போவே கல்யாணம் செஞ்சுக்கலாம். எனக்கு இந்த நடிப்பு வேண்டாம். என்னை இப்படியே எங்கேயாவது கூட்டிப் போய்டுங்க", அவனை விட்டு விலக முடியாதவளாக, தாயிடம் இருந்து தப்பிக்க இப்படிச்சொன்னாள்.

"லவி, என்ன பேசுற நீ? உன்னோட திறமையை, என்னோட காதலைச் சொல்லி முடக்கவா நினைத்தேன். இனிமேல் உனக்காக, எந்தச் சூழலிலும் நான் இருக்கிறேன் என்ற உறுதியையும், நம்பிக்கையையும் உனக்குக் கொடுக்கத்தான் இப்படிச் சொன்னேன்.

எவ்வளவோ பேருக்குக் கிடைக்காத வாய்ப்பு, உனக்குக் கிடைத்திருக்கிறது. அதை வீணாக்க கூடாது. அது மட்டும் இல்லை, நம்ம காதலை, நீ உன் அம்மாவிடம் சொல்லிவிட்டு, அவர்கள் சம்மதம் வாங்கிய பிறகுதான் நம் திருமணம் நடக்கும்.

இப்பொழுதே நீ உன் அம்மாவிடம் சொல்லிவிடுகிறாய் என்றாலும் எனக்குப் பிரச்சனை இல்லை", ஒரு அழுத்தத்துடன் சொன்னான்.

தாயிடம் சொல்ல வேண்டும், அதுவும் தானே சொல்லவேண்டும், அவர்கள் சம்மதம் கிடைத்த பிறகுதான் திருமணம் என்று சொல்லவே அதிர்ந்து போனாள் அவள். அவளாவது தாயிடம் சொல்லுவதாவது, இது நடக்கும் காரியமா?

அவளால் எப்படி, தன் தாயிடம் அவளது காதலைப் பற்றிச் சொல்ல முடியும். அப்படிச் சொன்னால், தருணைப் பார்க்க அவள் அனுமதிப்பதே இந்த படப்பிடிப்பின் கடைசி நாளாக இருக்கும். இதையே அவள் தருணிடம் சொல்ல,

"என் வீட்டில் நான் சொல்லிவிடுவேன். ஆனால் உன் வீட்டில் நீதான் சொல்லவேண்டும். இதில் என் உதவி உனக்கு

எப்பொழுதும் கிடைக்காது", தன் நிலையை தெளிவு படுத்தினான்.

"தருண்..., நீங்க சொன்னால் நான் எதையும் கேட்பேன். ஆனால் என்னால் இதைச் செய்ய முடியாது. அதுவும் என் அம்மாவிடம்....., வேண்டாம் அப்படி நம் விஷயம் அம்மாவுக்குத் தெரிந்தால், அது பெரிய பிரச்சனைகளைத்தான் நமக்குக் கொடுக்கும்", தயக்கமாகச் சொன்னாள்.

"நமக்குப் பிரச்சனையை கொடுப்பாங்கன்னு சொல்ல வாறியா? இல்லை உன்னால் உன் அம்மாவிடம் சொல்லத் தைரியமில்லைன்னு சொல்ல வாறியா?", அவளைப் பற்றி தெரிந்ததால் கேட்டான்.

தலை குனிந்து நின்றிருந்தாள். அவளது அந்த மௌனமே அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது. "லவி, உனக்கு, நானும் என் காதலும் வேணும்னா, உன்னோட இந்த அமைதி அதுக்கு எப்பவுமே உதவாது. நாம தனி மனிதர்கள் கிடையாது, நம்மைச் சுற்றி எப்பவுமே மற்றவர்களின் கண்கள் இருந்துட்டே இருக்கும்.

அப்படியிருக்கும் போது எங்கேயாவது சென்று ஒளிஞ்சுக்கலாம்னு நினைக்கிறதை விட்டுட்டு, நம்ம காதல் நிறைவேற என்னவெல்லாம் செய்யணும்னு யோசிச்சால் அது சரியா இருக்கும். இப்போ நீ கிளம்பு.

சரி, இவ்வளவு பயந்தவள், எப்படி இந்த நடு ராத்திரி காரை எடுத்துட்டு வந்த? இப்போமட்டும் அந்த தைரியம் இருக்கா?", அவள் எப்படி வந்தாள் என்று தெரிந்துகொள்ள கேட்டான்.

"அம்மா எப்பவும் தூக்க மாத்திரைப் போட்டுப்பாங்க. இன்னைக்கும் போட்டுகிட்டாங்க, அதைப் பார்த்தேன்.....", அவனது கோபப் பார்வையில் பேச்சை நிறுத்தினாள்.

"அதானே பார்த்தேன், உனக்காவது உன் தாயை எதிர்த்துப் பேசும் தைரியம் வருவதாவது. இப்போ உங்க அம்மா முழிச்சிருந்தால் என்ன செய்வ?", ஏளனமாகக் கேட்டான்.

"தருண், என்னைப்பற்றி எல்லாம் தெரிந்துதானே விரும்புறீங்க? பிறகு என்ன?", அவனது ஏளனம் அவளுக்குக் கோபத்தை அளித்தது.

"இன்னும் நீ அதே தொடை நடுங்கியாகவே இருப்பதை, நான் விரும்பலைன்னு சொல்ல வந்தேன். நீ உங்க அம்மாவுக்கு அடிமை கிடையாது. உன் சம்பாத்தியத்தில் தான், உன் அம்மா இருக்குறாங்க. அதனால் இப்படி நடுங்குவதை இத்தோடு விடு.

சரி நேரமாச்சு, நீ கிளம்பு, இதுக்குமேல நீ தூங்காமல் இருந்தால் நாளைக்கு சீன் ஒழுங்கா வராது", பேச்சு மேலே வளர்வதை அவன் விரும்பவில்லை.

அவன் கோப முகம் அவளுக்கு வருத்தத்தை அளித்தது. "உங்களுக்கு என்மேல் கோபமில்லையே", கவலையாகக் கேட்டாள். அவளிடம் கோபத்தை காட்டினால் இன்னும் வருத்தம் அதிகமாகும் என்பதை உணர்ந்து, "அதெல்லாம் எதுவும் இல்லை", என்று அவளைச் சமாதானம் செய்தான்.

கிளம்பும் நேரம்தான், தான் வந்தப் பிரச்சனைக்கு எந்தத் தீர்வும் அறியவில்லை என்பது, அவளுக்கு ஞாபகம் வந்தது. "தருண்....., எங்க அம்மா பேசியதைப் பற்றி, நீங்க எதுவுமே சொல்லலையே", அவனுக்கு நினைவூட்டினாள்.

"லவி நீ அதைப்பற்றி யோசிக்காதே, எல்லாம் நான் பாத்துக்கறேன். நீ, நம்ம காதலை எப்படி உங்க அம்மாவிடம் சொல்லுறதுன்னு மட்டும் யோசி, சரியா", மெல்லிய புன்னகை இதழில் உதிக்க, அவள் தலையைப் பிடித்து ஆட்டியவாறு சொன்னான்.

"அப்போ சரி.....", நிம்மதி மூச்சு விட்டாள். அவளுக்கு, அவன்மேல் அசைக்க முடியாத நம்பிக்கை பிறந்தது. அறையில் இருந்து செல்லப் போனவள், வேகமாக அவனை அணைத்து, "ஐ லவ் யூ தருண், நான் உங்களை நம்புறேன்", சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் அணைப்பும், வார்த்தையும், செய்கையும் அவன்மேல் அவளுக்கிருந்த நம்பிக்கையை, அப்பட்டமாக

வெளிப்படுத்தியது. எப்படி அவள் நம்பிக்கையைக் காப்பாற்றப் போகிறேன் என்ற கவலை அவனுக்குப் பிறந்தது.

தெய்வா, அடுத்து என்ன திட்டம் தீட்டுவாள் என்பதை, ஓரளவுக்கு அவனால் யூகிக்க முடிந்தது. ஆனால் ஷெட்டியின் கைகளில் இருந்து, அவளை எப்படிக் காப்பாற்ற, என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

ஷெட்டி உடனடியாக அவளை நெருங்குவதென்றால், வெளிநாட்டுப் படப்பிடிப்பில் தான் நிகழும். லயாவைச் சுற்றி வியூகங்கள் இறுக்கமாகப் பின்னப்படுவது அவனுக்குப் புரிந்தது. ஒரு பெண்ணை உடலாக மட்டுமே பார்க்கும் வழக்கம், என்று மாறும் என்ற வேதனை அவனுள் பிறந்தது.

படுக்கையில் சென்று விழுந்த அவனுக்கு, உறக்கம் தூரமாக நின்றது. "நான் உங்களை நம்புறேன்", ஒற்றை வார்த்தையில் தன் பாரங்கள் அனைத்தையும் இவன்மேல் இறக்கி வைத்துவிட்டு அவள் சென்றுவிட்டாள்.

அந்த ஒற்றை வார்த்தையைக் காப்பாற்ற, அவன் எவ்வளவு தடைகளை தகர்க்கவேண்டி வருமென்று அவனுக்கே புரியவில்லை. எப்படியும் வெளிநாட்டுப் பயணம் செல்ல, இன்னும் ஒரு வாரமாவது ஆகும். அதற்குள் எதையாவது செய்யலாம் என்று எண்ணியவாறு, நீண்ட பெருமூச்சை வெளியேற்றிவிட்டு, கண்களை மூடி முயன்று உறங்கினான்.

அவன் அப்பொழுது அறியவில்லை, அவனுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை வழங்க, அவர்கள் தயாராக இல்லை என்பதை..... . அறியும் பொழுது அவன் என்ன முடிவு எடுப்பான்?

********* லயா வாசலில் வந்துநின்ற அதிர்ச்சி விலகாமலே இருந்தார்கள் வாசுவும் கண்மணியும். என்னவென்று கேட்கக் கூட மறந்து, கதவை வேகமாகத்

திறந்துவிட்டு, அதிர்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களைக் கலைத்தது, லயாவின் பேச்சுதான்.

"நான் தருணைப் பார்க்கப் போறேன்.....", அவர்கள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல், லிப்டில் சென்று புகுந்துகொண்டாள். அவளை தடுக்கப்போன வாசுவை, கையைப் பிடித்து, தடுத்து நிறுத்தினாள் கண்மணி.

"கண்மணி..., அவங்க பாட்டுக்கு போறாங்க. தருண் கத்தப் போறான். அவளைக் கத்துறானோ இல்லையோ, என்னைக் கூப்பிட்டு, கடிச்சுக்குதறப் போறான். உனக்கு, அவன் என்னைக் கடிச்சுக் குதறுவதைப் பார்க்க அவ்வளவு ஆசையா? விடு என்னை", அவள் கையை உதறிச் செல்லும் முன்பே, லிப்ட் போய்விட்டது.

லிப்ட் சென்றுவிடவே, "கண்மணி, அவனைப் பற்றி தெரிந்தும் ஏன் இப்படிச் செய்யிற? அவனோட ரூமுக்கு, யாருமே அனுமதியில்லாமல் போவது அவனுக்குப் பிடிக்காது", என்னமோ அவளுக்குத் தெரியாததைச் சொல்பவன் போன்று, படபடப்பாகச் சொன்னான்.

அவன் தவிப்பை ரசித்துச் சிரித்தாள் அவள். அவள் சிரிப்பை உணர்ந்து, "ஏன் கண்மணி இப்படி.....? போ, இப்போ என் செல்போன் அலற போகுது. அப்படி இல்லையா, லயா போன வேகத்தைவிட, பலமடங்கு வேகமாய், அவன் குரல் இப்போ வரப் போகுது. எதுக்கும், நான் இப்போவே படியில் ஏறுறேன்", அவள்மேல் தன் கோபத்தைக் காட்ட முடியாமல், சோர்ந்துபோய் சொல்லிவிட்டு, செல்லப் போனான்.

"அதெல்லாம் அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான், நீங்க வாங்க", அவன் கையை பிடித்து இழுத்துவந்து, ஸோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அவள் செய்கையை, புரியாமல் பார்த்தான் அவன். "என்ன அப்படிப் பாக்குறீங்க.....?", அவன் பார்வையின் பொருள் உணர்ந்து கேட்டாள்.

"அதெப்படி, அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான்னு சொல்லுற? எனக்கென்னமோ திக்கு திக்குன்னே இருக்கு", கலவரமாக மாடியைப் பார்த்தவாறே சொன்னான்.

"அவங்க, அவங்களோட வாழ்க்கையைப் பற்றிப் பேச போறாங்க. மேலே போறது அவனோட காதலி, அப்படியிருக்கும்போது அவன் எப்படிக் கத்துவான் ம்.....", ஒற்றை புருவத்தை உயர்த்திக் கேட்டாள்.

வாசு அதிர்ச்சியாக அவளைப் பார்த்தான். "நீ என்ன சொல்லுற? ரெண்டுபேரும் லவ் பண்ணுறாங்களா? இது எப்போ இருந்து. நான் நினைச்சேன்...., மற்ற கதாநாயகிகள் போலத்தான் இவங்களும்னு. எனக்கென்னமோ அந்த தாராதான் இவனை வளைப்பான்னு தோணிச்சு. அவகிட்டே இருந்து தப்பிச்சுட்டானா பையன்", அதிர்ச்சி, நக்கல், வியப்பு என அவன் குரல் மாறி மாறி ஒலித்தது.

அதைக் கண்மணியும் உணர்ந்து கொண்டாள். "ஏன், நீங்க மட்டும்தான் லவ் பண்ணனுமா? தருண் லவ் பண்ணக் கூடாதா?", கோபமாகக் கேட்டாள்.

"பண்ணலாம்....., தாராளமா லவ் பண்ணலாம்....., இருந்தாலும், அவனுக்கு இருக்கும் மச்சம், எனக்கு இல்லாமல் போச்சே", பொய்யாக பெருமூச்சு விட்டான்.

"என்ன மச்சம்.....?", குழப்பமாகக் கேட்டாள்.

"இல்ல....., லவ் பண்ணுற பொண்ணு முதற்கொண்டு, எல்லா பொண்ணுங்களும், அவன் ரூமுக்குப் போறாங்க. நானும்தான் நாலு வருஷமா லவ் பண்ணுறேன்....., கிட்டே நெருங்கினாலே அனலடிக்கிற மாதிரி பாக்குறது,

ரூமுக்குள்ளே வந்தால்....., ஏன் வந்தன்னு கேக்குறது. அவளாக என் ரூமுக்கு வந்தால், அலாரம் வைக்கிறது, தண்ணி வைக்கிறதுன்னு ஏதாவது ஒரு சாக்கு வேண்டும், அதை நினைச்சு சொன்னேன்", குறும்பாகச் சொன்னவாறே, ஸோபாவில் அவளை நெருங்கி அமர்ந்தான்.

அவன் பேச்சில், அவனைக் கோபமாக முறைக்க முயன்றும் முடியாமல், கண்களில் மெல்லிய கிறக்கம் வந்தது அவளுக்கு. "ஏதாவது சாக்கில்லாமல் உங்க ரூமுக்கு வந்தால், என்னை முழுசா வெளியே அனுப்பிடுவீங்களா?", குரலில் ஒரு நெகிழ்ச்சி.

"முழுசா அனுப்பாமல், கடிச்சு முழுங்கிடுவேனா?", அவள் இளக்கம் புரிந்து, அவளோடு இன்னும் நெருங்கி அமர்ந்தான். அதை உணர்ந்தாலும் எழுந்து செல்லவில்லை அவள்.

இதுவரை, தன் காதல் அவனுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதால், விறைப்பாக இருந்தவள், தருண் தன் வாழ்க்கையை, தனக்குப் பிடித்தவனோடு அமைக்க முயல்கிறான் என்று அறிந்ததுமுதல், வாசுவின்மேல் இருந்த காதலை, ஆசையை, நேசத்தை, தடுக்க முடியாமல் தடுமாறினாள்.

இதுவரை அவனிடமிருந்து விலகியிருந்தது போதும், இதற்குமேல் அந்த அவஸ்தையை தாங்க முடியாது என்பதுபோல் அமர்ந்திருந்தாள். மனதுக்குள் ஏதோ எதிர்பார்ப்பு குமிழியிட்டது. அவள் இடையில் தன் கைகளைப் படரவிட்டான். இருவரின் மூச்சுக்காற்றும் அனலாக வெளிவரும் வேளை, அவனை விட்டு வேகமாக எழுந்து தன் அறைக்குச் சென்றாள்.

மனதுக்குள் மெல்லிய ஏமாற்றம் படர, அங்கேயே அமர்ந்திருந்தான் அவன். கோபம் மனதில் விரவியது. அறைக்குள் நுழைந்த கண்மணியின் இதயத் துடிப்பு சரியாக, சற்றுநேரமானது.

அவனை நெருங்காமல் இருப்பதே, தன் பெண்மைக்குப் பாதுகாப்பென்று எண்ணினாள். இவர்களின் மோன நிலையை கலைக்கவென்றே வந்தாள் லயா.

"கண்மணி.....", லயாவின் குரல் வெளியே கேட்கவே, கதவை திறந்துவிட்டு வெளியேறி, அவள் அருகில் சென்றாள்.

"லயா.... ஏதாவது பிரச்சனையா?", அவள் நடு இரவில் வந்ததிலேயே அதை கணித்திருந்தாலும், கேட்டாள்.

ஆம் என்பதுபோல் தலையை ஆட்டியவள், "சாரி, உங்க தூக்கத்தையும் கெடுத்துட்டேன். எனக்கு வேற வழி தெரியலை", சங்கடமாகச் சொன்னாள்.

முதலில் வந்தபொழுது, இவர்களைக் கண்டுகொள்ளாமல் சென்றவள், திரும்பி வந்து தயக்கமாக நின்றதில், கனிவாக அவளைப் பார்த்தாள். "அதெல்லாம் எதுவும் இல்லை, நீ மனசைப் போட்டு குழப்பிக்காமல், வீட்டுக்குப் போ", கண்மணியின் குரலில், லயாவின் கண்கள் கலங்கியது.

தன்னைத் துருவாத அவள் கண்ணியம் பிடித்தது, அவளுக்கு. "கண்மணி, இப்போ உங்ககிட்டே பேச நேரமில்லை, இல்லன்னா கண்டிப்பா பேசி இருப்பேன். எனக்கும் உங்களை எல்லாம் விட்டால் இப்போ யாருமில்லை", அவள் தோளில் சாய்ந்துகொண்டாள்.

இவர்களின் பேச்சு தொடரவே, வாசு அவன் அறைக்குச் சென்றுவிட்டான். அது இருவருக்கும் பேச வசதியாக இருந்தது. திரையில் ஜொலிக்கும் லயா, முன்னணி நாயகி, தன் தோளில் யாருமற்ற, ஆதரவற்ற குழந்தையாக, ஆறுதல் தேடும் பிள்ளையாக ஒடுங்கியது, கண்மணியின் கண்களை கலங்க வைத்தது.

"லயா, எல்லாம் சரியாயிடும். இப்படி அழுதால், எந்த மாற்றமும் வந்துவிடாது. பிரச்சனையை தைரியமா எதிர்கொள்ளப் பழகு. உனக்காக நாங்க எல்லாம் இருக்கோம்", அவளைத் தோளோடு அணைத்து, தோழமையை வெளிப்படுத்தினாள்.

"கண்மணி, நீங்களும் தருண் சொன்ன மாதிரியே சொல்லுறீங்க, அவரை மாதிரியே சிந்திக்கிறீங்க. அவர் கூடவே இருக்கறதனால் உங்களுக்கு இந்தத் தெளிவு வந்து இருக்கா?", அவளது சிறு பிள்ளைத்தனமான கேள்வியில் மெல்லியதாகச் சிரித்தாள் கண்மணி.

"இருக்கலாம்....., இப்போ நீயும் அவரோட சேர்ந்துட்ட இல்ல, தெளிவா சிந்திக்க வந்துடும் சரியா?", அவளைச்சமாதானம் செய்ய, சொன்னாள்.

"நிஜம்மாவா.....?", அவளைச்சமாதானம் செய்வது கூடத் தெரியாமல், விழி விரித்து ஆச்சரியமாக வினவவும், அவளை இரக்கமாகப் பார்த்தாள்.

"ஆமா நிஜமாதான் சொல்லுறேன். நீ சொன்ன மாதிரி, நாம ஒரு நாள் நிதானமா பேசலாம்", அவளை அழைத்துக்கொண்டு, காருக்குச் சென்று, அவள் கார் கண்பார்வையில் இருந்து மறையும்வரை பார்த்திருந்துவிட்டு, கனத்த இதயத்துடன் அறைக்குச் சென்றாள்.

மறுநாள் விடியல், அவர்களுக்கு வைத்திருக்கும் அதிர்ச்சிகளை, உணராமலே சென்றார்கள்.

கதவு - 22

உடல்கள் பிரிந்திருந்தாலும்

உள்ளத்தால் நெருங்கியிருக்கும்

உன் நினைவுகள் கொடுக்கும்

உண்மையான நேசமே

காதல்.....

தருணின் முன்னால் இருந்த வாராந்திர பத்திரிகை, காற்றுக்குத் தானாகவே பக்கங்களை புரட்டிக் கொண்டிருந்தது. அதை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான், தருண்.

அதைப் பார்த்ததுமுதல், விவியின் மேல் கோபம் கிளர்ந்து எழுவதைத் தடுக்க முடியவில்லை. 'இவளுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?", அந்தச் செய்தியைப் படித்ததுமுதல், அவன் மூளையை குடைந்த கேள்வி இது ஒன்றுதான்.

தலையை அழுந்தக் கைகளால் கோதிக் கொண்டான். மனதில் விரவியிருந்த கோபம் மட்டுப்பட மறுத்தது. அவன் இருந்த நிலையைக் கண்டு, அவன் அருகில் செல்லவே அஞ்சினான் வாசு. கண்மணியோ அவனைப் பார்க்க முடியாமல், அறைக்குள்ளேயே முடங்கி இருந்தாள்.

வாசு அவளையும் சென்று பார்த்தான். வந்திருந்த செய்தியின் தாக்கம், வாசுவிற்கும் இருந்தது. ஆனால், பிரச்சனைக்கு வெளியில் அவன் இருந்ததால், அவனால் இயல்பாக இருக்க முடிந்தது. இயல்பாக இருந்தாலும், அந்தச் செய்தியில் எதுவும் உண்மை இருக்குமோ? என்பதே அவனது சிந்தையாக இருந்தது.

அதைத் தெளிவுப் படுத்திக்கலாம் என்றாலோ, தருண் நெருங்கவே முடியாமல் அக்கினியாக இருந்தான் என்றால், கண்மணியோ இறுக்கமாக இருந்தாள். அவளது அந்த

இறுக்கமான அரணை உடைத்துக்கொண்டு, உள்ளேபோக மனமில்லாமல் பார்வையாளனாகவே இருந்தான்.

மறுபடியும் அந்தப் பத்திரிக்கையை எடுத்து, பக்கங்களைப் புரட்டி, நடுப் பக்கத்தில் வந்து, பார்வையை, தருணைப் பற்றி வந்த செய்தியில் நிலைக்கவிட்டான்.

"இரவு உச்ச நட்சத்திரத்தின், உடன்பிறவா சகோதரி....., அழகுக்கலை படித்ததால் அவரோடு தஞ்சமா? இல்லையென்றால் கைப்பாவை நடிகையுடன் எழுந்த காதலால், சகோதரி ஆனாரா?", கொட்டை எழுத்தில், அனைவரின் கவனத்தைக் கவரும் வகையில் பிரசுரமாகியிருந்தது அந்தச் செய்தி. இப்படி ஒரு செய்தியைப் படித்தால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எப்படியிருக்கும் என்பதை அவனால் உணர முடிந்தது.

அவனால் உணர முடியாதது ஒன்றுதான், வழக்கமாக வரும் கிசு கிசுக்களை அலட்சியப்படுத்தும் கண்மணி, இல்லையேல் தருணிடம் கோபப்படும் கண்மணி, இன்று அறையில் அடைந்து கிடப்பதைத்தான், புரிந்துகொள்ள முடியவில்லை.

இதற்கு முன்பும் அவர்களைப் பற்றி இதைவிட மோசமான விதங்களில் செய்திகள் வந்திருக்கின்றன. அப்பொழுதெல்லாம் கொஞ்சம் கோபத்தோடு அதைக் கடந்துசெல்லும் தருண், இன்று நெருப்புத் துண்டமாக மாறி அமர்ந்திருப்பதன் மர்மத்தை அறியவில்லை என்றால், தலையே வெடித்துவிடும் போல் இருந்தது அவனுக்கு.

மறுபடியும் மறுபடியும் அந்தச் செய்தியை படித்ததிலும், அன்று கண்மணி பெருமாளை 'அப்பா' என்று சொன்ன விதத்தையும் இணைத்துப் பார்த்தால்....., வந்திருக்கும் செய்தியில், அப்பட்டமான உண்மை இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

அப்படி உண்மை இருக்கவேண்டுமென்றால்....., இந்த யோசனையே அவனுக்கு ஒருவித விதிர்ப்பை கொடுத்தது. அப்படியென்றால் கண்மணி பெருமாளின் மகள். அதாவது

என் அத்தைக்கு ஏதோ ஒரு விதத்தில் மாமா துரோகம் செய்திருக்கிறார். இந்த நினைப்பே அவனுக்குத் தொண்டைக்குள் கசந்து வழிந்தது.

அத்தைக்கு துரோகம் செய்தவளின் மகளை நான் காதலிக்கிறேனா? இதை எப்படி எடுத்துக்கொள்ள? இதை எப்படி நியாயப் படுத்த? அதனால்தான், 'உங்கள் அத்தைக்குப் பிடிக்காதவளை நீங்க திருமணம் செய்வீர்களா?', என்று கேட்டாளா?

அவளையும் தருணையும் வைத்து வந்த கிசுகிசுக்களை நம்பி, அவளைத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தில் அவள் கேட்கவில்லையா? கண்மணியின்மேல் எழும் கோபத்தை அவனால் தடுக்கவே முடியவில்லை.

வாசு, எப்பொழுதுமே அவள்மேல் கொஞ்சம் கூட கோபப்பட மாட்டான். அவள் அவனை எப்படித் திட்டினாலும், உதாசீனப் படுத்தினாலும், மறுபடியும் அவள்முன்பே போய் நிற்பான். அவளை ஆவலாகவே பார்ப்பான். உன்னை நான் விரும்புகிறேன், உயிராய் நினைக்கிறேன், நீ என்ன சொன்னாலும், அதை நான் காதலியின் கோபமாகவே பார்க்கிறேன் என்பதுபோல் நடந்துகொள்வான்.

வாசுவின் இந்தப் பொறுமையும், நேசமுமே கண்மணியின் காவல் கோட்டையை தகர்த்திருந்தது. தன் தாயின் செய்கையால், அவளைப் பற்றி வாசு அறிந்தால் தன்னை எப்படிப் பார்ப்பான்? ஏளனமாகப் பார்ப்பானோ என்ற நினைப்பே, அவள் மனதை வாசுவின்பால் சாயாமல் பிடித்து வைத்திருந்தது.

ஆனால், வாசுவின் அந்தக் கள்ளமில்லா நேசம், கோபமே படாத அவன் குணம், எங்கே இருந்தாலும், தன்னைக் கண்டவுடன் அனிச்சையாக மலரும் அவன் முகம், தான் நெருங்கும் வேளையில் ஆர்வமாக பார்க்கும் அவன் பார்வை, தான் வெறுத்து ஒதுக்கும் போதும், அசட்டுச் சிரிப்புடன், தன் பார்வைக்காக ஏங்கும் அவன் பார்வை, இவைதான் கண்மணியைக் கவர்ந்தது.

வாசுவாலும் கண்மணியை எந்தக் கட்டத்திலும் தவிர்க்கவே முடிந்ததில்லை. ஆனால், இந்தச் சூழலில் அவளைத் தவிர்க்காமல் இருக்க முடியும் என்று தோன்றவில்லை. அவளிடம் பொறுமையாகக் கேட்கலாம் என்று எவ்வளவோ கட்டுப்படுத்தியும் அவனால் முடியவில்லை.

அந்தப் பத்திரிக்கையோடு, அவள் அறைக்குக் கோபமாகச் சென்றான். அதை அவளிடம் காட்டிக் கேட்கும் அளவுகூட அவனால் பொறுக்க முடியவில்லை. அவள் அறைக்குள் சென்றதும், பத்திரிக்கையை அவள் அமர்ந்திருந்த கட்டிலில் விசிறியடித்தான்.

அவன் பத்திரிக்கையை விசிறிய விதமும், அவன் தாடை இறுகியிருந்த விதமும், கண்களை மூடி அவன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்ற விதமும், அவள் பார்வையில் இருந்து தப்பவில்லை. எதுவும் சொல்லாமல் அமைதியானாள். எதுவாக இருந்தாலும் அவனே கேட்கட்டும் என்று அசையாமல் அமர்ந்திருந்தாள்.

"இதுக்கு என்ன அர்த்தம்.....? இந்த நியூஸ் உண்மைதான் இல்ல. அப்படின்னா...? நீ எந்த விதத்தில் தருணோட தங்கை? மாமாதான் உன்னோட அப்பாவா? தருணை விட நீ ஒரே ஒரு வயசுதான் சின்னவ, அப்போ, எங்க அத்தையை கல்யாணம் செஞ்ச ஒரே வருஷத்தில் உங்க அம்மாவையும் சேத்துகிட்டாரா? அவரா சேத்தாரா..... இல்லை, உங்க அம்மா, எங்க மாமாவை மயக்குனாங்களா?

அதுதான் உங்க பரம்பரைக்கே கைவந்த கலையாயிற்றே, உங்க அம்மா எங்க மாமாவை மயக்குனாங்க, நீ என்னை.... . சொல்லு கண்மணி, உங்க அம்மாவுக்கும், மாமாவுக்கு எப்போ இருந்து சம்பந்தம்,

மாமா, படுக்கையில் விழுந்த பிறகுதான் நீ வந்து இருக்க. என்ன..... மாமா கொடுத்த காசு வரலன்னு, அவரைப் பாக்க வந்தியோ? அவரால் முடியாமல் படுத்திருக்கிறார் என்று தெரிந்தவுடன் இங்கேயே தங்கிட்டியா? சரி, உங்க அம்மா எங்கே? நீ, உன் பங்கு சொத்தை எல்லாம் எழுதி

வாங்கிட்டேன்னு சொன்ன உடனே வருவாங்களா?, ஏளனமாகச் சொல்லிக் கொண்டே போனான்.

அவன் குற்றச்சாட்டுகளைப் பொறுக்க முடியாமல் குலுங்கி அழுதாள். அவளால் அவனை மறுத்து, எதையும் சொல்லவும் நா எழவில்லை. தன் தாயைக் குற்றம் சொல்லுவதையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன் தாயை, அவன் கேவலமாகப் பேசியது பொறுக்க முடியாமல், "வாசு.....", என்று கத்தினாள்.

அதே நேரம், தருணின் குரலும் அங்கே கேட்டது. "என்னடா சொன்ன.....? அவ உன்னை மயக்கினாளா? அவ பின்னாடி, காதலைச் சொல்லிட்டு நாய் மாதிரி சுத்துனது, நீயா இல்லை அவளா? ஒரு நாளாவது, உன்னைக் காதலிக்கிறேன்னு சொல்லி இருக்காளா? நான் இந்த விஷயத்தில் தலையிடுவது வரைக்கும், ஒரு ஆசையான பார்வை உன்னைப் பாத்துருக்காளாடா?

என்ன நினைப்பில், அவளோட அம்மாவை நீ குத்தம் சொல்லுற? உனக்கு என்ன உரிமை இருக்கு அதுக்கு?", கர்ஜித்தான் தருண்.

"இன்னொருத்தியோட புருஷனை வளைக்கிறவளை, குத்தம் சொல்லாமல் பாராட்டுவாங்களா?", தன் அத்தைமேல் இருந்த அபிமானம் அவனைப் பேசத் தூண்டியது.

"உனக்கு எப்படிடா அது தெரியும்? உண்மை என்னன்னு தெரியாமல் வார்த்தையை விடாதே வாசு. பின்னாடி ரொம்ப பீல் பண்ணுவ?", எச்சரித்தான் அவனை.

"உள்ளங்கைப் புண்ணுக்கு, கண்ணாடி அவசியமே இல்லை", வாசுவும் விடுவதாக இல்லை.

"சரி, நான் உன் வழிக்கே வரேன். இதில் பாதிக்கப்பட்டது என்னோட அம்மா, எனக்கு இல்லாத அக்கறையையும், துடிப்பையும் விடவா உனக்கு அதிகமா இருக்கும். நான், கண்மணியை என்னோட தங்கையா ஏற்றுக்கொண்டேன் என்றால், அதில் கொஞ்சமாவது நியாயம் இருக்கும்னு

உனக்குத் தெரியவே இல்லையா?", ஆற்றாமையாகக் கேட்டான்.

அவனது இந்தக் கேள்வியில் கொஞ்சம் தேங்கினான் வாசு. "அப்படின்னா, இந்தச் செய்தி பாதி உண்மை. இது அத்தைக்கு தெரியுமா? அப்படியே தெரிஞ்சால், அவங்க மனசு எவ்வளவு வருத்தப்படும்", கவலையாகக் கேட்டான்.

"அம்மா கண்டிப்பா வருத்தபடுவாங்க. அதனால்தான் அவங்ககிட்டே உண்மையைச் சொல்ல முடியாமல், தவிக்கிறேன் நான்", தருண் சொன்னான்.

"அன்னிக்கு மாமாவுக்கு அட்டாக் வந்தது....., கண்மணியைப் பார்த்ததாலா? அவருக்கு, அவ்வளவு அதிர்ச்சி தரணும்னா...?", அவனுக்குப் புரியவே இல்லை.

"கண்மணியோட அம்மா, இவ வயிற்றில் இருப்பது தெரிந்த உடனேயே தலைமறைவாயிட்டாங்க. இப்படி ஒரு மகள் இருப்பதே, அப்பாவுக்கு அன்னைக்குத்தான் தெரியும்", கண்களை மூடி வேதனையை விழுங்கினான் தருண்.

"என்ன சொல்லுற தருண்.....?", அதிர்ந்தான் வாசு. தான் சுமத்திய குற்றசாட்டுக்கள் பலமிழப்பதை உணர்ந்தான். அவளது தாய், இப்படி ஒரு மகள் இருப்பதையே மறைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டார் என்றால், மாமாவை மயக்கித் திருமணம் செய்தவர் என்று சொன்னது எப்படி சரியாகும்.

மாமாவின் சொத்துக்காக இவளை அனுப்பினார் என்றால், கண்மணி இதுவரை, மாமாவைச் சந்திக்க எந்த முயற்சியும் எடுத்ததில்லை என்பது அவனுக்கு உறைத்தது. இத்தனை வருடம் கழித்து, தருணின் நிழலில் அவள் வந்திருக்கிறாள் என்றால், அவளுக்கு ஆதரவாக இருந்த அவளது தாய், இல்லை என்பதுதானே பொருள்.

வாசுவின் குழப்பங்கள் அதிகரிக்க, தலையில் கைவைத்துக் கொண்டான். இந்தத் திருமணத்துக்கு என்னதான் அர்த்தம், என்னதான் அவசியம் என்பது அவனுக்கு சுத்தமாக விளங்கவில்லை.

"தருண், அப்போ மாமா இவங்க அம்மாவை, எதற்குத்தான் கல்யாணம் செஞ்சுகிட்டார். அப்படி என்ன அவசியம் வந்துது? அவங்களும் சேர்ந்து இல்லை, மாமாவும் அவங்களைத் தேடுன மாதிரி இல்லை....", தன் சந்தேகத்தைக் கேட்டான்.

"அங்கேதான் விதி சதி பண்ணிடுச்சு வாசு. அப்பா எதையோ நினைத்துச் செய்யப்போய்....., நடந்தவற்றைச் சொன்னான். இப்போ சொல்லு யார் மேல தப்புன்னு. நீ அனாவசியமா, கண்மணியை எதுவும் சொல்லாதே. நான் உன்னிடம், இவ்வளவு பொறுமையா பேசக் காரணமே, அவளுக்கு உன்னைப் பிடிச்சுருக்கு என்ற ஒரே காரணம்தான்.

இதுக்குமேல அவளைப்பற்றி தப்பா ஒரு வார்த்தைப் பேசுன....., நான் மனுஷனா இருக்க மாட்டேன். எல்லாம் இந்த விவியால் வந்தது. இப்போ என்னோட கவலையெல்லாம், இந்தச் செய்தியை அம்மா படிச்சுருப்பாங்களோ என்பதுதான்", கண்களைமூடி நெற்றியைக் கைகளால் தேய்த்துக் கொண்டான்.

இவர்களின் பேச்சைக் கேட்டவாறு கண்மணி அசையாமல் நின்றிருந்தாள். வாசு அவளை நெருங்கினான். "சாரி கண்மணி, நான் கொஞ்சம் அவசரப்பட்டுப் பேசிட்டேன். நீ இந்த உண்மையை எல்லாம், முதல்லையே சொல்லி இருக்கலாமே", அவள் தோளில் கைகளை வைத்தான்.

அவனைத் தள்ளிவிட்டு, தருணிடம் அடைக்கலம் புகுந்தாள். "என்னால்தானேண்ணா உனக்கு இவ்வளவு கஷ்டம். இப்போ அம்மா போன் செய்தால், அவங்களுக்கு என்ன சமாதானம் செய்ய முடியும்", தேம்பினாள் அவள்.

அவளது கண்ணீர் அவனையும் தாக்கியது. "கண்மணி, பெரியவங்க செய்த தப்புக்கு, நீ எதுக்குமா இவ்வளவு வருத்தப்படுற? என்றைக்கா இருந்தாலும், அம்மாவுக்கு இந்த உண்மை தெரிந்துதான் ஆகணும். நானும் எவ்வளவு நாள் மறைக்க முடியும்.

இந்தக் கிசுகிசுவே அவங்களுக்குப் பெரிய மன உளைச்சலை அளிக்கும். அவங்களுக்கு உண்மை தெரியாமல் இருப்பதை விட, தெரிவதுதான் இப்போதைக்கு நல்லதுன்னு நினைக்கிறேன்", எதார்த்தத்தைப் புரிய வைக்க முயன்றான்.

"அண்ணா வேண்டாம், அம்மாவுக்கு இந்த உண்மை தெரிந்தால் அவங்க என்னை, இப்போதையை விட அதிகமா வெறுத்துடுவாங்க. ஒரு பெண்ணாக அவங்க மனசு எனக்குப் புரியும்", அவனைத் தடுக்க முயன்றாள்.

அதே நேரம் வாசுவின் அலைபேசி ஒலித்தது. "தருண்....., அத்தை.....", தயக்கமாக இழுத்தான்.

"என்கிட்டே கொடு.....", வாங்கி அதைச் செவிமடுத்தான்.

"ஹலோ.....".

"தருண்....., அவளையும் கூட்டிட்டு வீட்டுக்கு வா", அவன் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் வைத்துவிட்டார்.

"என்ன தருண்.....?", வாசு வேகமாக கேட்க, "அம்மாவுக்கு சந்தேகம் வந்துடுச்சு. இப்போ என்ன செய்யன்னே தெரியலை. கதிர், நேற்றே கேட்டுவிட்டுத்தான் படப்பிடிப்பை வைத்தான். போகவில்லை என்றால் சரிவராது. நீ அம்மாவுக்கு போன் செய்து, சாயங்காலம் வருவதா சொல்லிவிடு.

கண்மணி, நீயும் முதல்ல ஷூட்டிங்க்கு கிளம்பு, மற்றதெல்லாம் பிறகு பாத்துக்கலாம். இந்தப் பிரச்சனையை மனசுக்குள் வச்சுட்டே, அவங்களுக்கு இன்னைக்குத் தெரிஞ்சுடுமோ, நாளைக்குத் தெரிஞ்சுடுமொன்னு கவலைப்படுவதை விட்டுட்டு, அவங்க என்ன முடிவு எடுப்பாங்கன்னு தெரிஞ்சுக்கலாம்", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

ஆனாலும், விவியிடம் பேசவேண்டும் என்று முடிவெடுத்தான். காலை டிபன் சாப்பிடக்கூட அவர்களுக்கு

மனமில்லை, வேறு வழியில்லாமல் கொறித்துவிட்டுக் கிளம்பினார்கள்.

"வாசு அம்மாகிட்டே பேசிட்டியா.....?", அவ்வளவு அவசரத்திலும் கேட்டான் தருண்.

"பேசிட்டேன்....., ஆனா என்கிட்டேயும் சரியா பேசலை", கவலையாகச் சொன்னான்.

"நீயும் உண்மை தெரிஞ்சுட்டே பேசாமல் இருந்திருப்பன்னு, நினைக்கிறாங்களா இருக்கும்", விடு சாயங்காலம் பேசிக்கலாம்.

வாசு கண்மணியிடம் பேச முயலும் பொழுதெல்லாம், அவனைத் தவிர்த்தாள் அவள். உண்மை என்னவென்று தெரியாமல், அவன் பேசிய பேச்சுக்கள், அவளைக் காயப்படுத்தியிருந்தது. தருண் அதைக் கவனித்தாலும், அவர்களுக்கு நடுவில் தான் செல்வது சரியில்லை என்று, அமைதியானான்.

**********ஷூட்டிங் ஸ்பாட்டில், அவனுக்கு முன்பே லயா தயாராக இருந்தாள். தருண் தன்னிடம் காதல் சொன்னதில், ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தாள். இன்றைய படப்பிடிப்புக் காட்சியும், அவளுக்குள் ஆனந்த பரபரப்பை விதைத்திருந்தது.

அதைவிட நேற்று, ரிகர்சல் பார்க்கலாமா, என்று கேட்டு அவன் பதித்த முத்திரை, இதயம்வரை இனித்தது. கீழுதட்டை நாவால் ஈரம் செய்து, மடித்துப் பற்களால் கடித்துக் கொண்டாள். ஒரு வெம்மையான உணர்வு தன்னைத் தீண்டுவதை உணர்ந்தாள்.

இதுதான், இந்த நினைப்புத்தான் காதலா? கேமராவுக்கு முன்னால், தான் இதுவரை முழுமையாக நடித்திருக்கிறோம் என்பதை உணர்ந்தாள். மற்ற நாயகர்களுடன் நெருங்கி நடித்த, ஒரு முறைகூட, இந்த உணர்வை அனுபவித்ததில்லை என்பதும் அவளுக்குப் புரிந்தது.

"தருண்....., தருண்....., தருண்.....", மனம் அவன் பெயரையே ஜெபம் செய்தது.

மகளின் மலர்ந்த முகத்தையும், அவளது பரபரப்பையும், தெய்வாவும் பார்த்தாள். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். அவளுக்கு, மகள் நடு இரவில் தருணை சந்தித்துவிட்டு வந்தது தெரிந்திருக்கவில்லை. மகள், நேற்று தான் சொன்னதை, அப்படியே நம்பிவிட்டாளே, என்ற சந்தோசத்தில் இருந்தாள் தெய்வா.

மகளுக்குச் சந்தேகம் வராத அளவுக்குக் கச்சிதமாக பிளான் செய்துவிட்டார்கள். இவர்களது பிளான் இதுவென்று அவளால் கண்டிப்பாக அறிய முடியாது என்று எண்ணினாள். மகளுக்குத் துணையாக, பக்கபலமாக ஒருவன் உருமாறியிருப்பதை அவள் அறியவில்லை.

தருண், ஒப்பனையில் இருந்த பொழுது, அவனது அலைபேசி அழைத்தது. வாசு அதை எடுத்துப் பார்த்தான், அழைப்பது தருணின் பாதுகாப்பு அதிகாரி. எனவே மறு பேச்சு இல்லாமல், தருணிடம் கொடுத்தான்.

அலைபேசியை வாங்கிய தருணின் முகம், அந்தப் பக்கம் சொன்னச் செய்தியைக் கேட்டு, ஒரு நிமிடம் கோபத்தை பிரதிபலித்து, பிறகு இயல்புக்குத் திரும்பியது. மோகன் சொல்வதை கவனமாகக் கேட்டவன், "எதுக்கும் இன்னும், ஒரு கண்ணு அவங்க மேலே இருக்கட்டும்", சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

இன்றைய நாள், மோசமான நாள் என்று எண்ணிக் கொண்டான். இதைவிட மோசமாக முடியாது என்று நினைத்தான். காட்சிக்குக் கிளம்பிச் சென்றவன், கதிர் சொன்னதை, அட்சரம் பிசகாமல் செய்தான்.

எதையோ எதிர்பார்த்து வந்த லயாவிற்கு, மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. அவனது நேற்றைய முத்தத்துக்கும், இன்றைய முத்தத்துக்கும், ஏழு அல்ல, எழுபது வித்தியாசங்களை, அவளால் உணர முடிந்தது.

ஆனால் கதிரவனோ, காட்சி பிரமாதமாக வந்திருப்பதாகச் சொன்னான். அதன் பிறகு, அவன் முத்தத்தால், அவள் அதிர்வது போன்ற க்ளோசப் காட்சியில், நிஜமாகவே அவள் அதிர்ந்தது, தத்ரூபமாக வந்தது.

படப்பிடிப்பு தளத்தில், அவனோடு பேச முடியாமல் தவித்தாள். தாய் உடனிருப்பதும், அவர் இருக்கும்பொழுது, லயா எங்கேயும் சென்று பழக்கம் இல்லை என்பதாலும், அமைதியாக தாயின் அருகில் சென்று அமர்ந்துகொண்டாள்.

அன்றைய படப்பிடிப்பு, அருமையாகவே சென்றது கதிரவனுக்கு. லயாவிற்குத் தவிப்பாகவும், ஒருவித ஏக்கமாகவும் கடக்க, தருணுக்கோ, கோபமாகவும், எரிச்சலாகவும் சென்றது. ஆனால் யாரும் எதையும் வெளிக்காட்டவில்லை.

வாசுவிடமிருந்த தன் அலைபேசியை வாங்கி வைத்துக்கொண்டு, யாருடைய அழைப்புக்காகவோ எதிர்பார்த்துக் காத்திருப்பவன் போல் காத்திருந்தான் வாசு, கண்மணியைத் தேடிச் சென்றான். அவளோ, அவன் முகம் பார்க்க மறுத்து, திரும்பிக் கொண்டாள்.

அவள் கோபம் புரிந்து, கொஞ்சம் தயக்கமாகவே அவளை நெருங்கினான். அவள் தோளில் கை வைக்க, வெடுக்கென அதை தள்ளி விட்டாள். "என்னை மன்னிச்சுடு, தெரியாமல்.....?",

"ஆமா.... எதுவுமே தெரியாமல் என்னைப்பற்றி இப்படிப் பேசினால்.... . என்ன சொன்னீங்க..... நான் உங்களை மயக்கினேனா? உங்க மனசாட்சியைக் கேட்டுப் பாருங்க, அது சொல்லும் உண்மை என்னன்னு. இப்படி எந்தப் பேச்சும் கேட்டுடக் கூடாதுன்னுதான் நான் ஒதுங்கிப் போனேன், என்னை விடாமல் துரத்திக் காதலிச்சு, இப்படி ஒரு பழியைப் போட்டால்..", கோபம், ஆற்றாமை, தவிப்பு அனைத்தும் போட்டி போட்டது அவள் குரலில்.

அவள் தவிப்பது தாங்காமல், அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான். காயப்படுத்தியவனே மருந்தாகும் விந்தை காதலில் மட்டுமே சாத்தியம். அவனிடமிருந்து விலகு என்று புத்தி சொன்னாலும், மனம் முரண்ட அவன் தோளில் சாய்ந்து அழுதாள்.

"கண்மணி, அழாதே....., என்னை, இந்த ஒரேயொரு தடவை மன்னிச்சுடு. அத்தையை மட்டுமே நினைச்சுப் பாத்துட்டேன். எனக்கு அவங்களை விட்டால் யாரும் இல்லையா, அந்தக் கவலைதான், எங்கே நீயும், பொய்யாப் போயடுவியோன்னு பயந்துட்டேன். என்னால், நீ எனக்குக் கிடைக்காமல் போவதை, நினைத்தே பார்க்க முடியவில்லை. கண்டிப்பா அத்தை புரிஞ்சுப்பாங்க. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. இல்லன்னா நான் புரிய வைப்பேன்", அவன் குரலிலும் நெகிழ்சி.

அவன் கண்கலங்குவதைத் தாங்காமல், "பரவாயில்லை விடுங்க, நான் உங்க மாமாவின் சொத்துக்காக வரவில்லை, எனக்கு ஒரு நிழல், ஆதரவு தேடித்தான் வந்துருக்கேன்னு நீங்க புரிஞ்சுகிட்டா போதும்", இருவருக்குள் பழைய நெருக்கம் மீண்டிருந்தது.

இங்கே படப்பிடிப்பு முடிந்த வேளையில், தருணையும், லயாவையும் கதிரவன் அழைத்தான். இப்பொழுது என்ன என்பதுபோல் லயா பார்க்க, தருண் அமைதியாக நின்றிருந்தான்.

"உங்க ரெண்டுபேர் கிட்டயும் ஒரு விஷயம் சொல்லத்தான் அழைத்தேன். அது என்னன்னா...? வெளிநாட்டுப் படப்பிடிப்பு, கொஞ்சம் லேட் ஆகும்னு நான் சொன்னேனே, அது இல்லை. லயாவுக்கும் அவங்க அம்மாவுக்கும், நாளைக்கே, சாயங்காலம் பிளைட். தருண்சார்.... உங்களுக்கு, ரெண்டு நாள் கழித்து டிக்கெட் போட்டு இருக்கு.

லயா அவங்க அம்மா சரின்னு சொல்லிட்டாங்க. உங்களுக்குக் கிளம்ப, ரெண்டு நாள் போதுமா சார். அப்படிப் பத்தாதுன்னா, இன்னும் ரெண்டுநாள் டைம்

எடுத்துக்கச் சொன்னார் ப்ரடியுசர்", சொல்லிக்கொண்டே போனான்.

இதைக் கேட்டு லயா திகைக்க, தருண் இது எனக்கு எப்போவோ தெரியும் என்ற பாவனையில் அமர்ந்திருந்தான். அவன் எதையும் வெளிப்படுத்தவில்லை என்றாலும், முகம் பாறையாக இறுகி இருந்தது.

கதவு - 23

நான் உன்னைத் தவிர்க்கும் நிமிடங்களில்

இதயத்தில் எழும் இந்த வலிதான்

காதலென்றால்.....

லயாவின் தவிப்பை, சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான் தருண். அவனது அந்தப் பார்வையே, விஷயம் அவனுக்கு முன்பே தெரியுமென்பதை பறைசாற்றியது. கதிரவனின் முன்பு எதையும் வெளியே காட்ட முடியாமல், அமைதிகாத்தாள்.

அவன் சென்றவுடன், "சோ....., உங்க அம்மா, உனக்கு நாள் குறிச்சுட்டாங்க போல", ஒரு மாதிரிக் குரலில் சொன்னான்.

"த.....த.....ருண், நான்..... எனக்கு....., இந்த விஷயம் முன்னாடியே தெரிஞ்சுருக்கும்னு நினைக்கிறீங்களா?", குரல் நடுங்கக் கேட்டாள்.

"நான் அப்படி நினைக்கலை....., ஆனால், விஷயம் நம்மோட கையை மீறிப் போயிட்டு இருக்கு. நீ நாளைக்கே கிளம்பணும், எனக்கு ரெண்டு நாள் கழிச்சுதான் டிக்கெட் போட்டு இருக்காங்க. அப்படின்னா, நானும் உன்னோட இருக்க முடியாது. என்ன செய்யலாம்னு நீயே சொல்லு?", அவளிடமே கேட்டான்.

"தருண்..... நீங்க என்ன இப்படிச் சொல்லுறீங்க? நான் என்ன செய்யட்டும்? எங்க அம்மா இப்படிச் செய்வாங்கன்னு, இப்போ கூட என்னால் நம்பவே முடியலை. சின்ன வயசில் இருந்து என்னைப் பொத்தி பொத்தி வளத்தாங்க.

பணம், ஒரு மனுஷங்களை இந்த அளவு மாத்துமா? பணத்துக்குக் கொடுக்கற மதிப்பைக் கூட, பெத்த பொண்ணோட மனசுக்குக் கொடுக்க மாட்டாங்களா? நேற்று என்கிட்டே பேசும்போதே, ஒரு கள்ளத்தனம் அவங்க கண்ணில் தெரிஞ்சுது. அது இவ்வளவு பெரிய

வேலையைச் செய்யத்தான்னு என்னால் நம்பவே முடியலை", அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

இருக்கும் சூழல், தருணை எதுவும் செய்யமுடியாமல் செய்தது. "லவி..... முதல்ல கண்ணைத் தொடச்சுட்டுக் கிளம்பு. உன் அம்மாகிட்டே எதையும் காட்டிக்காதே, எப்பவும் போல இரு. நான் ஏதாவது செய்யிறேன்", அவளுக்கு நம்பிக்கை கொடுத்து அனுப்பினான்.

லயாவையும் சுற்றிலும் இருந்த சூழல் தடுக்க, அவளாலும் அதற்குமேல் எதுவும் செய்யமுடியவில்லை. கலங்கும் கண்களைக் கூட, அழுந்த துடைத்தவாறு, மலர்ந்த முகத்துடன் வெளியே சென்றாள்.

உள்ளம் உலைக்களமாகக்கொதித்துக் கொண்டிருக்க, சோர்ந்துபோய் நடக்க முடியாமல் துவளும் கால்களை நிலையாக நிறுத்தி, இதழ்களை இழுத்துவைத்துப் புன்னகைத்தவாறு சென்றாள். அவளுக்கு ஒதுக்கியிருந்த அறையில், காத்திருந்த அன்னையின் முகத்தைக் காணவும் வெறுப்பாக இருந்தது அவளுக்கு.

தெய்வாவோ எதைப்பற்றியும் கவலையில்லாமல், ஆப்பிள் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்தாள். "கண்ணு உனக்கும் ஆப்பிள் ஜூஸ் வாங்கி வைத்திருக்கிறேன், குடிச்சுட்டு மேக்கப்பைக் கலைடா", தேனொழுகச் சொன்னாள்.

"அதில் அப்படியே கொஞ்சம் விஷத்தைக் கலந்து கொடுத்துடேன்", கத்த எழுந்த உணர்வை, இதழ்களைக் கடித்து அடக்கினாள்.

"இல்லம்மா நான் ஆரஞ்சு ஜூஸ் குடிச்சேன்.....", சொல்லிவிட்டு, மேக்கப்பையும், கூடவே கண்ணீரையும் கலைக்கச் சென்றாள்.

தருண் சொன்னவற்றை நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ள முயன்றாள். முயல மட்டுமே அவளால் முடிந்தது. கண்களில் ஊற்றெடுக்கும் கண்ணீருக்கு

அணை கட்ட அவளால் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

அவளை அனுப்பிவிட்டு, என்ன செய்வது என்ற யோசனையில் கொஞ்ச நேரம் மூழ்கியிருந்தான் தருண். எதையாவது செய்தே ஆகவேண்டும். தாய், வீட்டிற்கு அழைத்ததும் அசந்தர்ப்பமாக நினைவில் வந்தது. அதே நேரம், விவியின் செயலும், இலவச இணைப்பாகச் சேர்ந்து கொண்டது.

முதல் வேலையாக, தன் பாதுக்காப்பு அதிகாரிக்குத் தொடர்பு கொண்டான். அவர் கிடைக்கவுமே, ஏற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். பின்னர் அதில் திருப்தியுற்றவனாய், விவிக்கு அழைத்தான்.

அலுவலகத்தில் வேலையில் இருந்தவள், தருணின் அழைப்பு வரவே, புன்னகையுடனே அதை எடுத்தாள்.

"விவி.... என்னை ஞாபகம் இருக்கா?", ஒருவித நக்கல் தன்மையுடன் கேட்டான்.

"சொந்த அண்ணனை மறக்கும் அளவுக்கு எனக்கு இன்னும் ஞாபகமறதி வரவில்லை", அவளும் அதே நக்கலுடன் பதில் சொன்னாள்.

"அப்படி நினைப்பு இருக்குறவதான், இன்னைக்கு அப்படி நியூஸ் போட்டியா?", சூடேறியது அவன் குரலில்.

"நான் போட்ட நியூஸ்ஸில், ஏதாவது பொய் இருந்தால் சொல்லு, அதை நான் மாத்திக்கிறேன்", அவள் குரலில் பழைய நக்கல் குறையவில்லை.

"அதில் பொய் இல்லை, ஆனால், நீ என்ன பெரிய உண்மை விளம்பியா? சரி அதென்ன, 'கைப்பாவையுடன் ஏற்பட்ட காதலால் சகோதரி ஆனாரா'ன்னா? இதுக்கு என்ன அர்த்தம் சொல்லப்போற?", கோபத்தில் பல்லைக் கடித்துக் கொண்டான்.

"தொழில் தர்மம்னு ஒண்ணு இருக்கு தெரியுமா? அதாவது சுவாரசியத்துக்காக, சிலவற்றைச் சேர்ப்பது....., ம்ம்ம்....., உன் பாஷையில் சொல்லுறதுன்னா? எனக்கு சரின்னு பட்டதை நான் செய்தேன்", என்னமோ தீவிர சிந்தையில் இருந்து பேசுவதைப்போல் அவள் சொன்ன வார்த்தைகள், அவனுக்கு ரசிக்கவில்லை.

"விவி...., எனக்கு சரின்னு பட்டதை நான் செய்வதில், யாருக்கும் எந்த பாதிப்பும் வந்ததில்லை. நீ செய்த செயல் அப்படியா? என் வீட்டில் பூகம்பம் வெடிக்கத் தயாராயிட்டு இருக்கு. இதுக்கு, நீ என்ன விளக்கம் சொல்லப் போற?", அவன் பொறுமை பறந்தது, அவன் கத்தியதிலேயே தெரிந்தது.

"தருண்...., நீ இவ்வளவு கோபப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை. சொல்லப்போனால், நான் உனக்கு நல்லதுதான் செய்திருக்கிறேன். இந்த விஷயத்தை, நீயாக உன் அம்மாவிடம் துவங்க, எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாய்.

அந்த நேரம், உன் அம்மாவுக்கு எவ்வளவு அதிர்ச்சி ஏற்படும். இப்போ பார்....., விஷயமும் மெதுவா உங்க அம்மாவுக்கு தெரிஞ்சுடுச்சு, இனிமேல் நீ சொல்லும் போது, அவங்களோட அதிர்ச்சியின் அளவும், இனிமேல் கம்மியாதான் இருக்கும்", நீ ஏன் இப்படி யோசிக்க மாட்டிக்க.

"ஹும்....., அவங்க அவங்க வசதிக்கு யோசிக்கிறது மனித இயல்பு. நீ, உன் கருத்து நியாயம்னு சொல்ல யோசிக்கிற. நான், அந்தப் பிரச்சினைக்குள்ளே உக்காந்துட்டு யோசிக்கிறேன். ரெண்டும் ரெண்டு துருவம்", கொஞ்சம் தணிய முயன்றான்.

"தருண், பிரச்சினைக்குள்ளே நீ இருப்பதால்தான், அதில் இருக்கும் சாதகங்கள் உனக்குத் தெரியவில்லை. அதனால் வரும் பாதகங்களைப் பற்றி மட்டுமே யோசிக்கிற", அவனுக்கு எடுத்துச்சொல்ல முயன்றாள்.

"சரி....., இப்போ எதுக்கு லயாவை இதில் இழுத்துவிட்ட? அவளோட அம்மா, இந்தக் கிசுகிசுவை அவ்வளவு ஈசியா

எடுத்துப்பாங்கன்னு நீ நினைக்கிறியா? இதில் நீ சிக்கலைத்தான் ஏற்படுத்துற", இவளை என்ன செய்தால் என் ஆத்திரம் அடங்கும், என்ற எரிச்சலில் கேட்டான்.

"தருண்...., லயாவோட அம்மா, அவங்க அனுபவத்தில் எவ்வளவு பாத்துருப்பாங்க. இதெல்லாம் அவங்களுக்கு ஜுஜுபி, சோ, அவங்களைப் பற்றி நீ கவலையே படாதே. இப்போ விஷயத்துக்கு வா, எதுக்கு கால் பண்ணின?", ஜஸ்ட் லைக் தட் சொல்லிவிட்டு, வேறு விஷயத்துக்குத் தாவினாள்.

தருண் திகைத்தான். 'இதற்குப் போன் செய்யவில்லை என்று இவள் எப்படி யூகித்தாள்?', யோசனையில் ஒரு நிமிடம் தயங்கியவன், "நான், இதைக் கேட்கப் போன் செய்யலன்னு, உனக்கு எப்படித் தெரியும்?", அவன் வியப்பை, கேட்டே விட்டான்.

"இதை யோசிக்க பிரமாதமான மூளை எல்லாம் வேண்டாம், பாமர அறிவு இருந்தால் போதும். இதுவரை, உன்னைப்பற்றி ஆயிரம் விமர்சனம் எழுதியிருப்பேன், ஆனால், நீ ஒன்றுக்குக் கூட என்னிடம் விளக்கம் கேட்டுப் போன் செய்தது இல்லை.

அதேபோல், இன்னைக்குக் காலையில் வந்த செய்திக்கு, இவ்வளவு நேரம் கழித்து, நீ கோபப்பட மாட்ட. அந்தச் செய்தியைப் படிச்சு முடிச்ச உடனே, எனக்குப் போன் வந்திருக்கும். அப்படி வராதபோதே, நீ ஏதோ ஒரு முடிவு எடுத்துட்டன்னு நினைத்தேன்.

போன் வராதுன்னு நான் அசால்ட்டா இருக்கும்போது, போன் செஞ்சு இருக்க, அப்படின்னா, இதுக்கு சம்பந்தப்பட்ட வேற ஏதோ விஷயம் உன்கிட்டே இருக்குன்னு நினைக்கிறேன். போதுமா விளக்கம், இப்போ சொல்லு", நீளமாக விளக்கம் கொடுத்தாள்.

அவள் புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சிக் கொண்டான். வெளியில் அதைக் காட்டாமல், "விவி..... உனக்குச் சுடச் சுட வெளிநாட்டுச் செய்தி, அதை அங்கே

இருந்தே, உன் பத்திரிக்கைக்குக் கொடுத்தால் எப்படி இருக்கும்?", அவளை ஆழம் பார்த்தான்.

சாய்வாக அமர்ந்திருந்த சேரில் இருந்து எழுந்து, நேராக அமர்ந்தாள். "என்ன தருண், வெளிநாட்டுப் படப்பிடிப்புக்குக் கிளம்புறீங்களா? என்னைக்கு? எப்போ? அங்கே ஏதாவது சுவாரசியமா நடக்கப் போகுதா என்ன? உங்க கூட யார் வாறா? அது ஷெட்டியோட படமாச்சே, பணத்தைத் தண்ணியா செலவழிப்பாரே மனுஷன். அதே மாதிரி சில விஷயங்களில் வீக்குன்னும் தெரியும்.....", அவள் நிறுத்தாமல் சொல்லிக்கொண்டே போகவே,

"விவி, கொஞ்சம் நிறுத்துறியா? உன் பத்திரிக்கைக்காரி வேலையை இப்படியா காட்டுறது? ஒவ்வொரு கேள்வியா கேட்டால் பரவாயில்லை. மொத்தக் கேள்வியையும் ஒரேடியா கேட்டுத் திணறடிச்சா எப்படி பதில் சொல்ல?", அவளது வேகத்துக்குத் தடை விதித்தான்.

"சரி சொல்லு, என்ன விஷயம்?", வேகம் தணிந்தாள்.

"உன்கிட்டேவேலிட் பாஸ்போர்ட் இருக்கும். போன வருஷம் பிலிம் பெஸ்டிவலைக் கவர் பண்ண, நீ மொரிஷியஸ் போன இல்லையா, அதனால விசாவும் இப்போ இருக்கும் .ஸோ, இப்போ, ஒரு ஒருவாரத்துக்குத் தேவையான துணிஎல்லாம் எடுத்து, உடனே பேக் பண்ணிக்கோ. நாளைக்கே நீ மொரிஷியஸ் போகவேண்டி இருக்கும். உன்கூட லயா வருவா. அவளோட சூட்லையே நீ தங்கிக்கலாம். அதுக்கு நான் ஏற்பாடு பண்ணுறேன். அங்கே போனதுக்குப் பிறகு, என்ன நியூஸ்ன்னு உனக்கே தெரியவரும்", அவள் அட்டவணையை, அவன் பட்டியலிட்டான்.

"மொரிஷியஸ்ஸா..... லாஸ்ட் மினிட்ல எப்படி டிக்கெட் கிடைக்கும். நீ பாட்டுக்குச் சொல்லுற, லயா எப்படி இதுக்கு ஒத்துப்பா. அதைவிட, அவங்க அம்மா அவளோட போகலையா? அப்படி விட மாட்டாளே தெய்வா....., தருண்....., நிஜமாவே அங்கே என்ன நடக்கப் போகுது?

உனக்கு அதைப்பற்றி தெரியுமா?", அவள் குணம் அவளை விடவில்லை.

"விவி..... நீ இப்படியே கேள்வி கேட்டுட்டு இருந்தால், நான் வேற ஆளைப் பாத்துக்கறேன். எல்லா நியூஸ்சும் என் வாயில் இருந்தே புடுங்கணும்னா முடியுமா? அப்புறம் உன்னை எதுக்கு அங்கே அனுப்புறேன்.அங்கே போய் நீயே கண்டு பிடி. நாளைக்கு இரவு பத்து மணிக்கு உனக்கு ப்ளைட், ரெடியா இரு", மேலும் அவள் குடையும் முன்னர் போனை வைத்தான்.

"இதுதான், இந்தப் பத்திரிகைக்காறங்களோட சகவாசமே வச்சுக்கக் கூடாது. என்ன கேள்வி கேக்குறா? ஆண்டவா....., இன்னும் அம்மாவோட கேள்விக்கெல்லாம் வேற பதில் சொல்லணுமா?", நினைக்கும் பொழுதே, தலை வலித்தது அவனுக்கு. ஆனாலும், இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடாதா என்ற ஆசையும், மூலையில் இல்லாமல் இல்லை.

வேறு வழி அவனிடம் இல்லாத காரணத்தால், வாசுவைத் தேடிச் சென்றான். வாசுவும் கண்மணியும் சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அவர்களின் நெருக்கத்தைப் பார்த்து மனம் கனிந்தது.

காலையில் கண்மணி அவனை ஒதுக்கியதென்ன? இப்பொழுது அவனுடனே அமர்ந்து கதை பேசுவதென்ன? காதலுக்கு இருக்கும் சக்தி மகத்தானதுதான் என்று எண்ணிக் கொண்டான்.

அவர்களை நெருங்கினான். "வாசு, கண்மணி.... நேர நம்ம வீட்டுக்குப் போகலாமா, இல்லை அம்மா வீட்டுக்கா?", அவர்களின் கருத்தை அறியக் கேட்டான்.

அவன் அம்மாவீட்டுக்கு என்று சொன்னவுடனே, கண்மணியின் தேகம் நடுங்கியது. வாசு அதை உணர்ந்து, அவள் கரங்களைப் பிடித்து அழுத்தினான். 'உனக்கு நான் இருக்கிறேன்', என்ற ஆதரவை அவளுக்குக் கொடுத்தான்.

"சார், எப்படியும் நாம அத்தையைப் பார்க்கப் போகணும். பேசாமல், நேரா அங்கேயே போய்டலாம். நாம ரெப்ரெஷ்

ஆகுற நேரத்தில், சகஜமாகக் கொஞ்ச நேரம் நமக்குக் கிடைக்கும்", யோசனை சொன்னான்.

தருணின் பார்வையில், கண்மணியின் நடுக்கமும் படாமல் இல்லை. ஆனால், இன்றைக்கு விட்டால், இன்னும் ஒரு மாதத்திற்குத் தாயைச் சந்திக்க முடியாது, என்பது அவனுக்குத் தெரியும். அதைவிட, இந்த விஷயத்தை ஆறப்போடவும் அவன் விரும்பவில்லை. தந்தையின் உடல்நிலை நாளுக்குநாள் சீர்கெடுவதும் ஒரு காரணம்.

"சரி வாங்க போகலாம்.....", தருண் காரின் முன்னால் ஏறிக் கொண்டான். கொஞ்சம் தயங்கினாலும், வாசு, கண்மணியின் அருகில் ஏறி அமர்ந்துகொண்டான். என்றுமே வாசுதான் ஓட்டுனர் இருக்கையின் அருகில் அமர்வான். இன்று கண்மணியின் மனநிலை புரிந்தே அவ்வாறு நடந்துகொண்டான்.

வாசுவால், தருணின் புரிதலை வியக்காமல் இருக்க முடியவில்லை. இதற்குமுன் எதற்குமே கருத்து கேட்காதவன், இன்று கேட்டதும், கண்மணியின் கணவன் ஆகப்போகிறவனுக்கு கொடுத்த மரியாதையே, என்பதையும் உணர்ந்தே இருந்தான். கண்மணியின் மேல், அவனுக்கு இருக்கும் பாசத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது அவனால்.

காருக்குள், யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. டிரைவரும் அவர்கள் மனநிலையை புரிந்தவன்போல், நிதானமாக ஓட்டிச் சென்றான் காரை.

வீட்டிற்குமுன் கார் நின்ற பிறகும், யார் முதலில் இறங்கிச் செல்வது என்ற தயக்கத்தில், அனைவருமே கொஞ்சம் தேங்கினார்கள். இறுதியில், தருணே இறங்கினான். "நான் முன்னாடி போறேன்", சொல்லிவிட்டு, முன்னால் சென்று அழைப்புமணியை அழுத்தினான்.

இவன் அழுத்தவும், வேலைக்காரப் பெண் கதவைத் திறக்கவும் சரியாக இருந்தது. "அம்மா எங்கே...?", அவளிடம்

கேட்க, "ஐயா.... அம்மா பெரியையய்யா ரூமில் இருக்காங்க", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

தருண் திரும்பிப் பார்க்க, வாசுவும், கண்மணியும் அவன் அருகில் வந்தார்கள். "வாசு, கண்மணிக்கு, கெஸ்ட் ரூமைக் காட்டு. நீயும் ரூமுக்குப் போயிட்டு வா", அவர்களிடம் சொல்லிவிட்டு, உள்ளே செல்லும் வேளையில், தாய் எதிரில் வந்தார்.

அனைவரையும் ஒரு பார்வை பார்த்தார். தருண் அவன் அறைக்கு விரைந்தான். வாசு, கண்மணியைப் பார்த்து கொஞ்சம் தயங்க, "போடா, போய் கைகால் கழுவிட்டு வா", கமலம் சொல்லவே, மறுபேச்சில்லாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

கண்மணியின் 'போகாதேயேன்', என்ற கெஞ்சல் பார்வையை ஒதுக்கிவிட்டு, சென்று மறைந்தான்.

கண்மணி, கால்கள் அங்கேயே வேரோடிவிட்டதுபோல், அசையாமல் நின்றாள். கமலமும் அவளைத்தான் ஆராய்ந்துகொண்டிருந்தார். வயதிற்கேற்ற முதிர்ச்சி, அவள் முகத்தில் தெரிவதை உணர்ந்தார். கள்ளத்தனம் உள்ளதா என்று ஆராய்ந்தார், அவளது மருண்ட விழிகளும், சங்கடமான நிலையும், யாராவது வந்து தன்னைக் காப்பற்றிவிட மாட்டார்களா என்ற தவிப்பும் அவள் விழிகளில் தொக்கி நிற்பது அவருக்குப் புரிந்தது.

நின்ற இடத்தில் இருந்து அசையாமல் அப்படியே நின்றாள். "அதோ அந்த ரூமில் போய், ரெடி ஆயிட்டு வா", அவரது கட்டளைக்குக் காத்திருந்த பணியாளன்போல், வேகமாகச் சென்று, அறைக்குள் மறைந்தாள்.

'வாசு..... வா உன்னை கவனிச்சுக்கறேன். என்னை மாட்டி விட்டுட்டா போற?', மனதுக்குள் அவனைக் கறுவினாள். நடந்துவந்து படுக்கையில் அமர்ந்தவள், எவ்வளவு நேரம்தான் அப்படியே அமர்ந்திருந்தளோ, கதவு மெதுவாகத் தட்டப்படும் ஓசையில் கலைந்து, சட்டெனக் குளியல் அறைக்குள் புகுந்துகொண்டாள்.

சரியாக ஒருமணிநேரம் கழித்து, அவர்கள் அறையில் இருந்த அலைபேசிகள் ஒலித்தது. "இன்னும் எவ்வளவுநேரம் ரூமிலேயே இருப்பீங்க?", அந்த ஒற்றைக் கேள்வியில், அடுத்த இரண்டாம் நிமிடம், கமலத்தின்முன் அனைவரும் நின்றார்கள்.

அவர்களை, தன் பின்னால் வருமாறு செய்கை செய்துவிட்டு, அங்கிருந்த அவரது படுக்கை அறையில் நுழைந்தார். நேராகச் சென்று தன் படுக்கையில் அமர்ந்துகொண்டார். மற்றவர்கள் மறு பேச்சில்லாமல், அவருக்கு எதிரில் இருந்த ஸோபாவில் சென்று அமர்ந்தார்கள்.

கண்மணி, தனியாக ஒற்றை ஸோபாவில் சென்று அமர்ந்து கொண்டாள். ஏற்கனவே அங்கு இருந்த ஜக்கில் இருந்து காபியை ஊற்றிவிட்டு, அவர்களைப் பார்க்க, ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டார்கள்.

அறையில் கடிகாரம் ஓடும் டிக் டிக் ஓசை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. "ம்கும்.....", கமலம் தொண்டையைக் கனைக்கவே, கேள்வியை எதிர் நோக்கி அவரைப் பார்த்தான் தருண்.

"உன் அம்மா பேர் என்னம்மா.....?", தன்னிடம் அவர் நேரடியாகக் கேள்வி கேட்பார் என்று எதிர் பார்க்காத கண்மணி, வாயில் சூடான காப்பியை, வேகமாக ஊற்றிக் கொண்டு, துடித்துவிட்டு, அவரை மிரண்ட பார்வை பார்த்தாள்.

அவள் பதட்டத்தில், கமலமும் கொஞ்சம் இளகினாலும், அதை வெளியே காட்டாமல், "என்னம்மா.... உன் அம்மா பேரைத்தானே கேட்டேன். என்னமோ.... அப்பா பேரைக் கேட்ட மாதிரி இவ்வளவு தடுமாறுற", கூர்மையாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

"அம்மா.....", தருண் குறுக்கே பேசப் போகையில், "உன்கிட்டே கேட்கும்போது நீ பதில் சொல்லலாம். இப்போ,

நான் அவளைப் பற்றி மட்டும்தான் கேக்குறேன். வேற யாரைப் பற்றியும் இல்லை.

கண்மணி எச்சில் கூட்டி விழுங்கினாள். "சொல்லும்மா.....", கமலம் மேலும் கேட்கவே, "அம்மா பேரு தங்கம்.....", சின்னக் குரலில் சொன்னாள்.

"அம்மா இப்போ எங்கே இருக்காங்க....?".

தாயைப் பற்றிக் கேட்டவுடன், அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. தாயின் நினைவில் உதடு துடிக்க, அவள் இருந்திருந்தால், தனக்கு இப்படியொரு நிலை வந்திருக்காதே, என்று எண்ணியவளாய், கழிவிரக்கத்தில் குமுறினாள். 'என்னால், இவர்களின் இந்த கேள்விக்கே பதில் சொல்ல முடியவில்லையே. நான் எப்படி, அப்பாவைப் பற்றிய கேள்விக்கு, பதில் சொல்வேன்', அவள் மனம் ஊமையாக அழுதது.

கமலம் அசையாமல் இருக்கவே, "அ.....ம்மா நாலு வருஷம் முன்னாடி தவறிட்டாங்க", துக்கம் தொண்டையை அடைக்க, சொல்லி முடித்தாள். அவள் வேதனையைக் கண்டு, அங்கிருந்த அனைவரின் கண்களும் கலங்கியது.

அடுத்தக் கேள்வியை கேட்க, கமலத்துக்குக் கொஞ்ச நேரமாகியது. மகனும், நான்கு வருடங்களுக்கு முன்புதான் அவளை அழைத்து வந்திருந்தான். அந்த நினைவு மனதில் நிழலாடியது.

"உங்க அப்பா எங்கே.....?", இந்தக் கேள்வியை கேட்கும் பொழுது, அவருக்கே குரல் தடுமாறியது. கண்மணி பதில் சொல்லாமல் அமைதியானாள்.

"அப்பா இருக்காரா... இல்லை.....", 'இல்லையா?' என்று அவரால் கேட்க முடியவில்லை.

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை. "உங்க அப்பா பேரென்ன?", இந்தக் கேள்வியில் அவளுக்கு மூச்சடைத்தது.

அவள் இதற்கும் பதில் சொல்லாமல் இருக்கவே, கமலத்திற்குக் கோபம் குமுறியது.

"என்ன.... உங்க அம்மா..... அப்பன்பேர் சொல்லித் தரலையா?", தணலாக வந்து விழுந்த கேள்வியில், அத்தணலில் விழுந்த புழுவானாள் கண்மணி.

கதவு - 24

பாசத்தை பங்குவைக்க

நேசத்தை விதைக்க

எனக்கொரு உடன்பிறப்பு

என் தங்கை.....

தாயின் இந்தக் கேள்வியில், தருண் தன் கட்டுப்பாட்டை இழந்தான் என்றால், கண்மணி குமுறி அழுதாள். வாசுவோ என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான்.

தருண் வேகமாக எழுந்து கண்மணியின் அருகில் சென்றான். "அம்மா, உங்கக் கேள்விகளுக்கும் ஒரு அளவிருக்கு. என்ன நீங்க, இவ ஒரு சின்னப் பொண்ணு, ஏன்..... உங்களுக்கே இன்னொரு குழந்தை இருந்திருந்தால், இவளை மாதிரிதான் இருந்திருப்பா. அப்படியிருக்கும்போது, கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் இப்படிக் கேள்வி கேக்குறீங்களே.

அன்னைக்குச் சொன்னதையேதான் இப்பவும் சொல்லுறேன், இவ என்னோட தங்கச்சி, நீங்க ஏத்துகிட்டாலும், இல்லன்னாலும் இது மாறப்போவதில்லை. இவளை நான்தானே கூட்டி வந்தேன், எதுவாக இருந்தாலும் என்கிட்டே கேளுங்க.

அதை விட்டுட்டு, இவளோட மனசைக் காயப்பட்டுத்துறதைப் பாத்துட்டு, நான் சும்மா இருக்க மாட்டேன்", கண்மணியைத் தோளோடு அணைத்து, அவன் கர்ஜித்த விதத்தில், அவனுக்கு அவள்மேல் இருந்த பாசம் தெரிந்தது.

"என்னடா..... பெருசா என் தங்கச்சி, தங்கச்சின்னே சொல்லுறியே, அப்போ.... உன் அப்பாதான் இவளுக்கும் அப்பாவா.....?", இப்படிக் கமலத்திடம் இருந்து நேரடியாகக் கேட்கப்பட்ட கேள்வியில், அனைவருமே திகைத்தனர்.

அங்கிருந்த யாரும் அதை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை, என்பதை கவனித்தார் கமலம். ஏற்கனவே அனுமானம் செய்ததுதான், ஆனாலும் நேரடியாக அறியும் பொழுது, அதன் வலி அதிகமாகத்தான் இருந்தது.

கணவன், தனக்கு துரோகம் செய்திருக்கிறான் என்பதை எந்தப் பெண்ணால் ஏற்றுக்கொள்ள முடியும். எவ்வளவுதான் முயன்றும், அவரால் தன்னை நிலைப்படுத்திக்கொள்ளவே முடியவில்லை. அதே நேரம், ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

"உங்க அப்பாவுக்கு, நான் எதுலடா குறை வைத்தேன்? ஏண்டா எனக்கு இப்படி ஒரு துரோகத்தைச் செய்தார்? அவருக்கு எப்படிடா மனசு வந்துது? நான் உயிரோட இருக்கும்போதே....., இன்னொரு பொண்ணோட தொடர்பில் இருந்திருக்கிறாரே. அது தெரிஞ்சும், நீ அவ பெத்த மகளை, உன்னோட தங்கச்சின்னு கூட்டி வந்து வச்சு இருக்கியே.....,

உனக்கு, இந்த அம்மாவோட மனசு எவ்வளவு வருத்தப்படும்னு, கொஞ்சம் கூட அக்கறையே இல்லையாடா? அதெப்படி இருக்கும், நீயும் இந்த ஆண் வர்கத்தைச் சேர்ந்தவன் தானேடா. உனக்கும், புத்தி அப்படித்தான் போகும்.

எனக்கு, அவர் இப்படி ஒரு துரோகத்தைச் செய்யிறதுக்கு பதிலா கொன்னுருக்கலாம்டா. எனக்கு என்னமோ, அவரோட வாழ்ந்த வாழ்க்கைக்கு, ஒரு அர்த்தமே இல்லாத மாதிரி இருக்குடா. இவளை இங்கே இருந்து கூட்டிப் போ....", தன் மன ஆதங்கத்தை அப்படியே வெளிப்படுத்தினார்.

தாயின் பேச்சில், தருண் கவலை கொண்டான். கண்மணி அடிபட்ட பார்வை பார்த்தாள். யாரோ, சேற்றை வாரியிறைத்த உணர்வில் அருவருத்தாள். அவள் நிலையை உணர்ந்து, வாசு அவள் அருகில் வரவே, அவளை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, தாயின் அருகில் சென்றான்.

கண்மணி, வாசுவின் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். அவளை, என்ன சொல்லித் தேற்றவென்றுத் தெரியாமல், அமைதி காத்தான் வாசு. தருண் சென்று தாயின் அருகில் அமர்ந்தான். இப்பொழுது உடனடியாக தீரும் விஷயமில்லை இது. ஆனாலும் பேசாமல் இருக்க முடியவில்லை அவனால்.

இன்று விட்டால், இன்னும் இரண்டு மாதம் அவன் கால்ஷீட் புல். அதுவும் வெளிநாட்டு படப்பிடிப்பு வேறு. நினைத்த நேரம் அங்கிருந்து வரவும் முடியாது.

"அம்மா.... உங்களுக்கு மனக்கஷ்டம் கொடுக்கக் கூடாது என்பதால் தான், இவ்வளவு நாள் இவளைப்பற்றி உங்களிடம் சொல்லாமலே இருந்தேன். நீங்க நினைக்கிற மாதிரி, அப்பா எதையுமே வேணும்னு செய்யலை.

அவங்களோட சூழ்நிலை, இப்படி ஒரு செயலை செய்ய வச்சுடுச்சு", தாய்க்கு, பொறுமையாகப் புரிய வைக்க முயன்றான்.

"அப்படி என்னடா தலை போற அவசியம்...? பொண்டாட்டிக்கு துரோகம் பண்ணும் அளவுக்கு.....", அவரால் கொஞ்சம் கூட ஜீரணிக்கவே முடியவில்லை.

"அம்மா....., இப்போ நான் சொல்லுவதை, நீங்க எந்த அளவு ஒத்துப்பீங்கன்னு தெரியலை....., நான் பிறந்த நேரத்தில், அப்பா சிறிய அளவில்தான் தொழில் செஞ்சுட்டு இருந்தாங்க இல்லையா..... . அதிலும் அவரோட குறி, சிறிய கிராமங்களில், மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கணும் என்பதாத்தான் இருந்துது. அங்கேதான் எதேச்சையா தங்கம் அம்மாவைச் சந்திச்சார்.....", தாய் நினைவுகூர கொஞ்சம் இடைவெளி விட்டான்.

கமலமும், புரிந்துகொண்டவராகத் தலை ஆட்டினார். "அம்மா.... அப்பா அந்தக் கிராமத்தில், தொழிலை அப்போதான் துவங்குவதா இருந்தார். அதற்கான இடம் வாங்குவது, அனுமதி வாங்குவதுன்னு ஒன்று இரண்டு முறை, அந்த கிராமத்துக்குப் போய் இருக்கார்.

உங்களுக்கே கிராமத்தைப் பற்றித் தெரியும், சிட்டியில், பக்கத்தில் ஒரு பிணம் விழுந்தாலும் கண்டுகொள்ளாத நிலையில், கிராமத்திலோ, ஒரு ஆடு மாடு புதிதாக வந்தால் கூட தெரிந்துவிடும். அப்படித்தான் அப்பாவையும், அங்கே ஒன்று ரெண்டுபேர் பார்த்து இருக்காங்க.

அந்தக் கிராமத்தில் கொஞ்சம் பெரிய படிப்பு படித்தது கண்மணியோட அம்மாதான். அதற்குக் காரணம் அவங்க அம்மா, தன்னோட மக நல்ல பெரிய வேலையில் இருக்கணும், கை நிறையச் சம்பாதிக்கணும்னு நினைச்சாங்க. அதுக்கு, அவங்க அண்ணா ஒத்துக்கவே இல்லை.

பொம்பளைப் புள்ளைக்கு, படிப்பு எதுக்குன்னு கேட்டு அடிக்கடி சண்டை போடுவாராம். அதுக்கு அவங்க அம்மா, என் மக யார் கையையும் எதிர் பார்க்காமல், அவ சொந்தக் காலில் நிக்கணும்னு சொல்லி, அவரை அடக்கிடுவாங்களாம்.

இந்த நேரத்தில், அப்பா அங்கே போகவே, ஒரு நாள் யார் வீட்டையோ பற்றி விசாரிக்க, கண்மணியோட அம்மாட்ட கேட்டு இருக்காங்க. அப்பாவுக்குத் தெரியலை, கிராமத்தில், வயசுப் பொண்ணுங்க கிட்டே பேசினால், அது கண் காது மூக்கு வச்சுப் பரவும்னு.

கண்மணியின் அம்மா, காலேஜ் எல்லாம் போனதால், அவங்க சாதாரணமா பேசி இருக்காங்க. ஒரு நாள், கண்மணியோட அம்மா பக்கத்து கிராமத்தில், ஏதோ வேலை விஷயமா நேர்முகத் தேர்வுக்குப் போய் இருக்காங்க. அங்கே, எதிர்பாராத விதமா ரொம்ப நேரமாயிருக்கு.

அன்னைக்கு, ஏதோ அரசியல்வாதி ஊழல் வழக்கில் கைது செய்யப்படவே, பஸ் எல்லாம் ஓடாமல், பஸ்டாண்ட் எல்லாம் ஒரே கலாட்டாவா இருந்து இருக்கு. அப்போ அங்கே, எதேச்சையா அப்பா போகவே, அம்மாவைப் பாத்துட்டு, இன்னைக்கு பஸ் இனிமேல் ஓடாதுன்னும், அதனால்

இன்னைக்குத் தன்னோட பாதுகாப்பில் இருந்துட்டு, காலையில் போன்னும் சொல்லி இருக்காங்க.

கண்மணியோட அம்மாவுக்கு வேற வழியில்லாமல், அப்பாவோட போய் இருக்காங்க. அப்போ எல்லாம், போன் வசதி இல்லாததால் அவங்க வீட்டுக்குத் தகவல் சொல்லவும் முடியலை. காலையில் எழுந்து, அவங்களைத் தனியா அனுப்ப மனசில்லாமல் அப்பாவே அவங்களை வீட்டுக்குக் கொண்டு விட, போய் இருக்காங்க.

அங்கேதான் பிரச்சனையே துவங்கி இருக்கு, பாசமா வளத்தப் பொண்ணு, நைட் புல்லா வராமல் போகவே, அவங்க ஊரில் எல்லோரும் கண்மணியோட அம்மாவைத் தப்பா பேசி இருக்காங்க. அதை அவங்க அம்மாவால், அதாவது கண்மணியோட பாட்டியால் தாங்கவே முடியலை. அது கிராமம் என்பதால், அரசியல்வாதியோட கைதோ....., அதனால் நடந்த கலாட்டாவோ, அவங்களுக்குத் தெரியவே இல்லை.

காலையில், இவங்களும் ஜோடியா அங்கே போகவே....., என்ன நடந்து இருக்கும்னு, நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரிந்து இருக்கும். அங்கே அப்பா சொன்னதையோ, கண்மணியோட அம்மா சொன்னதையோ கேக்க, யாருமே தயாரா இல்லை.

போதாததுக்கு....., அப்பாவும் அவங்களும், ஏற்கனவே பேசியதைப் பார்த்ததா வேற, ஆட்கள் சொல்லவே, அது ரொம்பப் பெரிய விஷயமா போய்டுச்சு. கண்மணியோட மாமா, அவங்களை அடிச்சு வீட்டை விட்டே விரட்டிட்டாங்க. அப்பாவையும் கண்ட மாதிரி பேசி, அடிக்கப் போய் இருக்கார்.

அப்போ, கண்மணியோட அம்மா குறுக்கே விழுந்து தடுத்து இருக்காங்க. "ஓடு காலி நாய்க்கு, அதுக்குள்ளே அவன்மேல அவ்வளவு கரிசனையா? வீட்டில் காலடி வைத்தால், வெட்டிக் கூறு போட்டுடுவே"ன்னு அவர் கத்தவே, வேற வழி இல்லாமல் அவங்களைக் கூட்டிட்டு,

அப்பா தான் தங்கி இருந்த ஹோட்டலுக்கே வந்து இருக்காங்க.

கண்மணியோட அம்மா அழுதுட்டே இருந்துருக்காங்க. அவங்களுக்கு, அப்பா எவ்வளவோ ஆறுதல் சொல்லியும், அவங்க தேறவே இல்லையாம். என்ன செய்யறதுன்னும் தெரியாமல் முழிச்சுட்டு இருந்துருக்காங்க. பிறகு, அப்பாதான் கொஞ்சம் நிதானிச்சு, முதல்ல சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வருவோம்னு வெளியே போய் இருக்காங்க.

அந்த நேரம், கண்மணியோட அம்மா தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்சு இருக்காங்க. அதை எப்படியோ அப்பா தடுத்துட்டாங்க. அதுக்குப் பிறகுதான், ஏன் இப்படி செஞ்சன்னு கேட்டதுக்கு, இனிமேல் எனக்கு இங்கே வாழ விருப்பம் இல்லன்னு சொல்லி இருக்காங்க.

"சரி ஆனது ஆயிடுச்சு, நான் இப்போ உனக்கு என்ன செய்யணும்னு சொல்லுறியோ அப்படியே செய்யிறேன்....., ஆனால் நீ தற்கொலை மட்டும் பண்ணிக்கக் கூடாதுன்னு", அப்பா சொல்லவே, அவங்க கேட்ட ஒரே விஷயம்.....", அதை எப்படிச் சொல்லவென்று, கொஞ்சம் இடைவெளி விட்டான்.

சொல் என்பதுபோல் கமலம் பார்க்க, "என் கழுத்தில், ஏதாவது ஒரு கோயில்ல வச்சு ஒரு தாலி மட்டும் கட்டுங்க, பிறகு என்னோட வாழ்க்கையை நான் பாத்துக்கறேன்....., உங்களுக்கு எந்தத் தொல்லையும் தராமல், எங்கேயாவது போய்டுறேன்னு சொல்லி இருக்காங்க. அப்படி ஒரு சூழ்நிலையில், அப்பாவால் அதை மறுக்க முடியுமா?

அப்படி மறுத்து, தனக்குத் திருமணம் ஆனதைச் சொல்லி, அவங்களைச் சாக விட முடியாமல், அவங்க கழுத்தில் அன்னைக்கே ஒரு கோவில்ல வச்சு, தாலி கட்டி இருக்கார். பிறகு, அவங்களை எப்படி அப்படியே விட முடியும், ஒரு வீட்டை எடுத்து அவங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கார்", மனம் கனத்துபோக, தனக்குத் தெரிந்த அளவு உண்மைகளைத் தாயிடம் பொறுமையாக

விளக்கினான். கமலமும் அமைதியாகக் கேட்டுக் கொண்டார்.

"அம்மா.... அந்த நிலையில் அவளோட அம்மாவை, பாதுக்காக்கணும் என்ற எண்ணம் மட்டும்தான், அப்பாகிட்டே இருந்து இருக்கும். அவங்க கிட்டேயும் உண்மையைச் சொல்ல பயம். உங்க கிட்டே எப்படி உண்மையைச் சொல்லுவதுன்னு தயக்கம்....., இப்படியே நாள் போச்சு.

அதன் பிறகு, கட்டிய தாலிக்கு வேண்டி அவங்க வாழ்ந்தாங்க, உங்களைப்பற்றி எந்த நிமிஷம் தெரிஞ்சுதோ, அப்போவே அவங்க விலகி போய்ட்டாங்க. உங்க வாழ்கையில், அவங்க குறுக்கே வரவே இல்லை.

எனக்கும், அப்பா செய்தது கோபம்தான்....., ஆனால், அவர்மேல் உள்ள கோபத்தை, எப்படிம்மா இவகிட்டே காட்ட முடியும். இவளைப் பாக்க முன்னாடி, எனக்கும் ஆத்திரம்தான் வந்துது. இந்த உலகத்தில், தனக்குன்னு யாருமே இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை, அவளுக்கு அப்பா இருக்கார், அண்ணன் நான் இருக்கேன், என்னோட அம்மா நீங்க இருக்கீங்க.

இவ்வளவு உறவுகள் அவளுக்கு இருக்கும்போது, ஆதரவுக்கு ஒரு நிழல் தேடி நிக்கும் அவளை, எப்படி நான் விட்டுட்டு வர முடியும். அவ எப்படியிருந்தாலும் என்னோட தங்கச்சி, அவ எக்கேடோ கெட்டுப் போகட்டும்னு, என்னால் இருக்க முடியலை. அதிலும் வயசுப் பொண்ணை எப்படித் தனியா விட்டுட்டு வர முடியும்.

அப்படி நான் செய்திருந்தால் என் மனசாட்சியே என்னைக் கொன்னுடும்மா. என்னால் அப்படிச் செய்ய முடியலம்மா, நீங்க, அவ்வளவு கல்நெஞ்சக்காரனா என்னை வளக்கலை.

இவளை, அப்பாவைப் பார்க்கக் கூட நான் அனுமதிக்கவே இல்லை. அப்பா கேட்டப்போ கூட, உங்க சம்மதம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டேன்னு சொல்லிட்டேன்.

கொஞ்சம் புரிஞ்சுக்கோங்கம்மா, கண்மணி உங்க கணவனோட பொண்ணுன்னு நினைக்காமல், ஏதோ அநாதைப் பொண்ணை, தத்தெடுத்துருக்கோம்னு நினைச்சுக்கோங்க. எனக்கு இதுக்குமேல என்ன சொல்லன்னு தெரியலம்மா.

இப்போ கூட, நான் செய்தது தப்புன்னு நீங்க நினைச்சீங்கன்னா....., அவளை, நீங்களே வீட்டை விட்டு அனுப்பிடுங்க", தாயிடம், நடந்ததை விளக்கி, கெஞ்சி, புரிய வைத்து, கடைசி வார்த்தையைச் சொல்லும்போது, அவன் குரல் கொஞ்சம் நடுங்கியது.

கமலத்திற்கு, 'கண்மணியை அநாதை என்று நினைத்துக் கொள்ளுங்கள்' என்று அவன் சொன்னதும், உள்ளம் நடுங்கத்தான் செய்தது. அதிலும், கண்மணியை இந்தச் சமுதாயத்தில் தனியாக இருக்கவிடும் கொடுமையை, அவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தருண் சொன்ன உண்மைகள், கண்மணியின் தாயின் நிரந்தர ஒதுக்கம், அவளைக் காக்க தன் கணவன் எடுத்த முயற்சி, அனைத்தையும் நொடியில் மனதில் ஓட்டிப் பார்த்தார். கண்மணியை, தான் வெறுப்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

முதலிலேயே, தருணுடன் இணைத்து வந்தத் தவறான கிசுகிசுக்களால், அவள்மேல் அவருக்கு எழுந்த கசப்புணர்வும், அவளைப் பற்றிய தாழ்வுணர்வும், அவரைப் பார்த்து இப்பொழுது கேலி செய்தன. தனக்காக, தன் மகன் சிலுவை சுமந்த காரணம் புரிந்து, அவர் கண்கள் கலங்கியது.

இந்த விஷயம் வெளியே தெரிந்தால், எப்படியும் மகனது பெயர் கெட்டுப்போகும் என்பது அவருக்குத் தெரியும். எவ்வளவுதான் வாய் வார்த்தையாக 'தங்கை' என்று சொன்னாலும், அதை யாரும் நம்பப்போவதில்லை என்பதும் அவருக்குப் புரிந்தது.

கண்மணியை அவர் பார்க்க, தன் வார்த்தைகளால் அவள் காயப்பட்டு, கூனிக்ப் குறுகி நிற்பது தெரிந்தது. அவளுக்கு என்ன ஆறுதல் வார்த்தை சொன்னாலும், தான் இதுவரை பேசிய பேச்சுக்கு பிராயச்சித்தம் செய்ததுபோல் ஆகாது.

தருணை, ஒரு தீர்மானமாக பார்த்தார். தருணுமே, தாய் என்ன சொல்லப் போகிறாரோ என்ற பதை பதைப்புடனே, அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். வாசுவும் கூட, ஏக்கமாகவும், போய்விடச் சொல்லுவாரோ என்ற நடுக்கத்துடனும், அப்படிச் சொன்னால், தான் என்ன செய்வது என்ற கவலையுடனும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"தருண்...., நீ நம்ம லாயரை வரச் சொல்லு. கண்மணியை லீகலா நாம தத்தெடுத்துக்கலாம். அதற்கு என்ன ஏற்பாடெல்லாம் செய்யணுமோ அதைச் செய்", குரலில் ஒரு அழுத்தம்.

"இப்போ எதுக்கு அத்தை அதெல்லாம். ஏற்கனவே கண்மணி மாமாவோட மக தானே", புரியாமல் கேட்டான்.

தருணின் பார்வையிலும், அந்தக் கேள்வியே தொக்கி நிற்க, "இந்த விஷயத்தை அப்படியே வெளியே சொன்னால், தருணின் இமேஜ் இப்போ பாதிக்கப்படும். தேவையில்லாமல், பத்திரிகைக் காரர்களுக்குத் தீனி போட்ட மாதிரி ஆயிடும். அதைவிட இப்படிச் செய்தால், அவனோட இமேஜும் அதிகரிக்கும், நம்ம வீட்டுப் பொண்ணாகவும் அவ வெளி உலகத்துக்குத் தெரிவா", தன் சினிமா எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, தாய் எடுத்த இந்த முடிவு, தருணைக் கண்கலங்கச் செய்தது.

ஒருவித எதிர்பார்ப்புடன், தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கண்மணியைப் பார்த்து, "வா நான் பெறாத மகளே கண்மணி.....", என்று சொல்லவே, வாசுவிடமிருந்து விலகி, ஓடிச் சென்று அவர் காலில்விழுந்தாள்.

"அம்மா....., அம்மா.....", என்று அவர் காலைப் பிடித்து அவள் கதறவே, குனிந்து தரையில் அமர்ந்து அவளைத் தோளோடு தூக்கி அணைத்துக் கொண்டார்.

"அம்மான்னு சொல்லிட்டு, இப்படி அழுதால் என்னம்மா அர்த்தம். இந்த அம்மாதான் உண்மை தெரியாமல் உன்னைத் தப்பா பேசிட்டேன், என்னை.....", மன்னிப்பு வேண்டப் போன அவரை, வேகமாகத் தடுத்தாள்.

"நான்தான் உங்க கிட்டே மன்னிப்பு கேக்கணும்மா. எங்க அம்மா செய்தது பெரிய தவறுதான். சாகும்போது கூட உங்ககிட்டே மன்னிப்புக் கேட்க முடியாமலே சாகிறோம்னுதான் ரொம்ப வருத்தப்பட்டாங்க. அவங்களை மன்னிச்சுடுங்கம்மா. என்னையும் தான், எனக்கு வேற போக்கிடம் இல்லாமல்தான் அண்ணாவை அண்டி வரவேண்டியதா போச்சு. இல்லன்னா.....", மேலே சொல்ல முடியாமல் அழுதாள்.

அவள் பேச்சில் இன்னும் தாக்குண்டார் கமலம். உரிமையைச் சொல்ல வேண்டிய, வாழ வேண்டிய பெண், இப்படி, சொந்த அண்ணனிடமே'அண்டி வாழ்கிறேன்' என்று சொல்லுவது, அவருக்கு வருத்தத்தை அளித்தது. அவள் இப்படிச் சொல்லுவதற்கு காரணம், தன் கோபமும் தானே, என்ற நினைப்பு அவரை அழுத்தியது.

முதலில், அவளை இந்தக் குற்ற உணர்வில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று எண்ணினார். "கண்மணி என்ன பேச்சு இது? சொந்த அண்ணனிடம், யாராவது அண்டி வாழ்வார்களா? அவன் உன் அண்ணன். உரிமையாக இருக்கிறேன் என்று சொல்.

இனிமேல் யார் கேட்டாலும், அவன் உன் சொந்த அண்ணன், உனக்கு அப்பா, அம்மா எல்லோரும் இருப்பதா சொல்லு. பத்திரிகைகாரர்கள் கேட்டாலும் அதையே சொல்", அழுத்திச் சொல்லி, இது அவளது வீடு, அவளது உறவு என்பதை, அவளுக்குப் புரிய வைத்தார்.

தருணும், வாசுவும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். அங்கிருந்தவர்கள் அனைவரின் மனதிலும் சந்தோஷம் கரை புரண்டது.

"எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கும்மா. நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு எனக்குத் தெரியும், ஆனாலும் எப்படி உங்ககிட்டே சொல்லப்போறேன்னு தவிச்சுட்டே இருந்தேன். அதைவிட, வாசு, கண்மணி கல்யாணம் தடையில்லாமல் நடக்கணுமே என்ற கவலை ரொம்பவே இருந்தது. இப்போ அந்தக் கவலை எனக்குக் கொஞ்சம் கூட இல்லை. உங்க பொண்ணோட கல்யாணம் எப்படி நடக்கணும்னு, நீங்களே முடிவு பண்ணிடுவீங்க", ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

பின்னர் கொஞ்சம் தயங்கியவாறே, "அம்மா....., அப்பா கண்மணியைப் பாக்கணும்னு அன்னைக்கே கேட்டாங்க. நான்தான் முடியாதுன்னு சொல்லிட்டேன். இப்போ நீங்க விருப்பப்பட்டால்.....", சொல்லாமல் நிறுத்திவிட்டான்.

"இதில் இவ்வளவு தயங்க, என்ன இருக்கு தருண். கொஞ்சம் வருஷத்துக்கு முன்னாடியா இருந்தால் நான் என்ன முடிவு எடுத்திருப்பேனோ? ஆனால் இப்போ கண்மணியை பார்த்தால், எனக்கொரு மகள் இருந்தால் இப்படித்தான் இருந்திருப்பாள் என்ற நினைப்புதான் வருது.

உங்க அப்பா மேலையும், இப்போ கோபத்தைக் காட்ட முடியாதே, அவரே செயல் இழந்து படுத்திருக்கார். கடைசி காலத்தில் அவரோட மன நிம்மதிதான் பெருசா தெரியுது. அதிலும், அன்னைக்குக் கண்மணியைப் பார்த்த பிறகுதான், அவரால் அவரோட மனசைக் கட்டுப்படுத்த முடியாமல்தான், அட்டாக் வாற அளவுக்குப் போய் இருக்கு.

இதுக்கும் மேல கோபப்பட்டு என்ன ஆகப் போகுது. சரி வாங்க, அப்பாவைப் பார்க்கப் போகலாம்", சொல்லிவிட்டு எழுந்தார்.

"அம்மா.... நான் முன்னாடி போய் அப்பாகிட்டே சொல்லுறேன், பிறகு நீங்க வாங்க. எல்லாம் அவரோட உடல் நிலைக்காகத்தான்....., அங்கே வந்து அவர் முன்னாடி

அழக்கூடாது, சரியா?", தாயின் பார்வையை உணர்ந்து வேகமாகச் சொன்னான். அந்த நேரத்திலும் மகனின் முன்னெச்சரிக்கை, கமலத்தைப் புருவம் உயர்த்த வைத்தது.

சரியெனச் சொல்லி அவனை அனுப்பினர். சரியாக ஐந்து நிமிடம் கழித்து, பெருமாள் இருந்த அறைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கவனிக்கும் ஆண் செவிலியும் உடனிருந்தார். தருணும், அவனுமாகச் சேர்ந்து பெருமாளை சாய்ந்த வாக்கில், தலகாணியை முதுகுக்கு அண்டக் கொடுத்து, அமர வைத்திருந்தார்கள்.

இவர்களைப் பார்த்தவுடன், பெருமாளின் கண்கள் கலங்கியது. கமலத்தை சங்கடமாகவும், மன்னிப்பு கேட்கும் பார்வை பார்த்தார்.

அதை உணர்ந்தவர் போன்று, கணவனின் கையை, மென்மையாக அழுத்தினார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. பேச முயன்ற அவரால் ஒரு வார்த்தைக் கூடப் பேச முடியவில்லை. உடல் குலுங்கியது அவருக்கு.

"அப்பா..... உங்க உடம்புக்கு ஒத்துக்காது. இப்படி எமோசனல் ஆகாதீங்க. இதுக்குதான் முதல்லையே உங்ககிட்டே சொன்னேன். தாயின் கண்களும் கலங்குவதைப் பார்த்து, அம்மா நீங்களுமா?", அவரை அதட்டினான்.

தருணின் அதட்டல், இருவரையும் தங்கள் நிலைக்குத் திரும்ப வைத்தது. கமலம், அவர் கையை விட்டுவிட்டு, தயக்கமாக கொஞ்சம் தூரத்தில் நின்றிருந்த கண்மணியை அழைத்துவந்து, "என்னங்க.... நம்ம மக கண்மணி...", என்று சொல்லி அறிமுகம் செய்து வைத்தார்.

கமலம், 'உங்க மகள்' என்று சொல்லவில்லை, 'நம்ம மகள்' என்று சொன்னதை அனைவருமே கவனித்தார்கள். கண்மணியால் தன்னைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. "அம்மா.....", என்று அவர் தோளிலேயே முகம் புதைத்தாள்.

"ம்ச்.....", தருணின் சத்தம், இருவரையும் நிலைப்படுத்தியது. கண்மணியை பெருமாளின் அருகில் நிறுத்தினார் கமலம்.

மகளை ஆசை, ஆசையாகப் பார்த்தார். அவள், அவளது தாயைக் கொண்டே பிறந்திருந்தாள். எனவே அவருக்கு அவளை நினைவுபடுத்தினாள்.

ஆனாலும், தன் மகள் என்ற எண்ணமே அவருக்குப் பெரிய ஆறுதலையும், நிம்மதியையும் கொடுத்தது. தன் நடுங்கும் கைகளால், அவள் முகத்தை மென்மையாக வருடினார். தலையை ஆசையாகக் கோதினார். அவள் கைகளை எடுத்து முகத்தில் வைத்துக்கொண்டு, தாள முடியாமல் அழுதார்.

நீர் நிறைந்த விழிகளால், 'எப்படி இருக்கிறாய்?', என்று கேட்டார். பின்னர் நினைவு வந்தவராக, மகனின் கைகளை வேகமாகத் தட்டி, "இ...வ..... அ....ழ்.....ழ....., ", "இவளது அம்மா எங்கே?", என்று அவரது கடைவாயில் ஒழுகிய எச்சிலையும் தாண்டி, அவர் கேட்க வந்ததை கேட்டுவிட்டார்.

அங்கே ஒரு அசாத்திய அமைதி குடியேறியது. அந்த அமைதியில் ஒவ்வொருவரின் மனநிலையும் ஒவ்வொன்றாக இருந்தது. கண்மணியின் மனது, அவர் தாயைப் பற்றிக் கேட்டதும், கொஞ்சம் மகிழ்ந்து, பின்னர் கவலையில் மூழ்கியது. தருணின் வார்த்தைகள் மட்டும் இல்லையென்றால் அங்கேயே குமுறி அழுதிருப்பாள்.

"அதை பிறகு சொல்லுறேன்ப்பா...", தருண் அந்தப் பேச்சைத் தவிர்க்கவே, அவருக்கு ஏதோ நடந்துவிட்டது என்பது, தெளிவாகப் புரிந்தது. மகளின் கையைப் பிடித்து, தன் நெஞ்சில் வைத்து அழுதார். என்னதான் அவசரத் திருமணம், மூன்றே மாதங்களில் அவரை விட்டுப் போயிருந்தாலும், அவள் அவர்மேல் உண்மையான பாசம் கொண்டிருந்தது, அவருக்குத் தெரியும்.

தான் செய்த செயலால், கமலத்துக்கு துரோகம் செய்ய வைத்துவிட்டோம் என்ற எண்ணத்தால், கடிதம் எழுதி வைத்துவிட்டு, தன்னைவிட்டு நீங்கிப் போய்விட்டது, அவரால் ஏற்றுக்கொள்ளவே கொஞ்ச நாள் ஆனது.

அன்று பார்த்ததுதான் கடைசி, என்பதை நினைத்து வெகுவாக கலங்கினார். "அப்பா..... ஏற்கனவே சொன்னேன், இப்படி அழுதால் இனிமேல் கண்மணியை இந்த ரூமுக்கு அனுப்பவே மாட்டேன்", அவனது இந்த மிரட்டல்தான், அவரைக் கொஞ்சம் சமன் படுத்தியது. மேலும் ஒரு பத்து நிமிடம் பேசிவிட்டு, அவர் அறையிலிருந்து வெளியேறினர் அனைவரும்.

ஒரு சந்தோஷ மனநிலை அவர்கள் வீட்டில் நிறைந்தது. கமலம் கண்மணியை மகளாக ஏற்றுக்கொள்ளத் துவங்கியிருந்தார். இரவு உணவு நேரம் நள்ளிரவைத் தாண்டியும் தொடர்ந்தது அவர்களுக்கு.

இவர்களது சந்தோஷ மனநிலைக்கு எதிராக, லயாவின் மனது, குழப்பத்திலும், கவலையிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அந்த வேலையை, அதாவது அவளைக் குழப்பும் வேலையை, செவ்வனே செய்து கொண்டிருந்தாள் தெய்வா.

தாய் சொல்வதை நம்பவும் முடியாமல், அதைத் தவிர்க்கவும் முடியாமல், தவிர்க்கும் வழியும் அறியாமல் அமர்ந்திருந்தாள் லயா.

கதவு - 25

ஒருதுளி விஷம்

மொத்தப் பாலையும் விஷமாக்கும்

உன் மனதில் விழுந்த

சந்தேக விதை

நம் காதலைப் பாழாக்கும்

நீ தெளியும் அந்த நொடிகளுக்காக.....

தாயையும், கையில் இருந்த செய்தித் தாளையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள் லயா. அவளால், தாய் சொன்னதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"இரவு உச்ச நட்சத்திரத்தின், உடன்பிறவா சகோதரி....., அழகுக்கலை படித்ததால் அவரோடு தஞ்சமா? இல்லையென்றால் கைப்பாவை நடிகையுடன் எழுந்த காதலால், சகோதரி ஆனாரா?", எவ்வளவு முறை படித்தாலும், அதில் இருந்த செய்தியை, சரியான விதத்தில் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'கண்மணி நிஜமாவே அவரோட தங்கையா? இல்லன்னா என்மேல இப்போ எழுந்தக் காதலால் அப்படிச் சொல்லுறாரா? இதன் உண்மையை யாரிடம் பேசித் தெரிஞ்சுக்க? அம்மா என்னன்னா, சினிமா நடிகர்கள் எல்லாம் இப்படித்தான், மலர்விட்டு மலர் தாவுவார்கள், படுக்கையில் வைத்துக்கொண்டே அவளை 'தங்கை' என்று சொல்வார்கள் என்று சொல்கிறார், நான் என்ன செய்ய?',

லயாவுக்குத் தாயை நம்புவதா வேண்டாமா என்ற குழப்பமே எழவில்லை. ஏனென்றால், அவளுக்குத் தாய் சொல்வதுதான் வேத வாக்கு. ஆனால், தருண்மேல் புதிதாக பூத்திருந்த காதல், இந்தச் செய்தி உண்மையாக

இருக்கவேண்டும், அதாவது கண்மணி தருணின் தங்கையாகவே இருக்கவேண்டும் என்று விரும்பியது.

அவள் எண்ணவோட்டம் புரிந்தவற்போல், "லயா கண்ணு, சில உண்மையை எல்லாம் நம்மளால் ஒத்துக்கவே முடியாது. சிலர் நல்லவன் மாதிரி வேஷம் போட்டு, தானாவே கனிய வைப்பாங்க. இல்லன்னா காதல்னு சொல்லி, படுக்கையில் வீழ்த்துவாங்க.

அவனோட நடிச்ச தாரா நிலை என்ன ஆச்சுன்னு உனக்குத் தெரியுமா? அவகூட நெருங்கிப் பழகினான். அவங்கதான் பெஸ்ட் ஜோடின்னு பேர் வாங்கினாங்க. அவளைத்தான் கல்யாணம் செய்யப்போறதா இந்தப் பத்திரிகை எல்லாம் பக்கம் பக்கமா நியூஸ் வந்துது. என்னமோ, உயிர் காதலர்கள் மாதிரி மேடையெல்லாம் சுத்துனாங்க. இப்போ அவ, அவனைக் கல்யாணம் செய்யக்கட்டாயப்படுத்தவே, அவளைக் கழட்டி விட்டுட்டு, உன்னை நடிக்க வச்சாங்க.

இதுலேர்ந்தே தெரியலையா அவனோட லட்சணம். பேசுறதெல்லாம் நல்லாத்தான் பேசுவாங்க. நாமதான் பாப்பா புத்திசாலித்தனமா நடந்துக்கணும். நமக்கு என்ன நல்லதுன்னு, நாமதான் முடிவு செய்யணும்.

யாரையும் நம்பக் கூடாது. இங்கே, காதல் எல்லாம் படுக்கையில் புரளும் வரைக்கும்தான். உனக்கு இதெல்லாம் தெரியவேண்டாம்னு இதுவரை நினைச்சேன். உன்னை இதுவரை நானே பொத்திப் பாதுகாத்தேன். இனிமேல், உன்னை நீயே பாத்துக்கப் பழகிக்கணும். நாலும் தெரிஞ்சு, சூதனமா நடந்துக்கணும். உனக்கு எதுன்னாலும் இந்த அம்மா இருக்கேன்.

உனக்கு நல்லதை மட்டுமே இந்த அம்மா செய்வேன், அதை நீ முழுசா நம்பணும்", லயாவை மேலும் மேலும் குழப்பி, தன் வழிக்கு வர வைக்க முயன்று கொண்டிருந்தார். லயா கொஞ்சம் கூட யோசிக்கவே இல்லை, இதுவரை யாரைப் பற்றியும் பேசாத தாய், இன்று தருணைப் பற்றி மட்டும் இவ்வளவு பேசக் காரணம் என்ன என்பதைத்தான்.

அப்படி அவள் யோசித்திருந்தால் தெரிந்திருக்கும், தாய் தன்னைக் குழப்புவதும், அதில் இருக்கும் உள் குத்தும். அவள் தான், மூளையையும், காதையும், தெய்வாவின் காலடியில் கடன் வைத்து விட்டாளே.

இவை எல்லாவற்றையும் விட, மகளை ஒரேடியாகச் சாய்க்கவும், அவள் மனதில் வேர் விடத் துவங்கியிருக்கும் காதலை முளையிலேயே கிள்ளவும், அந்த வலியில் தெய்வா குளிர் காயவும், உடனடியாகத் தாராவுக்கு அழைத்தாள்.

தாயின் செய்கையை, ஒரு பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தாள் லயா.

அந்தப் பக்கம் அழைப்பு எடுக்கப்படவே, ஸ்பீக்கரில் போட்டாள். "தாரா, நான் லயாவோட அம்மா பேசுறேன்ம்மா. எனக்கு ஒரு தகவல் வேணும், அதான் உனக்குக் கால் செய்தேன்", நுனி நாக்கு ஆங்கிலத்தில் தாய் பேசுவதை, இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன, அந்தத் தருண் அவனோட வேலையைக் காட்டுறானா?", அவள் அதற்குதான் கால் செய்திருப்பாள் என்பதை, நொடியில் உணர்ந்துக் கேட்டாள் தாரா.

அவளது இந்தக் கேள்வியிலேயே, லயா பாதி உடைந்தாள். மகளை ஓரவிழிப் பார்வையில் கவனித்தவாறே, "என்னம்மா, தருண் ரொம்ப நல்ல மாதிரி போல? ஆனா இந்தப் பத்திரிகைக் காரங்கதான்..... தப்பா எழுதுறாங்க இல்ல?", ஒன்றுமே தெரியாத பச்சைப் பிள்ளையாக, பேச்சைத் தொடர்ந்தாள் தெய்வா.

"ஆமா ஆமா..... ரொம்ம்ம்ப..... நல்ல மாதிரிதான். நுனி விரலைக் கூடத் தீண்டாமல் கர்ப்பமாக்குவதில் அவன் வல்லவன்தான்", நக்கலாக, விஷத்தில் தோய்த்து வந்து விழுந்தன வார்த்தைகள்.

"என்னமா சொல்லுற?", போலியாக வியந்தார்.

"ஆமாம்மா, அவன் தீண்டவே மாட்டான். ஆனால், அவன் 'தொட மாட்டானா'ன்னு நம்மளை ஏங்க வச்சே, அவனோட காரியத்தை சாதிச்சுப்பான். அதற்குப் பிறகு, ஒன்றுமே தெரியாத பச்சைப் பிள்ளையாக நடிப்பான். காதல்ன்னு அவன் பின்னாடியே நாய் மாதிரி அலைய வைப்பான். அதே காதலை, நாம அவன்கிட்டே சொல்லும் போது, 'எனக்கு நடிகைகளையே பிடிக்காது, எனக்கு அது சரிவராது'ன்னு சாதிப்பான்.

அதுக்கும் மேல நாம அவன்கிட்டே கெஞ்சினால், நம்மளைப் பார்ப்பதையே தவிர்ப்பான். பாதி படத்தில் கூட, கழட்டிவிடத் தயங்கவே மாட்டான். ரொம்ம்ம்ம்ப நல்லவன்தான். எதுக்கும், உங்கப் பொண்ணைக் கொஞ்சம் தள்ளியே இருக்கச் சொல்லுங்க", அவன், தன்னைத் திருமணம் செய்ய முடியாது என்று சொன்னதையே தாங்க முடியாமல் இருந்தவள்,

அவன் நடிகையை திருமணம் செய்யமாட்டேன் என்று சொன்னதில் வெதும்பியவள், தான் ஒரு கன்னிப்பெண்ணைத் தான் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்று சொல்லி, அவளை அவமானப் படுத்திவிட்டதாகக் கோபத்தில் கொந்தளித்தவள், அவன் லயாவை விரும்புவதாக வந்த இன்றையக் கிசு கிசுவில், வெந்து தணிந்தாள்.

எப்படியாவது லயாவிடம் பேசியே ஆகவேண்டும் என்று காத்திருந்தவளுக்கு, தெய்வா தானாகவே, கால் செய்ததில் சந்தோசத்தின் உச்சத்துக்குச் சென்றவள், அவள் மனதில் இருந்த விஷமனைத்தையும் போன் வழியாகக் கக்கினாள்.

அவள் கக்கிய விஷமனைத்தும், சந்தேக விதையாக லயாவின் மனதில் விழுந்தது. மனதில் விழுந்த இந்த வார்த்தைகள், அவள் காதலையே ஆட்டம் காணச் செய்தது. தருணின் மேல் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியது.

தனக்கு ஒரே ஆதரவாக, தன்னை இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்றும் ஆபத்பாந்தவனாக அவனை எண்ணியிருந்தவளால், அவனும், அவள்

உடலுக்காகத்தான் இப்படி நடிக்கிறான் என்பதை, தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

தாரா சொன்னவை அனைத்தும், தனக்கும் நடந்ததை ஒரு வேதனையாக நினைவு கூர்ந்தாள். அவன் தன்னைத் தொட முயலவே இல்லைதான், அதே நேரம், தன் மனதை, தான்தான் அவனுக்கு முதலில் உணர்த்தினாள். அதன் பிறகுதான் அவன், தன் காதலைச் சொன்னான்.

அந்தநேரம், அவளை, அவளுக்கே உணரவைக்க வேண்டித்தான் அவன் இவ்வாறு செய்ததாகச் சொன்னது, அவள் நினைவுக்கு வரவே இல்லை. அவ்வளவெல்லாம் சிந்திக்கும் வழக்கம், அவளுக்கு எப்பொழுதும் இருந்ததில்லையே. குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கத் துவங்கினாள் தெய்வா.

"அப்போ எல்லார்ட்டயும் இதேதான் செய்வானா அவன்?", இன்னும் அவளைத் தூண்டினாள்.

"அதெல்லாம் ரொம்ப விவரமா நடந்துப்பான். ஒவ்வொருத்தர் கிட்டேயும் ஒவ்வொரு மாதிரி, ஆனால் அவன் எருமை மாதிரி, எவ்வளவு பொறுமை வேணுமோ, அவ்வளவு பொறுமையா இருந்து, காரியத்தை சாதிப்பான். உங்க பொண்ணை, எதுக்கும் நீங்க கொஞ்சம் கவனமா பாத்துக்கோங்க.

வெளிப்படையா பேசுறவங்களைக் கூட நம்பலாம். இப்படித் தள்ளியிருக்குற மாதிரி நடிக்கிறவங்களை நம்பவே கூடாது", செய்யும் வேலையை கச்சிதமாகச் செய்தாள்.

"நல்லதும்மா, என்னதான், நான் என் பொண்ணுக்கு எடுத்துச் சொன்னாலும், அவனைப்பற்றி முன்னாடியே தெரிஞ்ச, நீங்க எல்லாம் சொன்னால் அது சரியா இருக்குமே, அதான் உனக்குப் போன் செய்தேன். சரிம்மா நான் பாத்துக்கறேன், வச்சுடவா", கேட்டுவிட்டு வைத்துவிட்டார்.

"ஏண்டா.... என்னையவா அவமானப்படுத்துற, உனக்கு நானே அதிகம்டா. பெரிய உத்தமன்னு நினைப்பு,

உன்னையவே சுத்தி வந்தால், என்னை அவமானபடுத்தவா செய்யிற? நீ எவளையுமே கல்யாணம் செஞ்சுக்க முடியாது. அதிலும், உன் முதல் காதல் கைகூடவே செய்யாது. உனக்கும் காதலோட வலி தெரியணும்டா. லயா உன்கிட்டே சொல்லுவா, கண்டவளோட போறவன் எனக்கு வேண்டாம்னு", தாரா அங்கே வெளிப்படையாகவே எக்காளமாக வெற்றிச் சிரிப்பு சிரிக்க,

மகளின் அதிர்ந்த முகத்தைப் பார்த்து, மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் தெய்வா. 'லயா, நான் உன்னைப் பெத்தவ, என்கிட்டேயே உன் மனசை மறைக்கப் பாக்குறியா? அவ்வளவு சீக்கிரம் என் நிழலை விட்டு உன்னைப் போக விட்டுடுவேனா? பொன் முட்டையிடும் வாத்தை, சும்மா தூக்கிக் கொடுக்க, நான் ஒண்ணும் முட்டாள் இல்லை.

இந்தத் தருண், உன்னை என்கிட்டே இருந்து பிரிக்கப் பாக்குறானா? குழவி கூட புழுவை, கொஞ்சம் கொஞ்சமாக கொட்டித்தான் வண்ணத்துப்பூச்சி ஆக்கும். நானும் அதே மாதிரிதான், சின்ன வயது முதலே சினிமாவே உலகம்னு உன்னை மாத்தி வச்சுருக்கேன்.

இதை விட்டு, அவ்வளவு சீக்கிரம் உன்னை விலக விட மாட்டேன். கூட்டுப் புழுவாக இருக்கும் உன்னை, அவன் வண்ணத்துப்பூச்சியாக மாத்த, நான் விட்டுடுவேனா? அவனுக்கு அந்த வாய்ப்பை, நான் தரவே மாட்டேன்', தனக்குள்ளேயே கறுவிக் கொண்டாள். கண்களில் வன்மம் குடி கொண்டது.

அதை மகளுக்குத் தெரியாமல், சாமர்த்தியமாக மறைத்தாள். "லயா...., நீ இந்தத் தாரா சொல்லுவதைக் கேட்ட இல்ல. நான் சொன்னால், உனக்கு முழு நம்பிக்கை வராதுன்னுதான் தாராவையும் பேச வைத்தேன். இப்போ இந்த அம்மாவின் பேச்சில், உனக்கு நம்பிக்கை வந்துதா?", வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றினார்.

"நான் உங்களை மட்டும்தான்ம்மா நம்புறேன். எனக்கு நீங்க நல்லதுதான் செய்வீங்கன்னு எனக்குத் தெரியும்", பழைய

கைப்பாவையாக மாறியிருந்தாள் லயா. ஆனாலும் இதயத்தின் ஓரத்தில், தருணின் நினைவு அழுத்திக்கொண்டு இருந்ததை, உணர்ந்து கொண்டாள் அவள்.

எல்லாம் வேஷம்....., என்று தனக்குத் தானே சொல்லி, தன்னைத் தேற்றினாள். "சரிம்மா நான் தூங்கப் போறேன். எனக்கு சாப்பாடு வேண்டாம்....", எழுந்து சென்றுவிட்டாள்.

மகளின் டயட்டில் எப்பொழுதும் கவனமாக இருக்கும் தெய்வா, அவள் சாப்பாடு வேண்டாம் என்று சொன்னதைக் கண்டுகொள்ளவே இல்லை. ஆனாலும், மகள் என்ன செய்கிறாள் என்பதை, அவளால் அறியாமல் இருக்க முடியவில்லை.

தர்ப்பூசணி ஜூஸுடன் மகளின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். தாய் வருவதைக் கண்டவுடன், உறங்குவதுபோல் கண்களை மூடிக் கொண்டாள். கருவிழிகள் அசைந்தால் தாய் கண்டுபிடித்துவிடுவாள் என்று, இமைகளை மூடி அசையாமல் படுத்துக் கொண்டு, உறங்குவதுபோல் நடித்தாள்.

ஆம் நடித்தாள், வீட்டிலும் இப்பொழுது நடிக்கத் துவங்கியிருப்பதை உணர்ந்தாள். மனதுக்குள் காதல் வந்தால், கூடவே கள்ளத்தனமும் வந்துவிடும் என்று, தான் படத்தில் சொல்லி நடித்த வசனம், அசந்தர்ப்பமாக நினைவில் நிழலாடியது.

"லயா.... இந்த ஜூசைக் குடிச்சுட்டுத் தூங்கு. நாளைக்கு நீ கிளம்ப வேண்டியதுக்குத் தேவையான எல்லாத்தையும், நான் எடுத்து வைக்கிறேன்", மகளை எழுப்பி டம்ளரை கையில் கொடுத்துவிட்டு, சூட்கேசில் அவளுக்குத் தேவையானவற்றை அடுக்கத் துவங்கினார்.

மகளின் அறையில் தாமதிப்பதே, அவர் எண்ணமாக இருந்தது. ஜூஸில் கலந்திருந்த தூக்க மாத்திரையின் விளைவால், கொஞ்ச நேரத்திலேயே அவள் உறக்கத்தைத்

தழுவினாள். அவள் உறங்கிவிட்டதை உறுதி செய்துவிட்டு, ஷெட்டிக்கு அழைத்தாள்.

அவள் அழைப்புக்காகவே காத்திருந்தவர், "சொல்லு தெய்வா, எல்லாம் சரியாப் போகுதுல்ல. உன் மககிட்டே சொல்லிட்டியா?", அவர் குரல் எதிர்பார்ப்பில் வழிந்தது.

"ஐயா, நான் அவகிட்டே எதையும் சொல்லலை. ஆனால், பாப்பா நாளைக்குத் தனியாத்தான் வருவா. நான் ரெண்டு நாள் கழிச்சுத்தான் வருவேன், அதுக்கு முன்னாடி, நீங்க பேசி சம்மதிக்க வைப்பது, உங்க சாமர்த்தியம்.

மனசளவில் அவ கொஞ்சம் பலவீனமாதான் இருக்கா, அதை நீங்க பயன் படுத்திக்கோங்க. நீங்க சொன்ன மாதிரி.....", தெய்வா இழுப்பதிலேயே, அவள் பணத்தைப் பற்றித்தான் கேட்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டார்.

"தெய்வா, விஷயம் நல்லபடியா முடியட்டும், அடுத்த நிமிஷம் உன் வீடு தேடி பணம் வந்திருக்கும்", அவர் உறுதி கொடுக்கவே அமைதியானாள் தெய்வா. எல்லாம் நல்லபடியாக முடியவேண்டுமே என்ற கவலை அவள் மனதில்.

தாயின் சதி எதுவும் தெரியாமல், ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் லயா.

நள்ளிரவில் தருணின் அலைபேசி குரல் கொடுக்க, அனைவரோடும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவன், அது டிடெக்டிவ் எண் என்று தெரியவே, வேகமாக அலைபேசியை எடுத்துக்கொண்டு ஒதுங்கினான்.

அங்கே சொல்லப்பட்ட வார்த்தைகளை கவனமாகக் கேட்டுவிட்டு, "ஏற்பாட்டில் எந்தக் குழப்பமும் வந்துடக் கூடாது. அப்படி மட்டும் ஆச்சு....", இரும்புக் குரலில் சொல்லிவிட்டு, அங்கிருந்து நகர்ந்து, தாயோடும், மற்றவரோடும் சேர்ந்துகொண்டான்.

நாம் நினைப்பதெல்லாம் நடந்துவிடும் என்பது என்ன நிச்சயம். அப்படியே நடந்துவிட்டால், தெய்வம் என்ற ஒன்று

இருப்பதையே மனிதன் மறந்துவிடுவானே.

காலையில் எழுந்ததுமுதல், தருணின் அழைப்பை, லயாவின் உள்மனம், ஒரு ஓரத்தில் எதிர்பார்த்துக்கொண்டு தான் இருந்தது. வெளி மனமோ, அவன்மேல் அவநம்பிக்கை கொண்டிருந்தது. அந்த அவநம்பிக்கையையும், தருணின் ஒற்றை ஆசை வார்த்தை மாய்த்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும்.எனவே வெளி மனமோ, அவன் அழைக்க கூடாது என்று வேண்டிக் கொண்டிருந்தது.

லயாவிற்கு அழைக்க, தருண் நினைத்தாலும், அவனது வக்கீல் வந்துவிடவே அவனால் எதையும் அதன் பிறகு யோசிக்க முடியவே இல்லை. அங்கே, அவன் வீட்டுக்கு விவியையும் அழைத்திருந்தான். கண்மணியை, லீகலாக தத்தெடுப்பது பற்றியச் செய்தியை அவளையே கவர் செய்யச் சொல்லியிருந்தான்.

அவள் கொண்டுவந்திருந்த கேமராவில், அனைத்து நடைமுறைகளையும் படம் பிடித்துக் கொண்டாள். லாயர் விடைபெற்றுச் சென்ற பிறகு, விவி அனைவருடனும் சிறிது நேரம் பேசினாள்.

விவியும், தருண் கேட்ட அதே கேள்வியைத்தான் கேட்டாள். "எதுக்கு இந்த தேவையில்லாத வேலை...", அவளுக்குக் கொஞ்சம் எரிச்சலாகக் கூட இருந்தது.

"விவி....., சில விஷயங்களை, சாதாரண மக்கள் செய்யிற மாதிரி நாங்க செஞ்சுட முடியாது. ஒரே நிமிஷத்தில் உலகம் முழுக்க, வேற விதமா பரவிடும். எனக்கு மனசுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், சில விஷயங்களை நான் மறைமுகமா செய்யவேண்டித்தான் இருக்கு", அவன் குரலில் வழிந்த துயரம், அனைவரையும் தாக்கியது.

விவி அவனைக் குழப்பமாக பார்க்க, "சொந்தத் தங்கையை தத்து தங்கையா அறிவிக்கவேண்டிய நிலைமை....., ஷிட்....., பாழாப்போன இந்த இமேஜ்.....", காற்றில்

கையை உதறி அவன் சொன்ன விதம், அவன் கோபத்தை பறை சாற்றியது.

"விடு தருண்.....", அவன் கோபத்தைப் பார்த்து விவிதான் அவனைச் சமாதானம் செய்ய வேண்டி இருந்தது...

கதவு - 26

தொலைவில் நீ இருந்தாலும்

அருகில் உன்னை உணரும் வித்தையை

காதல் எனக்குக் கற்றுக் கொடுத்தது...

அனைத்து பேக்கிங்கும் முடிந்து, கிளம்பும் நேரமும் வந்தது. இதுவரை, தாய் தன்னுடன் வருகிறார், என்று எண்ணிக் கொண்டிருந்தவள், அவளது சூட்கேஸ் மட்டும் வெளியில் எடுத்துசெல்லப்படவே, தாயைக் கேள்வியாகப் பார்த்தாள்.

"லயா..... அம்மாவுக்கு டிக்கெட் கன்பர்ம் ஆகலை. நீ, இன்னைக்கு இருக்க டிக்கெட்டில் கிளம்பு, அம்மா ரெண்டே நாளில் வந்துடுவேன். போன உடனே ஷூட்டிங்கும் கிடையாது, ரெண்டுநாள் கழிச்சுதான் அதுவும் இருக்கு, சோ.....

உனக்கு அங்கே ஒதுக்கி இருக்க ஹோட்டல்ல நீ போய் தங்கிக்கோ. அங்கே யாருக்கும் உன்னைத் தெரியாது, நீ சுதந்திரமா சுத்திப் பாக்கலாம். நீயும் வளந்துட்ட செல்லம், எல்லாத்துக்கும், இந்த அம்மாவை எதிர்பார்க்கக் கூடாது.

நீயே உன்னைப் பாத்துக்கணும் சரியா? தைரியமா போ. உன்னால் இந்த அம்மாவை விட்டுவிட்டு இருக்க முடியுமான்னு பாரேன்", பூடகமாகப் பேசினாள்.

லயாவை இதுவரை, தன் கட்டுக்களில் இருந்து அவிழ்க்க வேண்டும் என்று நினைத்ததுகூடக் கிடையாது தெய்வா. அப்படிப்பட்ட தாய், இன்று உலகின் ஒரு கோடிக்கு, தன்னைத் தனியாகப் போகச் சொல்லுவதை நினைத்து வியந்தாள்.

தருண் சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தது, உன்னைத் தனியாக எங்கேயாவது போகச் சொன்னார்களா? என்று அவன் கேட்டது....., ஒரு வேளை அப்படியும் இருக்குமோ என்று குழம்பினாள்.

தாயின் பேச்சில் இருந்த ஓட்டைகளை, அவள் கவனிக்க மறந்தாள். எப்படி லயாவுக்கு மட்டும் டிக்கெட் கன்பர்ம் ஆகும்? நீ சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, இறுதியில், இந்த அம்மாவை விட்டுவிட்டு உன்னால் இருந்துவிட முடியுமா என்று ஏன் கேட்கவேண்டும்?

தன் நிழலைக் கூடத் தொடரும் அவர், எப்படித் தன்னைத் தனியாகச் செல்ல சம்மதித்தார்? பழைய தெய்வாவாக இருந்திருந்தால், இன்று அவளைச் செல்லவே விட்டிருக்க மாட்டார். அவ்வளவு ஏன்? இப்படி ஆனதற்கு, அந்த ஷூட்டிங் மேனேஜர் நிலை, கந்தற்கோலமாகியிருக்கும்.இவை எதையுமே அவள் சிந்திக்கவில்லை.

அவள் எண்ணமெல்லாம், தருணை மட்டுமே சுற்றி வந்தது. அவன் இன்று வருவானா? அவன் காதல் நிஜமா? தாரா சொல்வது நிஜமா? அவள் மனம் குழம்பித் தவித்தது.

ஆனாலும், தாயை விட்டுத் தனியாகத் தன்னால் செயல்படத் தெரிய வேண்டும், தன் முடிவுகளைத் தானே எடுக்கவேண்டும், என்று தருண் சொன்னதை நினைத்துக் கொண்டாள். அதை நினைத்தவுடன் கொஞ்சம் தைரியம் பிறந்தது மனதில். அந்த மனநிலையோடே, "சரிம்மா நான் போயிட்டு வாறேன்", கொஞ்சம் திடனாகச் சொன்னாள்.

லயாவின் இந்த நிமிர்வு, தெய்வாவிற்குக் கொஞ்சம் அபாய அறிவிப்பைக் கொடுத்தது. எப்படியும், தருண் செல்ல இன்னும் மூன்று நாள் இருப்பதால், அதற்கு முன் ஷெட்டி ஏதாவது செய்துவிடுவார் என்று எண்ணினாள்.

பணத்தின் மேல் இருந்த ஆசையில், அவள் கண்கள் மின்னியது. ஷெட்டியின் கறுப்புப் பணம் ஒரு கோடியைக் கைப்பற்றவே இரண்டு நாள் தாமதமாகப் போகிறாள் தெய்வா.

மகள் கிளம்பிச் சென்றவுடன், ஷெட்டிக்கு அலைபேசி வழியாக விவரம் சொல்லிவிட்டாள். பிறகு நிம்மதியாக ஓய்வெடுக்கச் சென்றார்.

ஏர்போட்டுக்குள் செல்லவே தயங்கினாள் லயா. ஏனென்றால், எப்படியும் கூட்டம் கூடிவிடும் என்பது அவளுக்குத் தெரியும், தயக்கமாக காருக்குள்ளே அமர்ந்திருந்தாள். காரும், இறங்கும் இடத்தில் நிறைய நேரம் நிற்க முடியாதாகையால், கொஞ்சம் தயக்கமாகவே இறங்கினாள்.

அவள் இறங்கவே, மூன்றுபேர் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களின் ஆஜானுபாகவான உருவம் அவளுக்குள் கலக்கத்தை மூட்டியது. விதிர்த்துப்போய் அவர்களைப் பார்க்க, "மேம்.... தருண் சார் அனுப்பினாங்க", அந்த ஒற்றை வாக்கியம் அளித்த நிம்மதியை, அவளுக்கு வேறு எதுவும் இதுவரைக் கொடுத்ததில்லை.

துரித நடையாக அவளை அங்கிருந்து அப்புறப் படுத்தினர். அவளது லக்கேஜை வேறு ஒருவன் தள்ளிக்கொண்டு வந்தான். உள்ளே போர்டிங் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள், அதற்கு முன், "மேம்.... உங்ககூட விவி வாறாங்க. அவங்க உங்களுக்காக, அங்கே காத்துட்டு இருக்காங்க", நடந்தவாறே மற்றவன் சொன்னான்.

நடப்பவை அனைத்தையும் நம்ப முடியாமல், என்னவோ கனவில் நடப்பவள்போல் அவர்களுடன் சென்றாள். விவி என்று சொன்னவுடன், ஒரு நிமிடம் தயங்கியவள், பிறகு எதுவும் சொல்லாமல் அவர்களோடு நடந்தாள்.

அங்கே விவி, பேண்ட் சட்டையில், குதிரைவால் ஜடையுடன், கண்களில் குளிர் கண்ணாடியுடன் அலட்சியமாக அமர்ந்திருந்தாள். வந்தவர்கள் லயாவை அவளிடம் ஒப்படைத்துவிட்டு, தாங்கள் பிளைட் கிளம்பும்வரை இங்கேதான் இருப்போம் என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

விவி அலட்டலாக தலையை அசைக்க, லயாவோ, பெரிய தேங்க்ஸ்சுடன் அவர்களுக்கு விடை கொடுத்தாள். விவியின் அலட்டலை, எவ்வாறு அவர்கள் கவனிக்கவில்லையோ, அதேபோல் லயாவின் நன்றியையும் கவனிக்காமலே சென்றுவிட்டார்கள்.

லயாவிற்கு எப்பொழுதுமே, விவியைப் பார்த்தால் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருக்கும். அதற்குக் காரணம், அவள் மற்றவரின் அந்தரங்கத்தையும் இரண்டே வரிகளில் தெருவுக்கு இழுத்துவிடுவாள் என்ற எண்ணத்தால்தான்.

'இன்று இவள் எங்கே செல்கிறாள்? தன்னுடன்தான் வருகிறாளா? இவள் தருணின் கையாளா, இல்லையென்றால் பத்திரிக்கைகாரி தானா? இவளிடம் நம்பி பேசலாமா? அப்படிப் பேசினால், அதையும் வியாபாரம் ஆக்கிவிடுவாளா?', முன்பு எல்லாவற்றுக்கும் தாயை நாடுபவள், இன்று அமைதியாக இருக்க முயன்றாள். கலக்கத்தில் அவள் இருந்த திசையில் கூடப் பார்க்காமல், தனது ஐபோனில் வலைத்தளத்தில் உலாவத் துவங்கினாள்.

அவளது பயத்தை உணர்ந்து, மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் விவி. 'இவல்லாம் எப்படி நடிகையானாள்? தெய்வாவைத் தள்ளிவிட்டுப் பார்த்தால், இவளுக்கு முதுகெலும்போ, மூளை என்ற அம்சமோ இவளுக்கு இருக்காது. சர்க்கஸில் இருக்கும் விலங்குக்கும், இவளுக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது. கேமரா முன்னாடி நடிக்க மட்டுமே, இவளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாள் அந்த தெய்வா.

சர்க்கஸில் இருக்கும் சிங்கத்தை புதிதாகக் காட்டுக்குள் கொண்டு விட்டால், காட்டில் இருக்கும் முயலுக்கே பயப்படுமாம், அதே மாதிரி, தெய்வாவின் நிழலை விட்டு வெளியே வந்திருக்கும் இவளுக்கும், அதே நிலைதானோ ?.

இவ எப்படி இந்த சமுதாயத்தில், இனிமேல் தனியாகச் சமாளிப்பாள்? தருணுடனான காதலில், எவ்வளவு உறுதியாக இவளால் இருக்க முடியும்? தெய்வாவின் ஒற்றை வார்த்தையில் அவள் முந்தானையில் சென்று ஒளிந்துகொள்ளாமல் இருப்பாளா?

இந்தத் தருணுக்கு ஏன் புத்தி இப்படிப் போகுது? அவனுக்கு வேற பொண்ணா கிடைக்கலை? அவனுக்கு ஏத்த ஜோடின்னா அந்த காவியாதான். ரெண்டு படம் சேர்ந்து

நடித்தாலும் என்ன ஒரு பொருத்தம், கண்ணியம், தெளிவு....., ஹம் அவனுக்குத் தெரியணும், எனக்குத் தெரிஞ்சு என்ன செய்ய? அப்படி என்ன, கண்மூடித்தனமான காதலோ", அவள் நினைப்பு, அவள் இதழ்களை ஏளனமாக வளைய வைத்தது.

லயாவிடம் பேசவே அவளுக்கு விருப்பமில்லைதான், தருண் தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டுமே, 'என்னைப் பார்த்தாலே மிரளும் இவகிட்டே என்ன பேச? வாயையாவது திறப்பாளா? இவ உக்காந்துருக்க விதத்தைப் பார்த்தால்...., நான் பேசத் துவங்கியவுடனே எழுந்து டாய்லெட் போய்டுவா போல இருக்கே', மனதுக்குள் நொந்தவாறே அவளை நேர் பார்வை பார்த்தாள்.

லயாவுக்கு அவள் பார்ப்பது தெரியவே, இன்னும் அதிகமாக, தன் ஐபோனை உத்துப் பார்க்கத் துவங்கினாள். ஆனால், அதில் என்ன தெரிகிறது என்பது அவள் பார்வையில் ஒரு சதவீதம் கூடப் பதியவில்லை. எப்பொழுது என்ன கேட்பாளோ என்று கலக்கமாகவே இருந்தாள், . லயாவின் நிலையை உணர்ந்தவள்போல், விவியின் இதழ்களில் வெளிப்படையாகவே புன்னகை தோன்றியது. கொஞ்சம் வாய்விட்டே நகைத்தாள்.

விவி சிரிக்கவே, லயா தன் தலையைத் தூக்கி, சுற்றிலும் பார்த்தாள். அதைக் கண்டுகொள்ளாமல், "லயா, நீங்க போன்ல இவ்வளவுநேரம் என்னப் பாத்தீங்க? சொன்னால் நானும் தெரிஞ்சுப்பேன்", சிரிப்பில் துடிக்கும் இதழ்களைக் கடித்தவாறே கேட்டாள்.

அவள் கேள்வியில் திருதிருவென விழித்தாள் லயா. "சரி விடுங்க, நாம பிறகு அதைப்பற்றி பேசுவோம். எனக்கு ஒரு சின்ன சந்தேகம், ஷெட்டியும் இன்னைக்கு வாறாராமே அப்படியா?", ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்டாள்.

"என்ன.....? என்ன சொல்லுறீங்க.....? நிஜமாவே அவர் வாறாரா? உங்களுக்குச் சரியாத் தெரியுமா?", படபடவெனக் கேட்டாள்.

'நான் பத்திரிகைக் காரியாக்கும்', என்ற கெத்தோடு அவளைப் பார்க்க, தன் கேள்வியின் அபத்தம் அவளுக்குப் புரிந்தது.

"இ.....இ...இல்ல....., அவர் எதுக்கு வரணும்? டைரக்டரைத் தான் நீங்க.... சொல்லுறீங்களா?", இன்னும் உளறிக் கொட்டி கிளறி மூடினாள்.

விவி அவளை வெளிப்படையாகவே முறைத்தாள். "என்னை யாருன்னு தெரியுதா உங்களுக்கு.....?", அவள் கேட்ட தொனியிலேயே, லயாவின் தலை ஆமென்று ஆடியது.

"இன்னொரு விஷயம் சொல்லவா...? உங்க அம்மா கேன்ஸல் செஞ்ச டிக்கெட்ல தான் நான் வாறேன்....., உங்களோட பக்கத்து சீட்", இன்னும் எவ்வளவு ஏமாளியாகத்தான் இருப்பாய் என்பதுபோல் பார்த்தாள்.

"இல்ல....., இருக்காது....., எங்க அம்மா என்கிட்டே எதுக்குப் பொய் சொல்லணும்? அவங்களுக்கு டிக்கெட் கன்பர்ம் ஆகலை அதான்.....", சொல்லிக் கொண்டிருந்தவள், பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, விவியைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"உண்மையாவே அந்த டிக்கெட் தான், உங்களுக்குக் கிடைச்சுதா? ஷெட்டியும் இதே ப்ளைட்டில் தான் வாறாரா?", எவ்வளவு முயன்றும், அவளால் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'இதற்கு ஏன், இவள் இவ்வளவுப் பதட்டப்படுகிறாள்? இவளோட அம்மா வரமாட்டான்னு, தருணுக்கு எப்படித் தெரியும்? ஷெட்டி வாறார்ன்னு சொன்னதும், இவ மூஞ்சி ஏன் இப்படி மாறுது? இது, அம்மாவைப் பிரிஞ்சதால் வந்த அழுகை மாதிரி இல்லையே?

தருணிடம் கேட்டதுக்குக் கூட அவன் எதுவும் உண்மையைச் சொல்லவே இல்லை. ஹாட் நியூஸ் வேணும்னா போ அப்படின்னான். அப்போ..... தெய்வா வராததற்கும், ஷெட்டி வருவதற்கும், இவளோட இந்தக் கலக்கத்துக்கும் ஏதாவது

தொடர்பு இருக்க? கண்டிப்பாக எதுவோ இருக்கிறது. இல்லாமல் தெய்வா, லயாவைத் தனியா அனுப்ப மாட்டா.

அவள் பத்திரிகை மூளை வேகமாகச் செயல்பட்டது. லயாவிடமிருந்து மெதுவாக விஷயத்தை வாங்கவேண்டுமென்று முடிவு செய்தாள். அப்படி இல்லையென்றாலும் தான் அதிகநாள் காத்திருக்கவேண்டி இருக்காது என்று எண்ணினாள்.

'அம்மா....., என் அம்மாவா இப்படிச் செய்தது? ஷெட்டியும் வருகிறார் என்றால், அதில் இருக்கும் காரணம் ஒன்றுதான்....., நான்....., அப்படின்னா என் அம்மாவும் இதற்கு உடந்தையா? என்னைத் தனியாக அனுப்பியதன் காரணம் இதுவா? நான் இப்போ என்ன செய்ய? தருணையும் நம்பாதே என்று சொன்னாரே', யோசிக்க யோசிக்க, அவள் மூளை குழம்பியதுதான் மிச்சம்.

கண்களில் வழியும் அருவியை நிறுத்த, வழி தெரியவில்லை அவளுக்கு. லயாவின் அழுகையை, விவி எதிர்பார்க்கவில்லை. தாயைப் பிரிந்த குழந்தையாக தவிக்கும் அவளை எப்படி தேற்றவென்றுத் தெரியவில்லை.

அவள் அழுவதிலும் ஒரு தனித்துவம் இருந்தது, மூக்கு விடைத்து, உதடு கொஞ்சம் துடிக்க, கண்கள் அருவியைப் பொழிந்தது. உடல் குலுங்கவோ, மற்றவரின் கவனம் பதியுமாறோ இருக்கவில்லை.அந்த நிலையில் கூட, தன் மேக்கப் கலையாதவாறு, கர்ச்சீப்பை வைத்து, கண்களின் ஈரத்தை ஒற்றி எடுத்தாள்.

அவளையே ஆராய்ந்துகொண்டிருந்த விவி, அதன் பிறகுதான் அவள் அழுகிறாள் என்பதை உணர்ந்து, அவள் கைகளை ஆதரவாக அழுத்தினாள். "லயா, இப்போ அழுவதால் எந்தப் புண்ணியமும் இல்லை. தருண்தான் என்னை உன் துணைக்கு அனுப்பி இருக்கிறான்.

இப்படி நீங்க, கொஞ்சம் கூட தைரியமே இல்லாமல் இருந்தால், உங்க காதலில் எப்படி ஜெயிக்கப் போறீங்க?

உங்க காதலுக்கு தருண் மட்டும் போராடினால் போதாது, நீங்களும் கொஞ்சமாவது முயற்சி செய்யணும்.

அவனும் எவ்வளவுதான் போராடுவான், தேவைக்கும், தேவை இல்லாததற்கும் சேர்த்து, அவன் வேலை செய்யவேண்டி இருக்கு", கண்மணியின் விஷயத்தையும், மற்றக் கதாநாயகிகளுடன் அவன் நடந்துகள்ளும் விதத்தில், பத்திரிகையில் கெட்டபெயர் வாங்குவதையும் மனதில் வைத்துக்கொண்டு சொன்னாள்.

"ஆமா, எங்க அம்மாவும் சொன்னாங்க....., தருண் சரியில்லன்னு. அவனுக்குத் தேவைன்னா என்னவேண்ணாலும் செய்வானாமே? தாராவும் சொன்னாங்க, அவங்களைக் கூட என்னமோ....., கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டு ஏமாத்திட்டதா.

இப்போ அதே மாதிரிதான் என்கிட்டேயும் பழகுறார், உஷாரா இருந்துக்கோன்னு சொன்னாங்க", மூக்கை உறிஞ்சியவாறே நடந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னாள்.

அவள் சொன்னவை அனைத்தையும் கேட்ட பிறகு, இப்படி ஒரு ஏமாளி இருப்பாளா? என்றுதான் விவிக்கு எண்ணத் தோன்றியது. கொஞ்சம் கோபமும் வந்தது. மற்றவர்கள் சொல்லுவதைக் கேட்கவும் ஒரு அளவில்லையா என்ற கோபம்தான் அது.

விவி பேசப் போகையில் விமானம் கிளம்புவதற்கான அறிவிப்பு வந்தது. இவளிடம் பேச, இது சரியான நேரமில்லை என்பது புரியவே, லயாவுடன் கிளம்பினாள். இதுவரை ஷெட்டி வந்து சேர்ந்திருக்கவில்லை. அதே நேரம், ஷெட்டி டிராபிக்கில் சிக்கிக் கொண்டிருந்தார்.

அவர் சரியான நேரத்துக்குத்தான் கிளம்பினார். ஆனால் வழியில், அவர் கார் சிறிய விபத்துக்குள்ளாகவே, பிரச்சனை போலீஸ் ஸ்டேஷன் வரை போகவே, எவ்வளவு முயன்றும், அவரால் அங்கிருந்து கிளம்ப முடியவில்லை.

விபத்தில் சிக்கியதோ தனியார் டிடெக்டிவ், மற்றும் பாதுகாப்பு நிறுவனத்தின் பிரதான பொறுப்பில் இருப்பவர்.

எனவே, ஷெட்டியால் பணம் கொடுத்துக் கூட வெளியே வர முடியவில்லை. கிட்டத்தட்ட நான்குமணிநேரம் போராடிய பிறகு, விமான நேரமும் தவறிய பிறகுதான், அவர் கொஞ்சம் இரங்கி வந்து, எப்ஐஆர் போடாமல் இருக்கச் சம்மதித்து, இரு தரப்பிலும் சமாதானமாகச் சென்றார்கள்.

உச்சக் கோபத்தில் வீடு வந்து சேர்ந்தார் ஷெட்டி. அவர் எதிரில் வந்த மனைவி, அவரது முகத்தைப் பார்த்துவிட்டு, அப்படியே ஒதுங்கிப் போய்விட்டாள். இப்பொழுது அவரிடம் பேசினால், தனது நிலை கவலைக்கிடமாகிவிடும் என்பது அவருக்குத் தெரியும்.

அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். கையில் இருந்த பாஸ்போர்ட், டிக்கெட் அனைத்தையும் விசிறியடித்தார். அவை மூலைக்கொன்றாகப் போய் விழுந்தது. அப்படியும் அவர் கோபம் தணியவில்லை.

'இப்படியொரு வாய்ப்பு இனி கிடைக்குமா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே. இந்த தெய்வா வேற, மகளுக்குத் தருணின் மேலே ஒரு ஈர்ப்புன்னு சொல்லிட்டா. தருணும் அவளை விரும்புறானாம்.

இந்த ரெண்டு நாளில் அவளை நெருங்கவில்லை என்றால், இனிமேல் அவளை நெருங்கவே முடியாது. அவனுடன் நடித்த எந்த நடிகையையும், இதுவரை யாராலும் படப்பிடிப்பு முடியும்வரை, நெருங்க முடிந்ததில்லை.

அப்படியிருக்க, லயாவின்மேல் காதலே இருக்கிறதென்றால், இனிமேல் யாராலும் அவளை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்பதுதான் உண்மை. அடுத்த விமானத்தில் சீட் இருக்கிறதா என்று பார்த்தால்..., அனைத்து விமானங்களும் நிரம்பி வழிந்தது.

இதென்ன டெல்லியா, கல்க்கத்தாவா..? காரை எடுத்துக்கொண்டு கிளம்ப, ஆத்திரம் அவர் கண்ணை

மறைத்தது. வேறு மார்கமாக, சுற்றியாவது செல்லும் விமானங்களில் டிக்கெட் இருக்கிறதா என்று, அவரது பிஏ வலை வீசித் தேடிக் கொண்டிருந்தார்.

தருணின் அலைபேசி ஒலிக்க, எடுத்து செவிமடுத்தான். "சார்... நீங்க சொன்ன மாதிரி ஷெட்டியைத் தடுத்துட்டோம். நம்ம பிளான் சக்சஸ், ஆனால் இப்போ அவங்க பிஏ, வேற வழியா டிக்கெட் கிடைக்க, ட்ரை பண்ணிட்டு இருக்காங்க. சென்னையில் இருந்து டிக்கெட் எதுவும் ரெண்டு நாளுக்கு இல்லை.

ஆனால் மும்பை, டெல்லியில் இருந்து அவங்களுக்கு டிக்கெட் கிடைக்கலாம்", மோகன் சொன்னச் செய்தியைக் கேட்டு, மகிழ்ந்தான் தருண்.

"அதுவும் எப்படியும் ரெண்டு நாள் ஆகும். அதற்குள் நான் அங்கே போய்டுவேன். இதுவரை நீங்க செஞ்ச எல்லா உதவிக்கும் நன்றி. பேமென்டை உங்க அக்கவுண்ட்டில் போட்டுடுறேன்", சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

இதுவரை மனதை அழுத்திய பாரம் குறைந்ததை உணர்ந்தான். லயாவின் அருகில் தான் செல்லும்வரை, முழுதான நிம்மதி கிடைக்காது என்பதையும் உணர்ந்தான். ஷெட்டிக்கு, தான் செய்த வேலை தெரியவருமா? என்ற கவலையே அவனுக்கு இல்லை. இப்பொழுது விதி யாருக்குச் சாதகமாக முடிவெடுக்கப்போகிறது என்பதுதான் தெரியவில்லை.

கதவு - 27

காலில் சக்கரம் கட்டிச்

சுழலும் வேளையிலும்

மனதின் மூலையில்

சுழலும் உன் நினைவு

காதலாய்.....

விமானப்பயணம் முடியும்வரை எதை எதையோ பேசியவாறு தோழிகளாகி விட்டார்கள் இருவரும். லயாவிற்கு விவியின் மேல் இருந்த பயம், கொஞ்சம் காணாமல் போயிருந்தது. மனதில் இருப்பவை அனைத்தையும், அவளிடம் கொட்டிக் கவிழ்த்தாள்.

விவிக்கே, அவளது இந்த குணம் கொஞ்சம் வியப்பை அளித்தது. தருண், கண்மணி, என அவளுடன் பழகும் மற்ற அனைவருமே கொஞ்சம் எச்சரிக்கை உணர்வோடு பழகுவது, அவளுக்குத் தெரியும். இதில் தருண் ரொம்பவே வித்தியாசமானவன், உன்னால் முடிந்தால் எதை வேண்டுமென்றாலும் செய்துகொள், அதை எப்படி சமாளிப்பது என்று எனக்குத் தெரியும் என்ற பாவனையில் இருப்பான்.

கண்மணியோ, எதையுமே வெளிப்படையாகப் பேசவே மாட்டாள், விவியாகக் கேட்டாலும், அவளை எச்சரிக்கை பார்வை பார்த்தவாறேதான் பதில் சொல்லுவாள்.

லயாவோ இதுவரை விவியை பார்த்த வேளைகளில் எல்லாம் கொஞ்சம் மிரண்ட பார்வை பார்ப்பாள். இல்லையேல் இவளை நேருக்குநேர் பார்ப்பதைத் தவிர்ப்பாள். இன்று விவியுடன் பேசும்பொழுதும், பெரும்பாலான நேரம் அவளது தாயைப் பற்றிய பேச்சுதான் அதிகம் இருந்தது.

தருணைப்பற்றி பேசும் பொழுது, கண்களில் ஆசையும், நம்பிக்கையும் மின்னினாலும், ஒரு சஞ்சலம் தோன்றி மறைவதை, விவி கண்டுகொண்டாள். இதைப்பற்றி, தான் பேசவேண்டும் என்று முடிவெடுத்தாள்.

பின்னர் ஒரு வழியாக, அவர்களது பயண நேரம் முடிவுக்கு வந்து, ஹோட்டலுக்கு வரும்வரை என்ன பேசினார்கள் என்று லயாவிடம் கேட்டால், ஒன்றுமில்லை என்பாள். அதுவே விவியிடம் கேட்டால், லயாவின் சரித்திரமே என்கையில் என்பாள்.

அந்த அளவு, லயாவுக்குத் தெரியாமலே, அனைத்து விஷயங்களையும் வாங்கிவிட்டாள். அதில் அவள் கவனித்த மிகப்பெரிய விஷயம், தெய்வா பணத்துக்காக எதையும் செய்யத்தயங்க மாட்டாள். பணத்துக்காகவும், புகழுக்காவும் மட்டுமே மகளை சிறு வயதில் இருந்தே சொல்லி வளர்த்ததும்,

அதில் பணம் இவ்வளவு வரும், பெயர் கிடைக்கும், புகழ் உலகம் முழுக்க பரவும், இதுதான் வாழ்வின் ஆதாரம் என்பதைப்போல் சொல்லி வைத்திருக்கிறாள். சினிமாவின் இருண்ட பக்கத்தை மகளுக்கு அறிமுகப்படுத்தவே இல்லை தெய்வா.

ஆனால் தனக்காக, தாய் எதையோ திரை மறைவில் செய்கிறாள் என்பதுவரை லயாவுக்குத் தெரிந்திருக்கிறது. அவளுடன் நடிக்கும் நடிகர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட மகளிடம் பேச மாட்டாள், அப்படியே பேசினாலும், அவர்கள் தொல்லை தந்தால், தான் பார்த்துக் கொள்வதாக அவளுக்கு நம்பிக்கையை விதைத்திருக்கிறாள்.

எனவேதான் லயா எதற்குமே தாயை சார்ந்தே இருக்கிறாள். தாய் அனைத்தையும் பார்த்துக் கொள்வாள், தாயால் முடியாதது எதுவும் இல்லை, தாயை மீறி தனக்கு எதுவும் ஆகாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவள் ஆழ் மனம் வரை பதிந்திருக்கிறது.

அவளுக்கு சினிமா உலகம் பற்றி முழுதாக தெரிந்திருப்பதால், அவள் வாயில் இருந்து வரும் அனைத்துமே உண்மை என்பதை கண்மூடித் தனமாக நம்புகிறாள் லயா. அவளது இந்த குணமே, தருணை பற்றிய தாயின் கூற்றை நம்பச் சொல்லுகின்றது.

இது ஒருபுறமிருக்க, காதல் கொண்ட மனமோ, அவன் அப்படியில்லை என்று வாதாடுகிறது. அப்படியே வாதாடினாலும், அதன்குரல் அவள் செவிகளைத் தீண்டும் முன்னர், தாயின் முகம் நினைவில் வந்து தடுக்கிறது.

தன் தவிப்பையும், சந்தேகங்களையும் யாரிடம் கேட்பது என்று கூட அவளுக்குத் தெரியவில்லை. சினிமா உலகில் பலர் தற்கொலை செய்து சாவதற்கு, இதுவும் ஒரு முக்கிய காரணம், மன அழுத்தம். மனதில் இருப்பதை யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாத நிலை தான்.

அப்படியே பகிர்ந்து கொண்டாலும், எங்கே தங்கள் ரகசியங்களை மற்றவருக்குச் சொல்லிவிடுவார்களோ என்ற அவ நம்பிக்கை, பயம், எல்லாம் சேர்த்து அவர்களை இப்படி ஒரு பெரிய முடிவை, சுலபமாக எடுக்க வைத்துவிடுகிறது.

விவிக்கு, லயாவை இன்னும் கொஞ்ச நாள் இப்படியே விட்டால், அவளும் தற்கொலை செய்துகொள்ள அதிகநாள் ஆகாது என்பது புரிந்தது. இவள் ஒருத்தியிடம் மட்டுமாவது, தான் உற்ற தோழியாக நடந்துகொள்ளவேண்டும், பத்திரிகைக் காரியை வெளியே வரவிடக் கூடாது என்று விரும்பினாள்.

ஆனால் அது எந்த அளவு சாத்தியம் என்பது அவளுக்கே தெரியவில்லை. அது முடியாவிட்டாலும், லயாவுக்கு ஒரு சிறந்த வடிகாலாக, தன்னால் இருக்கமுடியும் என்று எண்ணினாள். முடிவு எடுத்த பிறகு லயாவிடம் பேசுவது இன்னும் இலகுவாக இருந்தது.

"லயா....., இந்த உலகத்திலேயே யாரை நீங்க முழுசா நம்புறீங்க?", விவி யோசனையாகக் கேட்டாள்.

"என் அம்மாவைத்தான்.....", நொடி கூடத் தாமதிக்காமல் வந்து விழுந்தன அவள் வார்த்தைகள்.

"இல்ல... நீங்க உங்களோட நம்பிக்கையை, தப்பான இடத்தில் வச்சு இருக்கீங்க. நான் சொன்னதில் உங்களுக்குக் கோபம் வரலாம், ஆனால் அதுதான் உண்மை. நடுவில் கொஞ்சநாள் சரியா யோசிக்கத் துவங்கி இருந்தீங்க, உங்களோட அந்த மாற்றம்தான் தருணை உங்களுக்குப் பெற்று தந்தது.

இப்போ மறுபடியும் நீங்க யோசனையை முடக்கும் பொழுது, இழப்பு உங்களுக்கு மட்டும்தான் என்பதை புரிஞ்சுக்கணும். இதற்கு முன்னாடி இருந்த உங்க அம்மாவையும், நேற்று உங்களிடம் பேசிய உங்க அம்மாவையும், கொஞ்சம் கம்பேர் பண்ணிப் பாருங்க, உண்மை உங்களுக்கே புரியும்", சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

"என்ன சொல்ல வாறீங்க.....? எனக்குப் புரியலை", அவளால் யோசிக்கவே முடியவில்லை.

"எல்லா நேரமும், அடுத்தவங்க மூளையிலேயே வாசம் செய்யணும்னா, உங்களுக்கு கடவுள் எதுக்கு மூளையை கொடுத்திருக்கார். கொஞ்சம் அதை யூஸ் பண்ணுங்க", அவள் சொல்லத் தயாராக இல்லை.

"நீங்க ஷெட்டி இங்கே வாறதைப் பத்தி சொல்லுறீங்களா? அதான் அவர் நம்மளோட வரலையே. இதிலேயே தெரியலை, ஒண்ணும் இல்லன்னு", இப்படிச் சொன்னவளை, 'ஐயோ பாவமே....., உனக்குப் பட்டால் தான் புத்திவரும்' என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தவள்,

'உன் அம்மாவுக்கு பதிலாக நான் வருகிறேன், உன் பாதுகாப்புக்கு ஆட்கள் வருகிறார்கள்....., இவ்வளவு செய்தவனுக்கு, ஷெட்டியை வர விடாமல் செய்யவா முடியாது? உனக்கு உண்மையாகவே மூளை என்ற வஸ்துவை கடவுள் கொடுக்கவே இல்லையோ', என்பதுபோல் பார்த்துவிட்டு, விஸ்தாரமாக இருந்த அந்த அறையில், ஒரு கோடியில் கிடந்த ஸோபாவில் தன்

பெட்டியை வைத்துவிட்டு, மாற்றுடையை எடுத்துகொண்டு குளிக்கச் சென்றாள்.

குளித்துவிட்டு, போன் செய்து தனக்கு வேண்டியதை ஆர்டர் செய்துவிட்டு ஸோபாவில் கால்நீட்டிப் படுத்துக் கொண்டாள் விவி.

விவியின் அந்தப் பார்வைக்கு அர்த்தம் புரியாமல் குழம்பியவள், அவள் செய்கைகளை ஒரு பார்வையாளராக பார்த்துக் கொண்டே இருந்தாள். லயா கலையப்போவதில்லை என்பதை உணர்ந்து, "லயா, போய் குளிச்சுட்டு ஏதாவது ஆர்டர் பண்ணிச் சாப்பிடு, இல்லன்னா யோசிக்க சார்ஜ் இல்லாமல் மூளை செத்துடப் போகுது", நக்கலாகச் சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் பேசியதைக் கேட்ட பிறகு, அங்கிருந்து நகர்ந்து குளிக்கச் சென்றாள்லயா. பின்னர் உற்சாகமாக, தனக்கு வேண்டியவற்றை ஆர்டர் செய்து சாப்பிட்டுவிட்டு, படுக்கையில் புரண்டாள்.

கொஞ்சம் உறங்கி எழுந்தார்கள் இருவரும். லயா முதல் வேலையாக, தாய்க்கு அழைத்தாள். இருவரின் நலம் விசாரிப்புக்கள் முடிந்தவுடன், அலை பேசியை ஸ்பீக்கருக்கு மாற்றினாள் விவி. "ஏன் இப்படி...?", என்று கேட்கப்போன லயாவை, பார்வையாலே தடுத்தாள்.

"கண்ணு.... பிரயாணம் எல்லாம் சவுகரியமா இருந்துதா? எதுவும் பிரச்சனை இல்லையே? அம்மா இன்னும் ரெண்டு நாளில் வந்துடுறேன், அதுவரை உனக்கு ஏதாவது தேவைன்னா, கவலையே படாதே. ஷெட்டி ஐயா அங்கேதானே இருக்கார், எல்லாம் அவர் பாத்துப்பார். கொஞ்சம் பாத்து, பதவிசா நடந்துக்கோ கண்ணு", மகளிடம் நாசூக்காக ஷெட்டியின் வரவைப் பற்றிக் கேட்டாள் தெய்வா.

"சரிம்மா....., ஆனா ஷெட்டி சார் வரலையே. நான் இப்போ.....", விவியை பற்றிச் சொல்லப்போனவள், விவியின் கையசைப்பில் அதை சொல்லாமல் விடுத்தாள்.

"என்னது..... ஷெட்டி வரலையா...? என்ன உளறுற...? நீ முதல்ல வை, நான் உன்கிட்டே பிறகு பேசுறேன்", மகளின் தடுமற்றத்தையோ, தயக்கத்தையோ கவனிக்கும் நிலையில் தெய்வா இல்லை. அவள் நினைப்பனைத்தும், ஷெட்டி செல்லவில்லை என்ற அந்தச் சொல்லையே சுற்றி வந்தது.

உடனடியாக ஷெட்டிக்குத் தொடர்புகொள்ள, அவரோ அதை எடுத்த வேகத்தில் பொரிந்தார். இறுதியில் அனைவருமே இரண்டு நாள் கழித்து மொரிஷியஸ் கிளம்பிச் சென்றார்கள்.

இந்த இரண்டு நாளில், விவியின் தினசரிப் பத்திரிகை, வாராந்திரப் பத்திரிகை அனைத்திலும் ஒரு செய்தி மிகவும் பிரபலமாக அடிபட்டது. அது என்னவென்றால், தருண், கண்மணியை அவன் தங்கையாகச் சுவீகாரம் செய்தது, கண்மணி, வாசுவின் பதிவுத் திருமணம் இரண்டும்தான்.

விவி உடனடியாக இந்த விஷயங்களை அறிந்தாலும், லயாவிடம் எதையும் சொல்லவில்லை. இந்த இரண்டு நாளில் லயா, தாயைத் தேடியதை விட, தருணைத்தான் அதிகம் தேடினாள். ஒருமுறை அவள் மனம் கேட்காமல் அவனுக்குத் தொடர்பு கொள்ளவும் முயன்றாள்.

ஆனால் முனைப்பாக தங்கையின் லீகல் வழி முறைகளை, அவன் கவனித்துக் கொண்டிருந்தபோது, கமலம் அவனிடம் மேலும் ஒன்றைச் சொன்னார் . அதாவது, பெருமாளின் உடல்நிலை கொஞ்சம் ஆட்டம் கண்டு விட்டதால், அவருக்குத் தன் உடல்நிலைக்குறித்த பயம் ஏற்பட்டு, மகளின் திருமணத்தை உடனே நடத்தி விட வேண்டும், மாப்பிள்ளையும் ரெடியாக இருப்பதால், இதுவும் உடனே நடக்க வேண்டும் என்றும்அன்புக்கட்டளை இட்டு விட்டதால், மிகவும் அவசரமாக, சிம்பிளாக நடந்தேறியது, வாசு -கண்மணி யின் திருமணம் .

அவளது திருமணம், பத்திரிகைக் காரர்களின் தொல்லை, ரசிகர்களின் படையெடுப்பு, என இரண்டு நாளில் கொஞ்சம் திணறித்தான் போனான்.

எவ்வளவுதான் செக்யூரிட்டிகள், உளவு அதிகாரிகள், நட்பு வட்டங்கள் என இருந்தாலும், சில இக்கட்டுகளில், தன் ரசிகர்களை அடக்க, அவன்தான் முன்னே நிற்கவேண்டிய கட்டாயம். அந்த இரண்டு நாட்களில் தூங்கக் கூட முடியவில்லை அவனால்.

இறுதியாக கொஞ்சம் மூச்சுவிட்டு நிமிரும் வேளையில், கிளம்பவேண்டிய நாள் வந்துவிட்டது. இவ்வளவு இறுக்கமான வேளையிலும், லயாவைப் பற்றிய செய்தியையும் விவி மூலம் அறிய மறக்கவில்லை. தனது தணியாத ஆவலை அடக்கிக்கொண்டு, லயாவிடம், நேரில் சென்று பேசவே, அவன் விரும்பினான் .

இவனது ஒதுக்கத்தை ஏற்க முடியாமல், தாய் சொன்னதைப்போல் இவன், தன்னைவிட்டு விலகிவிட்டதாக எண்ணினாள் லயா. அந்த நினைவே அவளைக் கொன்று போட்டது. முதல்நாள் என்னவோ, அவனிடமிருந்து தப்பிவிட்டோம் என்று எண்ணினாள். அதன் பிறகு கடந்த ஒவ்வொரு நொடியிலும், அவனது அழைப்புக்காக ஏங்கினாள்.

அது வராமல் போகவே, அவன்மேல் இருந்த நம்பிக்கைகள் கரையத் துவங்கின. தெய்வவோ, ஷெட்டி செல்லாமல் போகவே, அவரைவிடக் கோபமாக அவள் இருந்தாள். 'என்ன மனிதன் இவன்...? இப்படியா கோட்டை விடுவான்...?', மனதுக்குள் அவரைக் கரித்துக் கொட்டினாள்.

ஷெட்டியோ, இனிமேல் லயாவைத் தொடும் வாய்ப்பு கிடைக்குமா? அப்படியே கிடைத்தாலும், தருண் அதற்கு அனுமதிப்பானா? அவன் என்ன அனுமதிப்பது, அவளுடைய அம்மாவே ஒன்றும் சொல்லாதபோது, அவனெல்லாம் பிசாத்து.

அவனை எப்படி அடக்கவேண்டும் என்று எனக்குத் தெரியும்', தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டார்.

அனைவரும் ஒவ்வொரு மனநிலையில் கிளம்பிச் சென்றார்கள். தருண் லயாவை காணும் ஆவலில் இருந்தான். ஆனாலும், விவி சொன்ன அவளது மாற்றத்தை அவன் எதிர் பார்த்ததுதான். அவளது தாய் என்ன சொன்னாலும் அவள் நம்பிவிடுவாள் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும்.

தாராவும் அவர்களுடன் கூட்டு என்பது அவனுக்குக் கொஞ்சம் எரிச்சலையும், கோபத்தையும் கொடுத்தது. இவர்கள் நிலை இப்படி இருக்க, இந்தப் பயணத்தை மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கியது, வாசுவும் - கண்மணியும் மட்டும்தான்.

இதை தங்களது தேனிலவுப் பயணமாகவே அவர்கள் எண்ணினார்கள். கமலம் அவர்களை வெளிநாட்டுக்கு உடனடியாக அனுப்ப ஒப்பவில்லைதான். ஆனால் வேறு வழி அவருக்கும் இருக்கவில்லை. இந்தப் படத்துக்கு, உடனடியாக ஒரு மேனேஜரையும், மேக்கப் கலைஞரையும் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமில்லை என்று தருண் வாதாடவே, ஒப்புக் கொண்டார்.

வாசுவிற்கு ஒரே கொண்டாட்டம். திருமணம் முடிந்த இந்த ஒரு நாளில், அவன் பொண்டாட்டி தாசனாகி இருந்தான். சாப்பாட்டிற்கு மட்டுமே, அவளை அறையை விட்டு வெளியே செல்ல அனுமதித்தான்.

"ஐயோ.... ஏன் இப்படியெல்லாம் செய்யிறீங்க? அம்மா என்ன நினைப்பாங்க? அண்ணா என்ன நினைப்பான்?", அவனுடன் இழைந்தவாறே, கொஞ்சலாகக் கேட்பாள். அவளது பேச்சு எதுவுமே அவன் காதில் விழாது, மாறாக அவளது கொஞ்சல் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டு, அவன் வேலையைத் தொடர்வான்.

வாசுவின் செயலை கேலிசெய்ய தருணும் எண்ணுவான், ஆனால் கண்மணியின் வெட்கப்பார்வையும், தயக்கமும், அவனை தடுத்துவிடும், கண்மணி இல்லாமல், தனியாக வாசுவைப் பார்ப்பதே அரிதாகியது.

மொரீஷியஸ் வந்து இறங்கியதும் அனைவரும் கூட்டாக, அவர்களுக்கு ஒதுக்கியிருந்த அறைக்குச் சென்றார்கள். விவி அதற்கு முன்பாக, தருண் அவளுக்கு ஏற்பாடு செய்த அறைக்குச் சென்றுவிட்டாள். அது, ஏற்கனவே கண்மணிக்காக புக் செய்திருந்த அறை.

அவளுக்கும் வாசுவுக்கும் திருமணம் முடிந்துவிடவே, வாசுவின் அறையில் அவள் தங்குவதாக முடிவு செய்யப்பட்டது. விமான நிலையத்திலேயே கதிரவன், "இன்னைக்கு டே, நைட் எல்லோரும் ரெஸ்ட் எடுத்துக்கோங்க, நாளைக்குக் காலையில் ஷூட்டிங் இருக்கு", என்று சொல்லியிருந்தான்.

வாசுவும் - கண்மணியும் ஹோட்டலுக்குச் சென்றதுமுதல், அவர்களின் தேனிலவு வேலையை கன கச்சிதமாகச் செய்ய, தருண் மட்டும் தனித்திருந்தான். லயாவின் அறைக்குப் பக்கத்து அறைதான் தருணின் அறை. லயாவின் அறைக்கு அந்தப்பக்கம், ஷெட்டியின் அறை இருந்தது. வாசு, கண்மணியின் அறை, அடுத்த தளத்தில் இருந்தது.

லயாவின் அறையைத் தாண்டிச் செல்லும் வேளையில், அவளைக் காணவேண்டி எழுந்த ஆவலை, அவன் பின்னால் வந்த, அவளது தாயை எண்ணி அடக்கினான். ஆனால் லயாவோ அது முடியாமல், வாசலில் நின்று அவனை இமைக்கக் கூட மறந்து, பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பாப்பா, வாசலில் எல்லாம் நின்னுகிட்டு, நானே வர மாட்டேனா? உள்ளே போ", மகளின் பார்வையை உணர்ந்து, கிட்டத்தட்ட கத்தினாள். தாயின் குரல் கேட்கவே, அவளும் உள்ளே சென்றுவிட்டாள்.

தருண் தன் அறைக்குச் சென்று, அனைவரும் உறங்கும் நேரம்வரை கொஞ்சம் காத்திருந்தான். லயாவின் விஷயத்தை ஆறப்போட அவன் தயாராக இல்லை. மெதுவாகச் சென்று, லயாவின் அறைக் கதவை, ஒற்றை விரலால் தட்டினான்.

பயண அலுப்பில், தெய்வா நன்கு உறங்கிவிட, அவனின் அழைப்புக்காகவே காத்திருந்தவள் போல், கதவை அவள் திறக்க, அவளை ஒற்றைக் கையால் அணைத்து, சட்டென, திறந்திருந்த தன் அறைக்குள் நுழைந்தான் தருண். அவனது இந்த வேகத்தை அவள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், வந்திருப்பது தருண் என்பதால் அவனது கைகளுக்குள் தன்னைக் கொடுத்தவாறு, அசையாமல் இருந்தாள்.

அறைக்குள் நுழைந்த வேகத்தில், அவள் இதழ்களை, ஒரு வேகத்தில் தன் இதழ்களால் தீண்டினான். அவன் இதழ்களுக்காகவே காத்திருந்தவள்போல், அவன் தீண்டலில் கரைந்தாள். பிரிந்திருந்த காதலர்களின் வேகம், அவர்களின் செய்கையில் இருந்தது.

தன் மேனியில் உரிமையாகத் தவழும் அவன் கரங்களை, தடுக்கக் கூடத் தோன்றாமல், அவன் செய்கையில் மயங்கி இருந்தாள் லயா. அவள் நிலை உணர்ந்தும், அவள் பெண்மையைக் களங்கப்படுத்த முயலாமல் கண்ணியம் காத்தான் அவன்.

ஆனாலும் அவள் அருகில் மட்டும், தன் புலன்கள் தன் கட்டுப்பாட்டை மீறி, உணர்ச்சியின் பிடியில் சிக்குவதை அவனும் உணர்ந்தே இருந்தான். தன் கைகள் உணரும் அவள் பெண்மையின் மென்மையில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான் அவன்.

தன் பெண்மை அவன் கைகளுக்குள் கரைவதைக் கூட உணராமல், எங்கே தான் கைகளை விலக்கினால், அவன் சென்றுவிடுவானோ என்ற எண்ணத்தில், அவன் முதுகில் கை கொடுத்து, தன்னோடும் சேர்த்து இன்னும் இறுக்கிக் கொண்டாள்.

நிலைமை கை மீறிச் செல்வதை உணர்ந்து, தன்னை முயன்று கட்டுப்படுத்திக்கொண்டு, அவளிடமிருந்து, தன்னை மீட்டுக் கொண்டான் தருண். அவளை விட்டு விலகும் முன்னர், அவளை அழுந்த முத்தமிட்டுவிட்டே

விடுவித்தான். அவன் விலகவே, அவனைக் கேள்வியாகப் பார்த்தாள்.

அவள் பார்வையில், 'உன்னை, உன் மனசை, நீயே எப்போதான் முழுசா புரிஞ்சுக்கப் போற', என்ற பாவனையில் அவளைப் பார்த்தான்.

"எப்படி இருக்க லவி....? ரெண்டுநாள் எப்படிப் போச்சு...?", சாதாரணமாகப் பேச்சைத் துவங்கினான்.

அவன் தீண்டலின் தாக்கத்தில் இருந்து இன்னும் விடுபடாமல், அவனைக் கேள்வியாகப் பார்த்துவிட்டு, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் நிலை உணர்ந்து, அவளை அழைத்துவந்து படுக்கையில் அமர்ந்தான்.

"நீங்க எப்படி இருக்கீங்க....?", ஒரு வழியாகக் கேட்டுவிட்டாள்.

"ரெண்டு நாளில் என்ன என்னவோ நடந்துடுச்சு. ஆனால் எல்லாம் நல்ல விஷயம்தான். இங்கே உனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லையே. விவி உன்னை நல்லா பாத்துக்கிட்டாளா? வாய் ஓயாமல் பேசுனியாம் அவகிட்டே. என்கிட்டே பேசவே மாட்டிக்க", குறும்பாகக் கேட்டான். அப்படிக் கேட்டாலும், உன் மனதில் என்ன இருக்கிறது என்று சொல், என்ற பாவனை அதில் இருந்தது.

அதன் பிறகுதான், லயாவிற்கு, கண்மணியைப் பற்றியும், தன்னைப் பற்றியும் வந்த கிசு கிசு பற்றிய நினைவே வந்தது.

"நான் ஒண்ணு கேட்டால் உண்மையைச் சொல்லுவீங்களா? கண்மணி யார்...?", தயக்கமாகவே கேட்டாள்.

"கண்மணி என்னோட தங்கை", தயக்கமே இல்லாமல் உண்மையைச் சொன்னான்.

"முந்தி வேற மாதிரி பத்திரிகையில் வந்துதே", சந்தேகமாகக் கேட்டாள்.

"பத்திரிகையில் வாற செய்தி எல்லாம் சரியா இருக்கணும்னு கிடையாதே. இவ்வளவு நாள் இந்தத் துறைல இருக்க, இதுகூட புரிஞ்சுக்கலையா நீ", அவன் குரலில் கொஞ்சம் கோபம்.

அவன் கோபத்தைத் தவறாக எடுத்துக் கொண்டாள். "உங்ககிட்டே வாற எல்லோரையுமே, தங்கைன்னுதான் சொல்லுவீங்களாம்...?", பெண்மைக்கே உரிய பொறாமை அவள் குரலில். அவள் கேள்வியில், அவளுக்குச் சந்தேகம் என்ற முடிவுக்கு அவன் வந்தான்.

"உன்கிட்டே, நீ என்னோட தங்கைன்னு சொன்னதா எனக்கு ஞாபகம் இல்லை", கிட்டத்தட்ட கத்தினான். என்னதான் அவள் எடுப்பார் கைப்பிள்ளை, என்று தன்னையே சமாதானம் செய்தாலும், உரிமையானவளின் சந்தேகம், அவனுக்குக் கோபத்தைத்தான் தந்தது.

அவன் பதிலில் திகைத்தாள் அவள். ஆம் அவளிடம் ஒரு முறை கூட, தங்கை என்று சொன்னது இல்லை. எப்பொழுதும் உரிமையோடுதான் நடந்து கொள்வான். தன் காதலை தயக்கமே இல்லாமல் சொன்னான், அவள் பெண்மையை ஆள விரும்பாமல், விலகி நின்றான். இவை அனைத்தும் அவளிடம் மட்டும்தான்.

"ஒருவேளை, நீங்க என்னைத் தங்கைன்னு சொன்னால், நான் அதையே கெட்டியா பிடிச்சுப்பேன்னு நீங்க நினைச்சீங்களோ என்னமோ, மத்தவங்களை மாதிரி அண்ணான்னு சொல்லிட்டு, என்னால் உங்க கூடப் படுக்க முடியாதுன்னு, நீங்க நினைச்சு இருக்கலாம்.

அதான் கண்மணின்னு ஒருத்தியை நாலு வருஷமா வச்சுட்டு, இப்போ தங்கைன்னு சொல்லுறதிலேயே தெரியுதே. அதனால்தான் அந்த டயலாக்கை நீங்க என்கிட்டே சொல்லலை போல", தாய் கக்கியிருந்த விஷம் அனைத்தையும், அவனிடம் கக்கினாள்.

அவளது இந்தப் பேச்சில் தன் கட்டுப்பாடு மொத்தமும் இழக்க, ஓங்கி ஒரு அறை விட்டான். அவன் விட்ட அறையில்

பொறி கலங்கி அமர்ந்திருந்தாள் அவள். "என்ன சொன்ன, அண்ணான்னு சொல்லிட்டுப் படுக்குறதா? என்னை அப்படித்தான் நினைச்சுட்டு இருக்குறியா? பாக்குற பொண்ணுங்க கூட எல்லாம் படுக்குறவனா நான் .....,

கண்மணி....., ஏய்....., அவ என் சொந்தத் தங்கச்சிடி. வாசுவுக்கும் அவளுக்கும் கல்யாணம் ஆயிடுச்சு தெரியுமா? வாசுதான் அவ புருஷன். அவளைப்போய்.....", தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

"வேண்டாம்.... நம்ம உறவை இத்தோட முடிச்சுக்கலாம், உன்னோட இந்தக் குணம் நம்மளோட ஒவ்வொரு நாளையும் நரகமாக்கும். நீ உன் அம்மாகூடவே இரு, அவ என்ன சொல்லுறாளோ அதையே கேளு. எவன்கூட போகச் சொல்லுறாளோ அவன் கூடப் போ. உனக்கெல்லாம் பட்டால்தான் புத்திவரும்.

நானும் பொறுத்துப் பொறுத்துப் போறேன், என் பொறுமையை ரொம்ப சோதிக்கிற. இப்போ....., இப்போ....., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி....., அப்படியே சொக்கிப் போய் நின்னியே, உன்னைத் தொடணும்னு நினைச்சுருந்தால் எனக்கு எவ்வளவு நேரம்டி ஆயிருக்கும்.

அப்படிச் செய்யாமல் விலகி நின்னேன் பாரு. நீ.... இதைச் சொல்லி, நான் கேட்டுத்தான் ஆகணும். உன் அம்மா உன்னைத் தனியா அனுப்ப போறான்னு தெரிஞ்சு, விவியை கூட அனுப்பி, என் செக்யூரிட்டி ஆட்களையும் அனுப்பி, உன்னைப் பொத்தி பாதுக்காக்குறது, கேவலம், உன்னோட இந்த உடம்பைத் தொடதுக்காகவா?

அதான் நீயே சொல்லுறியே எனக்கு தங்கச்சிங்கன்னு சொல்லிட்டு சுத்துறாளுங்களே, அவங்க கிட்டே போக மாட்டேன். சரி....., இந்த நியூஸ் எல்லாம் உனக்கு எப்படித் தெரியும்.....?", கர்ஜித்தான் அவன்.

அவள் அமைதியாக இருக்கவே, "சொல்லுடி.....", அவனது இந்த குரலில் நடுங்கித்தான் போனாள் லயா.

அவன் நின்ற தோரணை அவளைக் கலங்கடிக்க, "அ....அ..ம்ம்மா...", திக்கி, திணறிச் சொன்னாள். அந்த ஒற்றை வார்த்தையை சொல்லும் முன்னர், அவள் இதயம் தொண்டைக் குழியில் துடித்தது.

"என்ன...., ? உன் ஆத்தா சொன்னாளா.....? அவ எப்போ ஹீரோ பத்தியெல்லாம் உன்கிட்டே பேசத் தொடங்குனா?

அப்படியெல்லாம் பேசமாட்டாளே அவ....., இதையெல்லாம் யோசிக்க மாட்ட, ஆனா நான், அண்ணான்னு சொல்லிட்டு, பொண்ணுங்களை எல்லாம் தொடுவேன்னு, அவ சொல்லுவதை அப்படியே நம்புவ இல்ல....., நான் உன் கழுத்தை நெறிச்சுக் கொல்ல முன்னாடி, இங்கே இருந்து போய்டு. இனிமேல் எதுக்காகவும் என்கிட்டே வரக் கூடாது சரியா.

நம்ம உறவு இத்தோட முடிஞ்சுடுச்சுன்னு நினைச்சுட்டு வெளியே போ. உன்னைப்போய் தொட்டேனே இந்த உடம்பை என்ன செய்யன்னு எனக்குத் தெரியலை. உன்னை நினைத்த இந்த மனசு எரியுதுடி, இனிமேல் ஒரு நிமிஷம், நீ என் ரூமில் இருக்கக் கூடாது. அந்தத் தகுதியை நீ இழந்து, ரொம்ப நேரமாச்சு, போடி வெளியே", கோபத்தில் எரிமலையாகி, அவளைத்தரதரவென்று இழுத்து, கதவைத் திறந்து, அதே கோபத்தில் அவளை வெளியே தள்ளி கதவை அறைந்து சாத்தினான்.

அவள் வெளியே சென்று விழுந்ததைக் கூடக் கண்டுகொள்ளாமல், படுக்கையில் சென்று விழுந்தான். வெளியே விழுந்த வேகத்தில், ஒரு நிமிடம் லயாவுக்கு எதுவுமே தெரியவில்லை. தருணின் பேச்சிலும், செய்கையிலும், அவன் அடித்ததிலும் உறைந்திருந்தாள் அவள்.

ஆனால் கண்கள் மட்டும் அதன் வேலையைச் சரியாகச் செய்தது.

கதவு - 28

இதயத்தில் விழுந்த இடி

கண்களில் வழிகிறது

எவ்வளவு கண்ணீர் வழிந்தாலும்

வலியின் வேதனை மட்டும்

குறையவில்லையே.....

எப்படித் தங்கள் அறைக்கு வந்தாள் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. அனிச்சை செயலாக உள்ளே வந்தவள், படுக்கையில் விழுந்து குமுறி அழுதாள். பக்கத்துப் படுக்கையில் உறங்கும் தாய் விழித்துவிடக் கூடாதே என்ற கவலையில், தலைகாணியில் முகம் புதைத்து அழுதாள். அவளால் அழ மட்டுமே முடிந்தது. அவளது கண்ணீரால் அந்தத் தலைகாணியின் கனம் கூடியது.

அவள் இதயத்தை கசக்கி பிழியும் உணர்வு. எங்கே இதயம் வெடித்துவிடுமோ என்று அஞ்சினாள். நெஞ்சில் கைவைத்து அழுத்தி, வலியைக் குறைக்க முயன்றாள்....., மேலும் வலித்ததே தவிர குறையவில்லை.

என்ன வார்த்தை சொல்லிவிட்டான், எல்லாம் முடிந்ததாமே, இனிமேல் நமக்குள் எதுவுமே இல்லை என்று சொல்லிவிட்டானே, எப்படி முடிந்தது அவனால்....., அவனுக்கு என்னைப் பிரிவதில் கொஞ்சம் கூட வருத்தமே இல்லையா? அவன் என்னை விரும்பவே இல்லையா? அப்படி விரும்பியிருந்தால் பொய்யாகவேனும் அவனால் இப்படிச் சொல்லியிருக்க முடியுமா? நினைக்க நினைக்க உள்ளம் நைந்தது.

அவன் கொடுத்த முத்தத்தின் ஈரம் கூட உலரும் முன்னர், அவன் இதழ்கள் உதித்த வார்த்தைகள்....., நினைக்கையிலே இதயம் இரண்டாக பிளந்து, உயிர்விட மாட்டோமா என்று இருந்தது. இந்த வலியை

அனுபவிப்பதைவிட உயிர் விடுவது சுலபமாக இருக்கும் அவளுக்கு.

"நீ மட்டும் அவனை இப்படிச் சந்தேகப்படலாமா? அவன்மேல் நம்பிக்கை வேண்டாமா?", மனசாட்சியின் கேள்விக்கு அவளிடம் பதில்தான் இல்லை.

'கண்மணிக்குத் திருமணம் முடிந்துவிட்டதாகச் சொன்னானே, அது நிஜமா? எப்பொழுது முடிந்தது. என்னிடம் அண்ணா என்று சொன்னதில்லை என்று வேறு சொன்னானே, அப்படியென்றால்.....', யோசனையை விட, கண்ணீர்தான் அதிகமாக வந்தது.

அவன் பிரிவைச் சொன்ன இந்த நேரத்தில்தான், அவன்மேல் இருந்த காதலை, இன்னும் அதிகமாக உணர்ந்தாள். அவன் வேண்டும், அவன் இல்லாமல் இருக்க முடியாது, இதயத்தின் ஓலம், அவளை நிம்மதியாக நொடிகள் கூட இருக்க விடவில்லை.

யாரிடமாவது பேசியே ஆகவேண்டும்....., இப்படியே இருந்தால் எனக்கு ஏதாவது ஆகிவிடும்....., என்ன செய்ய.....? பயித்தியமே பிடித்துவிடும் நிலையில் இருந்தாள் அவள். எழுந்து சென்று, ஜன்னல் வழியாக குதித்துவிடுவோமா என்று கூட எண்ணினாள்.

அப்படிச் சாகும்பொழுது கூட, தருணின் காதலியாகச் சாக வேண்டும், இப்படி, அவனது மனத்துயருக்கு ஆளாகிவிட்டு சாகக் கூடாது என்று விரும்பினாள். அறைக்குள் மூச்சு முட்டும் உணர்வு, தள்ளாடி நடந்து கதவைத்திறந்து கொண்டு வெளியேறினாள்.

கால்போன திசையில் நடக்கத் துவங்கினாள். எதிரில் வந்த விவியைக் கூட அவள் கவனிக்கவில்லை. லயாவின் வெறித்த பார்வையும், தளர்ந்த நடையும், எதுவோ சரியில்லை என்பதை அவளுக்கு உணர்த்தியது.

அவளை அழைத்துக்கொண்டு, தன் அறைக்குச் சென்றாள் விவி. பிரிட்ஜில் இருந்து குளிர்ந்த நீரை எடுத்துக் கொடுத்தாள். குரல் கெட்டுவிடும், உடல்நிலை சீர்

குலைந்துவிடும் என்று எப்பொழுதும் குளிர்ந்த நீரைத் தவிர்ப்பவள், அன்று மறு பேச்சில்லாமல் வாங்கி அனைத்தையும் குடித்தாள்.

அவள் குடித்து முடித்து, சிறிது நேரத்திற்குப் பிறகு, "என்ன ஆயிற்று லயா?", விவியின் குரலில் இருந்த கரிசனையா, இல்லையென்றால் அவள் மனதில் இருந்த வலியா? உடலில் இருந்த பலவீனமா? எதுவோ ஒன்று அவளை ஓவென்று கதற வைத்தது.

எதற்கும் அவ்வளவு சீக்கிரம் கலங்காத விவியின் கண்களே கூட கலங்கியது. அவளைத் தாவி அணைத்துக் கொண்டாள். தோள் சாய ஒரு தோழி கிடைத்த ஆதரவில் அழுது ஓய்ந்தாள் அவள்.

"என்னன்னு, சொன்னால்தான் தெரியும் லயா", அவள் அழுகை குறையவே, அவள் தலையைக் கோதியவாறு கேட்டாள்.

"எல்லாம் முடிஞ்சுடுச்சு....., தருண், இத்தோட எல்லாம் முடிச்சுக்கலாம்னு சொல்லிட்டார். என்னை அடிச்சு, கதவுக்கு வெளியே தள்ளிட்டார். இனிமேல் அவரோட மூஞ்சியிலேயே முழிக்க கூடாதுன்னு சொல்லிட்டார்.

என்னால் தாங்கவே முடியலை. எனக்கு இங்கே வலிக்குது. காதலிச்சால் இப்படி வலிக்குமா? இதுவரை, காதல் தோல்வியில் நடிக்கச் சொல்லும்போது, இப்படி வலிக்கும்னு, எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால் ரொம்ப வலிக்குதே....., இந்த வலி போகவே போகாதா?

அப்போ தருணுக்கும் இப்படி வலிக்குமா? எனக்கு நீ இருக்க, அவருக்கு இப்போ யாருமே பக்கத்தில் இல்லையே....., இல்ல அவர்தான் என்னை மறந்துட்டேன்னு சொன்னாரே, அவர்தானே என்னை வெளியே தள்ளிவிட்டார், அவருக்கு வலிக்காது....., ஆனா எனக்கு ரொம்ப வலிக்குதே விவி.....", சொன்னதையே திரும்பச் சொல்லி, புலம்பி அழும் அவளை, எப்படிச் சமாதானம் செய்யவென்று தெரியவில்லை விவிக்கு.

"தருண் ஏன் உன்னை அடிச்சு ரூமை விட்டு வெளியே தள்ளினான்? நீ என்ன செஞ்ச?", பிரச்சனை என்னவாக இருக்கும் என்று தெரிந்தும் கேட்டாள்.

லயா உதடு பிதுங்க அழுகையினூடே, அனைத்தையும் சொல்லி முடித்தாள். 'இப்படித் தன் தலையிலேயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டாளே', என்று கவலைப்படத்தான் முடிந்தது விவியால்.

"லயா.... நேற்றே நான் அவ்வளவு சொல்லியும் நீ கொஞ்சம் கூட யோசிக்காமல் தருண் கிட்டே இப்படிப் பேசி இருக்கியே. ஒரு உண்மையைச் சொல்லவா, கண்மணி நிஜமாகவே அவரோட தங்கைதான்", அவளுக்குத் தெரிந்த உண்மைகளைச் சொன்னாள். அதோடு அவர்களின் பதிவுத் திருமணம் வரை அனைத்தையும் சொல்லிப் புரிய வைக்க முயன்றாள்.

"சரி, நான் கேட்பதற்கு பதில் சொல்லு, முதல் நாள் அவரோட ரூமிக்குப் போனப்போ அவர் என்ன சொன்னார்?", அவளை கவலையில் இருந்து கொஞ்சம் வெளியே வர வைக்க முயன்றாள்.

கொஞ்சநேரம் யோசித்தாள் பிறகு, "அவர் எதுவுமே சொல்லலை, நான்தான் ரொம்ப நேரம் யோசிச்சுட்டு இருந்தேன். அப்புறம்.....", கொஞ்சம் தயங்கியவாறே, "என்...என்னை, ஒரு மாதிரித் தொடுவீங்களான்னு கேட்டேன், அதுக்கு அவர், யார் உன்னை அப்படித் தொட்டதுன்னு கோபப்பட்டார்", அன்றைய பேச்சை அவளுக்குக் கொஞ்சம் விளக்கினாள்.

"லயா.... தருண் அப்போவே உன்னை விரும்பி இருக்கிறான் என்பதற்கு, இதைவிடப் பெரிய ஆதாரம் எதுவுமே வேண்டாம். நான் அவன் ரூமில் இருந்தப்போ, நானும் அவனும் ரொம்பக் கார சாரமா பேசிகிட்டோம். என்னைப்பற்றி முழுசா தெரியாமல், நீ இங்கே இருந்து போக மாட்டன்னு அவ்வளவு கோபமா சொல்லிட்டு வெளியே போனான்.

நானும் கொஞ்சம் பயப்படத்தான் செய்தேன். அவன் அறையை விட்டுத் தப்பிச்சு செல்லலாம்னு பார்த்தேன், ஆனால் என்னால் எதுவுமே முடியலை. பிறகு, ரெண்டு மணி நேரம் கழிச்சு உள்ளே ஒரு ட்ரேயோட வந்தவன் என்ன சொன்னான் தெரியுமா.....?

"ஹாய் சிஸ்டர், என்னைப் பத்தியும், என் படுக்கையறை ரகசியம் பத்தியும் தெரிஞ்சுக்கணும்னு உனக்கு ரொம்ப ஆசை இல்ல. இந்த ஒரு வாரத்தில், அதைக் கண்டிப்பா நீ புரிஞ்சுக்கலாம்", "இப்படிப் பேசித்தான் துவங்கினான். அவனோட அந்த 'சிஸ்டர்' என்ற அழைப்பும், அவன் கண்ணில் இருந்த உண்மையும், எனக்கு அப்போவே தெரிஞ்சுது.

ஆனாலும் அமைதியாவே இருந்தேன். என் காயத்துக்கு எல்லாம் அவனேதான் மருந்து போட்டான். அவனோட செய்கையில், பார்வையில், கொஞ்சம் கூட தப்பான எண்ணமே இல்லை. நான் பத்திரிகைக்காரி என்னை அவ்வளவு சீக்கிரம் நம்ப வைக்க முடியாது.

ஆனால் நான், நீ வருவதற்கு முன்பு, அங்கே இருந்த அந்த மூன்று நாட்களில், ஒரு முறை கூட, அவன் அறையை விட்டு, என் அறைக்கு அவன் வந்ததில்லை, என்னையும் அவன் அறைக்கு வர வைத்ததில்லை, தவறான பார்வையில்லை, பேச்சில்லை, இப்படி சொல்லிட்டே போகலாம்.

எந்த ஒரு ஆணுக்குமே, தன்னைப் பற்றி தவறான வதந்தி வந்தால் கண்டிப்பாக கோபம் வரும். ஆனால் தருண், அந்தக் கோபத்தில் கூட, ஒரு நொடி கூட நிதானம் தவறியதில்லை. அவனுடன் நடித்த எந்த நடிகையையுமே அவன் அப்படித்தான் நடத்தினான் உன்னைத் தவிர", இதைச் சொல்லிவிட்டு சிறிது இடைவெளிவிட்டாள்.

லயா வியப்பாக அவளைப் பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்தும், கண்டு கொள்ளாமல் தொடர்ந்தாள்..., "நீ அவனையும் புரிஞ்சுக்கலை, உன் மனசையும் புரிஞ்சுக்கலை, அதனால் வந்த துன்பம்தான் இது. இப்போ

கூட எதுவும் போயிடலை, நீ உன் காதலை அவனுக்குப் புரிய வைத்தால் போதும், அவன் உன்கிட்டே வந்துடுவான்.

அவனால் அவ்வளவு சீக்கிரம் உன்னை மறக்க முடியாது. எதையுமே எடுத்தோம் கவிழ்த்தோம்னு அவன் செய்ய மாட்டான். அதனால், நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காமல் கொஞ்சம் அமைதியா இரு", அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

விவியின் ஆறுதல் மொழிகள் லயாவிற்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தது. "அவருக்கு நிஜமாவே, என்னை மட்டும்தான் அப்படிப் பிடிக்குமா.....?", பழைய குழந்தைத்தனம் மீண்டிருந்தது அவள் குரலில்.

"எப்படி.....?", விவி புருவத்தைத் தூக்கி கேட்க, அழகாக வெட்கப்பட்டாள் லயா. அவளது வெட்கத்தை, தன் கேமராவில் பதிவு செய்தாள் விவி. அதன் பிறகு மறுநாள் ஷூட்டிங் செல்லும்வரை தருணை யாருமே பார்க்கவில்லை.

லயா அவனைப் பார்க்க எவ்வளவோ முயன்றும், அறையை விட்டு அவன் வெளியே கூட வரவில்லை. லயாவை வழிக்குக் கொண்டுவர தன் கோபம்தான் உதவும் என்பதை, அவன் விவியின் மூலம் உணர்ந்துகொண்டான்.

மறுநாள் ஷூட்டிங் ஸ்பாட்டில் பாடல் காட்சிக்கான படப்பிடிப்பு நடை பெற்றது. காட்சிகளில் இயல்பான நெருக்கத்தில் அவன் நடித்தாலும், மனமோ அவளைவிட்டு விலகியே இருந்தது. லயாவோ அவனுடன் இணங்கியே நடித்தாள். அவளது இந்த இணக்கத்தை, தெய்வா சரியாகக் கண்டுகொண்டாள்.

அதே நேரம், தருணின் விலகலும் அவள் பார்வையில் இருந்து தப்பவில்லை. தருணின் இந்தக் கோபம், தெய்வாவிற்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. ஷெட்டியோ, எப்பொழுது லயாவை நெருங்குவது என்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று மாலை ஷூட்டிங் முடிந்த பிறகு, தெய்வா, தனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொல்லிச் சென்றாள். இதுவரை தருணைத் தவிர மற்ற யாருக்கும், விவி அங்கே இருப்பது தெரியாது.

அப்படி விவி இருப்பது தெரிந்திருந்தால், தெய்வாவோ, ஷெட்டியோ அவசரமாக எந்த முடிவும் எடுத்திருக்க மாட்டார்கள். தெய்வா அறையில் இல்லாத காரணத்தால், லயா, தருணை அவன் அறைக்குச் சென்று பார்க்க முயன்றாள்.

அவள் வெளியே செல்லக் கிளம்பிய வேளையில், கதவு மெதுவாக தட்டப்படவே, யாராக இருக்கும் இப்பொழுது? என்ற யோசனையில் கதவில் பொருத்தியிருந்தபீப்ஹோல் வழியாகப் பார்த்தாள். வெளியே ஷெட்டி நிற்பது தெரிந்தது.

கொஞ்சம் தயக்கத்துடனே கதவைத் திறந்தாள். கதவைத் திறந்தவுடன், அவன் மேலிருந்து மது வாடையும், அதையும் மீறி அவன் போட்டிருந்த சென்டின் மணமும் அவள் நாசியைத் தாக்கியது. முகத்தை சுழித்தாலும், வந்திருப்பது படத்தின் தயாரிப்பாளர் ஆகையால், "ஐயா என்ன...?", கொஞ்சம் தயங்கியவாறே கேட்டாள்.

"தெய்வா இல்லையா...? அவளைப் பாக்கத்தான் வந்தேன்", சொன்னவாறு அவளை இடித்தவாறே, உள்ளே வந்து கதவைத் தாளிட்டான்.

லயாவிற்கு, ஷெட்டியின் பார்வையும், பேச்சும், நடத்தையும் ஒருவிதக் கலக்கத்தை கொடுத்தது. ஆனாலும் அதை வெளியே காட்டாமல், "ஐயா, அம்மா வெளியே போயிருக்காங்க, நீங்க போயிட்டு, காலையில் வாங்க", தன் நடுக்கத்தையும் மீறி, ஒரு வழியாகச் சொல்லி முடித்தாள்.

அதே நேரம், அவள் அலைபேசியை எடுத்து, உடனடியாகத் தருணிற்கு அழைத்தாள். ஏதோ யோசனையில் இருந்தவன், அலைபேசி ஒலிக்கவே அதைப் பார்த்தான். லயாவின் எண்கள் ஒளிரவே, அவன் கட்டுப்பாட்டையும் மீறி கைகள் அலைபேசியை அழுத்திக் காதில் வைத்தான்.

ஹலோ சொல்லாமல் அமைதியாகவே இருந்தான். அவளாகப் பேசட்டுமென்று அவன் நினைக்க, அந்தப் பக்கம் கேட்ட, ஷெட்டியின் குரலில் சட்டென எழுந்து அமர்ந்தான். அதற்கு செவிமடுத்தவாறே, அறையில் இருந்த தொலைபேசியில் இருந்து, விவிக்கு அழைத்து அவளை வரச் சொன்னான்.

நிலைமையின் தீவிரம் உணர்ந்து, அவளும் அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், அவன் அறைக்கு வந்தாள். அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டுவிட்டு, இந்தப் பக்கம் சத்தத்தை முடக்கிவிட்டு, அலைபேசியை அவளிடம் கொடுத்தான்.

ஷெட்டியின் குரல் தொடர்ந்தது. "உங்க அம்மாவைத்தான் பார்க்க வந்தேன். ஆனா இப்போ நீ இருக்கியே, உன்கிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டுப் போறேன்", இளியலாக அவன் சொல்ல, இந்தபக்கம் தருணுக்கு தேகம் கொதித்தது.

லயாவோ, தருண் ஏன் இன்னும் வராமல் இருக்கிறான் என்று குழம்பினாள். அலைபேசியைப் பார்க்க, அது தொடர்பில் இருப்பதாகச் சொன்னது. தைரியத்தை வரவழித்துக் கொண்டு, "ஐயா, இப்போ நீங்க வெளியே போறீங்களா, இல்லை நான் கத்தி ஊரைக் கூட்டவா?".

ஷெட்டி இடி இடியென சிரித்தான். "லயா, இது நம்ம ஊர் கிடையாது. இங்கே மற்றவர்கள் விஷயத்தில், யாரும் அவ்வளவாகத் தலையிடுவது கிடையாது. அது மட்டும் இல்லை, இப்போ நீ என்னதான் கத்தினாலும் அது வெளியே கேட்காது. ஒரு பத்தே நிமிஷம், நான் உன்னைத் தொட்டு மட்டும் பாத்துக்கறேன்", கோணல் இளிப்போடு, அவளை நெருங்கவே, அவளது சப்த நாடியும் ஒடுங்கியது.

"ஐயா, நான் உங்க மக மாதிரி, இப்படிப் பேசுறீங்களே. நீங்க இப்போ நிதானத்தில் இல்லை, மரியாதையா வெளியே போய்டுங்க", வேட்டை நாயிடம் சமரசம் பேச முயன்றாள்.

"மகளா நினைச்சு உன்னைத் தொட்டுப் பாக்குறேன் வா.....", காமம் தலைக்கேற, தாய்க்கும், தாரத்துக்குமே

வித்தியாசம் தெரியாத அவனுக்கு, மகளை மட்டும் தெரிந்துவிடுமா என்ன?

"பேசி நேரத்தை வேஸ்ட் பண்ணாதே, கிட்டே வா.....", சொன்ன வேகத்தில், அவளுக்கு பதில் கொடுக்கக் கூட அவகாசம் கொடுக்காமல், அவள்மேல் பாய்ந்தான். அதே நேரம், விவியின் குரல் வெளியில் இருந்து ஒலித்தது. அழைப்புமணியை வேக வேகமாக அழுத்தி, "ஷெட்டி....., நான் விவி வந்திருக்கேன், கதவை இப்போ நீ திறக்கலை, இந்த நியூஸ் நாளைக்குக் காலையில் பத்திரிகை முழுசும் வந்து இருக்கும்", அவள் குரலை கவனிக்கும் நிலையில் அவன் இல்லை.

லயாவைப் படுக்கையில் தள்ளி, ஆவேசமாக அவள்மேல் படர்ந்தான். லயாவோ அவனைத் தடுக்கப் போராடிக் கொண்டிருந்தாள். ஷெட்டியின் இரட்டை நாடிச் சரீரம், அவளை ஒரு இன்ச் கூட நகர விடவில்லை.

உயிர்வாழ மட்டுமே சாப்பிட்டு, அழகுக்காகத் தன் உடலைப் பராமரிக்கும் அவளுக்கு, ஷெட்டியின் உடல் பாரத்தை சமாளிக்க முடியவில்லை. அந்த நேரம் ஒலித்த, அழைப்புமணி ஓசை அவளுக்கு ஆயிரம் மடங்கு தெம்பைக் கொடுத்தது.

தொடர்ந்து கேட்ட விவியின் குரலும், தருணின் குரலும், அவளது மொத்த சக்தியையும் திரட்ட உதவ, தன்மேல் படர்ந்திருந்த ஷெட்டியை, ஒரே தள்ளில் புரட்டிப் போட்டு, எழுந்து கதவை நோக்கி ஓடினாள்.

"லயா....., வந்து கதவைத் திற....., லயா.....", தருணின் குரல் தேவ கானமாகக் கேட்க, லாக்கை அவள் விடுவிக்கவும், கதவைச் சடாரென்று திறந்து, உள்ளே பாய்ந்தான் தருண்.

அவன் வரவே, அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள். அவனும் அவளை இறுக்கிக் கொண்டான். "ஒண்ணும் இல்லை, லயா..... அதான் நான் வந்துட்டனே, விடு.....", அவளுக்கு ஆறுதல் கொடுக்க முயன்றான். அவளை

அணைத்தவாறே, ஷெட்டியின் முன்னால் சென்று நின்றான்.

லயா எழுந்து ஓடவே, கொஞ்சம் போதையில் தள்ளாடிய ஷெட்டி, கொஞ்சம் நிதானித்து எழும் முன்னர், தருண் அவர் முன்னால் நெருப்பாக நின்றான். "விருப்பம் இல்லாத பொண்ணைத் தொட நினைக்கிறியே, நீ எல்லாம் மனுஷனா?", கேட்டவாறு அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்து உலுக்கினான்.

தன் திட்டம் பொய்த்துப் போனதை விட, தருணைப் பார்த்ததை விட, அவன் பின்னால் கேமராவோடு நின்ற விவியைப் பார்த்தவுடன், அவனது மொத்த போதையும் இறங்கி விட்டது. அதைவிட, அவள் அந்தக் கேமராவை இயக்கிக் கொண்டிருந்த வேகம், அங்கே நடந்தவற்றை ஒன்றுவிடாமல் பதிவு செய்வதை அவனுக்கு உணர்த்தியது.

"ஷெட்டி போய்டு....., இனிமேல் லயாவைத் தொடணும்னு நீ மனசால் நினைத்தால் கூட, இப்போ விவியோட கேமராக்குள் தூங்கும் உன் ரகசியம் அனைத்தும் வெளியே வந்துடும். அதைவிட, இந்தப் படத்தில், நாளையில் இருந்து நான் நடிக்கணும்னா, இப்போவே நீ பாண்ட் பேப்பரில் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கணும்.

நான், சொல்ல மட்டுமில்லை, செய்யவும் செய்வேன்னு உனக்குத் தெரியும். இப்போ இந்த படத்தில், எத்தனைக் கோடி முடங்கி இருக்குன்னு உனக்குத் தெரியும், அதே நேரம், எவ்வளவு லாபம் வரும்னும் தெரியும்....., சோ.....

அதாவது, இனிமேல் லயாவைத் தொந்தரவு செய்ய மாட்டேன்னு.... உன்கிட்டே பாண்ட் பேப்பர் இருக்காது, என்கிட்டே இருக்கு", சொன்னவாறு அதை எடுத்துக் கொடுத்தான். ஷெட்டிக்கு, தருண் படத்தை முடிக்க விடமாட்டேன் என்று சொல்லவே, அடித்திருந்த மொத்த போதையும் இறங்கியது.

வேறு வழியில்லாமல், அவன் காட்டிய பேப்பர்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். அதை

வாங்கிக் கொண்டு, லயாவையும் அழைத்துக் கொண்டு, வெளியேறினான்.

அவன் வெளியேறவே, "ஷெட்டி....., அவன் இத்தோடு விட்டாலும், நான் விட மாட்டேன்", விவியின் வார்த்தையில் அடியோடு நிலை குலைந்தான் ஷெட்டி.

"அதான் அவனே விட்டுட்டானே, பிறகு நீ எதுக்கு இதைப் பெருசா எடுத்துக்கற? இனிமேல் நான் லயாவோட வழிக்கே வரமாட்டேன்னு சொல்லிட்டனே, இதை இத்தோட விட்டுடு. உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தருகிறேன்", அவன் கௌரவத்தை அவன் காப்பாற்றியாக வேண்டுமே.

"பணத்தால் எல்லாத்தையும் சாதிக்க முடியாது ஷெட்டி.....", சொல்லிவிட்டு வெளியேறினாள் விவி. என்ன செய்வதென்று தெரியாமல் சோர்ந்து அமர்ந்தார் ஷெட்டி. இத்தனை வருடங்கள் காப்பாற்றி வந்த நல்ல பெயர் தனது இந்த சபலத்தால் சீட்டுக் கட்டாக சரிந்துவிடுமோ என்று அஞ்சி வருந்தினார்.

கதவு - 29

உன் பார்வைத் தீண்டலில்

நான் பற்றிக் கொள்ளும் விந்தை

காதல் எனக்குக் கற்றுக் கொடுத்தது.

விவியைப் பார்வையாலேயே அனுப்பிவிட்டு, தன் கைகளுக்குள், நடுங்கிய கோழிக் குஞ்சாக, உடல் பதற நிற்கும் லயாவை, கைத்தாங்கலாக அறைக்குள் அழைத்துச் சென்றான்.

அறைக்குள் நுழைந்தவுடன், அவனைத் தள்ளிவிட்டு, பாத்ரூமுக்குள் நுழைந்து, ஷவரைத் திறந்து அதன் அடியில் நின்றாள், உடையைக் கூட மாற்றாமல், உடல் முழுக்க இருக்கும் சேற்றைக் கழுவுபவள்போல், தேய்த்துக் கழுவினாள்.

எவ்வளவு கழுவியும், ஷெட்டி தொட்ட அந்த அருவருப்பு, அவளை விட்டுப் போகவில்லை. ஓங்காரித்து வாந்தி வருவதுபோல் இருந்தது, வாந்தியும் எடுத்தாள், ஆனாலும் அந்த நினைப்புமட்டும் போகவே இல்லை.

வெளியே, கூண்டுக்குள் அடைபட்ட புலியாக, இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தான் தருண். ஷெட்டியை, அத்தோடு விட்டதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சென்ற வேகத்தில், அவனை அடித்து துவம்சம் செய்யவேண்டும் என்றுதான் நினைத்தான். ஆனால் அவனது வயதும், தயாரிப்பாளர் என்ற போர்வையும் அவனைக் காப்பாற்றியது.

அவன் யோசனையிலேயே இருந்ததால் நேரம் சென்றதே தெரியவில்லை. அரைமணி நேரத்திற்கு அப்பாலும் கூட அவள் பாத்ரூமில் இருந்து வெளியே வராமல் போகவே, "லயா....., லயா....", பெயர் சொல்லி அழைத்தான்.

அவன் அழைப்பிற்கு பதில் சொல்லாமல், அங்கிருந்த சோப் அனைத்தையும் கரைக்கும் முயற்சியில் இருந்தாள் லயா.

கொஞ்சம் பதட்டமானான் தருண்.

கதவை ஓங்கி அடித்து, அவளை அழைத்தான். இப்பொழுதுதான் அவன் குரல் எட்டியவளாக, "எனக்கு அருவருப்பா இருக்கு தருண், என்ன செஞ்சாலும் அது மட்டும் போகவே மாட்டிக்கு. உடம்பெல்லாம் புழு ஊறுவது மாதிரி இருக்கு", கேவல்களுக்கு இடையில் அவள் குரல் லேசாக அவனை எட்டியது.

"லயா ஏற்கனவே அரைமணிநேரம் தாண்டியாச்சு. இன்னும் என்னக் குளியல், முதல்ல கதவைத் திற", அவள் நிலை உணர்ந்து சொன்னான். அவள் குரலில் இருந்த நடுக்கம், அவள் பச்சைத் தண்ணீரின் அடியில் நிற்பதை, அவனுக்கு உணர்த்தியது.

"அவ்வளவு நேரம் ஆகியும், இந்த அசிங்கம் மட்டும் போகவே இல்லையே", அவள் இன்னும் கதறினாள்.

"லவி முதல்ல கதவைத் திற.....", அவன் குரல் ஓங்கி ஒலிக்கவே, மறு பேச்சின்றி கதவின் லாக் விடுவிக்கும் ஓசை அவனுக்குக் கேட்டது. ஆனாலும் அவள் கதவைத் திறக்கவில்லை.

'இன்னும் என்ன செய்கிறாள்.....', என்று எண்ணியவாறு, கதவைத் திறக்க, அங்கு அவன் கண்ட காட்சியில், என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினான்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, முகத்தை அதற்குள் புதைத்தவாறு, ஷவருக்கு அடியில் கீழே அமர்ந்திருந்தாள். அவள் அமர்ந்திருந்த விதத்தை விட, அமர்ந்திருந்த கோலம்தான் அவனைத் திகைப்புக்குள்ளாக்கியது.

'ஹையோ...., இப்படி இந்தக் கோலத்தில் இருக்காளே, இப்போ விவிக்கு போன் செய்யவா? இல்லை கண்மணியை வரச் சொல்லவா?', அவன் சிந்தையைக் கலைத்தது அவளது நடுங்கிய உடல்.

அறைக்குள் சென்று, இரண்டு பூத்துவாலையோடு வந்தவன், முதலில் ஷவரை நிறுத்தினான். குனிந்திருந்த

அவள் தலையில் ஒரு பூத்துவாலையைப் போட்டு, இறுக்கினான். பின்னர் கொஞ்சம் தயங்கியவன், மற்றொரு பூத்துவாலையால் அவளைப் போர்த்தியவாறு, எழ வைத்தான்.

அவள் கை, கால்கள் அனைத்தும் மரத்துப் போயிருந்தன. "இப்படியா செய்வ...? உனக்கென்ன பயித்தியமா...? அப்படியென்ன நடக்கக் கூடாதது நடந்துடுச்சு, இதையெல்லாம் சந்திக்க தைரியம் இல்லாமல் எதுக்கு நடிக்க வாற? அதான் நான் வந்துட்டனே, பிறகு என்ன.....?", அவளைக் கடிந்தவாறே, படுக்கையில் அமர வைத்து, அவள் உள்ளங்கை, உள்ளங்கால் அனைத்தையும் சூடு பறக்கத் தேய்த்தான்.

அவள் நடுக்கம், கொஞ்சம் கூட குறையவில்லை. அந்த நடு இரவில் போன் செய்து, சூடாகப் பால் கொண்டுவரச் சொன்னான். சொல்லிவிட்டு, அவன் வேலையைத் தொடர்ந்தான். எதையும் உணராதவளாக, அமர்ந்திருந்தாள் அவள்.

உதடுகள் மட்டும் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. "தருண்....., என்னால் தாங்கவே முடியலை. என் உடம்பெல்லாம் எரியிரா மாதிரி இருக்கு, ஏதாவது செய்யேன்....., என்னால் இதைத் தாங்கவே முடியலை.....", இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

"லவி..... உனக்கு எதுவும் ஆகலை, அதான் நான் வந்துட்டனே. இனிமேல் உனக்கு எதுவுமே ஆகாது", அவள் தாயின்மேல் கொலை வெறியோடு இருந்தான் தருண். இவ்வளவு நேரமாகியும் அவள் வந்திருக்கவில்லை.

பால் வருவதற்கு ஆன பத்து நிமிடங்களில், லயாவின் புலம்பல் அதிகரித்ததே தவிர குறையவில்லை. பால் வரவே, அதை ஆற வைத்து, அவளுக்குப் புகட்டினான். ஆனாலும், அவள் புலம்பலும், தவிப்பும் அடங்காமலே சென்றுகொண்டிருந்தது.

அவள் புலம்பலை எவ்வாறு நிறுத்தவென்று தெரியாமல் நொடிகள் தாமதித்தவன், புலம்பும் அவள் இதழ்களை தன்வசப்படுத்தினான். அதை அவள் உணரக் கூட இல்லை. "லவி இங்கே பார், உன்னோட தருண்தான் உன்னைத் தொடுறேன்....., உனக்குத் தெரியலையா...?", மீண்டும் அவள் இதழ்களை சுவைத்தான்.

அவனது இந்த பேச்சுக்குக் கொஞ்சம் மதிப்பிருந்தது. அவன் இதழ் தீண்டலை உணர்ந்தாள். மரத்துப்போன கைகளை நகர்த்தி, அவனை அணைத்துக் கொண்டாள்.

"ஐ லவ் யூ தருண்....., இந்த உடம்பெல்லாம் எரியுதே...., நான் என்ன செய்யட்டும்...?", கண்கலங்க கேட்கும் அவளுக்கு அவன் என்ன பதில் சொல்வான்.....

"நான் தொட்டாலுமா.....?", முதலில் புரியாமல் விழித்தவள், கேட்டதோடு நில்லாமல், அவன் கைகளும், இதழும் அவள் மேனியில் ஊர்வலம் போக, கண்களை மூடி இதை மனதில் பதியவைக்க முயன்றாள். அவன் தொடுகையில், அவள் உடலில் இருவரை இருந்த அருவருப்பு உணர்வு குறைவதையும், தன் பெண்மை மலர்வதையும் உணர்ந்தாள்.

ஒரே தேகம்தான்....., ஷெட்டி தொட்ட பொழுது எரிந்தது, தருணின் தொடுகையில் குளிர்ந்து. காரணம் மனதின் வேறுபாடுதான். உரிமையுள்ளவன் என்ற உணர்வே அவளை, தருணோடு ஒன்றிப் போக வைத்தது. அவனுள் அழுந்தப் புதைய முயன்றாள்.

அவன் உணரும், அவள் மேனியின் மென்மை, அவன் ஆண்மைக்கு, பெரிய சோதனையையே வைத்தது. காமத்தை வென்றவனாக இருக்க, அவனொன்றும் முற்றும் துறந்த முனிவனில்லையே, அவன் ஆண்மை விழித்துக்கொண்டு, அவன் புலன்களை, அவன் கட்டுப்பாட்டை அடக்கி ஆளப் பார்த்தது.

விழித்துப் போராடவேண்டிய பெண்மையோ, அவன் கைகளுக்குள் தன்னை தொலைத்துக் கொண்டிருந்தது.

மனம் விரும்பும் பெண்ணை, அடையத் துடிக்காமல் இருக்க அவனால் முடியவில்லை. தன் எல்லையை மீறும் வேளைதான், ஷெட்டியின் செய்கைக்கும் தன் செய்கைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்ற உணர்வு தோன்றவே, அவன் உணர்வுகள் அனைத்தும் வடிந்தது. அவளை விட்டு வேகமாக விலகினான்.

அவன் விலகியவுடன் அவள் அவனை கலக்கமாகப் பார்க்க, அவளை கவனிக்காமல், தனது வார்ட் ரோப்பைத் திறந்து, ஒரு டிஷர்ட்டையும், ஷார்ட்ஸ்-ம் எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு, பால்கனியில் சென்று நின்றுகொண்டான்.

அவளது நடுக்கங்கள் அனைத்தும் தொலைந்து போயிருந்தது இப்பொழுது. இரண்டே நிமிடங்களில் அவன் அளித்த ஆடைகளை அணிந்து வந்தவள், "தருண்...., உங்களுக்கு என்னை நிஜமாவே பிடிக்கலையா? இப்போ நடந்துகிட்டது கூட என்னை சரிபண்ணத்தானா?", வேதனை, அவமானம், வெட்கம் என அனைத்தும் போட்டி போட்டன அவள் குரலில்.

கண்களை மூடி, தன்னை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தவன், மீண்டும் அவளை இறுக தழுவத் துடித்த கைகளை, நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டான். தீர்க்கமாக அவளைப் பார்த்தான். "இப்போ நான் உன்னை எடுத்துகிட்டா, அந்த ஷெட்டிக்கும், எனக்கும் வித்தியாசமே இல்லாமல் போய்டும். பிறகு நீ சொன்னதுதான் உண்மைன்னு ஆயிடும். அதாவது, இப்படியெல்லாம் டிராமா பண்ணி உன்னை அடைய நினைச்சதா, நீதானே சொன்ன, அதைச் சொன்னேன்", பார்வையை அவளை விட்டுத் திருப்பவில்லை.

"தருண்..., நான் தெரியாமல் சொன்னது அது..", அவனுக்குப் புரிய வைக்க முயன்றாள்.

அவளைப் பேசவிடாமல் கை தூக்கித் தடுத்தான். "இப்போ வந்த இந்த ஞானோதயம், உங்க ஆத்தாக்காரி

மந்திரிச்சதும் காணாமல் போய்டும், அதனால் வேண்டாம். முடிஞ்சதைத் தொடர்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

இப்போ கூட அந்த ஷெட்டி உன் ரூமுக்கு வர நேரத்தில், உன் ஆத்தாக்காரி இல்லை. அதையெல்லாம் யோசிக்க மாட்ட, அதே நேரம் இப்போ அவ வந்து முதலைக்கண்ணீர் ரெண்டு சொட்டு விட்டான்னா உடனே மனசு மாறிடுவ, நான் கேனையன் மாதிரி, உன் அம்மா புகழைப் பாடணும்னு நீ நினைப்ப வேண்டாம், நீ எனக்கு வேண்டாம்னு நான் முடிவு செஞ்சது செஞ்சதுதான்", அவள் கண்ணீர் அவனை அசைக்கவில்லை.

"இப்போ தேவையில்லாமல் எதுக்கு எங்க அம்மாவை இழுக்குறீங்க. அவங்க ஷாப்பிங் போறேன்னு என்கிட்டே சொல்லிட்டுதான் போனாங்க. ஷெட்டி வருவான்னு அவங்க கனவா கண்டாங்க", தாயைக் குறை சொல்வதை, அவளால் தாங்க முடியவில்லை. தாய் எப்படி இருந்தாலும், தனக்குக் கெடுதல் நினைக்க மாட்டார் என்று இப்பொழுதும் ரொம்பவே நம்பினாள் அவள்.

அவள், தாய்க்கு வக்காலத்து வாங்கவே அவன் கோபம் அதிகரித்தது. "லயா....., உனக்குத் தருணா, இல்லை உன் அம்மாவான்னு முடிவேண்டுக்க வேண்டிய கட்டாயம் ஒருநாள் வரும். அப்போ தெரியும் இந்த தருண் சொல்லுவது எவ்வளவு உண்மைன்னு", கோபத்தை, பல்லைக் கடித்து அடக்கி, நக்கலாகச் சொன்னான்.

"அப்படி ஒரு நிலைமை எனக்கு வராது", உறுதியாகச் சொன்னாள்.

"இதுக்கு மேல, உன்னோட நான் பேச முடியாது. நீ இங்கேயே இரு, நான் விவியை அனுப்புறேன்", சொல்லிவிட்டு நகர்ந்தான்.

"கண்மணியை வரச் சொல்லுறீங்களா...?", அவள் கேட்கவே, "உனக்குத்தான் அறிவில்லன்னா எனக்கும் இல்லையா? அவங்களுக்கு இப்போதான் கல்யாணம் ஆகி இருக்கு", திரும்பி நின்று சொன்னான்.

அவன் சொல்லவே, வேகமாக அவன் அருகில் சென்று, அவன் டிஷர்ட் காலரைப் பிடித்து இழுத்து, அவன் இதழ்களில் அழுந்த முத்தமிட்டு, "கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, நமக்கும் முதலிரவே முடிஞ்சுருக்கும். ஒரு கணவனுக்கான முதல் உரிமையை நீங்க எடுத்தாச்சு, அதைத் தெரிஞ்சுக்கோங்க", கண்ணைச் சிமிட்டி, அவன் கண்களுக்குள் உற்றுப் பார்த்து அவள் சொன்ன விதத்தில், அவனுக்குத்தான் மூச்சடைத்து போனது.

சில்லென்ற உணர்வு இதயத்தைத் தாக்க, 'இவ உணர்ந்துதான் சொல்லுறாளா? பொய்யாகவா?', யோசனையோடு அவளைப் பார்த்துவிட்டு விலகினான். தேகம்தான் அவளை விட்டு விலகியது. மனம் அவளையே சுற்றி வந்தது. தன் தேகம் முழுதும் உணர்ந்த அவள் மென்மையை, என்ன முயன்றும் அவனால் மறக்க முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் கூட, தெய்வாவின் சூழ்ச்சியால் நேரவிருந்த விபரீதம்தான் இது என்பதை, லயா உணரவே இல்லை. இதுதான் விதியின் சதியா?

அறைக்கு வெளியே வந்து விவிக்கு அழைக்க, அவன் அழைப்பு முடியும் முன்னர், அவன்முன் நின்றாள். "விவி, லயாவோட நீ இரு, நான் உன் ரூமுக்குப் போறேன். அவளோட அம்மா வந்தால், அவளை அனுப்பிட்டு என்னைக் கூப்பிடு", சொல்லிவிட்டு அவள் பதிலைக் கேட்காமல் செல்லத் திரும்பினான்.

அப்பொழுது நினைவு வந்தவனாக, "விவி போட்டோஸ் எல்லாம் தெளிவா வந்து இருக்கா? லயாவோட பேஸ் அதில் தெரிந்தால் அதை அழித்துவிடு, ஆனால் எனக்கு, உன்னுடைய அந்த டேட்டா கார்டு அப்படியே வேணும்", இதுவும் கட்டளையாகவே இருந்தது.

"தருண்....., அதை நான் அப்படியே தருவேன்னு நீ எப்படி எதிர் பாக்குற? எவ்வளவு பெரிய ஹாட் நியூஸ்....., இதைப் போட்டு அவன் முகத்திரையைக் கிழிக்காமல் விடுவேனா

நான்.....", அவள் கண்கள் வேட்டை மானாகப் பளபளத்தது.

எதையோ கண்டு பயந்து ஓடுபவன்போல் செல்லும் அவனை வியப்பாக பார்த்தவாறு, அவன் அறைக்குள் சென்றாள். அங்கே, விரிந்த புன்னகையில் நின்ற லயாவை, அவள் சத்தியமாக எதிர் பார்க்கவில்லை.

"என்ன லயா கனவிலேயே மிதக்குற....? நான் என்னமோ நீ மூலையில் உக்காந்து அழுதுட்டு இருப்பன்னு நினைச்சேன்", மனதில் நினைத்ததை அப்படியே கேட்டுவிட்டு, என்ன விஷயம் சொல் என்ற செய்தி இருந்தது அவள் கேள்வியில்.

"நானும் அப்படித்தான் இருந்தேன்....., ஆனா அவர்தான்.....", பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டு, சிவந்த அவள் முகத்தை விவியின் முதுகின் பின்னால் சென்று மறைத்தாள்.

"என்ன, சாரோட கோபம் எல்லாம் போயிடுச்சா", ஒற்றைப் புருவம் தூக்கி குறும்பாகக் கேட்டாள்.

"அதெல்லாம் இல்லை....., அவர் இப்பவும் இது சரி வராதுன்னுதான் சொல்லிட்டுப் போறார். அது மட்டும் இல்லை, என் அம்மாவை குறை சொல்லுறார், என்னால் அதைத் தாங்கவே முடியலை. அப்படிச் சொல்லாதீங்கன்னு சொன்னேன், அதுக்கு கோச்சுட்டுப் போறார்", கவலையாகச் சொன்னாள்.

"லயா, உங்க அம்மாவா, இல்லை தருணான்னு ஒரு நிலை வரும்போது நீ யார் பக்கம் நிப்ப?", பதில் தெரிந்தும் கேட்டாள்.

"தெரியலை....., ஆனா அம்மாவை விட்டுட்டுப் போக முடியும்னு தோணலை. எனக்காகவே இருக்குறாங்க அவங்க, அவங்களை வருத்தப்பட வச்சுட்டு.....", தருணையும் மறக்க முடியாது என்ற நினைவில் அவள் குரல் தழுதழுத்தது.

அவள் வாழ்வின் முடிவை அவள் மட்டுமே எடுக்கவேண்டுமென்று அமைதியாக இருந்தாள் விவி. அந்த நேரத்தில் அழைப்புமணி ஒலிக்கும் ஓசை கேட்கவே, விவி சென்று கதவைத் திறந்தாள். அங்கே தருண் இருப்பான் என்று, கோபமாகப் பேச வாயைத் திறந்த தெய்வா, விவியைப் பார்க்கவே, கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

தாயைப் பார்க்கவே, ஓடி வந்து அவள் தோளில் முகம் புதைத்து, அழுதாள் லயா. எதுவும் சொல்லாமல் மகளை அழைத்துக்கொண்டு, அறைக்குச் சென்றாள். லயா ஒரு பாட்டம் அழுது ஓய்ந்தாள். மகள் சொன்னவை அனைத்தையும் கேட்டு, கோபத்தில் கொந்தளிப்பவள்போல் நடித்தாள் தெய்வா.

அவளது நடிப்பை, உண்மை என்று நம்பினாள் லயா. மகளை ஆறுதல் மொழிகள் சொல்லி உறங்க வைத்தாள் தெய்வா. ஆனால் அவளால் உறங்க முடியவில்லை. பறிபோனது முழுதாக ஒரு கோடி, எப்படி அவளால் நிம்மதியாக உறங்க முடியும்.

இங்கே ஷெட்டியின் நிலையம் அதுதான். காலை ஆறுமணி ஆன பிறகும் அவரால் உறங்க முடியவில்லை. காலை ஆறுமணிக்கே ஒலித்த அலை பேசியில் ஒளிர்ந்த மகனது எண்ணைப் பார்த்துவிட்டு, வேகமாக அதை எடுத்தார்.

மகன் சொன்ன செய்தியைக் கேட்டு பாதி இடிந்தே போனார். அன்றையப் பத்திரிகையில், விவி பெயரில் வெளிவந்திருந்த கிசுகிசு, இங்கே நடந்தவற்றை, துகிலுரித்துக் காட்டியிருந்தது. கோபத்தில் கொந்தளித்தார் அவர்.

மகனது வெறுப்புக் குரல் அவரை இன்னும் வேதனைக்குள்ளாக்கியது. தருண் மட்டும் இந்த விவியை அழைத்திராவிட்டால், தனக்கு இப்படியொரு தலைக்குனிவு நேர்ந்திருக்காதே என்று வெதும்பினார். தான் செய்தது தவறென்று, அவர் உணரவே இல்லை. அப்படி யாருமே

செய்யாத தவறையா, நான் செய்துவிட்டேன் என்று எண்ணினார்.

எப்படியாவது, லயாவையும், தருணையும், பழிவாங்கவேண்டும் என்று கங்கணம் கட்டினார். ஆனால் அது எதேச்சையாக நடந்த நிகழ்வாக இருக்க வேண்டும், அதுவும் இதேபோல் பத்திரிகை செய்தியாக இருந்தால்தான், தன் விஷயத்தை மக்கள் உடனடியாக மறப்பார்கள் என்று உறுதியாக நம்பினார். எனவே அதற்கான வேலைகளை உடனடியாக செயல்படுத்தத் துவங்கினார்.

விவி இங்கே இருந்தவாறே தன்னைப் பழிவாங்கி விட்டாளே, அவளை இங்கேயே முடித்துவிடவேண்டுமென்று அவர் மனம் ஏங்கியது. ஆனால் அந்த நாட்டு சட்ட திட்டங்கள், அவரது கையைக் கட்டிப் போட்டன. எனவே அவளை மட்டும் கொஞ்சம் பிறகு பார்க்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

கதவு - 30

ஊடலும் காதலின் அங்கம்தான்

ஊடலில் கொண்ட நேசம்

உன் காதலை எனக்குச் சொன்னது

பிரிந்திருக்கும் நொடிகள்

யுகங்களாகத் தோன்றும்

ஆனாலும் சுகமாய்.....

அடுத்தநாள் படப்பிடிப்பிற்கு கிளம்பிக் கொண்டிருந்த மகளுக்கு அறிவுரையை வாரி வழங்கிக் கொண்டிருந்தாள் தெய்வா. அதை, இந்தக் காதில் வாங்கி, அடுத்த காதின் வழியாக விட்டுக் கொண்டிருந்தாள் லயா. அவளுக்கு, தாயின் அறிவுரையை விட, தருணை எப்படி மாற்றுவது என்றுதான், சிந்தை முழுக்க ஓடிக் கொண்டிருந்தது.

இடை இடையே தாயின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவும் மறக்கவில்லை. "இங்கே பார் பாப்பா, நேத்து நடந்ததை இந்த அறையோட மறந்துடு. எதையும் யார்ட்டையும் சொல்லாதே. அந்த விவி கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாவே இரு. என்னதான் இருந்தாலும் அவ பத்திரிக்கைக்காரி.

அவ அவளோட வேலையைச் செய்யட்டும், நாம நம்ம வேலையைச் செய்யலாம். உனக்குத் தெரியாததை நான் சொல்லலை, நம்ம தொழிலில் கொஞ்சம் இப்படி அப்படி இருக்குறதுதான்.

அதையெல்லாம் நாம கண்டுக்காமல் போய்ட்டா, பெருசா வளரலாம். ஏதாவது பிரச்சனை செய்தால், பாதிப்பு என்னமோ நமக்கு மட்டும்தான். ஹீரோயின் வாழ்க்கை எல்லாம் பத்து வருஷம்தான் பாப்பா.

ஆனா அதே நேரம், நமக்குன்னு நாம ஆள் பிடித்து வைத்துக்கொண்டால், எப்பொழுதும் அது நமக்கு யூஸ் ஆகும். அதிலும் ஷெட்டி மாதிரி பெரிய ஆட்களைப் பகைச்சுக்காமல் இருக்குறது நமக்கு நல்லது.

அதுலயும் அவங்களை நாம கைக்குள் வச்சுக்கிறது நல்லது மட்டுமில்லை, புத்திசாலித்தனமும் கூட. உன் அதிஷ்டம்...., அந்த ஷெட்டியே உன்மேல் ஆசைப்படுறார். நீயும் கொஞ்சம் கண்டுக்காமல் இருந்தால் போதும்...., நாம எங்கேயோ போய்டலாம்", தெய்வா பாட்டுக்குச் சொல்லிக்கொண்டே போனாள்.

"அம்மா.....", என்ற லயாவின் அதிர்ந்த அழைப்பில்தான், தான் இறுதியில் என்ன சொன்னோம் என்பதையே ஆராய்ந்தாள்.

தெய்வாவிற்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றுதான், பணம், பணம், பணம். அந்த பணத்துக்காகவும், புகழுக்காகவும் அவள் பட்டத் துன்பங்கள், கொஞ்சம் நஞ்சம் இல்லை. இவை அனைத்தும் தன் மகள் மூலம் வருகிறதென்றால், அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அனுபவித்துவிடவேண்டும் என்று எண்ணினாள்.

அதிலும் ஷெட்டி, ஒரு இரவுக்காக கோடியைத் தூக்கிக் கொடுக்கிறேன் என்று சொல்வது....., அதிர்ஷ்ட தேவதையே வாசல் பக்கத்தில் காவல் இருப்பதாக எண்ணினாள். அந்த தேவதையை பிடித்து தங்கள் வீட்டு பீரோவை பூட்டி வைக்காமல், வெளியே தள்ளி கதவை சாத்தவேண்டும் என்று எண்ணினாலே, அவளுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

தெய்வாவிற்கு கற்பு என்பது அவ்வளவு பெரிய விஷயமாக எப்பொழுதுமே தோன்றியதில்லை. மகளை ரொம்பப் பொத்தி வைத்தது தவறோ என்று முதல் முறையாகச் சிந்தித்தாள். எப்படியாவது அவளை தன் வழிக்கு கொண்டு வந்து விட வேண்டுமென்று எண்ணினாள்.

அதை கொஞ்சம் கொஞ்சமாக செயல்படுத்த முனைந்தாள். அதன் முதல் படிதான் மகளிடம், தெய்வாவின் இன்றையப் பேச்சுக்குக் காரணம். அதைவிட, ஒரு நடிகை காதலில் விழுந்து விட்டதாக கிசு கிசு கிளம்பினால், அவளை சினிமா உலகம் தவிர்க்கத் துவங்கிவிடும்.

அதற்குக் காரணம், நடிகை எப்பொழுது படத்தில் இருந்து கழண்டுகொண்டு விடுவாளோ என்ற பயம்தான். இரண்டு நாட்களாக, தருணையும் அவளையும் இணைத்துக் கிசுகிசு வருவது தெய்வாவிற்கு அவ்வளவு உவப்பாக இருக்கவில்லை.

முன்பு பத்து வருடத்திற்கு போட்டு வைத்திருந்த கணக்கை, இப்பொழுது ஐந்தே வருடத்தில் முடிக்கவேண்டுமென்று எண்ணத் துவங்கியதன் விளைவே அவள் பேச்சுக்குக் காரணம்.

"அம்மா என்னமா இப்படிப் பேசுறீங்க...?", அதிர்ச்சி விலகாமலே கேட்டாள் லயா.

"லயா, முதல்ல நீ நடைமுறை வாழ்க்கைக்கு வா. எதார்த்தத்தைப் புரிஞ்சுக்க முயற்சி செய். நம்ம தொழிலில் யாருமே உண்மையா இருக்க மாட்டாங்க. அவங்க காதலும் உண்மையா இருக்காது. பயித்தியக்காரத்தனமா யாரையாவது நம்பி மோசம் போகாதே. தாரா சொன்னது அவ்வளவு சீக்கிரம் உனக்கு மறந்துடுச்சா...?", மகளை மனம் மாற்றியே ஆகவேண்டிய கட்டாயம் தெய்வாவிற்கு.

"அம்மா, இப்போதைக்கு யாரையுமே நம்ப முடியாத நிலையில் நான் இருக்கேன். அந்தத் தாரா சொல்லுவதை மட்டும் எப்படி நம்பமுடியும் . வாழ்க்கையில் சில கட்டத்தில் நாம முடிவெடுத்தாகவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாவோம், அப்போ முடிவெடுக்காமல் விட்டுட்டா வாழ்நாள் முழுக்க வருத்தப்படவேண்டி இருக்கும். அப்படி வருத்தப்பட நான் தயாரா இல்லை", தாயின் பேச்சு ஒருவித எரிச்சலைக் கொடுத்தது அவளுக்கு, எனவே அப்படிச் சொன்னாள்.

"அதையே தான் நான் உனக்குச் சொல்லுறேன் பாப்பா, இப்போ நீ முடிவெடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்க. அதை புத்திசாலித்தனமா எடுன்னுதான் சொல்லுறேன்", நைசாகப் பேசினாள்.

"அப்படின்னா, அந்த ஷெட்டி கிட்டே என்னை சோரம்போகச் சொல்லுறியா?", காட்டமாகக் கேட்டாள் லயா.

தெய்வாவிற்கு சுவரிலேயே முட்டிகொள்ளலாம்போல் இருந்தது. தான் என்னவோ வாழ்க்கையில் சம்பாதித்து முன்னேறுவது எப்படின்னு அவளுக்குப் புரிய வைக்க நினைத்தால், அவளோ அதைப் புரிந்துகொள்ளாமல், குதர்க்கமாகப் பேசுவது அவளுக்கு ரசிக்கவில்லை.

"ஏண்டி...., உன்னை யார் சோரம் போகச் சொன்னது....., சும்மா அப்படி இப்படி கொஞ்சம் நடந்துகிட்டா போதும்னுதான் சொல்லுறேன். அதைப் புரிஞ்சுக்காமல்.....", கொஞ்சம் தணிந்தே சொன்னாள். ஒரேடியாக மகளை முறித்துக்கொள்ள அவள் தயாராக இல்லை.

"அம்மா, அப்படி..... நான் கண்டிப்பா நடிச்சுதான் ஆகணுமா?", குரலில் ஒருவிதக் கடுமை.

"என்ன கண்ணு இப்படிக் கேட்டுட்ட....? இந்த அம்மா உன்னைக் கதாநாயகி ஆக்கப் பட்ட கஷ்டம் கொஞ்சமா நஞ்சமா...? இந்த அம்மாவோட இத்தனை வருஷக் கஷ்டத்தை, ஒரு நொடியில் வேணுமான்னு கேட்டுட்டியே.....", குரல் தழுதழுத்தது அவளுக்கு.

"அதுக்கு.... இது ஒண்ணுதான் வழியா...? என்னை இந்த விஷயத்தில் கட்டாயப் படுத்தாதீங்க, பிறகு.....", நடிக்கவே முடியாது என்று சொல்லிவிடுவேன் என்ற மறைமுகச் செய்தி இருந்தது அதில்.

அது புரியாமல் இருக்க, தெய்வா என்ன அடி முட்டாளா? மகளை அவ்வளவு எளிதாகத் தன்னை வெற்றிகொள்ளச் செய்து விடுவாளா? "என்ன சொல்லவாற...? நடிக்கவே முடியாதுன்னா...? இப்போ நீ அப்படிமட்டும் சொல்லிப் பாரு,

அடுத்த நிமிஷம் இந்த அம்மாவோட உடம்பில் உசுரு தங்காது, சொல்லிட்டேன்...", போலியாக மூக்கை உறிந்து, கண்ணீர் விட்டு, லயாவை அவளுக்குத் தெரியாமலே எமோசனல் ப்ளாக் மெயில் செய்தாள்.

அது சரியாக வேலை செய்தது. இதுவரை தாயை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்தவள், தாயின் கடைசி வார்த்தையில், அவளை எதிர்ப்பதை விட்டாள்.

"அம்மா நான் நடிக்கத் தயார்தான்..... ஆனால் என்னை, என் மனசுக்குப் பிடிக்காததை மட்டும் செய்யச் சொல்லாதே. சாவு உங்களுக்கு மட்டும் இல்லை, எனக்கும் வரும்", குரலில் உறுதியுடன் சொல்லிச் சென்றாள்.

தாய்க்காக எதையுமே செய்ய அவள் தயார்தான், சாகும் வரை நடிக்கவும் அவள் தயார். ஆனால்....., பணத்துக்காக, வேசித்தனம் செய்யச் சொல்லுவதை அவளால் ஏற்றுகொள்ளவே முடியவில்லை. தாயின் பேச்சில் இருந்த வற்ப்புறுத்தல், அவளுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது.

இப்பொழுதும், தாய்தான் ஷெட்டியோடு கூட்டுச் சேர்ந்து, தன் அறைக்கு அவனை வரச் சொல்லியிருப்பாள் என்பதை, லயா நம்பவில்லை. இந்த நம்பிக்கை பொய்க்கும் போது.....

லயாவின் தாய், ஷெட்டியிடம் பேச முயன்றாள். ஆனால் அது முடியவில்லை. ஷெட்டி, அவருக்கு வந்திருக்கும் இந்தப் புதுப் பிரச்சனையை எப்படியாவது தீர்க்கவேண்டும், தன் படத்தைப் பற்றிய செய்திக்கு, இதைப் பயன்படுத்தவேண்டுமென்று முயன்று கொண்டிருந்தார்.

அதேபோல், லயா, தருண் இருவரின் பெயரும் சேர்ந்து அடிபடவேண்டும், அவர்களின் பெயரும் வெளியே கெட்டுப்போக வேண்டுமென்றும், அவர்களைப் பற்றிய சுவாரசியத்தில், தன்னைப் பற்றிய வதந்தி அடிபட்டுபோகும் என்பது, அவரது அனுபவத்தில் அவர் அறிந்திருந்த உண்மை.

திரைக்குப் பின்னர் இருப்பவர்களை விட, திரையில் தெரிபவர்களின், விஷயங்களை அறியத்தான் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். எனவே அதற்கான முயற்சியில் முழு மூச்சாக இறங்கினார்.

அன்றைய பாடல் காட்சியானது, நீச்சல் குளத்தில் அவர்கள் நடிப்பது போன்ற காட்சியாகும். லயா டூ பீஸ் உடையில் நடிக்க, தெய்வா சம்மதம் தெரிவித்திருந்தாள். லயாவுக்கு அதுஒன்றும் பெரிய விஷயமாக இருக்கவில்லை. நடிப்பில் அதுவும் ஒரு அங்கம் என்றே எண்ணியிருந்தாள்.

உடை வடிவமைப்பாளர் கொடுத்த உடையை அணிந்த அவளுக்கு, எதுவோ சரியில்லை என்பதுவரை புரிந்தது. ஆனால் என்னவென்றுதான் புரியவில்லை. அணிந்திருந்த மேலாடை சரியாக இல்லாததுபோன்ற பிரம்மை, ஆடை அணிவித்தவரிடம் ஒருமுறைக்கு இருமுறை கேட்டாள்.

"இந்த டிரஸ் இறுக்கமா இல்லையே...? கொஞ்சம் லூசா இருக்குற மாதிரி இருக்கு...", தன் சந்தேகத்தைச் சொன்னாள்.

"தண்ணிக்குள்ளே சரியா இருக்கும் மேம்", அப்படியும் அது சரியாக இருப்பதாக அவர் சொல்லிவிடவே அமைதியானாள். அது வெளிநாட்டுப் படபிடிப்பாகையால், டூ பீஸ் உடையில் அவளை வித்தியாசமாகப் பார்க்க, அங்கே யாரும் இருக்கவில்லை. அந்தச் சூழலும் கொஞ்சம் அவளை இயல்பாக்கியது.

நடன இயக்குனர் அவளுக்குக் காட்சியை விளக்கினார். அனைத்தையும் சரியாக உள்வாங்கிக் கொண்டாள். மேலே சென்று, நீச்சல் குளத்தில் குதித்துவிட்டு, நீந்தி, அதே நீர்த் திவலைகளுடன் மேலேறவேண்டும். இதுதான் காட்சி.

இந்தக் கோணத்தில் பார்க்க வேண்டும், முகம் இப்படி இருக்க வேண்டும், இவ்வளவு தூரம்தான் கேமரா இருக்கும், ஸ்க்ரீனை விட்டு வெளியே போய்விடக் கூடாது, இது

கொஞ்சம் க்ளோசப் காட்சி. எனவே கச்சிதமாக முக பாவங்கள் இருக்கவும் அறிவுறுத்தினார்.

லயாவும் அனைத்தையும் கேட்டுவிட்டு, மேலே ஏறினாள். ஏறும்பொழுதும், தன் உதவியாளரிடம் அனைத்தும் சரியாக இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டாள்.

பிறகு அதை மறந்தவளாய், காட்சிக்குத் தன்னை தயார் செய்துகொண்டாள். அதே நேரம், தருண் அந்த நீச்சல் குளத்தில் கேமரா கோணத்திற்கு வெளியே தண்ணீரில் நின்றிருந்தான். அவனுக்குமே அவள் உடை கச்சிதமாக பொருந்தாததுபோல் தோன்றியது.

காட்சியை கவனிக்கத் துவங்கினான். கேமரா ரோலிங், ஆக்ஷன், சொன்னவுடன், லயா நீருக்குள் குதிக்க, கையை நீட்டித் தயாரானாள். அது கொஞ்சம் உயரமான மேடையாகையால், அங்கிருந்து குதிக்க கையை நீட்டி, குதித்த வேளையில், அந்த வித்தியாசம் அவளுக்குச் சரியாகத் தெரிந்தது.

அவள் மேலாடை, அதன் வேலையைச் செய்யத் தவறியதை அவள் உணர்ந்தாள். அவளையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த தருணும் அதை உணர்ந்தான், கூடவே....., மூன்று கேமரா வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களும் உணர்ந்தார்கள்.

தருண், நொடியில், லயா குதித்த இடத்தில் வந்து சேர்ந்தான். நீருக்குள்ளேயே அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். நீர் கண்ணாடிபோல் இருந்ததால் அவள் தண்ணீருக்குள் இருந்தாலும், அவளை மறைக்க அது தவறும் என்பதை அவன் உணர்ந்தே, அவ்வாறு செய்தான்.

லயாவின் உடல் மொத்தமும் பதற, சுற்றிலும் நூறுபேர் இருக்க, அவர்களுக்கு நடுவில் தனது நிலை, அவளை, நிலை குலையச் செய்தது. தருணை இறுகக் கட்டிக்கொண்டு, கண்களை மூடி, முகத்தையும், அவன் பரந்த நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டாள்.

"வாசு....., டவல்.....", தருணுக்காக டவலோடு காத்திருந்த வாசு, உடனடியாக அதை அவனை நோக்கி வீசினான். தன்னோடும், லயாவோடும், டவலைப் போர்த்தியவாறு, அவளை அணைத்தவாறே, நீரிலிருந்து வெளியேறி, உடை மாற்றும் அறைக்குள் நுழைந்தான்.

"கண்மணி.....", அவனது கத்தலில் அவளும் அங்கே ஆஜரானாள். "உள்ளே வா.....", அவனது குரலிலேயே, அவன் கோபம் புரிய, மறுபேச்சில்லாமல் அவர்களோடு சென்றாள்.

இவை அனைத்தும் நொடியில் நடந்து முடிந்தன. இதுவரை கூட, லயா அவனுள் புதைந்திருந்த தன் முகத்தை விலக்கவே இல்லை. அவனும் அவளை விடவில்லை. அறைக்குள் நுழைந்து என்ன செய்வதென்று, அனைவருமே ஒரு நிமிடம் தடுமாறினார்கள்.

"லவி....., லவி.....", அவ்வளவு கோபத்திலும், லயாவை, அவள் பெயருக்கு வலிக்குமோ என்பதுபோல் மெதுவாக அழைத்தான்.

அவளோ அவனை இன்னும் இறுக அணைத்து, அவனுள் புதைந்தாளே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை. அவள் தேகம் குலுங்குவதில் இருந்து, அவள் அழுவது அவனுக்குத் தெரிந்தது.

"ஏன் இப்படி மரம் மாதிரி நிக்கிற...? இதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டேனா...? முதல்ல இவளுக்கு வேற டிரஸ் போட்டுவிடு. நான் வெளியேபோய் என்னன்னு பாக்குறேன்", கண்மணியின்மேல் எரிந்து விழுந்தான். அதே நேரம் விவியும் அங்கே வந்தாள்.

லயாவை விலக்க முயன்றான். "போகாதீங்க.....", அவனைப் போக அனுமதிக்கவில்லை அவள்.

"இப்போ நான் அங்கே போகலன்னா....., அடுத்த நிமிஷம் இந்த உலகமே உன் வீடியோவைப் பாத்து ரசிக்கும். முதல்ல நான் போய், அதை டெலிட் செய்யறேன். போடுற டிரஸ் எப்படி இருக்குன்னு கூடவா உனக்குத் தெரியலை.

இல்லை.... இதுக்கும் உன் ஆத்தாகாரி காசு வாங்கிட்டாளா.....? அவ காசு வாங்கிட்டான்னு நீயும்.....",

"தருண்.....", அங்கிருந்த பெண்கள் அனைவரும் அலறவே கொஞ்சம் நிதானத்துக்கு வந்தான். ஆனாலும் அவனுக்கு இருந்த கோபத்தில், என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசினான். அதே கோபத்தில் அவர்கள் கத்துவதையும் பொருட்படுத்தாமல், அவளைத் தன்னிடமிருந்து பிய்த்து எறிந்துவிட்டு, வெளியேறினான்.

"ச்சே.....", கதவை அவன் ஓங்கி உதைத்ததில் அவன் கோபம் தெரிந்தது.

"தருண் கோபப்படாதே..., நிதானமா நடந்துக்கோ.....", கண்மணியின் குரல் அவனைத் தொடர்ந்தது. அவளை முறைத்த முறையில், அவள் அப்படியே பின்வாங்கினாள்.

விவியோ, லயாவைத் தாங்கிக் கொண்டாள். கண்மணி வேகமாகச் சென்று வேறு உடை எடுத்துவந்து, லயாவை அணிய வைத்தாள்.

"அவர் என்ன சொல்லிட்டுபோனாருன்னு பாத்தீங்களா...? என்னைப் பார்த்தால் காசுக்காக எதையும் செய்யிறவ மாதிரியா இருக்கு. அதுவும் இத்தனைபேர் முன்னாடி....., எனக்கு எவ்வளவு அவமானமா இருக்கும், இனிமேல் அங்கிருக்குறவங்க முகத்தில் நான் எப்படி முழிப்பேன்....., இப்படி எதையுமே புரிஞ்சுக்காமல் வார்த்தையை வீசிட்டுப் போறாரே.....

அவருக்கு எங்க அம்மாமேலையும் அப்படி என்னக் கோபம்...? என் மனசு எவ்வளவு வேதனைப்படும்னு புரிஞ்சுக்காமல்.....", முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

"லயா.... உன்னை அவன் புரிஞ்சுக்குறதைவிட யார் அதிகமா புரிஞ்சுக்க முடியும்....? அங்கிருந்த ஒரு ஆம்பளையாவது உன்னைக் காப்பாத்தணும்னு ஓடி வந்தாங்களா? அவ்வளவு ஏன், அந்தக் கேமராவைக் கூட ஆப் செய்யலை. இவ்வளவுபேர் மத்தியிலையும்,

தருண்தான் உன்னை, உன் மானத்தைக் காப்பாத்த ஓடி வந்தான்.

இப்போகூட இவ்வளவு கோபப்படுறானே யாருக்காக, அவனுக்காகவா...? இல்லை....., வெளியே எவ்வளவு பிரச்சனையா இருக்குன்னு தெரியலை, ஆனால் எல்லாத்தையும், உனக்காக அவன் சந்திக்கப் போய் இருக்கான்.

கேமராவில் பதிந்த காட்சியை அழிக்கணுமே, அப்படியே அழித்தாலும், வேற யாரும் படம்பிடிக்காமல் இருந்திருப்பாங்கன்னு என்ன நிச்சயம்...? அதையும் அவன் கவனிக்கணும், உன்மேல் இருக்கும் உரிமையில் தான், அவன் இப்படியெல்லாம் நடந்துக்கறான், அதை முதல்ல நீ புரிஞ்சுக்கோ", கண்மணியும் விவியும் அவளுக்குச் சொல்லிப் புரிய வைக்க முயன்றார்கள்.

வெளியே சென்ற தருண், வாசுவை அழைத்து, மூன்று கேமராவில் பதிவாகியிருக்கும் காட்சிகளை நீக்கச் சொன்னவன், உடனடியாக தேடிச் சென்றது, லயாவிற்கு உடை மாற்றி விட்டவளைத்தான். அவளைப் பிடித்து, அவளுக்கு விட்ட ஒரு அறையில் பொறி கலங்கி, ஷெட்டிதான் இப்படிச் செய்யச் சொன்னான் என்று சொன்னாள்.

அவளும்தான் என்ன செய்வாள்....., பணம் கொடுக்கும் முதலாளி சொல்வதைச் செய்யாமல் இருக்க அவளால் முடியாதே. எனவேதான் அப்படிச் செய்துவிட்டாள். ஆனாலும் மனதுக்குள் அவளுக்கு வருத்தமே.

இதை செய்த ஷெட்டி கண்டிப்பாக, இங்கே நடப்பவற்றை பதிவுசெய்ய வேறு ஆளையும் ஏற்பாடு செய்திருப்பான் என்று தருண் உறுதியாக நம்பினான். உடனடியாக சென்னைக்குத் தொடர்புகொண்டு, லயாவைப் பற்றிய செய்தி எதுவும் வருகிறதா என்று ரகசியமாகப் பத்திரிக்கைகளில் விசாரிக்கச் சொன்னான்.

அப்படியிருக்கும் பட்சத்தில் என்ன விலை கொடுத்தாவது, அந்தச் செய்தியோ, புகைப்படமோ வெளிவராமல் இருக்க, தேவையான அனைத்தையும் செய்யச் சொல்லி அவனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், டிடெக்டிவ் அதிகாரிகளுக்கும் சொல்லிவிட்டு, அவர்களை அலர்ட்டாக இருக்கச் சொல்லிவிட்டே, கொஞ்சம் தணிந்தான்.

எவ்வளவுதான் தடுத்தாலும், சில விஷயங்கள் காற்றைப் போல....., அவ்வளவு சீக்கிரம் அவற்றைக் கட்டுபடுத்த முடியாது. அதிலும் சினிமா விஷயங்களில் மக்களுக்கு இருக்கும் ஆர்வம், அவ்வளவு சீக்கிரம் தணியாதே.....

கதவு - 31

என் வீட்டுக் கதவு மட்டுமல்ல

என் உள்ளக் கதவும் உனக்காகவே

திறந்திருக்கிறது.....

தடையை உடைத்துக் கடந்துவா.....

அணைத்துக்கொள்ள தனி(வி)த்திருக்கிறேன்.....

தருண் எவ்வளவு முயன்றும், சில பத்திரிக்கைகளில் லயாவின் கலங்கலான புகைப்படமும், சமூக வலைத்தளங்களில் அவளது வீடியோவும் வந்ததை, தடுக்க முடியவில்லை. இதை அறிந்து லயா மிகவும் நொந்து போனாள்.

அவளது தாயை விட, கண்மணியும், விவியும்தான் அவளை அரவணைத்துக் கொண்டார்கள். தருண் கொஞ்சம் விலகியே இருந்தான். அவனுக்கு இருக்கும் கோபத்தில், அவளை ஏதாவது சொல்லிவிடுவோம் என்று அஞ்சியே அவளை நெருங்கவில்லை.

தெய்வா இதையே, மகளுக்கு வேறுவிதமாகச் சொல்லி, தருணின் மேல் வெறுப்பு வர வைக்கப் போராடினாள். ஆனால் கண்மணியும், விவியும் தருணின் நிலையை அவளுக்குச் சொல்லிப் புரியவைக்க முயன்றதால், அவள் தாயின் பேச்சை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தாய்க்கு, தான் நடிக்காமல், அவளைவிட்டுப் போய் விடுவோமோ என்ற பயத்தில் அப்படிச் சொல்கிறாள் என்று தன்னையே கொஞ்சம் தேற்றிக் கொண்டாள். ஆனாலும் தருணின் விலகல் அவளுக்கு உயிர் வலியைக் கொடுத்தது.

அவன் தோள் சாய்ந்தால், அனைத்து துன்பங்களும் தன்னைவிட்டு பனிபோல் விலகிவிடும் என்று எண்ணினாள். ஆனால் அவனை நெருங்கும்

வகையறியாமல் தடுமாறினாள். எந்த நேரமும் அவனிடம் ஒரு இறுக்கம்.

ஷெட்டி, வெளிநாட்டில் இருந்து அடுத்த நாளே தப்பிச் சென்றுவிட்டான். இல்லையென்றால் அவனைக் கொன்றாலும் கொன்றிருப்பான். அந்த ஆத்திரமே அவன் நெஞ்சம் முழுதும் இருக்க, அவன் அவனாக இருக்க முடியாமல் தடுமாறினான்.

தனக்குச் சொந்தமான ஒருத்தியை, இந்த உலகமே பார்த்து சிரிக்குமாறு செய்துவிட்டு, ஒருவன் சுகமாக இருப்பதா? அதை தான் வேடிக்கைப் பார்ப்பதா? நெருப்பு பிழம்பாகவே மாறிக் கொண்டிருந்தான் அவன்.

ஷெட்டிக்கு இனிமேல் விழும் அடி மரண அடியாக இருக்க வேண்டும். என்னிடம் நல்ல பிள்ளை போல எழுதித் தந்துவிட்டு, முதுகுக்குப் பின்னால் இப்படிக் குத்திவிட்டு, கோழை போல ஓடி ஒளிந்து கொண்டானே.....,

லயா, ஷூட்டிங் ஸ்பாட்டில் மற்றவர்களின் முகம் பார்க்க முடியாமல் மறுகுவதை, அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவளை ஆறுதல் படுத்தலாம் என்றால்...., எங்கே யார் இருந்து கண்காணிகின்றார்களோ என்ற நினைப்பே அவனை முடக்கியது.

விவியையும், கண்மணியையும் குடைந்து எடுத்துவிடுவான். அவள் சாப்பிட்டாளா...? என்ன செய்கிறாள்...? தூங்குகிறாளா...? என்னைக் கேட்டாளா...? திட்டினாளா...? அவள் தாய் என்ன செய்கிறாள்...? உங்களை ஏதாவது சொன்னாளா...? அப்படி ஏதாவது சொன்னால் என்னிடம் சொல்லுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்", இப்படி ஒவ்வொரு நிமிடமும் லயாவைப் பற்றிய செய்தி அவனுக்குத் தெரியுமாறு பார்த்துக் கொள்வான்.

இவை அனைத்தும் லயாவிற்குத் தெரிந்தாலும், தருண் தன்னிடம் நேரடியாகப் பேசாதது அவளுக்கு வருத்தம்தான். ஒரு வழியாக இரண்டுமாத வெளிநாட்டுப் படப்பிடிப்பு ஒரு

முடிவிற்கு வந்தது. இந்த இரண்டுமாதப் படப்பிடிப்பில், லயாவை, படப்பிடிப்பு தளத்தில் பார்ப்பதோடு சரி.

அவனது அறையை விவியின் அறைக்கு மாற்றிக் கொண்டான். விவி அவனது அறையில் தங்கிக் கொண்டாள். ஊருக்குக் கிளம்பும் ஒரு வாரத்துக்கு முன்னர் படப்பிடிப்பு முடிக்கப் பட்டது.

அனைவரும் ஷாப்பிங் கிளம்பினார்கள். எப்பொழுதும் எங்கேயும் செல்லாத லயா கூட, தருணிடம் எப்படியாவது பேசிவிடவேண்டும் என்ற காரணத்தால், ஷாப்பிங் கிளம்பிவிட்டாள். இப்பொழுதெல்லாம் தெய்வாவின் கெடுபிடி அதிகமாகவே இருந்தது அவளுக்கு. தருணிடம் தனியாகப் பேசவே விடவில்லை அவள்.

அங்கே அவர்களைத் தெரிந்தவர்கள் யாரும் இல்லாத காரணத்தால், சுதந்திரமாகவே சுற்றினார்கள். ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி பொருட்கள் வாங்கினார்கள். விவியுடன் லயா செல்ல முடிவு செய்ததால், தெய்வா அவர்களுடன் வரவில்லை.

தருணுடன் வாசு இருந்தான். கண்மணியும் அவர்களோடு இருந்தாள், ஒரு கட்டத்தில் கண்மணியும் வாசுவும் ஜோடியாகச் சென்றுவிடவே, தருண் தனியாக இருந்தான். அவனிடம் பேச இதுதான் சரியான சந்தர்ப்பமென்று, அவன் பின்னால் சென்றாள் லயா.

லயாவின் தவிப்பு புரியவே, அவளைத் தருணிடம் போகச் சொல்லிவிட்டு, விவியும் கழண்டு கொண்டாள். தருண் அந்த நேரம் ஆண்களுக்கான ஆடையகத்துக்குள் நுழையவே, அவன் பின்னால் அவளும் சென்றாள்.

அவனை நெருங்கிச் செல்ல கொஞ்சம் தயங்கியவாறே, அவன் ஆடைகள் தேர்ந்தெடுக்கும் அழகை ரசித்தவாறே சென்றாள். இதுவரையும் தருண் அவளை கவனிக்கவே இல்லை. அதில் அவளுக்கு மிகுந்த வருத்தமும் கூட.

சில ஆடைகளை தெரிவுசெய்துவிட்டு, அதை அணிந்துபார்க்க, ட்ரையல் ரூமுக்குச் செல்ல, வேகமாக

அவன் பின்னால் சென்றாள். அவன் அறைக்குள் சென்று கதவைப் பூட்டும் முன்னர் அதை அடைய முயன்றாள். ஆனால் அதற்குள் அவன் உள்ளே சென்றுவிட்டிருந்தான்.

அவனை அழைக்க, கதவைத் தட்ட கையைத் தூக்கியவள், கதவு தானாகவே திறந்து, அதே வேகத்தில் அவளை உள்ளே இழுத்து கதவைச் சாத்தினான். ஒரு நிமிடம் திகைத்தவள், பின்னர் சரமாரியாக அவனை அடித்தாள்.

அவள் அடிகள் அனைத்தையும் முகத்தில் மெல்லியப் புன்னகையுடன் வாங்கினாலும், அதில் ஒரு கடுமையும் கலந்திருந்தது. "தருண்....., நீங்க என்னைப் பாத்தீங்களா...? பாத்துட்டுதான் பாக்காத மாதிரி இருந்தீங்களா?", சிணுங்கலாகக் கேட்டாள்.

"நான் எங்கே எப்படி இருந்தாலும், என்னோட கவனம் எல்லாம் உன்கிட்டதான் இருக்கும். இனிமேல் நீயே நினைத்தாலும், என்னை விட்டு விலகிப் போக முடியாது. அப்படியிருக்கும்போது, நீ என் பின்னாடியே வருவது கூடத் தெரியாமலா இருப்பேன்", சொன்னவாறு அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கினான்.

"ஆமா பேச்சுமட்டும் நல்லா பேசுங்க....., என்கூடப் பேசி ரெண்டு மாசமாகுது. உங்களுக்குக் கொஞ்சமாவது என்மேல் பாசம், ஆசை இருந்தால் இப்படி இருப்பீங்களா...?", முன்பு அவன்மேல் இருந்த கோபங்கள் அனைத்தும் மறைந்து, அவன் கைகளுக்குள் இருப்பது மட்டுமே அவள் நினைவில் இருந்தது அவளுக்கு.

"எனக்கா உன்மேல் ஆசையில்லை.....", அவனது பதிலில் அவனை நிமிர்ந்து பார்க்க, அவன் கண்களில் தெரிந்த வேட்கையில், அவளது அடி மனதில் குளிர் பிறந்தது. ஆனாலும் மனதின் ஒரு ஓரத்தில் சிறிய எதிர்பார்ப்பும் போட்டியிட்டது.

அவள் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல், வன்மையாக அவள் இதழ்களில் முற்றுகையிட்டான். அவன் அதிரடியில் கொஞ்சம் மிரண்டுதான் போனாள். அவனிடமிருந்து தன்

இதழ்களைப் பிரிக்க அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவியது. இறுதியில் தன் இதழ்களை அவன் விருப்பத்துக்கு விட்டுவிட்டு அமைதியாகிவிட்டாள்.

அவனது அணைப்பில், அவளது எலும்புகள் அனைத்தும் நொறுங்கி விடுமோ, என்று கூட அஞ்சினாள் அவள். தானும் அவனைத் தழுவிக் கொண்டாள். அந்த முத்தம் முற்று பெறாததாகவே போனது. ஒரு வழியாகத் தன்னை நிலைக்குக் கொண்டுவந்தான் தருண்.

'ஏய்....., என்னை ஏண்டி இப்படி ஆட்டி வைக்கிற? உன்கிட்டே மட்டும் என்னோட உணர்வுகள் எல்லாம் கட்டவிழ்ந்து போகுதே', எண்ணியவாறு அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்.

வெளியே கதவு தட்டப்படும் ஓசை கேட்ட பிறகுதான், தாங்கள் இருக்கும் இடம் அவர்களுக்கு நினைவே வந்தது. "உன்னை யாருடி என் பின்னாடியே வரச் சொன்னது...? இப்போ பாரு.....", போலியாக அவளைக் கடிந்துகொண்டான்.

"நான் உங்ககிட்டே..... பேச வந்தேன்....., நீங்கதான் ரூமுக்குள்ளே இழுத்துப் போட்டு.....", நாவால் இதழ்களை ஈரப்படுத்திக் காட்டவே, அந்த அழகில் மேலும் மயங்கி அவளை நெருங்க முயன்றான்.

"ஐயோ என்ன செய்யிறீங்க...? வெளியே கதவைத் தட்டுறாங்க, முதல்ல அதைப் பாருங்க...", அவள் சொல்லவே, "ஜஸ்ட் எ மினிட்.....", வெளியே அவர்களுக்கு குரல் கொடுத்துவிட்டு, மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தான்.

அங்கே சிப்பந்தி பையன் நிற்கவே, அவனிடம் கையில் இருந்த துணிகள் அனைத்தையும் பில் போடச் சொல்லி, கொடுத்துவிட்டு, அங்கிருந்த மற்ற பையனை அழைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தான். அந்த நேரம், லயா அங்கிருந்து வெளியேறினாள். அதை உறுதிசெய்த பிறகு, மேலும் சில உடைகள் எடுத்துவிட்டே அங்கிருந்து

சென்றார்கள். அவனுக்கு வேண்டி அவளும் சில உடைகள் எடுத்துக் கொடுத்தாள்.

இருவருக்குள் இருந்த மெல்லிய இடைவெளி குறைந்தது. அந்த இனிய நினைவுடனே லயா சந்தோஷமாகக் கிளம்ப, மனதுக்குள் வன்மத்துடனும், வெளியே சாதாரணமாகவும் கிளம்பிக் கொண்டிருந்தான் தருண்.

கண்மணியும் வாசுவும் தங்களது தேனிலவுப் பயணம் வெற்றிகரமாக முடித்த திருப்தியுடனும், விவியோ, படத்தை பற்றியநிறைய சுவாரசியமான செய்திகள், புகைப்படங்களுடன் கிளம்பினாள்.

இந்தியாவில் இவர்களின் வருகை அறிந்து ஒரு பெருங் கூட்டமே காத்திருந்தது. அதில் பத்திரிகை அன்பர்களின் வருகை அதிகம்தான். அங்கேயே பேட்டி வேண்டுமென்று கேட்க, மாலையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு இருக்கிறதென்று வாசு பதில் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்கள்.

வெளிநாடு செல்லும் முன்பே படப்பிடிப்பு காட்சிகள் அனைத்தும் முடிந்துவிட்டபடியால், அந்தக் காட்சிகள் அனைத்தும் எடிட்டிங் செய்யப்பட்டுத் தயாராக இருந்தது. பாடல் காட்சிகள் மட்டுமே அதனுடன் இணைக்கப்படவேண்டும், எனவே படம் இன்னும் முப்பது நாட்களில் வெளிவரும் என அனைவராலும் பரவலாகப் பேசப்பட்டது.

அதிலும் ஷெட்டியின் படமென்பதால், அது சரியான நேரத்தில் வந்துவிடும் என்பது, அனைவருமே அறிந்த உண்மை. இருந்தாலும், சினிமா பற்றியச் செய்தியை அறிய, அனைவருமே கொஞ்சம் ஆவலாகவே இருந்தார்கள்.

லயா கொஞ்சம் பதட்டமாகவே இருந்தாள். எப்படியும் நீச்சலுடை பற்றியக் கேள்வி வருமென்பது அவளுக்குத் தெரியும். அந்தக் கேள்வியை எப்படி எதிர்கொள்ளவென்று தெரியாமல்தான் தடுமாறினாள்.

தருணும் அந்தக் கேள்வியை நினைத்துதான் கோபமாக இருந்தான். முடிந்த அளவு பத்திரிக்கையாளர் சந்திப்பில் கோபத்தை வெளிக்காட்டாமல் இருக்க வேண்டுமென்று முடிவு செய்தான். எடுத்த முடிவை, எந்த அளவு செயல்படுத்த முடியுமென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை.

அதே நேரம், தருண் புதிய படத்தில் நடிக்கவும் புக் ஆகியிருந்தான். அதன் படப்பிடிப்பும் அடுத்த நாளே துவங்குவதாக இருந்தது. அதற்கு வேறு தயாராக வேண்டும், எப்பொழுதுமே இந்த அளவு அவன் டென்சனாக உணர்ந்தது இல்லை.

அவன் வெறுத்த அந்த மாலை வேளையும் வந்தேவிட்டது. அனைவரும் கிளம்பி அந்த நட்சத்திர ஹோட்டலுக்கு வந்துவிட்டார்கள். படத்தின் இயக்குனர், தருண், லயா, ஷெட்டி, ஒளிப்பதிவாளர் என அனைவரும் ஒரே மேடையில் இருந்தார்கள்.

புது இயக்குனர் என்ற முறையில் கதிரவனிடம் படத்தைப் பற்றியும் அதன் கதையைப் பற்றியும் முதலில் கேட்டார்கள். ஷெட்டியிடம் புதிய இயக்குனரை எப்படி அறிமுகம் செய்தார்...? கதையின்மேல் இருந்த நம்பிக்கையா...? இல்லையென்றால் தருண்மேல் இருக்கும் நம்பிக்கையா..? என் கேட்க,

கதை மேலும், அந்த கதைக்கு தருண்தான் பொருத்தமாக இருப்பான் என்று, கதிரவன் செய்த முடிவினாலுமே ஏற்பட்ட கூட்டணியென்று கூறினார் ஷெட்டி.

"ஷெட்டி சார்....., வெளிநாட்டு படப்பிடிப்பில் நீங்க லயாவைத் தொல்லை செய்ததா வந்த கிசுகிசு பற்றி....", ஒரு நிரூபர் கேட்க,

"அதுதான் நீங்களே கிசு கிசுன்னு சொல்லிட்டீங்களே, பிறகு அதில் நான் சொல்ல என்ன இருக்கு?", சாதாரணமாகச் சொன்னார்.

"அப்படி அது கிசுகிசுவா இருந்தால்....., நீங்க ஏன் அடுத்த நாளே இந்தியா வந்துட்டீங்க...?".

"நான், ஒரு படம் மட்டும் தயாரிக்கலை, ஒரே நேரத்தில் மூணு படம் போயிட்டு இருக்கு. என்னால் ஒரே இடத்தில் இருக்க முடியாது", புன்னகை மாறாமலே பதில் சொன்னார்.

"தருண்சார், நீங்க சொல்லுங்க, புது இயக்குனர்ட்ட எப்படி உங்களால் பொருந்திப் போக முடிந்தது. அவரோட வேலை செய்தது உங்களுக்கு எப்படி இருந்தது?".

"எனக்கு எந்த வித்தியாசமும் தெரியலை. கதிரவன் நல்ல திறமையான இயக்குனர். சரியான விதத்தில் பிளான் செய்து படப்பிடிப்பை உரிய நேரத்தில் முடிச்சுட்டார், அதிலேயே உங்களுக்கு அவரோட திறமை தெரியும்", கதிரவனைத் தாங்கியே பேசினான்.

"நீங்க இப்படி சொல்லுறீங்க....., ஆனால் முதலிலேயே படப்பிடிப்பில் பெரிய பிரச்சனை போல, முதலில் தாரா, பிறகு லயா, என்னதான் நடக்குது இங்கே".

"ஹீரோயினைத் தேர்ந்தெடுப்பது தயாரிப்பாளரும், இயக்குனரும்தான், இதில் என் பங்கு எதுவும் இல்லையே...", பொறுமையாகவே சொன்னான்.

"நீங்க இப்படி சொல்லுறீங்க....., ஆனால் அவங்க....., நீங்க அவங்களைத் திருமணம் செய்யக் கேட்டதாகவும், அதற்கு அவங்க மறுத்ததால், அவங்களைக் கழட்டி விட்டுட்டதாகவும் சொல்லுறாங்களே. இதில் எது உண்மை".

இப்பொழுது நிஜமாகவே அவனுக்குக் கோபம் வந்தது. அதை அடக்கியவாறே, "அவங்களை, படத்தில் இருந்து தூக்கிட்டதால் வந்த கோபத்தில் தேவையில்லாமல் என்ன என்னவோ சொல்லுறாங்க. அவங்க சொல்லுவதற்கெல்லாம் நான் பொறுப்பாக முடியாது. இதில் என்னோட பங்கு எதுவுமே இல்லை", என்று அத்தோடு முடித்துக் கொண்டான்.

"அதெப்படி சார் நீங்க சேர்ந்து நடிக்கும் எல்லா நடிகையுடனும் சேர்த்துப் பேசப் படுறீங்களே, உங்க ராசி என்ன கன்னி ராசியா?", ஒருவன் கேட்க, அங்கே பலத்த சிரிப்பலை எழுந்தது.

"உங்களுக்குப் பரபரப்பான செய்தி வேணும், அதுக்காக நீங்களா எதையாவது எழுதுவீங்க, அதுக்கு எங்க ராசியெல்லாம் எதுக்கு இழுக்குறீங்க", அவனும் அதேபோல் பதில் சொன்னான்.

"லயா மேம், நீங்க சொல்லுங்க, தருணோட நடித்தது எப்படி இருந்தது?".

"நல்ல அனுபவமா இருந்தது", தெய்வா இல்லாமல் அவளாக அளிக்கும் முதல் பதிலாகையால், அவள் குரலில் கொஞ்சம் நடுக்கம்.

"நீங்க எந்த அனுபவத்தைச் சொல்லுறீங்க.....?", ஒரு வக்கிரம் பிடித்த புத்திக்காரன் கேட்க, அங்கே பெரிய சிரிப்பலை.

தருண் தன் கோபத்தை அடக்க, பற்களை இறுகக் கடித்துக் கொண்டான். தன் ஒரு சிறிய உடல்மொழி கூட, பெரிய பிரச்சனைக்கு வழி வகுக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

"நான் தருணோட நடித்த அனுபவத்தைத்தான் சொன்னேன்....., நீங்க எதைக் கேட்டீங்க.....?", புரியாமல் கேட்டாள்.

'இதற்கெல்லாம் ஏன் பதில் சொல்கிறாய்', என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான் தருண்.

"இந்தப் படத்தில் உங்களுக்கு நல்ல கிளாமர் வேடமென்று நினைக்கறோம்...., ஏனென்றால் வந்த படங்கள் அனைத்தும் அப்படித்தான் இருந்தன. நீச்சல் உடையில் கூட.....", கேள்வி கேட்டவனின் சட்டையைப் பிடித்து சண்டை போட, ஆத்திரமாக எழப் போனவனின், தோளை அழுத்தியது ஒரு கரம்.

வேகமாகத் திரும்பிப் பார்க்க, அங்கே நின்றிருந்தான் வாசு. தண்ணீரை எடுத்துக் குடித்து, தன்னை நிதானத்துக்குக் கொண்டுவர முயன்றான்.

"ஏன்.... நீச்சல் உடையில் நான் நடிப்பது என்ன புதுசா.....? நீங்க.... படத்துக்குத் தேவையானதை மட்டும் கேட்கலாமே, எதற்குத் தேவையில்லாத கேள்வியெல்லாம்.....", தருண், காலை முதல், இங்கே வரும்வரை அளித்த அட்வைஸ்மழையிலும், கொடுத்த தைரியத்திலும் வந்த பதில்தான் இது.

பதில் சொல்லிவிட்டு, தருணை ஓரவிழிப் பார்வையாகப் பார்க்க, அவனோ பார்வையாலேயே அவளை மெச்சினான்.

"உங்க ரெண்டுபேருக்கு நடுவில் காதல் என்று பேசப் படுத்தே.....", அவளிடம் கேட்க,

"எங்களுக்குள் காதல்ன்னு நாங்க உங்ககிட்டே சொன்னோமா...? எங்க வாழ்க்கையை, உங்க இஷ்டத்துக்கு நாங்க வாழ முடியாது. இது எங்களோட வாழ்க்கை, எப்படி வாழணும்னு நாங்க முடிவு செய்யிறோம்", தருண் அடக்கப்பட்ட கோபத்தில் சொன்னான்.

"அப்போ உங்களுக்குள் எதுவும் இல்லன்னு சொல்லுறீங்களா....?", நேரடியாக அவனிடமே கேட்டார்கள்.

"எனக்கு முதலில் இதற்கு பதில் சொல்லுங்க, நானும் சங்கீதாவும் காதலிப்பதா எழுதுனதும் நீங்கதான், எனக்கும் தாராவுக்கும் காதல், கல்யாணம் பிரச்சனை அப்படின்னு எழுதுவதும் நீங்கதான்....., நான் எப்பொழுதுமே, என் வாயால் எதுவும் சொன்னதில்லை. எப்போ நான் என் வாயால் சொல்லுறேனோ அதுதான் உண்மையான என் காதலாக இருக்கும். அதுவரை.....", அவர்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டான்.

"அப்போ நிஜமாவே, உங்களுக்குள் காதல் இல்லன்னு சொல்லுறீங்களா...?".

"இதுவரை அப்படிச் சொன்னதாகத்தான் ஞாபகம்", அவன் குரலில் அப்படி ஒரு எரிச்சல்.

பின்னர் எவ்வளவோ விஷயங்கள் அலசப் பட்டாலும், பிரச்சனைகள் எதுவும் இல்லாமலே போனது. ஆனால் லயாதான் நொறுங்கிப் போனாள். அவள்மேல் காதல் இல்லவே இல்லையென்று அவன் அடித்து சொல்லிவிட்டானே.

அதைவிட, அவன் எப்பொழுது சொல்கிறானோ அதுதான் உண்மையான காதலென்றும் சொல்லிவிட்டான். ஆனால் அவளிடமோ, தங்கள் காதலைப் பற்றி, அவள்தான் அறிவிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தான்.

தன்னிடம் அப்படிச் சொல்லிவிட்டு, இங்கேவந்து, மற்றவர் சொல்லுவதற்கு, தான் பிணையாக முடியாது என்று சொல்லிவிட்டானே, இதைச் சுலபமாக எடுத்துக் கொள்ள முடியுமா?

கதவு - 32

காற்று வீசும் திசையை

உணராத இந்த மனது

நீ வரும் திசையை

உன்னைக் காணாமலே

உணர்வதெப்படி

உன்மேல் கொண்ட

காதலாலா.....

படத்தின் எடிட்டிங் வேலைகள் அனைத்தும் முடிந்து, படம் வெளிவருவதற்கு முன்பு, முதல் காட்சி அனைவருக்கும் காண்பிக்கப் பட்டது. அதைவிட, முதல் முறையாக விவியின் கண்ணோட்டத்தில், அந்தப் படத்தைப் பற்றிய விஷயங்கள் அனைத்தும் சுவாரசியமாக, அழகான கட்டுரையாக, அருமையான புகைப்படங்களுடன் வெளிவந்திருந்தது.

அந்தக் கட்டுரையே மக்களிடம் ஒரு பெரிய எதிர்பார்ப்பை விதைத்தது. படத்துக்கு சிறந்த ரீச்சாக அது இருந்தது. அவளது இந்தச் செய்கையால், ஷெட்டிக்கே அவள்மேல் இருந்த கொலைவெறி கொஞ்சம் தணிந்திருந்தது.

இந்தியா வந்து தருண் தன்னை ஏதாவது விதத்தில் பழி வாங்குவானோ என்று அவர் எண்ண, அந்த நினைப்பே இல்லாதவன்போல் அவன் நடந்துகொண்டதும், இந்தப் பிரச்னையை அதோடு முடித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை அவருக்குக் கொடுத்தது. எனவே அவரும் அவையெல்லாம் மறந்து, பத்திரிகையாளர்களை அழைத்த பொழுது, விவியையும் படம் பார்க்க அழைத்தார்.

கண் மூடித் திறக்கும் முன்னர் ஒரு மாதம் கடந்திருந்தது. தருண் புது படத்தில் நடிக்கத் துவங்கி, அதுவும் முதல் கட்டப்

படப்பிடிப்பு முடிந்துவிட்டது. அவனுக்கும் லயாவுக்கும் நடுவில் பெரிய பள்ளமே இந்த இடைப்பட்ட நாட்களில் விழுந்து விட்டது.

லயாவும் இப்பொழுது புது படத்தில் நடிக்கிறாள். இருவரும் சந்தித்தே இருபது நாட்களுக்குமேல் ஆகிவிட்டது. தெய்வா இந்த நாட்களை சரியாகப் பயன்படுத்திக் கொண்டாள். அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில், தருண் எதார்த்தமாக சொன்னவற்றை, இவளைத் தவிர்பதர்காகவே சொன்னதாக, கதை கட்டினாள்.

லயாவும் ஏற்கனவே அந்தக் கோபத்தில் இருந்ததால், எரியும் கொள்ளியில் எண்ணையை ஊற்றியது போலானது அவள் நிலை. அதற்கு வலு சேர்ப்பதுபோல், இந்த இருபது நாட்களில் ஒருமுறை கூட அவளுக்கு, அவன் போன் செய்யவில்லை.

அதன் கோபமும் அவன்மேலே திரும்பியது. இங்கே வந்த பிறகு, கண்மணி பற்றிய செய்திகளைப் படித்து, அவை பற்றியும் தருண் தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே என்ற கோபமும் சேர்ந்தது.

இவை அனைத்திற்குமே அடிப்படைக் காரணம், அவன் அவளோடு பேசாதது மட்டுமே. அவன் மட்டும் லயாவை நேரில் பார்த்து, எப்படி இருக்கிறாய்? என்று ஒற்றை வார்த்தைக் கேட்டிருந்தால், அனைத்து துன்பங்களும், மன உளைச்சல்களும் அவளை விட்டுப் பறந்திருக்கும்.

அதைச் செய்ய வேண்டியவனோ, அவள் எதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும், ஒரு நடிகனோடான அவளது வாழ்கை, இப்படித்தான் இருக்கும் என்பதை அவளுக்குப் புரிய வைக்க முயன்று கொண்டிருந்தான்.

அவன் நடிக்கும் இந்தப் படத்திலும், நடிகையோடான கிசுகிசு அதிகமாகவே வந்துகொண்டிருந்தது. அதுவேறு அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது. அதற்கு மிகப் பெரிய காரணம்....., ஒரு பேட்டியில், உங்களுக்கு பிந்துவோடு திருமணம் முடிந்து விட்டதாமே என்ற

கேள்விக்கு, "ஆமா இப்போ என்ன.....?", என்று கேட்டு வைத்திருந்தான் தருண்.

இந்த ஒற்றை வாக்கியம் போதாதா, அவள் நிம்மதி பறி போக. அவனாகவே சொல்லிவிட்டானே....., என்று எண்ணிக் குமைந்து போனாள். நாளுக்கு நாள் அவள் மனம் வேதனையில் துவண்டது. அவள் நிலை புரியாமல், மகளுக்கு போதனை செய்கிறேன் பேர்வழியென்று அவள் மனதை, குத்திக் கிழித்துக் கொண்டிருந்தாள் தெய்வா.

புது படம் துவங்கிய பிறகு, லயாவால், விவியையோ, கண்மணியையோ பார்க்கவே முடியவில்லை. ஆனால் தொலைபேசியில் தொடர்பிலேதான் இருந்தார்கள். அது கூட, ஒற்றை வார்த்தை நலம் விசாரிப்புகளோடு முடிந்து போனது. எனவே அவளால் மனதில் உள்ளதை, வெளியே சொல்ல முடியாமல் தவித்தாள்.

தருணோ வழக்கம்போல் தன் படத்தின் நாயகிக்கு, தொல்லை ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டான். அவன் பார்த்துக் கொண்டான் என்பதைவிட, அவன் நாயகன் என்று சொன்னால், உடனடியாக கால்ஷீட் தர, அனைத்து நடிகைகளும் தயாராக இருந்தார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கும். அவனும் அந்த கண்ணியம் கொஞ்சம் கூட குறையாமல் பார்த்துக் கொண்டான்.

அவனைப் பற்றி என்னதான் கேள்விபட்டாலும், காதல் கொண்ட மனது, அவன் நேசத்தை எதிர்பார்க்கவே செய்தது. அப்படி இல்லையா, தூரத்தில் இருந்து அவனை ஒரு முறை பார்க்கவேண்டும் என்று ஏங்கியது.

எனவே இன்றைய பிரிவியு காட்சியை ஆவலாகவே எதிர் பார்த்தாள் லயா. படப்பிடிப்பு இருந்த பொழுதும் கூட, மூன்றுமணிநேரம் அனுமதி வாங்கி வந்திருந்தாள். வந்ததுமுதல் பார்வையும், மனமும் தருணுக்காகவே ஏங்கியது.

அருகில் அமர்ந்திருந்த தெய்வா, வந்திருந்த மற்ற ஹீரோக்களிடம், மகளுக்கு வாய்ப்பு கேட்டுக்

கொண்டிருந்தாள். லயாவின் பார்வை வாசலையே பார்த்து, பார்த்து மீண்டது. பத்து நிமிடங்களில், தன் பாதுகாப்பு அதிகாரிகள் புடை சூழ, நடிகை சங்கீதாவுடன் அரங்கிற்குள் நுழைந்தான் தருண்.

அவனை பார்த்ததில் மலர்ந்த அவள் முகம், அவனோடு சங்கீதாவைப் பார்த்ததில் கூம்பி விட்டது. அவர்கள் இருவரும் சேர்ந்து வரவே, ப்ளாஷ் வெளிச்சத்தில் நனைந்தார்கள் இருவரும். அவர்கள் பின்னால் கொஞ்ச நேரத்தில், கண்மணி, வாசு, தருணின் தாய் கமலமும் வந்தார்கள்.

அவர்களையும் ப்ளாஷ் வெளிச்சம் நிறைத்தது. கமலம் கம்பீரமாக இருந்தார். வந்தவர்கள், நேராக லயாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டார்கள். லயா கொஞ்சம் சங்கோஜமாக உணர்ந்தாள். லயாவின் அருகில் கண்மணி அமர, அவள் அருகில் வாசுவும், அவன் அருகில் கமலமும் அமர்ந்தார்கள்.

"அக்கா... எப்படி இருக்கீங்க.....?", நெகிழ்வாகக் கேட்டாள் லயா.

"நான் ரொம்ப நல்லா இருக்கேன். நீ.....?", லயாவின் கைகளை ஆதரவாகப் பற்றிக் கொண்டாள் கண்மணி.

லயாவால் பதில் பேச முடியாமல் கண்கள்தான் கலங்கியது, அவளை அறியாமலே, தருண் இருந்த பக்கம் அவள் பார்வை போனது. அவள் மனநிலை புரிந்தவள்போல், கண்மணி இன்னும் ஆதரவாக அவள் கரங்களை அழுத்தினாள்.

"தருண்....., என்கிட்டே பேசவே இல்லக்கா....., அவர் என்னை மறந்துட்டாரா.....? என்னால் அவரை மறக்கவே முடியலை. அவருக்குக் கல்யாணமே ஆயிடுச்சுன்னு சொல்லுறாங்க, உங்களுக்குத் தெரியுமா?", இதைக் கேட்கும் பொழுதே அவள் குரல் நடுங்கியது.

"லயா....., நீ.... அந்தச் செய்தியெல்லாம் நம்புறியா? அதுதான் முக்கியம். இந்த உலகம் ஆயிரம் சொல்லும்.....,

அதையெல்லாம் நம்ப ஆரம்பித்தால், நம்ம நிம்மதிதான் கெட்டுப் போகும். தருணைப் பற்றி நான் எதுவும் சொல்லத் தயாரா இல்லை. ஏன்னா....., இனிமேல் நாங்க சொல்லித்தான் உனக்கு அவன்மேல் நம்பிக்கை வரணும்னா, அது எத்தனைக் காலம்தான் உதவும், அவன்மேல் உனக்கே நம்பிக்கை வரும்வரை வேற யார் என்ன சொன்னாலும் அதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை", அத்தோடு தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

அவர்களும் எவ்வளவு நாள்தான் சொல்லிப் புரிய வைக்க முடியும். பின்னர் படம் துவங்கி விடவே, இருவருமே அமைதியானார்கள். லயாவால் படத்தில் ஒன்ற முடியவில்லை. மனமும், கண்களும் தருணையே சுற்றி வந்தது. அவனைக் கண்களில் நிரப்பி, மனதில் பதிய வைத்துக் கொண்டிருந்தாள்.

அவன் சங்கீதாவுடன் பேசிச் சிரிக்கும் ஒவ்வொரு நொடியும் நெருப்பின்மேல் அமர்ந்திருப்பது போன்ற அவஸ்த்தையை அனுபவித்தாள். எழுந்து சென்று அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்து, "நீ எனக்கு மட்டுமே சொந்தமானவண்டா.....", என்று கத்தவேண்டும்போல் கிளர்ந்த ஆவலை அடக்க, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

சீட்டில் அமர முடியாமல் தவித்தவளின், தவிப்பை தணிப்பதர்க்காகவே இடைவேளை வர, கண்மணியிடம் கூட சொல்லாமல் எழுந்து ஓய்வறைக்குச் சென்றாள். டாய்லெட்டுக்குள் புகுந்து கதவைப் பூட்டிவிட்டு, அந்தக் கதவிலேயே சாய்ந்துகொண்டாள். எதற்கென்று தெரியாமலேயே கண்களில் நீர் பெருகியது.

அதை துடைக்கக் கூடத் தோன்றாமல், நெஞ்சு விம்மித் தணிய, மன பாரம் குறையுமட்டும் அழுது ஓய்ந்தாள். பின்னர் வெளியேறி, கொஞ்சம் டச்சப் செய்துகொண்டு, இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

அவள் அழுதிருப்பது, சிவந்திருந்த அவள் விழிகளில் தெரிந்தது. கண்மணி அதைக் கண்டுகொண்டு, இயலாத

ஒரு புன்னகையுடன் விழியைத் திருப்பிக் கொண்டாள். படம் துவங்கவும், காபி கோப்பைகளுடன் ஆட்கள் வரவே, ஒன்றை எடுத்து லயாவிடம் கொடுத்துவிட்டு, தானும் ஒன்றை எடுத்துக் கொண்டாள் கண்மணி.

"நான் காபி குடிக்க மாட்டேன் கண்மணி.....", மெல்லிய குரலில் சொன்னாள்.

"இன்னைக்கு ஒரு காபி குடிக்கிறதால் ஒண்ணும் ஆகாது குடி...", அழுத்திச் சொல்லவே, வாங்கிக் குடித்தாள்.

படம் முடிந்தவுடன், படத்தை வாங்க வந்திருந்த தியேட்டர் உரிமையாளர்கள் அனைவரின் முகத்திலும் திருப்தியான புன்னகை. பத்திரிக்கை அன்பர்களும், அது ஒரு சிறந்த காதல் படமென்றே பாராட்டினார்கள். இறுதியில் தருணையும், லயாவையும் சேர்த்து புகைப்படம் எடுக்க விரும்புவதாகச் சொல்லவே, இருவரும் இணைந்து புகைப்படம் எடுக்கச் சென்றார்கள்.

தருண், லயாவின் அருகில் நெருங்கி, யாருக்கும் சந்தேகம் வராதவாறு, "என்ன ரொம்ப அழுதியா...? எதுக்கு...? நான் வேற ஒருத்தியோட இருக்கேன்னு நினைச்சா அழுத...? உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடி....?", ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில் அவளிடம் கனல் வீசும் பார்வையை செலுத்தியவன், அடுத்த நொடியில் சிரித்த முகமாக போட்டோவுக்கு போஸ் கொடுத்தான்.

லயாதான் மனதுக்குள் மேலும் சுருண்டு போனாள். அவனின் ஆறுதல் வார்த்தைக்காகவும், அவன் அணைப்புக்காகவும், அவன் கனிவான பார்வைக்காகவும் தான் ஏங்கியிருக்க, அவனது சுடு சொற்கள், அனலில் இட்டப் புழுவாக அவளைத் துடிக்க வைத்தது.

மனதின் துயரத்தை, முயன்று முகத்திற்கு வராமல் காத்தவள், அதன் பிறகு அவனை மறந்தும் நிமிர்ந்து பார்க்கவில்லை. தோளோடு, தோளுரச நின்றாலும், இருவரின் மனமும், தூரத்தில் இருப்பதாகவே தோன்றியது அவளுக்கு.

போட்டோ எடுத்து முடித்துவிடவே, அங்கே நொடியும் தாமதிக்காமல் சங்கீதாவுடன் கிளம்பிவிட்டான். அவன் போவதையே இயலாமையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அதே நேரம் கண்மணி, கமலத்தை அவளிடம் அழைத்துவந்து அறிமுகம் செய்து வைத்தாள்.

"எப்படி இருக்கம்மா.....?", கனிவாகக் கேட்டார் கமலம்.

"நல்லா இருக்கேன்ம்மா....., நீங்க.....?", கொஞ்சம் தயங்கினாலும் கேட்டுவிட்டாள்.

"எனக்கென்ன குறைச்சல்....., ரொம்ப நல்லா இருக்கேன்ம்மா. நீ ஒரு நாள் வீட்டுக்கு வாம்மா.....", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். அதன் பிறகு வந்த நாட்கள், இருவரும் இரு துருவங்களாகவே மாறிப் போனார்கள்.

அவர்கள் நடித்த படம் வெற்றிகரமாக நூறு நாட்கள் ஓடியது. நூறாவது நாள் கொண்டாட்டத்தில், அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப் பட்டது. அன்றைய நாளிலும் தருண் அவளிடம் சரியாகப்பேசவில்லை. ஆனால், அவளை மாதம் ஒரு முறையாவது சந்தித்துவிடுவான்.

அன்றைய மேடையில் எப்படியாவது அவனுடன் பெசிவிட வேண்டுமேன்ற முடிவோடுதான் அவள் வந்திருந்தாள். "தருண் நான் உங்ககிட்டே பேசணும்..", பேசியே ஆகவேண்டும் என்ற பிடிவாதம் தெரிந்தது அவள் குரலில்.

புருவம் சுருக்கி ஒரு நொடி அவளைப் பார்த்தவன், "எப்போ.....?", ஒற்றை வார்த்தையில் தன் சம்மதத்தைச் சொன்னான்.

அவன் சம்மதிக்கமாட்டான் என்று அவள் எண்ண, அவனது இந்தப் பதிலில் கொஞ்சம் தடுமாறினாள். அவள் தடுமாற்றம் உணர்ந்து, "ஷெட்டியோட பார்ட்டி முடிஞ்ச மறுநாள், சாயங்காலம் அம்மா வீட்டுக்கு வா....., அங்கே பேசலாம்", என்று சொல்லிவிட்டு, திரும்பிக் கொண்டான்.

அவனை மறுத்துப் பேசவும் அவளால் முடியவில்லை, அமைதியாகிவிட்டாள். 'அவனுடன் மனம் விட்டுப் பேச வேண்டு மென்று அவள் நினைத்தால்....., அவனோ வீட்டுக்கு, அதுவும் அவனது அம்மா வீட்டுக்கு வரச் சொல்லுகிறான், அவனை என்ன செய்ய?', மனதுக்குள் கறுவினாள்.

ஆனால் அதற்கு முந்தைய அவனுடனான சந்திப்பு கொஞ்சம் சோதனைக்கு உள்ளாக்கினாலும், இருவரும் ராசியாகிய அந்த நாள் இனிமையாகவே சென்றது.

கதவு - 33

நீ அருகில் இருக்கும் பொழுது

உலகையே அடக்கியாளும் மனது

நீ விலகினால் கலங்கிய குட்டையாவதேன்

உன் சுவாசக் காற்றை என்னுடன் விட்டுச்செல்

அந்த கதகதப்பில் உன் அருகாமையை

உன் காதலை உணர்ந்து கொள்கிறேன்.....

அன்று ஷெட்டி, பெரிய பார்ட்டிக்காக ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் படத்தில் நடித்த அனைவருக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. அத்தோடு மட்டுமல்லாமல், தன் திரையுலக நண்பர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

அதில் தாராவும் ஒருத்தி. தாரா ஏற்கனவே தருணின்மேல் கோபத்தில் இருந்தவள், எப்படியாவது அவனைப் பழி வாங்க விரும்பினாள். ஆனால் ஒரு கதாநாயகியாக இருந்துகொண்டு, தொழில் விஷயத்தில் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் அவனது கால்ஷீட் கிடைக்காதா என்று தவமிருந்தார்களே தவிர, அவனை விட்டு வேறு நாயகர்களை தெரிவுசெய்ய கொஞ்சம் தயங்கவே செய்தார்கள்.

எனவே அவன் சொந்த விஷயத்தில்....., அவன் காதல் விஷயத்தில் தலையிட்டுக் குழப்பம் விளைவிக்கத் தயாராக இருந்தாள். எவ்வளவோ முறை லயாவிற்குப் போன் செய்து அவனைப் பற்றி தவறாக எடுத்துச் சொன்னாள். அதற்கு உரம் போடும் விதத்திலேயே தெய்வாவும் பேசியது, அவளுக்கு வசதியாக இருந்தது.

இவ்வளவு முயன்ற பிறகும், வெளிநாட்டில் இருந்து விவி மூலமாக வெளிவரும் செய்திகள், அவள் ரசிக்கும்படி இருக்கவில்லை. நேரடியாக அவர்களைப் பற்றி அவள் கொடுக்கும் செய்திகளால்....., இங்கே அவர்களின் காதல் சேரவேண்டுமென்று ரசிகர்கள் நேர்த்திக்கடன் செய்யும் அளவு சென்றது, அவள் எரிச்சலை அதிகப் படுத்தியது.

தன்னிடம் இவ்வளவு விஷயங்களைக் கேட்டுவிட்டு, மகளை அடக்கி வைக்காமல் என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்று தெய்வாவையும் சகட்டுமேனிக்கு மனதில் கரித்துக் கொட்டினாள்.

இந்த லயாவிற்கு வந்த வாழ்வைப் பாரேன்....., திரையில் தோன்ற, அவள் தாய் திரை மறைவில் வேலை செய்து, தன் வாய்ப்புகளையும் தட்டிப் பறிக்கிறாள் என்றால்....., பேக்கு மாதிரி இருக்கும் அவளுக்கு..... தருண் ஜோடியா.....? மனதுக்குள் வெதும்பினாள்.

எப்படியாவது இன்றையப் பார்ட்டியில் லயாவை நேரில் சந்தித்து, தருணைப் பற்றி இன்னும் மோசமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்படியும் இல்லையா....., தன் வேலையைக் காட்டிவிட வேண்டியதுதான். என்னை அவமானப்படுத்தி, என் காதலை எட்டி உதைத்து, என்னை அசிங்கப்படுத்திய அவனது காதலை, அவ்வளவு சுலபத்தில் சேர விட்டுவிடுவேனா? அவள் கண்கள் வன்மத்தில் ஜொலித்தது.

அன்று, தன்னை சிறந்த முறையில் அலங்கரித்துக் கொண்டாள். அவளது பால் வெள்ளை நிறமும், வடக்கத்திய முகச் சாயலும், லோ கட் உடையும், அசாத்திய உயரமும், அவளை தேவதையாகவே ஜொலிக்க வைத்தது. அவளைக் காணும் யாருக்குமே ஆசை வரும். அவ்வளவு கவர்ச்சியாகக் கிளம்பினாள்.

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் செல்லும் பொழுதே அவளது கண்கள் லயாவையும், தருணையும் மட்டுமே தேடியது. இருவருமே அவள் பார்வையில் சிக்கினார்கள். ஆனால் தனித் தனியாகவே இருந்தார்கள். அப்படி

இருந்தாலும், இருவரின் பார்வையும் நொடிக்கொருதரம் தழுவி மீள்வதை, சிறிது நேரம் ஒதுங்கி இருந்து கவனிக்கவே செய்தாள்.

நொடியில் தீர்மானித்து....., லயா பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, நேராகத் தருணிடம் சென்றாள். அவனே எதிர் பார்க்காத வேளையில்....., அவனை அணைத்து அவன் கன்னங்களில் முத்தமிட்டாள்.

அவள் செய்கையை அவனைச் சுற்றி இருந்த கதாநாயகிகளே எதிர் பார்க்கவில்லை. அனைவரும் அவளை வித்தியாசமாகப் பார்க்க, தருண் யோசனையாக அவளை ஆராய்ந்தான். அவன் ஆராய்ச்சிப் பார்வையை உணர்ந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல் அவனிடம் சாதாரணமாக உரையாடினாள்.

"எக்ஸ்கியூஸ் மீ....., தருண் கொஞ்சம் வாயேன் பேசணும்.....", சொல்லிவிட்டு, அவன் பதிலைக் கூட எதிர் பார்க்காமல், அவன் கைகளை பிடித்து இழுத்துக் கொண்டு சென்றாள்.

அவள் செய்கையில் எழுந்த எரிச்சலை மறைத்தவாறே, "சாரி....., ஐ வில் பீ பாக் சூன்.....", அவர்களிடம், சொன்னவாறே, தாராவோடு சென்றான்.

"எப்படியிருக்க தருண்.....?", செயற்கையாகக் கேட்டாள்.

"நல்லா இருக்கேன்....., நீங்க.....?", அவன் சாதாரணமாகக் கேட்டாலும், அவளிடமிருந்து தன் ஆராய்ச்சிப் பார்வையை விலக்கவில்லை.

தாரா வந்ததையும், தருணோடு பேசியதையும், அவள் முத்தமிட்டதையும் இதயம் வலிக்க வலிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் லயா. தன்னால் அவனை, பொதுவில் நெருங்கவே முடியாத பொழுது, அவள் நெருங்கி, அணைத்து, முத்தமிட்டு....., லயாவால் அங்கே இருக்கவே முடியவில்லை.

அது சாதாரணப் பார்ட்டியாக இருந்திருந்தால் அங்கிருந்து உடனே கிளம்பி இருப்பாள். ஆனால் அது அவள் நடித்தப் படத்தின் தயாரிப்பாளரே கொடுக்கும் பார்ட்டி, ஆகையால் அவளால் அங்கிருந்து பாதியில் செல்ல முடியவில்லை.

கண்களில் அணை உடைக்க காத்திருக்கும் கண்ணீருக்கு எவ்வளவு நேரம் பொறுமை இருக்கும் என்பது தெரியவில்லை. கொஞ்சம் தாமதித்தாலும் கரையை உடைக்கத் தயாராய் அவை இருந்தன.

"தருண்....., பாத்து ரொம்ப நாள் ஆச்சு....., படம் நல்லா வந்துருக்குன்னு கதிர் சொன்னான்....., நான் நடிச்சிருக்க வேண்டிய படம்..... சரி பரவாயில்லை....., எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்காமலா போகும்.....", இதழ்களில் செயற்கை புன்னகையுடனும், கண்களில் வன்மத்துடனும் பேசினாள்.

"இந்தப் படம் உன்னை விட்டுப் போகக் காரணம், நான் இல்லை தாரா. இப்போ கூட, நான் உன்னோடு படம் செய்யத் தயாராத்தான் இருக்கேன். ஆனால், அதுக்கு நீ உன்னை மாத்திட்டுத்தான் ஆகணும். அதே பழைய தாராவா, நீ எப்போ வேண்ணா என்னோட நடிக்கலாம்", அவன் நிலையை அவன் விளக்கினான்.

'என்னை அவமானப்படுத்தியது இவனுக்கு ஒரு பொருட்டே இல்லையா?', மனதுக்குள் வெகுண்டாள் அவள்.

"இந்தப் படம் என்னை விட்டுப் போக நானா காரணம்.....? நீ என்கிட்டே அப்படிப் பேசியிருக்கலாமா? உனக்கு ஒரு சாரி சொல்லணும்னு கூடத் தோணலை இல்ல".

"நான் எதுவும் தப்பா சொன்னதா எனக்கு ஞாபகம் இல்லையே. நான் என்னோட மனசில் இருப்பதையும், என்னோட எதிர் பார்ப்பையும் சொன்னேன். என்னோட எதிர் பார்ப்புக்கு நீ இல்லைன்னு சொன்னேன் அவ்வளவுதான்".

"ஒரு நடிகையைக் கல்யாணம் செய்ய மாட்டேன்னு சொல்லிட்டு இப்போ லயா பின்னாடி சுத்துற.....? இதுக்கு

என்ன அர்த்தம்?".

"அது என்னோட பெர்சனல்....., அவ நடிகையா இருந்தாலும், கண்டிப்பா உன்னை மாதிரி இல்லை", அந்த உன்னை மாதிரியில் கொடுத்த அழுத்தம், அவள் கோபத்தை அதிகரித்தது.

"என்னை மாதிரின்னா.....?", கண்களில் கனலை இப்பொழுது அவனுக்கு நேரடியாகவே காட்டினாள்.

"தாரா....., நான் இதைப் பற்றி உன்கிட்டே ஏற்கனவே தெளிவா பேசிட்டேன். என் மனசுக்குள் நீ இல்லவே இல்லை. அந்த இடத்தை லயாவால் மட்டும்தான் பிடிக்க முடிஞ்சுது. இனிமேலாவது உன்னை நீ மாத்திக்கோ", அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

"அந்தத் தலையாட்டி பொம்மைதான் வேணும்னு நீ முடிவு பண்ணிட்ட. ஆனால் அவளை எப்படி நீ கல்யாணம் செஞ்சுக்கறன்னு பார்க்கலாம்.....", அவளுக்கு வந்த கண்மண் தெரியாத கோபத்தில், அவனிடம் சவால் விட்டாள்.

"எனக்கு அவதான் வேணும்னு நான் முடிவு பண்ணிட்டால்....., அதை அவ தடுத்தாலே நிறுத்த முடியாது. அப்படியிருக்கும்போது நீ எம்மாத்திரம்.....", ஏளனமாகக் கேட்டான்.

"ஓ....., உனக்கு உன்மேல் அவ்வளவு நம்பிக்கையா.....? கொஞ்சம் அவளைத் திரும்பி பார். அவ முகத்தில், இப்போ கொஞ்சமாவது உன்மேல் நம்பிக்கை தெரியுதான்னு....., எனக்கு, உன்னை நினைத்தால் ரொம்பவே பாவமா இருக்கு தருண்", அவள் சொன்ன பிறகுதான் அவளது நோக்கமே அவனுக்குப் புரிந்தது.

"ஹா....ஹா....ஹா....., இந்த எண்ணத்தோடுதான் என்னைத் தனியா இழுத்துட்டு வந்து பேசுறியா....? நானும் எலி எதுக்குடா அம்மணமா ஓடுதுன்னு நினைச்சேன். நீ சொல்லுறதும் சரிதான்....., இப்போ அவ கண்ணில்

குழப்பம் தெரியுதுதான். ஆனால், அது நீ நினைக்கிற மாதிரி என்மேல் நம்பிக்கை இல்லாத பார்வை இல்லை.

என்னைப் பொறுத்த அளவில் அவ இதையெல்லாம் தாண்டி வரணும். அப்படித் தாண்டி வந்தால்தான் நான் அவளுக்கு கிடைப்பேன். இதில் எந்த சமரசமும் கிடையாது. இங்கே இருக்கற இருபது பெண்கள் கூடவும் நான் பாரபட்சம் இல்லாமல்தான் பேசுறேன்.

இதையெல்லாம் நினைத்து அவ வருத்தப்பட்டு, கவலைப் பட்டால்...., அவளோட வாழ்க்கை முழுசும் அவ பீல் பண்ணவேண்டி இருக்கும். அது அவளுக்கும் தெரியும். நான் அவளைச் சமாதனப் படுத்தப்போறதே இல்லை. உண்மையை உணர்ந்து, அவளே சமாதானம் ஆகணும்.

இதுக்கு மேலையும் உன்னால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் நீ செய். அவளுக்கு வைக்கும் பரீட்ச்சைதான் இதெல்லாம்....., சொல்லப்போனால் என்னோட வேலையை நீ சுலபமாக்குற அவ்வளவுதான். இன்னொரு விஷயம்....., இவ்வளவுநாள் நீ ஒரு பெண் என்ற விதத்தில் உன்னை நான் எதுவுமே செய்யாமல் விட்டு வைத்தேன், அதுவும் நீ தெய்வாவிடமும், லயாவிடமும் என்னைப் பற்றி போட்டுக் கொடுக்கிறாய் என்று தெரிந்தும்.....

எப்போ நீ என்னையே உரசிப் பாக்கணும்னு முடிவு பண்ணிட்டியோ.., இனிமேல் தமிழ் படங்களில் உனக்கு வாய்ப்பு வராது. ஆனால் வேற மொழிப் படங்களில் வரும் வாய்ப்பை, நீ தக்க வச்சுக்கிறது....., இனிமேல் நீ நடந்துக்கற முறையில்தான் இருக்கு", சிரித்தவாறே கோபப்பட முடியும் என்பதை, அந்த நேரம் உணர்ந்தாள் தாரா.

முதல் முறையாகத் தேவையில்லாமல் தருணைப் பகைத்துக் கொண்டோமோ என்று எண்ணினாள். அவன் காதலை கலைக்கவேண்டுமென்று நாம் எண்ணினால் அவன் நம் வாழ்க்கையிலேயே கை வைக்கின்றானே என்று நொந்து போனாள்.

எதையாவது சொல்லி சமாளிக்கலாம் என்று எண்ணினால், அதற்கு வாய்ப்பே அளிக்காமல், "இதுவரை உன்னை விட்டு ஒதுங்கிப் போன தருணையும், சிரிச்சுட்டே எல்லாத்தையும் சகிச்சுக்கற தருணையும் மட்டுமே பார்த்திருக்க. இனிமேல் தருணுக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும்னும் நீ தெரிஞ்சுப்ப.

சரி அதெல்லாம் போகட்டும், வா, நாம டான்ஸ் ஆடப் போகலாம்....., பார்ட்டி ஸ்டார்ட் பண்ணிட்டாங்க போல, வா...வா...", எதுவுமே நடவாததுபோல் அவளை ஆட அழைத்தான்.

இவர்கள் இங்கே சிரித்தவாறே வழக்கடிக்க, லயாவின் பார்வை இவர்களை விட்டு இம்மியும் விலகவில்லை. பொதுவாக, இந்த மாதிரிப் பார்ட்டிகளுக்கு கண்மணி வருவதில்லை. எனவே அவளால் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமல் தனித்திருந்தாள்.

அந்த நேரம், அவள் அருகில் இருந்த இருக்கையில் இன்னும் இரண்டு நடிகைகள் வந்து அமர்ந்தார்கள். அவர்களும் தருணுடன் ஏற்கனவே நடித்தவர்கள் தான்.

"என்னப்பா நடக்குது இங்கே....., வந்தா.... தருணோட பசை போட்ட மாதிரி ஒட்டிகிட்டா. தருணும் எதுவும் சொல்லாமலே இருக்கானே என்ன இது?", ஒருத்தி கேட்க,

"அட உனக்கு விஷயம் தெரியாதா? அவ, தருணை பிராக்கெட் போடப் பாக்குறா, ஆனால் இதுக்கெல்லாம் சிக்குற ஆளா தருண். அதைவிட, தருண் மாதிரி ஒரு ஆள் கிடைத்தால் நீயோ நானோ வேண்டாம்னு சொல்லுவோமா? அவனை எத்தனைபேர் வேணும்னாலும் ஆசைப் படலாம். ஆனால் அவனோட மனசுக்குள் யார் இருக்காங்களோ, அந்த கடவுளுக்குத்தான் தெரியும்.

அப்படி அவன் மனசில் இடம் பிடிக்கும் பொண்ணு உண்மையிலேயே கொடுத்து வைத்தவள்தான். உனக்குத் தெரியுமா...., அவனோட பெட் நேம் நவீன விஸ்வாமித்திரர்

தான். அவன் தவத்தை கலைக்க யாரால முடியுமோ.....", பெருமூச்சு விட்டாள் மற்றவள்.

இதைக் கேட்டு இதுவரை உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிருந்த அவள் மனது, அண்டார்ட்டிக்காவின் பனிச் சாரலில் நனைந்ததுபோல் சில்லென்று ஆனது. அந்த நவீன விஸ்வாமித்திரர் என்று பெயர் வாங்கியவன், தன் அருகாமையில் குழைவதும், தடுமாறுவதும் அவள் கண் முன்பு வந்து போனது.

அவன் தவத்தைக் கலைத்தவள் தான்தான் என்ற நினைப்பில் நெஞ்சம் பெருமிதத்தில் விம்மித் தணிந்தது. நான்தான் அந்த அதிஷ்டக்காரியென்று கத்தவேண்டும்போல் இருந்தது. லயாவின் அருகில் அமர்ந்திருந்தவர்களும், தாரா, தருணையே பார்த்துக் கொண்டிருந்ததால், அவர்கள் லயாவைக் கவனிக்கவில்லை.

அதன் பிறகு, மனம் கொஞ்சம் லேசாக, தருணைத் தனியாகச் சந்திக்கும் வேளையை எதிர் பார்த்துக் காத்திருந்தாள் அவள். அவள் கிளம்பும் வரை அவளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவே இல்லை. அண்டர் கிரவுண்டில் இருந்த கார் பார்க்கிங்செல்ல, அங்கே அவனது டிரைவர் காரோடு காத்திருப்பது தெரிந்தது.

கொஞ்சம் தைரியத்தை வர வைத்துக்கொண்டு அவன் அருகில் சென்றாள். "அண்ணே தருண் எப்போ வாறேன்னு சொன்னார்..?", அவள் கேட்கவே திடுக்கிட்டு அவளைப் பார்த்தவர், அவருக்கும் அவர்கள் காதல் தெரியுமாகையால்.....,

"தம்பி, கொஞ்ச நேரமானதும் என்னைக் கால் செய்யச் சொல்லி இருக்காரும்மா. அதைச் சாக்கா வச்சுக் கிளம்பி வாறேன்னு சொன்னார். நீங்க உள்ளே உக்காருங்க, நான் அவருக்குக் கால் பண்ணுறேன்", அவளுக்குப் பின் பக்க கதவைத் திறந்துவிட்டு, தருணுக்கு கால் செய்யப் போனார்.

சரியாகப் பத்து நிமிடத்தில் தருண் காருக்கு வந்து சேர்ந்தான். காரின் பின் இருக்கையில் ஏறி அமரவே, அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள் லயா. அவனைப் பேசவே விடாமல், இழுத்து அணைத்து, அவன் இதழ்களை முற்றுகையிட்டாள். ஒரு நொடி தாமதித்தவன், பின்னர் அவன் முற்றுகையைத் தொடர்ந்தான். அந்த முத்தத்தை முடிக்கவே விரும்பாதவளாக, அவனை விலகவே அனுமதிக்கவில்லை அவள்.

இருவருக்கும் நடுவில் இருந்த கோப தாபங்கள், அந்த முத்தத்தில் கரைந்தன. அவனை விடவே முடியாது என்பதுபோல், அவனை ஒட்டியே அமர்ந்துகொண்டாள். யாரின் கைக்கும் சிக்காத மாணிக்கம், தன் கைப்பிடிக்குள் இருப்பது புரிந்து, அந்த நொடியை ஆழ்ந்து அனுபவித்தாள்.

தருண், லயாவிடமிருந்து எதை எதிர் பார்த்திருந்தாலும் இந்த அணைப்பை எதிர் பார்க்கவில்லை. இன்று தன்னைத் தாராவோடு பார்த்துவிட்டு, கோபம் கொள்வாள், இல்லையா சண்டை போடுவாள் என்று எதிர்பார்க்க, அவளது இந்த மாற்றம், அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது.

"என்னடா திடீர்ன்னு.....", அவன் கேட்க, "இப்போ பேசவேண்டாம்....., எனக்கு இந்த நிமிஷத்தோட சந்தோஷத்தை அப்படியே அனுபவிக்கணும். நாளைக்குச் சாயங்காலம் உங்க வீட்டுக்கு வாறேன். அங்கே பேசலாம்....., மீண்டும் அவனை இழுத்து அணைத்து, முத்தமிட்டு விடுவித்தாள்.

அவளை வியப்பாகப் பார்த்தவன் பிறகு எதுவும் சொல்லவில்லை. அன்றும், மறுநாள் மாலையும், இந்த உலகத்திலேயே தன்னைவிட சந்தோசமானவள் யாரும் இருக்க முடியாது என்று அவள் இறுமாந்திருந்தாள். அவளுக்குத் தெரியவில்லை, இனிமேல் தன் வாழ்வில் மகிழ்ச்சி என்ற ஒன்று கிடைக்கவே போவதில்லை என்று.....

கதவு - 34

உன் ஒற்றைச் சொல்லில்

என் உள்ளத்தின் காயங்கள்

மாயமாகும் விந்தை.....

நீ என் காயத்தின் காரணம் என்பதாலா

இல்லையென்றால்.....

அந்தக் காயத்தின் மருந்தும்

நீயே என்பதாலா.....

காரில் அமர்ந்து பின்னால் சாய்ந்து, கண்மூடி அமர்ந்திருந்தாள். கண்ணிமைக்குள் தெய்வா வந்து சபித்துவிட்டு போனாள். பெற்ற தாயிடம் சாபம் வாங்கும் துரதிஷ்டம் எந்தப் பிள்ளைக்கும் அமையக் கூடாது.

தாயின் வார்த்தைகளை நினைத்த பொழுது நெஞ்சு கனத்தது. இத்தனை வருடங்கள் தன் தாய்க்காக, அவளது தியாகத்துக்காக என்று மட்டும் இருந்த தன் முட்டாள்தனத்தை இப்பொழுது நொந்துகொண்டாள் லயா.

ஒரு வருடமா இரண்டு வருடமா....., முழுதாக நான்கு வருடங்கள்....., எந்த மகள் செய்வாள் இப்படி ஒரு தியாகத்தை. தருணோடான தன் காதல், கானல் நீராகிப்போனக் கொடூரம், அதையும், தானே தேடிக்கொண்ட விதம். அனைத்தும், இப்பொழுது நினைத்தாலும், பச்சை ரணமாக வலித்தது.

இந்த நான்கு வருடங்களில், தருணுடன் மேலும் இரண்டு படங்களில் ஜோடியாக நடித்தும் விட்டாள். ஆனால் அந்த நெருக்கம்....., முதல் படத்தில் அவனுடன் நடித்த பொழுது உணர்ந்த பாதுகாப்பு, நம்பிக்கை, அனைத்தும் அப்படியே அவன்மேல் இருக்கிறதுதான்.

அவ்வளவு ஏன், அவன்மேல் இருந்த காதல் கூட வேர்விட்டு, முளைத்து விருட்சமாகி இருப்பதுதான் கொடுமை. ஆனால் அதை அவனிடம் சொல்ல முடியாத துயரம்....., நெஞ்சை அடைக்கும் இந்த வலியைச் சுமந்தவாறுதான் அலைகிறாள்.

இடையில் ஒரு முறை, தற்கொலைக்குக் கூட முயன்றாள். அதுவும் அவனுடன் மூன்றாவது படம் நடிக்கும் பொழுதுதான்....., அன்றைய படப்பிடிப்பு, திருமணம் முடிந்து முதலிரவுக் காட்சியைப் படமாக்கினார்கள். கொஞ்சம் நெருக்கமான காட்சிதான்.

தன் வாழ்வில், அவனோடு நடக்கவே போகாத ஒரு காட்சி, படமாக்கப் போவதிலும், அன்று காலையில், அவன் காட்சிக்காகக் கட்டிய தாலியோடு நெகிழ்ந்து அமர்ந்திருந்தவளை நெருங்கி, "மேம் தாலியைக் கழட்டித் தாங்க. இனிமேல் சாயங்காலம்தான் ஷூட்டிங்", என்று லைட் பாய் சொன்ன பொழுது,

"இல்லை நான் தர மாட்டேன்....., இது என் தருண் எனக்குக் கட்டிய தாலி.....", என்று கதறத்தான் நினைத்தாள். ஆனால் அது, எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்று தெரியவே,

"இல்லப்பா... சாயங்காலம் ஷூட்டிங் முடிச்சுக் கழட்டிக்கலாம், வீட்டுக்குப் போக முன்னாடி, நானே ஞாபகமா தந்துடுறேன்", தொண்டையில் கசந்து வழியும் உணர்வை, மென்று முழுங்கியவாறு, பொறுமையாகச் சொல்லி அனுப்புவதற்குள், பாதி மரித்துவிட்டாள் அவள்.

"என்னடி இது புதுப் பழக்கம்.....", அம்மா, கண்ணு, பாப்பா, என்று கொஞ்சியவள், இப்பொழுதெல்லாம் தன் விஷத்தை நேரடியாக கக்கத் துவங்கியிருந்தாள்.

தாயை உறுத்து விழித்தவள், "நடிப்புக்காக கூட என் கழுத்தில் தாலி ஏறுவதை உன்னால் தாங்கிக்க முடியலையாம்மா.....?", எழுந்த விம்மலை அடக்கியவாறு,

காருக்கு ஓடும் மகளை, ஏளனச் சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் தெய்வா.

ஓட்டுனரைத் தவிர்த்து, மணப்பெண் கோலத்தில், வீட்டுக்கு வந்த லயா, ஒரு பாட்டம் அழுது ஓய்ந்தாள். கழுத்தில் புது மஞ்சள் தாலியுடன், பட்டுப் புடவையில் தன்னை பார்த்தவளுக்கு, இது நடிப்புக்காகப் போட்ட வேஷம், இது நடிப்புக்காகக் கட்டிய தாலி என்பதை ஒரு சதவீதம் கூட நம்ப முடியவில்லை.

இந்தக் காட்சிக்கே இவ்வளவு நெகிழ்ந்த தன்னால் இன்றைய முதலிரவுக் காட்சியில், நடிக்க அவளால் முடியும் என்றே தோன்றவில்லை. ஆம் நடிக்க முடியாது....., எங்கே அவனோடு வாழ்த்து விடுவோமோ, என்றுதான் கலங்கினாள்.

வரவே கூடாது என்று அவள் ஏங்கிய அந்தப் பொழுதும் வந்தே விட்டது. இங்கே தருணும் அதே நிலையில்தான் இருந்தான். இதுவரை அவன் புலன்கள் அடங்க மறுப்பது அவளிடம் மட்டும்தான். அவள் விலகிச் சென்ற பிறகும், மேலும் பத்து படங்களில் நடித்துவிட்டான்.

ஐந்து புது நடிகைகளுடனும், ஏற்கனவே நடித்த நடிகைகளுடனும் மாற்றி மாற்றி என நடித்த பிறகும், லயாவிடம் சென்ற தன் மனம், வேறு நடிகையின் நிழலைக் கூட மனத்தால் நினைக்க மறுக்கிறதே என்று தன்னையே வெறுத்தான்.

திருமணம் செய்யச் சொல்லி கட்டாயப் படுத்தும் தாய்க்கு, முறைப்பையே பதிலாக்கினான். வீட்டில் கண்மணியின் இரண்டு வயது மகன் துஷ்யந்த், அவன் மனக் காயத்தை ஆற்றும் மருந்தானான். அவனுக்கும் சினிமா ஸ்டார் மாமாவின் மேல் பெரிய பற்றுதல்.

வீட்டில் அவன் இருந்தால், வேறு யாரிடமும் செல்லவே மாட்டான். எனவே, தருணும் அவனை விலக்குவதே இல்லை. இருவரும் உற்ற விளையாட்டுத் தோழர்களாகிப்

போனார்கள். இந்த நிம்மதியெல்லாம் மறுநாள் ஷூட்டிங் ஸ்பாட்டில் லயாவைக் காணும் வரை மட்டுமே.

அவனுக்கு மேக்கப் போடும் பொழுதே, தருண் மிகுந்த கோபத்தில் இருப்பது கண்மணிக்குத் தெரிந்தது. முன்பு கண்மணியின் பேச்சை மட்டுமாவது கொஞ்சம் கேட்டவன், லயாவின் பிரிவிற்குப் பிறகு, யாரையுமே நெருங்க விடாமல் செய்துவிட்டான். கண்மணியிடம் பேசுவதைக் கூட அறவே விட்டுவிட்டான்.

"தருண்....., இன்னைக்கு ஸீன்....., கொஞ்சம் பாத்து நடந்துக்கோ....., பாவம் அவ, சின்னப் பொண்ணு..... ஏதோ.....", தருணின் எரிக்கும் பார்வையில், அடுத்த வார்த்தையைச் சொல்லும் தைரியம் அவளுக்கு வரவில்லை. கழுத்தைச் சுற்றியிருந்த டவலை உருவி, விசிறியடித்துவிட்டு, அங்கிருந்து வெளியேறினான் தருண்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றினாள் கண்மணி. அவன் பின்னால் சென்றாள். இப்பொழுது அவனது டென்ஷனைக் குறைக்க தன் மகனால் மட்டுமே முடியும் என்பது புரிய, தன் மகனுக்கு போன் செய்தாள்.

கமலத்திடம் பேசிவிட்டு, துஷ்யந்திடம் போனைக் கொடுக்கச் சொன்னாள். "என்னம்மா.....?", அவன் மழலை மொழியில் கேட்க,

"மாமாட்ட பேசுடா கண்ணா.....", சொல்லிவிட்டு ஸ்பீக்கரில் போட்டு, போனைத் தருணின் கையில் திணித்தாள்.

"மாமா....., எக்கு.....பொண்ணு..... பெத்தி தா மாமா.....", சொன்னதையே மறுபடியும் சொல்லிக் கொண்டிருந்தான் துஷ்யந்த்.

கமலம் மகனைக் கல்யாணம் செய்யச் சொல்லி ஓய்ந்து போனார், அவன் துஷ்யந்திடம் நன்றாக விளையாடுவதால், உனக்கு ஒரு பொண்ணு பெத்துக் கேளுடா மாமாட்ட", என்று அவர் சொல்லுவதையே, இப்பொழுது கேட்டுக் கொண்டிருந்தான்.

இதைக் கேட்ட தருணிற்கு இன்னும் கோபம் கூடியதே தவிர குறையவில்லை. கண்மணி தன் தலையிலேயே அடித்துக் கொள்ள, போனை அவள் வாங்கும் முன்பே அது தரையில் விழுந்து சில்லு சில்லாக நொறுங்கியிருந்தது.

அதே கோபத்தோடு காட்சிக்குச் சென்ற அவனை வரவேற்றது, படுக்கையில் பதுமைபோல் அமர்ந்திருந்த, லயாவே. ஒரு நிமிடம், தன் கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு, அவளை அடைந்துவிடுவோமா என்ற வேகம் அவனுள் பிறக்க, அதை அடக்க முடியாமல் தடுமாறினான் அவன்.

"வாங்க சார்....., டேக் போய்டலாமா.....?", இயக்குனரின் கேள்வியில் தன்னை நிலைப்படுத்தினான்.

"ம்ம்ம்.....", ஒற்றை தலையசைப்பில் சம்மதம் சொன்னான். படுக்கையறைக் காட்சிகளை எடுக்கும் பொழுது, இயக்குனரும், ஒளிபதிவாளரும் மட்டுமே அறைக்குள் இருப்பார்கள். மற்றவர்களை வெளியில் அனுப்பி விட்டார்கள்.

காட்சி இப்படி வரவேண்டும் என்று மட்டுமே அவர்களிடம் சொன்னார். இருவருமே தேர்ந்த நடிகர்கள் என்பதால், காட்சியை விளக்கும் அவசியமில்லை என்று முடிவு செய்தார். அதைவிட, அந்த இயக்குனர், தருணின் அறிமுக இயக்குனர். எனவே, தருண், தன் வாழ்வின் ரகசியங்களை அவரிடம் மறைப்பது இல்லை.

எனவே தருணிற்கும், லயாவிற்கும் இடையில் இருந்த காதல் அவருக்குத் தெரியும், அது முறிந்ததும் அவருக்குத் தெரியும். தருணைப் பற்றி, அவன் குணத்தைப் பற்றி நன்கு அறிந்தவர் ஆகையால், லயாவின்மேல் அவனுக்கு இருக்கும் காதல் குறைந்திருக்காது என்பது அவரது அனுமானம். முதலில் வரும் வசனங்களை ஏற்கனவே எடுத்துவிட்டபடியால்....., நேரடியாக காட்சியைப் படமாக்கத் தயாரானார்கள்.

அவன் அருகில் வந்து அமர்ந்த பொழுதே, தடுமாறிப் போனது அவள் மட்டுமல்ல, அவனும் தான். அன்று இரவு முழுவதும் ஷூட்டிங் போகும் என்று அனைவரும் எதிர் பார்த்தார்கள். அறையின் வெளிச்சம், கேமரா கோணம் என அனைத்தும் சரியாக அமைத்தவுடன், ஆக்ஷன் சொல்லப் பட்டது.

ஆண்தான் முதலில் துவங்கவேண்டும் என்ற முறைக்கு ஏற்ப, கேமராவில் தங்கள் முகம் மறையாதவாறு, அவளை நெருங்கினான். விலக வேண்டிய அவளோ, அசையாமல் கண்களில் தவிப்புடன், அவனை எதிர் கொண்டாள்.

தருண் கூர்மையாக அவளைப் பார்க்கவே, அவன் பார்வை வீச்சு தாங்காமல், கண்களை மூடிக் கொண்டாள். எது நடக்கக் கூடாது என்று இருவரும் பயந்தார்களோ, அந்த நேரமும் வந்தே விட்டது. மனதுக்குப் பிடித்தவர்களின் நெருக்கம், இருவரையுமே தடுமாறச் செய்ததுதான் நிஜம்.

ஒரு கட்டத்தில் காட்சியில் ஒன்றிவிட, இயக்குனர் கட் சொன்ன பிறகும், இருவராலும் நிதானத்துக்கு வர முடியவில்லை. காட்சிக்கு வேண்டி, ஆடை வடிவமைப்பாளரை அழைத்து, இருவரின் உடைகளில், சிறிய மாற்றம் செய்து காட்சியைத் துவங்கினார்கள்.

ஏற்கனவே தாபத்தில் வெந்துகொண்டிருந்தவன், இந்த நிலையில் அவளை விட்டு விலக முடியாதவன் ஆனான். தன் மேனி உணரும் அவள் மென்மைகளில், அது படபிடிப்புக் காட்சி என்பதே, அவனுக்கு மறந்து போனது.

இதற்குமேல் போனால் சென்சார் போர்டில் காட்சியைக் கத்தரிக்கச் சொல்வார்கள் என்று தோன்றவே, இயக்குனர் கட் சொன்னார். ஆனால் அவர் கட் சொன்னது கூடத் தெரியாமல், தங்கள் உலகத்தில் லயித்திருந்தனர் இருவரும்.

தருண் தன் கட்டுப்பாடுகள் மொத்தத்தையும் இழந்தான். அவள் இதழ்களை வன்மையாக ஆக்கிரமித்தான். அவன்

கைகள், அவள் மேனி முழுவதும் முழு சுதந்திரத்தில் அலைந்தது. லயாவே முதலில் ஒரு நிலைக்கு வந்தாள்.

"தருண்....., ஷூட்டிங்.....", அவன் காதில் மென்மையாக முணுமுணுத்தாள்.

இவ்வளவு நேரம் நடந்ததில், தன்னையே நொந்தவன், கோபம் கண்களை மறைக்க, "என்னடி....., உங்க அம்மா நல்லா ட்ரைனிங் கொடுக்குறா போல.....?", என்ன சொல்கிறோம் என்றே தெரியாமல், தேள் கொடுக்கென வார்த்தைகளை அவள் இதயத்தில் கொட்டினான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு, துடித்துப் போனாள் லயா. உடலில் ஏறியிருந்த காம போதை மொத்தமும் வடிய, சேலையை வாரிச் சுருட்டிக் கொண்டு, பக்கத்தில் இருந்த அறைக்குள் ஓடி மறைந்தாள். கொட்டிய வார்த்தைகளின் வீரியம் அப்பொழுதுதான் அவனுக்கு உறைக்க, தலையில் கைவைத்தவாறு எழுந்து அமர்ந்தான்.

அவர்கள் பேசியது அங்கிருந்த மற்ற இருவருக்கும் கேட்கவில்லை. ஆனால் தருண்தான் ஏதோ சொல்லிவிட்டான் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது.

"செய்த தப்பெல்லாம் நீ செஞ்சுட்டு ஏண்டா அவளை நோகடிக்கிற...? முதல்ல போய் அவளைப் பார்.....", இயக்குனர் அவனைக் கட்டாயப்படுத்தி அனுப்பினார். அவன் செல்லும் முன்பே, ஆடையைக் களைந்துவிட்டு, வேறு உடைக்கு மாறியவள், புயலென வெளியேறினாள்.

காலைவரை படப்பிடிப்புத் தொடருமென்று எதிர் பார்த்தவர்கள், மூன்று மணி நேரத்தில் லயா வெளியேறவே, புரியாமல் ஒருவர் மற்றவரை பார்த்தார்கள்.

லயாவை வீட்டில் டிரைவர் விடவே, தன் அறைக்குச் சென்றவள், தாய் வைத்திருக்கும் தூக்க மாத்திரைகள் அனைத்தையும் நொடியில் விழுங்கி விட்டாள். மகளின் பின்னாலேயே மற்றொரு காரில் வந்த தெய்வா வருவதற்கு முன்பே இது நடந்து விட்டது.

"என்ன காரியம்டி செஞ்ச.....?", மகளை ஓங்கி அறைந்தாள் தெய்வா.

"இப்படி ஒரு பிழைப்பு பிழைப்பதற்கு, நான் செத்துப் போறேன்.....", அதைவிட ஆங்காரமாகக் கத்திக் கொண்டு, தாயை வெளியே தள்ளி கதவை அறைந்து சாத்தினாள்.

இவர்கள் பின்னாலேயே வந்து சேர்ந்திருந்த தருண், இயக்குனர், ஒளிப்பதிவாளர் என அனைவரும் சேர்ந்து, கதவை உடைத்து, காரில் அவளை அள்ளிப் போட்டு, மருத்துவமனைக்கு விரைந்தார்கள்.

தெய்வா புலம்பியவாறே வந்தாள். லயாவைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டு கண்ணீர் வடித்தான் தருண். தன் இயலாமையை, தன் கோழைத்தனத்தை, தன் உணர்வுகளை மறைக்க, உணர்வுகளை அடக்க முடியாமல், அவளிடம் பேசிய பேச்சுக்களால், அவனாலேயே அவனை மன்னிக்க முடியவில்லை.

மருத்துவமனை வந்து சேரும் முன்னர் மயங்கிவிட்டாள் அவள். காரில் உணர்வோடு இருந்த ஒரு நொடி கூட, அவள் கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வடியவில்லை. உணர்வுகள் அனைத்தும் மரத்த ஒரு நிலையில் அவள் இருந்தாள்.

அவளைக் கைகளில் அள்ளிக்கொண்டு ஓடினான் தருண். ஐசியூ வில் அவளைச் சேர்த்துவிட்டு, அங்கிருந்த பெஞ்சில் சோர்ந்து அமர்ந்தான். விஷயத்தைக் கேள்விப்பட்டு, வாசுவும் கண்மணியும் அவனைத் தேடி வந்தார்கள்.

"டேய்....., நான் இவ்வளவு சொல்லியும் ஏண்டா இப்படி செஞ்ச.....? அவளை என்னடா சொன்ன.....? உன்னால் தானேடா அவ இப்பிடி செய்துக்கிட்டா.....? சொல்லுடா.....", அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

"கண்மணி.... அவனே வருத்தத்தில் இருக்கான், நீவேற ஏன் அவனைப் படுத்துற?", சுற்றிலும் இருப்பவர்களுக்கு விஷயம் எட்டிவிடக் கூடாதே என்ற எண்ணம் வாசுவுக்கு.

கண்மணி கொஞ்சம் வேகம் தணிந்து, அவன் அருகில் அமர்ந்தாள். அவள் மடியில் தலை வைத்து, குலுங்கி அழுதான் தருண். "என்னால் அவ இல்லாமல் இருக்க முடியலை கண்மணி. அவ என்னை விட்டுட்டு போய்ட்டாங்கற கோபத்தில், அப்படியும் அவளை மறக்க முடியாத என்மேல் வந்த ஆத்திரத்தில், என்ன பேசுறேன்னே தெரியாமல் பேசிட்டேன்.

அதுக்கு அவ, என்னை ஓங்கி நாலு அடி அடிச்சு இருந்திருக்கலாம். இல்லையா, என்னையே திரும்பத் திட்டி இருந்திருக்கலாம்....., அதெல்லாம் விட்டுட்டு, ஏன் இப்படி அவளையே தண்டிச்சுட்டா? எப்படி அவளால் முடிஞ்சுது...? அவளால் என்னை விட்டுப் போக முடியுமா....?

நான் அவளுக்கு வேண்டாமா.....? ஆனா எனக்கு, எனக்கு அவ வேணும் கண்மணி....., அவ இல்லாமல் என்னால் வாழ முடியாது. இதுவரை என்ன என்னவோ கோபத்தில், அவளை விட்டுட்டு இருந்துட்டேன். இப்போ....., என்னால் முடியலை கண்மணி.....", இதுவரை உள்ளுக்குள் பாறையாக இறுகி இருந்தவன், எரிமலைக் குழம்பு லார்வாக்களை கக்குவதைப் போல, உள்ளே அழுத்திய துன்பங்களை வாய் விட்டுச் சொல்லி அழுதான்.

உறுதியான ஆண்மகனாகவே அவனைப் பார்த்துவிட்ட கண்மணி, தன் அண்ணன் இப்படிக் குமுறி அழுவதைத் தாங்க முடியாமல், அவளும் கண்ணீர் விட்டாள்.

"இப்படிப் பண்ணிட்டாளே....., இப்படிப் பண்ணிட்டாளே.....", புலம்பித் தள்ளினான் தருண்.

ஐசியூவில் இருந்து மருத்துவர் வெளியே வந்தார். தருண் வேகமாக அவரை நெருங்கினான். "டாக்டர் லயாவுக்கு எப்படி இருக்கு..?", குரலில் அப்படி ஒரு நடுக்கம்.

"கவலைப் படுற அளவு ஒண்ணும் இல்லை. அதான் நீங்க உடனே கூட்டிட்டு வந்துட்டீங்களே. ஸ்டொமக் வாஷ் பண்ணி இருக்கோம். நாளைக்கே நீங்க வீட்டுக்கு கூட்டிப் போகலாம். ஜஸ்ட் ஜூஸ் மட்டும் கொடுங்க. இப்போ மயக்கத்தில்

இருக்காங்க, கொஞ்ச நேரம் கழிச்சுப் போய் பாருங்க", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

அதன் பிறகே, அவனுக்குப் போன உயிர் திரும்ப வந்தது. வேகமாக அவள் இருந்த அறைக்குள் நுழையப் போனான். அவனைத் தடுத்தது தெய்வாவின் குரல்.

"என் பொண்ணோட மிச்ச உயிரையும் எடுக்கவா நீ உள்ளே போற?", ஆங்காரமாகக் கேட்டாள்.

தன் கோபத்தை அடக்க, கைகளை இறுக மூடிக் கொண்டான். கை முஷ்டி இறுகியது. தன் பாதுகாப்பு அதிகாரிகளைப் பார்த்தான். "இந்த அம்மா இன்னும் பத்து நிமிஷத்துக்குள் இந்த இடத்தை, காலி பண்ணி இருக்கணும்", கர்ஜித்துவிட்டு லயாவிடம் சென்றுவிட்டான்.

"அம்மா நீங்க போங்க, லயாவை நான் பாத்துக்கறேன். நாளைக்கு நானே அவளை, உங்க வீட்டில் கொண்டு வந்து விடுறேன். இப்போ தயவு செய்து நீங்க போங்க", கெஞ்சினாள் கண்மணி.

அனைவருமே சென்று விட்டார்கள். வாசுவை வீட்டுக்குப் போகச் சொன்னாள். அவனோ, மருந்து ஏதாவது வாங்கத் தேவையிருக்கும், என்று செல்லத் தயங்கவே, இங்கிருப்பவர்களை வைத்து சமாளித்துக் கொள்கிறேன் என்று சொல்லி அவனைக் கட்டாயப் படுத்தி அனுப்பினாள்.

லயா கண் விழிக்க வேண்டி அவள் அருகிலேயே காத்திருந்தான் தருண். அவனை வெளியே போகச் சொல்லும் தைரியம் யாருக்கும் இருக்கவில்லை. கண்மணி வெளியிலேயே அமர்ந்து கொண்டாள்.

மயக்கம் தெளிந்த லயாவின் கண்களில் விழுந்தது, தன் அருகில் தலை வைத்து உறங்கும் தருணின் அலைந்த முடிகளே. 'தருணா இது?' என்று கண்களை தட்டிப் பார்த்தாள்.

அவளிடம் அசைவை உணர்ந்து, கண்விழித்துப் பார்த்தான். இருவரின் பார்வைகளும் ஓராயிரம் கதை பேசியது.

இருவரின் இதழ்களும் மௌனம் காத்தது.

"ஐ'ம் சாரி லவி....., நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. என்னோட பலவீனம், என்னை அப்படிப் பேச வச்சுடுச்சு. என்னை மன்னிச்சுடு", அவள் கைகளை எடுத்து, தன் நெஞ்சுக்குள் பொதிந்து கொண்டான்.

அவனைச் சலனமே இல்லாமல் பார்த்தாள். உள்ளம் அதே மரத்த நிலையிலேயே இருந்தது. கண்களைச் சோர்வாக மூடிக் கொண்டாள். அவள் கண்களை மூடவே, பயந்து போனான்.

"லவி...., லவி.... என்ன செய்யிது.... இங்கே பார்...", அவள் கன்னங்களைத் தட்டினான்.

அவனது தவிப்பில் இளகிய தன் மனதைக் கடினமாக்கிக் கொண்டாள். "இன்னும் என்னைக் காயப்படுத்த ஏதாவது மிச்சம் வச்சு இருக்கீங்களா தருண்? இருக்குன்னா, அதையும் சொல்லிடுங்க கேட்டுக்கறேன்", இமைகளைத் திறக்கவே இல்லை.

தருண் சோர்ந்து போனான்....., என்னவென்று சொல்லாமலேயே தவிர்ப்பவளை, என்ன சொல்லி வாயைத் திறக்க வைக்கவென்று தெரியவில்லை அவனுக்கு. மூன்று வருடங்களாக அவள் அனுசரிக்கும் அதே மௌனத்தை கையில் எடுத்துக் கொண்டு, அவள் இதயக் கதவை தாளிட்டுப் பூட்டிக் கொண்டு, வெளியே வர மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அவளை, அவனும்தான் என்ன செய்வான்????

கதவு - 35

நீ சொல்லும் ஒற்றைச் சொல்லில்

உயிர்த்திருக்கும் என் காதல்

நீ இதழ்களைத் தாண்டி

ஒலிக்கவிடாத அந்தச் சொல்லுக்காய்

காத்திருக்கும் என் நாட்கள்.....

தருண் அவளை, இயலாமையோடு ஒரு பார்வை பார்த்தான். இந்த மூன்று வருடங்களில், அன்று அவள் சொன்ன அந்த வார்த்தை, "வேண்டாம் தருண்....., நமக்கு இந்தக் காதல் சரிவராது. எப்போ நீங்க.... எந்தப் பொண்ணோட இருப்பீங்கன்னு..... என்னால் வயிற்றில் நெருப்பைக் கட்டிட்டு இருக்க முடியாது. பிரிஞ்சுடலாம்.....", சில வார்த்தைகளில் முடித்துக் கொள்கிற பந்தமா இது...?

அன்றுபோல் இன்றும் உறைந்துதான் நின்றிருந்தான். "ஏன் இப்படி செஞ்ச லவி.....? என்னை விட்டுப் போக, உனக்கு எப்படி மனசு வந்துது.....?", வார்த்தைக்கு வலிக்குமோ என்று அவன் கேட்ட விதத்தில், கடைவிழியில் கண்ணீர் வழிந்தது.

"என்னன்னு வாயைத் திறந்து சொல்லு லவி.....", அவன் குரலில் கொஞ்சம் கோபம், நிறைய விரக்தி.

"என்னை ஏன் காப்பாத்துனீங்க தருண்....., என்னை அப்படியே சாக விட்டிருக்கலாமே....., இந்த வலியெல்லாம் எனக்கு இல்லாமலே போயிருக்கும்", குரல் நைந்து வந்தது.

"நீயும் பதிலுக்குப் பேச வேண்டியதுதானேடி....., இல்லையா..... என்னை ஓங்கி நாலு அறை விட வேண்டியதுதானே. நான்தானேடி உன்னைத் தொட்டேன்....., என்னைத் தொட வைத்த உன் அழகு மேல எனக்குக் கோபம். என்னோட உணர்வு, என் சொல்பேச்சு கேக்கலன்னு எனக்குக் கோபம். நீ என் கைக்குள்ளே இருந்தும் உன்னை எடுத்துக்க முடியலன்னு பெரிய

கோபம்.....", சொன்னவாறு, அங்கிருந்த ஊசியை எடுத்து, தன் உள்ளங் கையில் சரமாரியாகக் குத்திக் கொண்டான்.

பீரிட்டுக் கொட்டிய ரத்தத்தில், "தருண் என்ன செய்யிறீங்க.....?", அவள் கத்தலில், கண்மணி, நர்ஸ் ஓடி வந்தார்கள்.

அவர்களைப் பார்த்து, "வெளியே போங்க.....", அவனது காட்டுக் கத்தலில், பயந்து நடுங்கினர் அனைவரும்.

"தருண்.... முதல்ல ஊசியைக் கீழே போடு.....", கண்மணி நெருங்கி வந்து, அவனை ஓங்கி அறைந்தாள்.

"ஏண்டா.... கொஞ்சம் கூட நிதானமாவே எதையும் செய்ய மாட்டியா....? அப்படி என்னதாண்டா கோபம். இந்தக் கோபத்தைக் கட்டிக்கிட்டு, ஏன் இப்படி உன்னையே நீ அழிச்சுகற? சிஸ்டர் வாங்க..... கட்டுப் போடுங்க", அவன் கையில் இருந்து ஊசியைப் பிடுங்கி வைத்துவிட்டு, கட்டுப் போட வைத்தாள்.

"நீ வீட்டுக்குப் போடா.....", கண்மணியின் மிரட்டலுக்கு, கொஞ்சம் கூட அசையாமல் நின்றான்.

"நீங்க வெளியே போங்க....., எனக்கு இன்னும் பேச வேண்டியது நிறைய இருக்கு", குரலில் அப்படி ஒரு கடினம்.

"நீ பேசிக் கிழிச்ச வரைக்கும் போதும், கிளம்பு.....", கண்மணியின் பேச்சு அவன் காதிலேயே விழவில்லை.

வேறு வழியில்லாமல் அவள்தான் வெளியேறினாள். "கடைசியா கேக்குறேன் லவி, என்னோட வந்துடு, இப்பவும் நான் உன்னை உயிரா நேசிக்கிறேன். உன்கிட்டே மட்டும் மயங்கும் இந்த மனசும், உணர்வும், வேற யார் கிட்டேயும் சாய மாட்டேன்னு சொல்லுது.

இப்போவாவது உண்மையைச் சொல்லு, உனக்கு என்னதான் பிரச்சனை. என்கிட்டே சொன்னால் நான் தீர்த்து வைக்கிறேன்", கெஞ்சினான் அவன்.....

அவள் கொஞ்சம் கூட இளகவில்லை. அதைப் பார்த்து அவனுக்கு மீண்டும் கோபம் கட்டுக்கடங்காமல் பெருகியது. "இப்போகூட நீ பேச மாட்ட இல்ல....., உன்னைக் காயப் படுத்தினாலும் பேசமாட்ட, கோபப் பட்டாலும் பேசமாட்ட, கெஞ்சினாலும் பேசமாட்ட....., நான்தான் பயித்தியக் காரன் மாதிரி உன் பின்னாடியே கெஞ்சணும் இல்ல.

அன்னைக்கு நீ சொன்ன....., இன்னைக்கு நான் சொல்லுறேன்....., என் மனசையோ, உணர்வுகளையோ புரிஞ்சுக்காத நீ எனக்கு வேண்டாம்....., இனிமேல் நீயா வந்து என்கிட்டே கேட்காதவரை நானா உன்னை நெருங்கவே மாட்டேன். அதே மாதிரி, உன்னுடன் சேர்ந்து இனி நான் வேறு படங்களில் நடிக்க மாட்டேன்.

அதே மாதிரி, இன்னொரு முறை இப்படி ஒரு கிறுக்குத்தனம் செய்யணும்னு நினைச்ச....., நானே உன்னைத் தேடி வந்து கொன்னுடுவேன். உன்னை விட்டுப் போய்டுவேன்னு மட்டும், நீ கனவில் கூட நினைக்காதே. உன் நிழலாவேதான் நான் இருப்பேன். நம்மக் காதலை, கல்யாணத்தை, வாழ்க்கையை, எப்போ நீயா மற்றவங்களுக்கு அறிவிக்கிறியோ அன்னைக்குக் கண்டிப்பா உன் பக்கத்தில் நான் இருப்பேன். இப்போ நான் போறேன்.....", சொல்லிவிட்டு அங்கிருந்து செல்லப் போனான்.

தான் பிரிவைச் சொல்லும் பொழுது கூட அவளுக்கு இவ்வளவு வலிக்கவில்லை. ஆனால் அவன் பிரிவைச் சொன்ன இந்த நொடி....., அவளுக்கு அவ்வளவு வலித்தது. அதிலும் அவன் 'போறேன்' என்று சொன்னதைத் தாங்க முடியாமல், ஓடி வந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவன் முகமெங்கும் முத்தமழை பொழிந்தாள். அவன் முதலில் சொன்ன வார்த்தைகள், இப்பொழுதும் உயிரின் ஆழம் வரை வலித்ததுதான். ஆனாலும் அதைவிட, அவன் தன்னோடு அழைக்கும் இந்த நொடிதான் தித்தித்தது. தன்

நேசத்தை அவனுக்கு உணர்த்த, முத்தத்தைத் தவிர வேறு மொழி அவளுக்குத் தெரியவில்லை.

'இதுக்கு என்ன அர்த்தம்.....', என்பதுபோல் அவன் பார்க்க, "போய்டுங்க தருண்....., தயவு செய்து போய்டுங்க", அவனுக்கு முதுகு காட்டித் திரும்பிக் கொள்ள, "ச்சே.....", கால்களைத் தரையில் ஓங்கி மிதித்தவாறு வெளியேறினான்.

அதன் பிறகு, அந்தப் படம் முடியும்வரை, கேமராவுக்கு முன்னர் அவளைப் பார்த்து, நெருங்கி நடித்ததோடு சரி. அதன் பிறகு அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை அவன். கார் கிரீச்..... என்று நிற்கும் ஓசையில் நடப்புக்கு வந்தாள்.

"அம்மா நீங்க சொன்ன இடம் வந்துடுச்சு....., பார்ட்டி இங்கேதான் நடக்குது. நீங்க இறங்கிக்கோங்க, நான் காரை அங்கே பார்க் பண்ணுறேன்", டிரைவர் சொல்லவே, காரிலிருந்து இறங்கி, அந்தப் பூங்கா போன்ற அமைப்பில் இருந்த பார்ட்டி ஹாலுக்குள் நுழைந்தாள்.

அது பூங்கா அமைப்பில் இருந்த ஹோட்டல், செயற்கை நீரூற்றுக்கள், பசேல் என்ற புல்வெளி, பப்பே முறையில் உணவு என அனைத்தும் சிறப்பாகவே அமைக்கப் பட்டிருந்தன. மனம் அந்தச்சூழலில் லயிக்க, கடந்தகால நிகழ்வுகளை, கொஞ்சம் தள்ளி வைத்தாள்.

அங்கே கூட்டமாக, தாரா, சங்கீதா, வான்மதி எனப் பல நடிகைகள் கூடி இருக்க, அவர்களோடு தானும் சென்று சேர்ந்து கொண்டாள். அந்த ஹோட்டல் தருணுடையது என்பது அவர்கள் பேசிய பேச்சில் இருந்து அவளுக்குத் தெரிந்தது.

"ஹேய், விஷயம் தெரியுமா? ஷெட்டியோட லாஸ்ட் மூணு படம் பெயிலியர் ஆயிடுச்சாம்....., தருணை, ஒரே ஒரு படம் நடிக்கச் சொல்லி கேட்டதுக்கு, முடியாதுன்னு சொல்லிட்டாராம்.....", வான்மதிதான் துவங்கினாள்.

"அது மட்டும் இல்லை.... லாஸ்ட் மூணு படம் ஓடாததற்கும் அவர்தான் காரணம்னு பேசிக்கிறாங்க. அவரோட ரசிகர்கள்

கிட்டே, யாரும் அந்தப் படம் ஓடும் தியேட்டர் பக்கமே போகக் கூடாதுன்னு சொல்லிட்டாராம்....., ஷெட்டிக்கு நல்லா வேணும், ரொம்ப ஆடிட்டான்", சங்கீதா அவளுக்குத் தெரிந்ததைச் சொன்னாள்.

"தருண் ஏன் ஷெட்டியவே டார்கெட் செஞ்சு அடிக்கிறான்....?", தாரா கேட்டாள்.

"அதுதான் எனக்கும் தெரியலை, தருண் இப்படி செய்யவே மாட்டாரே.....", சங்கீதா சந்தேகமாகக் கேட்டாள்.

லயாவின் இதயம் பந்தயக் குதிரையானது. தன்னை தொல்லை செய்ததற்காகத்தான், ஷெட்டியை அவன் இப்படித் தொடர்ந்து அடிப்பது புரிந்தது. கண்கள் பனிப்பதை தவிர்க்க முடியவில்லை.

பேச்சு அப்படியே தருணைப் பற்றி திரும்பியது. "தருண் ரொம்ப நல்ல கேரக்டர் இல்ல....., அவரோட மூணு படத்தில் நடிச்சுட்டேன், முதல் நாள் பழகிய மாதிரியேதான் இன்னைக்கு வரைக்கும் பழகுறார். முதல்ல சிஸ்டர் ன்னு சொல்லும்போது நடிக்கிறாரோன்னு நினைத்தேன். ஆனால் அப்படியில்லைன்னு கொஞ்ச நாள்லேயே தெரிஞ்சுட்டேன்", வழக்கம்போல், வான்மதியே துவங்கினாள்.

"என்னது உன்கிட்டேயும் சிஸ்டர்ன்னு சொன்னாரா.....?", மற்றவர்கள் கேட்டதில் இருந்தே, அவர்களிடமும் அப்படித்தான் சொல்லியிருக்கிறான் என்று தெரிந்தது.

லயா தலையைக் கவிழ்ந்து கொண்டாள். அவன் தன்னைத் தவிர அனைத்துப் பெண்களையுமே 'சிஸ்டர்' என்று சொல்வது புரிந்து, மனம் மேலும் ரணமானது. நிம்மதியைத் தேடி வந்த இடத்திலும் இப்படியா நிகழ வேண்டுமென்று தவித்துப் போனாள்.

அவர்களிடம் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள். "என்ன.... லயா எதுவுமே பேசாமல் போறாங்க.....?", ஒருத்தி கேட்க,

"தருணைப் புரிஞ்சுக்காமல் விலகிட்டோம்னு பீல் பண்ணுறாங்க போல.....", சங்கீதா சொன்னாள்.

மற்றவர்கள் கேள்வியாகப் பார்க்க, "உங்களுக்குத் தெரியாதா, தருண் இவங்களை லவ் பண்ணுறது உண்மைதான். அவர் என்கிட்டே சொன்னார். ஆனால்..... விதி.....", தாராவைக் குற்றம் சாட்டும் பார்வை பார்த்தாள்..

தாரா இப்பொழுது, ஒரு பெரிய இயக்குனரின் இரண்டாம் தாரமாக இருக்கிறாள். இந்த நான்கு வருடங்களில், வாய்ப்புகளைத் தேடிக் களைத்துவிட்டாள். அந்த இயக்குனர் கேட்கவே, உடனடியாகச் சரியென்று சொல்லிவிட்டாள்.

அவள் இரண்டாம் தாரமென்றாலும் சரியென்று சொல்லக் காரணம்.., அவளை கேள்வி கேட்டுக் குடைய மாட்டான், சுதந்திரமாகச் செயல் படலாம், ஒரே தொழிலில் இருப்பதால் அந்தப் புரிதல் இருக்கும், தேவையில்லை என்று முடிவு செய்தால், சுலபமாகக் கழண்டு கொள்ளலாம், என ஏகப்பட்ட சாதக, பாதகங்களை ஆராய்ந்த பிறகுதான், சரியென்று சொன்னாள்.

அதே நேரம், வாசலில் சலசலப்பு கேட்கவே அனைவரின் கவனமும் அங்கே சென்றது. அங்கே தருண், தான் இப்பொழுது இணைந்து நடிக்கும் நடிகையுடன், பேசிச் சிரித்தவாறு வந்து கொண்டிருந்தான். இங்கிருக்கும் பெண்கள் கும்பலைப் பார்த்தவன், நேரடியாக இங்கே வர, அனைவருமே அவனைச் சூழ்ந்து அணைத்துக் கொண்டார்கள்.

இதை, தூரத்தில் இருந்து பார்த்த லயாவுக்கு, கோபியர்கள் நடுவில் இருக்கும் கண்ணனாகக் காட்சி தந்தான் தருண். முழுதாக ஒரு வருடத்துக்குப் பிறகு, அவனைப் பார்க்கிறாள்....., அவனது கம்பீரம் கூடியிருப்பதாகவே தோன்றியது.

இமைகளை சிமிட்டக் கூட மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். தனது இழப்பு எவ்வளவு பெரியதென்று அவளுக்குத் தெரிந்தது. தேடிவந்த வாழ்வை எட்டி

உதைத்துத் தள்ளிவிட்டு, இப்படித் தனி மரமாக நிற்கிறோமோ, நினைக்க நினைக்க கண்ணைக் கரித்தது.

இன்று காலையில், தனக்கும் தாய்க்குமான வாக்குவாதத்தில் வந்து நின்றது. நான்கு வருடங்களுக்கு முன்னர், தன்னிடம் கேட்ட அதே இரண்டு கோடியை, இப்பொழுது நான்கு கோடியாகத் திரும்பக் கேட்கின்றாள்.

இந்த நான்கு வருடங்களில், இருபது படங்களில் நடித்து முடித்துவிட்டாள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என நான்கு மொழிகளிலும் நடித்துவிட்டாள். அவள் சம்பளம், இருபது லட்சத்தில் இருந்து, எழுபத்தைந்து லட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு மாதமாகத்தான் வாய்ப்புகள் எதுவும் அவ்வளவாக வருவதில்லை. அதற்காகத் தாய் பேசும் பேச்சுக்கள், செய்யச் சொல்லும் வேலைகள், கடை திறப்பு முதல், மற்றவர்கள் வைக்கும் பார்ட்டி வரை அனைத்திலும் கலந்து கொள்ளச் சொல்கிறாள்.

அதையாவது சகித்துக் கொள்ளலாம் என்றால்....., வாய்ப்புகளுக்காக மற்ற ஹீரோக்களோடு, ஈஷிக்கொண்டு பழகச் சொல்லுவதையும், பார்ட்டி என்று வைத்து, படத் தாயாரிப்பளர்களையும், இயக்குனர்களையும் தன்னை வைத்து வளைக்க முயல்வதும், அதற்குத் தன்னைக் கட்டாயப் படுத்துவதும் தாங்கவே முடியவில்லை.

இன்று காலையில், ஒரு கன்னடத் தயாரிப்பாளரை வீட்டுக்கே வர வைத்து, "அவரோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிரு", என்று சொல்லி, அவளது அறைக்கு அவரை கூட்டிச் செல்லச் சொன்ன பொழுது வெகுண்டெழுந்து விட்டாள்.

அவரது முன்பு வைத்தே, லயா தன் மறுப்பை பகிரங்கமாகச் சொல்லிவிட, அவர் முன்னால் வைத்தே லயாவை அறைந்து விட்டாள். அதைப்பார்த்து, அந்தத் தயாரிப்பாளர், 'விருப்பமில்லைஎன்றால் வேண்டாம்' என்று சொல்லி எழுந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றவுடன், "ஏண்டி இப்படி, என் ஆசையில் மண்ணள்ளிப் போடுற, அந்த ஆளைக் கொஞ்சம் கவனிச்சுகிட்டா, மூணு படத்தில் நடிச்சுருக்கலாம்டி....., முழுசா ரெண்டு கோடி பாத்திருக்கலாம். வீடு தேடி வந்த சீதேவியை இப்படி எட்டி உதச்சுட்டியேடி.....", அவளை இன்னும் ஆத்திரமாக அறையப் போனாள்.

"அம்மா....., இதுவரை, உனக்கு எத்தனைக் கோடி சம்பாதிச்சு கொடுத்து இருக்கேன்....., இன்னுமா உனக்கு ஆசை அடங்கலை. பணத்துக்கு வேண்டி, நீ பெத்த பொண்ணையே, கூட்டிக் கொடுக்க நினைக்கிறியே நீயெல்லாம் ஒரு அம்மாவா.....?", அவளும் ஆத்திரத்தில் பேசினாள்.

"மண்ணு திங்கப்போற உடம்பு....., அவன் கொஞ்சம் தின்னால் என்னடி....., உன்னையெல்லாம் எவன் கட்டிப்பான்....., வச்சுக்க வேண்ணா செய்வான்.....", தான் பெற்ற மகளிடம் பேசுகிறோம் என்ற நினைவு கொஞ்சம் கூட இல்லாமல், ஏதோ மூன்றாம் மனிதரிடம் பேசுவதைப்போல் பேசினாள்.

பணத்தாசை அவள் கண்களை மறைத்திருந்தது. "அம்மா..... என்னையும் ஒருத்தன் கட்டிக்கிறேன்னு சொன்னான்....., அதையும், நீதாம்மா இந்த பணத்தாசையால் கெடுத்த. உன்னோட பணத்தாசைக்கு வேண்டி, நான் வாழ்க்கையவே தொலைச்சுட்டு நிக்கிறது உனக்குத் தெரியவே இல்லையாம்மா.....?", ஆற்றாமையாகக் கேட்டாள்.

"எதுக்குடி உன் வாழ்க்கை தொலையப் போகுது....? இன்னும் கொஞ்ச வருஷம் உன்னை வச்சு ஓட்டிடலாம்னு பாத்தேன். ஆனா இப்போதான் எக்கச்சக்கமான பேர் நடிக்க வாறாளுகளே, அதான் உன் மார்க்கெட் சீக்கிரம் சரிஞ்சுடுச்சு.

இப்போ கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை, இந்த அம்மா சொல்லுற மாதிரி இன்னும் ஒரு வருஷம் கேட்டீன்னா....., அதை வச்சு நாலு வருஷம் ஓட்டிடலாம். பிறகு, ஒரு பெரிய பணக்காரனா, வசதியானவனா பாத்துக் கல்யாணம்

செஞ்சுட்டு, அவனோட ஒரு வருஷமோ, ஆறு மாசமோ குப்பை கொட்டிட்டு, பிறகு வந்து, அக்கா, அண்ணி....., அப்படியே அம்மா வேஷம் கூடப் போடலாம்.....

பணத்துக்குப் பணம், சுகத்துக்கு சுகம், புகழுக்கு புகழ்..... என்ன நான் சொல்லுறது.....", தெய்வாவின் பேச்சைக் கேட்டு, வாந்தி வந்தது லயாவிற்கு.

"என்னம்மா இப்படி பேசுற.....? இதெல்லாம் கொஞ்சம் கூட அசிங்கமாத் தெரியலை உனக்கு.....?", உச்ச அருவருப்பில் கேட்க,

"இதில் என்னடி அசிங்கம் வேண்டி இருக்கு....., எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். நீ, வரப்போற பணத்தை மட்டும் நினைச்சுப் பார்....", மகளின் மனம் புரியாமல், அவளுக்கு ஆசை காட்டினாள்.

"ச்சீ....., நீயும் ஒரு அம்மாவா.....? உன்னை நம்பி என் வாழ்க்கையவே தொலைச்சுட்டு நிக்கிறேனே....., அன்னைக்குத் தருணை பாத்துட்டு எவ்வளவு சந்தோசமா வந்தேன்....., என் மொத்த சந்தோஷத்தையும் குழி தோண்டி புதைச்சுட்டியேம்மா.....", அன்றைய நினைவில் இன்று அழுதாள்.

"என்னடி பொல்லாத வாழ்க்கை....., அவன் வீட்டில், உன்னை ஆரத்தி சுத்தி வர வேற்றதும், அவங்க பூஜை அறையில் உன்னை விளக்கேற்றச் சொன்னதும் பெரிய விஷயமா.....?", எள்ளி நகையாடினாள்.

"பத்து பேரோட படுக்கலாம்னு கொள்கை இருக்கற உனக்கு, ஒருத்தனோட வாழுறதும், அவங்க குடும்பத்தில் ஒண்ணா இருக்கறதும் பெரிய விஷயமே கிடையாது தாம்மா..... அவ்வளவு பெரிய விஷயத்தை, கல்யாணத்துக்கு முன்னாடியே, என்னை அந்தம்மா மருமகளைப்போல பிரியமா நடத்துனதை நான் உன்கிட்டே சொன்னப்போ நீ என்ன சொன்ன.....

ரெண்டு கோடியை எண்ணிக் கீழே வச்சுட்டு எங்கே வேணும்னாலும் போன்னு சொன்னல்ல....., அப்படி

அவனைத்தான் கட்டிக்கணும்னா, உடனே ஷெட்டி கூட இருந்துட்டு, அந்தப் பணத்தைக் கொடுத்துட்டுப் போன்னு சொன்ன. முடியாதுன்னு சொன்ன என்னை, உனக்கு விஷத்தைக் கொடுத்துட்டு போன்னு சொன்னியே.....

அப்போவே நான் அதை செஞ்சிருக்கணும்மா....., அதை விட்டுட்டு, நீ கேட்ட பணத்துக்காக, தருணை விலக்கி விட்டுட்டு, என் மனசைக் கல்லாக்கிட்டு, ஒவ்வொரு நாளும் அவனோட நினைப்பில் உருகிகிட்டே, உனக்கு நடிச்சு சம்பாதித்துப் போட்டேனே.....

எதுக்காக....., உன்மேல் இருந்த பாசத்துக்காகவும், உன்னோட ஆசைக்காகவும் மட்டும்தான். அதைவிட, என்னைக்காவது ஒருநாள் நீ மனசு மாறி, என் மனசை நீ புரிஞ்சுக்க மாட்டியானு தாம்மா.....

ஆனா, அந்த நினைப்பை எல்லாம் நீ பொய்யாக்கிட்ட....., இனிமேல் உன்கூட நான் இருக்க மாட்டேன்ம்மா....., இந்த நிமிஷமே நான் வீட்டை விட்டுப் போறேன்.....,

இனிமேல் உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது....., இதுக்குமேல் என்னைத் தொந்தரவு செய்தால்....., என்னைக் கூட்டிக் கொடுக்கக் கூப்பிடுறன்னு போலீஸ்ல போய் சொல்லிடுவேன்....., நான் போறேம்மா.....", கட்டிய துணியோடு வெளியே கிளம்பிய அவள் முதுகின் பின்னால், தெய்வாவின் ஆங்காரமான குரல் கேட்டது.

"எங்கடி போற.....? உன்னோட பணம், சொத்து எல்லாம் என் பேர்லதான் இருக்கு, அது தெரியுமா?", தெய்வாவின் கடைசி ஆயுதம்.

"எனக்கு எதுவும் வேண்டாம்மா....., எல்லாம் நீயே வச்சுக்கோ.....", திரும்பி நடந்தாள்.

"ஹூம்....., இந்த நிலைமையில் நீ வெளியே போனால்....., பிச்சைதான் எடுக்கணும். இல்லையா....., நான் சொன்ன வேலையைத்தான் செய்யணும்.....", எக்காளமிட்டாள்.

"எனக்கு அப்படியொரு நிலை வரவே செய்யாதும்மா.....", நம்பிக்கையாகச் சொன்னாள்....., மனதின் ஓரத்தில் தருணின் முகம் மின்னி மறைந்தது.

"ஹா....ஹா....ஹா....., என்னடி.... அந்தத் தருண் பயலை நம்பிச் சொல்லுறியா.....? அவனுக்குக் கல்யாணம்னு பேப்பரில் வந்த செய்தியை, நீ படிக்கவே இல்லையோ.....?", கைகொட்டிச் சிரித்தாள் தெய்வா.

"அவரோட நல்ல மனசுக்கு, அவர் நல்லதாம்மா இருப்பார்..... உனக்கு மகளா பிறந்த பாவத்துக்கு, நான்தான் சீரழியப் போறேன். ஆனால், நான் செத்தாலும், நீ சொன்னமாதிரி ஈனத்தனமா வாழ்வே மாட்டேம்மா..... அப்படி ஒரு நிலை வந்தால், ஒரு முழம் கயிற்றில் என்னோட வாழ்க்கையை முடிச்சுப்பேன்.....", சொன்னவாறு வெளியேறினாள்.

"இந்த அம்மா பேச்சைக் கேக்காமல் போறல்லடி....., நீ சீரழியத்தான் போற, இந்த அம்மாவோட வயித்தெரிச்சல் உன்னைச் சும்மா விடாதுடி.....", தாயின் சாபத்தைக் கேட்டு அந்த நிலையில் கூட அவளுக்கு சிரிப்பு வந்தது.

ஆனாலும் அங்கே ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல், டிரைவரிடம் காரை எடுக்கச் சொல்லிவிட்டு, கண்களை மூடிக் கொண்டாள்.

கதவு - 36

என் இதயக் கதவை

பூட்டியதாக நீ நினைத்தாய்

ஆம் பூட்டிக் கொண்டேன் தான்

உள்ளே உன்னை வைத்து.....

கார் வந்து நின்ற இடத்தைப் பார்த்தவள், ஒரு நொடி திகைத்தாள்....., அது, அவள் தருணுக்காக வாங்கிய வீடு. இது அவளது தாய்க்கே கூடத் தெரியாது. அப்படியிருக்கையில் இந்த டிரைவருக்கு எப்படித் தெரியும் என்று அவள் சிந்திக்கவே இல்லை.

மனதின் ரணத்தை வெல்ல வழி தெரியாமல் குமுறினாள்....., வலி வலி வலி..... இந்த நான்கு வருடங்களாகப் பழகிப் போன ஒன்றுதான்..... ஆனால் கூட, இந்த இதயம் வெடிக்காமல் இருப்பது எப்படி.....?

அவளுக்கு, அந்த மர்மம் தான் புரியவில்லை. பேசாமல் ஒரு முழம் கயிற்றில், இந்த வீட்டிலேயே தன் வாழ்வை முடித்துக் கொள்வோமா, என்றுதான் முதலில் எண்ணினாள். ஆனால் தருணை, கடைசி முறையாகப் பார்க்க வேண்டுமென்று உள்ளம் ஏங்கியது.

முதலில் சரியாக சிந்தித்த அவள் மனது, பின்னர் திசை மாறி சிந்தித்தது. வேண்டாம்.... இந்த வலியை இன்னும் எவ்வளவு நேரம் சுமப்பது? உடனடியாக இறந்து விட்டால்....., இந்த வலியில் இருந்தும் தப்பி விடலாமே.....,

இந்த எண்ணம் முளைவிடத் துவங்கவே, அதற்கான வேலையில் ஈடுபடத் துவங்கினாள். அதே நேரம் அவளது டிரைவர் அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான். அதை முடக்கிவிட்டு உடனடியாக அவளுக்கு ஜூஸ் தயாரித்துக் கொண்டு, அவள் அறைக்கு விரைந்தான்.

"மேடம்....., மேடம்.....", இந்த அழைப்பைக் கேட்டவுடன், சாவில் கூட தடங்கலா என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

"என்ன.....?", கோபமாகத்தான் கேட்டாள்.

"மேடம்....., இன்னைக்கு சாயங்காலம் தி பார்க் ஹோட்டல்ல பார்ட்டி இருக்கு....., உங்களையும் கண்டிப்பா வரச் சொல்லியிருக்காங்க....., இப்போ மதியம் ரெண்டு மணி ஆயிடுச்சு, இன்னும் ஒரு மூணு மணி நேரம்தான் இருக்கு....., நீங்க மதியமும் சாப்பிடலை, அதான் ஜூஸ் கொண்டு வந்தேன்", பவ்யமாகச் சொன்னான்.

அவளுக்கிருந்த குழப்பமான மன நிலையில், அது எந்த ஹோட்டல், யாருடைய ஹோட்டல், என்ன பார்ட்டி, அவனுக்கு எப்படித்தெரியும்.....? இப்படி எதையுமே யோசிக்காமல், தருணை மீண்டும் பார்க்கும் ஆவல் மட்டுமே முளைவிட, சோர்வாக எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

"இந்தாங்கம்மா....., குடிச்சுட்டு, நல்லா தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டுக் கிளம்புங்க, நானே உங்களை அழைச்சுட்டுப்போறேன்", அவள் 'எனக்குத் தூக்கமா', என்று விரக்தியாக நினைத்துக் கொண்டாள்.

ஆனால், அவன் அந்த ஜூஸில் கலந்திருந்த தூக்க மாத்திரையின் விளைவால், உடனடியாகத் தூங்கிவிட்டாள். மாலையில் அவன் வந்து எழுப்பிய பிறகுதான் எழவே செய்தாள்.

அவள் கண்கள், கம்பீரமாக, அடர் நீல வண்ண கோட், சூட்டில், கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் தருணை விட்டு, இங்கே அங்கே நகரவில்லை. இத்தனைப் பெண்கள் அவனைச் சுற்றி இருந்த பிறகும், அனைவரிடமிருந்தும் விலகி நிற்கும் அவன் கண்ணியம் இப்பொழுதும் அவளை அசைத்தது.

எவ்வளவு கூட்டத்திலும், தன்னை அவன் தொடாமல் விலகி இருந்ததே இல்லை என்று நினைத்த பொழுது,

பெருமிதத்தில் நெஞ்சு விம்மித் தணிந்தது. அந்தக் காதலை இழந்த வேதனை, நெஞ்சை அறுக்க, கண்களை மூடிக் கொண்டாள். கண்களுக்குள் சிரிக்கும் அவன் பிம்பத்தை அவளால் என்ன செய்ய முடியும்.

தன் ஆடையை, யாரோ பிடித்து இழுப்பதுபோல் இருக்கவே, கண்களைச் சிமிட்டி, சுற்றும் முற்றும் பார்த்தாள். அங்கே, மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவன் நின்று கொண்டிருந்தான்.

"ஐ அத்த....., உங்களை நானே கண்டு புடிச்சுட்டேன்....., மாமா, நீங்க ஊருக்குப் போய் இருக்கீங்கன்னு பொய் சொல்லிட்டாங்க. இருங்க நான் போய் அம்மாவை அழைச்சுட்டு வாறேன்....., இல்ல இல்ல நான் போக மாட்டேன். நான் போய்ட்டா நீங்க மறுபடியும் ஊருக்குப் போய்டுவீங்க....., நீங்களும் என்னோடவே வாங்க.....", அவளைக் கையைப் பிடித்து இழுத்தான்.

அவனது 'அத்தை' என்ற அழைப்பும், குண்டுக் கன்னமும், தன்னைக் கண்டதால், அவன் முகத்தில் தெரிந்த சந்தோசமும், தான்தான் கண்டு பிடித்தேன் என்ற பெருமிதமும், அவன் கண்களில் போட்டி போட்டது.

"நீ யாருடா கண்ணா.....? யாரு உங்க அம்மா.....? நீ யார் கூட வந்த.....?", அவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள்.

"நீங்க எங்க மாமாவைப் பத்திக் கேளுங்க....., அவங்க பெரிய ஹீரோ....., அவ்வளவு பெருசா வளந்து இருக்காங்க....., யாராலையும் அவங்களைத் தொடவே முடியாது. கெட்டவங்களை எல்லாம் டிஷும், டிஷும்ன்னு அடிச்சுப் போட்டுடுவாங்க.....", கையை ஆட்டி, அவன் மழலையில் சொன்ன விதமே அவன் அவனது மாமா மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறான் என்று சொல்லாமல் சொன்னது.

"யாருடா கண்ணா உன் மாமா.....", அவன் சொன்ன விதத்தில் தன்னையும் அறியாமல் கேட்டாள்.

"உங்களுக்கு என் மாமாவைத் தெரியாதா.....? நீங்கதானே என் மாமா கூட இருக்கீங்க....., நீங்கதான் என் அத்தை..... . இருங்க நான் மாமாவைக் கூப்பிடுறேன்", அவள் யார் என்னவென்று விசாரிக்கும் முன்னர்.....

"மாமா.....", என்று அவன் போட்டக் கூச்சலில், அங்கிருந்த அனைவருமே ஒரு நிமிடம் நிதானித்து, அவன் இருந்த திசையைப் பார்த்தார்கள்.

அனைவரும் பார்க்கவே, வெட்கப் படாமல், "நான், என் தருண் மாமாவை மட்டும்தான் கூப்பிட்டேன். நீங்க எல்லாம் என் மாமாவா?", பெரிய மனித தோரணையில் கேட்டான்.

அவன் 'தருண்' என்று சொல்லவே, அப்படியென்றால் கண்மணியின் மகனா இவன்....., என் தருணோட தங்கை மகன்..... நினைவே அவளுக்குத் தித்தித்தது. அவனை அணைத்து, முத்தமழை பொழிந்தாள்.

"நீங்களும், என் மாமா மாதிரியே கிஸ் பண்ணுறீங்க....., உங்களுக்கும் எங்க மாமா சொல்லிக் கொடுத்தாங்களா? ஆனா, என் மாமா கிஸ் பண்ணினால் மீசை குத்தும்....., ஆனா, எனக்கு வலிக்கவே செய்யாதே.....", ஒரு தோரணையாகச் சொன்னான்.

"அவனுக்குக் கிடைத்தது எனக்கும் கிடைக்குமா.....?", கண்களில் குறும்புடன் தருண் கேட்டவாறு அவள் அருகில் அமர்ந்தான்.

"உங்களுக்கும் தருவாங்க மாமா....., அத்த..... மாமாவுக்கும் தாங்க.....", அடம் பிடித்தான்.

அவள் தயக்கம், பயம், ஆர்வம், சங்கோஜம், ஆசை என்ற கலவையான உணர்வுகளோடு போராடியவாறு, துஷ்யந்தை அணைத்தவாறு அமர்ந்திருந்தாள்.

லயா தயக்கமாக மறுக்கவே, "மாமாவுக்கும் தாங்க.....", அவன் அடம் பிடித்தான்.

லயாவின் உணர்வு புரியவே, "மாமா, உன் அத்தைகிட்டே தனியா வாங்கிக்கறேண்டா கண்ணா.....உன் முன்னாடி

தரதுக்கு அத்தைக்குக் கூச்சமா இருக்கும் இல்ல", தருண் அவனுக்குப் புரிய வைக்க முயன்றான்.

"அதெல்லாம் இல்லை....., என் முன்னாடியே, அப்பா அம்மாவுக்கு டர்ட்டி கிஸ் எல்லாம் கூட குடுப்பாங்க.....", அவன் சிணுங்கினான்.

"அதென்னடா கண்ணா டர்ட்டி கிஸ்.....", தருண் பேச்சை வளர்த்தான்.

"அது..... அம்மா லிப்ஸ்ல, அப்பா மட்டும்தான் கிஸ் பண்ணணுமாம், நான் பண்ணினால் அது டர்ட்டி கிஸ்ஸாம்....., அதைத்தான் நானும் டர்ட்டி கிஸ்ன்னு சொல்லுறேன்", நீளமாகச் சொன்னான்.

அவன் சொன்ன விளக்கத்தில், லயாவின் முகம் குங்குமமாகச் சிவந்தது. அதைக் கேட்டவாறு வந்த வாசுவும், கண்மணியும் கூட சங்கடப் பட்டார்கள். கண்மணி தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"அடேய் வாசு..... சின்னப் பையனை இப்படித்தான் கெடுப்பியாடா?", தருண் போலிக் கோபத்தில் கேட்க, வாசு நெளிந்தான்.

"துஷய்ந்த்....., இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு எத்தனை நாள் சொல்லி இருக்கேன்", கண்மணி கண்டித்தாள்.

"இது நல்லா இருக்கே....., நீங்க மட்டும் டர்ட்டி கிஸ் பண்ணலாம்....., அதை நான், சொல்ல மட்டும் கூடாதா....?", துஷ்யந்த் கேட்ட விதத்தில் அனைவரும் சிரித்தார்கள்.

"சரி நீங்க பேசிட்டு இருங்க நான் போய் எல்லோரையும் கவனிச்சுட்டு வாறேன்.....", பொதுவாகச் சொல்லிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

செல்லும் அவனையே விழி அகலாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் லயா. "அத்த.... நீங்க வீட்டுக்கு

வாறீங்களா.....?", துஷ்யந்த் அவர்களுக்குள் இருந்த மௌனத்தைக் கலைத்தான்.

"துஷ்யந்த், வா நாம ஐஸ்கிரீம் சாப்பிடப் போகலாம்.....", வாசு அவனைத் தூக்கிச் சென்றான்.

கண்மணி, லயாவின் அருகில் அமர்ந்தாள். "எப்படி இருக்க லயா...?", அதே பழைய வாஞ்சையுடன் கேட்டாள்.

"இருக்கேன்.....", தலையைக் கவிழ்ந்தவாறே சொன்னாள்.

"இது என்ன பதில் லயா.....?", கண்மணி அவளையே கூர்மையாகப் பார்க்க,

"சில முடிவுகளை, நாம சரியான நேரத்தில் எடுக்கணும் கண்மணி. இல்லன்னா....., இழப்பு ரொம்பக் கொடுமையானதா இருக்கும்.....", என்னவோ தத்துவம் பேசினாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அங்கே வந்தான் தருண். "கண்மணி, ஒரு அரை மணி நேரம் எல்லோரையும் கவனிச்சுக்கோ....., நாங்க வந்துடுறோம்", சொல்லிவிட்டு, அங்கிருக்கும் யாரையும் கவனிக்காமல், அனைவரின் பார்வையையும் கண்டு கொள்ளாமல், லயாவைக் கையைப் பிடித்து எழுப்பி, கிட்டத்தட்ட இழுத்துக் கொண்டு சென்றான்.

அங்கே இருந்த ஒரு அறைக்குச் சென்றவன், அவளை அமரச் சொல்லிவிட்டு, அவள் எதிரில் அமர்ந்தான். அவன் பார்வையின் வேகம் தாங்காமல், பார்வையை அறை முழுவதும் சுழல விட்டாள்.

அவன் பேசாமல் அமர்ந்திருக்கவே, "த....தருண் உங்களுக்கு மேரேஜ்ன்னு சொன்னாங்க..... கன்க்ராட்ஸ்..... இந்த நேரத்தில் இப்படி என்னைக் கூட்டிட்டு வந்திருப்பதை யாராவது பார்த்தால்.....",

"பார்த்தால்.....", அவளைப் பேச விடாமல் கேட்டான்.

"உங்களுக்குத்தான் கெட்ட பேர்.....", தயங்கியவாறே சொன்னாள்.

"இதுவரை எனக்கு ரொம்ப நல்ல பேர் இருக்கோ...?", எரிச்சலாகக் கேட்டான்.

அவனது எரிச்சலுக்கு, காரணம் புரியாமல் கேள்வியாக அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் கேள்வியை உணர்ந்தவன், இன்னும் கோபமானான்.

"நீ எப்போதாண்டி என்னைப் புரிஞ்சுப்ப? யார் என்ன சொன்னாலும், அப்படியே நம்பிடுவியா? பேப்பர்ல வருவதை எல்லாம் நம்பினால், இந்நேரம் எனக்கு இருபதுமுறை கல்யாணம் ஆகி இருக்கணும். நீ இன்னுமா என்னைப் புரிஞ்சுக்கலை....., நான் உன்கிட்டே சொன்ன வார்த்தை எல்லாம், சும்மா விளையாட்டுக்குன்னு நினைக்கிறியா?", அவன் குரலில் அவ்வளவு ஆதங்கம்.

"அப்....அப்படியெல்லாம் இல்லை தருண். உங்களுக்குன்னும் ஒரு வாழ்க்கை இருக்கு.....", தயக்கமாக இழுத்தாள்.

"என் வாழ்க்கையே நீதான்னு சொல்லிட்டு இருக்கேன். நீ என்னன்னா.....", இருக்கையில் இருந்து எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

"என்கிட்டே இப்போ எதுவுமே இல்லை தருண்....., என்னோட பணம், சொத்து எதுவும்.....", குரல் தழு தழுத்தது.

"என் கண்ணைப் பார்த்துச் சொல்லு.....", கேட்டவாறு அவள் கண்களுக்குள் ஊடுருவ, அவன் கேட்க வருவது புரிந்ததுபோல், ஓடிவந்து அவனை இறுக்கிக் கொண்டாள்.

"என்னோட பெண்மையை மட்டும் காப்பாத்திட்டு ஓடி வந்திருக்கேன். அடுத்த வேளை சாப்பாட்டுக்குக் கூட, உழைச்சு சம்பாதிக்கணும்", அவன் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"நான் உனக்கு வேலை தாறேன் செய்யிறியா....?", அவன் குறும்பாகக் கேட்க, அவள் முகம் இருண்டது. தன் மனம் அவனிடம் வாழ்க்கையை எதிர் பார்ப்பது புரிந்தாலும், அதை அவனிடம் யாசிக்கும் அருகதை தனக்கு இல்லை என்று எண்ணினாள்.

"நீங்க என்ன வேலை சொன்னாலும் செய்யிறேன் தருண்.....", குரல் அடைக்கச் சொன்னாள்.

"அப்போ முதல்ல வெளியே போ, அங்கே போய், எல்லார்ட்டயும் உனக்கும், இந்த தருண் யாதவ்க்கும் நாலு வருஷமா காதல்ன்னு சொல்லு. விவிக்கு உடனே போன் செய்து வரச் சொல்லி, இன்னும் ஒரே வாரத்தில் உனக்கும் எனக்கும் கல்யாணம்னு பேட்டி கொடு. அதுக்குப் பிறகு, உங்க அம்மாவுக்குப் போன் செய்து, நீ சாபம் விட்ட மாதிரி, என் வாழ்க்கையில் எதுவுமே நடக்கப் போவதில்லைன்னு தைரியமா சொல்லு", அவன் சொல்லிக் கொண்டே போக, அவள் கண்கள் தெறித்து விழுந்துவிடும்போல் விரிந்தது.

"தருண் நீங்க நிஜமாதான் சொல்லுறீங்களா.....?", அவளால் நம்பவே முடியவில்லை. தனக்கு இப்படி ஒரு வாழ்வா? நாய்க்கு முழு தேங்காய் ஒட்டுமா என்ற சந்தேகம்தான் முதலில் எழுந்தது.

அதை அவனிடம் கேட்கவும் செய்தாள். "லவி நான் எப்பவும் எதையும் விளையாட்டுக்குச் செய்ய மாட்டேன். உனக்கு நான் ஏற்கனவே சொன்னதுதான்....., என்னால் என் உணர்வுகளை, வேற பொண்ணோட பகிர்ந்துக்க முடியும்னு தோணலை.

இப்போ கூட, உன்மேல் அவ்வளவு கோபமா இருக்கேன். அந்தக் கோபத்தை கூட.....", அவளிடம் கேட்டவாறு....., ஆவேசமாக அவளை இறுக அணைத்தான், அவள் எலும்புகள் அனைத்தும் இடம் மாறுவதுபோல் உணர்ந்தாள் அவள். "இப்படித்தான் விதம் விதமா காட்டணும்னு தோணுது.....", அவன் இதழ்கள் அவள் காதில் கோலம் போட்டது.

இன்னும் நம்ப முடியாமல், அவனுள் இன்னும் புதைந்தாள். "தருண்....., எனக்கு ரொம்பத் தயக்கமா இருக்கு. நீங்களே சொல்லிடுங்களேன். உங்களைப் பற்றிய எந்த செய்தியும், நீங்க சொன்னால்தான் உண்மையா இருக்கும்..... எனக்கு..... மனசு முழுக்க பயம் மட்டும் தான் இருக்கு தருண்.

இன்னும் எந்த ஏமாற்றத்தையும் என்னால் தாங்கிக்க முடியாது தருண். அப்படி மட்டும் ஏதாவது நடந்தால்....., அந்த நிமிஷம்தான் என் வாழ்வின் கடைசி நிமிஷமா இருக்கும்", அவள் சூழ்நிலை அவளை அப்படிப் பேச வைத்தது.

"இங்கே பார்....., அப்படி எதுவும் நடக்கவே செய்யாது..... உனக்கு என்மேல் நம்பிக்கை இருந்தால், நான் சொன்னதை அப்படியே செய்", கொஞ்சம் கூட இளகவே இல்லை அவன்.

வேறு வழியில்லாமல் அங்கிருந்து வெளியேறி, மேடையை நோக்கிச் சென்றாள். அவள் மேடையேறவும், அவள் கைக்கு ஒரு மைக் கொடுக்கப் பட்டது. நடிகையாகையால் அவளிடம் மேடை பயமில்லை. ஆனால் சொல்லப் போகும் செய்தியின் வீரியம் அவளைத் தாக்க, ஒருமுறை கண்களை இறுக மூடித் திறந்தாள்.

அவள் கண்களைத் திறக்கவும், அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டு, அவளை மட்டுமே போக்கஸ் செய்யும் லைட் மட்டுமே எரிந்தது. அவள் கண்களுக்கு யாரையுமே தெரியவில்லை. தொண்டையை செருமிக் கொண்டாள்.

"ஹாய் ப்ரண்ட்ஸ்....., ஐ வான்ட் டு டெல் யு சம்திங்".....தருண் சொல்லச் சொன்ன, தங்களைப்பற்றிய அனைத்து விஷயங்களையும், எப்படியோ தைரியத்துடன் சொல்லி முடித்து விட்டாள்.., இதைச்சொன்ன பிறகு, மூச்சு வாங்கியது. அந்த நேரம், அவள் தோளில் ஒரு கரம் விழுந்தது. மேடையென்றும் பாராமல் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

கரகோஷம் அந்த இடத்தையே அதிர வைத்தது. "ப்ரண்ட்ஸ், இங்கே வந்திருக்கும் உங்க எல்லோருக்குமே விஷயம் இதுன்னு தெரியும். இன்னைக்கு எங்களோட நிச்சயத்துக்கு வந்திருக்கும் உங்க அனைவரையும், என்னோட, லயாவோட சார்பா வரவேற்கிறேன்", அவன் சொல்லி முடித்தவுடன், அவன் குடும்ப அங்கத்தினர் அனைவரும் மேடையேற, இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டார்கள்.

லயாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். பத்திரிகை அன்பர்களின் ப்ளாஷ் வெளிச்சத்தில் நனைந்தார்கள் இருவரும். விவி மேடையிலேயே ஓடி வந்து அணைத்து, தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

"பத்திரிகை நண்பர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்...., எங்க கல்யாணம், திருப்பதியில் வர ஐந்தாம் தேதி நடக்கப் போகுது. ஆனால் யாரும் வர வேண்டாம்....., போட்டோஸ் எல்லாம் உங்களது பத்திரிகை ஆபீசைத் தேடி வரும்.

அடுத்த பத்து நாளில், இங்கே நடக்கும் ரிசப்சனுக்கு, உங்கள் அனைவரையும் அழைக்கிறோம். உங்களோட ஒத்துழைப்பை எதிர் பார்க்கிறோம். அனைவரும் விருந்து சாப்பிட்டுத்தான் போகணும்", சொல்லிவிட்டு, மேடையிலிருந்து இறங்கி விட்டனர்.

"தருண்.... நீ லயாவை அவளோட வீட்டில் விட்டுட்டு வா", சொல்லிவிட்டு கண்மணி சென்றுவிட்டாள்.

அங்கிருந்த அனைவரின் வாழ்த்துக்களையும் பெற்றுவிட்டு, அவர்கள் வீட்டுக்குக் கிளம்பும் வேளை, நேரம் நள்ளிரவைக் கடந்திருந்தது. லயாவின் டிரைவர், காரை எடுத்துக் கொண்டு வரவே, அவளோடு பின்னால் ஏறிக் கொண்டான்.

"என்ன முரளி எப்படி இருக்கீங்க.....? உங்க ஹெல்புக்கு ரொம்ப நன்றி", காரில் ஏறியவுடன் தன் டிரைவரிடம் சாதாரணமாக, தெரிந்தவன்போல் உரையாடிய தருணை, வியப்பாகப் பார்த்தாள் லயா. அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான் தருண்.

"தருண்..... வாழ்த்துக்கள்.....", டிரைவர் தருணை பெயர் சொல்லி அழைத்து வாழ்த்தியதில், இன்னும் அவள் வியப்புக் கூடியதே தவிர குறையவில்லை.

கண்களாலேயே என்னவென்று கேட்க, பிறகு சொல்கிறேன் என்று பார்வையாலேயே பதில் சொன்னான். முரளியும், தருணும் அவள் வீடுவரை பேசியவாறே வந்தார்கள். அவர்கள் காரின் பின்னால், தருணின் காரை அவன் டிரைவர் ஓட்டி வந்தான்.

வீட்டிற்குள் நுழைந்த அடுத்த நிமிடம், தருணைப் பிடித்து இழுத்துக்கொண்டு அறைக்குச் சென்றாள். "தருண்.... என்ன நடக்குது இங்கே? இந்த வீடு எப்படி உங்களுக்குத் தெரியும்? அதைவிட, எங்க டிரைவரை நீங்க மரியாதையா பேசுறதும், அவன் உங்களை பேர் சொல்லிக் கூப்பிடுறதும்.... என்ன இது?

எனக்குத் தெரியாமல், என்னைச் சுத்தி உங்க ஸ்பை ஆட்களை வச்சு இருக்கீங்களா? சொல்லுங்க", அவன் கழுத்தில் கை கோர்த்துக் கொண்டு தொங்கினாள்.

"இந்தத் தருணைப் பற்றி என்ன நினைக்கிற? என்கிட்டே உன் மனசை கொடுத்துட்டுப் போன உன்னை அப்படியே விட்டுடுவனா நான்? உன் வீட்டில் சமையல் காரர் முதல், டிரைவர் வரை எல்லோரும் ஒரே நாளில் எப்படி மாறினாங்க?

உங்க அம்மா, உன்னோட மொரீஷியஸ் வரலன்னு, எனக்கு எப்படித் தெரியும்? உங்க அம்மா கான்ஸல் செய்த டிக்கெட், எங்களுக்கு எப்படிக் கிடைச்சுது? எல்லாம் என் டீம் ஆட்கள் தான். உங்க டிரைவர் சாதாரண ஆள் கிடையாது, அவர் ஒரு டிடெக்டிவ் ஆபீஸர்.

அவருக்குத் தெரியாமல் உங்கள் வீட்டில் எதுவும் நடந்துடுமா? இன்னைக்குக் காலையில் எங்கே போகணும்னு தெரியாமல் நீ கிளம்பினப்போ, அவர் உன்னை பாதுகாப்பா, இங்கே கூட்டி வந்தது மட்டுமில்லாமல், உன்னோட தற்கொலை எண்ணம்

தெரிந்து, நீ குடித்த ஜூஸில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து, உனக்குத் தெரியாத பார்ட்டிக்கு, உன்னை எப்படி அழைச்சுட்டு வந்தார்?

எல்லாம், காலையில் வீட்டில் நீங்க போட்ட சண்டை முதல் எல்லாம் எனக்குத் தெரியும். நீ என்னோட லவர்....., என்னோட உயிர்....., என்னோட லைப்..... உன்னைப் பாதுகாக்க முடியலன்னா நான் என்ன ஆம்பிளை.....?

அதான் அங்கே நீ வெளியேறணும்னு முடிவு செய்த அடுத்த நிமிஷம், உன்னை நான் என்னோட வாழ்க்கைக்குள் கொண்டுவரும் முடிவை எடுத்துட்டேன். எல்லோருக்குமே போன் மூலம்தான் நியூஸ் போச்சு. நீ போட்ட டிரஸ் கூட என்னோட காஸ்டியும் டிசைனர் செஞ்சதுதான்", அவள் தனக்கு எவ்வளவு முக்கியம், அவளை ஒரு நிமிடம் கூட தன் நிழலை விட்டு விலக்கியதில்லை என்பதை அவளுக்குச் சொன்னான்.

"அப்போ எல்லாத்தையுமே கேட்டீங்களா.....?", அவள் குரலில் அப்படி ஒரு வலி, குரலும் மெலிந்து ஒலித்தது.

"உங்க அம்மாவோட உண்மையான குணம் உனக்குத் தெரியணும்னுதான் இவ்வளவு நாள் உன்னை அங்கே விட்டு வைத்தேன். வேறு எதுக்காகவும் இல்லை. என்னை மீறி, உன்னோட நிழலைக் கூட யாராலும் தொட முடிந்திருக்காது....., அது உன் படுக்கை அறையாகவே இருந்தாலும்", அவன் தாடை இறுகியது கோபத்தில்.

"நானே சிலநேரம்.....", அவள் பேசி முடிக்கும் முன்னர் அவன் கரம் அவள் கன்னத்தில் பதிந்திருந்தது.

"அப்படி நடந்திருந்தால் நானே உன்னைக் கொன்னிருப்பேன். ஆனால் அப்படி நடக்காதுன்னு எனக்குத் தெரியும்.....", உறுதியாகச் சொன்னான்.

அவன் அடித்தது கூட அவளுக்கு வலிக்கவில்லை. "ஐ லவ் யூ தருண்....., ஐ லவ் யு சோ மச்.....", அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

"லவி....., என்னைப் பார்த்தால் உனக்குப் பாவமா இல்லை....., நீ இப்படியே செய்தால், பிறகு உன் கற்புக்கு நான் பாதுகாப்பில்லை சொல்லிட்டேன்", அவன் பார்வையிலும் குரலிலும், அணைப்பிலும் அவ்வளவு மாறுதல்.

அவனை இன்னும் ஒண்டிக் கொண்டு, "உங்க கற்புக்கும் தான்....", அவளது குரலும் குழைந்தே இருந்தது.

"ம்ஹூம்....., இது சரி வராது, நான் கிளம்புறேன். நீ நல்லா படுத்து தூங்கு. எனக்கு நாளையில் இருந்து ஷூட்டிங் இருக்கு, எல்லாம் உன்னோட சேர்ந்து கண்மணி பாத்துப்பா, சரியா", அவளை அணைத்து விடுவித்துவிட்டுச் சென்றான்.

நிறைந்த மனநிலையுடன் அவனை அனுப்பி வைத்தாள். இருவரின் மனமும் நிறைந்திருந்தது. அவர்களின் சோதனைக் காலங்கள் முடிவுக்கு வந்திருந்தது. படுக்கையில் விழுந்த லயாவின் கண்களில் கல்யாணக் கனவுகள்.

காலையில் இருந்த மனநிலைக்கு முற்றிலும் மாறுதலாக இருந்தது அவள் மனநிலை.

கண்ணாடியில் தெரிந்த மணப்பெண் உருவத்தை, கழுத்தில் மின்னிய பொன் தாலியை, சந்தோசத்தில் மிளிரும் தன் முகத்தை, இது தான் தானா? என்ற பிரமிப்புக் குறையாமலே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் உருவத்தை ரசிக்கும் அவளையே, கதவில் சாய்ந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான் தருண். திடீரென தன் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கி அழவே, ஒரே எட்டில் அவளை அடைந்து, தூக்கி படுக்கையில் அமர வைத்தான்.

"லவி, நீ அவ்வளவு மோசமால்லாம் இல்லை....., ரொம்பவே அழகாதான் இருக்க. உன் அழகைப் பார்த்து கதறி அழவேண்டிய நானே பேசாமல் இருக்கும்போது நீ ஏன்.....?", அவளைச் சிரிக்க வைக்க அவன் எடுத்த முயற்சி சரியாக வேலை செய்தது.

"என் அழகைப் பார்த்தால் நீங்க கதறி அழுவீங்களா...? அப்போ நீங்க ஒண்ணும் பாக்க வேண்டாம்", கோபமாகச் சொல்லிவிட்டு, திரும்பிக் கொண்டான்.

"சரி, சரி....., இப்போ எதுக்குக் கண்ணாடியைப் பார்த்து அழுதன்னு சொல்லு", காரணம் தெரிய வேண்டும் அவனுக்கு.

"எனக்கு..... இப்படி ஒரு கோலம்....., கேமராவுக்கு முன்னால் மட்டும்தான் கிடைக்கும்னு நினைச்சேன். அன்னைக்கு நீங்க கட்டிய தாலியை, நான் கழட்டவே இல்லை தெரியுமா? அந்த சந்தோஷம்....., அத்தோட முடிஞ்சுடும்னு நினைச்சேன்....., ஆனால் அப்படி இல்லாமல்..... இப்போ இப்படிப் பட்டு புடவை, நகை, தொங்கத் தொங்க உங்க கையால் தாலி..... இதைக் கலைக்கவே மனசில்லை", அவள் சந்தோஷ மிகுதியில் சொல்லிக் கொண்டே போனாள்.

"ஹேய்....., என்ன சொன்ன....., புடவையை, நகையை கலைக்க மனசில்லையா....., என்ன நீ.... அடி மடியிலேயே கை வைக்கிற?", நிஜமாகவே அலறினான் அவன்.

அவன் அலறலின் காரணம் முதலில் புரியாமல் புருவம் சுருக்கியவள், அர்த்தம் புரிந்தவுடன், செவ்வானமாய் சிவந்து போனாள்.

"லவி....., என்னால் உன்கிட்டே ஓயாமல் சொல்ல முடியாது. என்னால் இன்னும் கொஞ்ச நேரம் கூட வெயிட் பண்ண முடியாது. எனக்கு இப்போவே இங்கேயே.....", அவன் கண்களில் வழிந்த தாபம், அவளை மறுக்க விடவில்லை.

அவன் கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள் அவள். நொடிகள் கூட தாமதிக்காமல், தன் தேடலைத் தொடர்ந்தான் அவன். அன்று அவளை அடைய முடியாத இயலாமையில், வார்த்தையைச் சிதற விட்டவன், இன்று தன்னையே கட்டுப் படுத்த முடியாதவன் ஆகிப் போனான்.

அவன் வேகத்தில் மிரண்டாலும், அவன் தேடலில் தன்னையும் இணைத்துக் கொண்டாள் அவள். இருளில்

தொடங்கிய அவர்களின் தேடல், விடிந்த பிறகும் தொடர்ந்தது. விடிந்த பிறகு களைத்து உறங்கினர்.

புரிதலில் துவங்கிய அவர்களின் காதலை, அவள் தன்னுடைய இதயக் கதவில் பூட்டி வைத்த பிறகும், அதைத் தட்டித் திறக்கும் வித்தை தெரிந்தவனாக இருந்தான் அவன். அவர்களின் நேசம் இறுதிவரை தொடரும் என நம்புவோம்.

திருமணம் முடிந்த இந்த ஏழு வருடங்களில், ஐந்து வயது வைஷ்ணவி, பதினோரு வயது துஷ்யந்துடன் பள்ளி சென்று வருகிறாள். தருண், தன் ஐம்பதாவது படத்தை வெள்ளிவிழாப் படமாக மாற்றும் முயற்சியில் ஈடு பட்டிருக்கிறான்.

தெய்வா இப்பொழுதும் எந்த மாற்றமும் இல்லாமல், சினிமாவில் மீடியேட்டர் வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். தருண், 'உன் தாயிடம் பேசாதே' என்று அவளைத் தடுக்கவில்லை. ஆனால் லயாவே அதை விரும்பவில்லை. தன் தாயோடான அவள் உறவு முடிந்து விட்டதாகவே இருந்தது.

லயாவின் திறமை வீணாகாமல் இருக்க, அவனே ஒரு சேனல் துவங்கி, அதில் அவளது நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்து கொண்டிருகின்றன.

அந்த நிகழ்ச்சிகளை நீங்களும் உங்கள் வீட்டில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கலாம்.....

நன்றி